

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி

நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர்

1990



KAYALPATNAM SELECTION GRADE TOWN PANCHAYAT CENTENARY SOUVENIR



நாள்: 31—10—1990

பக்கங்கள் : 414

வெளியீட்டாளர் :
ஹாஜி. **V. M. S. லெப்பை**
தலைவர்,
தேர்வு நிலை பேரூராட்சி மன்றம்,
காயல்பட்டணம் - 628 204.

காயல்பட்டணம்

தேர்வு நிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு

சிறப்பு மலர் - 1990

ஆசிரியர்:
காயல் மகபூப்

DATE : **31—10—1990**

PAGES : **414**

Publisher :

Haji. V. M. S. LEBBAY

President,

Selection Grade Town Panchayat,

KAYALPATNAM-628 204.

KAYALPATNAM

SELECTION GRADE TOWN PANCHAYAT

CENTENARY SOUVENIR 1990

Editor :

KAYAL MAHABOOB

மலர்முகம் :

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலரை உருவாக்குகின்ற வல்லமையைத் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாப்புகழும்!

நூற்றாண்டு நிறைவு என்பது சாதனைகளில் மகத்தானது. அதிலும் ஆயிரத்து நூறு ஆண்டுவரலாற்றைத்தாண்டியபெருமைக்குரியபெருநகராம் காயல்பட்டணத்தில்,தேர்வு நிலை பேரூராட்சியின் நூற்றாண்டு நிறைவை கொண்டாட விழா எடுத்து அது தொடர்பாக மலர் வெளியிடும் போது இந்த வரலாற்றுப் பெருநகர் பற்றிய எல்லா பெருமைகளும் எழுதிக் காட்டப்பட வேண்டியது அவசியம் தானே!

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு விழா 23—11—88 அன்று ரெட் ஸ்டார் சங்க மைதானத்தில் நடைபெற்ற சமயம் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற அன்றைய தமிழக ஆளுனர் அவர்களின் ஆலோசகர் மாண்புமிகு டாக்டர் A. பத்மனாபன் I A S அவர்கள், நூற்றாண்டு நிறைவு நினைவு சின்னத்தை திறந்து வைத்த போது நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மலர் வெளியிட வேண்டினார். இம்மலர் வெளிவரும் இந்நேரத்தில் அவருக்கு நன்றி பாராட்டுவது எங்களின் கடமை.

நூற்றாண்டு நிறைவிற்காக இம்மலர் மட்டு மின்றி ரூபாய் 1.5லட்சம் செலவில் இப்பேரூராட்சி அலுவலக வளாகத்தில் சகல வசதிகளுடன் கூடிய ''காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு அரங்கம்'' கட்ட 21-10-90 அன்று வேலை துவக்கப்பட்டுள்ளது. இரு மாதங்களில் அப்பணி நிறைவடையும்.

இம்மலர் வெளிவர எங்கள் முயற்சியை துவக்கி வைத்த பெருமை வர்த்தக பெருமக்களையே சாரும். பேரார்வத்துடன் வாழ்த்து விளம்பரங்கள் தந்துதவிய அவர்களுக்கு எங்கள் நன்றி.

டெல்லியிலும் சென்னையிலுமுள்ள மாண்புமிகு பெருமக்களின் வாழ்த்துச் செய்திகளும், பல்துறை அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள், பலதரப்பட்ட செய்திகளும், இம்மலரில் இடம்பெற வேண்டுமென பேரவா கொண்டு முயற்சித்தோம். கிடைத்தவை அனைத்தும் இம்மலரை அலங்கரிக்கின்றன. அந்த வாழ்த்துச் செய்திகளையும் கட்டுரைகளையும் அனுப்பித்தந்த பெருமக்களுக்கு மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறோம். நாங்கள் எதிர்பார்த்த வாழ்த்துக்களும் கட்டுரைகளும் கிடைத்திருந்தால் இம்மலரின் சிறப்பு இன்னும் கூடியிருக்கும்.

இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத் தந்த காயல்பட்டணம் ஜெம் பிரிண்டர்ஸ் உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எங்கள் நன்றி! அட்டைப்படம் அச்சிட துணைபுரிந்த அருப்புக்கோட்டை ஹாஜி முஹ்யித்தீன் முஸாபர் அவர்களுக்கும் அவர்கள் மருமகன் சிவகாசி ஜனாப் M. S. M. ஆஸாத் அவர்களுக்கும், இதற்கான புகைப்படங்கள் எடுத்துத் தந்தகாயல்பட்டணம் ஃபாஸில் ஸ்டுடியோ A. H. முத்தகீன், M. A. ரஹ்மான் ஆகியோருக்கும், ஆர்ட்செய்த ஆர்ட்டிஸ்ட் S. தாவூது அவர்களுக்கும் வரைபடங்களையும் புகைப்படங்களையும் சிறப்பாக பிளாக்செய்து தந்த திருநெல்வேலி ராயல்பிராஸஸ் நிறுவனத்தினருக்கும் எங்களது நன்றியை உரித்தாக்குகிறோம்.

சிறிய அளவில் வெளியிட எடுக்கப்பட்ட முயற்சி மிகச்சிறப்பான முறையில் இப்பெருநகர் பற்றியஎல்லா தரப்பு செய்திகளையும், எல்லா தரப்புபிரமுகர்களின் கட்டுரைகளையும் தாங்கி ஒரு பயனுள்ள மலராக வெளிவந்துள்ளது. இவ்வளவு சிறப்பாக உருவாக தனியாபேரார்வத்துடன் பல மாதங்கள் இரவுபகல் உழைத்து கட்டுரைகள் பெறுவதிலிருந்து சரிபார்த்து அமைத்து பிழை திருத்தி அச்சிடுவது வரை நேரடியாக கவனித்து உருவாக்கிய பெருமை பேச்சாற்றல் செயலாற்றலைப் போன்று எழுத்தாற்றலும் நிரம்பப் பெற்ற இப்பேரூராட்சி மன்ற உறுப்பினர் அருமைச்சகோதரர்ஜனாப் **காயல் மகபூப்** அவர்களையே சாரும் என் பேரூராட்சி மன்ற பதவிகாலத்தில் என்னுடன் உறுதுணையாக இருந்துஒத்துழைத்த அவருக்கு ஆயிரம் முறை நன்றி கூறுகிறேன்.

இம் மலருக்கு விளம்பரங்கள் சேகரிப்பதிலிருந்து எல்லாவகை ஒத்துழைப்புக் களும் அளித்த இப்பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஜனாப் S. T. **முஸ்தபா கமால்** அவர்களுக்கும் என் நன்றி!

பேரூராட்சி பணி சிறக்க பேரார்வம் காட்டி துணை புரிந்த இப்பேரூராட்சி துணைத்தலைவர் ஜனாப் M. N. **சொளுக்கு அப்துல் காதர்** அவர்களுக்கும் பேரூராட்சிமன்ற அனைத்து உறுப்பினர்களுக்கும், நிர்வாக அதிகாரி ஜனாப் **அ. மு. செய்யதுமுகம்மது** அவர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் என்நன்றி!

இம்மலர் உருவாக ஒத்துழைத்த அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன் கூறுகிறேன்.

சகல புகழும் இறைவனுக்கே!


பயனுள்ள இந்த மலரை தொடர்ந்து படிக்க புரட்டுங்களேன் பக்கங்களை......

தங்கள் உண்மையுள்ள,

வெளியீட்டாளர்,
''காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி
நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர் 1990''
தலைவர், தேர்வுநிலை பேரூராட்சி மன்றம்.

காயல்பட்டணம் [ஹாஜி வி. எம். எஸ். லெப்பை]
31-10-1990

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். - திருக்குறள்



திரு. ராஜீவ்காந்தி அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது 4-10-88ல் காயல்பட்டணம் வருகை தந்தார். அவருடன் உரையாடியபடியே ஹாஜி V.M.S. லெப்பை அவர்கள் அழைத்து வருகிறார்.

★★★★★ நன்மலரின் திறப்பு ! ★★★★★

தென் காயற் பதியின் சிறப்பு !!

"காயல் பிறைக் கொடியான்"

அகிலமெலாம்
மகிழ்வுடனே
படைத்தியக்கும்
''நூற்றாண்டின்''
அருளன்பின்
மலரிதனைத்
இறைபெயரால்
திறக்கின்றோம்

வெண்சங்கு
பண்பாடித்
நித்திலங்கள்
தாலாட்டும்
விளைகின்ற
பொற்பார்ந்த
கடலலைகள்
''காயற்பதி''

மறமொழித்த
பிறசமயச்
இஸ்லாத்தின்
சோதரரும்
மாண்புயர்ந்த
பிணைந்திருக்கும்
பண்புகளால்
''காயற்பதி''

சீலமிகு
கோலமணி
அறவோர்கள்
வணிகர்வள்ளல்
செந்தமிழின்
குணமணக்குங்
புலவோர்கள்
''காயற்பதி''

தீந்தமிழர்
தோய்ந்தமைந்து
நாடிதனின்
தொல்புகழால்
திருவார்ந்த
துலங்கிநிற்குங்
வரலாற்றில்
''காயற்பதி''

''காஹிர்'' எனும்
காயலெனும்
அறபுமொழிக்
பட்டினமாய்க்
கவின்பெயராற்
கமழ்கின்ற
பிறப்பெடுத்து
''காயற்பதி''

உருவமிலா
தெருக்களெலாம்
இறையவனை
''இறையில்லம்''
ஒன்றுகூடித்
திகழ்கின்ற
தொழுதிறைஞ்ச
''காயற்பதி''

தாயகமும்
நேயமுடன்
தமிழகமும்
இணைந்துநிற்கும்
தழைத்தோங்கும்
நற்காயல்
மேம்பணியில்
பட்டினத்தின்

ஊராட்சி
நூறாண்டு
மன்றுயர்ந்து
கண்ட அதன்
உறுபேரு
நறுமலரை
ராட்சியாகி
நுகர்வோமே

வாழ்த்துச் செய்திகள்

வாழ்த்துச் செய்திகள்




இந்திய குடியரசுத் தலைவர்
மேதகு R. வெங்கட்ராமன் அவர்கள்



பாரதப் பிரதமர்

மாண்புமிகு **விஸ்வநாத் பிரதாப் சிங்** அவர்கள்




தமிழ்நாடு ஆளுநர்
மேதகு சர்தார் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்



தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்



தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர்
மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ., அவர்கள்

க. அன்பழகன், எம். ஏ.
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை- 600 009.

நாள்: 16 - 03 - 1990

வாழ்த்துச் செய்தி


சிதம்பரனார் மாவட்டம், காயல்பட்டணம் பேரூராட்சி அமைக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க காயல் பட்டணத்து மக்களுக்கு கடந்த 100 ஆண்டுகளாகத் திறம்பட பணியாற்றி வரும் பேரூராட்சியின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது.

காயல்பட்டணம் தேர்வுநிலைப் பேரூராட்சியின் சீரிய பணிகள் தொடர்ந்திடவும், நூற்றாண்டு விழா சிறப்புடன நடந்தேறவும், விழா மலர் மணங்கமழ்ந்திடவும் எனது நல்வாழ்த்துக்கள்.

க. அன்பழகன்
கல்வி அமைச்சர்

பெறுநர்:

ஹாஜி வி. எம். எஸ். லெப்பை
தலைவர்,
காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி
நூற்றாண்டு நினைவு விழா கமிட்டி,
காயல்பட்டணம்,
சிதம்பரனார் மாவட்டம்,
பின் கோடு : 628 204.



தமிழ்நாடு அரசு சட்டத்துறை அமைச்சர்

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா, பி ஏ.,பி.எல். அவர்கள்



தமிழ்நாடு அரசு இந்து அறநிலைய மற்றும் சுற்றுலா துறை அமைச்சர்
மாண்புமிகு கே. பி. கந்தசாமி, எம்.ஏ., அவர்கள்

எஸ். ஜே. சாதிக் பாட்சா
சட்டத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாள்: 30-10-1989

வாழ்த்து


வரலாற்றுச் சிறப்புமிக்க காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சியின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பேரூராட்சி தொடர்ந்து சீரிய திட்டங்களை நிறைவேற்றிடவும், விழாவினையொட்டி வரவிருக்கின்ற மலர் பயனுள்ளதாக அமையவும், என் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். ஜே. சாதிக்பாட்சா
அமைச்சர் (சட்டம்)

பெறுனர்:

ஹாஜி வி. எம். எஸ். லெப்பை
தலைவர்,
காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி
நூற்றாண்டு நினைவு விழா கமிட்டி,
காயல்பட்டணம்,
சிதம்பரனார் மாவட்டம்,
பின் கோடு : 628 204.



தமிழ்நாடு அரசு உள்ளாட்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு கோ. சி. மணி அவர்கள்

Telegram : "UNISERCOM"
UNION PUBLIC SERVICE COMMISSION
NEW DELHI-110001.

सत्यमेव जयते

Dr. A. PADMANABAN
MEMBER
(Former Chief Secretary and former Adviser to Governor, Madras)

1st November, 1989.

Dear Haji Lebbay,

I am happy to know about the souvenir you propose to bring to mark the Centenary Celebrations of Kayalpattinam Selection Grade Town Panchayat. 100 years in one's life is rare and is an occasion to feel elated. 100 years in the life of the Town Panchayat, a people's Institution, is rarer, deserving special attention and recognition. Kayalpattinam, the historic and famous Town, known for international Commerce and Trade, prosperity and plenty, hospitality and amiability, continues to have dedicated, hard working and self-less people. They have been improving the Town and doing everything possible to improve the living conditions of the people. The President, the Members and all others connected with the Panchayat, both past and present, have rendered excellent service.

You, as the President of the Panchayat have been doing commendable and dedicated work for the Panchayat and its people. I remember my participation in the Centenary Celebrations of your Panchayat last year. My hearty congratulations and greetings to all of you.

I wish you, the Members, and other concerned all success in your future efforts.

Yours sincerely,
(Sd) **A. PADMANABAN**

கே. தீனதயாளன், இ. ஆ. ப.
பேரூராட்சிகள் இயக்குனர்


குறளகம்
சென்னை-108.

23—10—89

வாழ்த்துச் செய்தி

ஒரு பேரூராட்சி என்பது ஒரு தொண்டு நிறுவனத்திற்குச் சமமானதாகும். மக்களின் வரிப்பணத்தையும், அரசின் மான்யத்தையும் வைத்து மக்களுக்காகச் செயல்படும் அமைப்பாகும். இத்தகைய பணியில் சிதம்பரனார் மாவட்டம் காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு காண்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இக்காலத்தில் அது பலவாறான சோதனைகளுக்குள்ளாகியிருக்கலாம். அவையனைத்தையும் சாதனைகளாக மாற்றியிருப்பது, அது நூற்றாண்டு விழா எடுப்பதிலிருந்தே உறுதியாகிறது. அதனுடைய தொண்டு மென்மேலும் வளரவும், மக்களின் ஒத்துழைப்பு பல்வாறாக பெருகவும், அது பல நூறாண்டுகள் தொண்டாற்றவும் எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

இவண்
கண். தீனதயாளன்
பேரூராட்சிகள் இயக்குனர்
சென்னை-108.



திருமிகு. வெ. மாயாண்டி M. A., அவர்கள்
பேரூராட்சிகள் இயக்குனர், சென்னை.



சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமதி ப. சிவகாமி இ. ஆ. ப. அவர்கள்

திருமதி **ப. சிவகாமி**, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிதம்பரனார் மாவட்டம்.

டெலக்ஸ்: 0434-265 VOCD-IN
தொலைபேசி: அலு. வரு 22800
ஊ. வ. 20602
நேரடி 20000
இல்லம் 20050
தூத்துக்குடி-3

தேதி 22—8—90

வாழ்த்துச் செய்தி

பன்னிரண்டு நூற்றாண்டு வரலாற்றுப் பெருமையும், பாரம்பரியமிக்க கலாச்சாரப் புகழும் நிரம்பப் பெற்ற காயல்பட்டணத்தைப் பாராட்டி சரித்திர ஆய்வாளர் மார்க்கோபோலோ முதல் பாரதத்தின் முதலாவது பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு வரை புகழ்ந்துரைத்துள்ளார்கள்.

இந்நகரில் 1886-ல் ஊராட்சி அமைக்கப்பட்டு இன்று அது 30000 மக்கள் தொகையோடும், 12½ சதுரமைல் சுற்றளவோடும் தேர்வுநிலை பேரூராட்சியாக மிளிரும் காலகட்டத்தில் ஒரு நூற்றாண்டு முற்றுப்பெற்று அதற்காக விழா எடுக்கப் பட்டு காயல்பட்டண்த்தின் சரித்திரத்தை எடுத்துச் சொல்லும் சிறப்பான மலரும் வெளிவருவது பாராட்டிற்குரியதாகும்.

சர்வதேசத் தொடர்புகளோடு பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்கும் காயல் நகர் பேரூராட்சி நூற்றாண்டினை நிறைவெய்வது குறித்து எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்.) ப. சிவகாமி

மாவட்ட ஆட்சித் தலைவர்
சிதம்பரனார் மாவட்டம்
தூத்துக்குடி

V. C. PERUMAL I P S
DEPUTY INSPECTOR GENERAL OF POLICE
TIRUNELVELI RANGE
TIRUNELVELI
Pin Code: 627 011

Tel: 73324
Camp: Tirunelveli,
30.7.1990

அன்புடையீர்,


27—1—1886-ல் காயல்பட்டணத்தில் ஊராட்சி அமைக்கப்பட்டு அது இன்று தேர்வுநிலை பேரூராட்சியாக வளர்ச்சி பெற்று நூற்றாண்டு விழா காணும் செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இத் தேர்வுநிலை பேரூராட்சி மென்மேலும் வளர்ச்சி அடைந்து மக்களுக்கு சீரோடும் சிறப்போடும் தொண்டாற்ற எனது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒம்) வி. சி. பெருமாள்

பெறுநர்

ஹாஜி வி. எம். எஸ். லெப்பை,
தலைவர்,
காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி,
காயல்பட்டணம் - 628 204



திருச்செந்தூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர்
திரு. R. தனுஷ்கோடி ஆதித்தன் M A., B.L., அவர்கள்

R. Dhanuskodi Athithan,
M. A., B. L.,
Member of Parliament
(Lok Sabha)

40, North Avenue,
NEW DELHI-110001.

16 October 1989

MESSAGE

I am immensely pleased to learn that you are bringing out a Centenary Souvenir Kayalpatnam Selection Grade Town Panchayat.

Though Kayalpatnam is not big in size it has become very popular and famous and undoubtedly the Kayalpatnam Selection Grade Town Panchayat has had a great deal to contribute for its popularity. High dignatories of the Nation, including our Hon'ble Prime Minister, Shri Rajiv Gandhi, have been pleased to visit Kayalpatnam. I am sure the Panchayat will continue its welfare and other activities so that the Town reaches greater heights.

I wish you all the Success for the future.

(Sd) R. Dhanuskodi Athithan

ஒரு நல்ல பட்டினம்

"முத்தமிழ்க் காவலர்" டாக்டர் **சி. ஆ. பெ. விசுவநாதம்**

உலகின் ஐந்து கண்டங்களையும் சுற்றி வந்த அறிஞர்களாலுங்கூட காண முடியாத ஒரு நல்ல பட்டினம் ஒன்று உண்டு. அது, கள்ளுக்கடைகளே இல்லாத பட்டினம். காவல்துறை நிலையங்களே இல்லாத பட்டினம். திரைப்பட கொட்டகைகள் ஒன்று கூட இல்லாத பட்டினம். இப்பட்டினத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. கொலைகாரர்களே இல்லாத மக்களையும், தூக்கு மேடை ஏறாத சமூகத்தினரையும் கொண்டபட்டினம் இது, தெருக்கள் தோறும் திருக்கோயில்கள். வீதிகள் தோறும் வேதபாட சாலைகள், வீடுகள் தோறும் திறமைசாலிகள். கடல் கடந்து சென்று பொருள் தேடி சிக்கனமாக வாழ்ந்து எஞ்சிய பொருளை பல நல்ல அறச் செயல்களுக்கு வழங்கி வாழ்பவர்கள்.

இந் நகரத்தில் ஏழைப்பணக்காரன் என்ற வேற்றுமை கிடையாது. சாதி வேற்றுமையும் இல்லை. சமய வேற்றுமையும் இல்லை. எங்கு பார்த்தாலும் சமத்துவம். எங்கு பார்த்தாலும் சகோதரத்துவம்.

இப்பட்டினத்தில் வாழும் மக்கள் உணவு தூய்மையாக, உடை தூய்மையாச், உடல் தூய்மையாக மட்டுமல்லாமல் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருப்பவர்கள். இப்பட்டினத்தில் வாழும் ஆண்களும் பெண்களும் அன்போடு பழகும் பண்புடையவர்கள். எந்த சமூகத்திலும் காண முடியாதபடி தங்களின் தாய் மொழியை, தூய்மையாகவும், அழகாகவும், இனிமையாகவும் பேசி வருபவர்கள்.

இப்பட்டினத்து தெருக்களில் பெண்களைக் காணமுடியாது. பெண்கள் நடந்து செல்வதற்கென்றே தனி வழிகள் அமைந்த தெருக்கள் அந்நகரம் முழுவதும் உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்பட்டினத்து மக்கள் வருடம்தோறும் தங்கள் ஆஸ்தியில் நாற்பதில் ஒரு பங்கை ஏழை மக்களுக்கு வழங்கி வாழ்பவர்கள். நாள் தவறினாலும் தெய்வ வழிபாடு தவறாதவர்கள்.

இத்தகைய ஓர் பட்டினம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறீர்கள். ஆம்! ஐரோப்பா கண்டத்திலோ, அமெரிக்கா கண்டத்திலோ, ஆஸ்திரேலியா கண்டத்திலோ அல்ல. ஆசியாக் கண்டத்தில் இந்தியப் பெரு நாட்டின் தமிழ்த் திரு நாட்டில் தான் உள்ளது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு பாண்டிய மன்னனால் ஆளப் பெற்று வந்த துறைமுகப் பட்டினங்களில் இதுவும் ஒன்று. இப்பட்டினம் சென்னைப் பட்டினமும் அல்ல, நாகப்பட்டினமும் அல்ல, காவிரிப் பூம்பட்டினமும் அல்ல, "**காயல்பட்டினம்**". நெல்லையிலிருந்து முப்பத்தி ஆறுகல், தூத்துக்குடியிலிருந்து பதினெட்டுகல், திருச்செந்தூரிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ளது.

ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தம் காரியப் பேர்
யார் தட்டினும் தட்டுவராமல் தன் செல்வத்தை
மார் தட்டி வழங்கிய சான்றோரும், செத்தும் கொடை கொடுத்தவள்ளலுமாகிய
சீதக்காதி மரைக்காயர் பிறந்து வளர்ந்த பட்டினம் அது.

நீங்கள் எப்போதாகிலும், காயல் பட்டினத்தைப் போய்ப் பார்த்திருக்கிறீர்களா? இன்றேல்உடனே போய்ப் பார்த்து வாருங்கள். அங்குள்ள மக்களின் வாழ்க்கை உங்களை மகிழ்விக்கும் அங்கு மற்றொரு காட்சியையுங் கூட கண்டு இன்புறலாம். அது ஊராட்சி மன்றம் 1886 ல் தோன்றிய அவ்வூராட்சி மன்றம் அண்மையில் நூற்றுண்டு விழாவை மிகப் பெரிய அளவில் கொண்டாடியிருக்கிறது. இப்பட்டினத்திற்கு உள்ள சிறப்பைப் போல இவ்வூராட்சி மன்றத்திற்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. பொதுமக்களுக்கு ஏற்ற நற்பணிகள் பலவற்றை இம்மன்றம் விரைந்து செய்து மக்களின் நன்மதிப்பை பெற்று விளங்கி வருகிறது.

இவ் விழாவின் நினைவாகவே இம்மலர், உங்கள் முன் தோன்றுகிறது. நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும், சமயத்துக்கும் சமூகத்துக்கும் தொண்டு செய்யும் நல்லறிஞர்களின் கட்டுரைகள் பலவற்றை இம்மலரில் கண்டு மகிழுங்கள்.

இப் பட்டினத்தையும் நகர மக்களையும் நூற்றுண்டு விழா கொண்டாடும் மன்றத்தையும், மன்றத் தலைவர் ஹாஜி **V.M.S. லெப்பை** அவர்களையும், மன்ற உறுப்பினர்களையும் வாழ்த்துகின்ற பெரும் பேறு பெற்றமைக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாழ்பட்ட நகரங்கள் பல உள்ள இவ்வுலகில், பண்பட்ட நகரம் ஒன்று தமிழகத்தில் காணப்படுவது தமிழும், தமிழரும், தமிழகமும் பெற்ற பேறுகும். பொதுவாக இந்திய நாட்டிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் உள்ள நகரங்கள் பல, "காயல்பட்டினமாக" மாறி காட்சியளிக்க வேண்டும் என்பது என் விருப்பம். இறைவன் திருவருளால் அதுநிறைவேற வேண்டுமென விரும்புகிறேன்.

பலமொழிகளைக் கலந்து கொச்சையாகப் பேசும்மக்களுக்கு முன்மாதிரியாக நல்ல தமிழில் பேசும் மொழியினரையும், பிற பட்டினங்களுக்கு முன் மாதிரியாக காட்சியளிக்கும் பட்டினத்தையும், பிற நகரங்களுக்கு முன் மாதிரியான நகரத்தையும், பிற மக்களுக்கு முன் மாதிரியாக வாழும் பண்புடைய மக்களையும், பிற ஊராட்சி மன்றங்களுக்கு முன் மாதிரியான ஊராட்சி மன்றத்தையும் கொண்டுள்ள இந்த ஒரு நல்ல பட்டினம் இன்னும் சிறந்தோங்கி வளர்ந்து, உலக மக்களின் முன்னே தமிழ்கூறும் நல்லுலகாகக் காட்சியளித்து ஒளிவீசி சிறப்படையை வேண்டுமென முழுமனதுடன் வாழ்த்துகிறேன்.

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

முன்னாள் தலைவர்கள்



அல்ஹாஜ் M. K. T. முஹம்மது அபூபக்கர்
1953 முதல் 1965 வரை



அல்ஹாஜ் L. K. லெப்பைத் தம்பி
1970 முதல் 1973 வரை




அல்ஹாஜ் பாவலர் S. S. அப்துல்காதர்
1965 முதல் 1970 வரை



ஜனாப் V. M. S. அனசுத்தீன்
1973 முதல் 1979 வரை



காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சிமன்ற தலைவர்
ஹாஜி வி. எம். எஸ். லெப்பை அவர்கள்



துணைத் தலைவர்:

M. N. சொளுக்கு அப்துல்காதர்

30-A, நெய்னார் தெரு
காயல்பட்டணம்.

பிறந்த நாள் : 05–06–1948

நிர்வாக அதிகாரி :


அ. மு. செய்யது முகம்மது

39, வெள்ளை கலீபா தெரு
மேலப்பாளையம்
திருநெல்வேலி-627 005.


பிறந்தநாள்: 24-06-1933




உறுப்பினர்கள்




P. அருணாசலம்
76, அருணாசலபுரம், காயல்பட்டணம்.
பிறந்த வருடம்: 1929



S. காசிராஜன்
34, சேதுராஜா தெரு, காயல்பட்டணம்.
பிறந்த நாள்: 10—11—1952



ஹாஜி S. A. அலிஅக்பர் C.G.I. [LON]
53, கோமான் நடுத்தெரு,
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: 03-11-1935



ச. த. முஹம்மது அலி
12, அபுல்கலாம் ஆஸாத் தெரு,
(துஸ்டராயர் தெரு) காயல்பட்டணம்.
பிறந்த நாள்: 26-06-1933

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி
உறுப்பினர்கள்



S. S. E. சுல்தான்
75, காயிதேமில்லத் சாலை (குறுக்குத் தெரு)
காயல்பட்டணம்.
பிறந்த வருடம் : *1921*



ஹாஜி P.S. N. S. அப்துல்லா சாஹிப்
48, லெப்பப்பா தெரு (சதுக்கை தெரு)
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *02-03-1940*

M. A. சித்தி பாத்திமா
7, காயிதேமில்லத் சாலை (குறுக்குத் தெரு), காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *22-09-1948*



S. T. முஸ்தபா கமால்
61, கருத்தம்பி மரைக்கார் தெரு.
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *16—05—1938*



A. K. நெய்னா முகம்மது
85-AI, அலியார் தெரு,
காயல்பட்டணம்.
பிறந்த வருடம் : *1935*

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி
உறுப்பினர்கள்



காயல் மகபூப்
46, அப்பா பள்ளித் தெரு
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *10-11-1955*



முகம்மது ஈசா லெப்பை புகாரி
12, சொளுக்கார் தெரு,
காயல்பட்டணம்,
பிறந்த வருடம்; *1926*



S. L. வெங்கடாசலம் B.A.,
10, வீரசடைச்சி அம்மன் கோவில் தெரு
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *11 05-1947*



S. A கோட்டாளமுத்து
17, பூந்தோட்டம்
காயல்பட்டணம்.
பிறந்த நாள்: *26-01-1953*

வரலாறு

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

வரலாற்றில் ஒரு நூற்றாண்டு

27-1-1886 — 26-1-1986

கண்ணோட்டம்

— ஹாஜி *V. M. S.* லெப்பை —

தலைவர், தேர்வுநிலை பேரூராட்சி மன்றம், காயல்பட்டணம்.

அடுத்த பக்க படங்கள் :

மேலே : காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றக் கூட்டம்.

மத்தி : காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி பணியாளர்கள்.

கீழே : காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி சுகாதார சிப்பந்திகள்.



ஹாஜி V.M.S. லெப்பை







காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

வரலாற்றில் ஒரு நூற்றாண்டு
1886 - 1986

கண்ணோட்டம்

ஹாஜி V.M.S. லெப்பை,
- தலைவர், தேர்வுநிலை பேரூராட்சி மன்றம்,
காயல்பட்டணம்.

ஷா இன்ஷா பஹதூர்ஷா ஜாபர் அவர்கள் தலைமையில் பாரத திருநாட்டின் மன்னர்களும் மக்களும் 1857 ம் வருடம் நடத்திய சுதந்திரப் போராட்டம் முறியடிக்கப்பட்டதும் இந்தியா வெள்ளைய ஏகாதிபத்தியத்தை ஏற்றதாகி விட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கம் மகாராணி விக்டோரியா அம்மையாரிடம் 1858 ல் ஒப்படைக்கப் பட்டது. மகாராணி அம்மையார் தனது இந்திய குடிகளுக்கு ஜாதி இன மத சமுதாய சமூகப் பொருளாதார வர்த்தக சுதந்திரம் வழங்கி பிரகடனப்படுத்தினார். அதனைத்தொடர்ந்து 1886ல் நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி (கிராம ஆட்சி) ஏற்படுத்தும் பிரகடனமும் நடந்தது. கிராம மக்களின் நலன் கிராம மக்களால் கவனிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கமே கிராம பஞ்சாயத்து ஏற்படுத்தியதின் நோக்கம்.

சென்னைப்பட்டணம் ஆளுனரின் G.O. Ms. No. *122.* L.F. (Finance) நாள் *27-1-1886* ன் படி (Constituted is a panchayat as per G.O· Ms. No 122 L.F (Finance dated 27.1.1886) மாநிலத்தின் பலகிராமங்களில் கிராம பஞ்சாயத்து மன்றங்கள் ஏற்படுத்தப்பட்ன.

வருவாய்த்துறை கிராமங்களான காயல்பட்டணம் தென்பாகம் வடபாகம் கிராமங்களில் சர்வே (புலன்) எண் *5—22, 23—27, 30—40, 134—139, 167—265,* மற்றும் *568—684* எண்கள் நீங்கலாக மற்ற நிலப்பரப்புக்கள் (ஏறக்குறைய நாலாயிரம் ஏக்கர்கள்) கூடிய கிராமத்தில் **காயல்பட்டணம் யூனியன் போர்டு** என்றபெயரால் பஞ்சாயத்துமன்றம் ஏற்படுத்தப்பட்டது. காயல்பட்டணம் தென்பாகம் (இலட்சுமி மாநகரம்) உள்பட காயல்பட்டணம் வடபாகம் கீரனூர் உப்பளம் சார்ந்த பிரதேசம் வரை உள்ளடங்கியதாகவே காயல்பட்டணம் யூனியன் போர்டு நடைபெற்று வந்தது.

1886 முதல் 1894 ம் வருடம் வரை இந்த கிராம ஆட்சியின் (தலைவராக) அதிகாரியாக, காயல்பட்டணம் ஸீ-கஸ்டம்ஸ் (Salt) சூப்ரண்டெண்டாக இருந்த ஆங்கிலேயர்களும், கடைசியாக பிராமணர் ஒருவரும் இருந்து வந்தார்கள்.

பிறகு பொது மக்களிலிருந்து பொதுமக்களால் தேர்ந்து எடுத்துச் செல்பவர்களையும் சேர்த்து அதிகாரிகளால் நியமிக்கப்படும் தலைவர் EX- Offico வாக கிராம முன்சீப்(V.M) ஆகியவர்கள் கூடிய பஞ்சாயத்து குழுவிடம் கிராம ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. இந்த முறையில் **—1895 முதல் 1913-14** ம் வருடம் வரை இருபது ஆண்டுகள் திரு **S. பொன்னையா நாடார்** அவர்கள் தலைவராக இருந்து வத்தார்கள். அவர்கள் ஆட்சி காலத்தில் *1908* ம் வருடம் கிராமம் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. காயல்பட்டணம் அரசினர் பொது மருத்துவமனை இவர்கள் காலத்தில்தான் ஜில்லா போர்டு - லோக்கல்பண்ட் டிஸ்பென்ஸரி என்ற பெயரால் *1911-* ம்

வருடம் ஆரம்பிக்கப்பட்டது. புள்ளி மாற்றும் விஷயத்தில் மஹ்ழரா, ஜாவியா, தைக்காவைச் சேர்ந்த மார்க்க பெரியார்களிடம் ஃபிக்ஹு ஷரீஅத் சட்ட விபரங்களை கேட்டறிந்து செய்து வந்ததால் அந்த விஷயத்தில் உயர்நீதிமன்றம் வரை போன வழக்குகள் தோல்வி அடைந்து தலைவர் அவர்களின் முடிவே சரியானது என்று தீர்ப்பாகியிருக்கிறது. மேலும் இவர்கள் காலத்தில் கிராம முன்னேற்றத்திற்குரிய நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன.

1914 முதல் 1918 வரை ஜனாப் மு,க. அ.வு. முஹம்மது தம்பி அவர்கள் தலைவர் பதவியை ஏற்று மிகத்திறமையாகவும் கிராமத்திற்கு நலன் செய்தும் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். 1916ல் நமது கிராமத்திற்கு நல்ல குடிநீர் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியில் தலைவர் அவர்கள் ஈடுபட்டு அதுசமயம் சப்- கலெக்டராக இருந்த 'பேட்' துரையவர்களையும், ஜில்லா கலெக்டராக இருந்த 'ஹெமிங்வே' துரை (லேடி ஹெமிங்வேயுடன்) அவர்களையும் 1916 மார்ச் 15, 16 தேதிகளில், காயல்பட்டணம் உ.ம.வெ. உமர்லெப்பை அவர்கள் தென்னந்தோட்டத்தில் மாலைபோட்டு வரவேற்று குடிநீர் பிரச்சனை மற்றும் நமதூருக்கு வேண்டிய தேவைகளை எடுத்துச் சொல்லி பொதுமக்களால் மனுக்கள் கொடுக்கச் சொல்லி மேலும் 18ம் தேதி ஜில்லா கலெக்டர், சப்- கலெக்டர், தலைவர் ஆகிய மூவரும் குதிரையில் சவாரி செய்து ஆத்தூர் தோணிப்பாலம் வரை பார்த்து தண்ணீர் வரவேண்டிய கால்வாய் அமைக்க வேண்டிய இடத்தையும் பார்வையிட்டார்கள், அதைத் தொடர்ந்து சென்னைப்பட்டண தலைமை இன்ஜினியர், ஸ்ரீவைகுண்டம் சப்- இன்ஜினியர்கள் ஓவர்ஸீயர்கள் பலரும் பார்வையிட்டுச் சென்றார்கள்.

இந்தத் தண்ணீர் திட்டம் 1938 ம் வருடமும் - பின் 1945 ம் வருடமும் நமது பொது மக்களால் முயற்சிக்கப்பட்டும் 1935 வருடத்திய இந்திய சட்டத்தின்படி (இந்தியர்களுக்கு - பொறுப்பாட்சி வழங்க வேண்டுமென்ற சட்டப்படி) 1938ம் வருடம் அமையப்பட்ட காங்கிரஸ் மந்திரி சபையில் நமது மாநில பொதுப்பணித் துறை மந்திரியாக இருந்த ஜனாப் **யாகூப் ஹசன் சேட்** அவர்கள் நமதூர் ஆஸ்பத்திரி புதிய இடத்தில் கட்டி முடித்ததை திறந்து வைக்க வந்தபோது 5-4-38ந் தேதி அளிக்கப்பட்ட வரவேற்பிதழில் குடிநீர் வேண்டும் என்பது பிரதானமாகக் குறிப்பிட்டிருந்தது. நமதூருக்கு தென்மேற்கில் 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருவக் குளத்திலிருந்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்ற கோரிக்கையும் தரப்பட்டிருந்தது. பின் ஜனாப் **A.K. பிஜிலி சாகிப் M.A.,L.L.B.,** அவர்களுடன் அது சமயம் லோகல் போர்டு இன்ஸ்பெக்டராக இருந்த திரு தம்பித்துரை அவர்களை அழைத்து வந்து காயல்பட்டணம் உள்ளிட்ட 7 கிராமங்களுக்கு ரூ 5½ லட்சம் செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இந்த 1916 மற்றும் 1938ம் வருட திட்டங்கள் கை கூடாததால் 1945 ம் வருடம் நமதூர் பொதுமக்களால் எடுத்த முயற்சி வெற்றி பெற்று, 11 கிராமங்களுக்குச் சேர்த்து திட்டம் வகுப்பதில் திரு **K T. கோசல்ராம் M.P** (லேட்.) அவர்களின் பெரும் ஒத்துழைப்பாலும் நமதூர் மக்கள் அனைவரின் ஒற்றுமையான முயற்சியாலும் 1954 - 55 ம் வருடங்களில் நாம் ஆத்தூரிலிருந்து குழாய் மூலம் குடிநீர் பெற்று பலனை அனுபவித்து வருகிறோம்.

இம்மாபெரும் முயற்சியில் காயல்பட்டணம் ஐக்கிய முன்னேற்றச் சங்கம் அதன் ஆற்றல் மிக்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரின் அரும்பெரும் முயற்சியே பலனாகி நாம் நல்ல குடிநீரை அருந்தும் பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

இந்த 1945ம் வருடத்திய தண்ணீர் திட்ட முயற்சியில் நமதூரின் எல்லா பகுதி பெரு மக்களும் பொருளாளும் உழைப்பாலும் பெரும் உதவி செய்தார்கள் குறிப்பாக மறைந்த பெரியார் ஜனாப். **அ க. அப்துல் காதிர்** அவர்கள் ஐம்பத்தி ஓராயிரம் ரூபாயும் மற்றும் பெரியார்கள் பல்லாயிரம் ரூபாய்களும் நன்கொடை கொடுத்துதவினார்கள். இதனை நன்றிஉணர்வுடன் நினைத்துப்பார்ப்போம் சர்வ புகழும் இறைவனுக்கே அல்ஹம்துலில்லாஹ்.

1919 முதல் 1924 வரை ஜனாப் **குளம் ச. த. முகம்மது சேக்னா லெவ்வை** அவர்கள் (ஜனாப் மு.க.அவு. முகம்மது தம்பி அவர்களின் இளைய மருமகனார்) தலைவராக இருந்து அரிய சேவை செய்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் 1920 ம் வருடம் கிராமத்தின் தெருக்களை அளந்து சர்வே செய்யப்பட்டது. ஏறக்குறைய நானூறு பகுதிகளாகப் பிரித்து பீல்ட் (Field) பிளான்கள் வரையப் பட்டிருக்கின்றன.

1923 ம் வருடம் திருநெல்வேலியிலிருந்து காயல்பட்டணம் வழியாக திருச்செந்தூருக்கு ரயில் பாதை போடப்பட்டு ரயில் விடப்பட்டது. 1924ம் வருடம் தற்போதிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் கட்டப்பட்டதும், பழைய ஸ்டேஷனாக இருந்து தற்போதைய ஆறுமுகனேரி ஸ்டேஷன் முதலில் காயல்பட்டணம் சால்ட் ஸ்டேஷனாக மாற்றப்பட்டு பின் ஆறுமுகனேரி ரயில்வே ஸ்டேஷன் என மாற்றப்பட்டது.

1920 ம் வருட சட்டம், கலால் - சுங்கவரி சட்டப்படி உப்பு மற்றும் சுங்க இலாகா மத்திய அரசுக்கு என்றும், கலால் (ஆப்காலி) கள்-சாராய கஞ்சா அபின் இலாகா மாநில அரசுக்கு என்றும் மாற்றியதன் விளைவாக காயல்பட்டணம் எல்கைக்குள் நடந்து வந்த உப்பு இலாகாவின் காரியாதிகள் மிகவும் குறைந்து காயல்பட்டணம் சால்ட் சர்க்கிள் என்பது போய் தூத்துக்குடி சால்ட் சர்க்கிள் என மாறியதன் விளைவாக காயல்பட்டணம் வட பாகத்திலுள்ள குடியிருப்பு (கீரனூர் மற்றும் பகுதிகள்) முக்கியத்துவம் குறைந்து விட்டது. இதனால் காயல் பட்டணம் வடபாகம் எல்கை யூனியன் போர்டிலிருந்து நீக்கப்பட்டது.

1925 முதல் 1929 வரை **ஜனாப் தோல்சாப்பு M.K. MR முகம்மது உவைஸ்னா லெவ்வை** அவர்கள் தலைவராக இருந்து நல்ல பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் 1925 ம் வருட புதிய பஞ்சாயத்து சட்டப்படி பேயன்விளையிலிருந்து இலட்சுமி மாநகரம் வரையிலுள்ள காயல்பட்டணம் தென்பாகம் கிராமம் மேல்பகுதி முழுவதும் லெட்சுமி மாநகரம் கிராமப் பஞ்சாயத்து என்று நடைபெற்றது. பின்னர் 1954-55 ல் **புகழுப் பெருமாள்** என்பவர் நிர்வாக அதிகாரியாக வந்தபோது காயல்பட்டணம் வடபாகம் (கீரனூர் இதரபகுதிகள்) மீண்டும் காயல்பட்டணம் மேஜர் யூனியன் போர்டுடன் இணைக்கப்பட்டது.

1930 முதல் 1934 வரை ஹாஜி. **மு.கா. முகம்மது ஹஸன் மரைக்கார்** அவர்கள் தலைவராக வந்து நல்ல பணிகள் செய்தார்கள்.

1934-35 முதல் 1936 வரை ஜனாப் **மு.க. அ.பு. செய்யது முகம்மது புகாரி** அவர்கள் சிறிது காலம் தலைவராக இருந்து பணியாற்றி இருக்கின்றார்கள்.

1936 முதல் 1946-47 வரை ஜனாப் **தோல்சாப்பு செய்யது இபுராகீம் லெவ்வை** அவர்கள் தலைவராகவும், ஜனாப் **கத்தீபு செ,யி. செய்யிது இபுராகீம் சாகிப்** அவர்கள் துணை தலைவராகவும் பணிபுரிந்திருக்கிறார்கள்.

1947 முதல் 1953 வரை ஜனாப் ஹாஜி **கத்தீபு செ.யி செய்யது இபுராகீம் சாகிப்** அவர்கள் தலைவுராகவும், ஜனாப் **கத்தீபு அ.கூ. முகம்மது அபூபக்கர்** ஹாஜி அவர்கள் துணை தலைவராகவும், ஜனாப் **குளம் ஹாஜி ஜெய்னுல் ஆபிதீன்** அவர்கள் டெலிகேட் தலைவராகவும் இருந்து நற்பணி புரிந்திருக்கின்றனர்.

ஊராட்சியாக இருந்த காயல்பட்டணம் — சென்னை ஸ்தல ஸ்தாபன ஆய்வகத்தின் நடவடிக்கை ஆர்.டி.எஸ்.என் 48841/51 நாள் 24-4-52 படி பேரூராட்சியாக உயர்த்தப் பட்டது.

1953 முதல் 1959, 1959 முதல் 1965 வரை ஜனாப் ஹாஜி **M.K.T. முகம்மது அபூபக்கர்** அவர்கள் தலைவராக இருந்து பல அரிய நலன்களைச் செய்திருக்கிறார்கள்.

ஜனாப் **கத்தீபு அ.க. முகம்மது அபூபக்கர்** ஹாஜி அவர்கள் துணை தலைவராகவும், ஜனாப் **மு.க. சத. செய்யது இஸ்மாயில்** (சேட் இஸ்மாயில்) அவர்கள் டெலிகேட் தலைவராகவும் இருந்து பணிகள் செய்திருக்கின்றனர்.

1955ல் நமது நகருக்கு மின்சார இணைப்பு தரப்பட்டது. சாலைகளில் மின் வசதியும், வானொலி வசதி, குடிநீர் சப்ளை, முஹ்யித்தீன் பூங்கா போன்ற நற்காரியங்கள் இவர்களின் காலத்தில் செய்யப்பட்டன.

இதே காலத்தில் காயல்பட்டணம் கூட்டு குடிநீர் திட்டம் ஆத்தூர் முதல் திருச்செந்தூர் வரை 11 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் போது தணித்து இயங்கி வந்த 1. லட்சுமிமாநகரம் கிராமப் பஞ்சாயத்து பகுதி 2. ஆறுமுகனேரி 3. கந்தசாமிபுரம் 4. ராணிமகாராஜபுரம் 5. நத்தைக்குளம் ஆகியவை கூட்டு குடிநீர் திட்டத்தில் இணைக்கப்பட்டன.

1965 முதல் 1970 வரை ஜனாப் பாவலர் **S.S. அப்துல் காதிர்** அவர்கள் தலைவராகவும் ஜனாப் **L.S. இபுராகீம்** அவர்கள் துணை தலைவராகவும் இருந்து பல அரிய காரியங்கள் செய்திருக்கின்றனர். இவர்கள் காலத்தில் நமது நகருக்கு சார்-பதிவாளர் அலுவலகம் தமிழக அரசால் தரப்பட்டது பாவலர் பூங்கா, கடற்கரையில் வள்ளல் சீதக்காதி வசந்த மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்டன.

இதற்கு முன் மொகுதூம் பள்ளி பாயிஸீன் சங்க எதிரிலும், மெயின்ரோடு மகழரா லாட்ஜிலும், குத்துக்கல் தெரு கிட்டங்கியிலுமாக செயல்பட்டு வந்த பேரூராட்சி அலுவலகம் 7.4.1967ல் புதிய சொந்த கட்டிடம் திறக்கப்பட்டு இன்று வரையிலும் அக்கட்டிடத்திலேயே செயல்பட்டு வருகிறது.

1970 முதல் 1973 வரை ஜனாப் **L.K. லெப்பை தம்பி** ஹாஜியார் அவர்கள் தலைவராகவும், ஜனாப் **V.M.S. அனசுத்தீன்** அவர்கள் துணைதலைவராகவும், ஜனாப் **L.S. இபுராகீம்** ஹாஜியார் அவர்கள் டெலிகேட் தலைவராகவும் இருந்து பல்வேறு நல்ல பணிகளை செய்திருக்கின்றனர்.

1973 முதல் 1979 வரை ஜனாப் **V.M.S. அனசுத்தீன்** அவர்கள் தலைவராக பொறுப் பேற்று பணிகள் செய்திருக்கிறார்கள். ஜனாப். **S. செய்யது அகமது** அவர்கள் 1973-ல் சிறிது காலம் டெலிகேட் தலைவராக இருந்து பணிகள் புரிந்திருக்கிறார்கள்.

ஆயுள் இன்சூரன்ஸ் (L.I.C. of India) மற்றும் **தமிழக அரசின்** கடன் திட்டத்தில் **காயல் பட்டணம் குடிநீர் அபிவிருத்திதிட்டமும்** அது தொடர்பான இரண்டாவது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும் - ஜனாப் பாவலர். **S. S. அப்துல்காதர்** அவர்கள் காலத்தில் திட்ட மிடப்பட்டு, ஜனாப். ஹாஜி **L.K. லெப்பை தம்பி** அவர்கள் காலத்தில் பணிதொடர்ந்து, ஜனாப். **V.M.S அனசுத்தீன்** அவர்கள் காலத்தில் நிறைவடைந்தது.

இதனால் இந்நகருக்கு விரிவான முறையில் குடிநீர் வசதி செய்யும் பாராட்டிற்குரிய பணி இக்காலத்தில் நடைபெற்றது.

1979 - 1979 ஜனாப் **K.S. இஸ்மத் B.Sc.,** அவர்கள் 12.3.79 முதல் 31 8.79 வரை குறுகிய காலம் தலைவராக இருந்தாலும் அதற்குள் பல நல்ல காரியங்களை செய்திருக்கிறார்கள்

1979 முதல் 1986 வரை (31.10.1979 முதல் 2.3.86) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் (B.D.O.) தனி அதிகாரிகளாக இருந்து நிர்வாக அதிகாரிகளே நிர்வாகம் நடத்தி இப்பேரூராட்சியின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்திருக்கின்றனர்.

ஜனாப் ஹாஜி **S. O. ஹபீப்** அவர்களை தலைவராகக் கொண்டு மக்கள் கமிட்டி அமைக்கப்பட்டு தனி அதிகாரிகள் காலத்தில் ஆலோசனை வழங்கப்பட்டன.

காயல்பட்டணம் பேரூராட்சியின் நூறு வருட காலத்தில் பேரூராட்சி தலைவர்களாக பணி செய்த பெருமக்களின் பெயர்களை சரியாக தொகுத்துள்ளோம். இத்தலைவர்களின் காலங்களில் துணை தலைவர்களாக பணிசெய்த சிலரது பெயர்கள் விடுபட்டிருக்கலாம்.

1947முதல்1953 ஆண்டுகளில் ஜனாப் **கத்தீபு மூசா நெய்னா** அவர்களும், 1949-50, 1950-51ம் ஆண்டுகளில் ஆலிஜனாப் **M. K. முகம்மது மூசா சாகிப் ஆலிம்** அவர்களும் டெலிகேட் தலைவராகவும், துணை தலைவராகவும் கடமையாற்றியிருக்கிறார்கள் என அறிய முடிகிறது.

காயல்பட்டணத்துடன் இணைந்திருந்த பகுதிகள் பிரிக்கப்பட்டு 2-11-1929ம் தேதி ஆறுமுகனேரி பேரூராட்சி (ஆர். டி. எண். 729/29) ஆரம்பிக்கப்பட்டது.

காயல்பட்டணம் பேரூராட்சியின் இப்போதைய வார்டு அமைப்பு (14 வார்டுகள் 15 உறுப்பினர்கள்) தூத்துக்குடி கோட்ட வளர்ச்சி அதிகாரியின் 22-2-77 P3 665/77 எண் தாக்கீதின் படி 22-7-77ல் அப்போதைய பேரூராட்சி மன்றத்தால் பிரித்து அமைக்கப்பட்டது.

1976 ல் தமிழக அரசால் தரப்பட்ட கால்நடை மருத்துவமனை 1980ல் இப்பேரூராட்சியால் நன்கொடையளிக்கப்பட்ட இடத்தில் புதிய சொந்த கட்டிடத்திற்கு மாற்றப் பட்டது.

1981-ல் மத்திய அரசின் தன்னிறைவு திட்டத்தின் கீழ் மூன்றாவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி இலவசமாக கட்டித்தரப் பட்டது.

தபால்-தந்தி அலுவலகம் - தொலைபேசி அஞ்சலகம் போன்ற மத்திய அரசின் அலுவலகங்களும் இந்நகரில் நீண்ட காலமாக உள்ளன.

மேல்நிலை மற்றும் ஆரம்பகல்வி நிலையங்கள், அரபிக்கலாசாலைகள், இங்கிலீஸ் மீடியம் பள்ளிக் கூடங்கள்தேவைக்கு தக்க அளவில் உள்ளன. மார்க்க அனுஷ்டானங்கள் பேணிக்காக்கப் படும் இந்நகரில் முப்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தொகையிருந்தும் சினிமா கொட்டகையோ, போலீஸ் ஸ்டேஷனோ இல்லை என்பது பெருமைப்படத் தக்கதாகும்.

இந்நகரவளர்ச்சியில் பெருமக்கள்பலரும் பெரும்ஈடுபாடு கொண்டிருந்தது வரலாற்றில் மறக்க முடியாததாகும். பொது மருத்துவமனை, தொலைபேசி அஞ்சலகம், S. T. D. டவர் அமைப்பு, புதிய சாலைகள் அமைத்தல் போன்ற நல்ல பணிகளுக்கு நிலங்கள் இந்நகர பிரமுகர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டன. தபால் தந்தி அலுவலகம், மின்சார வாரியம், சார்-பதிவாளர் அலுவலகம், போன்ற அரசுத்துறை அலுவலகங்களுக்கும் மிகமிக குறைந்த வாடகையிலேயே கட்டிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பேரூராட்சிக்குப் பொறுத்த வரையில் முதலாவது நீர்த்தேக்க வளாகம் அமைந்துள்ள இடமும் கால்நடை மருத்துவமனை அமைந்துள்ள வளாகமும் 1951-ல்

ஜனாப் ம. தா. செய்யது இபுராகீம் சாகிப் அவர்கள் வகையரா
ஜனாப் புளியங்கொட்டை செய்யது முகம்மது அவர்கள்
2-வது நீர்த்தேக்க வளாகம், பேரூராட்சி அலுவலகம் அமைந்துள்ள பகுதிகள் முழுவதும் 1967ல்
ஜனாப் தோல்சாப்பு T. M. E. அகமது முஹ்யித்தீன் அவர்கள் வகையரா
,, **அல்ஹாஜ் சி. ம. கு. முகம்மது நூகு அவர்கள்**
3-வது நீர்த்தேக்க வளாகம் அமைந்துள்ள இடம் 1955-ல்
ஜனாப் விளக்கு மு. க. அ. லி. முகம்மது சேக்னா லெப்பை அவர்கள்
4-வது நீர்தேக்க வளாகம் அமைந்துள்ள இடம் 1988-ல்
அப்பாப்பள்ளி ஜமாஅத்தார்
ஆகியோரால் அன்பளிப்பாக தரப்பட்டதை இச்சமயத்தில் நினைத்துப் பார்த்து நன்றி கூற கடமைப் பட்டுள்ளோம்.

சென்னை பேரூராட்சிகளின் இயக்குனர் அவர்களின் 15-10-82-ம் தேதிய நடவடிக்கை ந. க. 6434/82-2 எண் உத்தரவுபடி பேரூராட்சியாக இருந்த **காயல்பட்டணம்,** **"தேர்வு நிலை"** (Selection Grade) **பேரூராட்சியாக** உயர்த்தப்பட்டது.

1986 மார்ச் 3-ம் தேதி முதல் காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி மன்றத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாப் ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள் பணி செய்து வருகிறார்கள்.

துணை தலைவராக ஜனாப் சொளுக்கு M.N. அப்துல் காதர் (9-வது வார்டு) அவர்களும்

பேரூராட்சி மன்ற உறுப்பினர்களாக

		அவர்கள்	தனிதொகுதி	(1-வது வார்டு)
1.	திரு. P. அருணாசலம்			(1-வது ,,)
2.	,, S. காசிராஜன்	,,		(2-வது ,,)
3.	ஜனாப். S. A. அலிஅக்பர்	,,		(3-வது ,,)
4.	,, ச.த. முகம்மதுஅலி	,,		(4-வது ,,)
5.	,, S.S.E. சுல்தான்	,,		(5-வது ,,)
6.	,, ஹாஜி P.S.N.S. அப்துல்லாசாகிப்	,,		(6-வது ,,)
7.	,, S. A. முகிய்யதீன் தம்பி	,, *18-2-87 முதல் காலிஇடம்*		(7-வது ,,)
8.	,, S. T. முஸ்தபா கமால்	,,		(8-வது ,,)
9.	ஜனாபா M.A. சித்தி பாத்திமா	,,	பெண்கள் தொகுதி	(10-வது ,,)
10.	ஜனாப் A. K. நெய்னாமுஹம்மது	,,		(11-வது ,,)
11.	,, காயல் மகபூப்	,,		(12-வது ,,)
12.	,, முகம்மது ஈசாலெப்பை புகாரி	,,		(13-வது ,,)
13.	திரு. S. L. வெங்கடாசலம் B. A.	,,		(14-வது ,,)
14.	,, S. A. கோட்டாளமுத்து	,,		

ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுகின்றனர்.

தலைவர் ஹாஜி **வி.எம்.எஸ். லெப்பை** அவர்களுடன் துணை தலைவர் ஜனாப் **சொளுக்கு** M. N. **அப்துல்காதர்** அவர்களும் மற்றுமுள்ள **பேரூராட்சி உறுப்பினர்களும்** உறுதுணையாக ஒற்று மையாய் இருந்து செயல்படுவது சிறப்பிற்குரியதாகும். இம்மன்றம் பல்வேறு அரிய காரியங்களை செய்து முடித்திருக்கிறது. பல நல்லபணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக்கப்பூர்வ மான அரிய பலபணிகள் இன்னும் செய்யப்படவிருக்கின்றன. இது பொதுமக்கள் நன்கறிந்ததே!

அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புக் காட்டுவது போல் ஜனாப் **காயல் மகபூப்** **அ**வர்களின் பணி எங்களுடன் மிகவும் போற்றத்தக்கது. நிர்வாக அதிகாரி ஜனாப் **அ.மு. செய்யது** **முகம்மது** அவர்களும் எல்லா பணிகளிலும் மிகவும் ஒத்துழைப்பாய் இருந்து வருகிறார்கள். அரசு தலைமைச் செயலகம் முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை எல்லா அலு- வலகங்களுக்கும் எங்களுடன் வந்து உடனிருந்து சகல ஒத்துழைப்பும் தந்தமையே எங்களின் அரிய முயற்சிகள் வெற்றியடைய முடிந்தது.

குடிநீர் அபிவிருத்தி, குடிநீர் புதிய இணைப்புக்கள், திறந்த வெளி கிணறுகள், நவீன பொது கழிப்பறைகள், வீடுகளில் குறைந்த விலை கழிப்பிடங்கள், சரள் மற்றும் தார் சாலைகள் நாலாவது மேல்நிலை நீர்த்தேக்கம், ஆடு, மாடு அறுப்பிற்கு தனித்தனியே இரு சிலாட்டர் ஹவுஸ் இவை போன்ற பணிகளை நிறைவேற்றியுள்ளோம். கடைகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான திட்டப்பணிகள் முடிவடைந்துவிட்டன. அதற்கான ஆரம்ப கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 17.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வாறுகால் சாக்கடை திட்டம் போன்ற பணிகளை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மேலும், எங்களுக்கு சம்பந்தமில்லாத STD தொலைபேசி வசதி, ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் உயர்த்துதல், மின்சார சப்ளையை மும்மடங்கு அதிகரித்தல் இவை தொடர்பான பணிகள் நடைபெறுவதற்கும் நாங்கள் பெருமுயற்சி செய்து வருகிறோம்.

நான்காவது மேல்நிலை நீர்த்தேக்கம் கட்டுவதற்கு அரசின் முழு மான்யம் கிடைப்ப தற்கும், பல்வேறு பணிகளுக்கும் பெரும் ஒத்துழைப்பு தந்த ஜனாப் **முகம்மது தம்பி** (MTS) அப்பா பள்ளித் தெரு அவர்களுக்கு நாம் நன்றிக் கடன் பட்டவர்கள்.

சிறப்புமிக்க இந்நகர் 1911-லேயே ஒரு பெரிய கிராமமாக (சிறு நகரமாக) இருந்திருக் கிறது. Pears (Shilling) Cyclopaedia வில் (*1871*) காயல்பட்டணத்தில் மக்கள் தொகை *18560* இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கி. பி. *842*-ம் வருடத்திலேயே மக்கள் குடியேறியதாகவும் பள்ளி வாசல்கள் கி. பி. *843*, கி.பி. *1329*-ல் கட்டியதாகவும் ஆதாரங்கள் மூலம் அறிகிறோம்.

தாய்நாட்டை விசுவாசிப்பதில் பெருமை படும் இந்நகரில், இந்திய தேச விடுதலைக்கு உணர்ச்சிப் பூர்வமாக பங்கேற்றவர்கள் பட்டியல் மிக அதிகம்.

ஜனாப்களான சாமுநூகு அவர்கள், சாளைS.M.சாலிஹ் ஹாஜி அவர்கள் (சதுக்கைதெரு) M. K. M. சம்சுதீன் (நேரு குடும்பத்துடன் *24-7-39* ல் இலங்கையில் புகைப்படம் எடுத்தவர்கள்) அவர்கள், A. K. S. சாகுல் ஹமீது ஹாஜி அவர்கள், A. K. S. செய்யது அகமது ஹாஜி அவர்கள் ஹாபிழ் M. K. செய்யது அஹமது அவர்கள் (ஜில்லா போர்டு உறுப்பினர், மூன்றாலது அனைத் துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் தலைவர்) (பண்டகசாலை காரனார் தெருவென்ற தீவுத்தெரு) ஹாஜி L. K. லெப்பைத் தம்பி அவர்கள். (இன்று நாம் அனுபவித்து வரும் நல்ல குடிநீர் திட்டத்தின் மூல கர்த்தா. இந்நகரின் கல்வித்தந்தை முன்னாள் பேரூராட்சி தலைவர் L. K. பள்ளிகளின் நிர்வாகி. எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட் தலைவர்) (குத்துக்கல் தெரு)

ஜனாப்களான M. K. முகம்மது தம்பி மரைக்கார் அவர்கள், M.T. S. முகம்மதுதம்பி அவர்கள் (ஜில்லா போர்டு உறுப்பினர்) M. K. அப்துல்காதிர் அவர்கள், பி. மி. பிச்சைத்தம்பி மரைக்கார் என்ற முகம்மது இபுராகீம் அவர்கள், அ. க. அசன் மரைக்கார் தம்பி அவர்கள் (அப்பா பள்ளித் தெரு) S. M. ஜக்கரிய்யா அவர்கள் (பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடன் இணைந்து பணி யாற்றியவர்கள்) (அலியார் தெரு) பாளையம் சம்சுத்தீன் அவர்கள் (புதுக்கடைத் தெரு) ஹாஜி S. O. ஹபீபு அவர்கள், ஹாஜி S. A. ஹபீபு அவர்கள், செய்யது அஹமது மௌலானா அவர்கள் (கமருஸ்ஸமான் பத்திரிக்கை ஆசிரியர்) செய்யதுஅலி மௌலான அவர்கள், செய்யது முஹ்யித்தீன் மௌலானா அவர்கள் (தைக்கா தெரு), ஹாஜி L.K. செய்கு முகம்மது (காயல்காந்தி) அவர்கள், பல சத்தியாக்கிரகங்களிலும், கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டவர்கள். ஹாஜி V.M.S. லெப்பை அவர்கள் (நெல்லை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை பிரிவு முன்னாள் தலைவர், தற்போதைய நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர்) (ஹாஜி அப்பா தைக்கா தெரு) S K. முகம்மது லெப்பை அவர்கள் (சொளுக்கார் தெரு) திருவாளர்கள் K. சுப்ரமணியன் அவர்கள் (அருணாசலபுரம்) Dr. R. செல்வநாதன் R. I. M. P. அவர்கள் (புதுப்பள்ளித் தெருவுடன் சேர்க்கப் பட்டுள்ள பழைய பண்டுவக்குடித் தெரு) சாமிக்கண்ணு ஆச்சாரி அவர்கள் (வீரசடச்சி அம்மன் கோவில் தெரு) ஜனாப்களான ஹாஜி B. S. A. கபீர் அவர்கள் (குறுக்குத் தெரு) A. S. முகம்மது நூகு அவர்கள் ஹாஜி A. S. சாலிஹ் அவர்கள்

ஆராம் பள்ளித் தெரு) எல்லைக் காந்தியென்ற சு. லை. முகம்மது முகிய்யத்தீன் அவர்கள் (சித்தன் தெரு) கதர்சாகிபு என்ற கத்தீபு முஹம்மது சாலிஹு (அம்பல மரைக்கார் தெரு) பாட்டா மகுதூம் மீராலெப்பை அவர்கள் (மூதறிஞர் இராஜாஜியுடன் இணைந்து பணியாற்றியவர்) மற்றும் இதில் விடுபட்ட பெயர்கள் ஏராளம்.

தேச உணர்ச்சிக்கும் இந்நகர வளர்ச்சிக்கும் காயல் நகர மக்களின் பங்கு மகத்தானது பாராட்டிற்குரியது. உலகின் எந்த மூலையிலும் இந்நகரவாசிகளின் பாதம் படாத இடமே இல்லை என்ற பெருமையோடு உலகின் இன்றைய மகத்தான வளர்ச்சியை நேரில் பார்க்கின்ற இம்மக்கள் அதே வேகத்தோடு இந்நகரின் முன்னேற்றமும் அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை.

காயல்பட்டணம் ஊராட்சி தேர்வு நிலை பேரூராட்சியாக உயர்ந்து நிற்கும் இந்த ஒரு நூறு ஆண்டுகால வரலாற்றை அலசி பட்டியல்போட்டு சிலபக்கங்களில் எழுதிமுடித்து படித்தும் விட்டோம். ஆனால் இந்த வரலாற்று காலத்தில் சாதித்துக் காட்டிய செம்மல்கள், உடனிருந்து உதவி புரிந்தவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக விளம்பரத்தின் வெளிச்சத்திற்கே வராமல் ஆக்கப்பூர்வமான பணிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இம்மாபெரியவர்கள் அனைவரும் வருங்கால சந்ததிகளின் நெஞ்சத்திலும் நீங்கா இடம் பெற்றவர்கள்.

ஒரு நூற்றாண்டின் நிறைவு ஆண்டில் இந்த ஊழியனின் தலைமையில் மன்றம் அமைக்கப்பட்டு செயல்படும் அரிய வாய்ப்பு இந்நகர மக்களால் தரப்பட்டது. இறைவனின் பெரும் துணை கொண்டு எங்களின் சக்திக்கு மீறிய வகையிலும் பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். எங்களின் செயல்பாடுகளின் வெற்றிக்கு காரணம் தலைவர், துணை தலைவர், உறுப்பினர்கள் மன்ற பணியாளர் ஆகிய எங்களுக்குள்ள ஒற்றுமை தான். எல்லா பிரச்சனைகளிலும் நாங்கள் கலந்து ஆலோசனைகள் செய்கிறோம். அன்றாடம் பேரூராட்சி மன்றம் செல்கிறோம். நள்ளிரவுநேரத்தில்கூட ஒரு மூலையில் வசிக்கும் சாமான்ய ஏழையும் எங்களைவந்து சந்தித்து காரியம் சாதிக்கும்சூழ்நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். நிர்வாகமாகட்டும், இம்மன்றமாகட்டும், அதற்கு வெளியில் உள்ள பொது மக்களாகட்டும் அனைத்து தரப்புமே தங்களின் பொறுப்பு கடமைகளை உணர்ந்து செயல்படும் காலகட்டத்தில் பிரச்சனைகளுக்கே இடம் இல்லை. அனைவரின் ஒத்துழைப்புடனும் எவ்வளவோ காரியங்களை சாதிக்க முயல்கிறோம்.

எங்களின் பொறுப்பு கடமை செயல்பாட்டில் மனநிறைவு உண்டு! எங்களுக்கு வாய்ப்பளித்த பொது மக்களுக்கும், எங்களோடு ஒத்துழைத்த பெருமக்களுக்கும் மனம் நிறைந்த நன்றியும் உண்டு.!!

எல்லாப் புகழும் வல்ல இறைவனுக்கே! அல்ஹம்துலில்லாஹ்.

இவண் :

காயல்நகர - திருச்செந்தூர் ஒன்றிய ஊழியனும், தேசீய தொண்டனுமாகிய

வி. எம். எஸ். லெப்பை

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி மன்ற தலைவர்,

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்

Thames Polytechnic

Incorporating Avery Hill College
Oakfield Lane Dartford Kent DA1 2SZ
Telephone Dartford (0322) 21328

SCHOOL OF ARCHITECTURE AND LANDSCAPE
Head of School P Arvanitakis BAArch DipTPDipArch EngMTCGr MRTPI

Your ref
Our ref
Ext
Date 10th March 1990

Haji V.M.S. Lebbay, President
Kayalpatnam Selection
Grade Town Panchayat
37-41 Haji Appa Thaika Street
Kayalpatnam-628 204
Tamil Nadu India

Dear Mr Lebbay,

Thank you for your letter of 16th February. I enclose my greetings and a short article on The Historic Port of Kayalpatnam, its Town Plan and Monuments for the Souvenir Volume for the Centenary of the Kayalpatnam Panchayat. I am sorry that I could not send a photocopy of the town plan of Kayalpatnam. We are still working on the preparation of survey drawings of the town plan, based on the map you have kindly provided, but our drawings are not yet completed.

My enclosed article discusses briefly the history of Kayalpatnam, the old town and the main monuments. It summarizes the historical evidence and information from the old inscriptions in Kayalpatnam which indicate that this town is indeed the same as the old city of Qail, an important trading port between the western Islamic world and China. The old mosques of Kayalpatnam are perhaps among the very few surviving examples of the architecture of the historical ports of the Islamic world. As you know I am working on a much fuller study of the town and its monuments, to include photographs and survey drawings of the town as well as the main mosques. I hope to have the article ready for publication next year.

When your Souvenir Volume for the Centenary of the **Kayalpatnam** Panchayat is published, could you send me at least three copies, one for **myself**, one for the library of my School and one for the library of the University of London. If you send more copies I can convey them to the libraries of other interested institutions.

I wish you every success with the publication.

Yours sincerely

(Sd). Dr. MEHRDAD SHOKOOHY

GREETINGS

Warmest congratulations on the occasion of the centenary of the **Kayalpatnam** Panchayat. My wife and I wish a prosperous and happy future to this historic city and all concerned with its cultural heritage

Dr. Mehrdad Shokoohy
Architect and Conservationist
Senior Lecturer in Architecture
Thames Polytecnic
London, U.K.

THE HISTORIC PORT OF KAYALPATNAM, ITS TOWN PLAN AND MONUMENTS

INDIA



By

Dr. MEHRDAD SHOKOOHY

(Senior Lecturer in ArchitecturTehames Polytechnic
Kent - United Kingdom)

The people of Kayalpatnam firmly believe that their town is the same as the ancient port of Qail or Kayal, and the name is still used locally. Close inspection of the archaeological remains, as well as the study of the ancient layout of the old town, still preserved in the older part of present Kayalpatnam, Supports this view. However, in spite of the name of the town, which literally means 'the city of Kayal', western scholars of the late 19th century were uncertain about the location of the site of ancient Qail. Their views tend to be repeated by later scholars, although the site has never been the subject of a serious historical or archaeological investigation. For example, Henry Yule in his translation of the Book of Marco Polo, while admitting that "the real site of this once celebrated port has never been identified in any published work" continues by quoting Cald well:

They state also that the name of Kayal- pattanam has only recently been given to it, as a reminiscence of the older city The old Kayal, and erroneously named Koil in the Ordnance Map of India, is situated on the Tamraparni River, about a mile and a half from its mouth.

Yule's account, however, was, to put it mildly, ill informed, as in Kayalpatnam there are many mosques which are several hundred years old and are still in everyday use. Among these are the old Jami Masjid, which bears an early 20th century inscription said to be a copy of the original inscription of the mosque, recording that it was constructed in 737 AH (1336-7 AD) in the city of Quil (Annual Report of Indian Epigraphy — ARIE —, 1949-50, B 375). The structure itself is beyond doubt many centuries old, and is very likely to date from the 13th century. Even if the authenticity of the information in the inscription is questioned, it is still clear that when it was carved the people of Kayalpatnam believed that their town was the same as Qail. Moreovcr, in Kayalpatnam there are a number of tombstones dating from the 13th to the 16th century, only a few of which have so far been reported in the above mentioned Annual Report of Indian Epigraphy or by Yusuf Kamal Bukhari. Many others still await investigation. It is therefore clear that the present town of Kayalpetnam is indeed an old city and Muslim centre on the Coromandal coast, with tombs and mosques dating from the 13th century onwards. The name Qail has constantly been used in the locality by

the Muslims, and no other site in the area is now known by this name, nor is any other site in the vicinity enriched with numerous Islamic monuments. There is, therefore, little doubt that Kayalpatnam and the ancient city of Qail or Kayal are one and the same.

The exact sites of these ports is not known, but Yule tentatively suggests Nagor as a possible site for Fatan (see Journal of the Royal Asiatic Society, 1870, p. 347). The Mnslim community of Kayalpatnam, as in other early Islamic settlements in South India, must have consisted of Arabs mostly and persians from the region of the Persian gulf and the Red sea. as well as local embraced Muslims This heterogeneous population is reflected in the inscriptions of the early tombstones. For example, some of the tombstones record the origin of the deceased as al-Qahiri, Indicating that the personage or his ancestors were from Egypt, and another tomb, near the Sirupalli, and belonging to Maulana Abd al-Sadiq records the name of his grandfather as Muhammed al-Iraqi. And another shahid tombstone no 1, Sirupalli Mosque-Records the remains of a sailor SAIYED AHAMED S/o ABDULLAH on Sundey, 17th Jamathul Awwal 670 A. H (Jauuary 21st 1272 A C.) (ARIE No : 378, 1949 - 50). Many other people who must have been of local are recorded on their tombs origin as al-Mabari (see ARIE, 1976-7, D 306-19).

From at least the 12th century most of the commerce of the town appears to have been in the hands of the Muslims. The celebrated historian Rashid al - din, the vezir of the mongol emporer ULJAITU, records that Chinese merchandise was brought by junks to the ports of Mabar where it was exchanged with goods from the



Figure 1 Greater Jami Masjid or Kutba Periapalli, exterior view of the qibla wall showing the projection of the mihrab. Features such as the pilasters and the eavestones are original.



Figure 2 Kutba Periapalli, view of the centre of the prayer hall, showing the highly decorated columns around the square opening of the roof, above the place of the pool which is now filled in. The mihrab can also be seen in the background.

Islamic world and even Europe. However, the main import was horses, brought from the Persian Gulf, mainly from the Island of Kish, but also from other islands According to Rashid al-din, one of the first Muslim governors of Oail was Malik Taqi al-din ibn Abd al-Rahman al-Tayyibi, who was the minister of the Hindu ruler of Mabar, and also held the governorship of Fatan and Malifatan. The al-Tayyibi family were, at that time rulers of the region of the Persian Gulf and the southern Iranian province of Fars. Rashid al-din's account is also confirmed by the 13th century Arab geographer Abul-fida.

in the 13th century and at the time of the invasion of the Mabar region by the Delhi Sultan Ala al-din Khalji, the Muslim army penetrated at least as far south as Madura and Fatan. The Muslim writers, such as Amir Khusrau Dihlawi, who wrote the conquest Mabar for Ala al-din, and Isami, the historian of the Bahmani court, are silent about whether or not Kayalpatnam was also taken by the army of Ala al-din. Ibn Batuta implies that until the establishment of the sultanate of Madura the southern region of Mabar remained independent from Delhi. However, according to the family racords of the descendants of Quzi Sayyid Taj al-din of Madura, it appears that Qail was also added to the Khalji territory of Mabar, and that Sayyid Ala al-din, a brother of Sayyid Taj al-din, was appointed Qazi of the town of Qail. The dates suggested by the records of the family are not entirely reliable, but the genealogy shows that Sayyid Ala al-din was the son of Sayyid Jamal al-din al-Mabari, who is said to have been sent from Egypt to be Qazl of Maber.

With the establiehment of the Sultanate of Mabar by Jalal al-din Ahsan Shah in 734 AH (1333-34 AD) the southern regions of Mabar were gradually added to the territory of the newly estblished sultanate. Ibn Batuta records that at the time of Sultan Ghiyath al-din Damghan Shah a great battle took place near Qail in which the advancing army of Belal Dev was totally destroyed, the Raja himself was put to death, and the region was taken by the Muslim army. Kayalpatnam must have remained as part of the sultanate untii 779 AH (1377-78 AD) when the last sultan of Madura, Ala al-din Sikandar Shah was killed by the army of the newly established Vijayanagar kingdom. The Muslim of Kayalpatnam, however, had little to do with the power struggle in the region, as their links were with the western Islamic world rather than Delhi. They continued their prosperous maritime commerce under the new regime.In the Makhdum tombs (Mosque) at Virapandiyanpattanam near Tiruchendur, and not far from Kayalpatnam, there is an inscription dated Kollam 563 (1387 AD) recording the order of Qazi Abu Bakr, who imposed a tax of quarter or one per cent on the value of commodities passing through the port of Shonadukondanpatinam, and allocated it to the maintenance of the Jami Masjid of that port. The date of the inscription is 10 years after the collapse of the Sultanate of Mabar, and shows that the Islamic merchant community still maintained its considerable influence in local affairs. The prosperity of Qail is also noted by Marco Polo, who embarked at the port on his route from China back to Venice.

Kayalpatnam is on the coast of the Gulf of Mannar and is situated 8·34' N and 78·8' East, and about 11 kilometres north of Tiruchendur. It is no longer a commercial port, and the natural harbour is only used by local fishermen. The good road links and railway have eliminated the need for transporting local merchandise by sea but, as it appears from the Imperial Gazetteer of India, until early this century some sea borne trade continued, mainly

in rice and coco-nuts with Ceylon, and timber and areca-nuts with Travancore. However, the Muslims of Kayalpatnam have not ceased their traditional occupation as merchants. They continue to live in harmony with their Hindu and Christian neighbours, will still looking towards the oceans and principal commercial ports for trade. Their offices are now as far afield as Hong Kong, Singapore, Bangkok Colombo and Europe. The modern town is developing rapidly and modern houses and public buildings are being erected. These developments have affected the old layout of the town, but the core of ancient Qail is still preserved in the centre of Kayalpatnam.

The heart of the town is in an area laid out on the traditional grid pattern, and consists of four roads running north-south parallel to the coast line, intersected bv three east-west roads. The streets have later been extended in all directions, except on the southern side, where the street pattern does not follow the older layout. Six of the oldest monuments of Kayalpatnam are located in the old core of the town. These monuments include the Ahmad Nainar mosque, the complex of the Qadirya Mosque (Qadirya kodimara sirunainar palli) and the tomb of Shams al - din, and the two greater and smaller Jami mosques known as Kutba Periapalli and Kutba Sirupalli. We have already noted that the larger Jami bears an inscription recording the date of its construction as 737 AH (1336-7 AD). The older pant of the large Jami Mosque wes coustrucled in the 9th century This is an impressive monument (figs. 1-2) with a portico at the eastern side and a large colonnaded prayer hall at the west. In the centre of the prayer hall there was originally a pond, supplied by rain water through a square opening in the roof. The pool was filled in early in this century, and paved with marble, and above the opening a dome has been constructed. The portico in front has also beenr ecently extended, but the original structure is preserved without much alteration. To the south of the mosque an old colonnade is attached to the building, and is claimed to be the remains of an even earleer mosque.

The Kutba Sirupalli must also be as old as the larger Jami, as to the south of it a tomb chamber is constructed which contains the tombs of seven martyrs. The earliest tomb is that of Shaykh Hasan, who died in 794 AH (1331-2 AD); and the latest is of a lady, Maryam bint Sayyid Ahmad who died in 822 AH (1419-20 AD). The tomb chamber is presumably contemporay with the graves, and is an addition to the mosque. The date of the mosque must therefore be even earlier than the graves. The layout of the Smaller Jami is similar to that of the Kutba periapalli, and consists of a colonnaded prayer hall with a portico at the eastern end In the centre of the hall there may have been a rectangular pool, as is indicated by the roof structure, but no traces of such a pool can now be seen on the floor.

The two other old mosques in this area are smaller in size, but are of considerable importance as monuments. The mogudoom palli mosque at mogudoom street and Ahmad Nainar Masjid, built in the same style as the other old mosques of Kayalpatnam, has preserved parts of its original parapet arount the roof. The parapet is decorated with patterns closely resembling ancient Hindu and Buddhist motifs. This mosque may be even earlier in date than the two Jamis, and is probably one of the earliest standing mosques in India. The Qadiriya Mahlara is larger, but does not have the usual portico. The ceiling of the Qadiriya Mahlara is decorated with round and square rosettes. Eastern and northern sides Mahlara is a complex of a theological school known as the Qadirya Madrasa which is still one of the main centres of Islamic and Arabic studies in Kayalpatnam. The Mahlara of the Qadiriya Madrasa is on a circular plan, in the form of a drum with a dome above, and has four minarets set roughly on the cardinal points The madrasa itself has a courtyard surrounded by a colonnaded portico, but the chambers behind. the portico are modern. The madrasa bears an inscription above the entrance recording that it was built by Shaykh Abdullah in shawwal 1288 AH (1871), and is dedicated to the Qutb Muhi al-din Abdul-Qadir.

A Madrasa at zavia a contemporary to qadiria madrasa called zaviathul shadulyathul Madrasathul Fasiah is a theological school, which is also one of the main in Islamic and Arabic studies like Mahlaralsul qadiriya in Kayalpatnam. It was built in the year 1868 AD (AH 1285) by Shaykh Mohamed Abubakar Miskeen Sahib Lebbay Alim (PERIYA SEIGUNA) and is dedicated to the qutb Abdul Hasan Aliu Shadhuly.

The main expansion of the old core of the town may have taken place between the 15th and 17th centuries, as monuments datable to this period are scattered around the town. One of the best examples of the monuments of this period is the Erataikulampalli, or the mosque of the two ponds, named after the two ponds which existed until recently outside the building. The mosque itself has a traditional plan, but the columns and their brackets inside the hall are highly decorated with fine carvings (fig. 3). Two other mosques are the Maraikarpalli and the Appapalli, both at the south-east of the town. Near to each of these mosques is a tomb chamber: that associated with Appapali is the shrine of Shaykh Sam Shahab al-din, and the other is the shrine of Shaykh Sulayman, both of whom are son and father said to have lived at the end of the 16th century and early in the 17century.The tombs are similar to each other, but differ in form from tomb chambers of north India. The two tombs are rectangular in plan and have hipped roofs constructed out of stone blocks. The roofs are clearly imitations of the hipped roofs of South Indian wooden building. Such structures are still common in Kerala, but are no longer usual in Tamil Nadu. However, from the account of Ibn Batuta it is clear that houses and even some of the public buildings of Mabar were consitructed of timber The tombs of Saykh Sulayman and Shaykh Sam seem to be stone imitations of small wooden huts, whjch must have been a common form for humble dwellings. However to make the tomb chambers lasting monuments stone was used.

The old mosques and tombs in Kayalpatnam are not only among the most significant Islamic monuments in South India, but also have an important place in the architecture of the Islamic architecture developed on the southern coasts of the subcontinent, and provide a iink between the architecture of north-west India and that of the Islamic Far East. Only a few Islamic monuments of this calibre exist in Tamil nadu; among them are the shrine at Nagore, and the tombs of Ala al-din and Sikandar Shah in Madura. The people of Kayalpatnam are aware of the historical and architectural value of their monuments and have so rare preserved them. However, Kayalpatnam is a prosperous town and is developing very repidly. The old parts of the town are reconstructed, and the town is now growing in all the four sides. A number of the old monuments have modern additions which in some cases have obscured the original structure, but the monuments are in general well preserved, and in spite of these additions, alterations to the original structures have so for been kept to a minimum, preserving the cultural heritage of qail for future generations.





Figure 3 Erataikulampalli or the Mosque of the Two Ponds, measured sketch of a column of the prayer hall. These colums are closely similar to the columns around the site of the pool in Kutba Pariapalli.

அரபு - தமிழ் ஒருமைப்பாட்டுக்கு அடிகோலிய புகழ்மிகு காயல்பட்டணம்

— ஹாபிஸ் எம். கே. செய்யிது அஹமது —

அரபு-தமிழ் உறவு:

அறபுக்கும் தமிழுக்கும் மனித இனம் தோன்றிய காலம் முதல் தொடர்பு இருந்து வருகிறது. தமிழகமும் இலங்கையும் கடலால் பிரிக்கப்பட்டது. **லெமூரியாக் கண்டத்தின்** ஒரே நிலப்பரப் பாக இருந்த காலத்திலேதான் முதல் மனிதர் **ஆதம் (அலை)** (ஆதாம்) ஆதம் மலையி [ADAM'S PEAK)லும் அவர்களின் துணைவியார் **ஹவ்வா (அலை)** [ஏவாள்] அரபுநாட்டிலுள்ள ஜித்தாவிலும் இறக்கிவிடப்பட்டு பன்னூற்றுண்டு காலம் தொடர்பின்றி வாழ்ந்து பின் இருவரும் அறபு நாட்டிலுள்ள அறபாதில் ஒன்று கூடி தம்பதிகளாக வாழ்ந்தனர். இவ்விருவர்களின் மக்களாகிய ஹாபீல், காபீல் ஆகியோரின் கல்லறைகள் ராமேஸ்வரத்தில் காணப்படுகின்றன என்றும் வர லாற்று ஆராய்ச்சியாளர்கள் எழுதி வைத்துள்ளனர். எஃது எவ்வாறிருப்பினும் அறபும்-தமிழும் உலகிற்கு முதன் முதலாக அறிமுகமான மொழிகள் என்பதில் ஐயமன்று. ஆதம் (அலை) அவர் கள் மூலம் அறிமுகமான மொழி தமிழ்மொழி. ஹவ்வா (அலை) அவர்கள் மூலம் அறிமுகமான மொழி அறபிமொழி. ஆதம் (அலை) இறக்கி விடப்பட்ட இடம் இக்கால இலங்கையாயினும் அக்காலத்தில் **லெமூரியாக் கண்டத்தில்** அமைந்த தமிழகமேயாகும். இதுபற்றி ஆய்ந்து ஆராய்ந்து ''**தமிழ் எங்கள் தந்தை மொழி — அறபு எங்கள் தாய்மொழி**'' என்ற தலைப்பில் மதுரை யில் நடைபெற்ற 5வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கருத்தரங்கில் ஒரு ஆய்வுரை நிகழ்த்தினேன். அதில் முழு விபரங்களும் கொடுத்துள்ளேன். அறபுக்கும் தமிழுக்கும் உள்ள ஒருமைப்பாடு துண்டிக்கப்படாமல் இன்று வரை இருந்து வருகிறது. இவ்விரு இனமக்களி ளிடையே கலாச்சார உறவு, வர்த்தக உறவு மட்டுமின்றி அரசியல் உறவும் வாழ்க்கை உறவும் இருந்து வந்துள்ளது. அத்தகைய உறவுக்கு மூல காரணமாக இருந்ததும், இணைப்புப் பாலமாக இருந்ததும் தமிழகத்திலே இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தில் தாமிரபர்ணி நதி சங்கமமாகும் இடத்திற்கண்மையிலே அமைந் துள்ள **காயல்பட்டணம்** என்ற வரலாற்றுப் புகழ் பூத்த வான்புகழ் கொண்ட மாநகர் என வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத் துள்ளனர். பிற்கால சரித்திர ஆசிரியர்கள் பலர் வரலாற்றை எழுதவிட்டு விட்டனர். ஒரு நூற்றுண்டுக்கு முன் வாழ்ந்த **ஸர்ஹென்றியூல்** என்ற அறிஞரும் **டாக்டர் கால்ட்வெல்** என்ற கிறிஸ்தவ பாதிரியாரும் **மார்கோபோலோ** வந்து சென்ற இடங் களுக்கெல்லாம் நேரில் சென்று குறிப்புகள் சேகரித்து நூல் எழுதியுள்ளனர். அதில் பல சரித்திரி ஆதாரத் தகவல்களைத் தந்துள்ளனர். அவற்றை அடிப்படையாக வைத்து **சுவாமி சுத்தானந்த பாரதியார்** தமது ''தமிழுணர்ச்சி'' என்ற நூலில் பல ருசிகரமான தகவல்களைத் தந்துள்ளார். வரலாற்றுப் பூர்வ



ஹாபிஸ்
M.K. செய்யிது அஹமது
காயல்பட்டணம்.

ஆதாரங்களை வைத்து காயல்பட்டணத்தின் முக்கியத்துவம் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதினேன். இது சென்னை "**ஹிந்து**" *25-8-1940* தேதியிட்ட ஞாயிறு இதழில் "AN ARAB KING OF PANDYA" (பாண்டிய நாட்டின் அறபி மன்னன்) என்ற தலைப்பில் வெளி வந்தது. மாநில மத்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் இங்குள்ள பல கல்வெட்டுகளுக்குப் பிரதிகள் எடுத்து தங்களின் ஆய்வு நூல்களில் வெளியிட்டனர். "SUZERAIN OF ARABS OVER CHOLA PANDYA" (சோழ-பாண்டிய நாட்டின் மீது அறபிகளின் மேலாதிக்கம்) என்ற தலைப்பில் எனது நீண்ட ஆங்கில கட்டுரை *1941*ல் பிரசுரிக்கப்பட்ட "ISLAMIC SOUTH" (இஸ்லாமிய தென்னகம்) என்ற நூலில் வெளி வந்தது. இவற்றின் சுருக்கம் தான் எனது "வான்புகழ் காயல்பட்டணம்" என்ற நூல். பின்னுல் கிடைத்த பல தகவல்களையும் வைத்து இலங்கையிலிருந்து வெளி வரும் **வீரகேசரி** இதழில் "தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகம்" என்ற தலைப்பில் 32 தொடர் கட்டுரைகள் எழுதினேன். "முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம்" என்ற எனது நூலிலும் பல ஆதாரமான தகவல்களையும் கொடுத்துள்ளேன். இது இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மார்கோ போலோ மட்டுமின்றி வங்காள சிவில்சர்வீஸை சேர்ந்த **சர் எலியட்** என்பவர் தமது "HISTORY OF INDIA" (இந்திய சரித்திரம்) என்ற நூலிலும் **பண்டித ஜவஹர்லால் நேரு** தமது "DISCOVERY OF INDIA" (இந்தியாவின் கண்டுபிடிப்பு) என்ற நூலிலும் ரசிகமணி திரு. **டி. கே. சிதம்பரநாத முதலியார்** தமது "**இதய ஒலி**" என்ற நூலிலும் திரு. **ரா. பி. சேதுப்பிள்ளை** தமது "**ஊரும் பேரும்**" என்ற நூலிலும் வேறு புகழ் பெற்ற இந்நாட்டு மேநாட்டு அறிஞர்கள் பற்பல நூற்களிலும் பல தகவல்கள் கொடுத்துள்ளனர். இவற்றிலெல்லாமிருந்து பொறுக்கி எடுத்த சில விபரங்களை மட்டும் இவண் தருகிறேன்.



*25-8-1940*ல் THE HINDU நாளிதழில் வெளி வந்த படத்தின் மாதிரி: எகிப்தின் கெய்ரோ அருகிலிருந்து காயல்பட்டணம் வந்த அறபிகளின் பயணப் பாதை.

காயல்பட்டணத்தில் அறபிகள் குடியேற்றம்

காயல்பட்டணத்திலிருந்து அரபு முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் பற்றி டாக்டர் **கால்ட்வெல்** பாதிரியார் தமது "HISTORY OF TINNEVELLY" (திருநெல்வேலி சரித்திரம்) என்ற நூலில் பக்கம் 36-ல் பின்வருமாறு கூறுகிறுர்.

"மாபர் (தமிழகக்) கரையில் முஹம்மதிய அறபிகள் 9-வது நூற்றுண்டில் குடிபுகுந்து கீழ் கடலோரக் கரைகளுக்கும் இலங்கைக்கும் பரவியதாகத் தெரிகிறது. கீழ்க்கரையில் அவர்கள் முதலில் குடியிருந்த இடம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காயல்பட்டணமாகும். தென் அறேபியாவிலுள்ள ஸாபியீன்கள் கிரேக்கர்களைப் பின்பற்றி வெகு காலமாக இந்தியாவிற்கு அடிக்கடி வருகின்றவர்களாக இருந்தனர். அறபி வர்த்தகர்களின் வழித்தோன்றல்களாகிய கலப்பு இன மக்கள் மேற்கு கரையில் 'மாப்பிள்ளை' கள் என்றும் கிழக்குக் கரையில் 'லெப்பை'கள் என்றும் அழைக்கப்படுவர். தமிழர்கள் இவர்களை 'துலுக்கர்'கள் என்றும் 'சோனகர்'கள் என்றும் அழைப்பர். 'மரைக்கான்' அல்லது 'மரக்கான்' என்பது இவர்களின் பட்டப்பெயர். கப்பலோட்டி என்பது இதன் பொருள். கப்பல் ஓட்டிகளாக முதன் முதலில் விளங்கியவர்கள் இவர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுக்கு ஹிந்துஸ்தானி மொழி தெரியாது. அந்நாட்டு மொழிகளாகிய தமிழ் அல்லது மலையாளமே பேசுகின்றனர். ஹிந்துஸ்தானி மொழி பேசுவோர் வட இந்திய பட்டாணியர்களே. இவர்கள் முற்றும் வேரானவர்கள்."

கி. பி. 9-வது நூற்றுண்டில் அறபிகள் நெல்லை மாவட்டத்திலுள்ள காயல்பட்டணத்தில் குடிபுகுந்தார்கள் என்று கால்ட்வெல் பாதிரியார் கூறியுள்ளாரே தவிர வந்து குடிபுகுந்தவர்கள் எத்தனை பேர்? ஏன் வந்தார்கள்? எந்த வருடம் வந்தார்கள்? என்பன போன்ற விபரங்கள் கொடுக்கப்படவில்லை. கி. பி. 875-ம் ஆண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த அக்கால வேந்தன் குடிபுகுந்த அறபுகளுக்கு ஒரு பட்டயம் வழங்கியுள்ளார். அது சகாப்தம் 798 கீலக வருடம் சூன மாதம் சுக்கிரவாரம் உத்திர வேளையில் கொடுக்கப்பட்டதாகவும், இதை வழங்கியவர் 'பாண்டிய மண்டலம் 56 தேசத்திற்கு தேசாதிபதி அபிராம ராஜ அதிராஜ ராஜ ஜெயவீர ராஜுகார் கர்த்தர்கள் என்றும், பட்டயம் பெற்றவர் 'அறபு நாட்டு மிஸ்று தேசாதிபதியின் கொடுங்கோன்மைக்கஞ்சி மரக்கல யாத்திரையாய்க் கர்த்தர்களின் தேசச் செம்பிநாட்டின் பாசரை வகுத்துக் கர்த்தர்களின் சமுகங் கொடுத்து அந்நாட்டிற் குடியேறியிருக்க தாமிரப்பட்டயங் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டவர்கள் என்றும் அப்படி கேட்டுக் கொண்டவர்கள் மொத்தம் 224 பேர் என்றும் இவர்களில் 4 நாவிதர்களும் அடங்குவர் என்றும் இந்த 4 நாவிதர்களில் ஒருவர் பெண் என்றும் பக்ரீவமிசத்தலைவராகிய கல்ஜி என்பரை இக்குழுவுக்குத் தலைவராக நியமித்து இருப்பதாகவும் இப்பட்டயத்தில் குறிப்பிட்டு, தூத்துக்குடி மாரியம்மன்கோவிலுக்கு மேற்குள்ள இடம், சிவந்தாகுளம், முத்தையாபுரம், முள்ளக்காடு, கோவங்காடு, மஞ்சள்நீர்க்காயல், கொற்கை, குலையன்கரிசை, முக்காணி, கொலுவுத்துறை, ஆத்தூர், சேர்ந்தமங்கலம், சொரிக்கம் பிள்ளைக்கரை, ஆவரங்காடு, தண்ணீர்பந்தல், கீரனூர், நல்லூர், அம்மன்புரம், பள்ளிப்பத்து, மணற்காடு, ராஜமன்னியபுரம், வீரபாண்டியன் பட்டணம், மங்களபாடி, காயல், புன்னைக்காயல் ஆகிய ஊர்களின் குடிகளின் நிர்வாக சம்பந்தமான சில பொறுப்புகளும் கொடுபட்டுள்ளன என்றும் காணப்படுகின்றன.

கி.பி. 9வது நூற்றுண்டில் அறபி முஸ்லிம்கள் காயல்பட்டணத்தில் குடிபுகுந்து அனுபவித்து வந்த உரிமைகளை இது மெய்ப்பிக்கிறது, இலங்கையிலுள்ள **டாக்டர் எம் எம். உவைஸ்** தமது "தீன்தமிழும் தீந்தமிழும்" என்ற நூலில் 2-வது பக்கத்தில் மேற்கண்ட கூற்றுக்கு ஆதாரமாக பின்வரும் தகவலை தந்துள்ளார்:-

"திருநெல்வேலி மாவட்டக் கருட்பொருட்களஞ்சியத்தில் காயல்பட்டணத்தின் வரலாறு பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது"

"ஆயிரம் வருடங்களுக்கு முன் அறபு நாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் தென் இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் பாண்டிய மன்னனின் அன்பைப் பெற்றனர். பாண்டிய மன்னனிடமிருந்து 4 மைல் நீளமும் $1\frac{1}{2}$ மைல் அகலமுமுள்ள ஓர் இடத்தை அவர்கள் பெற்றனர். அங்கே அவர்கள் குடியேறினர். அப்பொழுது அந்தப் பட்டணம் சோனகர்பட்டணம் என்று வழங்கி வந்தது. பின்னர் ஒரு காலத்தில் அங்கு குடியேறிய மக்கள் வேறு இடங்களை நாடலாயினர். பின்னர்

மதுரையில் திருமலைநாயக்கர் அரசு புரிந்து கொண்டிருந்த காலத்தில் காயல்பட்டணம் மக்கள் அங்கும் இங்கும் சென்று குடியேறியுள்ளனர் என்பதை அறிந்தான். அறிந்து அந்த நகரத் தலைமைக் காரரை அழைத்து கலைந்து போன முஸ்லிம் மக்களை மீண்டும் ஒன்றுகூட்டும்படி கட்டளையிட்டான். அவர்களுக்கு அங்கு வாழும்படி பணித்துச் செப்பேடு வழங்கினான்.''



மார்க்கோ போலோ வெளியிட்ட
காயல் வரை படம்

காயல்பட்டணத்தில் கி. பி. 9-வது நூற்றுண்டில் அரபி முஸ்லிம்கள் குடிபுகுந்து வாழ்ந்த விபரங்களுக்கு வேறு பல சான்றுகள் இருப்பினும் மேற்கண்ட மேற்கோள்கள் போதும் என்பதே என் அபிப்பிராயம். வரலாற்றின் அரிச்சுவடியே தெரியாத சிலர் இக்காலத்தில் காயல்பட்டணம் குடியேற்றம் நிகழ்ந்தது 400 வருடங்களுக்கு மேல் இல்லை என்று எழுதியிருக்கிறுர்கள். இப்படியான தவறுன செய்திகளை மறுக்க வேண்டிய கடமையாதலால் ஆதாரபூர்வமான இத் தகவல்களைக் கொடுத்துள்ளேன். இனி கி.பி. 1553-ல் திருமலைநாயக்கர் காயல்பட்டணம் முஸ்லிம்களுக்கு கொடுத்த பட்டயத்திலிருந்து சில விபரங்களை இவண் தருகிறேன்.

திருமலைநாயக்கர் செம்புப் பட்டயம் :

''சகாப்தம் 1475ம் வருடத்திற்கு செல்லா நின்ற மன்மத வருடம் மகர மாதம் சோமவாரம் உத்திரவேலை திருவலம்புரி நட்சத்திர நாள்'' இப்பட்டயம் எழுதிய வருடம் தேதி மேற்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது,

> ''ஏலினவாரு திருமலைநாயக்கர்காரு காயல்பட்டணம்
> ஆகிய சோனகர்பட்டணம் கர்த்தா திருமலைநாயக்கர்
> செம்பிநாடு பவுத்திரமாணிக்கம் சோணகர்பட்டணம்
> பரிவாரனை முதலியாபிள்ளை மரைக்காயனுக்கு எழுதிக் கொடுத்த பட்டயம்''

என்று யார், யாருக்கு எழுதிக் கொடுத்தது என்ற விபரம் காணப்படுகிறது. இப்பட்டயத்தில் காணப்படும் வாசகங்களிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களிலுள்ள வருவாயில் பாதி சோனகர்பட்டணம் மகுதூம் பள்ளிவாசலுக்கும் மறுபாதி கச்சி அம்மாள் பள்ளிக்கும் என்று கண்டிருக்கிறது. நிலங்களின் விபரம் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ''ஆவரன்காடு, வெள்ளைக்கோவில் தண்ணீர்பந்தல் வயல்களில் முதல்பாதி கச்சி அம்மாள் பள்ளிக்கும் இரண்டாவது பாதி சோணகர்பட்டணம் மகுதூம் பள்ளிவாசலுக்கும்''

இப்படி எழுதி சங்கு சக்கரம் போட்டு கொடுக்கப்பட்டது என்று அப் பட்டயத்தில் காணப்படுகிறது. இதன் முழுவிபரம் காயல்பட்டணம் கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர் எழுதி வெளியிட்ட பல பாடல் திரட்டில் காணப்படுகிறது. காயல்பட்டணத்தில் இரண்டு மகுதூம் பள்ளிகள் உள்ளன. இது எந்த மகுதூம் பள்ளிக்கு என்ற விபரமும் கச்சிஅம்மாள் பள்ளி என்றுல் எங்குள்ளது என்ற விபரமும் தெரிய வேண்டியவையாகும். அதே தேதியில் இன்னெரு பட்டயமும் திருமலைநாயக்கர் எழுதி கொடுத்திருக்கிறுர். அதில் பின் வருமாறு குறிப்பு காணப்படுகிறது.

> '' திருக்கருணை பொருந்தும் செம்பி நாடு, பவுத்திரமாணிக்கம், சோனகர்பட்டணம் பரிவாரனை முதலியாப்பிள்ளை மரைக்காயனுக்கு ஏலினவாரு சுவாமி ஆகிய சொக்கலிங்க திருமலைநாயக்கர் எழுதிக் கொடுத்த தாம்பூர பட்டயம், பள்ளிப்பத்து கண்டு முதலில் மகுதூம் பள்ளிக்கு பாதியும் சோனகர் கொண்ட காழி, கத்தீபு, பிரபுக்கள், முதலியாப்பிள்ளை மரைக்காயன், சாலிப்பிள்ளை மரைக்காயன், கசாலி அப்பு மரைக்காயன், நாட்டுத் தாணுதிபதி, தெல்லிமாமு நெய்னு, கடற்றுணுதிபதி சமாலுத்தீன் மரைக்காயன், நாட்டுக்கணக்கு, ஊர்கணக்கு செய்தாலி, தலையாரிபிச்சை இவர்களுக்குப் பாதியும்''

இதில் முதலியாப்பிள்ளை மரைக்காயனின் உத்திரவில்லாமல் யாரும் திருமணம் முடிக்கமுடியாது என்ற நிபந்தனையும் காணப்படுகிறது. காயல்பட்டணத்துக்கு வெவ்வெறு காலத்தில் வெவ்வேறு பெயர் இருந்துவந்த விபரமும் அறிய முடிகிறது. **பவுத்திரமாணிக்கப்பட்டணம்** என்று ஒரு பெயரும் **சோனகர்பட்டணம்** என்று இன்னொரு பெயரும் இருந்து வந்திருக்கிறது. பிற்காலத்தில் சோனகர்பட்டணம் என்ற பெயரே அரசு பதிவேட்டில் இருந்து வந்துள்ளது. எகிப்து நாட்டிலிருந்து இங்கு வந்து குடிபுகுந்த அறபிகளின் வழித் தோன்றல்களை **சோனகர்கள்** என்றும் **துலுக்கர்கள்** என்றும் தமிழர்கள் அழைத்துவந்த விபரத்தை **கால்ட்வெல் பாதிரியார்** விளக்கியிருந்ததைக் கண்டோம். காயல்பட்டணத்திற்கு மேற்கே **சோனகன்விளை** என்று ஒரு ஊரும் அவ்வூரில் **துலுக்கன்குளம்** என்று ஒரு குளமும் இருக்கிறது. அவ்வூரில் ஒரு முஸ்லிம்கூட வசிக்கவில்லை. அக்காலத்தில் காயல்பட்டணத்தின் ஒரு அங்கமாக இருந்ததால் இப்பெயர்கள் வரக்காரணமாயின என்பதை அறிய முடிகிறது. முற்காலத்தில் காயல்பட்டணம் எண்பது தற்போதைய பழையகாயலிலிருந்து ஆரம்பித்து புன்னைக்காயல் உள்பட காயல்பட்டணம் சோனகன்விளை வரை ஒரு மாநகரமாக இருந்து வந்தது என்பது வரலாற்று உண்மையாகும்.

சோனகர் யார் ?

கிரேக்கர்களை தமிழர்கள் யவனர் என அழைத்தனர்; எகிப்து நாட்டை மிசிரம் என அழைத்தனர்.

''சீனம், மிசிரம், யவன ரகம்..........'' என்ற கவி பாரதியாரின் கவிதை இதைப் புலப்படுத்துகிறது. கிரேக்கர்களை யவனர்கள் என்று அழைத்தது போன்றே அறபு வழித் தோன்றல்களையும் தமிழர்கள் அவ்வாறே அழைத்து வந்தனர். காலப் போக்கில் இது சோனகராக மருவிற்று என்பர். சோனகர் என்ற வார்த்தையை முதன் முதலாக உபயோகித்தவர் தமது ''நெடுநெல்வாடை'' என்ற நூலிலே **நச்சினுர்க்கினியார்** புலவர்தான். அறபி வழித் தோன்றல்களை ஸ்பெயின் தேசத்தவர்கள் 'மூர்'கள் (MOORS) என அழைத்தனர். நாடோடிகள் என்பது இதன் பொருள். இலங்கையிலே அறபி வழித்தோன்றல் முஸ்லிம்களை 'மூர்'கள் என்று ஆங்கிலத்திலும் 'சோனகர்'கள் என்று தமிழிலும் 'யோனி'கள் என்று சிங்களத்திலும் அழைத்து வருகின்றனர். இது ஒரு நீண்ட வரலாறு. இனி காயல்பட்டணத்தில் கி. பி. 9வது நூற்றுண்டில் குடிபுகுந்த அறபிமுஸ்லிம்களின் வழித் தோன்றல்களில் ஒரு பெருங்கூட்டம் இலங்கை சென்று குடிபுகுந்த விபரத்தைக் காண்போம்.

காயல்பட்டணம் முஸ்லிம்கள் இலங்கையில் குடியேற்றம் :-

கி. பி. 875ல் காயல்பட்டணத்தில் குடிபுகுந்த அறபிகள் தமிழர்களுடன் கலப்பு மணம் செய்து வாழ்ந்து பெருகி மூன்று தலைமுறைகளுக்கும் பின் அதாவது கி.பி. 1024ல் இலங்கையின் மேற்கு கரையிலுள்ள **பேருவிளையில்** குடிபுகுந்த அப் பெருங்கூட்டம்தான் இலங்கையின் நிரந்தர முஸ்லிம்களின் குடியேற்றத்தின் ஆரம்பம் என்று **டாக்டர் டென்ஹாம், ஸர் ஸைமண் காயிசிட்டி, ஸர் பொன்னம்பலம் இராமனுதன், டாக்டர் புரோஹியர், ஸர் அலெக்ஸாண்டர் ஜாண்ஸ்டன், ஸர் ஜேம்ஸ் மெர்ஸன் டென்னண்ட், ஏ.ஜி. ரணசிங்ஹ** மற்றும் புகழ்மிக்க இலங்கை வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

டாக்டர் டென்ஹாம் பின்வரும் தகவலைத் தருகிறுர்: இலங்கை 'மூர்' (சோனகர்)கள் தங்கள் இனத்தின் முதல் இடம் **காயல்பட்டணம்** என மதிகின்றனர். கி. பி. 1024-ல் களுத்துறை மாவட்டத்திலுள்ள பர்பரீன் என்று அழைக்கப்படும் **பேருவிளையில்** முதன் முதலாக வந்து இறங்கியதாகவும் இந்தத் தீவில் இது சரித்திர முக்கியத்துவம் வாந்த குடியேற்றம் எனவும் மதிக்கப்படுகிறது.

—''இலங்கை ஜனக்கணிதம்'' 1911 ப. 234—

டாக்டர் ஆர்.எல். புரோஹியர் டி. லிட் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''கச்சிமலைப்பள்ளி தென்மேற்கு பருவக் காற்றுத் தாக்குதலுக்கு இடமில்லாத ஒரு நிலத்தின் நுனியில் அமைந்துள்ள ஒரு மூலையில் எழுப்பப்பட்டுள்ள இந்த இடத்திற்குள் கி. பி. 1024-ல் 'மூர்'கள் என்று தவருக அழைக்கப்படும் யவனர்களைக் கொண்ட ஒரு கூட்டம் கன்னியாகுமரிக்கு வடகிழக்கே அமைந்துள்ள காயல்பட்டணத்திலிருந்து வந்து குடிபுகுந்து இந்தத் தீவில் தங்களின் முக்கிய சரித்திரப்பிரசித்தம் வாய்ந்த குடியேற்ற மாக்கிக் கொண்டனர் என கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது. அவர்களின் வழிந்தோன்றல்கள்தான் இன்றைய இலங்கை 'மூர்' (சோனகர்)கள்.''

—இலங்கை ஜனக்கணிதம் 1946 பு. 1 பாகம் 1 ப. 8—

காயல்பட்டணம் சோனகர்களின் தந்தை நாடாக இன்றும் மதிக்கப்படுவதாக ஸர் ஸைமன் காசி சிட்டியும் ஸர். பொன்னம்புலம் இராமநாதனும் 'ராயல் **ஆசியா சஞ்சிகை**' யில் எழுதியுள்ளனர்.

கி. பி. 1024-ல் பேருவளையில் குடியிருந்த முஸ்லிம்கள் சிங்களவர்களால் மிகவும் மதிக்கப்பட்டார்கள். வணிகத்துறையிலும் மற்றும் பல துறைகளிலும் ஈடுபட்டு உலகப் புகழ் பெற்றனர். இலங்கையின் மேற்கு கரையோரப்பகுதியை போர்த்துக்கீஸியர்கள் கைப்பற்றிய பின் தங்களின் வர்த்தகத்துக்கு முஸ்லிம்கள் இடைஞ்சலாக இருப்பதாலும் சிங்கள வேந்தருக்கு உறுதுணையாக இருந்ததாலும் அவர்களைக் கொடுமைப்படுத்தவே முஸ்லிம்கள் சிங்களப் பகுதிக்கும் அங்கிருந்து மலைநாட்டிற்கும் மட்டக்களப்புப் பகுதிக்கும் சென்று குடிபுகுந்தனர். எதிர்ப்பையும் சமாளித்து சிலர் பேருவிளையிலும் அதைச் சேர்ந்த இடங்களிலும் தங்கிவிட்டனர். இதுவும் ஒரு நீண்ட வரலாறு. இத்துடன் நிறுத்திக் கொள்வோம். கி. பி. 16-ம் நூற்றுண்டு வரை காயல்பட்டணம் முஸ்லிம்கள் சிதறி இலங்கையிலும் தமிழகத்தின் ஊர்களிலும் வாழ்ந்தார்கள் என்றும் கி. பி. 1553-ல் அப்படி வாழ்ந்தவர்களில் பலரை காயல்பட்டணத்தில் திருமலை நாயக்கர் ஒன்று கூட்டினுர் என்பதையும் அறிகிறோம்.

காயல்பட்டணத்தில் அறபிகளின் இரண்டாவது குடியேற்றம் :

கி. பி. 1280-ல் **எகிப்து** நாட்டில் ராணுவ ஆட்சி நடைபெற்று வந்தது. வெள்ளை அடிமை (White Slaves) இனத்தைச் சேர்ந்த **மம்லூக் சுல்தான் முகம்மது கலாவூன்** என்பவன் எகிப்தில் வேந்தனுக இருந்த காலம். இவன் ஒரு கொடுங்கோலன். மக்கள் மத்தியிலே புரட்சி எழுந்தது. இயற்கையின் சீற்றமும் வேறு சேர்ந்து கொண்டது. மன்னன் புரட்சியாளர்களை அடக்கி ஒடுக்க கொடுமையான முறைகளைக் கைக்கொண்டான். ஒரு கூட்டம் நாட்டை விட்டே குடிபெயர்ந்து செல்ல முடிவு செய்து ஐந்து கப்பல்களில் புறப்பட்டு விட்டனர். ஒன்று வரும் வழியில் தவறி விட்டது. அது அண்டார்டிக் மகா சமுத்திரத்தில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இரண்டாவது கப்பல் இந்துமகா சமுத்திரலுள்ள **சூரத்** பட்டினத்திலும், மூன்றுவது கப்பல் **கோகாநூரிலும்,** நான்காவது கப்பல் **அச்சின்** என்ற ஊரிலும் ஐந்தாவது கப்பல் மன்னுர் குடாக் கடலிலுள்ள **காயல்பட்டணம்** நகரிலும் வந்து சேர்ந்தது. இது நிகழ்ந்தது கி.பி. 1284-ல். இதற்கு முன் கி.பி. 875-ல் காயல்பட்டணத்தில் எகிப்து நாட்டிலிருந்து 224 அறபிகள் வந்து குடிபுகுந்த விபரத்தை முன்பே எழுதியுள்ளோம். நான்கு நூற்றுண்டுகளுக்குப்பின் இக் குடியேற்றம நிகழ்கின்ற காலத்தில் காயல்பட்டணத்தில் அறபி முஸ்லிம்களின் வழித்தோன்றல்களின் தொகை பெருகியிருந்தது. இந்த குடியேற்றத்தில் வந்தவர்கள் தொகை விபரம் கிடைக்கவில்லை. ஆனுல் அவர்கள் யாவரும் வர்த்தகர்கள். அக்காலத்தில் பாண்டிய நாட்டை செங்கோலாட்சிய மன்னன் **சுந்தரபாண்டிய தேவர்** வர்த்தகர்களை அன்போடு உபசரித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். இந்தக் குடியேற்றத்துக்குத் தலைமை தாங்கி வந்த **செய்யிது ஜமாலுத்தீன்** என்பவர் **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்களின் 21-வது தலைமுறையைச் சேர்ந்தவர். மன்னர் சுந்தரபாண்டிய தேவர் மிக மரியாதையுடன் செய்யிது ஜமாலுத்தீனையும் அவருடன் வந்த அகதிகளையும் வரவேற்று உபசரித்து பல சௌகரியங்களையும் செய்து கொடுத்தார்.

அரசியலில் முக்கிய பங்கு :-

அக்காலத்தில் பாண்டிய நாடு உலக நாடுகள் பலவற்றுடன் ராஜரீக தொடர்பு கொண்டிருந்தது. சீனுவில் **குப்லேகானுடைய** ஆட்சி நடந்து கொண்டிருந்தது. செய்யிது ஜமாலுத்தீன் ஒரு அறிஞர், ஒரு பெரும் வணிகர், ஒரு கூர்மையான ராஜதந்திரி. இவர் மீது மன்னருக்கு பெரும் மதிப்பு இருந்தது. சீனுவுக்கு இவரை பாண்டிய நாட்டின் 'எழுச்சி'யாக (தூதுவராக) கி. பி. 1286-ல் மன்னர் அனுப்பி வைத்தார். டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் தமது 'திருநெல்வேலி' சரித்திரம்' என்ற ஆங்கில நூலில் முழு விபரமும் தந்துஉளார். இவரைச் சீனர்கள் **'சமலாதிங்'** என அழைத்த விவரமும் அதில் கொடுக்கப்பட்டுள்ளது. அவரது தம்பி **செய்யிது தகிய்யுத்தீனை** தமது முதல் அமைச்சராகவும் மன்னர் நியமித்துக்கொண்டார்.


குதிரை வர்த்தகம்:-

சீனுவில் செய்யிது ஜமாலுத்தின் சில காலம் தூதுவர் பதவி வகித்துவிட்டு பாண்டியநாடு திரும்பி வந்த பின் மன்னர் சுந்தரபாண்டிய தேவருடன் குதிரை வர்த்தக உடன்பாடு செய்து கொண்டார். அக்காலத்தில் பாண்டிய நாட்டுக்கு வருடம் ஒன்றுக்கு 11,400 குதிரைகள் தேவைப்பட்டன. குதிரை ஒன்றுக்கு ரு. 2,200 வீதம், 11,400 குதிரைகள் வருடா வருடம் அறபு நாடுகளிலிருந்து தருவித்துக் கொடுக்க செய்யிது ஜமாலுத்தீன் மன்னருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வர்த்தகத் துறையில் ஈடுபட்டார். செய்யிது ஜமாலுத்தீன் மீதுள்ள விருப்பத்தின் காரணமாக பழையகாயலிலுள்ள ஒரு பெரும் நிலப்பரப்பை அவருக்கு மன்னர் அன்பளிப்பாக வழங்கி கௌரவித்தார். குதிரை வர்த்தக உடன்பாட்டை நெறி தவருது அவர் நடத்தினுர். அதன்பின் அவரை பாண்டிய நாட்டின் தளபதியாக மன்னர் நியமித்தார். அதிலும் திறமையாகப் பணிபுரிந்து பல போர்களிலும் கலந்து பாண்டியநாட்டிற்கு அவர் புகழ் ஈட்டிக் கொடுத்தார். நாட்டிலே அவரின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. கி.பி. 1292ல் மன்னர் சுந்தரபாண்டிய தேவர் காலமானுர். அச்சந்தர்ப்பத்தில் மக்களின் பேரன்புக்கு உரித்தானவரான செய்யிது ஜமாலுத்தீன் மக்களாலேயே நாட்டு மன்னராக தெரிவு செய்யப்பட்டார். அதுமுதல் மலிகுல் இஸ்லாம் சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் என வழங்கப்படலானுர், ஒரு அறபி அகதி பாண்டிய நாட்டின் அதிபராக ஆட்சி செய்யப் பொறுப்பேற்றது இதுதான் உலகிலேயே நிகழ்ந்த முதல் சம்பவம். ஏனே பிற்கால சரித்திராசிரியர்கள் இதை எழுத விட்டு விட்டனர். **ரஷீதுத்தீன்** எழுதிய **''ஜாமி உத்தவாரீகை''**யும் வாஸிப் எழுதிய **''தஸ்ஜியதுல் அம்ஸார்**

வதற்ஜியதுல் அ:.ஸார்" நூலேயும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து " ஹிஸ்டரி ஆப் இந்தியா " என்ற நூலேத் தொகுத்து தந்த **ஸர் எலியட்** என்ற புகழ் பூத்த வரலாற்று ஆசிரியர் தமது நூலில் இந்த தகவல்களேத் தந்துள்ளார்.

தொல்பொருள்கள் ;

காயல்பட்டணத்தில் நிறம்ப தொல்பொருள்கள் கிடைக்கின்றன. காயல்பட்டணம் **கடைப் பள்ளி** மையவாடியில் ஒரு குழி தோண்டப்பட்ட சந்தர்ப்பத்தில் சுமார் 20 ருத்தல் எடையுள்ள ஒரு பீங்கான் கிடைத்தது. சீன களியால் செய்யப்பட்டது அது. உள்ளும் புறமும் கிரீடங்களும் இரக்கைகள் கொண்ட உருவங்களும் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. இது பாண்டிய மன்னனல் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டுமென நம்பப் டடுகிறது. இந்த மையவாடி இருக்கும் தெரு **பரிமார் தெரு.** இத்தெருவிலுள்ளவர்கள் தங்களேப் பூர்வ குடிகள் என்பர். இங்கு வசித்த **செம்பி, பவுத்திர மாணிக்கம்** என்ற இவ்விரு செல்விகளிடமிருந்துதான் காயல் பட்டணம் அமைந்துள்ள நிலம் வாங்கப்பட்டது என்பது கர்ண பாரம்பரைக்கூற்று.



பரிமார்தெரு கடைப்பள்ளியில் கண்டெடுக்கப்பட்ட பீங்கானும், சதுக்கைதெரு இரட்டைகுளப் பள்ளியில் எடுக்கப்பட்ட போர்வாளும்.

இரட்டைக்குளப் பள்ளி மையவாடியில் பல வருடங்களுக்கு முன் ஒரு குழி தோண்டப்பட்ட சந்தர்ப்பத்தில் அதில் ஒரு பெரிய வாளும் வேறு பல போர்ச் சாதனங்களும் கிடைத்தன. ஒரு போர் வீரனே சமாதியில் வைக்கும் போது அவரின் சொந்த போர்க் கருவிகளேயும் ஒன்றாய் அதனுள் வைத்து அடக்கும் பழக்கம் இருந்திருக்க வேண்டும்.

காட்டு மொகுதூம் பள்ளி, கற்புடையார் பள்ளி, குத்பா பெரிய பள்ளி, குத்பா சிறு பள்ளி, சிறுநயினார் பள்ளி, மரைக்கார் பள்ளி மற்றும் பல இடங்களிலுமுள்ள கல்வெட்டுக்களையும் தொல்பொருள் ஆய்வுக் கழகத்தினர் பிரதிகள் எடுத்து வெளியிட்டுள்ளனர். கற்புடையார் பள்ளியையொட்டிய பகுதியிலும், பரிமார் தெரு கடைப்பள்ளி மற்றும் மொகுதூம் பள்ளியையொட்டிய பகுதிகளிலும் பழையகாயலில் சூரங்காடு என்று அழைக்கப்படும் கடற்கரையோர பகுதியிலும் அகழ்வு ஆராய்ச்சி மேற்கொண்டால் வேறு பல அபூர்வ தகவல்கள் பெறமுடியும்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் சுல்தான் ஜமாலுத்தீன் தமது அரசின் வர்த்தகப் பிரதிநிதிகளே நியமித்தார். பாண்டிய நாட்டிலிருந்து பல்வேறு பொருள்களே அங்கு அனுப்பி பாண்டிய நாட்டிற்கு தேவையான பொருள்களே அங்கிருந்து வருத்திக்கொண்டிருந்தார். இவ்வகையில் வர்த்தகம் பன்மடங்கு பெருகியது: செல்வமும் குவிந்தது. சுல்தான் ஜமாலுத்தீன் தனது மகன் பக்ருத்தீனே சீனவுக்கு கி. பி. 1292-ல் தூதராக அனுப்பி வைத்தார். அவரது தம்பி தகிய்யுத்தீனே தொடர்ந்து முதல் அமைச்சராக இருந்து பணி புரிந்தார். அறபி முஸ்லிம்களின் செல்வாக்கு உச்சக்கட்டத்தில் இருந்தது. முஸ்லிம்கள் அங்கும் இங்குமாக சிதறி வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களே எல்லாம் ஒன்று சேர்க்க விரும்பினர் சுல்தான் ஜமாலுத்தீன், தற்பொழுது காயல் பட்டணம் அமைந்துள்ள பூரா நிலப்பரப்பும் செம்பி, பவுத்திரமாணிக்கம் என்ற இரு செல்விகளுக்கு சொந்தமாக இருந்தது. இவ்விருவர்களிடமிருந்து பூரா நிலத்தையும் 12000 தீனருக்கு வாங்கினர் சுல்தான் ஜமாலுத்தீன். ஏற்கனவே அந்த நிலத்தில் சில திட்டுகளில் அங்கும் இங்குமாக முஸ்லீம்கள் வசித்து வந்தனர். தற்பொழுதுள்ள **கோமான் தெருவிலிருந்து நயினர் தெரு, சித்தர்தெரு, பரிமார்தெரு வழியாக காட்டுத்தெரு** வரை ஒரு நெடுந்தெரு மட்டும் இருந்ததாகவும் அதில் சிலபள்ளிவாசல்கள் இருந்ததாகவும் கர்ணபரம்பரையாகக் கூறப்பட்டு வருகிறது. சுல்தான் ஜமாலுத்தீன் முஸ்லிம் ஆண் பெண்கள் ஒருவரோடொருவர் கலந்து செல்லக் கூடாதவாறு பாதைகள் அமைத்து பெண்கள் போக்குவரத்துக்கு வசதியாக ஓடைகள், முடுக்குகள் அமைத்து ஒரு நகருக்கு வடிவமைத்து உருவாக்கினர். ஆரம்பத்தில் அவர் அமைத்த தெருக்கள் 24. அவற்றில் முக்கியமானவை நான்கு. அவை: 1. நயினர் தெரு, 2. மகுதூம் தெரு, 3. பைக்காத் தெரு (தற்போதுள்ள சதுக்கைத் தெரு) 4. மரைக்காயர் தெரு. காயல்பட்டணம் கண்ணகுமது மகுதூம் புலவர் ஒரு கவி இயற்றியுள்ளார். 'காயல்பட்டணம் வரலாறு' என்ற தலேப்பில் இவ்விபரத்தைக்கொடுத்துள்ளார். பவுத்திரமாணிக்கம் என்ற செல்வி இடம் வாங்கிய இடத்துக்கு பவுத்திரமாணிக்கப்பட்டினம் என்றும் செம்பி என்ற செல்வி இடம் வாங்கிய அகண்ட பூப்பரப்பை அடங்கிய பகுதிக்கு செம்பி நாடு என்றும் வழங்கியதாக கர்ணப்பரம்பரையாகக் கூறப்படுகிறது. இந்தப் பவுத்திரமாணிக்கப்பட்டினம்தான் பின்பு சோனகர்பட்டினமாகி காயல் பட்டினமாக பெயர் வந்துள்ளது என்பது ஆய்வாளர்கள் கூற்று. ஆரம்பத்தில் **'காயல்'** என்று பெரும் புகழ் கொண்ட ஒரு மாநகரம்தான் **பழையகாயல், புன்னேக்காயல், காயல்பட்டணம்** என்று மூன்று ஊர்களாக மாறியது. இது பற்றி **கர்னல் ஸர் ஹென்றி யூலும், டாக்டர் பிஷப் கால்ட் வெல்லும்** விளக்கம் தந்துள்ளார்கள். சுல்தான் ஜமாலுத்தீன் காயல்பட்டணத்தில் நான்கு பள்ளி பள்ளிவாசல்கள் ஆரம்பத்தில் கட்டியிருக்க வேண்டும். அவை எவை என்ற விபரம் எமக்கு கிடைக்கவில்லே. நயினர் தெருவிலுள்ள பெரிய ஜும்ஆப் பள்ளி சுல்தான் ஜமாலுத்தீனல் கட்ட ஆரம்பிக்கப்பட்டு அவர் மகன் செய்யிது நூருத்தீனல் ஹிஜ்ரி 737-ல் கட்டி முடிக்கப்பட்டது. என்பது அப்பள்ளியில் காணப்படும் அறபுக் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

அறபி நாணயங்கள்

டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் தமது " ஹிஸ்டரி ஆப் டின்னவெல்லி " என்ற நூலில் காயலிலிருந்து செல்லும் ஒரு பழைய பாட்டையினருகே ஒரு தொகையான அறபி நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் இவை கி. பி. 13-வது நூற்ருண்டிலுள்ள அறபி நாணயங்கள் என்றும் கி. பி. 1292-ல் மார்கோ போலோ இங்கு வருவதற்கு முன் அறபி வர்த்தகர்களால் இவை கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்றும் இவை கண்டுபிடிக்கப்பட்ட சாலே முஸ்லிம்களின் வர்த்தக நகராகிய காயல்பட்டணத்தை நோக்கி செல்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். சுல்தான் ஜமாலுத்தீன் 13-வது நூற்ருண்டில் அரசாட்சிய காலத்திலும் அதற்கு முன் சுந்தர பாண்டியன் அரசாட்சிய காலத்திலும் அறபி வர்த்தகர்கள் ஏராளமானோர் இங்கு குடிபுகுந்தனர் என்றும் வர்த்தகம் அவர்கள் பாதையிலேயே இருந்தது என்பதையும் அறிந்தோம். அறபி நாணயங்கள் இங்கு மக்களிடையே அன்ருட உபயோகத்தில் இருந்து வந்தன. திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக இருந்த திரு ஆர். கே. பக்கிள் 25-10-1873-ல் சென்னே ரெவினியூ போர்டுக்கு சமர்ப்பித்த ஒரு தகவலில் இங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் பற்றி ஒரு குறிப்பு கொடுத்திருக்கிருர். இந்த நாணயங்களின் மதிப்பு சுமார் ஒரு லட்சம் ரூபாய் என்றும் ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் அறபி நாணயங்கள் என்றும் எல்லா அறபி நாணயங்களும்

13-வது நூற்ருண்டிலுள்ளவை என்றும் இவை எல்லாம் சென்னை நூதன சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவித்திருக்கிருர். பழையகாயலில் இருந்து காயல்பட்டணம் வரை குறிப்பிட்ட இடங்களில் ஆய்வு செய்தால் பல கோடி ரூபாய் பெருமதிக்கு நாணயங்களும் வேறு பல பொருள்களும் கிடைக்கலாம் என்பதே எனது அபிப்பிராயம். நமது மத்திய ஆய்வுத்துறையும் மாநில ஆய்வுத்துறையும் இதில் முழு கவனம் செலுத்துமென நம்புகிறேன்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் தமது **தமிழுணர்ச்சி** என்ற நூலில் காயல்பட்டணத்தில் நடைபெற்ற வர்த்தக சிறப்பு பற்றி பின் வருமாறு எழுதியுள்ளார்.

"காயல்பட்டணத்தில் சுறுசுறுப்பான கப்பல் வாணிபம் நடந்தது. பாண்டி மன்னர்கள் கப்பல் வாணிபத்தை மிக போற்றி வளர்த்தனர். மேற்கிலிருந்து வரும் கப்பல்கள் காயல் பட்டணத்தில் தங்காமல் போவதில்லை. இந்தியா, சீனு, மேனுடுகளின் சரக்குகளெல்லாம் இங்கு வந்து குவியும் சுதேசிகளின் சாமான்கள் ஏராளமாக ஏற்றுமதியாகி பொன்குவியும் இந்த நாடே இந்திய வாணிபத்தின் திறவு கோல்."

பெரும் புகழும் பேரழகும் மாண்பும் பெற்ற காயல் மாநகரம்

"ஆசியாவின்ஜோதி" என்று புகழ்பெற்ற **பண்டித ஜவஹர்லால் நேரு** தமது **"டிஸ்கவரி ஆப் இந்தியா"** என்ற நூலில் காயல்பட்டணத்தைப் பற்றி பின் வரும் தகவலைத் தருகிருர்:

டில்லி ஆதிக்கம் தெற்கே பரவியது. சோழ அரசு வீழ்ந்தது. அதனிடத்தில் கடல் வலிமை மிக்க ஓர் ஆதிக்கம் ஏற்பட்டது. அதுதான் பாண்டிய ஆதிக்கம். மதுரை அதன் தலைநகரம். கிழக்கு கரையிலுள்ள காயல்பட்டணம் அதன் துறைமுகநகரம். சிற்றரசுதான்; எனினும் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்தது. மார்கோபோலோ சீனுவுக்குப் போகும் வழியில் கி. பி. 1288ல் ஒருமுறையும், சீனுவிலிருந்து வரும் வழியில் கி.பி. 1293-ல் மறுமுறையும் காயல்பட்டணத்திற்கு வருகைதந்திருக்கிருர். அறபு நாடுகளிலிருந்தும் சீனுவிலிருந்தும் கூட்டம் கூட்டமாக கப்பல்கள் வந்து போகும் பெரும்புகழும் பேரழகும் மாண்பும் பெற்ற மா நகரம் இது என இதனை மார்க்கோபோலோ வர்ணித்துள்ளார். இந்தியாவிலே கிழக்கு கரையோர ஊர்களிலே உற்பத்தியாகி இங்கிருந்து ஏற்றுமதியாகும் சிலந்தி வலை போன்ற மிக மெல்லிய ரக மஸ்லின் துணி பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்."


ஜவஹர்லால் நேரு

சலவைத் தொழிலும், சாயத் தொழிலும், காயல்பட்டணத்தில் பிரமாதமாக நடைபெற்ற விபரத்தை இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் **அபூஸயீத்** எழுதியிருக்கிருர். இங்கு நடைபெற்ற முத்து சிலாபத்தைப் பற்றியும் மார்கோபோலோவும் வேறு பல வரலாற்று ஆசிரியர்களும் வியந்து எழுதியுள்ளனர். **வாஸ்கோ டிகாமா** இங்கு வந்து பார்த்து இது ஒரு முஸ்லீம் ராஜ்யம் என்று தமது **'ரொடெய்ரோ'** (ROTEIRO) என்ற நூலில் எழுதியுள்ளார். இது ஒரு முத்துக்குளிக்கும் இடம்' என்று **நிக்காலோ கண்டி** மற்றும் ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் எழுதியுள்ளனர். இங்கு மது ஒழிக்கப்பட்ட விபரத்தையும் விண்கலையில் இங்குள்ள மக்களின் ஞானத்தையும் **மார்க்கோ போலோ** தமது நூலில் தந்துள்ளார்.

இது போன்று இன்னும் பல ஆதாரங்களை திரட்டி பெரிய அளவில் காயல்பட்டணம் பற்றிய முழுமையான ஆராய்ச்சி நூல் வெளியிடப்பட வேண்டும். அதற்கு இந்த மலர் ஒரு அடிப்படையாக அமைய வேண்டும்.

——

அறபி நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற் குடியேறிய அறபியர்களுக்கு அக்காலத்து அரசர் பிரானுல் கொடுக்கப்பட்ட தாமிரப்பட்டயத்திற்கு

இது சரியான நகல்

தெலுங்கில்; ஜெயவீர ராஜுகாரு புவிச் சக்கரவர்த்தியென்று கையொப்பம் வைத்திருக்கிறது.

★

செங்கோல் செலுத்தும் தெக்ஷுண பூமிக்கு தெற்கு, கன்னிக்கு வடக்கு, மன்ஞர் வடமேல் குதிரை மலைக்கு மேற்கு, கன்னி முதல்-சேலமகரம் ஒழுகுமலைக்குக் கிழக்கு, பாண்டி மண்டலம் (56) தேசத்திற்குத் தேசாதிபதி **அபிராம ராம அதிராஜ ராஜ ஜெயவீர ராஜுகார் கர்த்தர்கள்** (78) பாளையத்தாருக்கும் ஓர்குடைச் செங்கோல் செலுத்தித் திரையாதிக்கமுடைய மகா மண்டலேஸ்வரன், மூவராய கண்டன், பாண்டிமண்டல பரமேஸ்வரன் சோழமண்டலம் (24) காதமுடைய மன்னரை அரசு நிறுத்தித் திரைகொள்ளும் மஹாவிஷ்ணு கிரேகாயுதர்மன், பொதியமாமலைப் பாரரசுமுனி, மதுரை துரைத்தனம் அஷ்ட சம்பந்த ராஜாதிராஜன், திங்கள் சுத்தவம்மிசப் பிரமதெக்ஷுணபூமி செங்கோல் செலுத்தும் நாயனி, எழுந்தருளித் திருநகரி கொலுவீற்றிருக்குங் கர்த்தரை, அறபி நாட்டு மிசறு தேசாதிபதியின் கொடுங்கோலுக்கஞ்சி, மரக்கல, யாத்திரையாய்க் கர்த்தர்களின் தேசச் செப்பி நாட்டில் பாசறை வருத்துக் கர்த்தர்களின் சமூகங் கொடுத்து, அந்நாட்டிற் குடியேறியிருக்கத் தாமிரப்பட்டயமுங் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டவர்களின் வம்மிசமும் எண்ணிக்கையும்

ஆசீம் வம்சத்தார் [23] நாச்சியார் பெண்டு [6] அடிமை [4] பக்கிரி வம்சத்தார் [36] நாச்சியார் பெண்டு [3] அடிமை [7] பாறுக்கு வம்மிசத்தார் [43] நாச்சியார் பெண்டு [34] அடிமை [12] உமையா வம்மிசத்தார் [14] நாச்சியார் பெண்டு [5] அடிமை [2] ராணுவயுத்தர் [16] பெண் [6] க்ஷவரகன் [3] பெண் [1] இவர்கள் ஒரு மனப் பட்டு, முகம்மதுகில்ஜிக்குத் தாம்பிரபட்டயங் கொடுக்கக் கேட்டுக்கொண்டபடியால் இந்தக் குடியானவர்கள் மிசறு தேசத்து காயிறான் ஊரில் வசித்து வந்தவர்களானபடியால், தாமிரப் பட்டயங் கொடுக்குமூருக்கு **காயிறுன்பட்டணம்** என்று நாமமும் மரக்கல, யாத்திரையாக வந்ததற்காக இவர்களுக்கு மரக்கலராயர், என்று நாமமும், நாம் சூட்டித் தாமிரப் பட்டயங் கொடுக்க உத்தரமருளி அரண்மனையார் கற்பித்தது.

தூதுகுடி மாரியம்மன் கோயிலுக்கு மேற்கு, சிவந்தாகுளம், முத்தையாபுரம், முள்ளக்காடு, கோபுரங்காடு, மஞ்சனக்காயல்,கொற்கை, குலைநெல்கரிசை, முக்காணி கொலுவுத்துரை, ஆற்றூர் அதைச்சேர்ந்த மங்கலம், சொக்கப்பிள்ளைகரை, பின்னைக்காயல். ஆவரங்காடு, தண்ணீர்பந்தல், கீரனூர், நல்லூர், அம்மன்புரம், பள்ளிபத்து, மணற்காடு, ராஜமன்னியபுரம், வீரபாண்டியன், மங்களபாடி, இவைகளடங்

கிய குடிகளுக்கு, முகம்மது கல்ஜி மரக்கலராயின் கற்பனையும், அவனுக்கு இறை வரி செலுத்தக் கடமையும் பளமும், பள்ளிப்பத்து, அம்மன்புரங்கண்டு முதல் வாபத் தில், ஜெபஆலயங்கள் கட்டப் பாதியும், தண்ணீர்பந்தல் கண்டு முதலில் மரக்கலராய னுக்குப் பாதி யும்பளமும், கன்னி முதல் மின்னூர் மினல்மேடு, ராமேஸ்வரம் வரை இந்த குடியான ஜனங்கள், சலாப முத்துகுளிக்க அம்பள உம்பளமும், தூதுகுடி, மாரியம்மன் கோவிலுக்கு தோணி 1 க்கு (20) முத்துக்சிப்பியும் மரக்கலராயனுக்கு தோணி 1 க்கு (30) முத்துச் சிப்பியும், சித்தசன் லாச்ருச்கு (20) முத்துச்சிப்பியும் அம்பளவும்பள நித்தமும்.

அந்தந்த வருஷமும் மகர மாசதிதையில், அரண்மனைக்கு மரக்கலராயன் (1000) பொன்னும் உப்பு லாபத்தில் (10) பொன்னுக்கு (25) பொன்னும் செலுத்தி விட கடமையும், ஓரு பேரின் எண்டியும் அதற்கு மேற்பட்ட ஆணி முத்தும், வலம்புரிச் சங்கும், அகப்பட்டால்- அவைகளை, மரக்கலராயன், அரண்மனைக்கு சகல மேள வாத்யங்களுடன், செலுத்திவிட அரண்மனைக் கற்பனையும்.

அரண்மனையார் உத்தரவிற்கு நாஞ்சி நாட்டு அதிபன் கொடுத்த வண்ணான் (5) ரெட்டியார்பட்டி பாளைய கிருஷ்ணன் நாயக்கன் கொடுத்த புதியமுத்தூர் மேள வாத்தியக்காரன் (5) க்கும், குடியானவர்கள் சிலவு கொடுத்துக் கொள்ளவும், பக்கிரி வம்பிசத் தலைவன் முகம்மது கல்ஜி மரக்கலராயன் தேசாதிபதி, பாறுக்கு வம்சத் தலைவன் உயறு மஸ்கூறு நியாயாதிபன், ஆசிம் வம்சத் தலைவன் கமாலுதீன் கடலதிபதி உமையார் வம்சத் தலைவன், சுன்பறு அடையல், முடையல், ஊர்மணியன் ராணுவ யுத்தர்கள், ஊர்க்காவல், நாட்டுக் காவல், கன்னி முதல் சேலமகரம் வரை யுள்ள அரண்மனை குதிரைப்படிகளில் இந்தக் குடியானவர்கள் குதிரை விற்பனை செய்து கொள்ளவும் அரண்மனைக் காவலர், பாளையக் காவலர் தடை செய்யக் கூடாது, சந்திராதிக்கம், சந்திர சூரியப் பிரவேசமுள்ள வரைக்கும் அம்பள வும்பள சுதந்தரராக.

முகம்மது கல்ஜி மரக்கலராயன் வசதியான தலங்கண்டு குடியேறி இருக்கும்படி கர்த்தனுகிய ஜெயவீரராஜூகாரு நாயனி இந்தத் தாம்பிரப் பட்டயங் கொடுத் தோம்: திருவண்ணாமலை, பழனிக்கார், மீனாக்ஷி பத்மநாபர், நெல்லையப்பர், சுப்பிரமணி, மாரியம்மன், மும்மூர்த்தி, அகஸ்தியர், இராமச்சந்திரர் இந்த சுவாமி களின் பேரில் சத்தியம் தப்பாது.

சகாப்தம் (798)ம் ஆண்டு கீலக வருஷம் மீன மாசம் சுக்கிர வாரம் உத்திர வேளையில், ஏலினவாரு சாமியானவர்கள் கையொப்பமிட்டுக் கண்ட வாசகத்தை, மதுரை ஜகந்நாத பிள்ளை கவிச் சக்கரவர்த்தி, கற்பகமடலில் வரைந்து ஏலினவாரு சாமி ஜெகவீர ராஜூகாரு நாயனி அவர்கள் வரந்தரு சித்தத்தின் பஞ்ச பூதமும் ஓம் என்று ஒரு மொழிகொண்டு இருக்கும் வேளையில் தள்வாய் பழனி நாயக்கர் உத்தரவாகிக் காயிறான் பட்டணஞ் சகல குடியாணவர்களுக்கும் ஒரு மனதாக ஒரு மொழிச் சொல்லுக்கு இந்த தாமிரப் பட்டயம் வெட்டி வரைந்து எழுதினேன், வீரவநல்லூர் கன்கமூர்த்தி யாசாரி.

ஒப்பம் : ஜெகந்நாத பிள்ளை கவிச் சக்கரவர்த்தி

ஒப்பம்: (தெலுங்கில்) தள்வாய் பழனி நாயக்கர்

வரலாற்று அறிஞர்கள் பார்வையில் காயல் மாநகர்

மு. முகம்மதுநாஸர் M.A., (M.Phil.)
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, பாளையங்கோட்டை.

''மாபர்'' (அல்லது மாபிர்) என்னும் அரபி பதத்திற்கு ''பாதை'' அல்லது தோணித்துறை என்பது பொருள். இப் பெயர் கொண்டே 13வது நூற்றுண்டின் அரபி வர்த்தகர்கள் சோழ மண்டலக் கரையை அழைத்து வந்தனர். இது ''ஸெரந்தீவு'' எனும் இலங்கைக்கு மிகச் சமீபத்திலுள்ளது. இதன் வழியாகவே அரபி வணிகர்கள் இலங்கைத் தீவுக்கு போக்குவரத்து செய்து வந்தனர். ''மாபர்'' என்பது சோழ, பாண்டிய நாடுகள் முழுவதுக்கும் பொதுவான பெயர். தமிழ்நாட்டின் கரையோர ஜில்லாக்களை இப்பதம் குறிக்கும் எனவும் அர்த்தங்கொள்ளலாம்.

காயல்நகர் மன்னர் குடாக்கடலில் அமைந்துள்ள புராதன துறைமுகப் பட்டணம். இதன் அமைப்பைப் பற்றி **கர்ணல்யூல்** தெரிவிப்பதாவது:- **மார்கோபோலோ** கூறும் காயல்நகர் சுற்றுப் புறங்களில் ''பழையகாயல்'' எனும் பெயரால் விளங்குகிறது. இந்திய தேசீய ஆர்டினன்ஸ் என்னும் தேசப்படத்தில் **கோயில் (KOIL)** என்று தவறுதலாக பெயரிடப்பட்டிருக்கிறது. பழைய காயல் தாமிரபரணி நதிவாயிலிருந்து 1½ மைல் உள் வாங்கி இருக்கிறது. பிஷப் ஆர். கால்டுவெல் அவர்களின் திருநெல்வேலி வரலாறு என்னும் நூலில் **காயல்** எனும் தமிழ் வார்த்தைக்கு **கடற்கழி** அல்லது **கடற்சேறு** (கழிமுகத் துவாரம் - DELTA) என்பது பொருள் என்று கூறுகின்றூர். காயல்பட்டிண வாழ் பெருமக்கள் சிலரின் கூற்றுபடி **காஹிரா** என்ருல் கெய்ரோவை குறிக்கும், பட்டிணம் என்ருல் துறைமுகத்தை உடைய பெருநகர் என்று பொருள் என கூறுகின்றனர். **அப்துற்-ரஹீம்** அவர்களின் இஸ்லாமியக் கலைக்களஞ்சியத்தில் **காயல்** என்ருல் கடற்கரை ஓர சதுப்பு நிலம், மேலும் உப்பு உற்பத்தி செய்யுமிடமும் கூட. இங்கு ஒரு காலத்தில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. மக்கள் இங்கு குடியேற்றம் ஏற்பட்ட போது இதற்கு **காயல்** என்ற பெயர் ஏற்பட்டதாக விளக்கமளிக்கின்ருர்.


மு. முகம்மதுநாஸர், M.A., (M.Phil)

தமிழில் காயல் என்ருல் கடல், கடல் உள்புகுந்த நிலபரப்பு என்று பொருள். இந்த பகுதியின் வரை படத்தை எடுத்துப் பார்த்தால் இதே போல் அனேக காயல்கள் தாமிரபரணி ஆற்றின் கழிமுக துவாரத்தில் (கடலோடு சேருமிடம்) காணலாம். இன்று இக் காயல்களில் பெரும்பான்மையானவை கடலினுல் அழிந்து விட்டது. மீதமுள்ளவைகளில் உப்பு தயார் செய்யப்படுகின்றது. காயல்கள் ஓரத்திலுள்ள ஊர்களுக்கு காயல் என்ற பெயர் இயற்கையாகவே உண்டு (மஞ்சள்நீர்காயல், புன்னக்காயல், பழையகாயல்) இதனுல் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசித்த, வசிக்கின்ற பகுதிக்கு காயல்பட்டணம் என்று பெயர் விளங்குகின்றது. மேலும்

பிஷப் - ஆர். கால்டுவெல் கூறுவதாவது, ''நான் கி.பி. 1861-ல் கொற்கை சென்றிருந்தபோது, இவ்வூரே கிரேக்கர்களால் கொல்கேய் (KOLKHKOI) என அழைக்கப்பட்டது எனத் தெரியவந்தது. மார்க்கோ போலோவால் **காயல்** என அழைக்கப்பட்ட துறைமுகப்பட்டினம் மத்திய காலங்களில் கிழக்கத்திய கரையில் உள்ள ஒரு முக்கியமான துறைமுகநகர் என்றும் தெரியவந்தது''

மேலும் பிஷப் கால்டுவெல் தனது திருநெல்வேலி வரலாற்று நூலில் 'இன்றைய (கி.பி.1861) காயலில் சுமார் 7000 முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். காயல்பட்டணத்திற்கு சற்று வடக்கே புன்னக்காயல் என்ற ஊர் இருப்பதையும்' குறிப்பிடுகின்றார். மேலும் அவர் ''கொற்கையும் காயலும் தாமிரபரணி ஆற்றின் கழிமுகதுவாரத்தில் அமைந்திருக்கிறது. இன்றைய கொற்கை கடலில் இருந்து 5 மைல் தூரத்திலும் பழைய காயல் 2 மைல் தூரத்திலும் அமைந்திருக்கின்றது'' கடலின் சீற்றத்தால் கொற்கை கடலை விட்டு தூரமானது, இதனால் வணிகத்திற்கு இவ்வூர் ஏற்றது அற்றதாக ஆகிவிட்டது. இக்கால கட்டத்தில் காயல் மட்டுமே ஒரு துறைமுகமாக வளர்ந்து வந்தது. இங்கு தான் அரபிகளின் இரு முதல் குடியேற்றங்கள் ஏற்பட்டது. ஏனென்றால் அரபி மாலுமிகளும், கப்பல்களும் இவ்வூருக்கு வந்து சென்றதால் இவ்வூர் குடியேற்ற மக்களுக்கு தாங்கள் குடியேற சரியான இடமாக இதை தேர்ந்தெடுத்தனர். இங்கிருந்து சீனாவுக்கும், அரேபியாவிற்கு வியாபாரத் தொடர்புகள் ஏற்பட்டது. (ஆதாரம் M. K. செய்யது அஹ்மது அவர்களின் வான்புகழ் காயல்பட்டணம். பக்கம் 25, மற்றும் சுத்தானந்த பாரதியாரின் 'தமிழுணர்ச்சி') சுந்தரபாண்டிய தேவன் மங்கோலிய மன்னன் குப்லே கானுக்கு கி. பி. 1286-ல் தூதரை அனுப்பி நட்புறவாடியதாக சீனர் வரலாற்றில் காணப்படுகிறது. கி.பி. 1286ல் பாண்டியன் அனுப்பிய தூதர் பற்றிய விபரத்தை கர்ணல் யூல் குறிப்பிடுகிறார். ''சீனர் வரலாற்றில் கி. பி. 1286ல் சக்கரவர்த்தி குப்லே கானுக்கு வெகுமதி அனுப்பிய அந்நிய ராஜ்யங்களில் மாபரும் ஒன்று என குறிப்பிடப்பட்டுள்ளது. பல குறிப்புகளில், நாட்டை ஆண்ட ஐந்து சகோதர மன்னர்களைப் பற்றியும், மங்கோலிய ராஜ சபைக்கு மாபரிலிருந்து தூதுவராக அனுப்பப்பட்ட சமாலாதிங்கை (சுல்தான் ஜமாலுத்தீனை)ப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது மார்க்கோ போலோ 42. ப. 268)

விக்டர் டி சூஸா என்ற வரலாற்று அறிஞர் தனது நூலான 6 A unique Custom Regording Mahr observed by certain Indian Muslims of South India, Islamic Culture, 29 (4), PP 267-274, காயல்பட்டண முஸ்லிம்களிடத்தில் காணப்படும் வாணிபத்தின் மீதுள்ள ஈடுபாடும், விவசாயத்தில் நாட்டமின்மையும் அவர்களது அரேபிய தர்க்கத்தினால் ஏற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறுகின்றார்.

'இஸ்லாமிய கலாச்சாரம் என்ற நூலின் ஆசிரியர் எஸ். எஸ். நத்வீ (VIII 1934, P 478) ''மாபார் கடலோர முஸ்லிம்களுக்கும், அரேபியா முஸ்லிம்களுக்கும் உள்ள நேரடி தொடர்பு ஈடு இணையற்றது. இந்த தொடர்பின் காரணமாகத்தான் இஸ்லாம் தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு இந்திய கடலோரப் பகுதிகளில் பரவியது. இந்தியாவில் இஸ்லாம் முதன் முதலில் கேரளாவிலும், தமிழ் நாட்டிலுமே வந்து சேர்ந்தது. மாப்பிள்ளைகள், லெப்பைகள் மற்றும் மரைக்காயர்கள் இந்திய முஸ்லிம்களின் ஆரம்ப கால முன்னோர்களின் வாரிசுகள் ஆவார்கள். மேலும் இந்திய முஸ்லிம்கள் வட இந்தியாவில் குடியேறுவதற்கு முன்னதாகவே தென் இந்தியாவில் குடியேறிவிட்டார்கள் என்று குறிப்பிடுகின்றார்,

ரொனால்டு ஈ. மில்லர் என்ற அறிஞர், இஸ்லாமிய பார்வையில் கேரளாவில் வாழும் மாப்பிள்ளை முஸ்லிம்கள் (1976 P 41) என்ற நூலில் 'இஸ்லாம் வருவதற்கு முன்னதாகவே கூட அரபியர்களுக்கும், மலபாரில் வாழும் மக்களுடன் வியாபாரத் தொடர்பு இருந்தது என்ற உண்மை எல்லோரும் அறிந்ததே. கிழக்கும், மேற்கும் சக்தி இருக்குமிடமாக முசிரி, இன்றைய கொடுங்கலூர், இலங்கை மற்றும் 'காயல்' அமைந்திருந்தது. அரேபியர்கள், பொனிசியர்கள், ரோமர்கள், பாரசீகர்கள், மற்றும் கிழக்கு ஆப்ரிக்கர்களுடன் மாபார் கடற்கரையில் வாழும் மக்கள் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அரேபியர்கள் இந்த பகுதியிலே தங்களது முதல் மற்றும் முக்கிய துறைமுகங்களை கொண்டிருந்தார்கள். இந்த இடத்தை பயணத்தின் முதல் தங்குமிடமாக கொண்டிருந்தார்கள். இங்கே தான் அவர்களுக்கு மிளகு (கருப்புத் தங்கம்) மற்றும் வேறு விலைமதிக்க முடியாத பொருட்கள் கிடைத்தன. ஆக முகம்மது நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் அரேபியர்கள் மாபார் கடற்கரைக்கு வந்து போய் கொண்டிருந்தனர் என சுட்டிக் காட்டுகின்றார்.

ஹுஸைன் காதிர்கான் என்ற அறிஞர் 'The spread of Islam in the south was due more to its missionary efforts than its Poiitical influence' என்ற கருத்தை தனது 'தென் இந்திய முஸ்லிம்கள்' என்ற நூலில் கூறி விட்டு (1910 P 33) மேலும் கூறுகின்றார், 'இன்றைய காயல்பட்டண முஸ்லிம்களின் முன்னோர்கள் யார் என்று பார்ப்போமானால், நிச்சியமாக அவர்கள் வெவ்வேறு அரபு நாடுகளில் இருந்து குறிப்பாக கெய்ரோவில் இருந்து, இந்த பகுதிகு வியாபரத்தின் நிமித்தமாக வந்த முஸ்லிம்களே ஆவார்கள். காயலில் வாழும் முஸ்லிம்களின் தோற்றத்தைப் பற்றி பல கருத்துக்கள் உண்டு. ஆனால் இந்த கருத்துக்களுக்கிடையே ஒற்றுமை என்னவென்றால் இந்த அரபுகள் அந்த காலத்தில் காயல் பகுதியில் வாழ்ந்த இந்தியப் பெண்களை திருமணம் செய்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட ஒரு புதிய சமுதாயமே இந்த காயல் நகர பெருமக்கள் என்று கூறுகின்றோம். லூயிஸ் மோர் என்ற வரலாற்று ஆசிரியரும் இக்கருத்தை ஏற்கின்றார் Victor S. Souza ''Status Groups among the moplahs on the South west Coast of India, in Imtiaz Ahamed, Caste and social statsfication among The Muslims, Delhi, (1973, P. 46) மேற்கூறிய கருத்தை இவர்கள் தங்களது ஆராய்ச்சி நூல்களில் உறுதி படுத்துகின்றனர்.

மக்பூல் அகமது தமது ''இந்திய அரேபிய உறவு'' (1969, P 51) என்ற நூலில், ''காயல் மக்களைப் போலவே மலபார் முஸ்லிம்களும், அரேபியர்கள் இந்தியர்களுடன் கொண்ட திருமண உறவினால் பிறந்தவர்கள் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது என குறிப்பிடுகின்றார்.

ஆக காயல் மாநகர் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது இந்த காயல் மாநகர்தான் தமிழக முஸ்லிம்களின் முன்னோர்கள் முதலில் வந்திறங்கி தங்கி வாழ்ந்த இடமாக இருக்க முடியும் என்பது நிச்சயமாகிறது.

மலர் ஆசிரியர் வேண்டுகோள்

தமிழக முஸ்லிம்களின் முன்னோர்கள் யார் என்பதை முழுமையாக தெரிந்துகொள்ள மத்திய மாநில அரசுகளும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். காயல்பட்டணத்தில் குறிப்பிட்ட இடங்களில் அகழ்வு ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். கல்வெட்டுக்களையும் ஆராயவேண்டும். காயல்பட்டணத்தை பூர்வீகமாகக் கொண்டு உலகில் பல இடங்களில் வாழ்பவர்களிடம் தகவல் திரட்ட வேண்டும். உலகின் பல நூலகங்களிலும் அரபு-தமிழ் உறவுக்கான ஆதாரங்களை சேகரிக்க வேண்டும்.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவை ஒட்டி 'முகத்தம்' மலை அடிவாரத்தில் 'கிராபதில் குப்ரா' என்ற ஊரில் இமாம் ஷாஃபீ (றஹ்) அவர்கள் அடக்கத்தலம் உள்ளது. காயல்பட்டணத்திற்கு 9வது நூற்றாண்டில் வந்தவர்கள் அந்நகர் வாசிகள் என அறியப்படுகிறது. அதே போல் எகிப்தின் துறைமுகமான அலெக்ஸாந்திரியாவில் 13வது நூற்றாண்டில் தமிழர்களின் குடியேற்ற காலனி இருந்ததாகத் தெரிகிறது. இவைபற்றிய முழு தகவலும் ஆராயப்பட வேண்டும்.

புகழ்மிக்க நூல்களில் காயல்பட்டணம்

காயல் இப்னு அப்பாஸ், சென்னை-79.

ஜனாப் **ஆர். பி. எம். கனி** B.A.. B.L. அவர்களால் எழுதி சென்னை அருள் நூல் பதிப்பகம் மூலம் 1963ல் வெளியிடப்பட்ட இஸ்லாமிய இலக்கிய கருவூலம் என்ற உயர்ந்த இலக்கிய நூலில் '' கடந்த கால இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் '' என்ற தலைப்பில் காயல்பட்டணத்தில் வாழ்ந்த இஸ்லாமிய புலவர்களின் தமிழ் புலமை பற்றி தெளிவுபட எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

''இஸ்லாமிய கலைக் களஞ்சியத்தை'' எழுதிய **M. R. M. அப்துர் ரஹீம்** நமது காயல்பட்டணத்தின் சிறப்பையும், இங்கு வாழ்ந்து மறைந்த அவ்லியாக்கள், புலவர்கள் பற்றி மூன்று பாகங்களைக் கொண்ட இஸ்லாமிய கலைக்களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளதை தமிழறிந்த மக்கள் யாவரும் காயல்பட்டணத்தின் புகழை அறிந்து கொண்டார்கள்.

1978ல் காயல்பட்டணத்தில் நடந்த அனைத்துலக மூன்றுவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்ட '' இஸ்லாமியத் தமிழ் இலக்கிய கட்டுரைக் கோவை '' என்ற ஒப்பற்ற இலக்கிய நூலில் இதன் ஆசிரியர் பெரும்புலவர் பேராசிரியர் **சி. நயினார் முஹம்மது** M. A. அவர்கள், காசீம் புலவர் பற்றி ஒரு கட்டுரை எழுதி, காயல்பட்டணம் மெஞ்ஞான களஞ்சியமாகவும், தமிழ் புலவர் கோட்டையாகவும் விளங்கியது என்று குறிப்பிட்டுள்ளார்கள். 1986ல் வெளியிடப்பட்ட '' வ. உ. சிதம்பரனார் மாவட்டம் '' என்ற நூலில் இதன் ஆசிரியர் **ச. சுந்தரராசன்** (ஓய்வு பெற்ற வட்ட ஆட்சியர் - நெல்லை) அவர்கள் காயல்பட்டணத்தைப் பற்றி எழுதுவதைக் கவனிப்போம்.


அரேபியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் முற்காலத்தில் உப்பை கடல் கடந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்து இருக்கிறார்கள். நம் நாட்டை ஆங்கிலேயர் ஆண்டுகொண்டிருந்த போது காயல்பட்டணத்தில் பருத்தி மற்றும் நெய்யப்பட்ட துணிகளை விலைக்கு வாங்கி கப்பல் மூலம் சென்னைக்கு ஏற்றுமதி செய்வார்கள்.

கி. பி. 1658 - 1825 ஆகிய ஆண்டுகளில் இந்தக் காயல்பட்டணத்தில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் வேரூன்றி இருந்தது. அக்காலத்தில் துணிகளுக்கு வண்ணம் ஏற்றுவதிலும், துணிகளில் வண்ணச் சித்திரம் போடுதல் ஆகிய தொழிலில் கலை திறம்படசெய்து புகழ் பெற்றார்கள் இக் காயல்வாசிகள். திருநெல்வேலி மாவட்டத்தில் காயல்பட்டணம் சிறந்த கடற்கரை ஊராகும். [தற்போது சிதம்பரனார் மாவட்டத்துடன் இணைந்துள்ளது.]

1986ல் இலங்கையைச் சேர்ந்த அல்ஹாஜ் மௌலவீ **K. M. H. காலிதீன் B. A., M. A.** அவர்களால் எழுதப்பட்ட ' இலங்கை முஸ்லீம்களின் வரலாறு'' என்ற நூலில் காயல்பட்டணம் ஒரு குறிப்பிடதக்க நகரமாகும், மேற்கிலிருந்து அதாவது, ஆர்மஸ் சிஷ்தி, ஏடன், அரபு நாட்டின் பல பகுதி ஆகியவற்றிலிருந்து வரும் எல்லாக் கப்பலும் இத்துறைமுகத்தில் தான் நங்கூரம் பாய்ச்சுகின்றன. இத்துறைமுகம் வாணிபத்துக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. காயல்பட்டணத்துக்கும் - எகிப்துக்கும் நெருங்கிய வர்த்தக கலாச்சார உறவுகள் இருந்து வந்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1987ல் தேவ கோட்டை **பி. நாராயணன்** அவர்களால் எழுதப்பட்ட 'தமிழ் நாடு சுற்றுலா' என்ற நூலில் காயல்பட்டணம் மஹ்லரா, பக்தாத் கட்டிடப்பாணியையும், தமிழ் பாரசீக கட்டிடப்பாணியின் தன்மைகளைக் கொண்டுள்ளது, கி. பி. 1871ல் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இங்கு முஸ்லீம்கள்அதிகமாக வாழுகிறார்கள் 64மஹுதிகள் உள்ளன என்றுசுற்றுலா நூலில்காணப் படுகிறது. இதுபோன்று புகழ்மிக்க எண்ணற்ற நூல்களில் அதன் ஆசிரியர்கள் காயல்பட்டணத்தின் பெருமையையும் வரலாற்றுச் சிறப்பையும் வர்ணித்துள்ளனர்.

காயல்பட்டணத்தின் பழமையான பள்ளி வாயில்கள்



ஹாஜி ஆர். எஸ். அப்துல் லத்தீப் எம்.ஏ.,
(நிர்வாகி, முஹிய்யித்தீன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி)

பெரிய ஜும் ஆ பள்ளி

எகிப்தில் உள்ள கெய்ரோவின் முகத்தம் மலை அடிவாரத்திலும் அதன் பக்கத்திலுள்ள ''கிருபதுல் குபரு'' என்ற ஊரிலிருந்தும் கி.பி.842ல்கலிபா அல்வாதிக் ஆட்சியில் சிலர் முஹம்மது கல்ஜி என்பவரின் தலைமையில் கப்பல் மார்க்கமாக காயல்பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

இந்த ஜும் ஆ பள்ளி முஹம்மது கல்ஜி மற்றும் அவர்களுடன் வந்த சில நாதாக்களால் கி.பி. 843ல் (ஹிஜ்ரி 228) கட்டப்பட்டதாக பெரியவர்கள் நவின்று சென்றுள்ளார்கள்.

இப்பள்ளியை கட்டிய நாதாக்கள் இப்பெரிய ஜும் ஆ பள்ளியின் அடக்க தலத்தில் அடங்கியிருப்பதாக ஞானவான்களின் வாயிலாக அறிகிறோம், சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன் இங்குள்ள மையவாடியில் மீஸான் கற்களைத் தேடிப் பார்த்ததில் அநேகமானவை பூமியில் புதைந்து விட்டன.

சில மீஸான் கற்களை மைய வாடியின் மதிலுடன் கட்டியிருக்கிறார்கள். சில மீஸான் கற்கள் மையவாடியின் தெற்கு பகுதியில் கிடந்தன. பெயர்களும், வருடங்களும் சரியாக கண்டு பிடிக்க முடியவில்லை. சிலவற்றில் பெயர்கள் தெரிகின்றன வருடங்களை சரியாக அறிய முடியவில்லை. அவைகளில் ஒன்றில் ஹிஜ்ரி 502ல் அடங்கியுள்ள ரசீதுத்தின் மன்னனின் பெயர் இருக்கிறது.

சுமார் 1145 நுண்டுகளுக்கு முன் கட்டிய இப்பழமையான பள்ளியை ஒட்டி சுல்தான் ஜமா லுத்தீன் ஹிஜ்ரி 728ல் (கி.பி. 1329) ஒரு பிரமாண்டமான பள்ளியை கட்டினார்.

அப்பழமையான பள்ளி பெரிய ஜும்ஆ பள்ளியில் முடல் ஹவுள் பகுதியில் இன்னும் பொலிவுடன் திகழ்கிறது. இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி கழக அறிக்கையின் மூலம் சுல்த்தான் ஜமா லுத்தீன் இப்பழமையான பள்ளியை ஒட்டிகட்டிய பிரமாண்டமான பள்ளியைப் பற்றி அறியலாம். கி. பி. 1344ல் இப்னு பதுதா என்ற யாத்ரிகர் இப்பள்ளியைப்பற்றி தன் நூலில் குறிப்பிட்டுள்ளார் இப்பெரிய ஜும்ஆ பள்ளி காயல்பட்டனத்தில் முதலாவதாக அமைக்கப்பட்ட நெய்னார் தெருவில் வற்றாப் பொலிவுடன் இன்றும் மிளர்கிறது. இங்குள்ள அடக்கதலத்தில் பல ஆயிரக்கணக்கான இறைநேசச் செல்வர்களும், மார்க்க அறிஞர்களும், நீதிவான்களும், மன்னர்களும், தலைவர்களும், அடங்கியுள்ளார்கள்.

கடற்கரைப் பள்ளி :

முஹிய்யத்தீன் மெட்ரிக்குலேசன் மேல் நிலைப்பள்ளியின் விளையாட்டுத் திடலுக்கு வடகிழக்காக இரண்டு பர்லாங் தூரத்தில் செய்யிது அஹ்மது பின் ஷாஹிது இப்னு முஹம்மது கறீம் மதணியின் மீஸான் கற்கள் இருந்தன. அவர்களின் கல்லறையிலுள்ள குறிப்பின் மூலம் அன்னாரின் இறப்பு ஹிஜ்ரி 430 என்பதும் கடற்கரை பள்ளியின் இமாமாக இவர் இருந்தார் என்பதும் தெரிகிறது.

கடற்கரை பள்ளி சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இப்பள்ளி அழிந்து இருக்கலாம் அல்லது இதன் பக்கத்தில் இன்று காட்சி அளிக்கும் கோசுமறைப் பள்ளி என்று பெயர் இருந்து இருக்கலாம், கோசு மறைப்பள்ளியிலும் நாதாக்கள் அடங்கி இருக்கிறுர்கள்.

இவர்கள் ஏர்வாடி செய்யிது இப்ருஹீம் வலியுல்லாஹ் அவர்களின் தந்தையாருடன் பிறந்து காயல்பட்டினம் காட்டு மகுதூம் பள்ளியில் அடங்கியுள்ள மகுதூம் வலியுல்லாஹ்வின் காலத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதப்படுகிறுர்கள்.

சிறுபள்ளி :

(சின்ன ஜு்ம் ஆ பள்ளி)

இப்பள்ளி சுமார் 750 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாக தெரிகிறது. இங்கு ஷஹிதா செய்யிது அஹ்மது அடங்கியிருக்கிறுர். இவர்களின் வபாத்து ஹிஜ்ரி 670 (கி.பி. 1272) இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி கழக குறிப்பிலும் இப்பள்ளியில் அடங்கியுள்ள சில நாதாக்களின் மீஸான் கற்களின் குறிப்புகளை அறிய முடிகிறது. இப்பள்ளி ஆரம்பத்தில் சிறிய பள்ளியாக இருந்தது. சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் ஊரை ஆண்ட பிரபு ஒருவரால் விஸ்தரித்து கட்டப் பட்டதாத தெரிய வருகிறது. இப் பள்ளியும் நெய்னுர் தெருவில் அமைந்து இருக்கிறது.

மகுதூம் பள்ளி :

காயல்பட்டினம் மகுதூம் தெருவில் அமைந்துள்ள இப்பள்ளி சுமார் 725 வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டதாக அறிகிறோம். ஹிஜ்ரி 687ல் அடக்கமாகிய ஒரு பெரியவரின் மீஸான் இப் பள்ளி மைய வாடியில் இருக்கிறது. இன்னும் பழமையான மீஸான் கற்கள்பல இருக்கின் றன. அடங்கியுள்ளவர்களின் பெயர்களும், வருடங்களும் சரியாக அறிய முடியவில்லை. காயல் பட்டினம்தைக்கா சாஹிப் ஒலியுல்லாஹ் அவர்கள், மகுதூம் பள்ளிமையவாடியில் சுமார் 12,000 இறை நேசச் செல்வர்கள் அடங்கியுள்ளார்கள் என்று கூறியுள்ளார்கள்.

கற்புடையார் பள்ளி :

காயல்பட்டினத்திலுள்ள மிகவும் பழமையான பள்ளி வாயில்களில் இதுவும் ஒன்று. இப் பள்ளியில் அபுபக்கர் ஒலியுல்லாஹ் அடங்கியுள்ளார்கள். இவர்கள் இவ்வுலகை விட்டு மீண்ட காலம் ஹிஜ்ரி 847 ஆகும். அக்காலத்தில் இப்பகுதியில் குடியிருப்புகள் அதிகமாக இருந்ததாக ஏடுகள்மூலம் அறியக்கிடக்கின்றன.

பவுத்திர மாணிக்கப்பட்டணம் என்ற பெயர் காயல்பட்டினத்திற்கு உண்டு என்பதை இங்குள்ள கருங்கல் கல் வெட்டு ஒன்று தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

இந்த கற்புடையார் பள்ளிக்குப் பக்கத்திலுள்ள முஹிய்யத்தீன் மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் இவ்வாண்டு ஒரு கிணறு தோண்டிய போது பழைய கிணறு ஒன்று உறைகளுடன் காட்சி அளித்தது. கற்புடையார் பள்ளிக்கும், கடற்கரை பள்ளிக்கும் நடுவில் தான் இப் பள்ளிக் கூடம் அமைந்திருக்கின்றது. இந்த இரண்டு பள்ளி வாயில்களுக்கும் இடைப் பட்ட பகுதியில் பழைய காலத்து கிணறுகள், மற்றும் சாமான்கள் அவ்வப்போது நிலத்தை தோண்டும் போது கிடைக்கின்றன என்று இப்பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

600, 700 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வரலாற்றுப் பெருமை வாய்ந்த இன்னும் பல பள்ளிகள் காயல்பட்டினத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

காயல்பட்டணத்தின் பள்ளி வாயில்கள்

முன்பக்க கட்டுரையில் ஐந்து பள்ளிவாயில்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. காயல்பட்டணத்திலுள்ள மற்ற பள்ளிவாயில்கள் பற்றியகுறிப்புகள் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

காயல்பட்டணத்திலுள்ள அனைத்து பள்ளிவாயில்களின் முழுமையான சரித்திரத்தை யும் வெளியிட ஆர்வமிருந்து முயற்சி மேற்கொண்டும் கிடைத்த குறிப்புகளையே இடம் பெறச் செய்துள்ளோம்.

வரலாற்றுக் குறிப்புகளின் வருடங்களில் வித்தியாசங்கள் இருந்தாலும் அதை எழுதித் தந்த ஆசிரியர்களின் விருப்பத்தை மாற்றாமல் வெளியிட்டுள்ளோம். அதேபோல் 'காயல்-பட்டணத்தில் இந்துக் கோயில்களின் வரலாற்றுச் சிறப்புகள்' கட்டுரையிலும் அதன் ஆசிரியர் நோக்கத்தை அப்படியே வெளியிட்டுள்ளோம். ... **மலர் ஆசிரியர்**

கடைப்பள்ளி:

காயல்பட்டணம் **பரிமார் தெருவில்** இப்பள்ளி உள்ளது. இத் தெருவாசிகள்தான் காயல்பட்-டணத்தின் பூர்வீக குடிமக்கள் என பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வருகின்ற கூற்று கி. பி. 875-ல் எகிப்திலிருந்து முஹம்மது கல்ஜி தலைமையில் 224 பேர் காயல் வந்திறங் கினர். அப்போது பாண்டிய நாட்டை ஆட்சி செய்த மன்னர் இவர்களுக்கு ஆதரவளித்து பரந்த நிலத்தை பட்டயமாக கொடுத்து பல பொறுப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார் மரக்கலங்களில் இவர்கள் வந்திறங்கியதால் மரக்கலராயர்கள் என்ற பட்டமும் வழங்கினார். அதுவே பின்னர் மரைக்காயர் மரைக்கார் என்றழைக்கப்படலாயிற்று. இவர்களின் வாழ்க்கை முறைகளால் பெரிதும் கவரப்பட்ட மக்கள் இஸ்லாத்தை ஏற்றனர்.

ஆரம்பத்தில் இன்றைய கோமான் தெரு, நெய்னார் தெரு, சித்தர் தெரு, பரிமார் தெரு, காட்டுத்தெருவரை ஒரே தெருவாக இருந்தது. இறை வழிபாட்டிற்கு அத்தெருவில் சில பள்ளி கள் இருந்தன. இன்றைய கடைப்பள்ளி கட்டப்பட்டுள்ள இடத்தில் ஒரு பள்ளி இருந்தது. அதே பள்ளி பின்னர் கல்லால் புதுப்பித்து கட்டப்பட்டது.

13-ம் நூற்றாண்டில் செய்யிது ஜமாலுத்தீன் தலைமையில் எகிப்திலிருந்து அரபிகள் காயல் வந்தனர். அப்போது பாண்டிய மன்னரால் பட்டயமாகத்தரப்பட்ட பரந்த பூமியில் முஸ் லிம்கள் ஆங்காங்கே வாழ்ந்தனர். அச்சமயம் பரிமார் தெருவில் செம்பி, பவுத்திரமாணிக்கம் என்ற இரு செல்விகள் மிகுந்த செல்வாக்குடன் இருந்தனர். இன்றைய காயல்பட்டணத்தின் பகுதிகள் அவர்களுக்கே சொந்தமாக இருந்தன. இப்பகுதிகள் **பவுத்திர மாணிக்கப்பட்டணம்** என்றும் **செம்பி நாடு** என்றும் அழைக்கப்பட்டன. செய்யது ஜமாலுத்தீன் இச்செல்விகள் இரு வரிடமும் இப்பகுதிகள் அனைத்தையும் வாங்கி முஸ்லிம்களை குடியமரச் செய்தார். எகிப்து அரேபிய வழக்கப்படி தெரு மற்றும் வீடுகள் அமைக்கப்பட்டன.

புனித மக்காவிலுள்ள கஃபாவில் ஹஜ்ருல் அஸ்வத் பதிக்கப் பெற்றிருக்கும் மூலைக்கு நேரே வடமேற்கு திசையில் 280டிகிரியில் காயல்பட்டணம் அமைந்துள்ளது இது உலகில் அரிய பேறு ஆகும் அதிலும் பரிமார்தெரு கடைப்பள்ளி மிஃராபே கஃபாவிற்கு மிகச்சரியாக இருக் கிறது எனக் கூறி தங்களின் எல்லா தொழுகைளையும் இப்பள்ளியிலேயே தொழுதார்கள் மகான் **சின்ன முத்துவாப்பா** ஒலிகள். இம்மகான் ஒன்பது ஆண்டுகள் மக்காவில் தங்கியிருந்து ஒன்பது ஹஜ்ஜுகள் செய்தவர்கள்.

பரிமார்தெரு கடைப்பள்ளி வடபுறத்தில் **செய்யது ராபியத் உம்மாள்** (ரஹ்) அவர்களின் அடக்கத்தலம் உள்ளது. கடைப்பள்ளியின் தென்பக்க சுவருக்கு தெற்கே **ஷெய்கு நூர்தீன் ஒலி** (ரலி) அடக்கத்தலம் உள்ளது. இம்மகானின் அடக்கத்தலத்திற்கும் கடைப்பள்ளி தென்புற சுவருக்கும் இடையில் 'ஆசிமா' என்ற **ஆசியா மரியம்** (ரஹ்) அவர்களின் அடக்கத்தலம் உள்ளது. அருள்மறை குர்ஆன் வசனங்களையே அருமருந்தாக பயன்படுத்தி நோய்தீர்க்கும் பணிசெய்து மதிப்புபெற்று1939ல் காலமான இவர்கள் தமது மகன் மகபூப்பல்கீஸ் அவர்களின் பேரரும் பொதுநல ஊழியருமான காயல் மகபூப் அவர்களின் பூர்வீக சொந்த இடத்தில் அடக்கமாகி உள்ளார்கள்.கடைப்பள்ளி மையவாடியிலும் ஹவுளிலும் பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் பல கிடைத்துள்ளன.

—தகவல்: S. பீர் முகம்மது,பம்பாய்.

இரட்டை குளம் பள்ளி:

காயல்பட்டணம் சதுக்கை தெரு நெய்னார் தெருக்களுக்கிடையே அமைந்துள்ள இப்பள்ளியின் மேற்கிலும் கிழக்கிலும் குளங்கள் இருந்ததால் இது இரட்டைக்குளம் பள்ளி என அழைக்கப்படுகிறது.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள முகத்தம்மலை அடிவாரத்திலுள்ள கிறாபதுல்குபறா என்ற ஊரிலிருந்து முகம்மது கல்ஜி தலைமையில் வந்திறங்கிய அரபிகள் காயலில் வந்திறங்கியபோது பாண்டியமன்னர் ஜெயவீர ராஜூ காருவால் ஆதரிக்கப்பட்டு இங்கேயே குடிஏறினார்கள். இந்த சாபியீன்கள் தங்களின் இறைவணக்கத்திற்காக, தாங்கள் அமைத்திருந்த நீளமான தெருவில் மொட்டையார் பள்ளி, இரட்டைக்குளம் பள்ளி, மூடல்ஹவுள்பள்ளி காட்டுத்தெருபள்ளி கடற்கரைபள்ளி ஆகிய பள்ளிகளையும் அமைத்தார்கள்.

இமாம் ஹுசைன் (ரலி) வம்சத்தில் ஹிஜ்ரி 446ல் அரபிநாட்டில் பிறந்த மொகுதூம் (ஒலி) அவர்கள் காயல்பட்டணம் வந்து குடியேறினார்கள். மார்த்தாண்ட பெருநகரிலிருந்து இரட்டைக் குளம் பள்ளி மைதானம், கோமான் தெரு வரையில் நடைபெற்ற யுத்தத்தில் மொகுதூம் ஒலி ஷஹிதானார்கள். இரட்டைகுளம் பள்ளி மைதானத்தில் இப்போது தோண்டினாலும் ஷஹீதுகள் அடக்கமாகி இருப்பதை காணலாம். சமீபகாலம் வரை குளமாக இருந்த இந்த இடத்தில் பெரும்மழை பெய்யும் போது மழைநீர் ஓடக்கூடிய பகுதிகளில் இந்த மண்ணறகளை பார்த்ததுண்டு. இப்பள்ளியின் கீழ்ப்பகுதி குளத்தை தூர்வாரும்போது யுத்தத்தில் பயன்படுத்திய வாள் கிடைத்து இன்றும் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

பெரும் வியாபாரியும் ராஜதந்திரியுமான சுல்தான் ஜமாலுத்தீன் எகிப்திலிருந்து காயல் வந்து குடியேறி இந்நகரை சிறப்பாக சீரமைத்த போது இந்நகரில் இறைவணக்கத்திற்காக பல பள்ளிகளையும் அமைத்தார், மூடல்ஹவுள் பள்ளியே ஜும்ஆ பள்ளியாக இருந்ததால் அதை சேர்த்து இன்றைய பெரிய ஜும்ஆ பள்ளியும் கட்டினார். இருபள்ளிகளும் தனித்தனியாக கட்டப்பட்டு இணைத்திருப்பதை இன்றும் காணலாம்.

பழமையான இரட்டைக்குளம் பள்ளி வெள்ளைக் கருங்கல்லால் முற்கால சித்திர வேலைப்பாடுகளால் உருவாக்கிய தூண்களை பொறுத்தி அமைக்கப்பட்டு உள்ளது. இப்பள்ளியின் கீழ் பகுதி பிரதான வாசலிலிருந்து தென்பகுதி வராண்டாவிற்கு போக கருங்கல் நிலை உள்ள ஒரு வாசல் இருக்கிறது. இதன் நிலையில் பழங்கால தமிழ் எழுத்து காணப்படுகிறது. இப்பள்ளி வெளியில் உள்ள ஒரு மகானின் சமாதியில் கொல்லம் 644 என இருக்கிறது. இவைகளையெல்லாம் ஆராய்ந்தால் இந்நகரின் பூர்வீக உண்மைகள் வெளிப்படும்.

மகான் செய்கு சதக்கதுல்லா அப்பா (ரலி) இப்பள்ளி அறையிலேயே தங்கி மார்க்க கல்வி போதித்து வந்தார்கள். அந்த அறை சமீப காலத்தில் தான் அகற்றப்பட்டது. அந்த அறை இருந்த அடையாளத்தை இன்றும் காணலாம். மகான் பெயரில் சொல்லப்பட்டிருக்கும் மர்ளியாவில், மீகாயில் (அலை) அவர்களோடு சம்பாசனை செய்து மழையை பொழிய வைத்தவர்கள் என்றும், கல்லையும் கண்ணீர் வடியச்செய்த காரணரே என்றும் புகழப்படுகிறது. இவர்களின் இந்த அற்புதங்களால் இப்பள்ளி மீகாயில் பள்ளி என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது.

இப்பள்ளியின் நெய்னுர் தெரு பிரதான வாயிலில் ஒரு பழமையான சங்கமும், சதுக்கைத் தெரு பிரதான வாயிலில் ஜலாலிய்யா சங்கமும் கட்டப்பட்டுள்ளது.

25. 30வருடங்களுக்கு முன்புவரை இப்பள்ளியின் சுற்றுப்பகுதியில் வீடுகளே இல்லை,இரவு நேரங்களில் இங்கு தனித்து வருவது மிகவும் குறைவு இதனால் தராவீஹ் தொழுகைக்கு பின் கூட்டமாக பைத் சொல்லி பெரிய சதுக்கை வரை வந்து கலைந்து செல்வார்கள். இந்த வழக்கம் இன்று வரை உள்ளது. தற்போது இப்பள்ளியைச் சுற்றி ஏராளமான குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்ள்ளன. பெண்களின்வசதிக்காக மகான் சதக்கதுல்லா அப்பா(ரலி) பெயரில் ஒரு தைக்கா கட்டப்பட்டுள்ளது இப்பள்ளி வளாகத்தில் பெரிய மைதானத்டன் கூடிய ஜாலிய்யா நிக்காஹ் மஜ்லிஸ் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தபள்ளியில் முஹர்ரம் மாதம் இமாம் ஹஸன் ஹுசைன்(ரலி) அவர்கள் மவுலிது ஓதி வீடங்கிய ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. சபர்மாதம் 'வித்ரியா ஓதப்பட்டு சதக்கதுல்லா அப்பா (ரலி) கந்தூரியும் ஷவ்வால் மாதம் செய்யிது இஸ்மாயில் ஜலாலியுல் புகாரி தங்கள் கந்தூரியும் ரபியுல் அவ்வல் மாதம் 12நாட்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மவுலிதும். ரபியுல்ஆகிர் 11நாட்கள் கௌதுல் அஃலம் முஹ்யத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரலி) மவுலிதும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சலவாத்தும், பிரதிமாதம் 14ல்திக்றும் நடத்தப்படும் இப்பள்ளியின் ஜமா அத்திலுள்ளவர்கள் பெரும்பாலும் சாபியீன் மத்ஹபுடைய சுன்னத் வல் ஜமாஅத்தை சேர்ந்தவர்களாகவும், காதிரிய்யா தரீகாவை ஏற்று நடத்தக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்,

இப்பகுதி பெண்களுக்கு மார்க்க கல்வி போதிக்க தனி மதரஸா அமைக்கப்படுவது அவசியமானதாகும் அதற்கு அல்லாஹ் நல்லருள் புரிவானாக ஆமீன்.

— K. M. K. **காதிர் சுலைமான்**
சதுக்கைத்தெரு, காயல்பட்டணம்

புதுப்பள்ளி

காயல்பட்டணம் தைக்கா தெருவிலுள்ள புதுப்பள்ளி 200ஆண்டுகளுக்கு முன் [ஹிஜ்ரி1212] கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு அஸ்திலாரம் போட்டவர் நெல்லூர் நவாபு ஆவார். அடிமட்டம்வரை கட்டி ஓலை வேயப்பட்டபின் கீழக்கரை அவ்க்கார்மரைக்கார் என்றழைக்கப்பட்டு வந்தஅப்துல் காதர் மரைக்கார் அவர்களின் பண உதவியுடன் சின்னப்பா ஆலிம் என்றழைக்கப்பட்டு வந்த முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் மேற்பார்வையில் கட்டிடவேலைகள் ஆரம்பமாயின. அதேவருடம் சின்னப்பா ஆலிம் அவர்கள் காலமாகி விட்டார்கள். அதன்பின் நடுவுளப்பாஆலிம் என்ற முஹம்மது சுலைமான் லெப்பை ஆலிம் அவர்களின் மேற்பார்வையில் இப்பள்ளி கட்டி முடிக்கப்பட்டது.

புதுப்பள்ளி தென்புறத்தில் அமைந்திருக்கும் 'மழ்ஹருல் ஆபிதீன்' என்றழைக்கப்படும் மகாமில் ஐந்து அடக்கஸ்தலங்கள் அமைந்திருக்கிறது.

முதலாவது அடக்கஸ்தலம் பெரிய ஆலிம் என்ற அப்துல்காதர் நெய்னு அவர்கள் உடையது. இவர்கள் அஷ்ஷெய்கு சுலைமான் ஒலி (ரலி) அவர்களின் ஐந்து ரத்தினங்களில் ஒருவராகிய ஹஸரத் ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலி (ரலி) அவர்களின் வம்ச வழியில் ஹிஜ்ரி 1260 ல் பிறந்தவர்கள். இவர்கள் ஹிஜ்ரி 1327 ல் காலமானார்கள். இரண்டாவது அடக்கஸ்தலம் சின்ன ஆலிம் என்ற முஹ்யித்தீன் அப்துல் காதர் ஆலிம் அவர்களுடையது. இவர்கள் மாதிஹுர் ரசூல் அஷ்ஷெய்கு ஸதக்கத்துல்லாஹ் அப்பா (ரலி) அவர்கள் வழியில் ஹிஜ்ரி 1273ல் பிறந்தவர்கள். இவர்கள் முஹல்ல தீவு அரசரால் இலங்கையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு தலைமை காஜியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் ஹிஜ்ரி 1328 ரமலான் பிறை 27ல் காலமானார்கள். மூன்றாவது அடக்கஸ்தலம் சின்ன ஆலிம் மகனான முஹம்மது அப்துல்லா ஆலிம் அவர்களுடையது. இவர்கள் தம் பாட்டானார் ஸதக்கத்துல்லாஹ் அப்பா (றலி) அவர்கள் நினைவு நாளான ஹிஜ்ரி 1329 ஸபர் பிறை 5ல் தமது 30 வது வயதில் காலமானார்கள் சின்ன ஆலிம் அவர்களின் இரண்டாவது மகன் அப்துர் ரஹ்மான் ஆலிம் மார்க்க மேதையாகவும் அரபிக் கவிஞராகவும் விளங்கியவர்கள். இவர்கள் புதுப்பள்ளி வடபுறத்தில் தன் தாயார் அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.சின்ன ஆலிம் அவர்களின் இளையமகன்அப்துர்ரஹீம் ஆலிம் அவர்கள் சிறந்த மார்கக மேதையாகவும் ஹாபிழாகவும் திகழ்ந்தவர்கள்.

இவர்கள் புதுப்பள்ளியிலும், சாஹிபு அப்பா தைக்காவிலும் இலங்கையில் சம்மாங்கோட்டு பள்ளி(அல்ஜாமிவுல் அழ்பர்) யிலும் மூன்றுமுறை ஒரே நிலையில் ஒரே ரக்அத்தில் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதிதராவீஹ் தொழ வைத்த முதல் நபர் ஆவார் ஹிஜ்ரி 1392 துல்ஹஜ் பிறை13ல் காலமான இவர்களின் அடக்கஸ்தலம் நான்காவதாகும். ஐந்தாவது அடக்கஸ்தலம் பாளையம் மஹ்மூது சுலைமான் லெப்பை ஆலிம் அவர்களுடையது. மஹ்ழராவை உருவாக்கிய நாயகத்தின் வழித்தோன்றல் பக்தாத் செய்யிது ஹஸன் மௌலானா அவர்கள் வம்சத்தைச் சேர்ந்த

இவர்கள் சாஹிபு அப்பா தைக்காவில் கலீபாவாகவுமிருந்தார்கள். பாளையங்கேட்டை முஸ்லிம் அனாதை நிலையம் பள்ளிக்கு அப்ஜத் கணக்குபடி மஸ்ஜிதுல் மிம்பார் என்றபெயர் எழுதிக் கொடுத்த இம் மகான் ஹிஜ்ரி 1401 ரஜப் பிறை 18 ல் காலமானார்கள், அப்துல்லாஹ் ஆலிம் (றலி) அவர்கள் இளைய மகன் 'பல்லாக்கு லெப்பை' என்ற சதக்கத்துல்லாஹ் ஆலிம் ஹிஜ்ரி 1388 ஷைபர் பிறை 15 ல் காலமானார்கள். இவர்கள் புதுப்பள்ளி வடபுற மையவாடியில் தம் சிறிய தந்தை பக்கத்தில் அடக்கமாகி உள்ளனர்.

மழ்ஹறுல் ஆபிதீன் மகாமில் பிரதி மாதம் 14 ம் இரவு ராத்தீபதுல் ஜலாலிய்யா திக்றும் பிரதி வெள்ளிக்கிழமை புர்தா ஷரீபும் ரஜப் பிறை 29ல் இமாம் முஹம்மதிப்னு இத்ரீஸுஷ் ஷாபிய்யி (றஹ்) அவர்கள் மௌலுதும் நடைபெற்று வருகிறது.

—பாளையம் இப்றாகீம்
செயலாளர், மழ்ஹறுல் ஆபிதீன் சன்மார்க்க சபை

காதிரிய்யா கோடி மர சிறு நெய்னார் பள்ளி

காயல்பட்டணத்தின் மத்தியில் அமைந்துள்ள இப்பள்ளி ஒருசில நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. தற்போது இப்பள்ளி மிகச் சிறப்பான முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளி அப்துர் ரஷீது ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் கட்டப்பட்டது. இவர்களின் சகோதரர் அஹமது நெய்னார் அவர்களாகும் இவர்கள் இரு சகோதரர்களும் அஹமது நெய்னார் பள்ளியை யொட்டி காழி அலாவுதீன் அப்பா (ரலி) அவர்கள் சமாதி அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

அப்துர் ரஷீது ஒலியுல்லா அவர்கள் மகான் பெரிய சம்சுத்தீன் ஒலி ரலியல்லாஹீ அன்ஹு அவர்களின் மகளை திருமணம் செய்தார்கள் என சொல்லப்படுகிறது.

இப்பள்ளியில் மகான் பெரிய சம்சுத்தின் ஒலி, மகான் சின்ன ஷம்சுத்தின் ஒலி, மகான் அப்துர் ரஹ்மான் ஒலி ஆகிய மூவ்வொலிகள் அடங்கப்பட்டுள்ளனர்.

இப்பள்ளி காம்பவுண்டுக்குள் மஹ்பூபு சுபுஹானி ராத்திப் மஜ்லிஸீம், மஹ்பூபு சுபுஹானி சங்கமும் அமைந்துள்ளன.

— மௌலவி W.M.M. செய்யது முகம்மது ஆலிம் பாகவி
இமாம், காதிரியா கொடிமர சிறு நெய்னார் பள்ளி.

முஹ்யித்தீன் பள்ளி :

ஹாஜி M. K. T. முகம்மது அபூபக்கர் தெரு என்று பெயரிடப்பட்டுள்ள குத்துக்கல் தெருவில், முஹ்யித்தின் பள்ளி ஹிஜ்ரி 1299 ஷவ்வால் பிறை 5ல் கட்டி திறக்கப்பட்டது.

'சிங்கப்பூரார்' என்ற புகழுக்குரிய அல்ஹாஜ் உ. து. இபுராஹீம் அவர்களும், அல் ஆரிபு பில்லாஹ் அல் முஹிப்புர் ரஸூல் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூஃபி ஹஸரத் அவர்களின் கம்பெனியார் வகையறாக்கள், ஹாஜி சே. கு. அப்பா குடும்பத்தார் ஹாஜி குளம் செண்டு முஹியத்தின் அப்துல் காதிர் அவர்கள் ஆகியோர் இப்பள்ளியின் நிர்மான ஸ்தாபகர்களாகும்.

இப்பள்ளியில் மத்ரசத்துல் பிர்தவ்ஸ் என்ற பெயரில் திருக்குர் ஆன், மாணவர்களுக்கு கற்ப்பித்தலும் மார்க்க வகுப்புக்களும் இருபத்தைந்து வருடங்களாக நடை பெற்றுவருகின்றன.

இப்பள்ளி வளாகத்தில் மஜ்லிஸுல் கரம் சங்கம் செயல்படுகிறது.

—ஹாஜி குளம் அமீன் சாதிக்.

அஹமது நெய்னார் பள்ளி

வள்ளல்கள் லெப்பப்பா தெரு என்ற சதுக்கைத் தெருவில் இப்பள்ளி கட்டப்பட்டுள்ளது. அப்துர் ரஷீது (ரலி) அவர்களின் தம்பி அஹமது நெய்னார் அவர்களால் இப்பள்ளி கட்டப்பட்டது.

காயல்பட்டணத்தின் காழியாக இருந்த காழி அலாவுதீன் அப்பா (ஒலி) அவர்களின் அடக்கத்தலமும் இம்மகானின் பெயரால் தைக்காவும் K. A. T. சங்கமும் இப்பள்ளியை யொட்டி அமைந்துள்ளன.

காழி அலாவுதீன் அப்பா வலி அவர்கள் காழியாக இருந்த போது, மாமியார் கொடுமையால் துயரப்பட்ட ஒரு நிறைமாத பெண்ணின் நிலை கண்டு மனம் வருந்தி மணப்பெண்ணுக்கு தனிவீடு கொடுத்து மணமகன் பெண் வீட்டில் வாழும் வழக்கத்தை அமல்படுத்தினார்கள்.

— P. S. A. முஹம்மது ஷாபி
— M. A. கிலுரு முஹம்மது

குருவித்துறைப்பள்ளி

வேதப்புராணம் ஈந்த வேந்தர் மகான் பூவாறில் சமாதி கொண்டிலங்கும் அல்லாமா நூஹ் வலிய்யுல்லாஹ் அவர்களின் அருந்தவப்புதல் வரும், காயல்பதியின் கீழ்ப்பகுதியில் கலங்கரை தீபமாய் விளங்கும் மஜ்லிஸுல் புகாரிஷ்ஷரீப் ஸபையின் வடபுறமாக அடக்கம் பெற்ற மகான் செய்யிது அஹ்மது அல்லாமா பெரிய முத்து வாப்பா அவர்களின் தந்தையின் தகப்பனாருமாகிய இதோ இப்பள்ளியின் கீழ்ப்பகுதியில் சமாதி கொண்டிலங்குபவருமாகிய அல் ஆரீஃபு பில்லாஹ் செய்யிது அஹ்மது வலியுல்லாஹ அவர்களால், சற்றேறப்ப (194) நூற்றுத் தொன்னூற்று நான்கு வருடங்களுக்கு முன் ஹிஜ்ரி (1214) ஆயிரத்து இருநூற்றுப் பதினான்கு வருடத்தில் நிர்மானிக்கப்பட்டது.

இப்பள்ளியின் எழில்மிகு தோற்றம் மாலைப் பொழுதில் கடலோரம் சென்று காற்று வாங்குவோர் அனைவரையும் மஃரிபுத் தொழுகையை நிறைவேற்ற ஈர்க்குமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறைநேசப் பெருமகனால் உருவாக்கப்பட்ட இவ்விறையில்லம் வணக்கம் செய்யுமிடம் மட்டுமன்றி, மார்க்கக் கலாசாலையாகவும் அல்மத்ரஸதுல் ஹாமிதிய்யா என்ற பெயரில் அன்றுமுதல் இதுகாறும் சேவையாற்றிவருகிறது.

இக்கல்லூரியின் வாயிலாக பற்பல வெளிநாடுகள் இலங்கை மலேசியா போன்ற நாட்டவர்களும் மார்க்க ஞானத்தை கற்று தெளிவு பெற்றோர்களென்பதும் மறைக்க முடியாத உண்மையாகும்.

மூன்றாண்டுகளுக்கு முன் புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இப்பள்ளி காட்சியளிக்கிறது.

இப்பள்ளியின் மய்ய வளாகத்தில் குறிப்பிடத்தக்க தவ சீலர்கள் பலர் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அன்னவர்களின் திருப் பெயர்கள் வருமாறு.

1 மகான் அல்ஆரிஃபு பில்லாஹ் செய்யிது அஹ்மது வலியுல்லாஹ் அவர்கள் மறைவு ஹிஜ்ரி 1216
2 அல்ஹாஜ் முஹம்மதுஇபுறுஹீம் அவ்லியா சாகிபுகண்டி ஆலிம் அவர்கள் மறைவு ஹிஜ்ரி 1353
3 அல்லாமா நஹ்வி செய்யிது அஹ்மது ஆலிம் முஃப்தி அவர்கள் மறைவு ஹிஜ்ரி 1362
4 அல்ஹாஜ் நூஹ் லெப்பை ஆலிம் வேலூர் ஆலிம் அவர்கள் மறைவு ஹிஜ்ரி 1365
5 அல்ஹாஜ் முஹம்மது இஸ்மாயில் ஆலிம் சூரன்குடி ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1357
6 அல்ஹாஜ் அல்லாமா நஹ்வி செ.யி. முகம்மதுஇஸ்மாயில்ஆலிம் முஃப்தி அவர்கள் ஹிஜ்ரி1376
7 இப்பள்ளிக்கு உப்புப்பாத்திவஃபுசெய்த அல்ஹாஜ்முகம்மதுபாகிர்சாகிபுஅவர்கள் ஹிஜ்ரி1305
8 புனித புகாரிஷ்ஷரீபு அபூர்வ துஆப் புகழ் அல்லாமா அல்ஹாஜ் சா. ஷாஹுல் ஹமீது ஆலிம் முப்தி அவர்கள் ஹிஜ்ரி 1405

வேதம் நிறைந்த மஸ்ஜிது வாம் குருவித்துறைப்பள்ளியும்
செய்யிதஹ்ம தொலி சமூகம் சேர்ந்திட்டோர் மனம் பெற்றோர்.

- மௌலவி S. M. முஹம்மது பாரூக் ஆலிம் ஃபாஸி
கதீப், அல்ஜாமிவுஸ் ஸகீர் (குத்பா சிறுபள்ளி)

ஆராம் பள்ளி

தூத்துக்குடி - திருச்செந்தூர் நெடுஞ்சாலையின் காயல்பட்டணம் பிரதான வீதியில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளியின் மேல்புறம் இப்பள்ளியின் பெயரால் ஆராம் பள்ளித்தெரு உள்ளது. காயல்பட்டணத்தின் பூர்வீகப்பள்ளிகளில் இதுவும் ஒன்று.

ஹாபீஸ் M. A. முஹம்மது நூகு

தாயிம் பள்ளி:

இது நகரின் புராதனப் பள்ளி வாசல்களில் ஒன்றாகும். திருச்செந்தூர் தூத்துக்குடி நெடுஞ்சாலையான் கருத்தம்பி மரைக்கார் தெரு தெற்கு கடைசியில் இப்பள்ளி அமைந்துள்ளது. காதிரிய்யா தரீகாவின் திக்ரு மஜ்லிஸ் நடைபெறும் ழியாவுல் காதிரிய்யா எனும் தவச் சாலையும் வள்ளல் சீதக்காதி வாசக சாலையும் இப்பள்ளிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் அமைந்துள்ளன. தப்லீக் மற்றும் கல்விப்பணிகளுக்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நல்வணிகர் மூஸா ஸாஹிப்(ரஹ்) அவர்கள் கப்ரும், வரகவி காசிம் புலவர் வலியுல்லாஹ் அவர்கள் வழித்தோன்றலான முஹம்மது யூசுப் லெப்பை ஆலிம் அவர்களின் கப்ரும் அங்கு சுடர் வீசிக்கொண்டிருக்கிறது.

— மௌலானா S M. ஐதுரூஸ் ஆலிம் ஃபாஜில் பாகவி
முதல்வர்: அல் மத்ரஸத்துல் யாக்கூத்திய்யா. காயலபட்டணம்.

ஹாஃபிழ் அமீர் ஒலி பள்ளி :

பெரிய நெசவு தெருவில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளியின் கீழ்புறம் 1630ம் ஆண்டு அடங்கப்பட்டுள்ள ஹாபிழ் அமீர் ஒலியுல்லாஹ் அவர்கள் கலை ஞான தீபம் காமில் பெரிய ஷம்சுத்தீன் (ஒலி) அவர்களின் சீடர்களில் ஒருவராகும்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் சங்கைக்குரிய சின்ன முத்து வாப்பா ஒலி அவர்களிடம் இம்மகான் நேரில் வந்து உரையாடிக் கொண்டிருந்ததை இப்பள்ளியின் முஅத்தின் கண்டுள்ளார். இப்பள்ளிக்கு ஹாபிழ் அமீர் ஒலி பள்ளி என்ற பெயர் சூட்டி அழைக்கப்படுகிறது.

பெரிய நெசவு தெரு ஹாபிழ் அமீர் ஒலி தெரு என்றும் சின்ன நெசவு தெரு ஹாமிழ் அமீர் ஒலி சின்னதெரு என்றும் மேலநெசவு தெரு ஹாபிழ் அமீர் ஒலி மேலத்தெரு என்றும் தற்போதைய பேரூராட்சி மன்றத்தால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

- A. K. நெய்னா முகம்மது
10வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்

ஹாஜி அப்பா தைக்கா பள்ளி :

தூத்துக்குடி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளி அமைந்த தெரு ஹாஜி அப்பா தைக்கா பள்ளி என அழைக்கப்படுகிறது.

பல்லாயிரம் இறை நேசச் செல்வர்கள் அடக்கமாகியிருக்கும் மொகுதூம் பள்ளியில் அடங்கியுள்ள நுஸ்கியார் (ஒலி) அவர்கள் மருமகன் செய்கு முஹம்மது ஹாஜி அப்பா அவர்களால் இப்பள்ளி கட்டப்பட்டது. பள்ளியையொட்டி அவர்கள் அடக்கத் தலம் உள்ளது.

- பாட்டா மொகுதூம்

கோமான் மொட்டையார் பள்ளி :

கோமான் தெருவில் இப்பள்ளி அமைந்துள்ளது. காயல்பட்டணம் வரலாற்றில் இத் தெருவிற்கு தனிப்பெருமை உண்டு. கி. பி. 875ல் முஹம்மது கல்ஜி எகிப்திலிருந்து வந்து காயல்பட்டணத்தில் குடியேறிய போது இத்தெரு அமைக்கப்பட்டுவிட்டது. ஜமாஅத் கட்டுப் பாடான இங்கு கோமான் மேலத்தெரு கோமான் நடுத்தெரு கோமான் கீழத்தெருக்கள் உள்ளன, தற்போது இப்பள்ளி புதுபிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது.

- M. Y. முஹ்யித்தீன் அடிமை

அல்ஜாமிவுல் அஸ்ஹர் ஜும் ஆ பள்ளி:

காயல்பட்டணத்தின் மத்தியில் தூத்துக்குடி—திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் (கருத்தம்பி மரைக்கார் தெரு) ஸிகஸ்டம்ஸ் சாலை சந்திப்பில் கம்பீரமாக காட்சி தரும் இப்பள்ளி காயல் நகரில் கடைசியாக கட்டப்பட்ட பள்ளியாகும்

தமிழகத்தின் பல ஊர்களில் தாய்மொழியில் குத்பா பிரசங்கம் செய்யப்படாமல் இருந்த கால கட்டத்தில், முதன் முதலாக இந்தப்பள்ளி நிர்மாணிக்கப்பட்ட காலத்திலிருந்தே மிம்பரில் நின்று தமிழிலேயே பிரதான குத்பா பிரசங்கம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் தொழ வருகின்றவர்கள் உபதேசங்களை கேட்கவும் சிந்திக்கவும் வாய்ப்புஏற்படுகிறது.

ஜனநாயகத்தின் மீது மதிப்பு வைத்து அல்லாஹ்வின் சட்டங்களையும் அவைகளின் விளக்கங்களாகிய அண்ணல் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் நடைமுறைகளையும் முறையாகப் பேணிவருவதை கோட்பாடாகவும், அறிஞர்களின் மார்க்க அறிவு, நிர்பந்தங்களுக்கு இறையாகாமல் சத்தியத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை லட்சியமாகவும், மனிதர்கள் அனைவரும் ஒரே இனம் என்ற ஒருமைப்பாடு வலுப்பெறவும், அந்த மனிதர்களிடையே நன்மைகளை ஏவுவதையும் தீமைகளை விலக்குவதையும் நோக்கமாகவும் கொண்ட இந்த இறை இல்லம் ஏகத்துவ (தவ்ஹீத்) இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைகளை பற்றிப்பிடித்து பேணி வளர்க்கும் தப்லீக் மர்கஸாகவும் உள்ளது

அல்லாஹ்வின் பேரருளால் ஹிஜ்ரி1378 ரபியுல் அவ்வல் பிறை12 (26-9-1958) வெள்ளிக் கிழமை, சங்கைக்குரிய மார்க்க மாமேதை ஷெய்குல் உலமா அல்ஹாஜ் அல்ஹாபிழ் அல்லாமா மு. க. செய்யிது இபுராஹீம் ஆலிம் முப்தி அவர்கள் தலைமையில், மௌலவி அல்ஹாஜ் பா.சு, முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் அவர்களால் அல்லாஹ்வுக்காக வக்பு செய்யப்பட்டவுடன் அல்ஹாபிஸ் க. வி. செய்யிது முஹம்மது சாகிபு அவர்களால் தக்பீர் முழக்கத்துடன் இப் பள்ளி திறந்து வைக்கப்பட்டது. விசேஷத் தொழுகைக்குப்பின் மௌலானா மௌலவிஅல்ஹாஜ் அல்ஹாபிஸ் கதீபு சா. சாகுல் ஹமீது ஆலிம் அவர்களால் ஜும்ஆ பிரசங்கமும் தொழுகையும் நடத்தப்பட்டது.

சமுதாயப் பெருமக்களான ஜனாப் தென்காசி மு. ந. முஹம்மது சாகிப், கொழும்பு ஜனாப் கே. எ. முஹம்மது அலிஹாஜியார், சென்னை புதுக்கல் லூரி செயலாளர் ஜனாப் M S. அப்துல் மஜீது ஆகியோரும், நகரப் பிரமுகர்களான ஜனாப் L. K லெப்பைத்தம்பி ஹாஜியார், ஜனாப் P. S. அப்துல் காதர் ஹாஜியார், ஜனாப் N. K. காதர் சாகிபு ஆலிம், ஜனாப் N. K. அமீர்சுல்தான் ஆகியோரும் இத்திறப்பு விழாவில் பேசினர்.

இப்பள்ளியை நிர்மாணிக்க பெருமுயற்சி மேற் கொண்ட காலஞ்சென்ற கொடைவள்ளல் ஜனாப் அ க. முஹம்மது அப்துல்காதர் அவர்களுக்கு அனைவரும் நன்றி கூறினர் மிகக் குறுகிய காலத்தில் இதனை கட்டிமுடிக்க அயராது உழைத்த ஜனாப் S. A. ஹபீப் ஹாஜியாருக்கு பாராட்டுரைகள் வழங்கப்பட்டன இறுதியில் ஜில்லாபோர்டு உறுப்னர் ஜனாப் M.T S. முஹம்மது தம்பி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மௌலவி N, ஹாமித் பக்ரி ஆலிம் மன்பஈ
கதீப் அல் ஜமீவுல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித்

அரூஸிய்யா பள்ளி :

காட்டுத் தைக்கா தெருவில் இப்பள்ளி அமைந்துள்ளது. காட்டுத் தைக்கா இருந்ததால் அப்பெயரால் அழைக்கப்பட்டு வந்த இடத்தில் பள்ளி வாயில் எழுப்பப்பட்டு 1952ல் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளி அரூஸிய்யா பள்ளி என அழைக்கப்படுகிறது.

தற்போது காட்டுத் தைக்கா தெரு அரூஸிய்யா பள்ளித்தெரு என இப்பேரூராட்சியால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

— S, I, M. ஹனீபா, P. M. S. சைபுதீன்

மரைக்கார் பள்ளி:

மரைக்கார் பள்ளித் தெருவில் இப் பள்ளி அமைந்துள்ளது. இத் தெரு முன்னர் கடற்கரை தெரு என அழைக்கப்பட்டு வந்தது. காயல்பட்டணத்தின் பழம் பெருமை வாய்ந்த பள்ளி களில் இதுவும் ஒன்று.

இங்கு **ஹஸரத் சுலைமான்** (ஒலி) அவர்கள் அடங்கியிருக்கிறார்கள். அரபிகளின் வருகை யைத் தொடர்ந்து இங்கு அரபுத் தமிழ் கலாச்சாரம் பரவியிருந்த நேரத்தில், இஸ்லாத்தில் இணைந்த வட இந்திய பிராமணப் பெண்ணை சுலைமான் (ஒலி) அவர்கள் திருமணம் செய் தார்கள். இவர்களிலிருந்து ஐந்து இறை நேசச் செல்வர்களும் தோன்றினார்கள். அவர்களி லிருந்து பரவிய சந்ததிகள் தமிதகத்தின் பல பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக பரவி இஸ்லாமிய சேவை செய்து வருகின்றனர்.

மரைக்கார் பள்ளியில் பல்லாண்டுகளுக்கு முன்பே மத்ரஸா நடைபெற்று வந்தது. இதில் கற்றுத் தேறியவர்கள் பிரபலமானவர்களாக இன்றும் இருக்கின்றனர். இடைக்காலத்தில் மத்ரஸா இல்லாத பெருங்குறை நீக்கப்பட்டு சுலைமானியா மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டது. இம்மத்ரஸா தற்போது பெரிய அளவில் தனி கட்டிடத்தில் சிறப்பாக நடத்த முடிவு செய்து அதற்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

இம் மத்ரஸாவின் பெயர் **அல்குல்லியத்துல் அரபிய்யா ரூஹுல் இஸ்லாம்** என மாற்றப் பட்டுள்ளது.

அப்பா பள்ளி:

அப்பாப் பள்ளித்,தெருவில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளி சில நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டுள்ளது. மரைக்கார் பள்ளியில் அடங்கப்பட்டுள்ள ஷெய்கு சுலைமான் வலி அவர்களின் மகனாரும், இறைநேசச் செல்வரும் சிறந்த கவிஞருமான **ஹஸரத்ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலி** அவர்களும், நம் தலைமுறையில் மார்க்க மாமேதையாக திகழ்ந்தவர்களும், தமிழக உலமா சபை ஸ்தாபகர்களுள் ஒருவரும், தப்லீக் இயக்க அமீரும், காயல்பட்டணம் மஜ்லிஸுல் புகாரிஷ் ஷரீப் ஸபை, எல்கே மேல்நிலைப்பள்ளி, காயல்பட்டணம் ஆறுமுகநேரி கல்விச் சங்கம், குடிநீர் திட்டம் ஆகியவற்றை உருவாக்கியவர்களுள் முக்கியமானவரும், அல்ஜாமிவுல் அஸ்ஹர், குருவித்துறை பள்ளி, தாயிம்பள்ளி ஆகியவற்றின் முத்தவல்லியாக இருந்தவர்களும் 11—4—90 (ஹிஜ்ரி 1410 ரமலான் 14) ல் காலமானவர்களுமான ஷெய்குல் உலமா அல்ஹாஜ் அல்லாமா **மு. க, செய்யிது இபுறாஹீம் ஆலிம்** முப்தி ஹஜரத் அவர்களும் இங்கு அடங்கப்பட்டுள்ளனர்.

ஹிஜ்ரி 1121 ரஜப் 21ல் காலமாகி இங்கு அடங்கப்பட்டுள்ள ஸாம் ஷிஷாபுத்தீன் வலியுல் லாஹ் அவர்கள் பெரிய ஹதீது மாணிக்கமாலை, சின்ன ஹதீது மாணிக்க மாலை, ரசூல்மாலை அதபுமாலை, தோகைமாலை, குத்பா மாலை உள்ளிட்ட ஏராளமான மாலைகளை இயற்றி யுள்ளார்கள்.

வரதட்சனை கொடுமை, அனாச்சாரங்கள் சடங்குகள் அனைத்தையும் கண்டித்து இவர்கள் எழுதியுள்ள பாடல்கள் அனைத்துமே நல்லுபதேசங்களாகும்.

மரைக்கார்பள்ளி அப்பாபள்ளி ஓரே ஜமாஅத்தாகும். நிர்ப்பந்தங்களுக்கும் மெஜாரிட்டிக்குப் அடிபணியாமல் இறைவன் தந்துள்ள அறிவைப்பயன்படுத்தி அண்ணல் நபிகள் (ஸல்) அவர்கள் வழியில் மனிதர்கள் சிந்திக்க வேண்டும் என்ற உணர்வு மிக்கவர்கள் இவர்கள்.

மார்க்கப்பற்றும் தேசப்பற்றும் நிறைந்த இந்த ஜமாஅத்தினர் பொதுநல காரியங்களுக்கு முன்னிற்பவர்கள். காயல்பட்டணம் கூட்டு குடிநீர் திட்டம் போன்ற நகரின் நல்ல பணிகள் நிறைவேற காரணமாக இருந்தவர்கள். இப்போதும் இந்த ஜமாஅத்தினர் காயல்பட்டணத்தின் நான்காவது மேல்நிலைத் தொட்டிக்கு நிலம் நன்கொடையாக கொடுத்துள்ளனர்.

முதன் முதலாக காயல்பட்டணத்தில் விளையாட்டிற்கென இங்குள்ள ரெட்ஸ்டார் சங்கம்தான் துவக்கப்பட்டது.

அப்பாப்பள்ளித் தெருவில் 'உம்முல் முஃமினீன் ஆயிஷா சித்தீக்கா' என்ற பெண்கள் அரபிக்கல்லூரி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

— **M. M. அகமது நெய்னார் மரைக்கார்**
தலைவர், ரெட்ஸ்டார் சங்கம்

குட்டியப்பா பள்ளி :

காயல்பட்டணத்தின் ஆரம்ப வரலாற்றோடு தொடர்புடைய பள்ளி இது. எகிப்திலிருந்து முகம்மது கல்ஜி வருகையைத் தொடர்ந்து கி. பி. 875ல் காயல்பட்டணம் காட்டுத் தெருவி லிருந்து கோமான் தெருவரை ஒரே தெரு அமைக்கப்பட்டதும் அதில் பல பள்ளிகள் இருந்ததும் வரலாற்றுச் செய்திகள். அந்த காட்டுத் தெருவில்தான் இப்பள்ளி அமைந்துள்ளது.

இப்பள்ளிக்கு அண்மையில் அலியார் தெருவில் பூவப்பா வலி (ரலி) யும் அப்பா பள்ளியில் ஸாம் ஷிஹாபுத்தீன் வலி (ரலி) யும் அடக்கப்பட்டுள்ளனர். அடுத்துள்ள தெருக்களிலும் இறை நேசச் செல்வர்கள் பலர் அடங்கியுள்ளனர்.

காட்டுப் பகுதியாக இருந்த இந்த இடங்களில் தற்போது குடியிருப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இந்த பூர்வீக இறையில்லம் விரைவில் புதுப் பொலிவு பெறும்,

— **அல்ஹாஜ் M. அகமது**
அலியார் தெரு, காயல்பட்டணம்

ஷெய்கு ஹுஸைன் பள்ளி :

தூத்துக்குடி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் ஐக்கிய விளையாட்டுச் சங்கத்தையொட்டி இப்பள்ளி அமைந்துள்ளது. சன்மார்க்கப் போரில் உயிர் நீத்த ஷஹீது ஷெய்கு ஹுஸைன் அவர்க்ள் அடங்கியிருந்த இடத்தில் ஒரு சிறிய பள்ளி இருந்தது.

மலையாள மகாராஜா மகள் சுகமில்லாமல் பலராலும் வைத்தியம் செய்ய இயலாத நிலையில் இப்பள்ளியில் இருந்த முஸ்லிம் வைத்தியர் வைத்தியம் செய்து சுகப்படுத்தியதால் அந்த மகாராஜாவால் இப்பள்ளி கட்டப்பட்டது.

ஷெய்கு ஸலாஹுத்தீன் பள்ளி :

வள்ளல் சீதக்காதி நகரையொட்டி மேலப்பள்ளித்தெருவில் இப்பள்ளி அமைந்துள்ளது. இது மேலப்பள்ளி என்றும் அழைக்கப்படுகிறது.

இதுவும் காயல்பட்டணத்தில் பலநூறு ஆண்டுகளுக்கு முந்தைய பள்ளியாகும்.

— S. I. **அலி அக்பர்** B, com., S/o 'காட்டுவா ஹாஜி'

காயல்பட்டணம் நிர்வகிக்கும் பள்ளி வாயில்கள்

காட்டு மொகுதூம் பள்ளி:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரர் இமாம் ஹுசைன் (ரலி) அவர்கள் வழியில் ஹிஜ்ரி 446ல் அரபு நாட்டில் பிறந்த மொகுதூம் ஒலி அவர்கள் மார்க்க பிரச்சாரம் செய்வதற்காக இங்கு வந்து குடியேறினார்கள். இவர்கள் ஏர்வாடி சையிது இபுராகீம் ஷஹீத் ஒலி அவர்களின் சிறிய தந்தையாகும், ஹிஜ்ரி 539ல் இங்கு நடைபெற்ற யுத்தத்தில் ஷஹீதாகி அங்கேயே அடங்கப் பட்டார்கள்

திருச்செந்தூருக்கும் காயல்பட்டணத்திற்கும் நடுவில் காடாக இருந்த இந்த இடத்தில் இந்த தர்கா இருப்பதால் இது காட்டு மொகுதூம் பள்ளி என அழைக்கப்படுகிறது.

இப்பள்ளியை யொட்டி ஒரு பண்டைய கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலிருந்து பழங்கால செய்திகள் பலவற்றை தெரிந்து கொள்ளமுடிகிறது.

காட்டு மொகுதூம் பள்ளி என தற்போது அழைக்கப்படும் இந்த இடம் நாள கோனாடு கொண்டான் பட்டணம் என முற்காலத்தில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதில் ஒரு துறைமுகமும் இருந்து ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் நடைபெற்று வந்துள்ளது. இப்பள்ளிக்கு உதய மார்த்தாண்ட பெரிய பள்ளி என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது. இதற்கு தனி காழியும் ஏற்படுத்தப்பட்டு உதயமார்த்தாண்ட காழி என்ற பெயரும் சூட்டி, ஏற்றுமதி இறக்குமதி சுங்க வரியில் 6 விழுக்காடு பங்கும் செலுத்த வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது,

காயல்பட்டணத்தின் ஒரு பகுதியாக உள்ள காட்டு மொகுதூம் பள்ளி வருவாய் துறையின் நிர்வாக அமைப்பில் மட்டுமே வீரபாண்டியன்பட்டணம் ரூரல் பஞ்சாயத்தில் உள்ளது, எல்லா காலத்திலும் இந்த தர்காவும் அதைச்சார்ந்த இடங்களும் காயல்பட்டணம் முஸ்லிம்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

வீரபாண்டியன்பட்டணம் ரூரல் பஞ்சாயத்தின் இந்த இடங்கள் காயல்பட்டணத்தோடு இணைக்கப்பட்டு அபிவிருத்தி பணிகள் செய்ய 23-3-87 லேயே தீர்மானம் நிறைவேற்றி அதற்குரிய முறையான முயற்சியில் ஹாஜி V M S லெப்பை அவர்கள் தலைமையிலான மன்றம் பேரூராட்சி முயற்சிமேற் கொண்டுள்ளது.

இந்த தர்காவின் வடபுறம் ஹாஜி. S N சுல்தான் அப்துல் காதர் அவர்களால் 'மஸ்ஜிதுன் நூர்' என்ற பள்ளி வாயிலும் கட்டப்பட்டுள்ளது.

தகவல்: K. M. K. காதிர்சுலைமான்
M. K. S. A. தாஹிர்

ஆறுமுகனேரி 'பக்கீர் தைக்கா' பள்ளிவாசல்:

ஈருலக இரட்சகர் முஹம்மது முஸ்தபா ரசூலேகரீம் [ஸல்] அவர்களின் திருபேரர் கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன் அப்துல் காதீர் ஜீலானி [ரலி] அவர்களின் பெயரால் அவர்களின் தரீகை ஏற்று நடக்கும் மக்களுக்காக கடந்த 120 ஆண்டுகளாக காயல்பட்டணத்தில் மஹ்ழரா அல் காதிரிய்யா சபை பணி செய்கிறது.

இந்த 'மஹ்ழரா'வின் நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்டது தான் ஆறுமுகநேரியிலுள்ள பக்கீர் தைக்கா பள்ளிவாசல்.

ஆறுமுகனேரியில் முக்கிய சந்திப்பான தூத்துக்குடி, திருச்செந்தூர், காயல்பட்டணம், மூலக்கரை சாலைகள் சந்திக்கும் நான்குமுனை சந்திப்பில் இப்பள்ளி உள்ளது. எனவே தான் இந்த இடம் பள்ளிவாசல் பஸார், பள்ளிவாசல் தியல், பள்ளிவாசல் பஸ் ஸ்டாப் என்று அழைக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள கொழும்பில் வியாபாரம் செய்த அகமது கான் மிஸ்கீன் என்ற பக்கீர் அப்பா இப்பள்ளியை ஆறுமுகனேரியில் கட்டினர் கி. பி. 1913-15 வாக்கில் கட்டப்பட்ட இப் பள்ளி ஜனாப் அபு செய்யிது முகம்மது புகாரி அவர்களால் வக்பு செய்யப்பட்டு அந்த இடமும் அதை அடுத்த கட்டிடங்களும் நிலங்களும் மகழ்ரர்விற்கு அளிக்கப்பட்டன.

தற்போது இப்பள்ளி இடத்தில் பழைய கடைகள் இடிக்கப்பட்டு 14 புதிய கடைகள் கட்டப் படுகின்றன. இப்பள்ளியும் மராமத்து செய்யப்பட்டு வருகிறது. இதிலுள்ள தோட்டம் மஹ்லறா பார்க் என்றும் இப்பள்ளி மஹ்லறா தைக்கா என்றும் பெயரிடப்பட்டுள்ளன.

- மௌலவி கதீபு அல்ஹாஜ் S. N. சாகிப் தம்பி ஆலிம் மஹ்ழரி
கதீப் அல்ஜாமிவுல் கபீர்
முதல்வர், மஹ்லரத்துல் காதிரிய்யா அரபிக் கலலூரி.

திருச்செந்தூர் முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளி வாசல்:

தாலூகா தலைநகராகவும் போக்குவரத்திற்கு வசதியாகவும் உள்ள திருச்செந்தூரில் பள்ளிவாசல் அவசியம் கட்டப்பட வேண்டும் என நன்குணர்ந்த காயல்பட்டணம் மரைக்கார் பள்ளித்தெருவைச் சேர்ந்த கண்ணியமிக்கப் பெருந்தகை பி இ. சாகுல் ஹமீது ஹாஜியார் அவர்களால் 27-1-90ல் முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளி என்ற இப்பள்ளி திருச்செந்தூரில் கட்டப் பட்டது.

1974 ஏப்ரல் 15ம் தேதி காயல்பட்டணத்தின் கண்ணியமிக்க பிரமுகர்களான ஜனாப் S. O. ஹபீப் ஹாஜியார் அவர்களை தலைவராகவும் ஜனாப் A. K. சாகுல் ஹமீது ஹாஜியார் அவர்களை செயலளராகவும் 15 உறுப்பினர்களையும் கொண்ட நிர்வகக்க் குழுவிடம் இப் பள்ளியின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 13-9-81 முதல் இப்பள்ளியை ஜனாப் L. K. ஷெய்கு முஹம்மது ஹாஜி அவர்கள் தலைவராகவும் ஜனாப் A. K. செய்யிது அஹமது ஹாஜி அவர்களை செயலராகவும் கொண்ட நிர்வாகக் குழு நிர்வகிக்கிறது. இப்பள்ளியை யொட்டி வட தென்புறங்களில் கட்டப்பட்டுள்ள கடைகள் இப்பள்ளிக்கு பாத்தியப்பட்டது.

காயல்பட்டணம் ரயில்வே ஸ்டேஷன் சாகுல் ஹமீதிய்யா பள்ளிவாசல்:

ஸ்டேஷன் பள்ளி என் அழைக்கப்படும் இப்பள்ளி ஆறுமுகநேரி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ளது. 23-2-1923ல் காயல்பட்டணம் ரயில்வே ஸ்டேஷன் திறக்கப்பட்டதும் மக்கள் புகை வண்டியில் பயணம் செய்யத் தொடங்கினர் இந்த ஸ்டேஷன் ஊரிலிருந்து மேற்கே நீண்ட தூரம் தள்ளி இருந்ததால் மக்களின் வசதிக்காக ஒரு பள்ளி அமைக்கப்படுவது அவசியம் என்பதை உணர்ந்த கண்ணியமிக்க ஜனாப் பி. இ. சாகுல் ஹமீது ஹாஜியார் அவர்கள் 20-3-1935ல் இப்பள்ளியை கட்டினார்கள்,

திருச்செந்தூர் முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளியை நிர்வகிக்கும் நிர்வாகக் குழுவே 'சாகுல் ஹமீதிய்யா மஸ்ஜித் என்ற இந்த ஸ்டேஷன் பள்ளியையும் நிர்வகிக்கிறது.

- அல்ஹாஜ் A. K. செய்யிது அஹமது
தீவுத்தெரு, காயல்பட்டணம்.

சிறு மக்கத்துச் சீதேவிகள்!

கவிஞர். உமர்தம்பி
(S. முஹ்யித்தீன் அப்துல் காதர்)

காயல்நகர ஒலிமார்கள் பெயர்கள் யாவும் தெரிந்து
கவிதையாக வரைந்த இதை கல்பினிலே அறிந்து
தூய உள்ளம் பெற்றிடவே பெரியோரைப் பணிந்து
தொடர்ந்திடுவோம் வாழ்க்கையிலே இனிதாக சிறந்து

மரைக்கார் பள்ளி தெருவினிலே மாண்புடனே இலங்கும்
சிறப்பான சேகுகலீமான்ஒலி பெயரது துலங்கும்.
நிறைவோங்கும் அப்பாபள்ளி தெருவினிலே விளங்கும்
நேர்மையாளர் ஷாம்ஷிஹாபுத்தீன் ஒலி பாடல் முழங்கும்

பரிமார் தெரு பள்ளியின் பக்கத்திலே வாழும்
பாசமான செய்குநூர்தீன் ஒலியுல்லா வாகும்
நெறியான ஸெய்யிதுருபியா அம்மா தாயும்
நட்புசூழும் அலியார்தெரு பூவப்பாஒலி யாகும்

கருத்தம்பி மரைக்கார் தெருவினிலே கோமான்
கருணைமிகு முகம்மது யூஸுப்ஒலி சீமான்
வாட்டம் தீர்க்கும் நெசவு தெரு ஹாபில் அமீர் பூமான்
வளமான காட்சி தரும் ஜெஃபர் ஸாதிக் செம்மான்

தைக்கா தெரு தைக்காஒலி செய்கு அப்துல் காதர்
தகைசான்ற திருத்தந்தை உமர்ஒலி நாதர்
மிக்க புகழ் ஸெய்யிது முகம்மது சாலிஹ் ஒலி நீதர்
மேன்மையுடன் பேரின்பம் எய்த கொள்வோம் காதல்!

மகுதூம் பள்ளி யதனிலே நூஹு லெப்பை ஒலிகள்
மாண்புயர் நூஸ்கிஒலி நம் அகக்கண் விழிகள்
லுகவி ஒலி விளக்கு அஹமது முஹ்யித்தீன் இவர்கள்
பாலப்பா ஷெய்கு முகம்மது ஒலி நம்நெஞ்ச மலர்கள்

சிறுநெய்னர் பள்ளியிலே பெரிய சம்ஸுத்தீன் ஒலி
சீலமிகு அறவாளர் அப்துர்ரஹ்மான் ஒலி
நறுமணம் கமழ்கின்ற சின்ன சம்சுத்தீன் ஒலி
நாமிங்கு நடந்திடுவோம் நல்லோரின் தூய வழி

லெப்பப்பா தெருவினிலே அறிவுஞானச் சுரங்கம்
லாபம் நல்கும் காழிஅலாவுத்தீன் இல்லம்
வரகவி காஸிம் புலவர் ஒலி ஞான செல்வம்
வாரி வழங்கும் லெப்பப்பா ஒலி கொடை வள்ளல்

கோமான் தெரு யூஸுப்அப்பா ஒலி மீது பாசம்
கோசுமரை அப்பா ஒலி புகழ் எங்கும் வீசும்
பேர்மஹ்மூது மஜ்தூபு ஒலி நெய்னர் தெரு வாசம்
போற்றும் கீழ நெய்னர் தெரு கலீபா அப்பா நேசம்

தீவுத்தெரு சின்னமுத்து வாப்பா ஒலி மேதை
திறன் பெறவே ஈக்கி அப்பா ஒலி பார்வை தேவை
முத்துவாப்பா தைக்கா தெரு ஞானியரின் வாகை
முகர்ந்திடவே பெரிய முத்துவாப்பா ஒலி பாதை

பெரிய பள்ளி பக்கீஹ் விளக்கு சுலைமான் ஒலி நாமம்
மேலப் பள்ளி ஷெய்கு ஸலாஹுத்தீன் ஒலி அருள் சேரும்
பெரிய நெசவு தெரு துலுக் அஹமது அப்பா ஒலி தீபம்
சாயக்காரத் தெரு வில்மொன்ஞன் ஸாஹிபு ஒலியாகும்

காட்டு மகுதூம் பள்ளியிலே முத்து மகுதும் ஒலிகள்
காணும் எல். எப். ரோடு ஷெய்கு ஹுஸைன் பள்ளியில்
காரணராம் ஷெய்கு ஹுஸைன் சீதேவி ஒலிகள்
கெட்டியாகப் பற்றிக்கொண்டு நாமடைவோம் நலன்கள்

மஹ்ழரு

— மௌலவி மு. முஹம்மது ஹசன் ஆலிம் காதிரி —

ஆசிரியர், நற்சிந்தனை மாதஏடு, காயல்பட்டணம்.

காயல் மாநகரின் சிறப்புமிக்க மஹ்ழரு மாமன்றம் தென்னாட்டு தாஜ்மஹால் என மக்களால் பாராட்டப்படுகின்ற மகத்தான சின்னம். கம்பீரமான மனாரா ஞானச் சுடரொளி பரப்பும் அற்புத காட்சி.

மெய்நிலை கண்ட ஞானி மஹ்பூபு சுப்ஹானி, குத்புல் அக்தாப் கௌதுல் அஃழம் ஹஸரத் முஹ்யித்தீன் அப்துல்காதர் ஜீலானி (ரலி) அவர்களின் 'தரீகா'வைப் பின்பற்றிய முஸ்லிம்கள் கூடும் இடமாகவும் இஸ்லாமிய கல்வி பெறும் நிறுவனமாகவும் மஹ்ழரு விளங்கி வருகிறது.

ஹஸரத் சுலைமான் வலியுல்லா காலத்தில் இந்த காதிரிய்யா தரீகா காயல்பட்டணத்தில் வேரூன்றியது. இங்கிருந்துதான் இலங்கை மற்றும் கீழ்திசை நாடுகளில் பரவியது.

ஹஸரத் முஹ்யித்தீன் அப்துல்காதர் (ரலி) அவர்களின் வமிச வழியைச் சேர்ந்த பக்தாது வாசியான ஷெய்கு அஹமது ஜமாலுத்தீன் என்ற பேரறிஞர் இந்த தரீகாவின் வழிமுறைகளை கற்றுக் கொடுக்க காயல்பட்டணம் வந்தார்கள். இவர்களின் வருகை அறிந்து பல ஊர்களிலிருந்து முஸ்லிம் பக்தர்கள் வந்தார்கள். குத்பா பெரிய பள்ளியில் கூட்டம் கூடியது. சுலைமான் ஒலியுல்லா, கோட்டைப்பட்டணம் ராவுத்தர் சாகிப் ஒலியுல்லா, திருமங்கலம் மௌலா அபூபக்கர் வலியுல்லா ஆகிய மூன்று இறை நேசச் செல்வர்களுக்கும் காதிரிய்யா தரீகாவின் ஞான தீட்சையை இந்த அறிஞர் வழங்கினார்கள். இவர்கள்தான் எல்லா இடங்களுக்கும் சென்று காதிரிய்யா தரீகாவை பரவச் செய்தனர்.

ஹஸரத் முஹ்யித்தீன் அப்துல்காதர் (ரலி) அவர்களின் 15வது தலைமுறையில் தோன்றிய மேன்மைமிக்க செய்யிது அப்துல்லாஹில் காதிரிய்யில் பக்தாதி மௌலானா அவர்கள் காயல் பட்டணத்தில் மஹ்ழரு கட்ட விருப்பம் கொண்டு அம்பல மரைக்கார் தெருவில் ஒரு நிலத்தை வாங்கி ஹிஜ்ரி 1288 ஷவ்வால் பிறை 25ல் வக்பு செய்தார்கள். இதனை நிர்மாணிக்க அக்காலத்தில் ரூ. 32,000/- செலவு ஆகியது. இக்காலத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்தாலும் இம்மாதிரி கட்டுவதற்கு இயலாது. இதனைக் கட்டுவதற்கு முட்டையும், பதனீரும், சுண்ணாம்பும் கலந்து அரைத்து இது கட்டப்பட்டது.

இக்கட்டிடம் அடித்தளத்திலிருந்து 42 அடி உயரத்திற்கு ஒரே குப்பாவாக அமைந்துள்ளது. இதன் நீளமும் அகலமும் உயரத்தைப் போல் 42 அடியே. நீளம் அகலம் உயரம் ஒரே அளவாகக் கொண்ட இதன் உள் சுற்றளவு 126 அடி. ஓங்கி உயர்ந்து நிற்கும் நான்கு மினாராக்களும் இக் கட்டிடத்திற்கு பேரழகை அளிக்கின்றன. இக் கட்டிடத்தின் சுவரின் கனம் 4 அடி. இதற்கு 12 அடி அகலத்தில் மிக ஆழமாக உறுதியாக அடித்தளமிடப்பட்டு அதன் மீது எழுப்பப்பட்டுள்ள குப்பாவை தாங்கிக் கொள்ள எவ்விதத் தூண்களோ சட்டங்களோ விட்டங்களோ கிடையாது இங்கு எழுப்பப்படும் சிறு குரலும் பெரிதாக சில வினாடிகள் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.

இந்த குப்பாவைச் சுற்றி அலங்கார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சுவரைச் சுற்றி கௌதுல் அஃழம் முஹிய்யித்தின் அப்துல்காதர் ஜீலானி [றழி] அவர்கள் இயற்றிய அரபு கீதங்கள் அழ காகப் பொறிக்கப்பட்டுள்ளன.

மஹ்ழராவில் மிகச் சிறப்பான அரபிக் கல்லூரி, இயங்கி வருகிறது. இங்கு கற்றுத் தேர்ந்த வர்களுக்கு 'மஹ்ழரி' என்ற பட்டம் அளிக்கப்படுகிறது. இங்கு பயிலும் வெளியூர் மாணவர்களுக்கு இலவச கல்வி, உணவு தங்குமிடம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருக்குர்ஆனை மனனம் செய்ய தனிப் பிரிவும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. நுஸ்ரதுல் இஸ்லாம் என்ற பெயரால் அனாதை விடுதி அமைக்கப்பட்டு இஸ்லாமிய பிரச்சாரமும் சிறப்பாக நடைபெறுகிறது. இங்குள்ள நூலகத்தில் பல கலைகளையும் சேர்ந்து அபூர்வமான நூல்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. மிகவும் அபூர்வமான அரபி கையெழுத்து பிரதி நூல்களும் உள்ளன.

இங்கு ஆண்டு தோறும் ரபீஉல் அவ்வல் பிறை 12ல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ரபீஉல் ஆகிர் பிறை 11ல் கௌதுல் அஃழம் முஹிய்யித்தீன் அப்துல்காதர் (ரலி) அவர்களின் நினைவு நாள் மிகச் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. அன்று இங்கு நடைபெறும் மாபெரும் விருந்து வைபவத்தில் பல்வேறு ஊர்களைச் சார்ந்த பல ஆயிரம் பேர் பங்கேற்பர் - அனைவருக்கும் ஒரே நேரத்தில் இந்த விருந்து அளிக்கப் படுகிறது.

சிறப்பு வாய்ந்த மஹ்ழராவை வெளியூர் மற்றும் வெளி நாடுகளிலிருந்து வருகின்ற ஆயிர மாயிரம் யாத்ரீகர்கள் கண்டுகளித்துச் செல்கின்றனர்.

இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயன் அளிக்கும் ஞானச் சுடரொளி பரப்பும் மகத்தான மன்றம் மஹ்ழறாவை மிகச் சிறப்பான முறையில் நிர்வகிக்கும் நிர்வாகிகள் பாராட்டிற்குரியோ ராவர்.

ஜாவியா

அல்ஹாஜ், அல்ஹாபிழ் மௌலவி
S.M.M. அப்துல்காதிர் ஆலிம் ஃபாஸி (கலீபதுஷ் ஷாதுலி)
காயல்பட்டணம்.

காயல்பட்டணம் ஜாவியத்துல் பாஸிய்யா துஷ்ஷாதுலிய்யா ஸ்தாபனம் கண்ணியத்திற்குரிய பெரிய ஷெய்குனா என்று காயல்நகர மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட அல்வலிய்யுல் காமில் அல்லாமா ஷெய்கு முஹம்மது அபூபக்கர் மிஸ்கீன் சாகிபு அவர்களால் ஹிஜ்ரி 1285 (கி.பி. 1868)ம் ஆண்டு நிறுவப்பட்டது.

மேன்மைக்குரிய ஷெய்குனா அவர்கள் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹஸன் அலிய்யுஷ் ஷாதுலி நாயகம் அவர்களின் ஷாதுலிய்யா தரீகாவின் 21வது ஷெய்காகிய மகான் ஃபாஸி நாயகம் அவர்களிடத்தில் புனித மக்காவில் ஹரம்ஷரீபில் வைத்து கிலாபத் பெற்று சங்கைக்குரிய ஷாது லிய்யா தரீகாவை இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் பல பகுதிகளிலும் பரவச் செய்தார்கள்.

தரீகாவின் வணக்க வழிபாடுகளில் தனித்து ஈடுபட நம் நகரில் முதன் முதலாக ஏற்பட்ட அனைத்து ஷாதுலிய்யா இஃவான்களுக்கும் பொதுவான ஸ்தாபனம் ஜாவியாவே! இது துவக்கப் பட்டது முதல் இன்று வரை இறையருளால் காலை, மாலை மற்றும் ஜும்ஆவிற்கு பிறகும் வழீபா, திக்ரு மற்றும் அமல்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. பகிரங்கமாக ஜமாஅத்தில் கூடியிருந்து திக்ரு செய்யும் வழக்கம் இங்கிருந்துதான் ஆரம்பம் ஆனது.

மகான் பெரிய ஷெய்குனா அவர்கள் இஸ்லாமிய அறிவில் பாண்டித்தியம் பெற்று பல மார்க்க அறிஞர்களுக்கு ஆசிரியராக இருந்து சேவை செய்திருக்கிறார்கள். இந்த ஸ்தாபனம் துவங்கப்பட்டதிலிருந்து மத்ரஸாவும் தொடர்ந்து செயல்படுத்தி வந்தார்கள். அவர்கள் (இஃலாஸுடன்) மனத் தூய்மையுடன் உழைத்த காரணத்தால்தான் இங்கிருந்து பல அல்லா மாக்கள் மகான்கள் உருவாகி வருகிறார்கள். (அல்ஹம்துலில்லாஹ்), இந்த ஸ்தாபனம் தோன் றியது முதல் பல அனாச்சாரங்களை அகற்றி அரிய சேவை செய்து வருகிறது.

கந்தூரி, கல்யாணம், சுன்னத், புதுமனை புகுவிழா போன்ற நற்காரியங்களில் கொட்டு மேளம், வெடி, கொடி, பாட்டுபோன்ற அனாச்சார பழக்கவழக்கங்களை மாற்றி திக்று, பைத் போன்ற இஸ்லாமிய அடிப்படையில் நிகழ்ச்சிகளையவைகள் நடைபெற இந்நிறுவனம் மகத் தான சேவை செய்தது.

நள்ளிரவு திருமணங்கள் நடப்பதை மாற்றி காலையில் திருமணம் நடத்தும் வழக்கத்தை 1916ல் அமல் நடத்தியதும், 40 நாட்கள் திருமண விசேசங்கள் நடந்துவந்த வழக்கத்தை மாற்றி 1926ல் ஒரு வாரமாகவும் 1943ல் மூன்று நாட்களாகவும் 1969ல் ஒரு நாளாகவும் மாற்றி மாபெரும் சீர் திருத்தம் செய்தவர்கள் இந்த ஸ்தாபனத்தினரே. வீடுகளில் நடைபெற்ற திருமணங்களை பொது ஸ்தாபனமான ஜாவியாவில் நடத்தி முன்னுதாரணம் ஏற்படுத்தியவர்கள் இவர்களே.

மஜ்லிஸில் மகிழ்ச்சிக்குரிய சம்பவத்தில் கை தட்டும் வழக்கத்தை மாற்றி 'அல்லாஹு அக்பர்' என தக்பீர் முழக்கம் செய்யவும், மாலைக்கு பதில் ஆடை அணிவித்து கௌரவிக்கும் வழக்கம் ஏற்படுத்தியதும் இவர்களே! இச்சபையில் எந்த நிகழ்ச்சியிலும் புகைப்படம் வீடியோ எடுக்க அனுமதிப்பதில்லை.

கந்தூரி போன்ற பொது வைபவத்தில் ஓலை பெட்டியில் சோறு போடும் வழக்கத்தை 1938ல் ஆரம்பித்தவர்களும், திருமண விருந்துகளில் கார்டு முறைகளை கொண்டு வந்தவர்களும் இவர்களே!

மரணித்தப் பிறகும் நன்மை கிடைத்துக் கொண்டிருக்கக்கூடிய சதக்கதுன் ஜாரியா என்ற அடிப்படையில் சொத்துக்கள் வக்பு செய்யப்பட்டு மார்க்கப்பணி நடைபெற்று வருகிறது.

ரபீஉல் அவ்வல் பிறை 1 முதல் 12 வரையும் மற்றும் ஒவ்வொரு வெள்ளி திங்களிலும் ஹரீரி மௌலிது, புர்தாஷரீப் நிரந்தரமாக நடந்து வருகிறது.

இந்த ஸ்தாபனத்தால் அரபிக் கல்லூரி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இக் கல்லூரியில் படித்து முடித்து தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு 'ஃபாஸி' என பட்டம் வழங்கப்படுகிறது.

திருக்குர்ஆனை மனனம் செய்வதற்கு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இம் மத்ரஸாவில் ஓதும் உள்ளூர் மாணவர்களுக்கு 1932 முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தராவீஹ் தொழுக வைக்கும் ஹாபிழ்களுக்கு 1954 முதல் கணிசமான தொகை உயர்த்திக் கொடுத்து முன் மாதிரி ஏற்படுத்தியவர்கள் இவர்களே!

அரபுத் தமிழில் முதல் குர்ஆன் தர்ஜுமா வெளியிட்டதும், தமிழில் நூற்றாண்டு மலர் நம் நகரில் முதலில் வெளியிட்டதும் இவர்களே! தரீகாவின் அமல்கள் நடப்பதற்காக அவ்ராது தொகுப்பும் இவர்களால் வெளியிடப்பட்டது.

தரீகா தோன்றியது முதல் தரீகாவின் செய்குமார்களை புனித மக்காவிலிருந்து வரவழைத்து மக்களுக்கு ஞானவழி புகட்ட பலமுறை இந்த ஸ்தாபனம் அழைத்து வந்துள்ளது.

இந்த ஸ்தாபனத்தில் சேவை புரிந்து காலம் சென்ற உலமாக்களை கௌரவித்து உதவித் தொகை அளிக்கப்பட்டது.

காயல்பட்டணத்தில் பெண்கள் புர்கா அணியும் வழக்கத்தை உருவாக்கியதும், பெண்கள் அலுகுத்து போடும் காதுகுத்தும் வழக்கத்தை மாற்றி சீர்திருத்தத்தை கொண்டு வந்ததும் இச்சபையினரே! 1955ல் வக்பு போர்டு தணிக்கையில் முதலில் அங்கீகாரமும் பாராட்டும் கிடைத்தது.

புனித ஹஜ்ஜுக்கு செல்பவர்களை வழியனுப்பவும் ஹாஜிகளை வரவேற்கவும் ஜாவியாவில் தான் முதன் முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

காயல்பட்டணம் மருத்துவ அறக் கட்டளையும் மருத்துவ மனையும் உருவாக இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் ஆரம்பம் முதல் அரும்பாடு பட்டதை அனைவரும் அறிவர்.

மனிதன் வாழ்வில் மட்டுமல்ல மரணத்திலும் கண்ணியமிக்கவனாக அடக்கப்பட வேண்டும் என்பதற்காக அடக்க நிகழ்ச்சியில் வீண் பேச்சு பேசுவதை தவிர்க்க குர்ஆன் ஓதச் செய்ததும், மைய வாடியில் ரொட்டி, பழம், அரிசி, உப்பு (ஒடுக்கு) கொண்டு செல்லும் வழக்கத்தை தடுத்து நிறுத்தியவர்களும் இச் சபையினரே.

காயல் நகரில் அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே நேரத்தில் பாங்கு சொல்லப்பட வேண்டும் என்பதற்காக இளைஞர் ஐக்கிய முன்னணி எடுத்துக் கொண்ட முயற்சிக்கு முதலில் ஒப்புதல் அளித்து அவர்களுடன் ஒத்துழைத்து 1986ல் அவ்காத்து ஸலாத் வெளியிட உதவியது.

இன்னும் பல சீர்திருத்தங்களுக்கு இச்சபை பேரார்வம் காட்டி வருகிறது.

அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டும், எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வையே முன்னிலையாகக் கொள்ள வேண்டும். அவனது திருவுளச் சித்தத்திற்கு பூரணமாக இணங்கி நடக்க வேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் அவனது பக்கமே திரும்பிவிட வேண்டும் என்ற கொள்கை உடைய ஷாதுலிய்யா தரீகாவினர் எல்லா வைபவ முடிவிலும் லாஇலாஹா இல்லல்லாஹ் என்ற கலிமாவை (ஜலாலா) மூன்று முறை நீட்டி ஓதி இறுதியில் முஹம்மதுற் றசூலுல்லாஹ் என்று முடிப்பது வழக்கம்.

லா இலாஹ இல்லல்லாஹ் என்று
நலமாம் கருத்தாக நவின்ற பேர்கள்
பரிவாய் மௌத்தானால் சுவர்க்கப்பதி
துய்தாய் புகுந்தோரென்றிரசூல் சொன்னார் — **(ஸாம் ஒலி)**

லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ரசூலுல்லாஹ்.

புகாரிஷ் ஷரீ:ப் ஸபை

மௌலவி H.A. அஹமது அப்துல் காதர் ஆலிம் மஹ்ழரி

பேராசிரியர்: **அல்மத்ரஸதுல் ஹாமிதிய்யா மார்க்க கல்வி நிறுவனம்**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெயர் கூறி அருள் நாடி.

உலக வரலாற்றில் எழுச்சியையும், உன்னத புரட்சியையும் விவேகத்தையும், நல்லுணர்வையும் பெரிதாக ஏற்படுத்தி மிகப் பெரிய மாற்றத்தைக் கண்ட வள்ளல் எங்கள் கோமான் முஹம்மது முஸ்தஃபா அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பொன் மொழிகளையும், செய்து காட்டிய, பிறர் செய்ய அங்கீகரித்த எண்ணற்ற நிகழ்ச்சிகளையும், உலகமாந்தர் யாவருக்கும் பயன்படத்தக்க அளவில் பல்வேறு வடிவில் மாபெருப் ஆற்றல் மிக்கோரால் கோர்வை செய்யப்பட்ட கிரந்தங்கள் அனந்தம். அவைகளில் அல்ஜாமிவுஸ் ஸஹீஹுல் புகாரி, ஸுனனு முஸ்லிம், ஸுனனு அபூதாவூது, ஸுனனு நஸாயி, அல்ஜாமிவுத்திர்மிதி, முஅத்தா, தப்ரானி போன்ற கிரந்தங்கள் சிறப்பான இடத்தை வகித்தாலும் யாவற்றிலும் உன்னதமாய் விளங்குவது புனித அல்ஜாமிவுஸ் ஸஹீஹுல் புகாரிஷ் ஷரீஃப் கிரந்தமாகும்.

திருமறை விளக்கம், சட்ட நுணுக்கம், வரலாற்று நிகழ்ச்சி, போதனை, அறிவுரை என பல்கலைகளையும் 7275 ஹதீதுகளுக்குள் அடக்கி அகில உலக பொதுமறை அல்லாஹ் அருளிய அல்குர்ஆனுக்கு அடுத்தாண்மையாய் திகழும் இப் புனித கிரந்தமதை ரஷ்யாவின் வளம் கொழிக்கும் புகாராவில் ஹிஜ்ரி 194 ஷவ்வால் திங்கள் 13-ம் நாளுதித்த பேரறிஞர் இமாம் முஹம்மதுப்னு இஸ்மாயீலுல் புகாரி (ரழி) அவர்கள் தமது 16 ஆண்டு கால பலத்த முயற்சியின் காரணமாய் யாத்தளித்தார்கள்.

சாலை வசதி, வாகன போக்குவரத்தற்ற அந்த காலையில் பல நூறு மைல்கள் கால்நடையாக நடந்து காடு, மலை, கலணிகளைக் கடந்து வள்ளல் எம்மான் அஹ்மது முஜ்தபா நபியின் ஹதீதுகளை ஆர்வத்துடன் கோர்வை செய்த இமாமுல் முஹத்திதீன் அவர்கள் பல நூறு ஆசிரியர்களிடம் கல்வி பயின்றுள்ளார்கள். நேர்மையும் நியாயமும், நீதியும் பொறுமையும், நினைவுக் கூர்மையும் மிக்கோராய் திகழ்ந்த இமாம், இக் கிரந்தத்தை யாத்தளிக்க அடைந்த இன்னல்களும் சோதனைகளும் கடுமையானவை.

தான் யாத்தளிக்கும் இப்புனித கிரந்தம் அப்பழுக்கற்றதாய், அணுவளவு சந்தேகத்திற்குக் கூட இடமில்லாததாய் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டதாய்த் திகழ வேண்டுமென உறுதியும் பேணுதலும் கொண்டிருந்த இமாம் புகாரி (ரழி) அவர்கள் ஒரு சமயம் ஒரு ஹதீதைப் பெற பல நூறு மைல்கள் கடந்து, தான் தேடிவந்த நபிமொழி அறிவிப்பாளரைச் சந்தித்தார்கள். அவ்வேளையில் அறிவிப்பாளரோ கையில் உணவற்ற வெற்றுப் பையை வைத்துக் கொண்டு அதில் தீவனம் இருப்பதுபோல் காட்டி தனது குதிரையை ஏமாற்றி பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். இதனைக்கண்ட இமாம் புகாரி [ரழி] அவர்கள் ஒரு வாயில்லா பிராணியை ஆசை காட்டி ஏமாற்றும் இவரிடமா வள்ளல் கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீதுகளைப் பெறுவது? என எண்ணி ஹதீதைப் பெறாமலேயே திரும்பி வந்தது அவர்களதும் அவர்களது கிரந்தத்தினதும் தூய்மையைத் தெளிவு படுத்துகிறது. இத்தகைய மேன்மையும் கீர்த்தியுமிக்க புனித புகாரிஷ் ஷரீபை நபிகள் திலகமே ஏற்று அது எனது கிரந்தம் அதனை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள் என தனது கனவில் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக பேராசிரியர் ஹழ்ரத் அபூஸைதில் மருஸி [ரஹ்] அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இன்று இப்புனித கிரந்தத்திற்கென பல மஜ்லிஸுகள் தோன்றி அதில் கூறப்பட்டுள்ள நபி மொழிகளை போதிக்கும் பெரும் சேவையை மேற்கொண்டிருப்பதை காண முடிகிறது. இத்தகைய மஜ்லிஸுகள் இலங்கைத் தீவில் சிறப்புற நடைபெறுவதைக் கண்ட நமதூர் முன்னோர்களான பெருமக்கள் இதுபோன்றதொரு மஜ்லிஸை நமதூரிலும் நிறுவ வேண்டுமென நினைத்ததன் விளைவே ''மா நபியின் மாமன்றம் புனித மஜ்லிஸுல் புகாரிஷ் ஷரீஃப் ஸபை'' தோன்ற காரணமாயிற்று.

முஹைந்த மாமேதைகளான நூ. கு. முஹம்மது இப்றாஹீம் கண்டி ஆலிம், அல்லாமா நஹ்வி மு. க. செய்யிது அஹ்மது ஆலிம், அல்ஹாஜ் செ. யி. நூகு லெப்பை ஆலிம் [வேலூர் ஆலிம்] அல்ஹாஜ் அ. வு. நூகு தம்பி லெப்பை ஆலிம், க. மு. க. செய்யிது அஹ்மது லெப்பை ஆலிம், முத்து தைக்கா முஹம்மது இஸ்மாயீல் ஆலிம் போன்ற சிலர்களால் ஹிஜ்ரி 1348 [கி. பி. 1926]ம் ஆண்டு கல்விக்கடல் ஹழ்ரத் பெரிய முத்து வாப்பா ஒலி [ரழி] அவர்களது தர்ஹாவில் துவக்கப்பட்ட இம் மஜ்லிஸ் தன்னலமற்ற சேவைகள் பல புரிந்து மலையொளிச் சுடராய் ஒளி வீசி ஓங்கு புகழ் பெற்றது.

கி. பி. 1926-ல் காயல்பட்டினத்தின் ஒரு வட்டாரத்திற்குட்பட்டதாய் துவங்கப்பட்ட இம் மஜ்லிஸ் காலப் போக்கில் ஊரளவிலும், தாலுகா, மாவட்டம், மாநிலம் என நாட்டளவிலும் இதன் சிறப்பும் மகத்துவமும் பல்கிப் பெருக மக்கள் பெருந்திரளாக இதன் வைபவங்களில் கலந்து பயன் பெறத் துவங்கியபோது இம் மஜ்லிஸ் நடைபெற்று வந்த ஹழ்ரத் பெரிய முத்து வாப்பா ஒலி நாயகத்தின் தர்ஹா இட நெருக்கடிக்கு உள்ளாயிற்று, எனவே இதற்கென ஒரு மஜ்லிஸை அமைத்திட வேண்டி அன்றைய பெருமக்கள் முழு மனதோடு முயற்சித்ததின் பலனாய் கி. பி. 1942-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் இம்மா மஜ்லிஸ் உருப் பெற்றது. ஒவ்வொரு வருடமும் 'மகத்துவம்' என அரபு மொழியில் வர்ணிக்கப்படும் ரஜப் மாதத்தின் துவக்க நாள்முதல் அம்மாத இறுதிவரை ஒவ்வொரு நாளும் சுப்ஹு தொடக்கம் காலை ஒன்பது மணி வரை புனித புகாரி ஷரீஃபை ஓதி ஒன்பது மணிமுதல் 10-30 வரை உலமாப் பெருமக்களால் அன்று ஓதப்பட்ட ஹதீதுகளுக்கு விளக்கம் தரப்பட்டு பெரும் சேவை செய்து வருகிறது. இம் மஜ்லிஸ் அம்மாதத்தின் இறுதி நாளன்று மக்காவின் முஃப்தியாகவும் பல்கலை வல்லுனராகவும் திகழ்ந்த அல் இமாம் செய்யிது அஹ்மது ஸைனிதஹ்லானி [ரஹ்] அவர்களால் தொகுக்கப்பட்ட கத்முல் புகாரிஷ் ஷரீஃபெனும் அபூர்வ துஆ கூட்டுப் பிரார்த்தனையை ஆலிம் பெருந்தகை ஒருவரால் ஓதி அதனைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறும் போது நெஞ்சமெல்லாம் நெக்குருகி கண்கள் கரை உடைந்து மன, மொழி, மெய்யினை அல்லாஹ்விடம் சமர்ப்பித்து கூடியிருக்கும் ஆயிரமாயிர மக்கள் ஆமீன் ஆமீன் ஆமீன் என பிரார்த்திக்கும் காட்சி உண்மையிலேயே எஃகு இதயத்தையும் உருக்கிடும் நிகழ்ச்சி.

ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தில் சிறிதும் மாசு மருவின்றி சீரோடும் சிறப்போடும் கடந்த அறுபத்திரண்டு ஆண்டு காலமாய் நடைபெற்று வரும் இப்புனித மஜ்லிஸில் 20 ஆண்டு காலமாய் இயங்கும் அல்மத்ரஸதுல் ஹாமிதிய்யா இளைய தலைமுறையினருக்கு மார்க்க ஞானத்தை போதித்து ஹாஃபிழ்களை உருவாக்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இம் மா மஜ்லிஸை நிர்வகிக்கும் நிர்வாகிகளும் பொறுப்பாளர்களும் இறையருளையும் நபியன்பையும் மட்டுமே நாடியவர்களாய் தன்னலங்கருதாது செயலாற்றி வருவது போற்றுதலுக்குரியதாகும்.

இறைவேதத்தையும், மறை போதித்த நபி போதனையையும், மார்க்க சட்ட விளக்கங்களையும் போதித்து ஒரு மாபெரும் அறச்சாலையாக திகழும் ''மா நபியின் மாமன்றம் புனித மஜ்லிஸுல் புகாரிஷ் ஷரீப் ஸபை'' நீடூழி நின்று பண்டுெடுங் காலம் பாதுகாக்கப்பட்ட நம் மரபு வழியில் பிசகின்றி செயலாற்றி பயன் நல்கிட வல்ல அல்லாஹ்வை இருகரமேந்தி பிரார்த்திக்கிறேன்

அல்ஹம்துலில்லாஹ்.

தைக்கா

ஆலிம் கவிஞர் காயல் S. K. M. சதக்கத்துல்லாஹ்
(ஸாம் ஒலி ஊழியன்)

பாமலர்த் தேன் உண்ணும்
இப் பூ நக்கியை
கா மலர் வதனன்
எனது நேசன்
காயல் மஹபூப்
அழைத்தான்- விளித்தான்!
'' பா - பூ - நக்கியே
பனிப் பூந் தேனும்
பாகும்—கரும்பும்
கண்டே நாணும்
இனிக்கும் ''அரபியில்''
இன்னல் அகற்றும்
கன்னல் மொழியார்
முன்னன் தூதர்
முஹம்மது நபி மேல்
''அஹ்மதுல்லா ஹல்வலி'' என்ற
கவிதை தந்த கண்யர்
தைக்கா சாஹிபு மீது—
மன்னவர் கட்டிக் காத்த
மாதவச் சாலை தைக்காமீது
முன்னவர்—பின்னவர்
யாவரும் ஏற்றிப் போற்றும்
ஏந்தலர்-தந்தையர்—
சாந்தர்—வேந்தர் உமறொலிமீது
''கவிதை இயற்றுக!'' என்றான்!
பேரூராட்சி—மாட்சி மலரில்
''மின்னும் உங்கள் கவிதை என்றான்''!
நான் உண்ட ''வீ'' யின் தேனை
நீங்களும் உண்டு ரசிப்பீர்!
தேத்திரானந்த சுகமும்
இக - அக - நலமும் பெறுவீர்!
மா மலை மீது மாடுகள் மோதும்
சீறிப் பாயும் கோர அலை மேல்
சிறு மதி படைத்த சிறுத்தை பாயும்
இந்தக் காலத்தில்—

மலையாம்— அலையாம்
மாதவர் பற்றி
எழுதத் துணிந்தேன்!
எழுதிடல் எளிதோ?
அவர்களின் ஆசி
யாண்டும் எனக்கு உண்டு!
துள்ளும் அலைவாய்
திகழும் காயல்
தைக்கா—
இன மொழி வெறி எனும்
இகழ்ச் சியைக் கொல்லும்!
கோடி கோடி நாவினாலும்
பாடி, முடியா அத்திருப் புகழை
ஜாதி மதத்தின் பேதம் மறந்து
சாந்தர் சாகிபின்
செழு நலச் சமாதியை
கண்டே களிப் பேருவகை கொள்ளும்
கமலங்கள் எல்லாம்
எண்ணி லடங்கா!
வெள்ளி திங்கள்
உள்ளும், புறமும் மக்கள்
வெள்ளம் பேரருட் காட்சி!
திக் ரெனும் தியானம்
தித் திக் கும் நபி இசை
திக் கெலாம் கேட்க
அங்கே நிகழும்!
நாட்டம் தேட்டம்
உளத்தில் ஏந்தி
வந்த கூட்டம்
நிறை வேறிற்று
என்றே கூறும்
இனிப்பு மொழி தான்
அதி மதுர மாகும்!
நோயும், துயரும்
சாயும்! மாயும்!

இத் திருமாண்புகள் கண்ட
கவிஞர் கூறினர்:-

"சாகி பெண் றேற்று வோர்க்கு
தனியவன் கருணை யுண்டாம்

சாகி பெண் றேற்று வோர்க்கு
சஞ்சலம் பிணிகள் நீங்கும்

சாகி பெண் றேற்று வோர்க்கு
சகலமும் பணியும் தைக்கா

சாகி பெண் றேற்று வோர்க்கு
சா.ர பிடம் சொர்க்கம் தானே!"

மின் மினி நடுவில் விண் மணி போல
மிளிரும் உமறொலி மாண்பிசை பகர்வேன்
தண்மணி அல்லஃபல் அலிஃ'பு' எனும் -பா-
தரணிக்குத் தந்தே வான்புகழ்கொண்டவர்
யாப்பும் அணியும், மணியும் ஒளிரும்
எழிலார் கவிதை கவின் மிகு மலர் கனித்
தோப்பு என்றே நிபுணர்கள் ஏற்றுவர்!
காப்பு நல்கும் கவிஇது "மிஸ்ரின்"
பல்கலைக் கழகத்தில் பாங்காய் இடம்பெறும்
நல்வழி கூறும் நபிபுகழ் சாறும்
வல்லொளி ஞானக் குன்றிவர் தென்றல்
வழங்கும் சுகமே தந்தவர் அகிலும்
சந்தனம் சுந்தர மலரின் மணமும்
சிந்தும் "வித்ரிய்யா" என்னும் தேன்பா
தந்தநம் "சதக்கொலி" கால்வழிப் பேரர்!
சந்தம் திகழும் தமிழ்ப் பா சொன்னவர்!
வாடிடா மலரால் மாலைகள் தொகுத்து
வான் ஒளி வீசும் மாணிக்கப் பதித்து
நாடியே தேடியே வருவோர்க் கெல்லாம்
கோடியாய் நலம் தரு திழல்தரு நபிமிசை
ஆயிரம் மாலைகள் பாயிரப் பாகென
ஈந்த நற் "சாமொலி" மரபினர் இவர்களின்
ஆயிரம் ஆயிரம் மாண் சொல நாவுகள்
போதுமா? வேதத்தின் நாதமே நவின்றவர்!
ஞானமா மலைமிசை மின்னிடும் தீபமாம்
வானமாப் புகழ் கொண்ட கோன்அவர்
முஹ்யித்தீன்
தானமா சோனமா மழையிலே நனைந்தவர்!
திக்கோர் போற்றும் தைக்கா சாகிப்
தக்க மாணவர் அருணா சலமாம்
மிக்க இசைசேர் பிள்ளை அவரை
கக்கோன் அழைத்துப் "பாடுக" என்றார்!

இசை சார் நபி மிசை இசை மழை பொழிந்
தது!
வசை தவிர் நல்லிசை! நீங்களும் ரசியுங்கள்!

"வல்லோன் அருள் கலிமா முஹம்மது
ஸல்லாம் சொன்ன சொல்லை நீ சொல்வாய்!
ஆதம் ஹவ்வாவுடன் இப்பூவினில்
என்ன பயன் கண்டார் நீ சொல்வாய்!
அல்லா ஹும்ம ஸல்லி அலாமுஹம்மத்
அல்லா ஹும்ம ஸல்லி அலைஹி வஸல்லிம்!"

"அப்பா அவர்கள் இத்திருப் பாவைக்-கேட்டு
மகிழ்ந்து ஆசிபுரிந்தார் தப்பில்லாத தமிழ்க்கவி
நீயே—நாவு இரண்டு பதியிலும் வேகா"
என்றே வாழ்த்தி இதமலர் சொரிந்தனர்.

நிறை பிறை துல் கஃதா வில் தூங்க
மறை நிறை நறை 'உமர்' நினைவு விழாவாம்
நிறை நிலா ஸஃபரில் மிக்கோர் தைக்கா
வரை சுமல் சாகிபு ஞாபகத் தினமாம்


பேரூராட்சி மன்றத் தலைவர்
பேதங்கள் போக்கிப் பொதுப்பணி ஆற்றும்
சீரார் உளத்தான் ஹாஜி V. M. S. லெப்பை
சிறந்த தலைமையில் இயங்கும் மன்றம்

யாண்டும் வாழ்க! ஏற்றம் ஆள்க!
தோண்டும் எளியார் தொல்லைகள் மாள்க
வாழ்க மன்ற உறுப்பினர் தொண்டர்!

நம்பேர் ஊர் ஆட்சி தரும் இம்மலர்
மதவெறி அகற்றி மதி நெறி ஊட்டும்
இதப்பணி புரிய ஏகா அருள்வாய்!

★

பூ நக்கி	—	வண்டு
கா	—	பூங்கா
வீ	—	மலர்
இசை	—	புகழ்
தரு	—	மரம்
மாண்	—	சிறப்பு
சோன	—	பெரும் மழை



மத ஒற்றுமைக்கு இதோ மகத்தான வரலாற்று உண்மை

திருச்செந்தூர்

திருமுருகன் கோயிலுடன் காயல்பட்டணத்தின் தொடர்புகள்

S. அருளானந்தம் நாடார் ஓடக்கரை, காயல்பட்டணம்

தமிழ் நாட்டில் **திரு முருகன்** சிறப்பாகக் குடிகொண்டுள்ள இடங்கள் ஆறு என்பர். மனித உடலிலுள்ள ஆறு ஆதாரங்களையே ஆறு திருப்பதிகளாக உருவகித்துள்ளனர் என்பர் யோகிகள். அந்த அறுபடை வீடுகளில் ஒன்று திருச்செந்தில் முருகன் குடிகொண்டுள்ள **திருச்செந்தூர்.** இக்கோயில் ஒரே காலத்தில் கட்டப்பட்டதல்ல. பல நூற்றாண்டுகளாக அது வளர்ச்சி பெற்று வந்துள்ளது,

இக்கோயிலுக்கும் காயல்பட்டணத்திற்கும் நெருக்கமான பாசத் தொடர்புகள் உண்டு என்பது வரலாற்று உண்மையாகும்.

விஜயநகர மன்னர்களின் நேரடி ஆட்சி தென் தமிழ் நாட்டில் சுமார் 100 ஆண்டுகள் நடந்தது. அதற்குப் பிறகு அம்மன்னர்களின் பிரதிநிதியாக ராஜபரிபாலனம் செய்து வந்த **நாயக்கர்கள்** கி, பி. 1529க்குப்பிறகு தாங்களே சுதந்திரமாக ஆட்சி புரிய முற்பட்டனர். இதனால் கி. பி. 1529 முதல் 1736 வரை தென் பாண்டி நாடு நாயக்க மன்னர்களின் நிர்வாகத்திலேயே இருந்து வந்தது.

போர்ச்சுக்கீஸியர்கள் வியாபார நோக்கத்திற்காக தமிழ் நாட்டின் கடற்கரை நெடுகிலும் பல கொத்தளங்களை ஏற்படுத்தினர். அவர்களைத் தொடர்ந்து **டச்சுக்காரர்களும்** (ஹாலந்து) வியாபார நிமித்தம் தமிழகம் வந்தனர். வியாபார போட்டி ஒரு பக்கமிருந்தாலும் மதப்பிரச்சாரத்திலும் இரு நாட்டவருக்கிடையிலும் போட்டியிருந்தது. ஐரோப்பிய இனத்தவர்களான அந்த இரு நாட்டினருமே கிறிஸ்தவர்களே என்ற போதிலும் போர்ச்சுகீஸியர்கள் கத்தோலிக்க பிரிவைச் சேர்ந்தவர்கள், டச்சுக்காரர்கள் புராட்டஸ்டன்ட் பிரிவைச் சார்ந்தவர்கள்.

கி. பி. 1645ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் **காயல்பட்டணத்தில்** வந்து தங்கி வியாபார கிட்டங்கியையும் அமைத்திருந்தனர். போர்ச்சுகீஸியரின் தூண்டுதலினால் **திருமலை நாயக்கர்** என்ற மன்னர் டச்சுக்காரர்களை காயல்பட்டணத்திலிருந்து வெளியேற்றினார். இதனால் கி. பி. 1648ம் ஆண்டு ஜுன் மாதம் டச்சுக்காரர்கள் இலங்கைக்கு ஓடிவிட்டனர்.

இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் கி. பி. 1649 பிப்ரவரியில் 436 டச்சுக்காரர்கள் 180 சிங்களவரோடு 6ம் தேதி மணப்பாட்டின் எதிரில் வந்தனர். அங்கிருந்து 8ம் தேதி புறப்பட்டு வீரபாண்டியன்பட்டணத்திற்கும் திருச்செந்தூருக்கும் இடையே இறங்கினர். 22ம் தேதி நாயக்க மன்னர் சார்பாக காயல்பட்டணத்து பிரமுகர் வந்து இக்கோயிலை விட்டு காலிசெய்ய இக்கோஷ்டியினரை வேண்டினார். அவர்கள் மறுக்கவே ஊரிலுள்ள ஜனங்களும் நாயக்கர் பட்டாளமும் 4 யானை, 60 குதிரை, 500 ஆட்களோடு இக்கோஷ்டியினரை எதிர்த்து 25ம் தேதி சண்டையிட்டனர். இதில் நாயக்கர் பட்டாளத்தில் 300 பேர் இறந்தனர்.

மார்ச் 1ல் நாயக்கர் நட்ட ஈடு தந்தால் கோயிலை ஒரு பங்கமுமின்றி திருப்பிக் கொடுப்பதாக எழுதினர். டச்சு கவர்னர் புறப்படும் போது மூலவிக்கிரகம் உட்பட கோயிலிலுள்ள விக்கிரகங்கள் எல்லாவற்றையும் தமக்கு சேரவேண்டிய பணத்திற்கு பணயமாக தம்முடன் கப்பலில் எடுத்துச் சென்றார். இதனால் 1649ம் ஆண்டிலிலுருந்து 1651ம் ஆண்டு வரை இக்கோயிலில் நாள் வழிபாடும் திருவிழாக்களும் நடைபெறவில்லை.

கி. பி. 1650 பிப்ரவரியில் வடமலையப்ப பிள்ளையன் டச்சுக்காரர்களிடமிருந்து இந்த விக்ரகங்களை திரும்பப் பெற காயல்பட்டணத்து நான்கு பிரமுகர்களை இலங்கையிலுள்ள **காலி** என்னும் ஊருக்கு அனுப்ப காயல்பட்டண அதிகாரியை வேண்டினார். அந்த முயற்சியால் கி. பி. 1651 ஜனவரி கடைசியில் இந்த விக்கிரகங்களை டச்சுக்காரர்கள் காயல்பட்டணத்திற்கு அனுப்பினர். அவைகள் திருச்செந்தூரில் சேர்ப்பிக்கப்பட்டபின் 1653ல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இக் கோயிலில் கம்பீரமாக காட்சியளிக்கும் **மேலக் கோபுரம்** நாயக்க மன்னர்கள் காலத்தில் தான் கட்டப்பட்டது. ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு முன் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த **தேசீக மூர்த்தி சுவாமிகள்** என்னும் ஒடுக்கத்தம்பிரான் கனவில் திருச்செந்தூர் முருகன் தோன்றி தம் கோயில் திருப்பணிக்காக அழைத்தார். அவர் கோயில் அருகிலுள்ள திருவாடுதுறை திருப்பணி மடத்தில் தங்கி கோபுரம் கட்டினார்.

அவர் கோபுரம் கட்டிய காலத்தில் சில அற்புதங்கள் நடந்தன. கோபுரம் கட்டுவதில் ஈடுபடுத்திய பணியாளர்களுக்கு கூலி கொடுக்க கையில் காசில்லாமல் திண்டாடினார். மாலையில் இலை விபூதியையே கூலியாகக் கொடுத்து தூண்டுகை விநாயகர் கோயிலைத் தாண்டிப் போனதும் இலையினை திறந்து பார்க்குமாறு கூறினார். அவர்களும் அவ்வாறே திறந்து பார்க்கும் போது தங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் இலை விபூதியின் உள்ளே இருக்கக் கண்டனர்.

கோபுரத்தின் ஆறாம் நிலை வந்த போது இந்த அற்புதம் நின்று விட்டது. சுவாமிகள் மிக வருந்தினார். முருகன் கனவில் தோன்றி **காயல்பட்டணத்தில்** வாழும் **சீதக்காதி** என்னும் வள்ளலிடம் செல்லுமாறு பணித்தார். **வள்ளல் சீதக்காதி** ஒரு மூடை உப்பினை நன்கொடையாக அளித்தார். மறுநாள் காலையில் சுவாமிகள் மூடையை திறந்த போது உள்ளே தங்கக் காசுகள் இருப்பதை கண்டார். கோபுரம் கட்டி முடித்த பின் தண்பொருநைச் கரையிலுள்ள காந்தீசுரத்தில் தங்க நேர்ந்தது. ஆயினும் குடமுழுக்கு நிகழ்ந்த காலத்தில் சுவாமிகள் மேலக் கோபுர வாயில் வழியாக நுழைந்து சென்றதை மக்கள் கண்டனர்..

ஆதாரம்:
- ○ பேராசிரியர் டாக்டர் **ந. கல்யாணசுந்தரம்** M. A. B.T., Ph. D. அவர்களின் டாக்டர் பட்டத்திற்கான ஆய்வு நூல் 'திருச்செந்தூர் முருகன் கோயில் வரலாறு'
- ○ திருமிகு **க. சு. நீலகண்ட சாஸ்திரி** அவர்களின் கலைமகள் சட்டுரைகள்
- ○ ஜனாப் A. K. ரிபாயி B. A., Ex. M. P. அவர்களின் 'தமிழகத்தில் இஸ்லாமிய வரலாறு'

மத ஒற்றுமைக்கும் அனைத்து சமய சகிப்புத்தன்மைக்கும் இந்தியத் திருநாட்டில் ஆயிரமாயிரம் வரலாறுகள் உண்டு. இந்துக் கோயில்களுக்கு முஸ்லிம் மன்னர்கள் மான்யம் அளித்ததும் பள்ளி வாயில்களுக்கு இந்து மன்னர்கள் மான்யம் வழங்கியதும் சரித்திர பூர்வ உண்மைகள். வரலாறுகளை மறைத்தும் திரித்தும் வகுப்பு வெறியை தூண்டும் வகையிலும் எழுதுவதினாலும் பேசுவதாலும்தான் மதப்பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இறைவனின் அருளுக்காக அவரவர் மார்க்கம் காட்டும் வழியில் உண்மையாகவே நடந்தால் அனைவரும் சகோதரர்கள் என்ற உண்மையின் வெளிப்பாடே தோன்றும். இந்த சகோதரத்வத்திற்கு அனைவரும் பாடுபடுவோம்.

★

காயல்பட்டணத்தில்

இந்துக் கோயில்களின் வரலாற்றுச் சிறப்புக்கள்

K. **மருதராஜ்ரவி** M.A., காயல்பட்டணம்.

அழகிய மணவாளப் பெருமாள் திருக்கோயில் :

கிறிஸ்து பிறப்பிற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே வைணவ சமயத்தவர்களால் அழகிய மணவாளப்பெருமாள் திருக்கோயில் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத் திருக்கோயில் கிழக்கு பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது. இத் திருக்கோயில் அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, நவநீதக்கிருஷ்ணன், கருடாழ்வார் போன்ற தெய்வங்கள் குடிக் கொண்டுள்ளன. இங்கு, இரண்டு தெப்பக்குளங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இத் திருக்கோவிலுக்கு தென்பகுதியில் நந்தவனம் ஒரு ஏக்கரில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதில் நந்தவனக் கிணறு ஒன்று உண்டு. இக் கிணத்திலுள்ள தீர்த்தம் புண்ணிய தீர்த்தமாக பல ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அதே போல் கோயிலுக்கு வடதிசையில் ஒரு சத்திரம் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகின்றது, இங்கு தினசரி பூசை காலம் முடிந்ததும் சத்திரத்தில் அன்னதானம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இக் கோயிலில் உருவச் சிலைகள் கருங்கற்களால் செதுக்கப்பட்டவையே. கோயில்களில் கல்வெட்டுக்களும் தொல் பொருள் ஆராய்ச்சிக்குட்பட்ட புராதனச் சின்னங்களும் உள்ளன. கற்களால் ஆகிய சிற்ப வேலைப்பாடுகள் கண்ணைப் பறிக்கின்றன. இவை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்ததாக தெரிய வருகின்றது. இந்த கோவிலில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான செம்பு விக்கிரகங்கள் உண்டு. அனைத்தும் பாதுகாப்பை முன்னிட்டு திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது.

கோயில்களில் தளம் புதைத்து வைத்திருப்பதாக கல்வெட்டுக்களில் தெரிகின்றது. மேற்படி சிற்பத்தில் முக்கியமாக புல் மேய்ந்து கொண்டிருக்கும் மானானது புல்லையும் மேய்ந்து கொண்டு கடவுளையும் தரிசிக்கும் இருமுகமாக இங்கு காட்சியளிக்கின்றது. திருமலை நாயக்கர் காலத்தில் புகழ்பெற்ற ஓவியங்களும், சிற்பங்களும் இங்கும் புகழ்பெற்று திகழ்கின்றன. இவை அழியாப் புகழ்பெற்று இன்றும் விளங்குகின்றன. இக் கோயில் முற்பகுதியிலுள்ள மண்டபம் $11 \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அடி கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. இக் கோயிலின் கோபுரத்தில் சிற்ப வேளைபாடுகள் வியக்க வைக்கின்றன.

முஸ்லிம் மன்னர் (நவாப்) இங்கு வத்து செல்லும்போது கோயில் நிர்வாகத்தினரிடம் கோயிலுக்கு மான்யம் ஏதாவது தேவையா என்று கேட்பார். நிர்வாகத்தினரோ எவ்வித உதவியும் தேவையில்லை என்று கூறிவிட்டார்களாம். ஏனென்றால் அப்போது இக் கோயிலுக்கு நல்ல வருமானம் இருந்ததாம். இருந்தாலும் நவாப் மன்னர் ஒரு சிறு தொகையை மானியமாக கொடுக்க அனுமதித்துள்ளார். அந்த ஆணை இன்றும் செயல்பட்டு வருகின்றது. மானியத் தொகை சர்க்காரிலிருந்து வருகிறது.

இத் திருக்கோயிலுக்கு வடதிசையில் ஒரு குளம் உள்ளது. அங்கிருந்து யானை மூலமாக அழகிய மணவாளப் பெருமாள் கோயிலுக்கு அபிசேக தீர்த்தம் எடுத்து வருவார்களாம். ஒரு நாள் அப்படி தீர்த்தம் எடுக்கும் போது சகதி அதிகமாக உள்ள பள்ளத்தில் அந்த யானை விழுந்து சிக்கி மூழ்கிவிட்டது. அன்று முதல் அக்குளம் யானை விழுந்தான் பள்ளமாக அழைக்கப்படுகின்றது. இத்திருக்கோயில் கி.பி. 670-க்கு பிறகு பாண்டியு மன்னர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சிவக்கொழுந்திஸ்வரர் திருக்கோயில்;

கிறிஸ்து பிறப்பிற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே சைவ சமயத்தவர்களால் சிவக் கொழுந்திஸ்வரர் திருக்கோயில் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத் திருக்கேயில் கிழக்கு திசையை பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது. இக்கோயில் கணபதிஸ்வரர் அறம் வளர்த்தநாயகி அம்பாள் போன்ற தெய்வங்கள் குடிகொண்டுள்ளன. முஸ்லிம் மன்னர் (நவாப்) காலத்தின் கொடுக்கப்பட்டுள்ள மானியத்தில்தான் கோவில் நித்திய பூஜைகள் நடந்து வருகிறது.

மெயகண்டீஸ்வரர் திருக்கோயில்:

சிவக்கொழுந்திஸ்வரர் திருக்கோயிலுக்கு வடதிசையில் மெய்கண்டீஸ்வரர், ஆனந்தவல்லி அம்மாள் போன்ற தெய்வங்கள் குடிகொண்டுள்ளன. இத்திருக்கோயில் மேற்கு திசையை பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது. இப்படி மேற்கு திசையை பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது தமிழ்நாட்டில் இரண்டுதான் உண்டு. அவற்றுள் இதுவும் ஒன்று. இக் கோயிலின் கோபுரம் பழுதடைந்து விட்டது. மற்ற கோயில்களான சிவன், பெருமாள் போன்ற தெய்வங்களுக்கு கோபுரம் உள்ளது. மிக பழமைவாய்ந்த கோயிலாக இது விளங்குகின்றது. இப்போது மெய்கண்டீசுவரர் கோயிலும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனால் அத் திருக்கோயிலிலுள்ள மெய்கண்டீஸ்வரரும், ஆனந்தவல்லி அம்மாளும் இப்போது சிவக்கொழுந்தீஸ்வரர் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இந்த கோவிலுக்கு முஸ்லிம்நவாப் மானியம் தினசரிக்கு ஒரு காசு மானியம் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீதேவி ஐநூற்று நங்கை அம்மன் திருக்கோயில்

திங்கள் ஒளிமுகத்தில் செங்கதிர் தோற்றம்போல்
நங்கை அருளுகின்ருள் நானிலமும் ட பங்கம்
எதவுமின்றில் பல்லூழி இன்பமுறச் செய்வாள்
பதுமத் திருவடி போற்று.

காயல்மாநகரில் மேற்கு திசையில் பைபாஸ் ரோட்டில் சுமார் ஒரு கி.மீ. தூரத்தில் ஸ்ரீ தேவி ஐநூற்று நங்கை அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. பழங்காலத்தில் ஒருநாள் இரவு 500 தேவதைகள் வந்தனர். அவற்றில் இந்த ஒரு தேவதை மட்டும் இங்கு தங்கிவிட மற்ற தேவதைகள் மறைந்துவிட்டனர். இதனால் இத்தெய்லத்திற்கு ஐநூற்றுநங்கைஅம்மன் என பெயர் வந்தது.

இக்கோயிலில் சமீப காலத்தில் நான்கு தடவையாக கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இது போக திருமால் கும்பாபிஷேகம் பூஜையும் நடைபெற்று வருகின்றன. இத் திருக்கோவிலுக்கு பல ஏக்கரில் நிலபுலன்கள் உள்ளன.

காயல்சேர் பட்டினத்தில் தாயாகிப் பல்லாண்டு
தூய அறம்வளர்க்கும் ஐநூற்று நங்கையின்
மாய வினையெல்லாம் மாய்த்திருவாள் நெஞ்சமே
தாயை தினமும் நினைந்து வாழ்.

உச்சிமாகாளி அம்மன் கோயில் தெருவில் உச்சிமாகாளி அம்மன் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கி.பி. 1954ம் ஆண்டில் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இத் தெய்வம் காளி வடிவத்தில் அமைந்துள்ளது. இங்கு கொடைத் திருவிழா சிறப்புடையதாகும்.

சிவன் கோயில் தெருவில் மாரியம்மன் கோயில் அமைந்திருக்கின்றது. இத் திருக்கோவில் கி.பி. 720-725-ம் ஆண்டிற்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இத் தெய்வம் ஐநூற்றுநங்கை அம்மனின் தங்கையாக கருதப்படுகின்றது.

முத்தாரம்மன் கோவில் தெருவில் முத்தாரம்மன் கோயில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி பி. 310-315-ற்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத் திருக்கோவிலில் நவராத்திரி கொலு ரொம்ப விசேஷமாக கொண்டாடப்படுகின்றது. பக்தர்கள் வேசம் போட்டு அம்மனுக்குமுன் காட்சியளிப்பார்கள்.

சேதுராஜா தெருவில் முத்தாரம்மன் கோவில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி. பி. 322-328க்குள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இத் திருக்கோயிலில் காளியம்மன், உச்சிமாகாளி அம்மன் போன்ற தெய்வங்கள் குடிக்கொண்டுள்ளன.

பத்திரகாளியம்மான் கோவில் தெருவில் ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கி.பி. 1815-1822-க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றனர். இங்கு அம்மன் காளியாக காட்சியளிக்கின்றாள். இங்கு கொடைத் திருவிழா சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன.

வண்ணாக்குடித் தெருவில் அருள்மிகு சந்தணமாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி.பி. 1870 - 1879க்குள் உருவாக்கப்பட்டதாக தெரிகின்றது. இத் தெய்வம் ரொம்ப சாதுவான தெய்வமாகும். இங்கு பல வருடங்களாக கொடைத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

விசாலாட்சியம்மன் கோயில் தெருவில் விசாலாட்சி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி.பி. 710 - 718-க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இங்கு நவராத்திரி கொலு விசேஷமாக கொண்டாடப்படுகின்றது. இங்கு மார்கழி மாத திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் காலை 4 மணிக்கே தெருவெங்கும் ஒலிக்கும். கொடைத் திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இங்கு உச்சிமாகாளி அம்மனும், கருப்பசாமியும் குடிக் கொண்டுள்ளனர்.

வீரசடைச்சியம்மன் கோவில் தெருவில் வீரசடைச்சியம்மன் திருக்கோவில் அமைந்ள்ளது. இத்திருக்கோயில் கி.பி. 830-838க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத் திருக்கோயிலில் அரசு வேம்புக்கு மத்தியில் செல்லவிநாயகர் குடிகொண்டுள்ளார். இங்கு ஆனி மாதத்தில் கொடை திருவிழா நடைபெற்று வருகின்றது. இங்கு மார்கழி மாத திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் அதிகாலை 4-30 மணிக்கு தெருவெங்கும் ஒலிக்கும்.

பாலசந்திரவிநாயகர் கோவில் தெருவில் பாலசந்திரவிநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் பாலச்சந்திர விநாயகர், மாரியம்மன், உச்சிமாகாளி அம்மன் போன்ற தெய்வங்கள் குடி கொண்டுள்ளன. இங்கு பாலச்சந்திரவிநாயகர், கிழக்கு பார்த்த வண்ணமாகவும் மாரியம்மன், உச்சினிமாகாளியம்மன் வடக்கு பார்த்த வண்ணமாகவும் அமைந்துள்ளனர். இத்திருக்கோயில் கி. பி. 1220 - 1227-க்குள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வண்டிமலைச்சியம்மன் கோவில் தெருவில் வண்டிமலைச்சியம்மன் கோயில் அமைந்துள்ளது. இத் திருக் கோயில் கி.பி. 1222-1229க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

பூந்தோட்டத்தில் முத்தாரம்மன் கோவில் அமைந்துள்ளது. இக்கோயில் கி. பி. 1892 - 1895க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

கண்டிபிச்சை தோட்டத்தில் (மன்னர்ராஜா கோயில்) பத்திரகாளி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இதில் குலைவாழை இசக்கி அம்மனும் குடிகொண்டுள்ளாள். இத் திருக் கோயில் கி.பி. *1893 - 1897*க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

ஓடக்கரையில் லெட்சுமி அம்பாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி.பி. *1128-1132*க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இக்கோயிலில் நாராயண சுவாமி, விநாயகர் போன்ற தெய்வங்கள் குடிகொண்டுள்ளன. இத்திருக்கோயில் கிழக்கு பார்த்து திசையில் அமைந்துள்ளது. இத்தெய்வம் ரொம்பவும் சாதுவான தெய்வமாக அமைந் துள்ளது. சித்திரை, வைகாசி மாதத்தில் கொடைத் திருவிழா நடைபெறுகின்றது.

மங்களாவாடியில் சந்தனமாரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இது ரொம்ப சாதுவான தெய்வமாக காட்சியளிக்கின்றது. இத் திருக்கோயில் கி.பி. *1210-1215*க்குள் உருவாக்கப்பட்ட்தாக கூறப்படுகின்றது.

இரத்தினபுரியில் சந்தனமாரியம்மன் கோயில் அமைந்துள்து. இத்திருக்கோயில் கி. பி. *1947*-ல் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத் திருக்கோயிலில் கொடைத் திருவிழா சிறப்புமிக்க விசேஷமாகும். நவராத்திரி கொலுவை முன்னிட்டு அம்மன் பல அவதாரங்களில் காட்சியளிப்பாள் இத் தெய்வம் ஒரு சாதுவான தெய்வமாக காட்சியளிக்கின்றாள். இரத்தின புரிக்கு பக்கத்திலுள்ள மெயின்ரோட்டை ஒட்டி இசக்கி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இத்தெய்வத்தை இந்துக்கள் காவல் தெய்வமாகவும் வணங்கி வருகின்றனர். இத் தெயவம் கிழக்கு பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது.

கீழலெட்சுமிபுரத்தில் உச்சிமாகாளி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக் கோயில் கி.பி. *1918 - 1922*-ல் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இத்தெய்வம் காளியை போல் காட்சியளிக்கின்றது. இங்கு கொடை திருவிழா சிறப்புடைய விசேஷமாகும். தரும புரியில் சந்தனமாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இது ரொம்பவும் சாதுவான தெய்வமாகும். இக் கோயிலிலும் கொடைத் திருவிழா ரொம்ப விசேஷமாக கொண்டாடப் படுகின்றது. இத் திருக்கோயிலும் உச்சிமாகாளி அம்மன் கோயில் ஆரம்பித்த காலத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

அழகாபுரியில் முப்பிடாரி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி. பி. *1820 - 1828*க்குள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இங்கு பல வருடங்களாக கொடைத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

தைக்காபுரத்தில் முப்பிடாரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் கி.பி. *1908-1912*க்குள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த வரலாற்றுக் குறிப்புகளுக்கு தகவல் தந்தவர்கள்:

1) **திரு A. K. சுப்பிரமணிய பிள்ளை**
முன்னாள் கிராம அதிகாரி, காயல்பட்டணம்
அறங்காவலர்: ஐநூற்று நங்கையம்மன் கோவில்

2) **திரு இல்லங்குடியா பிள்ளை**
பஜனைகுழு தலைவர் & அமைப்பாளர்
கணபதிஸ்வரர் கோவில் & ஐநூற்று நங்கையம்மன்கோவில்



காயல்மாநகரில் கிறிஸ்தவ திருத்தலங்கள்

T. ஸ்டீபன் அசிசி - திருச்செந்தூர்.
ஆசிரியர்: **'பிரான்சிஸ்கன் ஒலி'** மாத ஏடு
கமலாவதி மேல்நிலைப் பள்ளி, சாகுபுரம், காயல்பட்டணம்.

சந்த எஸ்தேவு ஆலயம் :

தென் இந்திய கத்தோலிக்க கிறிஸ்தவ பாரம்பரியத்தில் ஒரு தனி சிறந்த வரலாற்று சிறப்பு மிக்க ஆலயம். 400 ஆண்டுகளுக்கு முன் தென் தமிழக கடலோரத்தில் மறை பரப்பிய புனித பிரான்சிஸ் சவேரியார் கி.பி. 1542ம் ஆண்டு காயல்பட்டணம் பஞ்சாயத்திற்குட்பட்ட கொம்புத் துறையில் வாழ்ந்து வந்த 'கடயர்' என்ற மக்களுக்கு ஞானநீராட்டி அவர்களை அடிக்கடி சந்தித்து மறை வளர்த்து வந்தார். கி.பி. 1544ம் ஆண்டு மே திங்களில் போர்ச்சுக்கீசிய தனவந்தர் மனுவேல் - டி - குரூஸ் என்பாரின் மேற்பார்வையில் சிறந்த ஆலயமாக கட்டி முடிக்கப்பட்டு கத்தோலிக்க திருச்சபையின் முதல் வேத சாட்சியான புனித முடியப்பர் [சந்த எஸ்தோவு என்ற St. Stephen] பெயரால் அர்ப்பணம் செய்யப்பட்டது.

1544ம் ஆண்டிலேயே பட்டங்கட்டிகள் என்ற அச்சமூகத் தலைவர்களுக்கு மடல் எழுதி கன்னியாகுமரியில் பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உதவியுள்ளனர். அதே ஆண்டில் தவறி கிணற்றில் விழுந்துவிட்ட ஒரு ஏழைச்சிறுவனுக்கு புனித சவேரியார் நற்செய்தி வாசித்து காப்பாற்றிய நிகழ்ச்சி இத் திருத்தலத்தில் நடந்தேறியது. அக் கிணறு இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இப் புனித தலத்தை பக்தர்கள் நாடிவருவது இத் திருத்தலத்தின் சிறப்பு அம்சமாகும்.

புனித அந்தோணியார் ஆலயம் :

மிகப் பெரிய இரசாயண தொழிற்சாலைகளில் ஒன்றுகிய தரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் [DCW Ltd.,] நிறுவனத்தாரின் ஒத்துழைப்போடு சாகுபுரத்தில் இந்த ஆலயம் நிறுவப்பட்டது. தொழிற்சாலை தொழிலாளர்கள் ஒத்துழைப்போடு பங்குத் தந்தை வியாகுலமரியான் பர்னாந்து அடிகளார் அவர்களால் வார வழிபாடுகள் சிறப்புற நடைபெறுகின்றன.

பரி. மிகா வேலின் ஆலயம்:

காயல்பட்டணம் அருணாசலபுரத்தில் நீண்ட காலமாக உள்ள இந்த C. S. I. கிறிஸ்தவ ஆலயம் 18-11-1989 அன்று நெல்லைத் திருமண்டல பேராயர் திரு. ஜேசன் S. தர்மராஜ் அவர்களால் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டு வார வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

புனித ஆண்ட்ரூஸ் ஆலயம்:

ஆறுமுகனேரி சேகரக் குருவின் கீழ் 1977ல் காயல்பட்டணம் ரத்னபுரியில் துவங்கப்பட்ட தென்இந்திய கிறித்துவ சபைக்கான ஆலயம் இப்பகுதியில் வாழும் C.S.I. கிறிஸ்தவ மக்களுக்காக வழிபாட்டுத் தலமாக உள்ளது. இன்றைய சேகருக்குரு Rev. அதிசயராஜ் ஐசக் அவர்களால் இவ்வாலயம் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட கிறித்துவ திருத்தலங்கள் காயல்மாநகரில் சமய ஒருமைப் பாட்டிற்கு இலக்கணமாக திகழ்வது சிறந்த எடுத்துக் காட்டாகும்.


பாண்டிய நாட்டின் புகழ்மிக்க ஆட்சி மத ஒற்றுமைக்கு வலிமை தரும் சாட்சி

டாக்டர் **சி. சுப்பையா பாண்டியன்** B. V. Sc., நல்லூர்

பாரதத் திரு நாட்டில் பண்டைய காலம் தொட்டு இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்ந்து வரலாறு படைத்த சரித்திர பெருமைக்குரிய செய்திகள் ஏராளம் உண்டு. இந்த செய்திகள் எழுதிக் காட்டப்பட்டால் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அது பக்கபலமாக அமையும். துரதிருஷ்டவசமாக பிற்கால சரித்திர ஆசிரியர்களால் இப்படிப்பட்ட செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு மத துவேஷங்களை வளர்க்கின்ற செய்திகள் பரப்பப்படுகின்றன. இது வேதனைக்குரியது. உண்மையான வரலாறுகள் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அதன் மூலம் சகோதரத்துவம் இந்த நாட்டில் வளர வேண்டும். இதோ காயல் பட்டணத்தை அடிப்படையாக வைத்து அதற்கோர் ஆதாரம்.

12ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த வெனிஸ் நாட்டின் புகழ் பூத்த சரித்திர ஆசிரியர் **மார்கோ போலோ** கி. பி. 1288லும் 1293லும் இரண்டு முறை பாண்டிய நாட்டிற்கும் காயல்பட்டணத்திற்கும் வந்து தங்கி பாண்டிய ஆட்சியின் பெருமைகளையும் காயல்பட்டணத்தின் சிறப்பையும் புகழ்பட எழுதி உலகறியச் செய்திருக்கிறார்,

கி. பி. 1280ல் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய அரபு முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் காயல்பட்டணத்தில் கரையிறங்கினர். **நபிகள் நாயகத்தின்** வம்சாவழியைச் சேர்ந்த **செய்யிது ஜமாலுத்தீன்** என்பவர் அவர்களுக்கு தலைமை தாங்கி வந்தார். அது சமயம் மதுரையை தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை மாமன்னர் **சுந்தர பாண்டிய தேவர்** சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்து வந்தார், அகதிகளாக வந்த அரபி முஸ்லீம்களை வரவேற்று உபசரித்து பல்வேறு சௌகரியங்களையும் செய்து கொடுத்தார்.



டாக்டர் சி. சுப்பையா
B.V. Sc.,
S/o. ச. செல்லையாதேவர்
நல்லூர்.

தேவர் திருமகன் காலத்தில் பாண்டியநாடு உலக நாடுகளுடன் வர்த்தக மற்றும் ராஜ தொடர்பு கொண்டிருந்தது. பெரும் வணிகராகவும் பேரறிஞராகவும் இருந்த செய்யிதுஜமாலுத்தீன் மீது மன்னர் சுந்தரபாண்டிய தேவர் பெருமதிப்பு வைத்திருந்தார். பாண்டிய நாட்டின் தூதுவராக இவரை சீனாவுக்கு அனுப்பி வைத்தார். இவரது தம்பி **செய்யிதுதகியுத்தீனை** தமது முதல் அமைச்சராக்கினார். பின்னர் செய்யிது ஜமாலுத்தீனை பாண்டிய நாட்டின் பிரதான தளபதியாக நியமித்துக் கொண்டார். மாமன்னர் சுந்தரபாண்டியதேவர் கி. பி. 1292-ல் காலமானபின் அவரது மதிப்பிற்கும் மக்களின் அன்பிற்கும் பாத்திரமானவரான செய்யது ஜமாலுத்தீன் நாட்டு மன்னராக தெரிவு செய்யப்பட்டார். தேவர் இன மக்கள் ஆனந்தம் பொங்க செய்யது ஜமாலுத்தீனுக்கு பொற்கிரீடம் சூட்டி மகிழ்ந்தனர்.

கி.பி. 1303-ல் செய்யிதுதகியுத்தீன் காலமானார். அவரின் பதவிக்கு அவரின் மகன் **சிராஜுத்தீனும்** அவருக்குப் பின்

அவரின் மகன் **நிஸாமுத்தீனும்** தகிய்யித்தின் வகித்த முதல் அமைச்சர் பதவியை வகித்தனர். சீனவுக்கு பாண்டியநாட்டின் தூதுவராகச் சென்ற பக்ருத்தீன் அஹமது கி.பி. 1305வரை அங்கு பணிபுரிந்து விட்டு திரும்பிவிட்டார். அக்காலத்தில் பாரசீக நாட்டின் ஷிருஸ் நகரில் உலகப் பாதுகாப்பு சபை என்ற பெயரால் ஒரு மாமன்றம் இருந்தது. இன்றைய ஐ நா. சபையை ஒத்த நிறுவனம் அது. உலகத்தின் புகழ்பெற்ற நாடுகள் எல்லாம் அதில் அங்கம் வகித்தன. அவற்றில் பாண்டிய நாடும் ஒன்று. கி.பி. 1303ல் உலகப் பாதுகாப்பு மன்றம் அதன் தலைவராக **சுல்தான் செய்யிது ஜமாலுத்தீனைத்** தெரிவு செய்தது. பாண்டிய நாட்டின் வேந்தர்பதவியை **குலசேகர தேவர்** இடம் மக்கள் விருப்பத்துடன் ஒப்படைத்துவிட்டு சுல்தான் ஜமாலுத்தீன் ஷிருஸ்நகர் சென்று உலகப் பாதுகாப்பு மன்றம் தலைவர் பதவியை ஒப்புக்கொண்டார். **கி.பி. 1306-ல் ஜமாலுத்தீன் ஷிருஸிலேயே காலமாகி அங்கேயே** அவர் அடக்கப்பட்டார். அவரின் சமாதி மீது ஒரு அழகிய கோரி எழுப்பப்பட்டு கல்லில் ஒரு இரங் கற்பாவும் செதுக்கப்பட்டது. இவ்விபரங்களை எல்லாம் **ஸர்.எச்.எம்.எலியட்** தமது 'ஹிஸ்டரி ஆப் இந்தியா' என்ற நூலில் விபரமாக எழுதியுள்ளார். இவை எல்லாம் பாண்டிய நாடு உலக அரங்கில் எப்படி புகழ் பெற்று இருந்தது என்பதற்கும் சுல்தான் ஜமாலுத்தீன் எகிப்து நாட்டிலிருந்து ஒரு அகதியாக பாண்டிய நாடு வந்து மக்கள் விருப்பத்திற்கிணங்கி மன்னராகி எப்படி பாண்டிய நாட்டிற்கு புகழ் சேர்த்தார் என்பதறகும் சான்றாகும். பிற்கால சரித்திராசிரிகள் ஏனோ இவற்றை எல்லாம் எழுத விட்டு விட்டனர். இப்படியான சரித்திரங்கள் வகுப்பு ஒற்றுமையை வளர்க்கவும் ஒருமைப்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவும் உதவுமல்லவா? சுல்தான் ஜமாலுத்தீன், ஆட்சியை தம் மக்கள் இடமோ, தம் தம்பி மக்கள் இடமோ ஒப்புவிக்க விரும்பாமல் சுந்தரபாண்டிய தேவரின் சகோதரரான குலசேகர தேவரிடம் ஒப்புவித்ததையும் நாம் நினைவு கூற வேண்டும். அது மட்டுமல்ல குலசேகர தேவரும் தமது ஆட்சியில் ஏற்கனவேயுள்ள அறபி முஸ்லிம்களுக்கு அன்னவர்கள் வகித்த பதவிகளை அளித்ததுடன் வேறு பல முஸ்லிம்களுக்கும் உயர் பதிவி அளித்து கௌரவித்துள்ளார். குறிப்பாக அவரின் முப்படைகளிலும் முஸ்லிம்களே முக்கிய பதவிகள் வகித்துள்ளனர். குலசேகர தேவர் ஆட்சி பற்றி வரலாற்று ஆசிரியர்கள் மிகவும் சிறப்பித்து எழுதியுள்ளனர். அவர் அரசாட்சி செய்த காலத்தில் பாண்டிய நாட்டின் பொக்கிஷத்தில் 1200 கோடி தங்கப்பேழைகள் இருந்ததாக வரலாறு கூறுகிறது. காயல்பட்டணத்திலுள்ள கற்புடையார் பள்ளிக்கு குலசேகர தேவர் ஒரு மான்யம் வழங்கி அதன் விபரத்தைக் கல்லில் எழுதி அப்பள்ளி வளாகத்தில் நாட்டியுள்ளார். அதில் பவுத்திரமாணிக்கப் பட்டினம் என்ற எழுத்து தென்படுகிறது. மற்றவை சிதைந்தும் கல் உடைத்தும் காணப்படுகிறது. இவரைத்தான் முற்கால இஸ்லாமிய சரித்திராசிரியர்கள் **'காலெஸ்தேவ'** என தங்களின் ஆய்வு நூல்களில் குறிப்பிட்டு புகழ்ந்து எழுதியுள்ளனர். இவை பற்றி காயல்பட்டணம் ஹாபீஸ் **M. K. செய்யது அகமது** அவர்களும் தமது ஆராய்ச்சி கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டிய நாட்டை ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவர் அரபு முஸ்லீம்-அதுவும் காயல் பட்டணத்து சொந்தக்காரர் என்பதையும் அவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு பாலமாக விளங்கியவர் என்பதையும் நினைத்து நினைத்து நாம் பெருமைப்படலாம். அந்தப் பெருமை என்றும் நிலைத்து நிற்க நாம் நேசமுடன் செயல்படுவோம்.

மத விஷயத்தில் பிடிவாதம் உதவாது. யாருக்கு எத்தகைய கொள்கையும் சாதனமும் ஒத்துக் கொள்கிறதோ அவன் அதை கையாளட்டும். மற்றவர்கள் போக்கை அவன் தாக்க வேண்டிய அவசியமில்லை.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

என் தாயகமே! பாரதமே! உன் நிலை என் உள்ளத்தை உருக்குகிறது. இந்திய மக்களே நீங்கள் உண்மையை உணரவில்லையாயின் வாழ்வும் வரலாறும் அழிந்துவிடும்.

—அல்லாமா இக்பால்

வரலாறு படைத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க வருகைகள்


— V. S. சுலைமான் —

காயல் மாநகர் என காயல்பட்டணத்தை அழைப்பது அலங்காரத்திற்காக அல்ல. உண்மையில் இது மாநகர்தான். பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் இந்நகர் ஒரு பேரூராட்சிதான் என்றாலும் இந்நகர் வாசிகளின் பாதம் படாத இடமே சர்வதேசத்தில் இல்லை என்கின்ற அளவிற்கு உலகம் சுற்றி வந்தவர்கள் இந்நகர் வாசிகள். இந்நகர் பற்றி அறியாதவர்களே இல்லை என்கின்ற அளவிற்கு பெருமை படைத்தது.

இன்றைக்கு 1115 ஆண்டுகளுக்கு முன்னாலேயே எகிப்திலிருந்து **முஹம்மதுகல்ஜி** தலைமையிலும் கி.பி. 13ம் நூற்றாண்டில் **சுல்தான் சையதுஜமாலுத்தீன்** தலைமையிலும் அரபிகள் காயல் வந்து வாழத் தொடங்கினர்.

கி.பி. 1254ல் வெனிஸ் நகரில் பிறந்த **மார்க்கோ போலோ** இந் நகருக்கு வருகைதந்து இந்நகரின் பெருமைகளை மிகச் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார்.

ஆசியாவின் ஜோதி என உலக மக்களால் பெரிதும் புகழப்பட்ட **பண்டித ஜவஹர்லால் நேரு** அவர்கள் தமது டிஸ்கவரி ஆப் இந்தியா என்ற நூலில் காயல்பட்டணத்தைப் பற்றி மிகப் பெருமையாக எழுதியுள்ளார். காயல்பட்டணத்தை யொட்டியுள்ள **அடைக்கலாபுரம்** என்ற சிறிய கிராமத்தில் நடைபெற்ற மாநாட்டில் பண்டித நேரு 19-5-1959 அன்று நேரில் வருகைதந்து பங்கேற்றார்.



St, ஜோசப் இன்ஸ்டிடியூட் கல்வி வளாகத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி மாநாட்டில் உரையாற்றி, கண்காட்சியை திறந்து வைத்தார்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு காயல்பட்டணம் இந்தியமுஸ்லிம் சங்கத்தின் சார்பில் 29-7-1939ல் கொழும்பில் வரவேற்பளிக்கப்பட்டது.நேரு அவர்களுடன், கமலா நேரு, இந்திரா, பண்டிட் கோவிந் வல்லபபந்த், மௌலானா செய்யது ரவூப் பாட்சா, M. K. M, சம்சுதீன், S. M. அப்துல்காதர் ஹாஜியார் ஆகயோர் இப்படத்தில் உள்ளனர்.



காயல்பட்டணம் நகர் தோன்றிய இவ்வுளவு காலத்திற்கிடையிலும் இந்நகருக்கு வருகைதந்த ஒரே பிரதமர் திரு **ராஜிவ்காந்தி** அவர்கள்தான்.

4—10—1988 அன்று காயல்பட்டணம் வருகைதந்ததை யொட்டி காயல் நகரே விழாக் கோலம் பூண்டிருந்தது.

சரியாக காலை **10-15** மணிக்கு காயல் நகருக்குள் வருகைதந்தார் திரு ராஜிவ்காந்தி. தூத்துக்குடி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் (LF ரோடு) அமைந்துள்ள **செய்கு ஹுஸைன் பள்ளிக்கு** திரு ராஜிவ்காந்தியும் அவரது துணைவியார் திருமதி சோனியா காந்தியும் வருகை தந்தனர். உலக அமைதிக்காகவும் இந்திய நலனுக்காகவும் எல்லாம் வல்ல **இறைவனிடத்தில்** பிரார்த்தனை நடைபெற்றது.

அதன்பின் **ஐக்கிய விளையாட்டுச் சங்கத் திடலில்** பேரூராட்சித் தலைவர் ஹாஜி V. M. S. **லெப்பை** அவர்கள் தலைமையில் நகரப் பொதுமக்கள் சார்பில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்பை பெற்றுக்கொண்ட **ராஜீவ்** உற்சாக மிகுதியால் பாதுகாப்பு வளையத்தையும் தாண்டி பொதுமக்கள் பகுதிக்கே சென்று கை குலுக்கினார். பின் U S.C. மாடியில் நின்று இந்தியில் உரை நிகழ்த்தினார்.

அதன்பின் **காயல்பட்டணம் மருத்துவ அறக் கட்டளை மருத்துவமனை** சென்று அங்கு டாக்டர்கள் குடியிருப்பிற்கு அடிக்கல் நாட்டினார். திரு ராஜீவ்காந்தியை வரவேற்க நகர் முழுக்க சாலையின் இருபுறமும் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.



திரு ராஜீவ்காந்தி அவர்களுக்கு நகர மக்களின் சார்பிலும் பேரூராட்சியின் சார்பிலும் ஹாஜி V.M.S. லெப்பை அவர்கள் பொன்னாடை போர்த்தி சந்தன மாலை அணிவித்து நினைவுப் பரிசுகள் வழங்கினார். தனக்கு அளிக்கப்பட்ட மாலைகளையும் ஆடைகளையும் மக்களுக்கு வழங்கினார் திரு ராஜீவ்.



இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த **மூதறிஞர் ராஜாஜி** அவர்கள் **5-6-1945** செவ்வாய் கிழமை மாலையில் காயல் பட்டணம் வருகைதந்து காயல்பட்டணம் கூட்டுறவு பண்டக சாலையின் ஆண்டு விழாவில் பங்கேற்றார். இந்நகரின் கடற்கரையை பார்வையிட்ட ராஜாஜி அவர்கள் சென்னை மெரினாவிற்கு அடுத்து இவ்வுளவு சிறப்பான கடற்கரையை இங்குதான் பார்க்கிறேன் என புகழ்ந்துரைத்தார்.

இந்திய திருநாட்டின் இன்றைய குடியரசுத் தலைவராக உள்ள **டாக்டர் R.வெங்கட்ராமன்** அவர்கள் மத்திய நிதி அமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்த காலங்களில் இந்நகருக்கு வருகைதந்து விழாக்களில் பங்கேற்று சிறப்புரையாற்றியுள்ளார்.


தமிழகத்தின் முதல்வராக இருந்த காலம் சென்ற **பெருந்தலைவர் காமராசர்** அவர்கள் பலமுறை காயல்பட்டணம் வருகைதந்துள்ளார். காயல்பட்டணம் கூட்டுகுடிநீர் திட்டத்தை துவக்கி முதலாவது நீர்த் தேக்கத்தை திறந்து வைக்கவும் **5-7-55** ல் இந் நகருக்கு வருகை தத்துள்ளார் திரு காமராசர் அவர்கள்.



தமிழகத்தின் காலம் சென்ற முதல்வர் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் இந்நகருக்கு பலமுறை வந்துள்ளார். செத்தும் கொடை கொடுத்த **வள்ளல் சீதக்காதி** நினைவு தினவிழா ‘மஜ்லிஸுல் கௌது’ சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட போது அதில் சிறப்புரையாற்ற *14-4-1945*ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்நகருக்கு வருகை தந்தார்.



இன்றைய இந்திய குடியரசுத் தலைவர் திரு R. வெங்கட் ராமன் அவர்கள் மத்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது காயல்பட்டணம் வருகை தந்து 2-3-83 ல் முஹிய்யத்தீன் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி விழாவில் பங்கேற்றார்.





23-8-88 ல் காயல்பட்டணம் வருகை தந்த அன்றைய தமிழக ஆளுனர் டாக்டர் பி. சி, அலெக்ஸாண்டர் அவர்களுக்கு ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது

கேரள முன்னாள் முதல்வர் அல்ஹாஜ் **C. H. முகம்மது கோயா** அவர்கள் கேரள கல்வி அமைச்சராக இருந்தபோது 5-7-79 ல் காயல்பட்டணம் வருகை தந்து முஹிய்யத்தீன் மெட்ரிகுலேஷன் பள்ளியை திறந்து வைத்தார். மகுழரா அரபிக் கல்லூரி பட்டமளிப்பு விழாவிலும் USC யில் நடைபெற்ற முஸ்லிம் லீக் பொதுக் கூட்டத்திலும்சிறப்புரையாற்றினார்

தமிழக முதல்வர் **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் பலமுறை காயல்பட்டணம் வருகை தந்துள்ளார். 11-9-89 அன்று டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பின் போது காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சியின் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளித்து பொன்னாடை அணிவித்து 35 கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் அளிக்கப்பட்டது.





காலம் சென்ற தமிழக முதல்வர் **புரட்சித்தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர்.** அவர்கள் இந்நகருக்கு பலமுறை வருகை தந்துள்ளார்.

திருச்செந்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலை முன்னிட்டு 26—2—1983 சனிக்கிழமை இரவு இங்கு வருகை தந்து பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

பல்வேறு கட்சிகள், பல அமைப்புக்கள் ஆகியவற்றின் தலைவர்களும் இந்நகருக்கு வருகை தந்துள்ளனர். பல சிறப்பான விழாக்களும் இந்நகர சரித்திரத்தைஅலங்கரிக்கின்றன.


அவ் விழாக்களில் மிகச் சிறப்பான **"மூன்றாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு"** குறிப்பிடத் தக்கதாகும். மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், வெளி நாடுகளின் ராஜதந்திரிகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க காயல்பட்டணம் வருகை தந்தனர்.





1978 ஜனவரி 13, 14, 15, ஆகிய தேதிகளில் இம் மாநாடு காயல்பட்டணம் ஐக்கிய விளையாட்டு சங்க திடலில் நடை பெற்றது.


★




அன்றைய இந்திய குடியரசுத்தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்களுக்கு ஹாங்காங்கில் தமிழ் பண்பாட்டுக்கழக தலைவர் S. A. முஹம்மது அலி வரவேற்பளிக்கிறார்.



தமிழகத்தில் அமைச்சராக பொறுப் பேற்று முதன் முறையாக திருச் செந்தூர் வருகை தந்த மாண்புமிகு கே. பி. கந்தசாமி MA அவர்களுக்கு தலைவர் ஹாஜி. VMS. லெப்பை அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற் கிறார்கள்.



இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி ரத்னவேல் பாண்டியன் அவர்களுடன் ஹாஜி. M. S. லெப்பை அவர்கள்



ஹாங்காங் வரவேற்பில் உலக குத்துச்சண்டை மாவீரர் முஹம்மது அலி அவர்களுடன் காயல் S. A. முஹம்மது அலி

இந்தியாவில் முஸ்லிம்கள்

சில வரலாற்றுக் குறிப்புக்கள்

ஹைருன்னிஸா காயல் மகபூப்

"உலகிற்கு இஸ்லாமிய மதம் கலாச்சாரம் மற்றும் நாகரீக துறைகளில் ஆற்றிய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியாவின் அரசியல், வியாபாரம், ராணுவம், கல்வி, கலை மற்றும் இலக்கியம் அனைத்திலும் இந்திய முஸ்லிம்களுக்கு சம பங்கு உண்டு. இஸ்லாமியத்தை இந்தியா தனது சொந்த மதங்களில் ஒன்றாகவே கருதுகிறது. எந்த மதத்திற்கும் நாம் எதிரானவர்களல்லர்! எல்லா மத நம்பிக்கைகளுக்கும் சம அந்தஸ்தும் சம பாதுகாப்பும் உண்டு.



மறைந்த பிரதமர்
திருமதி இந்திரா காந்தி

இந்தியாவின் மதசார்பற்ற தன்மையானது ஒவ்வொரு இந்தியர்களுக்கும் அவர்களது நம்பிக்கைகளை கடைபிடிப்பதற்கும் தங்களது மத கோட்பாடுகளை அறிவதற்கும் உரிமை அளிக்கின்றது. அதே சமயம் அவர்கள் அதே உரிமையைப் பிற மதத்தை சார்ந்தவர்களுக்கும் அளிக்க வேண்டும்.

பல இஸ்லாமிய நாடுகளுடன் இந்தியா தனது உறவை வலுப்படுத்தியுள்ளதன் மூலம் இந்நாட்டிலுள்ள இஸ்லாமிய கல்வித் துறைக்கும் புதிய ஊக்கம் கிடைத்துள்ளது. இந்து முஸ்லிம்களுக்கிடையேயான ஒத்துழைப்பின் காரணமாக இலக்கியம், தத்துவம், மொழி, இசை மற்றும் கலையில் பல புதிய படைப்புக்கள் தோன்றியுள்ளன.

ஒரு அரசியல் சக்தியாக இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஊடுருவுவதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னரே தென் இந்தியக் கடற்கரைகளில் அம்மார்க்கம் இங்குள்ள மக்களால் பின்பற்றப் பட்டு வந்திருக்கிறது. இந்த வரலாற்று உண்மையை ஒருவராலும் அழிக்க முடியாது.

உலக நாடுகளில் முஸ்லிம் மக்கள் தொகையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. பல நூற்றாண்டுகளாகவே இந்தியாவில் இஸ்லாமியம் பல சேவைகளைச் செய்துள்ளது. இஸ்லாம் உதயமாகிய 1400 ஆண்டுகளுக்கு முன்பேஅரபுலகின் அறிஞர்கள் பலர் இந்தியாவிற்கு வந்துள்ளனர். புனித குர்ஆன் இறக்கப்படும் முன்பே மேற்காசிய மக்களுக்கும் இந்திய மக்களுக்கு மிடையே நல்ல தொடர்பு இருந்து வந்துள்ளது. அரேபியாவின் இஸ்லாமிய மக்களின் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்திய போது இந்தியாவிலும் விரைவிலே அது தனது செல்வாக்கினை காண்பித்தது".

1982ம் ஆண்டு புது டில்லி இஸ்லாமிய கலாச்சார கருத்தரங்கில் அன்றைய பாரதப் பிரதமர் **திருமதி இந்திரா காந்தி** அவர்கள் ஆற்றிய உரை.

ஆதாரம்: **'இந்தியன் முஸ்லிம் ஹெரால்டு', ,முஸ்லிம் இந்தியா'.**

வரலாற்றுப் பெருமைக்கும் அமைவிடச்சிறப்பிற்கும் கலாச்சார புகழுக்கும் உரியது நம் தாய்த்திரு நாடு **இந்தியா,** உலகின் முதலாவது மனிதர் **ஆதம் (அலை)** அவர்கள் இந்தியாவுடன் இணைந்திருந்த லெமூரியா கண்டத்தில்தான் இறக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இப்படிப் பட்ட பெருமைமிக்க இந்தியாவில் 5000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்து சமவெளியில் மிகச் சிறந்த நாகரீகம் செழித்திருந்தது. இந்திய நாட்டோடு உலகத்தின் பல்வேறு நாடுகளுடன் நல்ல தொடர்பு இருந்தது.

கடலால் சூழப்பட்டுள்ள தென்னிந்தியாவுடன் வாணிப உறவுகளை பல நாடுகள் ஏற்படுத்தி யிருந்தன. ஐரோப்பிய நாடுகள் மட்டுமின்றி அரேபிய தீபகற்பத்துடன் நல்ல உறவு இருந்தது.

கி. பி. 569ல் அரேபியாவின் **புனித மக்கா** நகரில் **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் பிறந்து இஸ்லாத்தை போதித்து கி. பி. 632ல் **புனித மதீனா** நகரில் காலமானார்கள்.

ஆனால் **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் பிறப்பதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னதாகவே இந்தியாவுடன் வர்த்தக தொடர்புகளை அரபுகள் ஏற்படுத்தி இருந்தனர்.

அரபு படையெடுப்பின் மூலமாகத்தான் இஸ்லாம் இந்தியாவில் நுழைந்ததென்றும் அது வாளால் பரப்பப்பட்டதென்றும் திட்டமிட்ட மோசடியான பிரச்சாரம் சில வரலாற்று ஆசிரியர் களால் வேண்டுமென்றே செய்யப்பட்டது.

ஆனால் கி. பி. 712ம் ஆண்டில்தான் சிந்துவில் முதலாவது அரேபிய படையெடுப்பு நடந்தது இந்த படையெடுப்பிற்கு இந்தியாவில் இஸ்லாத்தை நுழைக்க வேண்டுமென்பது காரணம் அல்ல.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைவுக்குப்பின் கலீபாக்களின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது சிந்து மாகாணத்தில் மன்னர்கள் ஆட்சி நடைபெற்றது. முஸ்லிம் வியாபாரிகளின் கப்பல்களும் ஹஜ்ஜுப் பிரயாணிகளின் உடமைகளும் அவர்களால் கொள்ளை யடிக்கப்பட்டன. இதனை தடுத்து நிறுத்த விடுத்த வேண்டுகோள்களுக்கு பலன் இல்லாததால் சிந்து மாகாண கொள்ளையர்களை அடக்க அரேபிய படையெடுப்பு நடந்தது.

கி. பி. 712ல் **முஹம்மது இப்னு காசிம்** போர் வீரர்களுடன் சிந்துவில் காலடி வைத்ததும் 713ல் சிந்து மாகாணம் அரேபிய ஆட்சியின் கீழ் வந்தது. அதிகாரத்தை கைப்பற்றிய போதிலும் மதத்தை பரப்புவதோ அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதோ அரபியர்களின் நோக்கமாக இருக்கவில்லை.

அதே நேரம் 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 8ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அரேபி யர்களின் தொடர்பால் கேரளாவின் மலபார் கொங்கனம் பகுதியிலும் தமிழ்நாட்டின் தெற்கே யும் இஸ்லாம் தழைத்தோங்க ஆரம்பித்தது.

இந்தியாவில் இஸ்லாம் பரவியதற்குக் காரணம் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி அல்ல. **இறை நேசச் செல்வர்களின** மார்க்க பிரச்சாரம்தான் இதற்குக் காரணம் என்பது வரலாற்று உண்மை.

கி. பி. 712க்குப் பிறகு 200 ஆண்டுகள் கழித்தே வட இந்தியாவில் முஸ்லிம் அரசர்களின் அடுத்த படையெடுப்பு நடந்தது.

கி. பி. 933ல் **ஆல்ப்டிஜின்** என்ற துருக்கிய முஸ்லிம், கஜினியை கைப்பற்றினார். அவருக்குப் பின் **அமீர் சபுக்தஜின்** 977ல் கஜினி மன்னரானார். அவருக்குப்பின் **முகம்மது கஜினி** மன்னரானார்.

அடிமைகளுக்கு அதிகாரம் வழங்கி அவர்களுக்கு ஆட்சி அந்தஸ்து அளித்தது முஸ்லிம்கள் தான். கி. பி. 1161ல் **ஷஹாபுத்தீன் முஹம்மத் கோரி** ஆட்சி அமைத்தார், அடிமைகளை அவர் தம் பிரதிநிதிகளாக அமைத்ததன் விளைவாக 1206க்குப்பின் அடிமைகளாட்சி நடைபெற்றது.

1206ல்; டெல்லியை தலை நகராகக் கொண்டு இந்தியாவை நேரடியாக ஆளத் தொடங்கிய முதல் மன்னன் **குத்புதீன் ஐபக்.**

அல்துமிஸ் 1210 முதல் 1235 வரை ஆட்சி நடத்தினார். புகழ்மிக்க **குதுப்மினாரை** இவரே கட்டினார்.

இந்தியாவை ஆண்ட முதல் பெண்மணி **ரஜியா சுல்தானா** தான். சுல்தான் நஸீருதீன், கியாசுதீன் பால்பன், சுல்தான் கைகுபாத் ஆகியோர் 1290 வரை ஆட்சி செய்தனர்.

கி. பி. 1290 முதல் 1320 வரை கில்ஜி வம்சத்தின் ஆட்சி ஜலாலுத்தீன் கில்ஜி, அலாவுதீன் கில்ஜி, குத்புதீன் முபாரக் ஆகியோரால் நடத்தப்பட்டது.

கி. பி. 1320 முதல் 1325 வரை **கியாசுதீன் துக்ளக்** ஆட்சி நடத்தினார். 1325 முதல் 1335 வரை **முஹம்மது பின் துக்ளக்** ஆண்டார். பயபக்தியுடன் போற்றி வளர்க்கப்பட்ட 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை இந்தியாவில் முதன் முதலில் தடை செய்தவர் இவர்தான். இவருக்குப்பின் பைருஸ்ஷா நஸ்ருத்தீன், மஹமூத் துக்ளக் ஆட்சி செய்தனர்.

கி. பி. 1413ல் தௌலத்கான் லோடி ஆட்சி செய்தார். அவருக்குப்பின் கிஜர்கான் சையத் முபாரக்ஷா சுல்தான் முஹம்மத் அலாவுதீன், பஹ்லுல் லோடி சுல்தான் சிக்கந்தர் இபுராகீம் ஆகியோர் ஆட்சி செய்தனர்.

இந்திய வரலாற்றிலேயே நினைவில் நிலைத்து நிற்கும் பேரரசு **முகலாயப் பேரரசுதான்.** 1526 முதல் 1530 வரை **ஜஹீருத்தீன் முஹம்மத் பாபர்** மிகச் சிறப்பாக ஆட்சி செய்தார். இவர் சிறந்த போர் வீரர். மிகச் சிறந்த நிர்வாகி. மனிதப் பண்பாட்டின் எடுத்துக் காட்டாக விளங்கியவர். சகோதரத்துவத்தை வளர்க்க அரும்பணி செய்தவர் பாபர்.

அவருக்குப் பின் 1530 முதல் 1540 வரை **ஹுமாயூன்** ஆண்டார்.

1540 முதல் 1545 வரை குறுகிய காலமே ஆண்டாலும் இந்தியாவில் மகத்தான சாதனை புரிந்தவர் **ஷேர்ஷா** என்ற **பரீத்.** இவரது ஆட்சி காலத்தில்தான் மாநிலங்கள், மாவட்டங்கள், தாலுகாக்கள் பிரித்து அமைக்கப்பட்டன. நிலங்கள் சர்வே செய்யப்பட்டன. நிலவருமானத்தில் சிறுபகுதி தானியம் அல்லது பணமாக வரி வசூலிக்கப்பட்டது. பஞ்சாயத்து அமைப்புக்கள், நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. புதிய நாணய முறை அமல்படுத்தப்பட்டது. ராணுவம், காவல் துறை அமைப்புக்கள் தோன்றின. கல்கத்தாவையும் டெல்லியையும் இணைக்கும் நெடுஞ் சாலையையும் நல்ல சாலை வசதிகளையும் அமைத்ததோடு, நிழலுக்கு மரங்கள் நடப்பட்டன. குதிரைகளின் மூலம் கடிதப் போக்குவரத்தும் தபால் தலையும் இந்தியாவில் அறிமுகப்படுத் தியதே சக்கரவர்த்தி **ஷேர்ஷா**தான்.

இவருக்குப்பின் இஸ்லாம்ஷா, அதில்ஷா, சிக்கந்தர் பின்னர் மீண்டும் ஹுமாயூன் ஆகியோர் 1556 வரை ஆண்டனர்.

1556ல் தமது 14 வயதில் மன்னராக்கப்பட்டவர் **அக்பர்.** அவரது மெய்காப்பாளர் பைராம் கான் இஸ்லாமிய வழியில் ஆட்சி நடத்த விரும்பினார். அக்பர் 18 வயதானதும் பைராமை நீக்கி விட்டு ஆட்சி நடத்தினார், ஷெர்ஷாவை பின்பற்றி 50 ஆண்டு காலம் மிகச் சிறப்பான ஆட்சி நடத்தினார், தீனே இலாஹி என்ற புதிய மதத்தையும் உருவாக்கினார். அவருடன் அவர் மதமும் அழிந்தது.

1605 முதல் 1627 வரை **ஜஹாங்கீர்** ஆட்சி செய்தார். 1628 முதல் 1656 வரை **ஷாஜஹான்** சிறப்பாக ஆண்டார். உலகப் புகழ் பெற்ற **தாஜ்மஹாலையும் டெல்லி செங்கோட்டை,** அழகிய மசூதிகளையும் கட்டினார்.

ஷாஜஹானின் மகனாக 1618ல் பிறந்த **ஔரங்கஸீப் ஆலம்கீர்** 1658 முதல் 1707 முடிய அரை நூற்றாண்டு காலம் இந்தியாவை ஆண்டார். கிழக்கிலும் தெற்கிலும் மிகச் சிறிய பகுதிகள் நீங்கலாக ஆப்கானிஸ்தான் காஷ்மீர் முதல் பரந்த இந்திய துணை கண்டம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி நடத்திய பெருமை மாமன்னர் ஔரங்கஸீப் ஒருவரையே சாரும். அவர் இஸ்லாத்தின் மீது ஆழ்ந்த பற்று கொண்டிருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக மதவாதிகளால் அதிகம் விமர்சிக்கப்படுகிறார். இன்றைய நவீன விஞ்ஞான வசதிகள் எதுவுமில்லாத அந்தக் காலத்தில் இவ்வளவு பரந்த பகுதியை 50 ஆண்டுகள் ஆட்சி செய்தது வரலாற்றில் ஈடு இணை இல்லாத சாதனையே.

அவரது ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்களும் உயர் பதவியில் இருந்தனர். பிற மத ஆலயங்களுக்கு மான்யம் வழங்கினார். தமது தேவைகளுக்கு தாமே உழைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். 89 வயது வரை வாழ்ந்த ஆலம்கீர் அந்த வயதிலும் நன்கு படித்து சிறந்த தீர்ப்பளிக்கும் நீதிமானாகத் திகழ்ந்தார். **குர்ஆன் ஹதீஸின்**படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்

ஆலம் கீர் அவுரங்கஸீப் இந்திய முஸ்லிம்களுக்காக இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தை ஒன்று திரட்டி தொகுத்துக் கொடுத்தார். **ஷெய்கு நிஜாமுத்தீன் புர்ஹான்** என்ற மார்க்க மாமேதையின் தலைமையில் 12 பேர் அடங்கிய உலமா பெருமக்களால் இச்சட்டத் தொகுப்பு உருவாக்கப் பட்டது. **'' அல்பதாவா ஹிந்தியா ''** என்றும் **பதாவா ஆலம்கீர்** என்றும் அழைக்கப்படும் இச் சட்டத் தொகுப்பை உருவாக்க அமைக்கப்பட்ட இஸ்லாமிய அறிஞர் குழுவில் காயல்பட்டணத்தைச் சேர்ந்த **மகான் சதக்கதுல்லாஹ் அப்பா** அவர்களும் பின்னர் அவர்களது உடல்நிலை காரணமாக மகானது மகனார் **முஹம்மதப்பா லெப்பை** அவர்களும் அவுரங்கஸீப் மன்னரால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தென் இந்தியாவின் பிரதான காஜி என்ற பதவிக்கும் மகான் முஹம்மதப்பா லெப்பை அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்.

காயல்பட்டணத்து வள்ளல் சீதக்காதி. வங்காளத்தில் மாமன்னர் அவுரங்கசீப்பின் கவர்னராக நியமிக்கப்பட்டு திறம்படவும் நற்பெயருடனும் பணியாற்றினார்.

ஔரங்கஸீபிற்குப்பின் பஹதூர்ஷா, ஜஹந்தர்ஷா, பாரூக் ஸையிர், முகம்மத்ஷா, அகமத்ஷா போன்றோர் ஆட்சி செய்தனர். இவர்களின் காலத்தில் இந்தியாவில் வெள்ளையர்களின் ஆதிக்கமும் ராஜதந்திரமும் நிறைந்திருந்தன.

850 ஆண்டுகளுக்கு மேல் முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவை ஆண்டிருக்கின்றனர். மதத்தை பரப்புவது அவர்களது நோக்கமாக இல்லை. அதனால்தான் இந்தியாவிலும் ஏன் டெல்லியிலும் முஸ்லிம்கள் இன்று சிறுபான்மையினராக உள்ளனர்.

இந்தியாவை மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்த முகலாய மன்னரே வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தாயக மண்ணை காக்கின்ற சுதந்திர போராட்டத்தையும் துவக்கி வைத்தது பெருமைக்குரியதன்றோ !

முகலாய கடைசிப் பேரரசர் **பஹதூர்ஷா** தலைமையில் இப்போராட்டம் நடந்தது. முன்னாள் ஹிந்து மகாசபை தலைவர் **திரு. வீர சாவர்க்கர்** அவர்கள் எழுதிய **'' முதல் இந்திய சுதந்திர யுத்தம் ''** என்ற நூலில், '' முதலாவது சுதந்திர யுத்தத்தை உருவாக்கிய மகா மேதாவிகளில் **அஸிமுல்லா கானுக்குத்**தான் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் '' என பெருமையாக குறிப்பிடுகிறார்.

மேலும் அவர், ''**மௌலவி அஹமத்ஷா**—அவரது புனிதமான பெயரானது ஹிந்துஸ்தானத்துக்கே ஒரு ஜோதியை கொடுத்திருக்கிறது. தேசத்திற்காக அவர் புரிந்த அற்புத சாகசங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. வெள்ளையர்களை எதிர்க்க உதவி கேட்ட மௌலவி அகமத் ஷாவை, ராஜாஜகன்னாத சிங்கும் அவரது தம்பியும் நயவஞ்சகமாக வரவழைத்து சுட்டுக் கொன்றனர். அவர்கள் இருவரும் மௌலவி தலையை வெட்டி 13 மைல் தூரத்திலுள்ள தானுவிற்கு ஓடி ஆங்கிலேய அதிகாரிகள் காலடியில் வைத்தனர். அதற்கு 50000 ரூபாய் வெகுமதி ஆங்கிலேயர் அளித்தனர்'' என்று குறிப்பிடுகிறார்.

மேலும் **திரு. வீர சாவர்கர்,** '' மற்றவர்களைக் காட்டிக் கொடுத்தால் விட்டு விடுகிறோம் என்று கேட்டும் காட்டிக் கொடுக்க மறுத்து, என் உதிரத்திலிருந்து ஆயிரக்கணக்கான வீரர்கள் உதிப்பார்கள் என சொல்லி ஆங்கிலேயர்களின் தூக்கு தண்டனையை புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்டவர் **பீர் அலி** '' என குறிப்பிடுகிறார்.

சக்கரவர்த்தி **பகதூர்ஷா** வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அனைத்து மன்னர்களுக்கும் கடிதம் அனுப்பினார். இந்தியாவின் சுதந்திரத்தையும் சுயாட்சியையும் பாதுகாக்க எவர் ஆட்சி செய்தாலும் எனக்கு முழு சம்மதம் என அறிவித்தார். வெள்ளையர்களால் கைது செய்யப்பட்ட பஹதூர்ஷா 1862ல் ரங்கூனில் தூக்கிலிடப்பட்டார்.

பஹதூர்ஷாவின் குமாரர்கள் மூவரையும் வெள்ளைய தளபதி ஹாட்சன் சுட்டுக் கொன்றான். அந்த மூவரின் சடலங்களும் போலீஸ் ஸ்டேஷன் எதிரில் கொடூரமாக கழுகுகளுக்கு இரையாகப் போடப்பட்ட கொடுமை இந்திய முஸ்லிம்களின் தியாகத்திற்கு எடுத்துக்காட்டு.

ஷேக் கரீம் பக்ஷ்தான் முதன் முதலில் மிருகக் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாவை தொட மறுத்து போராடினார். வடமேற்கு எல்லைப்புறத்தில் வெள்ளையர்களை எதிர்த்து **மிர்ஸா அலிகான்** என்ற **இப்பி பக்கீர்** யுத்தம் செய்தார். இன்னும் எண்ணற்ற முஸ்லிம்கள் முதலாவது சுதந்திர போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்தனர்.

வட இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் தொடங்கு முன்பே தென் இந்தியாவில் வெள்ளையர்களை எதிர்த்து 1767 முதல் 69 முடிய **ஹைதர் அலி** சண்டையிட்டார். 1782ல் ஹைதர் அலி மரணத்திற்குப்பின் பதவி ஏற்ற **திப்பு சுல்தான்** 1799ல் வெள்ளையனை நேருக்கு நேர் எதிர்த்து அதில் வீர மரணமடைந்தார்.

இந்தியாவில் சுதந்திர உணர்வுகள் துளிர்விட்ட நேரத்தில் 1885ல் **ஆலன் ஆக்டெனியன் ஹியூம், வில்லியம் வெட்டர்பர்ன்** என்ற ஆங்கிலேயர்களால் **இந்திய தேசிய காங்கிரஸ்** ஆரம்பிக்கப் பட்டது. அதன் இந்தியத் தலைவர்கள் **தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஷ் ஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே** போன்றோர்.

1885ல் காங்கிரஸ் அமைக்கப்பட்டதும் அதன் மூன்றாவது தலைவராக **பத்ருதீன் தாயப்ஜீ** தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது தலைமையில் 1887ல் மதராஸ் நகரில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. 1896ல் **ரஹ்மதுல்லா சயானி** தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1820ல் குஜராத் சத்தியவார் பகுதியில் பனியா பிரிவைச் சேர்ந்த ஒரு குடும்பம் இஸ்லாத்தை தழுவியது. அப்படி இஸ்லாத்தை தழுவியவருக்கு வால்ஜி பூஞ்சா, ஜின்னா பூஞ்சா என இரு பிள்ளைகள். இதில் ஜின்னா பூஞ்சாவுக்கு 1876 டிசம்பர் 25ல் பிறந்தவர் **முஹம்மது அலிஜின்னா.** மிகச்சிறந்த வழக்கறிஞரான அவர் தமது 28ம் வயதில் 1904ல் காங்கிரஸில் சேர்ந்தார்.

1906 டிசம்பர் 30 அன்று **டாக்கா** நகரில் **ஆகாகான், முஹ்ஸினுல் முல்க்** போன்றவர்களின் முயற்சியால் **முஸ்லிம் லீக்** ஆரம்பிக்கப்பட்டது.இதன் அமைப்புக் கூட்டம் **நவாப் விகாருல் முல்க்** தலைமையில் நடந்தது. **டாக்கா நவாப்** வரவேற்புரையாற்றினார். **டில்லி ஹக்கீம் அஜ்மல்கான்** முஸ்லிம் லீக் நோக்கங்கள் அடங்கிய தீர்மானத்தை முன்மொழிந்தார். **நவாப் மொஹ்சினுல் முல்க்** வழி மொழிந்தார்.

1915ல் **காந்திஜி** தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி இந்தியா வந்து காங்கிரஸில் சேர்ந்தார். 1919ல் காங்கிரஸ் தலைமை பொறுப்பேற்றார். 10-10-1913ல் **ஜின்னா சாகிப்** முஸ்லிம் லீகில் சேர்ந்தார். காங்கிரஸ் முஸ்லிம் லீக் இரண்டிலும் அக்காலத்தில் உறுப்பினராக இருக்கலாம். இவைகளின் வருடாந்திர மாநாடுகள் ஒரே நகரில் ஒரே பந்தலில் நடைபெற்றன. காந்திஜி அகிம்ஸா வழியில் சத்தியாகிரகத்தை போதித்தார். கோபாலகிருஷ்ண கோகலேயின் தீவிரவாதம் தான் ஜின்னா சாகிபுக்கு பிடித்தது.

இந்திய விடுதலைக்கு மிகப் பெரும் தியாகம் செய்த **மௌலானா முகம்மது அலி, மௌலானா ஷவ்கத் அலி** சகோதரர்கள் **காந்திஜியின்** பூரண ஒத்துழைப்போடு கிலாபத் இயக்கத்தை 1919 முதல் 1924 வரை நடத்தினர்

இந்திய விடுதலைப் போரில் தியாகம் செய்த உத்தமர்களில் **மௌலானா அபுல் கலாம் ஆஸாத், எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான், அல்லாமா இக்பால்** போன்றோரின் பங்கு அளவிடமுடியாதது.

1906ல் ஆரம்பிக்கப்பட்ட **"முஸ்லிம் லீக்"** 1935ல் **காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னா** அவர்களை தலைவராக ஏற்றது.

1940ல் பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கை எழுந்தது.

1946 செப்டம்பர் 2ல் காங்கிரஸ் கட்சி இடைக்கால மந்திரி சபை அமைத்தது, அரசியல் நிர்ணய சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் பொது இடங்கள் 205யும் காங்கிரஸ் வென்றது. முஸ்லிம் தொகுதிகள் 78ல் 73ஐ முஸ்லிம் லீக் வென்றது. 1946 அக்டோபர் 13ல் இடைக்கால அமைச்சரவையில் முஸ்லிம் லீக் அமைச்சர்கள் பதவி ஏற்றனர். **லியாகத் அலிகான், இஸ்மாயில் சந்திரிகர், கஸ்னபர் அலிகான், அப்துல்ரவூப்நிஸ்தார்** ஆகியோரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த **ஜோகேந்திரநாத் மண்டலும்** அமைச்சர்களாக இடம் பெற்றனர். இந்த அமைச்சரவை யில் நிதி அமைச்சராக இருந்த **லியாகத் அலிகான்** முதலாவது பட்ஜெட்டில் உப்பு வரியை முழுவதும் ரத்து செய்தார். 1930ல் உப்பு சத்தியாகிரகத்தை **காந்திஜி** ஆரம்பித்தார். 1946ல் மகாத்மாவின் கனவை நனவாக்கியவர் **நவாப் ஜாதா லியாகத் அலிகான்.**

1947 ஜுலை 18 இந்தியா பற்றிய மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதும் **இந்தியாவிற்கு மவுண்ட் பேட்டன் பிரபுவும், பாகிஸ்தானுக்கு காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னாவும்** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்கள்.

1947 ஆகஸ்ட் 14ல் பாகிஸ்தானும் 15ம் தேதி இந்தியாவும் சுதந்திரம் பெற்றன.

இந்த விடுதலை திட்டத்தில் பிரிட்டிஸ் அரசின் சார்பாக மவுன்ட் பேட்டன் பிரபுவும் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய்பட்டேல், ஆச்சாரிய கிருபளானி ஆகியோரும், முஸ்லிம் லீக் சார்பாக முஹம்மதலி ஜின்னா, லியாகத் அலிகான் அப்துர்ரவூப் நிஸ்தார் ஆகியோரும், சீக்கியர் சார்பில் பல்தேவ்சிங்கும் கையெழுத்திட்டனர்.

1947 ஆகஸ்ட் 14 நள்ளிரவில் அரசியல் நிர்ணயசபை கூடி இந்தியாவை சுதந்திரநாடு என பிரகடனப்படுத்தியபோது அல்லாமா முகம்மது இக்பால் அவர்களின் 'சாரே ஜஹான்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா' என்ற உருதுமொழி பாடலும், டாக்டர் ரவீந்திரநாத்தாகூர் அவர்களின் ஜன கன மன என்ற வங்க மொழி பாடலும் இசைக்கப்பட்டன.

இந்தியா சுதந்திரம் பெற்றதும் அதன் தலையாய பிரச்சனையாயிருந்தது 562 சுதேச சமஸ்தானங்கள் பற்றியதுதான். உள்துறை அமைச்சராக இருந்த **சர்தார் வல்லபாய் பட்டேல்** இந்த சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்க நடவடிக்கை எடுத்தார். இதில் மிகவும் பிரச்சனையாக இருந்த சமஸ்தானங்கள் ஹைதராபாத்தும், காஷ்மீரும். ஹைதராபாத்தில் மக்களில் அதிகம் இந்துக்களாகவும் மன்னர் முஸ்லிமாகவும், காஷ்மீரில் மக்களில் அதிகம் முஸ்லிம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தனர். இந்திய முஸ்லிம்கள் இந்த சமஸ்தானங் கள் இந்தியாவுடன் இணைய ஆதரவு தெரிவித்தனர்.

சுதந்திரத்திற்குப்பின் கடைசியாக பாகிஸ்தான் சென்ற இந்திய முஸ்லிம்லீக் தலைவர் **'காயிதே மில்லத்' எம். முஹம்மது இஸ்மாயில் சாகிப்** ஒரு வாரம் கராச்சியில் தங்கினார். அகில இந்திய முஸ்லிம் லீகிற்கு ஹபீப் பேங்கில் 40 லட்ச ரூபாய் ரொக்கம் இருந்தது. இதில் இந்தியாவில் உள்ள முஸ்லிம் லீகிற்கு பங்காக 17 லட்ச ரூபாய் கொடுக்க வந்ததை காயிதே மில்லத் ஏற்க மறுத்து விட்டார். அவர் பாகிஸ்தானை விட்டு வெளியேறு முன், 'இன்று நாங்கள் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். எங்கள் பிரச்சனைகளை நாங்கள் பார்த்துக் கொள்வோம். எங்களுக்காக நீங்கள் தலையிடக்கூடாது. உங்களிடம் நாங்கள் எதிர்பார்ப்பது உங்கள் நாட்டு சிறுபான்மையினரை கௌரவமாக நடத்துவது ஒன்றைத் தான்' என்று **காயிதே மில்லத்** கண்கலங்க கூறியதைக் கேட்டு பாகிஸ்தான் பிரதமர் **லியாகத் அலிகான்** அழுதார்.



காயிதே மில்லத்

இந்திய அரசியலை உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை முதன்முறையாக 9—12—1946ல் டெல்லியில் கூடிய போது அதன் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் தேர்ந் தெடுக்கப்பட்டார் இச்சபைக்கு மதராஸ் ராஜதானியிலிருந்து நான்கு முஸ்லீம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர், 1. ஹாஜி அப்துல்சத்தார் ஹாஜி இஷாக் சேட் 2. B. போக்கர் சாகிப் 3. மஹபூப் அலிபேக்சாகிப் 4. K,T.M, அஹமது இபுராகிம் சாகிப் இவர்களனைவரும் முஸ்லிம் லீகினர், இச்சபையி லிருந்து ஹாஜி அப்துல்சத்தார் ஹாஜி இஷாக் சேட் ராஜினாமா செய்ததால் அந்த இடத்திற்கு 20—7—48ல் காயிதேமில்லத் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றார்.

1947 - 49ல் இந்திய அரசியல் அமைப்பை உருவாக்க **அரசியல் நிர்ணய சபை** பலமுறை கூடி விவாதித்தது. 14-9-49 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தியாவின் ஆட்சி மொழி எது என்ற பிரச்சனை வந்தது. மெஜாரிட்டியினர் இந்திதான் ஆட்சி மொழியாக வேண்டு மென்றனர். வங்காளம் மற்றும் அதை அடுத்துள்ள கிழக்கு மாநிலங்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்க கோரினர். ஆனாலும் எவரும் எதிர்பாராதவிதமாக இந்நாட்டின் மொழிகளில் தொன்மை வாய்ந்ததும் இலக்கியஇலக்கண சிறப்பும் பெற்றதும் பேச்சு வழக்கில் அழகானதுமான எனது தாய் மொழி **தமிழ்**தான் **இந்தியா வின்** ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென வாதிட்டவர் **காயிதே மில்லத்.**

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் அமைக்க முதல் குரல் கொடுத்தவரும் சேலம் உருக்காலை அமைக்க நாடாளுமன்றத்தில் ஓயாது பேசியவரும் காயிதே மில்லத் அவர்கள்தான்.

1947ல் காஷ்மீரத்திற்காக பாகிஸ்தான் யுத்தம் செய்த போது காஷ்மீர் இந்தியாவைச் சேர்ந்தது. அதற்காக உயிரைக் கொடுப்போம் என காயிதே மில்லத் வெளியிட்ட அறிக்கை ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியப் பிரதிநிதியால் சுட்டிக்காட்டப்பட்டது. வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.

1962ல் வடகிழக்கு எல்லைக்காக சீனாயுத்தம் செய்த போதும் 1965ல் மேற்கு எல்லைக்காக பாகிஸ்தான் போர் தொடுத்த போதும் 1971ல் பங்களாதேஷ் விடுதலைக்காக இந்தியா பாகிஸ்தான் சண்டை நடந்த போதும் இந்திய முஸ்லிம்கள் தங்கள் தாய்நாடு இந்தியாவிற்கு பக்கபலமான பேராதரவு கொடுத்தனர். இந்திய ராணுவத்திலுள்ள முஸ்லிம்களின் மெய்சிலிர்க்க

வைக்கும் தியாகம் பாராட்டிப் பேசப்பட்டது. இப்போதும் காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற உள்நாட்டுப் பிரச்சனையானாலும் சரி, இலங்கை போன்ற வெளிநாட்டுப் பிரச்சனையானாலும் இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்திய முஸ்லிம்கள் பேராதரவு காட்டி வருகின்றனர்.

சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களில் பலர் உயர் பதவிகளில் இருந்துள்ளனர். இந்தியாவின் மூன்றாவது ஜனாதிபதியாக **டாக்டர் ஜாஹிர் ஹுசைன்** *13-5-67* முதல் *3-5-69* முடிய இருந்துள்ளார். அதற்கு முன் 1962—67ல் இரண்டாவது துணை ஜனாதிபதியாகவும் இருந்துள்ளார். *20-7-69* முதல் *24-8-69* முடிய ஆக்டிங் ஜனாதிபதியாகவும் *25-2-68* முதல் *16-12-70* முடிய இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் *1979* முதல் *1984* வரை குடியரசு துணை தலைவராகவும் **நீதிபதி ஹிதாயதுல்லாஹ்** இருந்துள்ளார்.

பக்ருதீன் அலி அகமது *24-8-74* முதல் *11-2-77* முடிய இந்திய ஜனாதிபதியாக இருந்துள்ளார்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது மாநில முஸ்லிம் முதலமைச்சராக காஷ்மீரில் **ஷேக் அப்துல்லா** பொறுப்பேற்றார். கேரளா, மகாராஷ்டிரம், அஸ்ஸாம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களிலும் பாண்டிச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்களிலும் சமீப காலம் வரை முஸ்லிம்கள் முதல்வர்களாக இருந்துள்ளனர்.

சுதந்திர இந்தியாவில் மத்திய அமைச்சரவையில் முக்கியப் பொறுப்புக்களில் முஸ்லிம்கள் பணி செய்துள்ளனர். தற்போது உள்துறை அமைச்சராக **முப்தி முஹம்மது சயீத்** பதவியில் உள்ளார்.

இந்திய உச்ச நீதிமன்றம், மாநிலங்களின் உயர் நீதி மன்றங்களில் முஸ்லிம்கள் பலர் தலைமை நீதிபதிகளாகவும், நீதிபதிகளாகவும் சிறப்பு பெற்றுள்ளனர். இந்திய உச்சநீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாக கேரளாவைச் சேர்ந்த **பாத்திமா பீவி** இன்று சிறப்பான பணி செய்கிறார்.

தற்போது வல்லரசு நாடுகளே வியக்கும் நெடுந்தூர ஏவுகணைகளை இந்தியாவின் அதுவும் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிமான விஞ்ஞானி **அப்துல் கலாம்** கண்டுபிடித்து வெற்றிகரமாக சோதனை செய்தது பெருமைக்குரிய விஷயமாகும்.

''தாய்நாட்டை விசுவாசிப்பது இறை நம்பிக்கையின் (ஈமானின்) ஒரு பகுதி'' இது **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்களின் வாக்கு. இதன்படி நடப்பதுதான் முஸ்லிம்களின் கடமை. ○

பணம் வசூலிக்க முல்லாவின் வழி

முல்லா, ஒரு செல்வந்தரிடம் சென்று, ''ஐயா, வாங்கிய கடனை அடைக்க முடியாமல் துன்புறும் ஒருவனுக்கு உதவி செய்ய சிறிது பணம் தாருங்கள்'' என்று கேட்டார்.

முல்லா கூறியதைக் கேட்டு சில பொற்காசுகள் கொண்டுவந்து கொடுத்த, அந்த பணக்காரர் ''முல்லா, கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதற்காக நீங்கள் மேற்கொண்டுள்ள இந்த முயற்சியைப் பாராட்டுகிறேன். கடனை அடைக்க முடியாமல் துன்புறும் அந்த மனிதர் யார்?'' என்று வினவினார்.

பணக்காரரிடம் இருந்து பொற்காசுகளை வாங்கி, பத்திரப்படுத்திய முல்லா, ''அவர் வேறு யாருமில்லை. நான்தான்!'' என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியே சென்றார்.

சில மாதங்கள் சென்றபின்னர், முல்லா மீண்டும் அந்த பணக்காரரிடம் வந்தார்.

போன தடவை தம்மை ஏமாற்றிவிட்டுச் சென்ற முல்லாவைப் பார்த்ததும், பணக்காரர் மிக்க சினத்துடன், ''என்ன முல்லா, யாரோ ஒருவர் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்படுகிறார் என்பதற்காக இப்பொழுது பணம் வாங்க வந்திருக்கிறீர்கள். அப்படித் தானே?'' என்று கேட்டார்.

அதற்கு முல்லா ''ஆமாம்'' என்று பதில் சொல்ல, அந்தப் பணக்காரர், ''பெற்ற கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்படும் மனிதர் நீங்கள்தானே!'' என்று வினவினார்.

அதைக் கேட்ட முல்லா ''அந்த மனிதர் நான் இல்லை. வேறொரு ஏழை'' என்று பதில் சொன்னார். பணக்காரர், ''அப்படியா! உண்மையாக நீங்கள் இல்லையா?'' என்று கேட்டார்.

''சத்தியமாக நான் இல்லை'' என்று முல்லா பதில் சொன்னவுடன், கோபம் நீங்கிய பணக்காரர் உள்ளே போய், சில பொற்காசுகளைக் கொண்டு வந்து முல்லாவிடம் கொடுத்தார், முல்லா அவற்றை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டார்.

பணம் கொடுத்தவர் முல்லாவைப் பார்த்து, ''முல்லா, அந்த ஏழை வாங்கிய கடனை அடைக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு எவ்வாறு உண்டாயிற்று?'' என்று கேட்க, முல்லா, அந்த ஏழைக்கு கடன் கொடுத்தவனே நான்தான். ஆதலால் என் கடனை நான் வசூல் பண்ண வேண்டாமா?'' என்று கூறியபடியே வேகமாக வெளியே சென்றார்.

செத்தும் கொடை கொடுத்த

வள்ளல் சீதக்காதி

- எம். ஜாவித் முஹ்ஸின் -

இந்திய சரித்திரத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் **காயல்பட்டணத்தின்** புகழ் பேசப்படும் இடத்திலெல்லாம் **வள்ளல் சீதக்காதி** வாழ்ந்து கொண்டிருக்கிறார் இல்லை... இல்லை... வாரிக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்.

வரலாற்றுப் பெருநகராம் காயல்பட்டணத்தில் சரித்திர புகழுக்குரிய மரைக்காயர் மரபில் கி. பி. 1640 ல் பிறந்து 1715 வரை வாழ்ந்தவர் சீதக்காதி. இவரது தந்தை மௌலா சாகிபு என்ற பெரிய தம்பி மரைக்காயர். தாயார் முஹம்மது பாத்திமா. சீதக்காதியின் இயற்பெயர் செய்யது அப்துல் காதிர். தமிழ் புலவர்களால் 'செய்தக்காதி' என்றும் சீதக்காதி என்றும் திரித்து வழங்கப்பட்டு இறுதியில் வள்ளல் சீதக்காதியாகவே நிலைத்து விட்டது.

பாலப்பருவத்திலேயே இவர் தந்தையை இழந்ததால் தாயின் அன்பிலேயே வாழ வேண்டியதாயிற்று, வாழவேண்டிய வயதில் கணவனை இழந்து கைக் குழந்தையுடன் சொல்லொணா துன்பம் எய்திய அந்த அம்மையார் தன் உடலை வருத்தி உழைத்தார். வேலைக்காரியாகவும் சமையல்காரியாகவும் அடிமைத் தொழில் புரிந்தார். தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தன் மகனை சான்றோனாக்க அரும்பாடுபட்டார். வேற்று வீடுகளில் வேலை பார்த்து அங்கு கிடைக்கும் சோற்றினை மகனுக்கு ஊட்டும்போது உயர்ந்த நல்லொழுக்க கதைகளையும் **நபிகள் நாயகம்** (ஸல்) அவர்கள் தம்பிள்ளை பிராயத்தில் தந்தையையும் தாயையும் இழந்து அனாதையாக வாழ்ந்த வரலாற்றையும் எடுத்துக் கூறுவார். ஓய்வு நேரங்களில் தம் மகனை காயல்பட்டணத்தின் அழகான கடற்கரைக்கு அழைத்துச் சென்று மரக்கலங்களைக் காட்டி மகிழ்வார்.

அந்தக் காலத்தில் காயல்பட்டணத்தின் மரைக்காயர்கள் பெரு வணிகர்களாக வளம் பெற்று குலசேகரன்பட்டினம், தேவிபட்டினம், பெரியபட்டினம், கீழக்கரை, அதிராம்பட்டினம் காரைக்கால், நாகூர், நாகப்பட்டினம் பரங்கிப் பேட்டை, சென்னைபட்டினம் முதலிய துறைகளிலெல்லாம் மரக்கலம் ஓட்டி பெரும் நிதி குவித்தனர். அந்தந்த ஊர்களிலேயே தங்கியிருந்தும் தொழிலும் செய்தனர். அவர்களில் ஞானிகளாக மகான்களாக வாழ்ந்தவர்கள் மார்க்க சேவை செய்து அந்தந்த ஊர்களிலேயே அடங்கப்பட்டிருக்கிறார்கள்.

சீதக்காதியும் சிறுவயதிலேயே மரக்கலத் தொழிலில் ஈடுபட்டார். உண்மையான நேர்மையான உழைப்பால் வர்த்தகம் பெருகியது தமிழகத்திலும் கேரளாவிலும் மட்டுமின்றி மலாயாவிலும் இலங்கையிலும் செங்கடல் துறைமுகங்களிலும் தமது வர்த்தக காரியாலயங்களையும் சீதக்காதி நிறுவினார். தமது தலைமை காரியாலயத்தை இராமநாதபுரம் கீழக்கரையில் அமைத்தார். அதனால் அவர் காயல்பட்டணத்தினின்றும் கீழக்கரையில் வாழ வேண்டியதாயிற்று.

பக்தாது, பஸ்ரா போன்ற இடங்களிலிருந்து விலையுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்தில் செய்த பட்டுத்துணி, கண்ணாடி பொருட்கள், பன்னீர் அத்தர் போன்ற நறுமணப் பொருட்கள் கேரளாவின் கள்ளிக்கோட்டை, கொடுங்களூர், கொல்லம் போன்ற நகரங்களுக்கும், இந்தியாவிலிருந்து முத்து பவளம் முதலிய மணிகளையும் மிளகு, இலவங்கம், ஏலம்' இஞ்சி, சந்தனம், அகில், தேக்கு. முதலியவைகளை அரபு உலகிற்கும் சீதக்காதியின் மரக்கலங்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்து கொண்டிருந்தன. சீதக்காதி மரைக்காயரின் விரிந்த கடல் வாணி

பத்தில் அவருக்கு உற்ற துணையாய் இருந்து உதவியவர் அவரதுஒன்றுவிட்ட இளைய தம்பி மாமு நயினா பிள்ளை மரைக்காயர்.

சீதக்காதி மரைக்காரின் நேர்மையான பரந்த வணிகத்தை, சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை கட்டி அப்போதுதான் காலூன்ற தொடங்கியிருந்த ஆங்கிலேயர் அறிந்து அவரோடு உறவு கொள்ள விரும்பினர்.

அன்பும் கனிவும் நிறைந்த புரவலர்கள் அறிவும் திறமையும் வாய்ந்த புலவர்களை போற்றி ஆதரிப்பது நம் நாட்டின் தனிச் சிறப்பாகும். இதனால் தான் இறவா புகழ் படைத்த இலக்கியங்கள் நமக்கு கிடைத்தன. வள்ளல் சீதக்காதியும் புலவர்களைப் போற்றி ஆதரவு தந்தார். பழமரம் நாடும் பறவைகள் போல் புலவர்கள் சீதக்காதியின் இருப்பிடம் தேடி படை எடுத்து பொன்னும் மணியும் பெற்று வறுமை நீங்கிச் சென்றனர். வறியவர்கள் அனைவருக்கும் வாரி வாரி வழங்கினார் வள்ளல்.

சீதக்காதியின் காலத்தில் தமிழ் நாட்டில் மிகக் கடுமையான பஞ்சம் தலைவிரித்தாடியது. "பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஜெஷுட் சங்கத்தின் வரலாறு" என்ற ஆராய்ச்சி நூலை எழுதியுள்ள **ஜே. எஸ். சாண்ட்லர்** இப்பஞ்சம் பற்றி அதில், "மறவர் நாட்டில் தோன்றிய பஞ்சம் கி. பி. 1678ஆம் ஆண்டிலிருந்து 1685ம் ஆண்டுவரை 7ஆண்டுகள் நீடித்தது. புலிக்கூட்டங்கள் எங்கும் சுற்றி அலைந்தன. ஊரிலும் புலிகள் புகுந்தன, ஓர் ஊரில் ஒரு சில நாட்களுக்குள் எண்ணற்ற ஆடு மாடுகள் கொல்லப்பட்டது மல்லாமல் எழுபது மனிதர்களும் மறைந்தனர், பீதியால் பயந்த மக்கள் இரவில் வெளியூர் பயணம் செய்வதில்லை பகலில் செல்வதும் பாதுகாப்பற்றதாய் இருந்தது இரவில் வீட்டைச் சுற்றி நெருப்பு வளர்த்தே தூங்கினர். புலிகளோடு ஓநாய்களும் அச்சமின்றி திரிந்தன. வெட்டுக்கிளிகள் பயிர்களை மொய்த்து தின்று விட்டன. நாடு முழுவதும் நச்சுப்பூச்சிகள் பரவின. இறந்து விட்டவர்களை புதைக்கக்கூட முடியாமல் ஆற்றின் கரைகளில் எறிந்து விடப்பட்டிருந்தன" என குறுப்பிடுகிறார்,

இந்நிலைகண்டு சீதக்காதியின் அருள் உள்ளம் அழுதது. தன் மரக்கலங்களை நெல்விளையும் பிரதேசங்களுக்கு அனுப்பி நிறைந்த தானியத்தை கொள்முதல் செய்து அள்ளி அள்ளி மக்களுக்கு தானமாக வழங்கினார். கொள்ளை லாபம் சம்பாதிக்க சுயநலமிகள் குறுக்கிட்டாலும் அவர்களை கண்டித்து மக்கள் பசி போக்கினார். மக்களும் சீதக்காதியை வள்ளல் சீதக்காதி என வாழ்த்தினர்.

கி. பி. 1709 முதல் 1713 வரை இராமநாதபுரம் கடற்கரையோரத்தில் தொடர்ந்து கடும் மழை பெய்து பயிர்கள் அழிந்துபஞ்சம் தலைவிரித்தாடிய போது இவர் கும்பனியாருக்கு அரிசி மிளகு முதலியவற்றை மரக்கலங்களில் ஏற்றி அனுப்ப செய்திருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு பல ஊர்களிலிருந்தும் அரிசி நவ தானியங்களை தருவித்து மக்களுக்கு வினியோகித்தார்.

வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல் சீதக்காதி தாம் தேடிய செல்வத்தை சேர்த்து வைக்கவில்லை. அவைகள் அனைத்தையும் வாரி வழங்கினார். அவரது இறுதி காலத்தில் அவரிடம் எஞ்சியது ஒரு கணையாளி ஒன்றுதான். இதற்குரிய புலவர்ஒருவர் வருவார் அவரிடம் கொடுத்து விடுங்கள் என ஆணையிட்டு வள்ளல் இம்மண்ணுலகை நீத்தார்.

வள்ளல் மறைந்த செய்தி கேட்டு மக்கள் கூட்டங் கூட்டமாக கீழக்கரை திரண்டு வந்தனர் கண்கள் கலங்கி அழுதனர். சீதக்காதி இறந்த செய்தியறியாத புலவர் படிக்காசுத் தம்பிரான் நீண்ட தூரம் நடந்து கீழக்கரை வந்தார். வாடி உடல்நலிந்து துன்பப்பட்ட அவர் வந்த இடத்தில் வள்ளலின் மறைவு கேட்டு நம்பிக்கை தகர்ந்து வள்ளலின் சமாதி அருகே நினைவிழந்து விழுந்து புலம்பி பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார். இதைக் கேள்வியுற்ற வள்ளலின் உறவினர்கள் சீதக்காதி விட்டுச் சென்ற மோதிரத்தை செய்தி சொல்லி அப்புலவரிடம் கொடுத்தனர் வள்ளலின் பேருள்ளம் கண்டு வியந்த அப்புலவர் "**செத்தும் கொடுத்தான் வள்ளல் சீதக்காதி**" என வாழ்த்தினார்.

சீதக்காதி தம் அடக்கத்தலம் அடக்கமான தலமாயிருக்க வேண்டும் என விரும்பினார். மேலும் தம் அடக்கத் தலத்தின் மீது மழைபெய்து புல் பூண்டுகள் முளைக்க வேண்டும் அவற்றை ஆடு மாடுகள் உண்ண வேண்டும் எனஆசைப்பட்டார். எனவே தம் அடக்கத்தலத்தின் மீது கட்டடம் எதுவும் எழுப்பக் கூடாது என கூறிச்சென்றார் அவரது ஆசை நிலைத்து நிற்கிறது. அவரது புகழ் பரவிச் சிறக்கிறது. ●

மாதவர் உறவிலும் மன்னர்கள் நட்பிலும்

காயலார் சீதக்காதி

- அல்ஹாஜ் **S. E. முகிய்யத்தீன் தம்பி** -

புகழுக்குரிய காயல்பட்டணம் ஆன்மீக உலகிற்கும் அருஞ்செயலாற்றி உள்ளது. இங்கிருந்து தோன்றிய பல நூறு மகான்கள் தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் ஆன்மீகம் வளர்த்து அடக்கமாகியிருக்கிறார்கள். இவர்களில் இஸ்லாத்தின் முதலாவது கலீபா **ஹஸரத் அபூபக்கர் சித்தீக்** [ரலி] அவர்கள் வழியில் வந்த **ஹஸரத் சுலைமான்** [ஒலி] அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். காயல்பட்டணம் மரைககார் பள்ளித் தெரு **மரைக்கார் பள்ளியில்** இம்மகான் அடக்கமாகியுள்ளார்கள்.

வட இந்தியாவிலிருந்து ஐந்து பிராமணக் குடும்பத்தினர் இஸ்லாத்தை தழுவி பாண்டி நாட்டையடைந்து எமனேஸ்வரத்தில் வாழ்ந்து வரலாயினர். அவர்களில் ஒருவர் அவ்லூர் பள்ளியில் இமாமாகப் பணியாற்றி வந்தார் அவருக்கு பாத்திமா என்ற ஒரு மகள் இருந்தார்.

சுலைமான் ஒலி அவர்கள் எமனேஸ்வரம் சென்றபோது பாத்திமா அவர்கள் தந்தையிடம் அவரை மணமுடித்துக் கேட்டு திருமணம் செய்து கொண்டார்கள். இவர்களுக்குப் பிறந்த ஐந்து மக்களும் இறைநேசச் செல்வர்களாகவே வாழ்ந்தனர்.

இவர்களில் மூத்தவர் **ஷம்சுத்தீன் ஒலி** காயல்பட்டணம் காதிரிய்யா கொடிமர சிறுநயினார் பள்ளியிலும் அடுத்தவர் **அஹ்மது ஒலி** மஞ்சக் கொல்லையிலும் மூன்றாமவர் சதக்கா என்ற **சதக்கத்துல்லாஹ் ஒலி** கீழக்கரையிலும் நான்காமவர் **ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலி** காயல்பட்டணம் அப்பாபள்ளியிலும் ஐந்தாமவர் **ஸலாஹுத்தீன் ஒலி** களக்காடு ஏர்வாடியிலும் அடங்கப் பெற்றுள்ளனர்.

ஹிஜ்ரி 1000 ம் ஆண்டில் பிறந்த சுலைமான் ஒலி அவர்கள் ஹிஜ்ரி 1079 ரபியுல் அவ்வல் பிறை 19ல் தம் 79 ம் வயதில் காலமானார்கள்.

சுலைமான் ஒலி அவர்களுக்குஹிஜ்ரி 1042ல்பிறந்த 'மாதிஹுர்ரசூல்' சதக்கதுல்லாஹ்அப்பா அவர்கள் தம் தந்தையிடமும் அவர்களின் உற்ற நண்பரான அதிராம்பட்டினம் சின்ன நெய்னா லெப்பை ஆலிமிடமும் கல்வி கற்று மாபெரும் அறிஞராகத் திகழ்ந்தார்கள்.

படிக்காசுத் தம்பிரான், நமச்சிவாயப் புலவர் போன்ற புலவர்களும் பலயோகிகளும் 4000 பேர் வரை இவர்களிடம் வந்து கலிமா சொல்லி இஸ்லாத்தை தழுவினர். இம்மகானிடம் ஆன்மீக மாணவராக சீதக்காதி பயின்றார்,

கி. பி, 1658 முதல் 1707 முடியஅரை நூற்றாண்டு காலம் கிட்டதட்ட பரந்த இந்திய துணை கண்டம் முழுவதையும் **ஆலம்கீர் ஔரங்கஸீப்** மிகச் சிறப்பாக ஆட்சி செய்தார். மாமன்னருக்கு மகான் சதக்கத்துல்லா அப்பா அவர்களின்புகழ் தெரியவர டில்லிவரும்படி மன்னர் அழைத்தார் மகான் செல்லவில்லை. இருவருக்கிடையிலும் கடிதப் போக்குவரத்து தொடர்ந்தது, மகான் எழுதும் கடிதங்களிலெல்லாம் சீதக்காதியின் உள்ளப்பண்புகளையும் உலகியல் அறிவையும் தவறாமல் குறிப்பிட்டார்கள். மன்னரும் சீதக்காதியை தமக்குதவியாக டில்லிக்கு அனுப்ப வேண்டினார். மகானும் சீதக்காதியை டில்லிக்குச்செல்ல தூண்டினார். மன்னரின் அழைப்பையும் மகானின் வேண்டுகோளையும் தட்டமுடியாமல் சீதக்காதி டில்லி சென்று மன்னரை சந்தித்தார். மாமன்னரோ வங்காளத்தின் கவர்னராக சீதக்காதியை பொறுப்பேற்கச் செய்தார். சிலமாத காலம் அங்கு ஆளுனராக இருந்தபோது அங்குள்ள தட்ப வெட்பமும் மக்களின் மனப்போக்கும் இவருக்கு ஒத்துவராததால் அங்கிருந்து திரும்பினார். **மூதறிஞர் ராஜாஜி** வங்காளத்தின் ஆளுனராக பொறுப்பேற்றபோது 'தமிழ் நாட்டிலிருந்து இரண்டாவது ஆளுனராக வங்காளத்திற்கு வந்துள்ளேன்' என குறிப்பிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களுக்கும் பாண்டியர்களுக்கும் எப்போதுமே நெருக்கமான நட்பு உண்டு. மாமா மருமகன் என்று உறவுமுறை சொல்லியே இரு சமூகமும் இன்றைக்கும் அழைத்துக் கொள்கின்றனர். **சுந்தரபாண்டித் தேவர்** பாண்டிய நாட்டை சிறப்பாக ஆட்சி செய்த போது **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் வம்சா வழியைச் சேர்ந்த காயல்பட்டணத்தில் குடியேறிய **செய்யிது ஜமாலுத்தீனை** தமது பிரதான தளபதியாக நியமித்தும் மன்னரின் மறைவிற்குப்பின் சுல்தான் ஜமாலுத்தீன் தேவர் இன மக்களால் மன்னராக்கப்பட்டதும், கி பி. 1303ல் உலகப் பாதுகாப்பு மன்றத்தின் தலைவராக பொறுப்பேற்க சுல்தான் பாரசீகம் சென்றபோது **குலசேகர தேவரிடம்** சுல்தான் ஜமாலுத்தீன் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்ததும் பழைய வரலாறு.

அதே போன்றே கிழவன் சேதுபதி என்ற **விஜயரகுநாத தேவரும்** முஸ்லிம்களிடம் நல்ல நட்பு கொண்டிருந்தார். கி. பி. 1674-1710ல் ஆட்சி செய்த அம்மன்னரின் அமைச்சராகவும் சிலகாலம் சீதக்காதி பணியாற்றினார். அப்போது அவர் செய்த சீர்திருத்தங்கள் பல, புகழ்பெற்ற இராமேஸ்வரம் கோவிலை சீதக்காதி புதுப்பித்தார். கீழக்கரையில் அதேவேலைப் பாடுகளுடன் பெரிய குத்பா பள்ளியை கட்டினார். இரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாடு இப்பள்ளியில் உருவங்கள் இல்லாததுதான்.

கி. பி. 1660க்குப் பின்னர்தான் திருச்செந்தூரில் புகழ்பெற்ற திருமுருகன் கோவிலில் மேலக் கோபுரம் கட்டப்பட்டது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த தேசிக மூர்த்தி சுவாமிகள் இதனைக் கட்டினார். கோபுரத்தின் ஆறாவது நிலை வந்த போது பணமில்லாமல் சுவாமிகள் திண்டாடினார். அக்காலத்தில் காயல்பட்டணத்தல் வாழ்ந்த வள்ளல் சீதக்காதியிடம் உதவி வேண்டினார். சீதக்காதியும் ஒரு மூட்டையை நன்கொடையாகக் கொடுத்தார். மறுநாள் காலை சுவாமிகள் அதை திறந்த போது பொற்காசுகள் இருந்தன. பின்னர் மேலக் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது.

சீதக்காதி வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் பெரும்புலவர் **உமறுப் புலவர்**. இவரது முன்னோர்கள் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள். கி. பி 1642 அக்டோபர் 23ல் பிறந்த உமறுப்புலவர் 1703 ஜூலை 17ல் காலமானார். புலவரின் தந்தை எட்டையபுரம் அரசர்களுக்கு நறுமணப் பொருட்கள் விற்று வந்தனர். எட்டையபுர அரசவைக் கவிஞராக கடிகை முத்துப்புலவர் இருந்த போது அவரிடம் உமறுப் புலவர் தமிழ் கற்றார். இச்சமயம் வடநாட்டிலிருந்து வாலை வாருதி எட்டையபுரத்தில் போட்டிக்கு வந்தார். அவரிடம் போட்டியிட கடிகை முத்துப்புலவர் தயங்கிய போது அவரது மாணவரான உமறு தாமே போட்டியிடுவதாக கூறி வாலை வாருதியை வாதத்தில் வென்றுவாகை சூடினார். அதன்பின் எட்டையபுர மன்னரின் அரசவைக் கவிஞருமானர்

அச்சமயம் சேதுபதி மன்னரின் தூதராக எட்டையபுரம் வந்த வள்ளல் சீதக்காதி உமறுப் புலவரின் திறமையைக் கண்டு **நபிகள் நாயகம்** (ஸல்) அவர்களின் வரலாற்றை காப்பியமாக இயற்றி தர வேண்டினார். புலவர் சம்மதிக்கவே வள்ளல்,மகான் சதக்கத்துல்லாஹ் அப்பாவிடம் புலவரை அழைத்துச்சென்று காப்பியம் இயற்ற உரை நல்கி உதவ வேண்டினார்.

புலவரின் தோற்றத்தையும் உடையையும் கண்ட மகான் உரைதர மறுத்துவிட்டார், மனம் வருந்திய புலவர் அன்றிரவே **அண்ணல்** நபி மீது 83 கவிதைகள் பாடினார் அதுவே முதுமொழி மாலை என அழைக்கப்படுகிறது. வெளித்தோற்றத்தை வைத்து ஒருவரின் உள்ளத்தை எடைபோடுவது தவறல்லவா என வேதனைப்பட்ட மகான் அன்றிரவு தூங்கவே இல்லை. மறுநாள் காலை தொழுகையில் புலவரையும் வரவேற்று உரை தர இசைந்தார்கள்.

மகான் அவர்களுக்கு ஓய்வு கிடைக்காததால், காயல்பட்டணத்தில் பிறந்து பரங்கிப்பேட்டை (மஹ்மூதுபந்தர்) வாழும் தம்மாணவர் **மஹ்மூது தீபி** அவர்களிடம் உரைதர பணித்தார்கள் அதன்பின் மூன்று காண்டங்களில் 92 படலங்களையும் 5027 செய்யுட்களையும் கொண்ட **சீறாப்புராணம** காப்பியததை உமறுப்புலவர் யாத்தார்.

உமறுப் புலவர் பாடாது விட்ட **அண்ணல் நபி** (ஸல்) அவர்களின் எஞ்சிய வரலாற்றை காயல்பட்டணத்தில் பிறந்த **பனீ அஹமது மரைக்காயர்** 1829 செய்யுட்கள் அடங்கிய 39 பாடல்களில் பாடிமுடித்துள்ளார் அது **சின்ன சீறா** என்றழைக்கப்படுகிறது. **புலவர் நாயகம்** என்ற **சேகனாப்புலவர்** தாம்பாடிய 'புத்ஹுஷ் ஷாம்' காப்பியத்தில் அண்ணல் நபி அவர்கள் ஆட்சி துவங்கி அவர்கள் இறுதி காலம்வரை 965 செய்யுட்களில் அடங்கிய 11படலங்களில் பாடி அதற்கு முகம்மதியா காண்டம் என பெயரிட்டுள்ளார் இவர்களும் காயல்பட்டணத்தைச் சேர்ந்தவர்களே என்பது பெருமைக்குரியது.

காயல்பட்டணம் அப்பாபள்ளித் தெருவில் பிறந்த **கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர்** முஸ்லிம் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய தொண்டு செய்தவர். இவரே சீறாப்புராணத்தின் இறுதியில் உமறுப்புலவர் வரலாற்றை எழுதியவர். சீறாப்புராணத்திற்கு எளிய தமிழில் வசன நூலும் இப்புலவரே எழுதியுள்ளார் என்பதும் பெருமைக்குரியதே! ●

புலவர்கள் பார்வையில்
புரவலர் சீதக்காதி

- **காயல்மௌலானா** B. Sc. -

இறவாப் புகழ் படைத்த வள்ளல் சீதக்காதி இந்த உலகுக்கே சொந்தம். அவரை உரிமை கொண்டாட எல்லோருக்குமே உரிமை உண்டு, ஆனால்அந்தஉரிமையின் அடிப்படையில்லாமல் உண்மையின் அடிப்படையில்தான் வள்ளல் சீதக்காதியை காயல்பட்டணம் உரிமை கொண்டாடுகிறது.

பழுத்த மரத்தை நாடி பறவைகள் செல்வதுபோல் வளளல் சீதக்காதியைத் தேடி புலவர்கள் படையெடுத்த வண்ணம் இருந்தார்கள். வள்ளலோ புலவர்கள் வறுமை நீக்க அள்ளி அள்ளிக் கொடுத்தார்.

படிக்காசுத் தம்பிரான் வாடி வதங்கி வள்ளலை நாடிவந்தார். முதல் முறையாக வள்ளலின் வாயிலில் இல்லை என்னும் சொல்லை அவர் கேட்டார். ஆம்! சீதக்காதியின் மண்ணுலக வாழ்வுக்கு முடிவுரை எழுதப்பட்டிருந்த நேரமிது.

துடித்தார் புலவர். 'காயல் துரையே சீதக்காதி வள்ளலே தமிழ் நாவலர்களை ஒட்டாண்டிகளாக்கி சமாதிக்குள் புகுந்து கொண்டாயே என்று பாடினார்.......

''தேட்டாளன் காயற்றுறை சீதக்காதி சிறந்த வச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத்தான் தமிழ் நாவலரை
ஒட்டாண்டியாக்கி யவர் கடம் வாயிலொரு பிடிமண்
போட்டான் அவனு மொளித்தான் சமாதிக் குழி புகுந்தே!''

இப்படி அழுதும் அவர் மனம் ஆறுதல் அடையவில்லை, இனியார் இருந்து என்ன பயன்? கொடை மிகுந்த சீமான் இறந்த போதே புலமையும் செத்து விட்டதே என்ற பொருள் பொதிந்த

''பூமாதிருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந்தென்ன நன்னா வலர்க்குக்
கோமானழகமர் மால் சீதக்காதி கொடைமிகுந்த
சீமானிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே''

அத்தோடு மட்டுமா புலவர் நிறுத்தினார். காயல் நகர் துரையான சீதக்காதி திரும்பி வந்து பிறந்தால் தான் புலவர்களுக்கு இனி பிழைப்பு உண்டு என்பதற்கு

''மறந்தாகிலு மரைக்காசுங் கொடா மடமாந்தர் மண்மேல்
இறந்தாவதென்ன, இருந்தாவதென்ன, இறந்து விண் போய்ச்
சிறந்தாளும் காயற்றுரை சீதக்காதி திரும்பி வந்து
பிறந்தாலொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே''

எனபுலவர் பாடினார். படிகள் பல ஏறினும் படிக்காசுப் புலவரை ஆதரிப்பாரில்லை, எனவே தான்

''ஈயாத புல்லர் இருந்தைன்ன போயென்ன எட்டி மரங்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயாசக மென்றுரைப் போர்க்கு செம்பொன் பிடிபிடியாய்
ஓயா மலீபவன் மால் சீதக்காதி ஒருவனுமே;
என பாடினார்.

படிக்காசர் அத்தோடு மட்டுமா நிறுத்தினார்.

"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி, கலவியில்
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்; தொலைவில் பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்; அனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால் சீதக்காதி இருகரமே"

எனவும் பாடினார்.

வள்ளல் சீதக்காதி பஞ்சகாலங்களில் அள்ளிக் கொடுத்து கண்டுநெஞ்சமலர்ந்து புகழ்த்தார் படிக்காசுபுலவர்

"ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்தில் தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்ன தானத்துக்கு
மார் தட்டிய துரை மால் சீதக்காதி வாராதயனே"

படிக்காசுத் தம்பி ரானைப் போன்றே நமச்சிவாயப் புலவரும் வள்ளல் சீதக்காதியை புகழ்ந்து பாடியுள்ளார்,

"தடக்கும் பவணி புரிகொம் பாசலப் பொருந்தந்தி
நடக்கும் துரங்கத் துரை சீதக்காதி நன்னாட்டினல்
வடக்குங் குமக் கொங்கை மின்னே றெரு வாயிலிலே
கிடக்குங் கவியும் பரராஜரத்ன கிரீடமுமே"

இது நமச்சிவாயப் புலவர்பாடிய புகழ். இதைப் போன்றே பல நூறு புலவர்கள் சீதக்காதியை புகழ்ந்து பாடியுள்ளனர்.

பூங்கோதை என்ற விலைமகள் தான் சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் கள்வர் திருடிக் கொண்டு போய் விட்ட நிலையில் இடிந்து போய் வள்ளல் சீதக்காதியின் வாயில் ஏறி

"தினங் கொடுக்கும் கொடையானே
தென் காயல் பதியானே சீதக்காதி
இனங் கொடுத்த வுடைமையல்ல தாய் கொடுத்த
வுடைமையல்ல வெளியாளாசை
மனங் கொடுத்து மிதழ் கொடுத்து மபிமானந்
தனைக் கொடுத்து மருவிரண்டு
தனங் கொடுத்து மீட்டுடைமை கள்ளர்கையில்
பறி கொடுத்து தவிக்கின்றேனே"

என கதறினாள். அவலமே உருவாய் நின்ற அப்பெண்ணைப் பார்த்து மனமிறங்கி வள்ளல் கேட்டார், "பெண்ணே! உனக்கு எவ்வளவு பொன் வேண்டும்? அதற்கு அவளோ 'ஐயா! ஆயிரம் பொன் என்றாள். அவள் ஐயாயிரம் பொன் கேட்கிறாள் என்றெண்ணி அப்போதே ஐயாயிரம் பொன்னை அள்ளிக் கொடுத்தார் வள்ளல் சீதக்காதி.

1939ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் செய்தக்காதி பேரில் நொண்டி நாடகம். என்ற செய்யுள் நூல் வெளியிடப்பட்டது.

சோலை மலையைச் சார்ந்த வணங்கா புலி மகன் ஒடுங்கா புலி கைதேர்ந்த கள்வன், திருச்சியில் விலை மகள் வீட்டில் திருடி, பின் திருப்பதி கள்வன் ஒருவனையும் ஏமாற்றி செஞ்சிக்கு சென்றான்.

செஞ்சி கோட்டையை முற்றுகையிட்டிருந்த முகலாயப்படை முகாமிலும் திருட முயன்று வீரர்களிடம் அகப்பட்டு ஒரு காலையும் கையையும் இழந்தான். அச்சமயம் சீதக்காதியின் ஒன்றுவிட்ட தம்பி மாமு நெயினாமரைக்காயர் செஞ்சிக்கு வந்தபோது, அவனிடம் நூறு பொன் கொடுத்து காயமாற்றிவிட்டு வள்ளல் சீதக்காதியிடம் வரும்படி சொன்னார். அதன்படி வள்ளலிடம் வந்து அவர் கொடுத்த ஆயிரம் பொன்னையும் பெற்று அவர் அறிவுரைபடி கீழக்கரையில் வைத்து மகான் சதக்கத்துல்லாஹ் அப்பாவிடம் தெளிவு பெற்று கலிமா சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து பின்னர் சீதக்காதியால் ஹஜ் யாத்திரைக்கு அவரது மரக்கலத்திலேயே அனுப்பிவைக்கப் பட்டுமதினாவில் இவரது கை கால்கள் சுகமடைந்ததாக இந்தநாடகத்தில் செய்யுள்கள் உள்ளன.

"காயலின் மகராயன் - செய்தக்
காதியை திசை நோக்கிக் கையெடுத்தேன்
தாயென உபசரித்த - மாமுநெயினார்
தன்னையு நினைந்தே தாழ்ச்சி செய்தேன்
ஆழிசூழ் புவி வாழி - செருவில்
அரியதுரை சேதுபதி வாழி
கீழக்கரை வாழி - சிங்கக்
கேசச் சதக்கத்துல்லா வாழி"

என்று இந்த நாடகம் முடிகின்றது.

மொத்தத்தில் எல்லா புலவர்களும் **வள்ளல் சீதக்காதியை** வானளாவப் புகழும் போது அந்த மகத்தான வள்ளலை பெற்றுத் தந்த **காயல்பட்டணத்தையும்** சேர்த்தே புகழ்கின்றனர். என்பது மேற்கண்ட பாடல்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

இந்த அழியா காவியங்கள் இருக்கும் வரை உண்மைகள் அழியவா போகின்றது?.

சிதம்பரனார் மாவட்டமும் - திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியமும்

சில விவரங்கள்:-



"மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

புதிய மாவட்டங்களுக்கு சரித்திரச் சான்றோர்களின் பெயர்களைச் சூட்டுகிறோம் அந்த முறையில் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் தியாகசீலர் சிதம்பரனாரைப் போற்றும் வகையில்தான் இந்தப் புதிய மாவட்டத்திற்கு சிதம்பரனார் மாவட்டம் என்று பெயர் சூட்டி உள்ளேன்.

சிதம்பரனார் மாவட்டத்திற்கு தலைநகராக தூத்துக்குடி அமைந்துள்ளது. நாட்டு விடுதலைப் போரில் தன்னை தந்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு.

சிதம்பரனார் மாவட்டம் தேசிய எழுச்சியின் சின்னமாக அமைகின்றது. இந்த மாவட்டம் எல்லா துறைகளிலும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம் மாவட்ட மக்களுக்கு என் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியை தலை நகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்."

—19 - 10 - 1986 அன்று சிதம்பரனார் மாவட்டத்தை தொடங்கி வைத்து அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் **M.G.R.** அவர்கள் ஆற்றிய உரை.



சிதம்பரனார் மாவட்ட வருவாய் கோட்டங்கள்:

1. தூத்துக்குடி : தூத்துக்குடி, திருச்செந்தூர்
   ஸ்ரீவைகுண்டம்
   சாத்தான்குளம்.
2. கோவில்பட்டி: கோவில்பட்டி, விளாத்திகுளம்
   ஓட்டப்பிடாரம்.

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள வட்டங்கள் :

1. தூத்துக்குடி 2. ஸ்ரீவைகுண்டம் 3. திருச்செந்தூர் 4. சாத்தான்குளம்
5. கோவில்பட்டி 6. ஓட்டப்பிடாரம் 7. விளாத்திகுளம்.

ஊராட்சி ஒன்றியங்கள் :

1. புதுக்கோட்டை 2. ஸ்ரீவைகுண்டம் 3. கருங்குளம் 4. சாத்தான்குளம்
5. உடன்குடி 6. திருச்செந்தூர் 7. ஆழ்வார்திருநகரி 8. ஓட்டப்பிடாரம்
9. விளாத்திகுளம் 10. புதூர் 11. கோவில்பட்டி 12. கயத்தாறு.

நகராட்சிகள் :

1. தூத்துக்குடி 2. கோவில்பட்டி.

பேரூராட்சிகள்:


தேர்வு நிலை:	முதல் நிலை:	இரண்டாம் நிலை:
1. காயல்பட்டணம்	11. ஆழ்வார்திருநகரி	18. கானம்
2. ஆறுமுகநேரி	12. ஆத்தூர்	19. பெருங்குளம்
3. நாசரேத்	13. ஏரல்	20. தென்திருப்பேரை
4. சாத்தான்குளம்	14. சாயர்புரம்	
5, ஸ்ரீவைகுண்டம்	15. கடம்பூர்	
6. திருச்செந்தூர்	16. கயத்தாறு	
7. உடன்குடி	17. புதூர்	
8. எட்டையபுரம்		
9. கழுகுமலை		
10. விளாத்திகுளம்		

சிதம்பரனார் மாவட்ட வருவாய் கிராமங்கள்: 457

ஊராட்சி மன்றங்கள்: 408

பரப்பளவு: 4, 635 ச. கி. மீ. மக்கள் தொகை : 13, 50, 581

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம்.



பரப்பளவு: 50.68 ச.மைல்

மக்கள் தொகை: 99 439

கிராமங்கள்: 60

பேரூராட்சிகள்: 4

ஊராட்சிகள்: 11

பேரூராட்சிகள்:

1. காயல்பட்டணம் 2. திருச்செந்தூர்
3. ஆறுமுகனேரி 4. கானம்

ஊராட்சிகள் :

1. நல்லூர் 2. வீரமாணிக்கம்
3. மேலப்புதுக்குடி 4. அம்மன்புரம்
5. மூலக்கரை 6. வீரபாண்டியன்பட்டினம்
7. வீரபாண்டியன்பட்டினம் சூரல் 8. பள்ளிப்பத்து
9. காயாமொழி 10. பிச்சிவிளை
11. மேல திருச்செந்தூர்.

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் : 63 பேர்



A. S. பாண்டியன்
ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்
திருச்செந்தூர்.

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பணிகள் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டதின்கீழ் ஒதுக்கீடு ரு. 10 . 50 லட்சம்.

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 11 ஊராட்சியில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் 41 வேலைகள் கால்வாய் மராமத்து வேலை 5 ஊரனி ஆழப்படுத்தும் வேலை 1, வெள்ளத் தடுப்புச் சுவர் 14, சாலைகள் அமைத்தல் 21, வேலைகள் 1989-90ல் செய்யப்பட்டு முடிவு பெற்றுள்ளது. திருச்செந்தூர் காணியாளன் புதூரில் (ஆறுமுகநேரி பேரூராட்சி) 3 தரைமட்ட நீர்த் தேக்கக் தொட்டிகள் ரூ. 2.37 லட்சம் செலவில் வேலை செய்து 1989-90ல் முடிவு பெற்றுள்ளது. இதனால் சுமார் 5000 மக்கள் பயன் அடைவார்கள். ஊராட்சி ஒன்றிய சாலைகள் மிகவும் பழுதடைந்த பேருந்துகள் செல்லும் சாலையும் பரமன் குறிச்சி-திருச்செந்தூர் சாலையிலிருந்து பிச்சிவிளை செல்லும் 4. கி மீ. தூரம் தார் சாலை ரூ. 6.70 லட்சம் செலவில் வேலை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் நடப்பு ஆண்டில் திருச்செந்தூர் குலைசை சாலையிலிருந்து என். முத்தையாபுரம் சாலையில் எல்லப்பநாயக்கன்குளம் மருகால் தண்ணீர் செல்லும் பாதையில் மூன்று கண்கள் கொண்ட பாலம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2 லட்சம் நத்தைகுளம் - சீனந்தோப்பு ஒன்றிய சாலை மிகவும் பழுதடைந்து இருப்பதனால் செப்பனிட ரூ. 4 லட்சமும் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தில் பெற்று நடப்பு ஆண்டில் வேலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருச்செந்தூர் பேருந்து நிலையம் சமீபம் கட்டுக் கடைகள் வளாகம் ரூ 3 லட்சம் ஒன்றிய பொது நிதியிலிருந்து செய்ய ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. மேலும் வீரமாணிக்கம் ஊராட்சி மன்றம் அம்பலப்பரப்பு அம்மன்புரம் ஊராட்சி கானாவிளை மேலதிருச்செந்தூர் ஊராட்சி நடுநாலுமூலைகிணர் வீர பாண்டியன்பட்டனம் ஊராட்சி செந்தில்நகர் ஆதிதிராவிட மக்களுக்கு குடிநீர் வசதி செய்ய புதியதாக 4 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி கட்ட நடப்பு நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில்
மொத்தம் 648 பேரூராட்சிகள்
அவற்றில் 16 பேரூராட்சி நகரியங்களாகும்
மொத்த ஜனத் தொகை
சுமார் 1 கோடி

நம்மைப் பற்றி

இந்திய நாட்டின் பரப்பு 3,287,782 ச. கி.மீ.

வடக்கு தெற்காக 3214 கி.மீ. கிழக்கு மேற்காக 2933 கி.மீ.

நில எல்லை 15 200 கி.மீ.

கடல் எல்லை 6100 கி.மீ.

மக்கள்தொகை 684 மில்லியன்(1981 சென்ஸஸ்)

23.73 ·/. பேர் நகரங்களிலும் 76.27 ·/. பேர் கிராமங்களிலும் வசிக்கின்றனர்.

உலக நிலப்பரப்பில் 2.4 ·/. கொண்ட நம் நாட்டில் உலகின் மக்கள் தொகையில் 15·/. பேர் வாழ்கின்றனர்

உலகில் மக்கள் தொகையில் இரண்டாவதும், பரப்பளவில் ஏழாவதும் பெரிய நாடு நமது இந்தியா

தமிழ் நாட்டின் பரப்பு 1, 30, 069 ச.கி.மீ.

மக்கள் தொகை 48.3 மில்லியன் (1981 சென்ஸஸ்)

இந்திய நாட்டில் நமது மாநிலத்தின் பரப்ப 4 ·/. ஆனால் மக்கள் தொகையில் 8·/

சராசரியாக ஒரு சதுர கி.மீ. 371 பேர் வாழ்கின்றனர் இது இந்திய சராசரி மக்கள் நெருக்கத்தை விட இரண்டு மடங்காகும்.

சென்னையில் சராசரியாக ஒரு ச.கி.மீ 24000 பேர் வசிக்கின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் 207 பேர்

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 67·/. கிராமங்களிலும் 33·/. நகரங்களிலும் வாழ்கின்றன

—காயல்

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற
பதவி ஏற்பு விழா

அ. மு. செய்யது முகம்மது


நிர்வாக அதிகாரி, தேர்வுநிலை பேரூராட்சி, காயல்பட்டணம்.

மக்களுக்காக மக்களால் மக்களை ஆளுவது ஜனநாயகம். அதிலும் கிராமங்களிலிருந்து பெரிய நகரங்கள் வரை தங்களுடைய பகுதியை வளமாக்க, தங்கள் மக்களின் தேவையறிந்து பணி செய்ய உள்ளாட்சி மன்றங்களை பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டே நிர்வகிப்பது ஜனநாயகத்தில் மிகச்சிறப்பானதாகும்.

இப்படி அமைக்கப்படுகின்ற உள்ளாட்சி மன்றங்களுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு பஞ்சாயத்துராஜ் பற்றி நாடு தழுவிய அளவில் இன்று விவாதிக்கப்படுகின்றன. அத்தகைய அதிகாரங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப் பட்டால் காலதாமதமும் சிரமங்களும் இன்றி ஆக்கப்பூர்வமான முறையில் மக்கள் பணி செய்திட இயலும். அந்த நல்ல நோக்கம் நிறைவேற தேசிய அளவில் முயற்சிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். கடைசியாக நடைபெற்ற தேர்தலில் 3 ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டிருந்த பதவிகாலம் மீண்டும் ஐந்து ஆண்டுகளாக தமிழக அரசு நீட்டிப்பு செய்துள்ளது.

காயல்பட்டணத்தில் 27—1—1886ல் உள்ளாட்சி அமைக்கப்பட்டு அது பேரூராட்சியாக, தேர்வுநிலை பேரூராட்சியாக வளர்ச்சிகண்ட காலகட்டங்களில் பல்வேறு தலைவர்களும் உறுப்பினர்களும் பொறுப்பில் இருந்து பணி செய்திருக்கின்றனர். இடையில் 31-10-1979 முதல் 2-3-1986 முடிய மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களை (B. D. O.) தனி அதிகாரிகளாகக் கொண்டு நிர்வாக அதிகாரிகளே நேரடியாக நிர்வாகம் நடத்தினர்.



அ. மு. செய்யது முகம்மது

1986-ல் காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சியின் நூற்றாண்டு நிறைவில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய மன்றம் அமைக்கப்பட்டபோது நிர்வாக அதிகாரியாக செயல்படும் அரிய வாய்ப்பு எனக்கு கிட்டியது பெருமைக்குரியதாகும். காரணம் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய ஊரில் கட்சி அரசியலை மறந்து பகுதி வேறுபாடுகளை துறந்து ஒன்றுபட்ட உணர்வுடன் எல்லா ஜமாஅத் மற்றும் அனைத்து சமுதாய மக்கள் ஏகமனதாக **ஹாஜி V.M.S. லெப்பை** அவர்களை தலைவராக தேர்ந்தெடுத்திருந்தனர், துரதிருஷ்டவசமாக தலைவர், உபதலைவர் மற்றும் சில வார்டுகளிலும் தேர்தல்கள் நடைபெற்றன


3 3 86








காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றம்
பதவி ஏற்பு விழா.
3 3 86


காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றம்
பதவி ஏற்பு விழா.





23—2—1986ல் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெற்று 3—3—1986 திங்கள் கிழமை காலை 11-00 மணிக்கு பேரூராட்சி அலுவலக வளாகத்தில் கண்கவ்ரும் பிரம்மாண்டமான விழாவாக பதவி ஏற்பு விழா நடைபெற்றது. தலைவர் ஹாஜி V M.S லெப்பை அவர்கள் அவர்களது இல்லத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் தங்கள் தங்கள் பகுதிகளிலிருந்து ஊர்வலமாக வந்தனர்.

விழா நடைபெற்ற பந்தலுக்கு ஊரேதிரண்டு வந்திருந்தது ஆரம்பமாக புனித குர்ஆனிலிருந்து சில வசனங்கள் ஓதப்பட்டன. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் பாடப்பட்டது.

நகரப்பிரமுகர்கள் ஹாஜி L.K. செய்கு முகம்மது, ஹாஜி வாவு மொகுதூம் முகம்மது ஹாஜி M.S.M. பாஸுல் அஷ்ஹாப், ஹாஜி P.A. முஹ்யித்தீன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் நிர்வாக அதிகாரி அ.மு.செய்யது முகம்மது வரவேற்று பேசினார்.

தலைவர் பதவி ஏற்பு உறுதி மொழிக்குப்பின் முதலாவது வார்டிலிருந்து 14ம் வார்டுகள் முடிய உறுப்பினர்களுக்கு தலைவர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்

தொடர்ந்து நகரப்பிரமுகர்கள் ஹாஜி M. M. உவைஸ், ஹாஜி L. S. இபுராகீம், ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பாராட்டுக்களுக்கும் வாழ்த்தியவர்களுக்கும் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் நன்றி தெரிவித்து ஹாஜி V.M S. லெப்பை, M.N.சொளுக்கு அப்துல்காதர் காயல் மகபூப். P. அருணாசலம், S.L. வெங்கடாசலம் B.A., S.காசிராஜன் ஆகியோர் பேசினர்.

பேரூராட்சி தலைமை எழுத்தர் திரு R. சுப்பராயலு அவர்கள் நன்றிஉரைக்குப்பின் துஆ மற்றும் தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது.

என்றாலும் தேர்தலுக்குப்பின் எந்த பிரச்சணையுமின்றி முழு ஒற்றுமையுடன் காயல்பட்டணம் பேரூராட்சி மன்றம் ஆக்கப்பூர்வமாக செயல்படுவது மகிழ்விற்கும் மனநிறைவிற்கும் உரியதென்றால் அதுமிகையாகாது. அதிலும் நிர்வாக அதிகாரி உட்பட, பணியாளர்களும் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையாக அதே நேரம் பரஸ்பர நல்லெண்ண உணர்வுகளோடு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் மனம் திறந்து நேர்முகமாக விவாதித்து பேசி தீர்த்து ஒவ்வொரு காரியத்தையும் ஒன்றுபட்டு செயல்படுவது உயர் அதிகாரிகளாலும் பாராட்டைப் பெற்றது இன்றைய காயல்பட்டணம் பேரூராட்சியை பொறுத்தவரை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்றாகும்.

தலைவர் உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் அன்றாடம் அலுவலகம் வந்து மக்கள் பணிகளில் நேரடியாக ஈடுபடுவதும் காரியங்களை தாங்களாக முன்னின்று நடத்திக் கொடுப்பதும் வேறெங்கும் காணமுடியாத மகத்தான சாதனைகளாகும். 15 ரூபாய் வீட்டுபுள்ளி மாற்றும் விஷயத்திலிருந்து 15 லட்ச ரூபாய் பேருந்து நிலையம் வரை எவ்வளவோ காரியங்களை நிறைவேற்றியுள்ள தன்னலமற்ற தியாகி ஹாஜி V.M.S. லெப்பை அவர்கள் தலைமையிலான இம்மன்றத்தின் காலம் காயல்பட்டணத்தின் பொற்காலம் என குறிப்பிடுவதில் தவறில்லை. இம்மன்றத்தோடு இணைந்து என் பதவி காலம் முடியும் வரையிலும் நான் நிர்வாக அதிகாரியாக பணியாற்ற கிடைத்த வாய்ப்பு பெரும் பேறாகும்.

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி குழுக்கள்:

27—10—1986 முதல்

1. நியமனக்குழு:

ஜனாப் ஹாஜி V. M. S. லெப்பை
தலைவர்
ஜனாப் M. N. சொளுக்கு அப்துல்காதர்
உப தலைவர்
ஜனாப் A. M. செய்யது முகம்மது
நிர்வாக அதிகாரி

3. பொதுநோக்கு குழு:

ஜனாப் M. ஈசா லெப்பை புகாரி
ஜனாப் S. T. முகம்மது அலி
ஜனாப் S. S. E. சுல்தான்
ஜனாப் S. T. முஸ்தபா கமால்
திரு. காசிராஜன்

2. வேலைகள் குழு

ஜனாப் காயல் மகபூப்
ஜனாப் A. K. நெய்னா முஹம்மது
ஜனாப் ஹாஜி P.S.N.S. அப்துல்லா சாகிப்
திரு. P. அருணாசலம்
திரு. S. L. வெங்கடாசலம் B.A.,

வேலைகள்குழுவிலும் பொதுநோக்குகுழுவிலும் பேரூராட்சி தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரி இருவரும் சட்டப்படியான உறுப்பினர்கள்

காயல்பட்டணம் பேரூராட்சி பணியாளர்கள்

31—10—1990

A. நிர்வாகப் பணியாளர்கள்:

1 திரு அ. மு. செய்யது முகம்மது — நிர்வாகஅதிகாரி
2 திரு. N. துரைராஜ் — தலைமை எழுத்தர்
3 திரு. சோலைமலை — இளநிலை உதவியாளர்
4 திரு. S O. சாகுல்ஹமீது செய்யது மீரான் — இளநிலை உதவியாளர்
5 திரு. P. பொன்னம்பலம் — இளநிலை உதவியாளர்
6 திரு. V. முருகன் — பதிவரை எழுத்தர்
7 திரு. S அந்தோணிராஜ் — அலுவலக உதவியாளர்
8 திரு. சு, ராஜாதேவர் — அலுவலக காவலர்
9 திரு. P. முத்துசாமி — அலுவலக காவலர்

B. வரி வசூல் பணியாளர்கள்:

10 திரு. V. M. கிருஷ்ணன் — வரி தண்டலர்
11 திரு. S. முருகேசன் — வரிதண்டலர்
12 திரு. R. கணேசன் — வரி தண்டலர்
13 திரு. M. A. முகம்மது யூசுப் — வரி தண்டலர்

C. குடிநீர் பணியாளர்கள:

14 திரு. P. வெள்ளையன் — குடிநீர் இணைப்பாளர்
15 திரு. K. சுப்பையா —நீர்த்தேக்கதொட்டி காவலர்
16 திரு. K. பாஸ்கரன் — தண்ணீர் திறப்பாளர்

D. சுகாதார பொது பணியாளர்கள்:

17 திரு P. S பரமசிவன் — சுகாதார ஆய்வாளர்
18 திரு. M. லெட்சுமணன் — சுகாதாரமேற்பார்வையாளர்
19 திரு.P. ஆழ்வார்—சுகாதார மேற்பார்வையாளர்

E. சுகாதாரப் பணியாளர்கள்:

20 திரு. S. சண்முகம்
21 திரு P. வேலு
22 திரு. V. சண்முகம்
23 திரு. E. பால்ராஜ்
24 திரு. M. பட்டாணி
25 திரு. V. முத்துசாமி
26 திரு. S. சுடலைமாடன்
27 திரு. S. கிருஷ்ணன்
28 திரு. S. மூக்காண்டி
29 திரு. S. பெருமாள்
30 திரு. S. ஜெகநாதன்
31 திரு. M. முத்து
32 திரு. L. ராஜ்
33 திரு. M. சுந்தரம்
34 திரு. C. முத்துமாலை
35 திருமதி. M. வெள்ளக்கண்ணு
36 திருமதி. S. சுடலி
37 திருமதி. M. சுடலைமாடி
38 திருமதி. P. பாலம்மாள்
39 திருமதி. S. பாப்பா
40 திருமதி. V. சேர்மக்கனி
41 திருமதி. P. முத்தாரம்மாள்
42 திருமதி. M. லட்சுமி
43 திரு. M. ராமச்சந்திரன்
44 திரு. சொ. முருகன்
45 திரு. ச. முருகன்

அட்டைப் பட விளக்கம்

காயல்பட்டணம் அப்பாபள்ளி மைதானத்தில் நான்காவது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் போது நிலம் சர்வே பணியிலிருந்து திறப்பு விழா வரை அதன் ஒவ்வொரு பணியையும் பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந் தேன். அதன் மேல்மட்டபணி நடைபெற்ற போது மூங்கில் மற்றும் மரத்தால் அமைக்கப்பட்ட ஏணிவழியே ஏறி அதன் உச்சியில் நின்று பணிகளைப் பார்வை யிடுவதுண்டு. இதே ஏணிவழியே தலைவர் ஹாஜி V. M. S. லெப்பை அவர்களும் இந்த வயதில் ஏறி பார்வையிடுவது கண்டு பலரும் என்னைக் கண்டித்ததுண்டு. (பதவியேற்றபோதே மூன்று மேல்நிலை தேக்கங்களிலும் தலைவர் ஏறி பார்வை யிட்டதை பலரும் அறிய வில்லை.)

இதன் உச்சியில் ஒவ்வொரு நாளும் நான் ஏறுவதற்கு இன்னொரு காரணம் எழில் மிக்க காயல்பட்டணத்தை ரசிக்கவும்தான். மலைவாசஸ்தலம்போல எழில் கொஞ்சும் பசுமையழகும் கட்டிடக் கலையழகும் கீழேயிருந்தால் தெரிவதில்லை. மற்ற நீர்த்தேக்கங்களிலிருந்து பார்த்தால் எப்படியிருக்கும் என்பதற்காக மற்ற மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் ஏறினேன். நான் கண்ட நகரின் அழகை அப்படியே புகைப்படம் எடுக்க ஆசைப்பட்டேன்.

காயல்பட்டணத்தின் நான்கு நீர்த்தேக்க தொட்டிகளும் முறையே மேற்கு வடக்கு, கிழக்கு, மற்றும் தெற்கே அமைந்துள்ளன. அவைகளின் உச்சியில் நின்று முறையே வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு திசைகளை நோக்கி படம் எடுக்கச் சொன்னேன். காயல்பட்டணத்தின் அழகுமிக்க கடற்கரையை காலை யிலும் மாலையிலும் படம் எடுக்கச் செய்தேன். இந்தப் படங்கள் அனைத்தையும் முறைப்படுத்தி, முன் அட்டையில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் சின்னங்களை தற்போது நகரமைப்பில் உள்ளபடி அந்தந்த இடத்திலேயே அமைக்கவும், அதி லேயே எழுத்துக்களை அமைக்கவும் சொன்னேன். என் எண்ணம் ஆங்காங்கே சிதைக்கப்பட்டதால் தற்போது இடம் பெற்றுள்ளபடி தனித்தனியாக வெளி யிடவே முடிந்தது. இந்த அட்டைப்படம் என் ஆசையில் கால் பங்கைத்தான் நிறை வேற்றியுள்ளது. என் முயற்சிக்கு நவீன சினிமா தொழில் நுட்பம் பயன்படுத்தப் பட்டிருந்தால் பிரமிக்கதக்கதாக அமைந்திருக்கும். நீர்த்தேக்க தொட்டிகளின் மேலிருந்து எடுக்கப்பட்ட காயல் நகரின் அழகைத்தான் பின்பக்க அட்டையில் காண்கிறீர்கள்.

முன்பக்க அட்டையை அலங்கரிக்கும் கலைநகரின் வரலாற்றுச் சின்னங்கள்:
(வரிசைப்படி வலமிருந்து இடம்)

மகழரா, அல்ஜாமிவுல் கபீர் (குத்பாபெரியபள்ளி) அல்ஜாமிவுஸ் ஸகீர் (குத்பாசிறுபள்ளி) அல் ஜாமிவுல் அஸ்ஹர் ஜு⁻ம் ஆ பள்ளி, ஜாவியா, சாஹிப் அப்பா தைக்கா.
K. M. T. மருத்துவமனை, மஜ்லிஸு⁻ல் புகாரிஷ் ஷரீப், பேரூராட்சி அலுவலகம்.

வலது ஓரம் காயல்பட்டணத்தின் அழகான கடற்கரை. இவை அனைத்தையும் பற்றிய விளக்கக் கட்டுரைகள் இம்மலரில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

அழகு கொஞ்சும் காயல்நகரை என் ஆசைப்படி வண்ணப்படமாக எடுத்து வெளி யிட்டு மகிழ்வதற்கு இன்னொரு வாய்ப்பு கிட்டாமலா போய்விடும் என்ன...?

— "காயல் மகபூப்"

இலக்கியம் கல்வி கலாச்சாரம்

இஸ்லாம் எங்கள் வழி! இன்பத்தமிழ் எங்கள் மொழி! என்ற முழக்கம் ஒலித்த—
காயல்பட்டணம் வரலாறு படைத்த

மூன்றாவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு

— A. S. முகம்மது நாகு —



அறிஞர்
A.K.A.அப்துஸ்ஸமதுM.A.,M.P.

''அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி **மாநாட்டை** நடத்துவதன் மூலம் எந்த ஒரு அகில உலக மாநாட்டையும் நடத்தக் கூடிய தகுதியும் திறமையும் தனக்கு உண்டென **காயல்மாநகர்** நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

உலகின் பல நாடுகளிலே பரவி வாழுகின்ற தமிழ் முஸ்லிம்கள் பலர் காயல்பட்டணத்தில் நடக்கின்ற இந்த மாநாட்டிற்கு வந்துள்ளனர். இந்தியாவுக்குள் இஸ்லாம் கைபர் கணவாய் வழியாக வந்து நுழைந்ததாக கூறுவதுண்டு. ஆனால் உண்மையான ஆராய்ச்சியாளர்கள் தென் தமிழகத்திற்கும் அரபு தேசத்திற்கும் **அண்ணலார் (ஸல்)** அவர்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே இருந்து வந்த தொடர்புகளையும் அவர்களது பேரியக்கம் அரபு நாட்டில் பிறந்த பின் உள்ள தொடர்புகளையும் எடுத்துக்கூறி, இந்தியாவிற்கு இஸ்லாம் தென்னகத்தின் வழியாகவே முதன்முதலாக வந்ததென்று தெளிவாகக் கூறுகிறார்கள்.

இஸ்லாத்தின் முதல் கலீபாவாகிய ஹஸரத் **அபூபக்கர் சித்தீக் (ரலி)** அவர்கள் காலத்தில் பாண்டிய மன்னர்களுக்கு ஆண்டு தோறும் பத்தாயிரம் அரபுக் குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று வரலாறு கூறுவதை காண்கிறோம். நெடிய பாரம்பரியத்திற்கு நிலைக்களனாக விளங்குகின்ற காயல்பட்டணத்தில் இன்றைய தினம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டினை நடத்துவதினால் மெத்தப் பொருத்தம் இருக்கிறது. ஒரு நூறுக்கு மேற்பட்ட புலவர்களை உருவாக்கிய காயல்பதியில் திருப்புகழ் படைத்த **வரகவி காசிம் புலவர்** அப்பா அவர்களின் பந்தலில், நான்கு காப்பியங்களைப் படைத்து நற்றமிழின் வரலாற்றில் உலகிலேயே ஒரு புதுமையை விளைவித்த **சேகனா புலவர்** அவர்களின் அரங்கத்தில் இம்மாநாடு நடைபெறுகிறது. இந்தப் பந்தலை தாங்கிக் கொண்ருக்கின்ற ஒவ்வொரு தூணிலும் ஒரு புலவருடைய பெயர் பொறிக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். இப்படிப்பட்ட பெருமையை வேறு எங்கும் காணமுடியாது என்பதால்தான் இஸ்லாமியத் தமிழ் மாநாட்டிற்கு பொருத்தமான இடம் காயல்பதி என்று சொல்லத் துணிந்தோம்.

இன்று மாலையிலே இங்கு ஊர்வலமாக வந்த இருநூறு இளஞ்சிறார்கள் உடுத்தியிருந்த ஆடைகளும் முழக்கி வந்த உணர்வுகளும் ஆண்டாண்டு காலமாக இஸ்லாம் தமிழகத்திலே விளைவித்து வந்திருக்கின்ற நாகரீகத்திற்கு ஒரு விளக்கமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

ஆண்டாண்டு காலமாக கட்டிக் காத்த விழுமிய இஸ்லாத்தின் ஒழுக்கத்தை அறநெறியை காயல்பட்டணம் ஒன்றுபட்டு காக்குமேயானல் நூற்றுக்கணக்கான **வள்ளல் சீதக்காதிகள்** உருவாவதற்கும் ஆயிரமாயிரம் புலவர்கள் தலையெடுப்பதற்கும் வழி பிறந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சிறப்பிற்குரிய இம்மாநாட்டில் இலங்கையிலிருந்தும் ஏராளமான பேச்சாளர்களும் பேராளர்களும் கலந்து கொள்கிறார்கள். இதன் மூலம் உண்மையிலேயே சிங்கள தீவிற்கு இலக்கியப் பாலம் அமைத்துள்ளோம்.

கடந்த காலத்தில் நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்களை உண்டாக்கிய பெருமையை பேசுவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் அந்தப் புகழ் மேவிய வரலாற்றை தொடர்வதற்கு இந்தமாநாடு சரியான அடித்தளம் அமைக்கும் என்ற நம்பிக்கை நமக்குபிறந்திருக்கிறது- **''அல்லாஹ் அருள்புரிவானாக.''**

—அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மூன்றாவது மாநாட்டின் நிறைவு சிறப்பு நிகழ்ச்சியான பாராட்டு பொற்கிளி வழங்கு விழாவிற்கு தலைமை தாங்கி **இந்திய யூனியன் முஸ்லீம் லீக்** தமிழ் மாநிலத் தலைவர் **'சிராஜுல்மில்லத்'** அல்ஹாஜ் A. K. A. **அப்துஸ் ஸமது** M.A., M.P அவர்கள் உரையாற்றும் போது மேற்கண்ட உணர்வுப் பூர்வமான கருத்தை வெளிப்படுத்தினார்.

ஆம்...! நமதூரின் வரலாற்றிலேயே சாதனை படைத்த ஒரு அற்புதமான நிகழ்ச்சி மூன்ருவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு.

மாநாடு :

மெய்ஞ்ஞான மேதைகளும், கலைஞான விற்பன்னர்களும், புலவர்களும், புரவலர்களும், புகழ்கொண்ட வர்த்தகர்களும், வித்தகர்களும் பிறந்து வளர்ந்து, தாய்மொழியாம் கன்னித்தமிழையும், தந்தை மொழியாம் அறபியையும் வளர்த்து புகழ் பூத்த வான்புகழ் காயல்பட்டணத்தில் 1978 ஜனவரி மாதம் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள் **மூன்ருவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு** மிகச் சிறப்பாக நடைபெற்றது. தெருக்கள் தோறும் வரவேற்பு வளைவுகள், வீடுகள் தோறும் ஒளியலங்காரங்கள், **காயல்பட்டணம் ஐக்கிய விளையாட்டுச் சங்க திடலில்** அலங்கார மேடையில் **வள்ளல் சீதக்காதி, புலவர் நாயகம், ஏ. எம். ஏ அஸீஸ்** அரங்குகளில் நிகழ்ச்சிகள் மூன்று நாட்களும் இரவு பகலாக நடைபெற்றன. ஊரே விழாக் கோலம் பூண்டிருந்தது. 'தீன்' தமிழையும், தீந்தமிழையும் பருக மக்கள் திரண்டிருந்த காட்சி காயல்பதியில் கண் கொள்ளாக் காட்சியாகும். இலங்கையின் கல்வி அமைச்சர் மாண்புமிகு **ஸ்ரீ நிசங்க விஜயரத்ன** என்ற ஒரு சிங்களப் பெருமகனர் தலைமையில் இலங்கை அமைச்சர்களும் அறிஞர்களும் பிரமுகர்களும் கொண்ட ஒரு குழு இதில் பங்கு கொண்டது. இந்தியாவிலுள்ள **ஸவூதிஅரேபியா** தூதரகமும் **இராக் தூதரகமும், இந்திய மத்திய அரசும், தமிழ்நாடு மாநில அரசும்** தங்களின் பிரதிநிதிகளை அனுப்பி மாநாட்டுக்குப்பெருமை சேர்த்தன. **இலங்கைவானெலி கூட்டுத்தாபனம்** மாநாட்டு செய்திகளை சேகரிக்க பிரமாத ஏற்பாடு செய்திருந்தது. **இந்திய அரசின் ஒலி, ஒளி** ஏற்பாடுகளும் பிரமாதமாக அமைந்திருந்தன. ஒரு கிராமத்திலே இப்படியான ஒரு உலக மாநாடு மிக அழகாகவும் வெற்றிகரமாகவும் நடந்தது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்றுதான். காயல்பட்டணம் தோன்றி பதினென்றுநூற்ருண்டு காலத்தில் இதுஒரு மிகப்பெரும் சாதனையேயாகும்.

'' இஸ்லாம் எங்கள் வழி
இன்பத் தமிழ் எங்கள் மொழி ''

என்ற தாரக மந்திரத்தைக் கொண்ட பதாகை எங்கும் ஒளிவிட்டு மின்ன திருமறையின் அற உரையுடன் மாநாடு ஆரம்பமானது.

தொடக்க விழா:

13—1—1978 வெள்ளிக்கிழமை மாலே தொடக்கவிழா ஆரம்பித்தது. பள்ளி மாணவர்கள் சீருடைகளுடனும் ஊர் பெருமக்களும் ஊர்வலமாக **காஸிம் புலவர்** பந்தல் வந்து சேர்ந்தனர். அருள் கவி பேரறிஞர் **கா. அப்துல்கபூர்** தலைமை தாங்கினர். இசைமுரசு **நாகூர் ஹனிபா** இறை வணக்கப் பாட்டுப் பாடினர். மாநாட்டுக் குழுத் தலைவர் ஹாபிஸ் **எம். கே. செய்யது அஹமது** வரவேற்புரை நிகழ்த்தினர். இணைப்பாளர் பெரும்புலவர் பேராசிரியர் **சி. நயினர்முஹம்மது** அறிக்கை வாசித்தார். நிகழ்ச்சிக்குழு அமைப்புத் தலைவர் அல்ஹாஜ் **பி. ஏ. முஹ்யதீன்** வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். மாண்புமிகு **நீதிபதி எம். எம். இஸ்மாயீல்** மாநாட்டைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினர். **முஸ்லிம்லீக்** தலைவர் அல்ஹாஜ் **ஏ. கே. ஏ. அப்துல்சமது** M.A.,M.P உள்பட பலர் கருத்துரைகள் வழங்கினர்கள். மாநாட்டு செயலாளர் **எஸ் டி. வெள்ளைத்தம்பி** நன்றி நவின்றார்.

நூல் வெளியீட்டு விழா :

இரவு தொழுகைக்குப் பிறகு இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் டாக்டர் **வித்யானந்தன்** தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவை உள்பட 11 நூல்கள் வெளியிடப்பட்டன.

கருத்தரங்குகள் :

14-1-1978 சனிக்கிழமை மூன்று கருத்தரங்குகள் நடைபெற்றன. அவற்றிற்கு முறையே இலங்கை அல்ஹாஜ் டாக்டர் **எம். எம். உவைஸ்,** மௌலவி **எம். அப்துல் வஹாப் M. A. B.TH.** ஜனப் **கே. பி. எஸ். ஹமீது** ஆகியோர் தலைமை தாங்கினர்கள். பல ஆய்வு கட்டுரைகள் வாசிக்கப் பட்டன.

கவியரங்கம் :

பேராசிரியர் **கவிக்கோ அப்துல் ரஹ்மான்** தலைமையில் 'நெஞ்சில் நிறைந்த நிகழ்ச்சி' என்னும் பொருள் பற்றி கவியரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாராட்டு விழா :

மாநாட்டின் இறுதி நாளான **15-1-78** ஞாயிறு மாலை பாராட்டு விழா 'சிராஜுல் மில்லத்' அல்ஹாஜ் **A. K. A, அப்துஸ் ஸமது M. A., M. P.** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பன்னூலாசிரியர் **M. R. M. அப்துல் ரஹீம்,** ஜனாப் **கே. பி. எஸ். ஹமீது,** கவிஞர் திலகம் **சாரணபாஸ்கரன்,** கவி. **கா. மு. ஷரீப்,** ஆலிம் கவிஞர் **சிராஜ் பாகவி,** புலவர் **ஷரீபுத்தீன்** ஹாஜியார் **(இலங்கை)** ஆகியோருக்கு பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர்கள் :

அன்றைய தமிழக அமைச்சர் பெருமக்களான மாண்புமிகு **G. R எட்மண்ட் B. A., B. L.,** மாண்புமிகு டாக்டர் **செ. அரங்கநாயகம்,** மாண்புமிகு **கா. இராசா முகம்மது B. A. B. L.** ஆகியோரும் இலங்கை அமைச்சர் **ஸ்ரீ நிசங்க விஜயரத்ன** மாண்புமிகு **அப்துல் மஜீது** ஆகியோரும் தமிழக முன்னுள் அமைச்சர் **S. J. சாதிக் பாட்சா B.A. B.L.** இலங்கை நாடாளுமன்ற அன்றைய துணை சபாநாயகர் அல்ஹாஜ் **பாகிர் மரைக்கார்,** மத்திய அமைச்சர் மாண்புமிகு **H. N. பஹுகுனா** அவர்களின் பிரதிநிதி ஜனாப் **ஹுசைன், சவுதி அரேபியா, இராக்** உள்ளிட்ட நாடுகளின் தூதர்கள், மதுரை பல்கலைக் கழக பதிவாளர் பேராசிரியர் **பி. மு. முருகன்,** முத்தமிழ்க் காவலர் **கி. ஆ. பெ. விசுவநாதம்** ஆகியோர் உள்பட பலர் சிறப்புரை நிகழ்த்தி சிறப்பித்தனர்.

இசை நிகழ்ச்சிகள் :

மூன்று நாட்களும் இசை மழை பொழிந்தது இசை முரசு நாகூர் **E. M. ஹனிபா** EX. MLC. சங்கநாதச் செம்மல் காயல் **A. R. ஷேக்முஹம்மது, குமரி அபூபக்கர், ஹுசைன் பாகவதர்** ஆகியோரின் இசைக்குழுவினர் இன்னிசை வழங்கினர். **பத்தமடை பிச்சை முஹம்மது** குழுவினரின் களியல் நிகழ்ச்சியும் **கடையநல்லூர்** குழுவினரின் தாயிரா, காயல்பட்டணம் **ஹாமிதிய்யா பைத் சபை** நிகழ்ச்சிகளும் இரவை பகலாக்கி மக்களை களிப்படையச் செய்தன.

தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல வெளி நாடுகளிலுருந்தும் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஏராளமானவர் வந்திருந்த இம்மாநாட்டில் 55 ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

இம்மாநாட்டின் தீர்மானத்தை உடனடியாக ஏற்று அன்றைய தமிழக முதல்வர் **மாண்புமிகு டாக்டர்** M. G. R. அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்விற்கு ஒரு பிரிவை ஏற்படுத்தித் தந்தது இம்மாநாட்டிற்கு கிடைத்த வெற்றியாகும்,

அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் மேதகு **நீலம் சஞ்சீவ ரெட்டி,** தமிழக முன்னாள் முதல்வர் **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி,** மத்திய அமைச்சர்கள் மாண்புமிகு **H. N. பஹுகுனா** மாண்புமிகு **பா. இராமச்சந்திரன்** மற்றுமுள்ள மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், இந்தியாவிலுள்ள அரபு நாடுகளின் தூதர்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான பிரமுகர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

ஹாபீஸ் **M. K. செய்யது அகமது,** ஹாஜி **P. S. அப்துல் காதர்,** ஹாஜி **கதீப் A. K. முகம்மது அபூபக்கர்,** ஹாஜி **L. K. லெப்பைத் தம்பி,** ஹாஜி **S. O. ஹபீப் முகம்மது,** ஹாஜி **S. O சுலைமான்,** ஹாஜி **S.T. வெள்ளைத்தம்பி,** ஹாஜி **S.E. முஹிய்யத்தீன் தம்பி,** ஹாஜி **V. S. தாவூது,** ஹாஜி **S.N. சுல்தான் அப்துல் காதர்,** ஹாஜி **S. A. அமீன் அப்துல் காதர்,** ஜனாப் **N.E. முத்துமுகம்மது**(முத்துக் காக்கா), ஜனாப் **S. செய்யது அகமது,** பாவலர் **S. A. P. யூசுப்,** ஜனாப் **காயல் மௌலானா** உள்ளிட்ட பலரும் இம்மாநாட்டின் நிர்வாககிகளாகவும் குழுக்களின் தலைவர் களாகவும் பணி செய்தனர்.

மாநாட்டு காப்பாளர்கள், விளம்பரக்குழு, ஆலோசனைக்குழு என பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு காயல்வாசிகள் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தனர். இந்த மாநாட்டின் இணைப்பாளராக **திருச்சி ஜமால்முகம்மது கல்லூரி பேராசிரியர் பெரும்புலவர் சி, நயினார்முகம்மது** M. A. அவர்கள் பணி புரிந்தார்.



A S. முஹம்மது நாகு
S/o. நாவுக்கரசர் N. K.
அமீர் சுல்தான்
காயல்பட்டணம்

வரகவி காசிம் புலவர், வரலாறு படைத்த சேகனாப் புலவர் ஆகியோருக்கு விழா எடுக்க பலரையும் தூண்டி முயற்சித்து உலகலாவிய இம்மாநாடாக அது நடைபெறுவதற்கு மூலகாரணமாக இருந்துழைத்தவர் மறைந்த **'முத்துக்காக்கா'** என்று அன்புடன் அழைக்கப்படும் **நெ. யி. முத்து முகம்மது** அவர்கள் நம் நெஞ்சில்நீங்கா இடம் பெற்றவர்.

வருடங்கள் பன்னிரண்டை தாண்டி விட்டாலும் எண்ணி எண்ணி மகிழ்வடையும் அற்புத நிகழ்ச்சி மூன்றாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு காயல் பட்டணத்தில் சரித்திரம் படைத்த நிகழ்ச்சியாகும்.

———

காயல்பட்டணத்தில்

வாழ்ந்த புலவர்களும், வாழும் கவிஞர்களும்!

கவிஞர் S. செய்யிது அகமது

தானாகித் தனியாகி தரை வானும் உண்டாக்கி
தோணாது விழிமுன்னே தகுமுதவி தினம் நல்கி
கோனாக ஆளுகின்ற குறைவில்லா ஒருவனுக்கே
தேனாகி யென் நெஞ்சம் தருகின்ற புகழ் நன்றி!

கோமானாம் குவலயத்தின் கேடறுத்த பெருமானாம்
ஈமானுக்குறுதி தரும் எம்மிறசூல் தம்மை போற்றி
எம்மானாம் அவரடி தொடர்ந்துயர்ந்தோர் இதயமேற்றி
இனிய தமிழ் கவிதை சில இயம்புகின்றேன் ஏற்றிடுவீர்

கலைவளம் மிக உள்ள கவினாந்த பட்டணமாம்
காயல்பட்டணத்தில் வாழ்ந்தபெரும் புலவர்களாம்
கன்னல் தமிழுக்கு அணி சேர்த்த மேதைகளை
கண்முன்னே கொண்டு வந்து காட்டுகிறேன் உங்களுக்கு

தாய்த்தமிழின் தொண்மைகளை கண்டபெரும் அறிஞர்களை
ஆய்ந்த மட்டும் கொண்டுவர களிகொண்டேன். கவியரசு
வாய்மை மிகு **கண்ணஹ்மதுப்**புலவர், பண்ணரசு
தூய்மை மிகு **ஹபீபுமுஹம்மது ஆலிமு**டன்

கலைக்கொளி தரும்புலவர் **காசிமுடன், சாமொலியும்**
கலைக் குயிர் தரும் கோமான், **ஜெய்னுத்தீன்** கவிமணியும்
புலமைமிகு நம் **புலவர் நாயகமும்** நற்றமிழை
நிலையாக வளர்த்திட்ட **பூவாறுறை நூஹொலியும்**

''அல்லபல் அலிபு'' எனும் அருளறபிப் பாமாலை
அழகுறவே யாத்திட்ட **உமரொலி** நம் கண்மணியாம்
பல்லிசைகள் புனைந்த **பனீ அஹ்மது மரைக்காரும்**
எல்லையிலா தேன் சுனையாய் எம்மிதயம் நிறைந்தனரே

நாயகத்தின் மாண் வழங்கும் **முஹம்மது லெப்பை**
நேயமிகு ஆலிமவர் நனிசிறப்பைச் சொல்லொண்ணு
செய்கப்துல் காதிர் லெப்பை ஆலிம்ஹாஜி அருள் மலரும்
செய்கு முஹம்மது என்ற ஹக்கீமாம் சாகிபொலி

மெய் மறைப் பாராயணர் மேதகு **முஹம்மது லெப்பை**
மொய்க்கும் இசைப் புலவரென மிளிர்ந்தார்கள் இன்னவர்கள்
செய்த தமிழ் பாவினங்கள் செப்பறிய களஞ்சியமாம்
ஐ மில்லை இவரெல்லாம் இறை நேசச் செல்வர்களே

எண்ணறியா இன்னிசைகள் தந்த **தைக்கா சாஹிபொலி**
தொண்டினையே பதித்தவராம் பாவன்ஞசூனா என்ற
தென்றல்மொழி **அப்துல்லா லெப்பை ஆலிம்** ஹாஜியவர்
ஒண்டமிழ்க்காய்ப் புரிந்த பணி எண்ணிடிலோ ஏராளம்

வண்ண மலரினங்கள் தருமணமும் நறுந்தேனும்
ஒன்றிணைந் திருப்பது போல் முத்துக்கவி நித்திலமாம்
கன்னல் தமிழ் வேந்தர் **கொம்பாலிம் இசுமாயீல்**
கண்ணியத்தின் கவி ஏறு பண் மொழியில் பெரும் புலவர்

மெய்ஞான நாதர் பெயர் நனி பெற்ற **முஹிய்யித்தீன்**
உய்யும் வழி சொல்லும் வின்புகழார் புலவருடன்
செய்தவத்தால் இங்குதித்த ★ **இரண்டு பெரும் இபுருஹீம்**
சுயப்புலமை பெற்ற கவி முகிலென்று முழங்கிடுவோம்.

பாவலர்க்கு வெண்பா புலி யென்பர் நம்முடைய
பாவலராம் புலிகண்டால் வெண்பாவும் பூனையாகும்
நாவண்மை உள்ள **அப்துல் காதிரிவர்**
நாடறிந்த பாவலராய் நற்புகழையடைந்தவராம்

கவிவேந்தர் காசிமெனும் ஒலிகள் பேரன்
கவிஞன் **மஹ்மூது ஹுசைன்** கவின்பா மன்னன்
காயல்பிறைக் கொடியான்எனும் பெயரில் மிளிர்பவன்
கவிகள்முழங்கும் அரங்கம் புக விருப்ப மற்றவன்

அறபியிலும் அன்னைத் தமிழ் மொழியினிலும்
ஆற்றல் கொண்ட கவிஞரான சதக்கத்துல்லாஹ்
வரைந்துள்ளார் கவிதை பல வகையாயிங்கே
வாழும் கவிஞரேறுகளில் இவரும் சேர்வார்

உவமை சொல்லி கவிதைகட்கு ஊட்டம் தருபவன்
ஒன்றும் தெரியாதவன் போல் நம்மை ஏய்ப்பவன்
அவையேறிப் புதுக்கவிதை இன்று தருபவன்
அன்பின் கவிஞன் விளக்கு நெய்னு என்பவன்

இன்னும் இயம்பிடிலோ எண்ணிறந்த பாவணர்
இன்னு முளர் எத்தனைதான் எண்ணிடலாம் சொல்லிடுவீர்
மண்புதைந்த மேதைகளை மறந்திடிலோ உய்வில்லை
மண் மூடிக்கொண்டாலும் அவர் மாண்போ சமுத்திரமாம்

அலையலையாய் ஆர்த்து வரும் அறபிமொழி நிபுணரெல்லாம்
அலர்ந்தெழுந்த பதி காயல்பட்டணமாகும்
மலைமலைமாய் குவிந்த திரு அறப்பாக்கள் எண்ணடங்கா
மழைத்துளியாய் மிளிர்வதனை கண்டிடுவோம் மதிபெறுவோம்

★இரண்டு பெரும் இபுராஹீம்
1. மதுரகவி. **உ. ம. செய்யது இபுராஹீம் அவர்கள்**
2. கவிமணி. **ம. கு. செய்யது இபுராஹீம்** அவர்கள்



கவிஞர் S. செய்யிது அகமது
பேரூராட்சி மன்ற முன்னாள்
தற்காலிக தலைவர்



வரகவி காசிம் புலவர் வாரிசு
காயல் பிறைக்கொடியான்
கவிஞர் S. M. B. மஹ்மூது ஹுசைன்


இது காயல்பட்டணமல்ல காப்பியப் பட்டணம்

பேராசிரியர் டாக்டர். **A. அப்துல் ரசாக்** M.A., Ph. D.,
தமிழ்துறை தலைவர், ஆதித்தனார் கல்லூரி, வீரபாண்டியன்பட்டணம், திருச்செந்தூர்.

தென்னிந்தியாவில் இஸ்லாம் முதன் முறையாகப் பரவிய இடங்களில் காயல்பட்டினத்திற்கு முதலிடம் உண்டு. அரபு மொழியிலும் தமிழ் மொழியிலும் புலமை பெற்ற பல அறிஞர்கள் தோன்றி இஸ்லாம் தழுவிய இனிய இலக்கியங்களைத் தந்துள்ளனர். உரை நடையிலும் செய்யுளிலும் அவர்கள் தந்துள்ள இலக்கியங்கள் தமிழகத்தில் வேறெந்த இடத்திலும் காண முடியாத அளவுக்கு மிகுந்துள்ளன.

செய்யுளில் மட்டுமே பாடத் தகுந்த காப்பியத்தை இயற்றுவது எளிதான பணியன்று. என்றாலும் காயல்பட்டினத்தார் தந்துள்ள இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்கள் எண்ணிக்கையில் எட்டு ஆகும். பனியகுமது மரைக்கார், ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை, சேகாதி நயினார் புலவர், விளக்கு முஹம்மது முஹியதீன் லெப்பை ஹாஜியார் புலவர், பெரிய நூஹு லெப்பை ஆலிம் சாகிபு ஆகியோர் இந்தக் காப்பியச் செல்வங்களை இயற்றியுள்ளனர்.

பெருமானர் (ஸல்) அவர்களின் வரலாற்றையும் பெருமைகளையும் சுவையும் நயமும் தோன்றக் காப்பியங்கள் இயற்றப் புலவர்கள் முயன்றுள்ளனர். அந்தப் பணியில் முதலில் ஈடுபட்ட **உமறுப் புலவரின் ''சீறாப்புராணம்''** நிறைவு பெறவில்லை. எனவே அதனைத்தொடர்ந்து 1829 திருவிருத்தங்களைக் கொண்ட **சின்ன சீறா** வை இயற்றினார் **பனியகுமது மரைக்கார்** முற்றுப் பெறாத காப்பியத்தை முழுமை செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வோடும் காப்பியச் சுவையோடும் ஒரு நூலைத் தந்து பெருமை சேர்த்து விட்டார். இவரைப் போலவே சீறாப் புராணத்தை நிறைவு செய்ய முயன்றவர் ஷெய்குஅப்துல் காதிர் நயினார் லெப்பை என்னும் **சேகனாப் புலவர்** இந்தக் காப்பியத்திற்குப் **'புதூஹ்ஷாம்'** என்று பெயரிட்டார். 6787 திருவிருத்தங்கள் இதில் உண்டு. அத்தனையும் எளிமையும் சுருக்கமும் கொண்ட சொல்லாட்சி பெற்றவை. **பெருமானார் (ஸல்)** அவர்கள், சிரியா நாட்டை வெற்றி கொள்ளும் நிகழ்ச்சியே காப்பியத்தின் கரு. அன்னாரின் இறுதிக்காலவாழ்வை உமறு வார்த்தைகளால் கேட்கமுடியாமல் போன தமிழ் உள்ளங்களுக்குப் 'புதூஹ்ஷாம்' ஓர் அரிய விருந்து. **பெருமானார் (ஸல்)** அவர்கள்.


டாக்டர் அப்துல் ரசாக்
M.A., Ph.D.
திருச்செந்தூர்.

வெள்ளை யானை மேல் வலம் வந்து சுவர்க்க உலகில் ஆசியா, மரியம் என்ற இரண்டு கன்னிப் பெண்களை மணமுடித்த செய்தியை மையமாகக்கொண்டு எழுந்ததே 'திருமணகாட்சி' என்னும் சுவை நிறைந்த காப்பியம். 917விருத்தப்பாக்களால் அமைந்த இதனை இயற்றியவர் காயல்பட்டினத்தை உண்டாக்கிய **சுல்தான் சையது ஜமாலுத்தீன்** வழியில் வந்த **சேகாதி நயினார் புலவர்**ஆவார். பிற காப்பியங்களுக்கு நிகரான இயற்கை வருணனைகளும் கற்பனைக் காட்சிகளும் இந்த காப்பியத்தில் விரிந்து கிடக்கின்றன.

'புதூஹ்ஷாம்' என்ற காப்பித்தை இயற்றிய சேகனாப் புலவர் என்னும் **புலவர் நாயகம்** மேலும் மூன்று காப்பியங்களை இயற்றித் தனியொருவர் நான்கு காப்பியங்களை இயற்றியவர் **உலகில் இவர் ஒருவரே** என்னும் பெருமையைப் பெறுகிறார். **முகியித்தின் அப்துல் காதிறு ஜீலானி (ரலி)** அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு **'குத்பு நாயகம்'** என்ற காப்பியத்தை இயற்றியுள்ளார். 1340 பாடல்கள் இதில் அமைந்துள்ளன. **நாகூர் ஆண்டகை சாகுல்ஹமீது** அவர்களின் வரலாறு கூறுவதுதான் **'திருக்காரணப் புராணம்'** என்பது. 2565 பாடல்களைக் கொண்டு புலவர் நாயகம் இயற்றியுள்ளார். இவரின் மற்றொரு காப்பியம் **'திருமணி மாலை'** என்பதாகும். 2044 விருத்தங்களால் அமைந்துள்ள இந்தக்காப்பியம் தியாகச் செம்மல் நபி **இபுறாகீம்(அலை)** அவர்களைத் தலைமகனாகக் கொண்டுள்ளது. இத்தனைப் பாடல்களையும் ஒரே ஒரு காண்டம் தான் தாங்கியுள்ளது. இந்த காப்பியத்தை புலவர் நாயகம் முழுவதுமாக முடிக்கவில்லை என்று தெரிகிறது. இந்த அளவில் இவர் நான்கு காப்பியங்களிலும் பாடியுள்ள பாடல்களை எண்ணினால் **கவிச்சக்கரவர்த்தி கம்பனையும்** விஞ்சியிருப்பதை உணரலாம்.

416 பாடல்களே கொண்ட ஒருசிறுகாப்பியத்தைக் காயல்பட்டினம் **புலவர் விளக்கு முஹம்மது முகையதீன் லெப்பை** ஹாஜியார் இயற்றியுள்ளார். **'சாதுலி நாயகம்'**என்பது அதன் பெயர். தூனிஸ் நாட்டில் தோன்றிய **அஸ்ஸெய்யிது அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம்** அவர்களே இந்தக் காப்பியத்தின் தலைவர். இவர்கள் மீது முனாஜாத்து ஒன்றையும் இப்புலவர் இயற்றியுள்ளார். மேலும் இந்தப்புலவர் **குத்புல் வுஜூது ஷெய்கு முஹம்மது பாஸி அஜ்வாது (ரஹ்)** அவர்கள் மீது பாடப் பெற்ற பதிகமும் சிறப்பிற்குரியதாகும். **பெரிய நூஹு லெப்பை ஆலிம் சாகிபு** என்னும் கவிஞர் **திருக்குர் ஆனில்** பரவியுள்ள அகமிய வசனங்களின் ஆழ்ந்த பொருள்களைக் காப்பியபாணியில் இயற்றித்தந்துள்ளார். 912 பாடல்களைக் கொண்ட இந்த மெய்ஞ்ஞானக் களஞ்சியத்திற்கு **'வேத புராணம்'** என்பது பெயர் ஆகும்.

இந்த வகையில் பெருங்காப்பியங்களும் சிறுகாப்பியங்களுமாக எட்டு நூல்களைத் தந்துள்ள பட்டினத்தைக் காயல்பட்டினம் என்பதைவிடக் காப்பியப்பட்டினம் என்று அழைப்பதும் சிறப்பாகும்.

பேரிலக்கியங்களோடு சிற்றிலக்கியச் செல்வங்கள் தந்த செம்மல்களும் காயல்பட்டினத்தில் உண்டு. அவர்களிலும் **புலவர் நாயகமே** சிறந்த இடத்தைப்பெறுகிறார். ஏனென்றால் சிற்றிலக்கிய வடிவங்கள் பலவற்றை இவர் இயற்றியுள்ளார். **பெருமானார் (ஸல்)** அவர்களின் குலமுறை சொல்லும் 149 செய்யுட்களைக் கொண்ட **'கோத்திர மாலை'** கலம்பக உருவில் அமைந்த **'மக்காக் கலம்பகம்'** அந்தாதி உருவில் அமைந்த **'நாகையந்தாதி'** நீதி நெறிகளைத் தாங்கி எளிய நடையில் அமைந்துள்ள **'சொர்க்க நீதி'** என்னும் குழந்தை இலக்கியம், ஆகியவற்றை அளித்துள்ளதோடு, ஒருசிலராலேயே எழுத முடிகின்ற சித்திரக் கவிகள் பலவற்றையும், இன்னிசைப் பாடல்களையும் தந்துள்ளார். மடல்கள் தீட்டுவதும் கவிதை வடிவிலேயே அமைந்துள்ளதால் அந்த வகை இலக்கிய வளர்ச்சிக்கும் துணை நின்றுள்ளார். எனவே எல்லா வடிவங்களிலும் பாப்புனையும் திறன் கொண்டவரைப் **புலவர் நாயகம்** என்று போற்றுவது பொருத்தம் தானே! மேலும் **சீறாப் புராணம்** போன்ற சிறந்த இலக்கியங்களைப் பதிப்பித்துத் தமிழ் உலகிற்கு அளிக்கும் பணியினையும் இவர் மேற்கொண்டு உள்ளார்.

சிறிய வடிவமும் சீரிய கருத்துகளும் கொண்ட பல இலக்கியங்களைத் தந்த பெருமை **கவிஞர் ஷாம் ஷிஹாபுத்தீன் (ஒலி)** அவர்களுக்கு உண்டு. இந்தச் சமுதாயத்தின் சீர்கேடுகளைப் போக்கித் தூய்மையான வாழ்க்கை நெறிகளை உணர்த்த வேண்டுமென அவர்கள் துடித்தார்கள். அதன் விளைவு தான் எளிமையும் இனிமையும் நிறைந்த தமிழ்ப்பா மணிகள் கிடைத்தன. அத்தனையும் அழகுத் தமிழ் மாலைகளாக மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

நானிலம் போற்றும் நாதர் **நபி (ஸல்)** அவர்களின் நல்லுரைகளைத் தர வேண்டும் என விரும்பிய புலவர் அவற்றைப்பல நூல்களையும் கற்றுத்தெளிந்து, **'பெரிய ஹதீதுமாணிக்கமாலை'** என்றும் **'சின்ன ஹதீது மாணிக்க மாலை'** என்றும் தந்துள்ளார்கள். இஸ்லாமியர் அறிந்து நடக்க வேண்டிய அன்றாடக் கடமைகளின் சட்டதிட்டங்களைக் கொண்ட **'ஙாயத்துல் இக்திசார் மாலை'**, **'மின்ஹாஜு மாலை'** இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்கங்கள் அடங்கிய **'அதபு மாலை'** **'தோகை மாலை'**, **'நஸீஹத்து மாலை'**, வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிய **'ரசூல் மாலை'** **'நான்கு யார்கள் மாலை'**, **'மீரான் முஹியித்தீன் மாலை'**, **'ஆறு இமாம் மாலை'**, திருமணம், கந்தூரி ஆகியவற்றின் பெயரால் நடக்கும் அனாச்சாரங்களைக் கண்டித்துப் பேசும் **'கல்யாண பித்அத்து மாலை'**, **'கந்தூரி பித்அத்து விலக்கு மாலை'** புகையிலையை உட்கொள்வதால் உண்டாகும்

தீமைகளைக் கூறும் **'புகையிலை விலக்கு மாலை'** ஆகியன **கவிஞர் ஷாம் ஷிஹாபுத்தீன்** அவர்களின் படைப்புகளில் குறிப்பிடத் தக்கனவாகும்.

ஒரு சிலராலேயே இயற்றத் தகுந்த சிறப்பிற்கு உரியது தான்திருப்புகழ் என்னும் இலக்கியம். இதனைத் தன்னாலும் இயற்ற முடியும் என மார்தட்டிக் கூறிச் செய்து காட்டியவர் தான் **வரகவி காசிம்புலவர்**. 140 சந்தங்களுக்கு ஏற்ப 141 பாடல்களைக் கொண்டு அவர் இயற்றியது தான் **'காசிம் புலவர் திருப்புகழ்'** தமிழ் வளம், சொல்வன்மை, தொடை நயம். சந்தப்பொலிவு, 'கற்பனைத் திறன்' பக்திப் பெருக்கு ஆகிய அத்தனையும் இந்த நூலில் உண்டு. இதனைத் தவிர நாற்பது விருத்தங்களைக் கொண்ட இன்னிசைப் பாமாலை ஒன்றையும் இயற்றியுள்ளார். இரண்டு நூல்களும் **பெருமானார் (ஸல்)** அவர்களையே முன்னிறுத்திப் பாடப்பெற்றவை ஆகும்.

வரகவி காசிம் புலவரின் கவிதை வெள்ளம் அவர்களின் பரம்பரையிலும் பரவி வந்துள்ளது என்பது சிறப்பிற்குரியதாகும். அவர்கள் கிளையில். வந்த அருட்கவி **செய்யது முகம்மது அப்துர்றகுமான் புகாரிஆலிம்** அவர்கள், **'மனோரஞ்சிதத் திருப்புகழ்'**, **'பதிஞானப் பன்மொழி'**, **'விசுவாச மாலை'** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். அன்னாரின் மகனார், **எஸ். எம். பி. மஹ்மூது ஹுஸைன்** அவர்களும் ஒரு சிறந்த புலவராக வாழ்ந்து வருகிறார். அவர் **'காயல்பிறைக் கொடியான்'** என்ற புனைபெயரில் இருநூறுக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்லாமிய பாடல்களையும் இயற்றியுள்ளார். இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார்

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து உலகிற்குத் தந்து, **'சீறா வசனம்'**, **'நூறு மசாலா'**, **'ஹக்குபேரில் புகழ்பத்து'**, **'ஹக்கு பேரில் சதா நாமத் துதி'**, **மக்காப் பதிகம்**, **'பகுதாதுப்பதிகம்'**, **'நாகூர்ப்பதிகம்'**, **'காகிறூர்ப்பதிகம்'**, **'முகையித்தீன் ஆண்டவர் பேரில் திருப்புகழ்,'** **'முகையித்தீன் ஆண்டவர் பேரில் ஒருபா ஒரு பஃது'**, **'திருஞானப்பத்து'** ஆகிய இலக்கியங்களையும் இயற்றியவர் தான் **கண்ணகுமது மகுது முகம்மது புலவர்** அவர்கள். இவைகள் இன்றி, இன்னிசைப் பாடல்கள் பலவற்றையும் இயற்றி இசைத் தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியுள்ளார்.

ஞானக் கவிதைக்ள் எழுதியோர் வரிசையில் காயற்பட்டினம் ஹாஜி **உமர் வலியுல்லாஹ்** அவர்களுக்குத் தனித்த இடமுண்டு. 115கண்ணிகள் கொண்ட **'திருமெய்ஞ்ஞானப்** புலம்பலில் 'உலக மாயைகளில் இருந்துவிடுபட்டு உலகம்படைத்த வல்லானை—எங்கும் நிரம்பும் பொருளைக் கலந்திருப்பது எந்நாளோ என்ற ஏக்கத்தை வெளியிடுகிறார். தம்முடைய கலீபாவாகிய **அஷ்ஷெய்கு முஸ்தபா** ஒலியுல்லா மீது 43 பாடல்கள் பாடி **'மெய்ஞ்ஞானத்துதி'** என்று பெயரிட்டுள்ளார். ஆதிமுதலாகி நின்ற அகதியத்தின் பொருள் அறியச் செய்தல், அந்த அல்லாஹ்வின் இரகசியத் துறையாகிய **மஅரிபா** என்னும் வேதாந்தமார்க்கத்தில் நிலைகொள்ளச் செய்தல் போன்ற ஞானவழிகளைக் காட்டிய தமது ஆசிரியரின் திறன் வியந்து போற்றுவதே புலவரின் நோக்கம். மேலும் இசைக்கு ஏற்றனவாகச் சில மெய்ஞ்ஞானப் பாடல்களையும் தந்துள்ளார்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அமைந்த திருப்பெயர்கள்பலவற்றைப் புகழ்ந்து **உதுமா லைனார் புலவர்** என்பார் சலவாத்துப் பாட்டுப் பாடியுள்ளார். **முகம்மது லெப்பை ஆலிம்** என்னும் மற்றொரு புலவர் **மெய்ஞ்ஞானக் காரண ஆனந்தக் களிப்பு** என்ற நூலைப் பாடியுள்ளார். இது நாயகம் **செய்யிது முகம்மது புகாரித் தங்களைப்** போற்றிப் பாடப்பட்டதாகும். ஒழுக்கக்கேடாக நடந்த பெண்ணொருத்தி நரகத்தில் படும் வேதனைகளைத் தாயும் மகளுமாக உறையாடுவது போல் அமைத்துப் பாடப்பட்டதுதான் 'தாய் மகள் ஏசல்' என்னும் நூலாகும். இந்நூலை **அகுமது லெப்பை ஆலிம் சாகிபு** அவர்கள் இயற்றியுள்ளனார்.

கவிஞர் ஷாம் ஷிஹாபுத்தீன் அவர்கள் வழித்தோன்றலான **மாப்பிள்ளை லெப்பை ஆலிம்** பல தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். அரபு மொழிப் பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். உலகப்புகழ் பெற்ற **'ஹஸ்பீரப்பீ ஜல்லல்லாஹ'** என்ற இசைப்பாடலை இயற்றியவரும் இவரே! இளைய வயதினரும் பாடும் அளவில் எளிய சந்தத்தில் இவர் பாடியதுதான் **'தலைபாத்திஹா'** என்ற பாடல். இவை தவிர, **'ஹத்யா மாலை'** **'மஃரிபத்துத் தாலாட்டு'**, **'தோழிப்பெண் பதிகம்'** ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கனவாகும். இந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் வரலாற்றையும், இஸ்லாமிய உலகிற்கு அவர் ஆற்றிய தொண்டுகளையும் புகழ்ந்து **மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சீவிய சரித்திரக் கும்மி'** என்ற நூலொன்றும் உள்ளது. இதனைக் காயல்நகர் **முகம்மது முகைதீன் நாவலர்** பாடியுள்ளார்.

'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீது **அன்னம்பாறல்** என்ற பெயரில் 31 பாடல்களைக் கொண்ட நூலொன்றை **செய்யித் வாவு முஹம்மது ஆலிம் ஹாஜியார்** அவர்கள் எழுதியுள்ளார். **பெருமானார்(ஸல்)**அருளையும் அன்பையும் வேண்டி உருக்கத்தோடு பாடும் பாடல்கள் இதன்கண் உள்ளன. தமக்கும் முஹம்மது என்று பெயர் அமைந்துள்ள உரிமையைக் காட்டி, **'சொந்த மிலையோ? முஹம்மதென்ற தொந்த மிலையோ பேரிதற்குத்தந்ததிலையோ?!**எனக் கேட்பது சுவையான பகுதியாகும்.

சா. மு. நெய்னா லெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள், இறைபெரியோன் தனது திருமறையில், 'தக்க சுறுத்தென்று வழங்கா தொழுகையின் இயல்புகள் பற்றிய நூலொன்றைத் தந்துள்ளார். அரபு மொழியில் வந்த நின்ற சலாத்துல் அறுக்கான் மாலை' என்பது அதன் பெயராகும். நூலொன்றின் மொழி பெயர்ப்பான இந்த நூல் 45 பாடல்களால் அமைந்துள்ளது.

'சின்னசீறா' இயற்றிய **பனீயகுமது மரைக்காயரின்** புதல்வர் **செய்யிதஹ்மது மரைக்காயர்** இறைவனின் படைப்பாற்றல் புலவரவர்கள் **'நூறு நாமா'** என்றொரு நூல் இயற்றியுள்ளார். இவ்வகையில் 204 பேருண்மையை எளிய தமிழில் காட்டுவதே இப்புலவரின் நோக்கமாகும். இதே புலவர், தாம் பிறந்த காயல்பட்டினத்தைச் பாடல்கள் இந்த நூலில் உள்ளன. சிறப்பித்துக் கற்பனை நயம் தோன்றக் **'காகிரி நாட்டு வளம்'** என்ற பெயரில் 14 பாடல்களைப் பாடியுள்ளார்.

அஷ்ஷெய்கு அப்துல்காதிர் தைக்கா சாகிபு ஒலிநாயகத்தின் வரலாற்றைச் சுருக்கமான அளவில் **செ.அ. செய்யது யாஸீன்மவுலானா** இயற்றியுள்ளார். 'மெய்தவச்சீமான் செய்கப்துல் காதிர் (ரலி) தைக்கா ஸாஹிபு மாலை' என்பது அந்த நூலின் பெயராகும். இந்நூலின் பிற் பகுதியில் காயலைச் சேர்ந்தோர் பாடிய சில இன்னிசைப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அண்மையில் காலமான **பாவலர் எஸ்.எஸ். செய்கு அப்துல் காதிர்** என்ற பாவலர் அப்பாவும், அவர் மைந்தர் **பாவலர் யூசுபும்** சிறந்த புலவர்கள் ஆவர். தமது 16ஆம் வயதில் இருந்தே கவி பாடத் தொடங்கியவர் பாவலர் அப்பா. குறிப்பாக இசைவுலகிற்குப் பல பாடல்களைத் தந்துள்ளார். **'பஞ்சாமிர்தக் கீர்த்தனை'**, **'செந்தமிழ் நவீன திலகம்'**,**சங்கீத சாகித்ய அலங்காரம்'** ஆகிய அவர் இயற்றிய இசைத்தமிழ் நூல்களாகும். **'தெள்ளுத் தமிழ் வளர்த்த தேசிகன் சீதக்காதி'** **'சொல்லுவீர் நமக்கிறைவன் ஒருவனென்றே'** எனத் தொடங்கும் பாடல்கள் புகழ் பெற்றவை. அன்னாரின் செல்வர் பாவலர் யூசுபு மரபுக்கவிதைகள் மட்டுமின்றிப் புதுக் கவிதைகளும் இயற்றிப் புகழ் பெற்றவர்.

மேற்காணும் புலவர்கள் தவிர, **'தம்மான்சாரி மாலை'**பாடிய**செய்குலெப்பை**, **'தருமஷபா அத்து மாலை'** பாடிய அருள்வாக்கு **ஷேக்குனாப் புலவர்**, **நபிகள் நயகம்(ஸல்)** அவர்கள் பெயரில் **'முனாஜாத்து'** பாடிய **ஜைனுத்தீன் புலவர்**, **'மதுரவாக்கிய கீர்த்தனா சங்கிரகம்'** பாடிய **மஹ்மூதுப் புலவர்**, **வெள்ளாட்டி மஸ்அலா'** இயற்றிய **ஷெய்கப்துல் காதிர் லெப்பை ஆலிம் ஹாஜி** ஆகியோரும் காயல்பட்டினத்துப் புலவர் வரிசையை அழகு செய்வோர் ஆவர்.

இன்று வாழும் கவிஞர்களில் எஸ். கே. எம். சதக்கத்துல்லாஹ் ஆலிம், எஸ். கே. முஹம்மது நூஹுத்தம்பி ஆலிம் ஆகியோர் குறிப்பிடத் தக்கோர் ஆவர். 'முத்துச்சுடர்' என்னும் இதழில் இருவரின் கவிதைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கவிஞர் நூஹுத்தம்பி ஆலிம் அவர்கள், ஹழ்ரத் பெரிய முத்துவாப்பா ஒலியுல்லாஹ்(ரலி) அவர்களின் வரலாற்றைச் சுருங்கிய அளவில். 106 கண்ணிகள் அமைத்துப் பாடியுள்ளார் 'ஜுமானிய்யா மாலை' என்பது இந்த நூலின் பெயராகும்.

இவ்வாறு பேரிலக்கியம், சிற்றிலக்கியம், புத்திலக்கியம் என்று எல்லாத் துறைகளிலும் இலக்கியங்களை இயற்றித் தமிழ்மொழிக்குத் தொண்டுசெய்துள்ள காயல்பட்டினத்துப் புலவர் கள் பாராட்டிற்குரியோர். அவர்களின் படைப்புகள் அனைத்தும் தனித்தனியே ஆராய மேற் கொள்ளும் முயற்சி வரவேற்கத் தகுந்ததாகும். பட்டியல் நீளுகின்ற அளவுகுக் அந்தப் புலவர் களின் நூல்கள் அனைத்தும் கிடைப்பது அருமையாக இருப்பது உள்ளத்தை உறுத்துகிறது.

நல்ல கவிதை இயற்றுபவன் இறைவனால் தூண்டப்படுகிறான்
அவன் கவிதை ஆண்டவனின் நல்லருளாகும். — நபிகள் நாயகம் (ஸல்)

பத்திரிகை துறையிலும் எழுத்தாற்றலிலும் காயல்பட்டண வாசிகள்

அல்ஹாபிழ் S. K. M. **நூஹுத்தம்பி ஆலிம், ஜுமானி**

(ஆசிரியர் : **முத்துச்சுடர்** மாத இதழ் - காயல்பட்டணம்)

பத்திரிகை மூலம் மக்களிடம் தங்கள் கருத்தை பரிமாறிக்கொள்வது எக்காலமும் சிறந்தவையாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இதையே அடிப்படையாகச் கொண்டு காயல்வாசிகள் இஸ்லாமிய பத்திரிகைகளை ஆரம்பித்து தங்களின் எழுத்தாற்றலை வெளிக்காட்டி வந்துள்ளார்கள்.

காயல்பட்டணத்தில் முதல் இரு பத்திரிகை ஆரம்பிக்கக் காரணமே சென்னையில் தாவூத்ஷா என்பவர் 1926ல் வெளியிட்ட '' தாருல் இஸ்லாம் '' பத்திரிகையில் காதியானீ கொள்கைகளை பரப்பி வரத் தொடங்கியதான். இதற்கு பதிலடி கொடுக்கவே காயல்பட்டணத்தில் 1926ல் தைக்காத் தெரு **செய்தஹ்மது மௌலானா** அவர்கள் **கமருஸ்ஸமான்** (காலச்சந்திரன்) என்ற மாதப் பத்திரிகையையும், அல்லாமா நஹ்வி **செய்யிது அஹமத் ஆலிம்** அவர்கள் **அல்ஹிதாயா** மாதப் பத்திரிகையையும் ஆரம்பித்து, தாருல் இஸ்லாம் பத்திரிகையின் காதியானீ பிரச்சாரத்திற்கு மறுப்புக் கொடுத்து மார்க்க அடிப்படையில் பதிலடி கொடுத்தார்கள் என்பதை இஸ்லாமிய மக்கள் அக்காலத்தில் நன்கு அறிவர்.

1948ல் காயல்பட்டண வாசியான ஜனாப் M, A. C. **ஜெய்லானி** B. A. (அலிகர்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையில் **'அருள் ஜோதி'** என்ற பத்திரிக்கை வெளிவந்தது.

1951ல் திருச்சியில் வெளியான **ஷாஜஹான்** பத்திரிகையில் **சீதக்காதி** எங்கு பிறந்தார் என்ற வாதம் தொடர்ந்து எழுதப்பட்டு வந்த போது, சீதக்காதி காயல்பட்டணத்தில்தான் பிறந்தார் என்ற விபரத்தை அக்காலத்தில் மௌலவி அல்ஹாஜ் **மூ. முஹம்மது ஹஸன்** ஆலிம் காதிரி அவர்கள் ஷாஜஹானில் எழுதி வந்தார்கள், அக்காலத்திலிருந்தே சிறந்த எழுத்தாற்றல் மிக்கவராக விளங்கிய இவர்கள் நூற்றுக்கணக்கான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். 1971ல் **நற்சிந்தனை** என்ற மாத இதழை தொடங்கினார்கள். இன்றும் அது காயல்பட்டணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.

நம் காயல்பட்டணத்து பிரபல எழுத்தாளர் ஹாபிஸ் **M. K. செய்யிது அஹமது** அவர்களால் எழுதப்பட்ட **வான்புகழ் காயல்பட்டணம்** 1951ல் நமதூரில் வெளியிடப்பட்டது. நம் ஊர் சரித்திரத்தை தெளிவாக எழுதப்பட்ட நூலாக இன்றும் திகழ்கிறது. இவர்களின் மற்றொரு நூலான **முஸ்லீம் தமிழ் பாரம்பரியம்** 1968ல் கொழும்பில் வெளியானது. ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுத்தாற்றல் பெற்ற இவர்களின் எழுத்தோவியங்கள் ஆங்கில நாளேடுகள் பலவற்றிலும், இக்கால **மணிச்சுடர்** நாளிதழிலும் இடம் பெறுகின்றன.

மர்ஹூம் **பாவலர் யூசுப்** அவர்களின் எழுத்தாற்றலும் கவிதை நடையும் போற்றதக்க ஒன்றாகும். சில காலம் **தினத்தந்தி**யில் பணியாற்றிய பெருமை இவர்களுக்கு உண்டு. **முத்துச்சுடரில்** 'காயல் பெரியவர்களுக்கு புகழ் மாலை' என்ற கவிதையை மே 84 முதல் ஓராண்டு காலம் எழுதி வந்தார்கள், இவர்கள் மறைந்து விட்டாலும், இவர்களின் கவிதையால் தமிழக மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டார்கள். இவர் பாவலர் S. S. அப்துல் காதர் ஹாஜி (முன்னாள் பஞ்சாயத்து போர்டு தலைவர்) அவர்களின் மகனாவார்.

முஸ்லீம் முரசு மாத இதழில் வெளியான பழமொழிகள் ஆயிரம் என்ற தொடரை L. K. S. அதிபர் காயல் S. A. **சுலைமான்** M. A. அவர்கள் எழுதி, அது 1968ல் நூல் வடிவமாக வெளியிடப்பட்டது, இவர்கள் மறைந்துவிட்டாலும் இவர்களால் தரப்பட்ட நூல் இன்றும் தமிழகத்தில் தனியான இடம் பெற்றுள்ளது. இவர்களை தொடர்ந்து எழுத்துப் பணியில் பிரபலமானவர்கள் காயல்பட்டணம் ஹாஜி L. S. **இப்ருகிம்** அவர்களும், ஹாஜி R. S. **அப்துல் லத்தீபு** M.A. அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். ஹாஜி V.M.S. **லெப்பை** (காயல்பட்டணம் பேரூராட்சி தலைவர்) அவர்களால் **விளக்கு சுலைமான் லெப்பை** என்ற நூல் 1976ல் எழுதி வெளியிடப்பட்டது.

1976ல் **நூருல் ஜுமான் - முத்துச்சுடர்** மாத இதழை ஆரம்பித்து 1986ல் பத்தாண்டு மலர் ஒன்றும் பெரிய அளவில் வெளியிடப்பட்டது. முத்துச் சுடர் மாத இதழ் ஆற்றிய சேவைகளை இம்மலரில் காணலாம்.

1976ல் **'ஹுஜ்ஜத்'** மாத ஏடு மௌலானா **ஷெய்குஅப்துல்காதிர் ஸூஃபி ஹலரத்** அவர்களை நிறுவனராகவும், மௌலவி **S. N. சாகிப் தம்பி** ஆலிம் மஹ்ழரி அவர்களை ஆசிரியராக கொண்டும்,

1977ல் S. K. M. **சதக்கத்துல்லா ஆலிம்** அவர்களை ஆசிரியராக கொண்டு **'நிறைமதி'** என்ற மாத இதழும் காயல்பட்டணத்தில் துவக்கபபட்டு சிறிது காலத்திலேயேநிறுத்தப்பட்டு விட்டன.

'இளைய சமுதாயம்' என்ற அரசியல் வார ஏட்டை ஜனாப் **காயல் மகபூப்** அவர்கள் 1973 முதல் சென்னையிலிருந்து நடத்தினார்.

முஸ்லீம்லீகின் முதுபெரும் தியாகியும் காயல்வாசியுமான மர்ஹூம் P. H. M. **அப்துல்காதர்** அவர்களால் சென்னையிலிருந்து **'சிராஜுல்மில்லத்'** என்ற மாத ஏடு 1983ல் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் நின்றுவிட்டது.

காயல்பட்டணம் பெரிய நெசவு தெருவைச் சேர்ந்த ஜனாப் S. **இபுனு சவூது** M.A. அவர்கள் கல்கத்தாவிலிருந்து வெளிவந்த MSA NEWS BULLETIN என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியராகவும், சென்னையிலிருந்து வெளிவரும் SIM **செய்திமடல்** என்ற தமிழ் ஏட்டின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். காயல்பட்டணம் அலியார் தெரு ஜனாப் M.H. **ஹாஜா அரபி** M.A. அவர்களும் SIM **செய்திமடல்** ஆசிரியராக இரண்டு வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் **'உதயம்'** தமிழ் மாத ஏட்டின் ஆசிரியராக நமதூர் கொச்சியார் தெரு ஜனாப் M. L. **சாகுல்ஹமீது** S.K அவர்கள் பல வருடங்கள் இருந்துள்ளார்.

'அல்ஹிதாயா' என்ற மாத ஏடு பிற்காலத்தில் ஹாஜி ஹாபிழ் M.K. A. **ஷாகுல் ஹமீது** ஆலிம் பாகவி அவர்களை ஆசிரியராகக் கொண்டும், அவர்கள் மறைவுக்குப் பின் அவரது மகன் ஜனாப் S. H. **முஹ்யித்தீன் அப்துல் காதர்** அவர்களை ஆசிரியராக கொண்டும் A. **தர்வேஷ் முஹம்மது** என்பவரை பொறுப்பாசிரியராகக் கொண்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

டாக்டர் K.V.S.H. **ஹபீப் முஹம்மது**, M.B.B.S. D.C.H. அவர்கள் பல பத்திரிக்கைகளில் மார்க்க மற்றும் விஞ்ஞான கட்டுரைகளையும், புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

காயல்பட்டணம் மாத ஏடுகளில் காசீம் புலவரின் வழித்தோன்றல் காயல் பிறைக் கொடியான் (S. M.B. மஹ்மூது ஹுசைன்) அவர்களின் கவிதைகள் மாதம் தோறும் இடம் பெறுவதை பேரறிஞர்கள் படித்து விட்டு பாராட்டுகிறார்கள் இது போல கவிஞர் S. K. M. சதக்கத்துல்லா ஆலீம் அவர்களின் கவிதையும், S. L. ஷேக் அப்துல் காதர் S. E. அமானுல்லாஹ் ஆகியோரின் கவிதைகளும், மணிமொழிகளை S. S. M. ஷெய்க்அலி ஹாபிழ் அவர்களும், உண்மைச் சம்பவம், சிறுகதைகளை காயல் இப்னு அப்பாஸ் (A. லெப்பை சாஹிப்), முஹம்மது ரபீக், பெண் எழுத்தாளர் K.V.M. முத்துஹாஜரா போன்றவர்களும், மருத்துவக் கட்டுரைகளை K. V. M. ஹபீப் முஹம்மது B. Sc.: D. M. C. அவர்களும், நல்ல பல கட்டுரைகளை அல்ஹாஜ் அல்ஹாபிழ் N. T. S. முஹம்மது சாலிஹ் ஆலீம் நுஸ்கி, A. R. தாஹா ஹாஜி, தர்வேஷ் முஹம்மது ஆகியோர்களும் மாதம் தோறும் சிறப்பாக எழுதி வருகிறார்கள்.

முஸ்லீம் பத்திரிகை நடத்துவது என்றால் இக்காலத்தில் மிகுந்த கஷ்டம், அதனால் தான் முஸ்லீம் பத்திரிகைகள் வேகமாகத் தோன்றி சில காலத்திலேயே நின்று போகின்றன. நமக்கென்று பல மார்க்க ஞான இதழ் வெளி வந்தால்தான், நம் சமுதாய மக்களின் குறைகளை, ஆக்கங்களை, ஆற்றல்களை நாட்டு மக்களுக்கு அதன் மூலம் எடுத்துக்காட்ட முடியும். நமது சன்மார்க்க பத்திரிகைக்கும், வேறு பத்திரிகைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. நம் பத்திரிகையில் சினிமா செய்திகள், ஆபாச வார்த்தைகள், போட முடியாது. அட்டையில் உருவப் படங்களைக்கூட வெளியிட முடியாது. இவை பீடி, சிகரெட் விளம்பரததைகூட வெளியிடுவதில்லை. இதனால் எங்களுக்கு அந்த வகை வருவாய் பாதிக்கிறது. சமுதாய காவலர்களாகிய வியாபாரிகள், இதை உணர்ந்து சமுதாய பத்திரிகைகளுக்கு விளம்பரம் தந்து ஊக்குவிக்க வேண்டும். இஸ்லாமிய இல்லந்தோறும் அவசியம் முஸ்லீம் பத்திரிகைகள் இடம் பெற்றேயாக வேண்டும்.

சமுதாய மேம்பாட்டிற்கு சமுதாய பத்திரிகைகள் ஆற்றிவரும் பணியை மனதிற்கொண்டு இவைகளின் வளர்ச்சிக்கு சிறப்பான உதவிகளை செய்ய சமுதாயம் முன்வர வேண்டும்.

பூமியைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்களேன் . . . !

பூமியின் குறுக்களவு பூமத்திய ரேகையில் 7, 926.8 மைல்கள். சுற்றளவு அதே இடத்தில் 24, 902.39 மைல்கள்! துருவத்துக்குத் துருவம் பூமியின் குறுக்களவு 7,900.00 மைல்கள்! துருவங்கள் வழியாக சுற்றளவு 24,860.49 மைல்கள்! பூமியின் பரப்பளவு 19,69,50,284 சதுர மைல்கள்! பூமியின் கனபரிமாணம் 259,000 000,000 க்யூபிக் மைல்கள். பூமியின் எடை (நிறை) 6, 588, 000, 000. 000, 000, 000, 000 டன்கள்! பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள ஆகும் நேரம் 23 மணிகள் 56 நிமிஷங்கள்; 4.09 வினாடிகள்! சூரியனைச் சுற்றி வர - 365 நாட்கள், 6 மணிகள், 9 நிமிஷங்கள், 9.5 வினாடிகள்!

தகவல் அளிப்பவர் :

H. M. கலீபா முஹம்மது (B. Sc.,)
சதுக்கைத் தெரு, காயல்பட்டணம்.

இஸ்லாமிய சட்டத்தின் சில அம்சங்கள்

M.I. மீராசாகிப் B.Sc., B.L.,

[சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்]

நன்கொடை:

இந்திய நாட்டின் அசையும்-அசையா பொருட்களை பரிவர்த்தனை செய்யும் சட்டப்படி [டிரேன்ஸ்பர் ஆப் புராபர்ட்டி ஆக்ட்] 100 ரூபாய்க்கு அதிக மதிப்புள்ள அசையா பொருட்களை கைமாற்றம் [டிரேன்ஸ்பர்] செய்யும் போது, ரெஜிஸ்டர் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் சொத்தை நன்கொடை அளிப்பதில் முஸ்லீம்களுக்கு விதிவிலக்கு உண்டு. அதாவது ஒருவர் ரூ. 100க்கு அதிக மதிப்புள்ள தம் சொத்தை யாருக்காவது நன்கொடை அளிக்க நாடினால், ரெஜிஸ்டர் செய்வது கட்டாயம் இல்லை. வாய்மொழியாகவும் நன்கொடை அளிக்கலாம். ஆனால் மூன்று நிபந்தனைகளை செயல்படுத்த வேண்டும்.

1) நன்கொடை கொடுக்க முன் வருவது

2) நன்கொடையாக பெறுபவர் அதை ஒப்புக் கொள்வது.

3) சொத்தின் அனுபவ பாத்தியதையை உடன் நன்கொடை பெறுகின்றவரிடம் ஒப்படைப்பது.

இதில் 3வது நிபந்தனை மிக முக்கியமானதாகும். அனுபவ பாத்தியதைக் கொடுக்காவிடில் நன்கொடை செல்லாது. அனுபவ பாத்தியதை என்றால் கையில் கொடுப்பது என்பது அல்ல. உதாரணமாக, வாடகைக்கு சொத்து கொடுக்கப்பட்டு இருந்தால், வாடகைக்கு இருப்பவர்களுக்கு அறிவித்து வாடகையை, நன்கொடை பெறுபவரிடமோ, அவரது உத்தரவு பெற்றவரிடமோ கிடைக்க செய்வது. இந்த முறையை கையாளாமல் போனால், ரெஜிஸ்டர் செய்து பிரயோஜனம் இல்லை. இதையே நமதூரில் **புள்ளி மாற்றுதல்** *என்ற பெயரில், திருமண சமயம் பெண்களுக்கு குடியிருப்பு வீடு கொடுக்கப்படுகிறது. நன்கொடை பெறுபவர் மைனராக இருந்தால் மைனருக்காக, சட்டப்படியான கார்டியன் சொத்தை மைனருக்கு நன்கொடையாக கொடுத்திட அனுமதி கொடுக்க வேண்டும். ஆனால் தகப்பனுக்கு பதிலாக, தாயார் சொத்தை கார்டியன் என்று சொல்லி நன்கொடையை பெற முடியாது. அது செல்லதக்கது இல்லை, என்றும் சொல்லப் படுகிறது.*



வழக்கறிஞர்
M. I. மீராசாகிப் B. Sc., B. L.

தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை தகப்பனார்தான் மைனர் பிள்ளைகளுக்கு கார்டியனாக இருக்க முடியும். தகப்பனார் உயிருடன் இல்லாவிடில், தகப்பனைப் பெற்ற தகப்பன் (பாட்டன்)தான் கார்டியனாக இருக்க முடியும். தகப்பனாரைப் பெற்ற பாட்டனும் உயிரோடு இல்லையென்றாலோ, வேறு காரியங்களால் தகுதி இல்லையென்றாலோ, கோர்ட்டு

ஒவ்வொரு முஸ்லிமிற்கும் முதலில் தான் முஸ்லிமாக இருப்பதன் அடிப்படை காரணம் என்ன வென்று தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு இஸ்லாம் என்றால் என்ன அதன் ஃபர்லுகள் என்ன அவற்றின் அடிப்படை காரணங்கள் என்ன தான் தெளகீதுக்கு மாறாக நடக்கக் கூடாது என்பதற்கு அறிவுபூர்வ காரணங்கள் ஈமான் கொண்ட பிறகு அமல்களின் நிறைவேற்றம் என்பதையெல்லாம்தான் புரிந்து பிறருக்கும் சொல்லக்கூடிய நிலையில் ஒருவர் இருக்க வேண்டும் என்றால் வெறும் கிணற்று தவளை போல் வாழாமல் இறைவன் படைத்த இந்த அகன்ற பூமியில் நடப்பனவற்றை, இருப்பனவற்றை கவனித்து அறிந்து திருமறையை மீண்டும் மீண்டும் அறிந்து படித்து உலகவியலையும் திருமறையின் கண்ணோட்டத்தோடு கவனித்து அறிந்து இறைவனை வணங்கி, புகழ்ந்து நேர்மையாக நடப்பவர்தான் உண்மையான மூமீன் ஆகமுடியும். இவற்றை பால்யத்திலிருந்தே கற்றுக்கொள்ள வேண்டும் தாய்க்கும் சேய்க்கும் உள்ள நெருக்கம் தந்தையின் மகவு நெருக்கத்தைவிட நிச்சயம் அதிக மடங்காகும். எனவேதான் ''ஒரு ஆண் கல்விகற்றால் அவன் மட்டுமே கற்கிறான் ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே கல்வி பெறுகிறது'' என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அதே சமயத்தில் நம்முடைய பெண்களில் பெரும்பான்மையோர் கல்வி பயின்று வேலை தேடி போவதில்லை. வீட்டில் இருந்து கொண்டே மனைவியாய், தாயாய், குடும்பத்தலைவியாய் இருக்கின்றார்கள் இத்தகைய பெண்கள்தான் சமுதாயத்திற்கு அதிக சேவை செய்ய முடியும். இஸ்லாமிய ஷரியத், ஸுன்னத் எனும் அடிப்படையில் அவர்கள் வாழ்க்கையை அமைத்து உலக கல்வியையும் பயின்ற இவர்கள் கல்விப் பெறாத மற்றைய பெண்களைவிட நிச்சயமாக அறிவுத் திறனோடும், செயல்படும் திறனோடும் தன் நம்பிக்கை உறுதியுடனும் தம் மக்களுக்கு ஒரு நல்ல இஸ்லாமிய வாழ்க்கையை அமைத்துத் தர முயலமுடியும். அன்றாட வாழ்க்கையில் எழக்கூடிய பிரச்சனைகளையும் அறிவுபூர்வமாக விளக்க முடியும்.

உதாரணமாக சமீபத்தில் நிகழ்ந்த விஷச்சாராய விளைவுகள். இதைப் போன்ற நிகழ்ச்சிகள் இதற்கு முன்பும் எத்தனையோ ஏற்பட்டுள்ளன. இருந்தும் போதைக்கு அடிமையாகிவிட்ட பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். படித்துக் கற்ற தாய் தன் பிள்ளைக்குப் போதைப் பொருள்களை இறைவன் விலக்கியிருக்கிறான் என்று சொல்லும்பொழுது இருகோணங்களிலிருந்து இதற்கு வியாக்கியானம் சொல்ல வேண்டும். முதலில் இதை இறைவன் சொன்னான் இதனை அப்படியே ஏற்று நாம் செயல்பட வேண்டும் இதுதான் உண்மை முஃமீனுக்கு அடையாளம். இரண்டாவதாக கள், சாராயம் போன்ற மற்ற மதுபானங்களால் விளையக் கூடிய தீங்குகள் — உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும், மனதிற்கும் மன நிலைக்கும், தன் குடும்பத்திற்கும் தன்மானத்திற்கும் ஏற்படக்கூடிய நஷ்டங்கள் அறிவுபூர்வமாக ஒருதாய் எடுத்துரைக்கும்போது குழந்தையின் மனதில் ஆணித்தரமாக பதியும்.

ஒரு ஆண்மகனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியரை மணந்து கொள்ளும் உரிமையிருக்கிறது. அதற்கு அறிவுபூர்வ காரணங்கள் என்ன அதே உரிமையை பெண்ணிற்குதரப்படாததன் காரணம் என்ன? ஒரு ஆண் மகன் தலாக் தலாக் ...... என்று சொன்னால் விவாகரத்து ஏற்பட்டுவிட்டது என்பது உண்மையா? திருமறையில் விவாகரத்து குறித்து கையாளப்பட வேண்டிய விதிமுறைகள் என்ன? விவாகரத்தை அனுமதித்திருந்தாலும் அனுமதிக்கப்பட்ட செயல்களிலே இறைவனுக்கு மிக வெறுக்கத்தக்க செயல் விவாகரத்துதான் என்றும், ஒரு முஸ்லிம் ஆண்மகனுக்கு பரம்பரை சொத்தில் இருபங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கு சொத்தும் தருவது நீதியா, முறையா என்ற கேள்விக்கு அறிவுபூர்வமான பதிலை சொல்ல நிச்சயமாக ஒரு பெண் எந்நிலையிலும் தயாராக இருக்க வேண்டும். இதற்கு அவள் மற்ற சமுதாயங்களில் பெண்களுக்கு சொத்துரிமை என்ன? பெண்களின் உரிமைகள் என்ன? என்பதையெல்லாம் அறியாமல் விளக்கம் தரமுடியாது. அதே போல் இவ்விஷயத்தைப் பற்றிய திருமறையின் சட்டதிட்டங்கள் யாவை? என்பதையும் நன்கு கற்றறிந்திருக்க வேண்டும்.

இத்தகைய நிலையில் நமது நாட்டிலும், அயல் நாடுகளிலும் இஸ்லாத்தை தவறாகப் புரிந்தோ, இல்லை வேண்டுமென்றோ இஸ்லாத்தைப் பற்றி நடத்தப்பட்டு வரும் துவேசப் பிரச்சாரங்களை எதிர்த்து அறிவுபூர்வமான விளக்கங்கள் தந்து இந்நிலையை சீர் செய்வது

ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் இருபாலரும் கடமைபட்டிருக்கின்றார்கள். இதுதான் இன்றைய ஜிஹாத். இதற்கு தயராகும் வகையில் ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண்ணும் மார்க்க ஞானத்தையும் உலக கல்வி அறிவையும் பெற கடமைபட்டிருக்கின்றார்கள்-**நபிகள்நாயகம்(ஸல்)** நபித்துவம் பெற்றவுடன் அவர்களுக்கு இறங்கிய வேதத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டவர் கள் முஃமீன்களின் அன்னையான **கதீஜா நாயகி** அவர்கள்தான். இஸ்லாத்திற்காக இறைவனின் ஏகத்துவத்திற்காக அல்லாஹ்வின் பாதையிலே தன் உயிரை தியாகம் செய்தவர்களில் முதல் பெண்மணியும் அன்னை **சுமைய்யா** அவர்கள்தான். இஸ்லாமிய சட்டதிட்டங்களில் அப்பொழுது வாழ்ந்த ஒரு சில மேதைகளுக்கு மத்தியில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பேத்தி அன்னை **நபீஸா** ஆவார்கள். எம்பெருமானார் அவர்களின் மறைவிற்கு பிறகு அவர்களின் அருள்மொழிகளைத் திரட்டி தொகுத்தவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்தார்கள் அன்னை **ஆயிஷா** அவர்கள். ஹிஜ்ரி முதல் நூற்றாண்டிலிருந்து ஐந்தாவது நூற்றாண்டு வரை இஸ்லாமிய வரலாறு ஒரு பொற் காலமாக விளங்கியது. இஸ்லாமிய பெண்கள் கற்றறிந்த ஞானிகளாக மேதைகளாக சமுதாயத்தைத் திருத்தும் வழிகாட்டிகளாக இஸ்லாமிய கோட்பாட்டிற்குள் தங்கள் வாழ்க்கையை இஸ்லாத்தின் பெண்களின் நிலையை உயர்த்தி வாழ்ந்து காட்டினார்கள். எனவே இதை உணர்ந்து நல்லவர்கள் சிலர் பெண்களுக்கு நிஸ்வான் பள்ளிகளையும் ஓரியண்டல் அரபி பெண்கள் பள்ளிகளையும், சமீபமாக **கீழக்கரை தாசிம் பீவி அப்துல்காதர் பெண்கள் கல்லூரியையும்** நிறுவியிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 35 வருடங்களுக்கு முன் **சென்னையில் S. I. E. T. மகளிர் கல்லூரியையும்** நிறுவினார்கள். இன்றைக்கும் இந்த சென்னை கல்லூரியில் பெண்களுக்கு மார்க்க அறிவையும் கல்லூரி நேரங் களில் தொழுவதற்கான வசதிகளையும் தந்து சேவை புரிகிறார்கள் இந்த நல்ல முயற்சியில் பங்கேற்று உறுதுணையாக நின்று சமுதாய மறுமலர்ச்சிக்கு எல்லா முஸ்லிம் ஆண்களும் பெண் களும் உதவி புரிய வேண்டும். ஆண் பிள்ளைகளுக்கு கிட்டதட்ட 12 முஸ்லிம் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உண்டு. பெண்களுக்கு சென்னையிலும், கீழக்கரையிலும் இருக்கின்றன. எனவே இவற்றின் மூலம் தமது பெண்களுக்கு மார்க்க அறிவும் உலக கல்வியும் ஒருங்கே பெற முன்வந்து இந்த நல்ல முயற்சிகளில் பங்கேற்பார்கள் என்றால் இன்ஷா அல்லாஹ் விரைவிலேயே நமது பெண்மணிகள் ஒவ்வொருவரும் ஒரு உஸ்வத்துன் ஹஸனாவாகி விடுவார்கள்.

இதற்கு இறைவன் கருணைகாட்டி நம்மை நல்வழிப்படுத்துவானாகவும். ஆமீன்.

கல்வி - மனித வாழ்வின் இன்றியமையா தேவை

- அல்ஹாஜ் வாவு சித்தீக் -

(முன்னாள் நிர்வாகி. சென்ட்ரல் மேல்நிலை, சுபைதா உயர்நிலை பள்ளிகள்)

மனித வாழ்வின் இன்றியமையாத ஒன்றாக என்றும் திகழ்வது கல்வி. அறியாமையெனும் இருளினை அகற்றி அகிலத்தை அறிய நமக்கு துணை நிற்பது கல்வி. கல்வியின் சிறப்பை அறிஞர்கள் பலரும் எடுத்து இயம்பியிருக்கிறார்கள் என்றால் அதன் சிறப்பு மேலும் தெளிவு பெறுகிறது. பல்வேறு கருத்துக்கள் ஒருமித்து வாழும் மக்களின் இருப்பிடம்தான் நமது காயல்பட்டணம். காயல்பட்டணம் பண்பாட்டின் உறைவிடமாக விளங்குகிறது என்று சொன்னால் அது தவறாகாது. அத்தகைய காயல் வாழ் மக்களின் பண்பட்ட நிலை தொடர எல்லா வழிகளிலும் அவர்களுக்கு கல்வி மிகவும் அவசியமான ஒன்றாக விளங்குகிறது.

பெண்களுக்கு கல்வி :

பெண்களுக்கு அழகு தரும் அணிகலனைப் போன்று அவர்களின் அழகு மேலும் சிறக்க உதவுகிறது கல்வியே, இருபதாம் நூற்றாண்டிலும் சரி, ஏனைய நூற்றாண்டுகளிலும் சரி கல்வி கற்ற பெண்கள் வாழும் பூமியே; களரற்ற — செழிப்பான நிலம் என்பது ஆன்றோர் வாக்கு;

நமது காயல்பட்டணத்தில் பெரும்பான்மை ஆண்கள் வெளியூர் சென்று, அதாவது "திரைகடல் ஓடியும் திரவியம் தேட" வேண்டியிருப்பதால் பெண்கள் மட்டுமே அதிகமாக இங்கு தங்க வேண்டிய சூழலில் உள்ளனர். இன்றைய நடைமுறை வாழ்க்கையைப் பற்றிய விவரங்கள் - உலகப் பொதுச் செய்திகள் - அன்றாட வரவு, செலவுகள் - தமது குழந்தைகளைப் பேணுகின்ற நிலைமை - இதுபோன்ற ஆண்கள் செய்ய வேண்டிய அனைத்துக் காரியங்களையும் பெண்களே செய்ய வேண்டியுள்ளபடியால் நம் காயல்வாழ் பெண்களுக்கு உலகக் கல்வி மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக ஆகிவிடுகின்றது.

பண்பட்ட இளைய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால் மார்க்கக் கல்வி இவர்களுக்கு முழுமையாகத் தேவைபடுகின்றது. இன்று பெற்றோரை மதிக்காது தான்தோன்றித்தனமாக வாழும் இளைய சமுதாயத்தை நல்ல பாதையில் - நல்ல நெறியில் உருவாக்க வேண்டுமெனில் மார்க்கக் கல்வி தேவைப்படுகின்றது. மார்க்கம் என்றால் என்ன என்பதையே அறியாத சூழலில் மக்கள் இருக்கும் போது மார்க்கத்தைக் கற்று, நல்ல சமுதாயத்தை உருவாக்கித் தெளிவு பாதையில் அழைத்துச் செல்ல கல்வி உறுதுணையாக விளங்குகிறது.



அல்ஹாஜ் வாவு சித்தீக்

ஆண்களுக்கு கல்வி :

எந்த வகையில் பார்த்தாலும் நமது பட்டணந்தில் வாழ்கின்ற ஆண்கள், வெளியூர் - வெளிநாடு என்று சென்றே பொருள் தேடி வருகின்றார்கள். அதனால் பொருள் தேடுகின்ற வழியை ஆராய்ந்து - உலகத்தோடு பல மக்களோடு கலந்து உறவாட பல மொழிப்பெயர்ச்சி - வியாபார சம்பந்தமாக கணக்குகளை தெள்ளிதில் செயல்பட்ட சிறந்தவர்களாக விளங்கி - மேன்மை அடைய, பட்டப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட கல்வி முறைகள் இவர்களுக்கு மேலும் அத்தியாவசியமான கருவியாக விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

இளைஞர்களுக்கு கல்வி :

வருங்காலம் இன்றைய இளைஞர்களின் கைகளில் உள்ளது. அதுவும் காயல்பட்டணத்தில் வாழும் சிறார்கள் - இச்சின்னஞ்சிறு உள்ளங்களில் மனம் பண்பட்ட நிலையில் வளர்ந்து ஓங்கிட கல்வி மிக மிகத் தேவையாக உள்ளது.

சமூகத்தில் தீய நடத்தைகளுக்கு இன்றைய சிறார்கள் ஆளாகிறார்கள் என்றால் அவர்கள் போதிய கல்விச் சூழலில் வளரவில்லை. வசதிகளும், வாய்ப்புகளும் இருந்தும் அது செம்மையான பாதையில் செயல்படுத்த போதிய கல்விச் சூழல் இல்லாமையே அடிப்படைக் காரணமாகும்.

குறிப்பாக நாம் "வியாபாரிகளாகத்தானே ஆகப்போகிறோம்" என்ற உணர்வு இவ்வுள்ளங்களில் இருப்பதால் உயர்நிலை, மேல்நிலை போன்ற கல்வியைக் கற்காமலே காலத்தை வீணாக்குகிறார்கள். இதனால் பிற்காலத்தில் இவர்களே வளர்த்த தொழில்கள் வளர்ந்த நேரத்திலும் இவர்களின் கீழ் உள்ளவர்கள் இவர்களைச் சுரண்டி அடியோடு. வேரோடு அழிக்கின்ற சூழல் உருவாகிறது. காரணம் கல்வியை உரிய காலத்தில் கற்காமல் விட்டு விட்டதே யாகும்.

ஆகவே இன்றைய இளைஞர்களைப் பெற்றோர்கள் அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையான உலகக் கல்வியையும் நாகரீகப் பண்பாடு செழித்து வளர மார்க்கக் கல்வியையும் ஊட்டி வளர்க்க வேண்டியது இன்றியமையாததாகும். இதனை இன்றே நாம் செயல்படுத்த முன்வரா விட்டால் நாளைய நமது சமுதாயம் சீரழிந்து, நிலைகுழைந்து தடுமாறும் என்பதில் அய்யமில்லை.

எல்லோருக்கும் கல்வி

காலை கண் விழித்தது முதல் இரவில் கண் அயரும் வரை ஊரிலே அன்றாடம் நடக்கும் பல நிகழ்ச்சிகளைத் தெரிந்தும் தெரியாமல் இருக்கின்ற நிலை உள்ளது. நம்மிடையே, ஒன்றைப் பற்றி அறிய வேண்டுமென்ற அறிவார்ந்த கல்வி இல்லாமையே இதற்கு காரணமாகும்.

இன்று தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் வாயிலாக எத்தனையோ அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான செய்திகள் வருகின்றன. எடுத்துக்காட்டாக இன்றைய பொருட்களின் விலை, கால நிலை அறியாமலேயே நாம் இருப்பதால் பிறரால் ஏமாற்றப்பட்டு வருகிறோம்.

மேலும் எத்தனையோ ஏமாற்றுக் கம்பெனிகள் இங்கு வந்து மக்களை ஏமாற்றி பணம் பறிக்கின்ற சம்பவங்களைத்தான் பார்க்கிறோம். இன்றும் என்றும் ஏமாந்தவண்ணமாகவே இருந்து வருகிறார்கள். காரணம் எதனையும் ஆராய்ந்து பார்க்காமல் நம்புவதும், செய்திகளை அதிகம் படிக்காமல் இருப்பதுமே யாகும். ஆதலால் தினந்தோரும் செய்தித் தாள்களைப் படித்து உண்மை நிலவரத்தை உணர்ந்து செயல்பட வேண்டிய சூழல் மிக மிக முக்கியமாகத் தேவைப் படுகின்றது.

அறிஞர் பிரான்சிஸ் பேகோன், (Bacon) "Studies serve, for delight, for ornoment and for ability" என்பதால் காயல்பட்டணம் வாழ் மக்கள் இதனை உணர்ந்து பெண்களானாலும் சரி ஆண்களானாலும் சரி, இளைஞர்களானாலும் சரி தெளிவுடைய கல்வியை தெளிவாகக் கற்று வளம் சேர்ப்பீர். ஏமாற்றத்திலிருந்து விடுபடுவீர். பண்டைய காயல்பட்டணத்தின் பண்பட்ட நெறியை அணிகளனாய் அணிபெறச் செய்வீர்.

கல்வி கற்பதைக் கடமையாக கொள்வார் இறப்பதில்லை. கற்றறிந்தோரின் சொற்களைக் கேட்டலும் அறிவியல் அறிவை மற்றவர்களுக்கு புகட்டுதலும் சமயச்சடங்குகளை விட உயர்ந்தவை. — **நபி மொழி**

காயல்பட்டணத்தின் கல்வி வளர்ச்சி

— அல்ஹாஜ் S. O. புஹாரி. —
(பாளையங்கோட்டை சதக்கதுல்லாஹ் அப்பா கல்லூரி ஆட்சிக்குழு தலைவர்)
காயல்பட்டணம்

தோற்றப் பெருமையைக் கொண்டே பார்த்தவுடன் காயல் வாசிகள் என அடையாளம் காணும் அளவிற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நாகரீகத்தை கொண்டவர்கள் காயல்வாசிகள்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியத்திற்கும் அரபு இலக்கியத்திற்கும் மகத்தான சேவை செய்து வரலாறு படைத்தவர்கள் இந்நகர வாசிகள். தமிழை அரபுலிபியில் எழுதக் கூடிய **'அரபுத் தமிழ்'** காயல்பட்டணத்தில்தான் உருவாக்கப்பட்டது.

மார்க்கப் பற்று நிறைந்த இந்நகரில் இஸ்லாமிய மார்க்க கல்வியையும் அரபு மொழியையும் கற்றுக்கொள்வது கடமையாகவே செயல்படுத்தப்பட்டது. தெருக்கள் தோறும் ஆங்காங்கே இல்லங்களிலும் **'பள்ளிகள்'** நடத்தப்பட்டன. மழலைச் செல்வங்கள் மரப்பலகையை கையில் தூக்கிக் கொண்டு அதில் எழுதப்பட்டுள்ள **புனித குர்ஆன்** வசனங்களை ஓதுகின்ற பாணியே தனிக்கவர்ச்சிதான்.

இன்று **மகழரா, ஜாவியா** என்ற இருபெரும் அரபிக் கலாசாலைகள். இது தவிர ஆங்காங்கே ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே மார்க்கக்கல்வி நிலையங்கள். சிறுவர் சிறுமியருக்கான திண்ணைப் பள்ளிகளும் இன்று ஏராளம் இந்நகரில் உள்ளன.

இந்தியத் திரு நாடு சுதந்திரம் அடைவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே **உலகக் கல்வியும்** தமிழும் ஆங்கிலமும் கற்பதற்கு இங்கு ஒரு பள்ளிக்கூடம் கூட ஏற்படுத்தப்படவில்லை: **1925க்கு** பின் கல்வி அறிவு கட்டாய தேவை என இந்நகரில் உணரப்பட்டது. இந்நகரின் பல பெரியவர்கள் இங்கு கல்விக் கூடங்கள் திறப்பதற்கு அரும்பாடு பட்டார்கள், காயல்பட்டணம் ஊராட்சியின் முதலாவது மக்கள் தலைவர் **திரு. S. பொன்னையா நாடார்** அவர்களும் இந்நகரில் ஒரு பள்ளிக்கூடமாவது தொடங்கப்பட வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்தார். இவர்களது பெரும் முயற்சியால் தூத்துக்குடி தாலுகா போர்டு மூலம் காயல்பட்டணத்தில் ஒரு ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டது. **அலியார்தெருவில்** தாலுகா போர்டு செலவில் சிறிது நிலம் வாங்கி கட்டிடமும் கட்டப்பட்டது. ஒன்றிரண்டு ஆசிரியர்கள் 3 வகுப்புகளை நடத்தினர். இப் பள்ளியில் சிறுவர்கள் மட்டுமே படித்தனர். சிறுமிகளும் கல்வி கற்க முன் வர வேண்டுமென்ற முயற்சி முடுக்கிவிடப்பட்டது. அத்துடன் மேலும் பல பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்ற ஆர்வமும் எழுந்தது.

காயல்பட்டணம் அப்பாபள்ளித் தெருவைச் சேர்ந்த மறைந்த பெரியார் **அல்ஹாஜ் N. T. அப்துல்ஹை ஆலிம்** அவர்கள் 15-1-1927ல் **காஹிரா ஸ்கூல்** என்ற பெயரில் **சித்தன் தெரு** (இன்றைய அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி அறிவியல் ஆய்வு கூடம் இருக்குமிடத்தில்) விலும் பின்னர் **மகழராவின்** வடபுற தோட்டத்திலும் 1933ல் **கருத்தம்பி மரைக்கார் தெரு**விலும் 6வது வகுப்பு வரை பள்ளிக்கூடம் நடத்தினார். காயல்பட்டணத்தில் கல்வி கற்க வேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்கும் வகையில் இன்றைய அமைப்பு முறையில் கல்விக் கூடத்தை முதன் முதலில் உருவாக்கி நடத்திய பெருமை **ஹாஜி N.T. அப்துல்ஹை ஆலிம்** அவர்களையே சாரும். இதற்கு முன் இலங்கையிலுள்ள கண்டி, காலி நகரங்களிலும் இதுபோன்ற பள்ளிக்கூடம் நடத்திய பெருமை **அப்துல்ஹை ஆலிம்** அவர்களுக்கு உண்டு.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக காஹிரா ஸ்கூல் நிர்வாகத்தை அன்றைய **முஸ்லிம் ஜனநாயக சபையிடம்** ஹாஜி **N. T. அப்துல்ஹை ஆலிம்** 1943ல் ஒப்படைத்தார். அந்த சபை 1944ல் ஹாஜி **L.K. லெப்பைத்தம்பி** அவர்களிடம் இப்பள்ளியை ஒப்படைத்தது. அதன் பின்னர் காஹிரா ஸ்கூல் எல். கே. பள்ளியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.




ஹாஜி N. T. **அப்துல்ஹை ஆலிம்**

1933 - 34ல், மறைந்த பெரியார்களான ஹாஜி V. M. S. **முகம்மது சுலைமான் லெப்பை**, ஹாஜி **I. L. S. ஆப்தீன்**, ஹாஜி P.S. **அப்துல் காதர்**, ஹாஜி **L. K. லெப்பைத்தம்பி**, **ஹாஜி S. O. ஹபீப் முகம்மது** போன்றோரின் பெருமுயற்சியால் **தைக்கா தெருவில்** ஒரு ஆரம்பப்பள்ளி துவக்கப்பட்டது.

அதே சமயம் **தீவுத் தெருவிலும்** ஒரு தொடக்கப்பள்ளி துவக்கப்பட்டது. ஜனாப்களான A. K. **ஷாகுல்ஹமீது ஹாஜி, அ. க. முகம்மது அப்துல்காதர், பீ.** அபுல்ஹஸன், A. K. **செய்யது அஹமது ஹாஜி, B. மஹ்மூது ஹாஜி** போன்ற பெரியோர்கள் இப்பள்ளி துவக்கப்பட காரணமாக இருந்தார்கள்.

மார்க்க அறிஞராகவும் சிறந்த பேச்சாளராகவும் பொதுநல ஊழியராகவும் பிற்காலத்தில் காஹிரா ஸ்கூலின் நிர்வாகியாகவும் இருந்த மறைந்த பெரியார் M. K. A. **மூஸா ஸாகிப் ஆலிம்** அவர்களதுமுயற்சியால் **கருத்தம்பி மரைக்கார் தெரு**வில் பெண்களுக்கான ஒரு பள்ளி உருவாக்கப்பட்டது.

ஆரம்பப் பள்ளியாக இருந்த **எல் கே பள்ளியை** உயர்நிலைப் பள்ளியாகவும் பின்னர் மேல்நிலைப் பள்ளியாகவும் ஆக்குவதற்கு எல்கே அவர்கள் அரும்பாடுபட்டார். ஹாஜி எல்கே லெப்பைத்தம்பி சாலையில் எல்கே நர்சரி, ஆரம்ப மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், ஸி. கஸ்டம்ஸ் சாலையில் எல்கே தொடக்கப் பள்ளியும் அமைந்துள்ளன.



M.K.A. **மூஸா ஸாகிப் ஆலிம்**

கல்விக்காக தனது உடல் பொருள் உயிர் அனைத்தையும் தியாகம் செய்து கல்வித் தந்தை என அனைவராலும் புகழப்படுவர் ஹாஜி **எல். கே. லெப்பைத்தம்பி** அவர்களாவர். ஒவ்வொரு மாணவனின் உடை, நடை, முடி, பல், நகம் இவைகளை சோதித்து அனுப்புவதிலிருந்து மாணவர்களின் வீடுகளுக்குச் சென்றுஅவனது கல்வித் தரம் பற்றி பெற்றோர்களிடம் பேசுவதுவரை கல்விக்காகவே தன்னை அர்ப்பணித்தார்.

எல்கே பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அன்றைய கல்வி அமைச்சர் டாக்டர் **அரங்கநாயம்,** பள்ளி கல்வி இயக்குனர் டாக்டர் **வேங்கட சுப்பிரமணியம்** ஆகியோரிடம் முயற்சி செய்து அனுமதி வாங்கியதற்கு **அலியார்தெரு S. M. ஜக்கரியா** அவர்களும் அவர்களோடு ஹாஜி **V. M. S. லெப்பை** அவர்களும் **குளம் Z. A ஹுசைன்** ஹாஜி அவர்களும் காரணமாக இருந்தார்கள்.

எல் கே பள்ளிகளை L.K.S. **ஜுவல்லர்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட்** என்ற அறக்கட்டளையினர் நிர்வகித்து வருகின்றனர்.

தீவுத்தெரு அரசு பெண்கள் பள்ளியை தொடக்கப்பள்ளி நிலையத்திலிருந்து நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் அதற்கான அனுமதியைப் பெறுவதற்கும் 1933 - 34-ல் காயல் பட்டணம் தீவுத்தெரு மறைந்த பெரியார் A. K. **ஷாகுல் ஹமீது ஹாஜியார்** அவர்கள் மிகுந்த முயற்சி செய்தார்.

பின்னர் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் மேல்நிலைப்பள்ளியாகவும் உயர்த்துவதற்கும் அதற்கான நிதிகளை சேர்ப்பதற்கும் பெண்கள் கல்வி கற்கவும், பெற்றோர்களுக்கு ஆர்வம் ஏற்படவும் இலங்கையிலும் இந்தியாவிலும் தனது முழு நேரத்தையும் உழைப்பையும் தியாகம் செய்த பெருமை ஜனாப் A. K. **ஷாகுல் ஹமீது ஹாஜியார்** அவர்களையே சாரும்.

*1933*ல் காயல்பட்டணம் **பெரிய ஜு்ம்ஆபள்ளி** காம்பவுண்டுக்கு எதிரில், மறைந்த பெரியார்களான **வெ. மு. அப்பா** என்ற **வெ. முகம்மது முகிய்யதீன்** அவர்கள் **சி. மு. க. சேகு முகம்மது** அவர்கள் **கோமான் தெரு அம்பலம் அஹமது ஹஸன்** அவர்கள் மற்றுமுள்ள அன்றைய **முஸ்லிம் மகாஜன சபை** பெரியோர்களால் **முஸ்லிம் ஸ்கூல்** என்ற பெயரில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு சிலவருடங்கள் கழித்து **சுபைதா பெண் பாடசாலைநெய்னார் தெரு** பெண்கள் தைக்காவில் பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளி ஆரம்பிக்கப்படுவதற்கு **நாவலர் அமீர் சுல்தான்** அவர்களது புதல்வர் **ஏ.எஸ். சுலைமான்**, **ஜனாப் M. K. அபூபைதா** ஆகியோரின் முயற்சி காரணமாக இருந்தது.



ஹாஜி
A. K. சாஹு்ல்ஹமீது

இந்திய விடுதலைக்குப்பின் முஸ்லிம் ஸகூல் **சென்ட்ரல் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலாக** மாற்றப்பட்டது. **சுபைதா ஸ்கூல் நெய்னார் தெருவிலிருந்து சதுக்கை தெரு** அகமது நெய்னார்பள்ளிச்கு பின்புறம் மாற்றி அமைககப்பட்டது. இந்த இரண்டு பள்ளிகளையும் பெரியார் **வெ. மு. அப்பா** அவர்கள் அரும்பாடு பட்டு நிர்வகித்தார்கள். அவர்களுக்குப்பின் நிர்வாகியாக மறைந்த பெரியார் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் ஹாஜி M. K. T. **முகம்மது அபூபக்கர்** அவர்கள் மிகச் சிறப்பாக நிர்வகித்து பணி செய்தார்கள். நம் பகுதி மாணவர்களின் நலனுக்காக **வீரபாண்டியன் பட்டணத்தில்** திரு. **சி. பா. ஆதித்தனார்** அவர்கள் கலைக்கல்லூரி தொடங்குவதற்கு கனம் M. K. T. அவர்களே காரணமாக இருந்தார்கள்.

இன்று சென்ட்ரல் மற்றும் சுபைதா பள்ளிகளை **வாவு மொகுதூம் ஹாஜியார்** அவர்கள் தலைமையிலான **வாவு அறக்கட்டளையினர்** திறப்பட நடத்தி வருகின்றனர். இவர்களது பெருமுயற்சியால் சுபைதா பள்ளி பெண்கள் உயர்நிலைப்பள்ளியாகவும், சென்ட்ரல் பள்ளி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

*1953-54*ல் அல்ஹாஜ் **எல். கே. லெப்பைத் தம்பி** அவர்கள் தலைமையில் இயங்கி வந்த காயல்பட்டணம் ஆறுமுகனேரி கல்விச் சங்கத்தாரால் **காயல்பட்டணம் ஆறுமுகனேரி உயர்நிலைப்பள்ளி** என்ற பெயரில், **பெருந்தலைவர் காமராசர்** அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது 11ம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெற்று ஆறுமுகனேரி பேயன்விளையில் ஆரப்பிக்கப்பட்டது. இப்பள்ளியின் கிழக்கு பகுதியிலுள்ள சத்துணவு கூடம் உள்ளிட்ட சில இடங்கள் காயல்பட்டணம் பேரூராட்சியைச் சேர்ந்தது.

இப்பள்ளி ஆரம்பிக்க வசதியாக எட்டு ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கி உதவியவர் இன்றைய காயல்பட்டணம் பேரூராட்சி தலைவர் ஹாஜி V. M. S. **லெப்பை** அவர்களும், அவர்களது தந்தை ஜனாப் **விளக்கு முஹம்மது சுலைமான்லெப்பை** அவர்களும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமாவர்.



காயலின் முதல் பட்டதாரி
B. A. காக்கா என்ற
M.K.S. முகிய்யதீன் இபுராகீம் சாகிபு B.A., B.L.

மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ள இப்பள்ளிக்கும் கல்விச் சங்கத்திற்கும் **ஜனாப் ஹாஜி V.M.S. லெப்பை** அவர்களே தலைவராக பொறுப்பேற்று பணி செய்கிறுர். இதற்கு முன் இப்பள்ளி மற்றும் கல்விச் சங்க தலைவர்களாக ஹாஜி **எல் கே லெப்பைத்தம்பி** அவர்களும் ஹாஜி S. O. **ஹபீப்முகம்மது** அவர்களும் கடமையாற்றியுள்ளனர்.

ஆங்கில வழியிலான போதனையுடன் கூடிய மத்திய பாடத்திட்டத்தின் கீழ் DCW நிறுவனத்தினர் **கமலாவதி மேல்நிலைப்பள்ளியை** காயல்பட்டணம் பேரூராட்சிக்குட்பட்ட சாகுபுரத்தில் துவக்கி நடத்தி வருகின்றனர்.

இதே போன்ற ஆங்கில போதனா அடிப்படையில் இஸ்லாமிய மார்க்க அறிவுடன் கூடிய ஒரு பள்ளி துவக்கப்பட வேண்டும் என்று **ஹாஜி R. S. அப்துல் லத்தீப் M. A.,** அவர்கள் பெரு முயற்சி செய்தார். **ஹாஜி M. M. உவைஸ்** அவர்களும் **ஹாஜி வாவு சித்தீக்** அவர்களும் இதற்கு பெரும் ஒத்துழைப்பு கொடுத்தனர். இவர்களது முயற்சியால் **முஹிய்யதீன் மெட்ரிகுலேசன் பள்ளி** ஆரம்பிக்கப்பட்டது.

கேரள மாநில முன்னாள் முதல் அமைச்சரும் முஸ்லிம்லீக் தலைவருமான C. H. முகம்மது கோயா அவர்கள் *10-7-1979*ல் இப்பள்ளியை துவக்கி வைத்தார். இன்று மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ள அப்பள்ளியை **செய்யிதினா முஹம்மத் கல்விச் சங்கம்** நடத்துகிறது. இதன் இன்றைய தலைவர் குளம் Z. A. **சாமு ஹாஜி** அவர்கள்,

பாளையங்கோட்டையில் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி துவக்கப்பட காயல்வாசிகளே காரணம் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது. **அல்ஹாஜ் P. S. அப்துல் காதர், அல்ஹாஜ் S.O. ஹபீப் முகம்மது, அல்ஹாஜ் வாவு மொகுதூம் முகம்மது** உள்ளிட்ட காயல் பிரமுகர்கள் இதற்கு பெருமுயற்சி எடுத்தனர்.

இன்று இக்கல்லூரி ஆட்சிக்குழுவின் தலைவராக காயல்பட்டணத்தைச் சார்ந்த **ஹாஜி S.O. புகாரி** அவர்களும் பொருளாளராக ஜனப் P. S. A. **பல்லாக்கு லெப்பை** B. Sc., அவர்களும் உள்ளனர். இக்கல்லூரி தாளாளராக திருநெல்வேலி செய்யது பீடி அதிபர் **ஹாஜி T.E.S. பத்ஹு்ரப்பாணி** அவர்கள் பணி செய்கிறார்.

சமீபத்தில் **திருச்செந்தூரில்** துவக்கப்பட்ட **கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரியில்** காயல் நகர பெண்கள் பட்டப்படிப்பு பயின்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். ○

மலிவுச் சரக்கு

அந்த வயதாய கிழவனும் அவனது சிறிய பேரனும் அடுத்த கிராமத்திற்கு தங்களது கழுதையையும் அழைத்துக் கொண்டு நடந்து சென்றனர். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு பொது திண்ணையில் அரட்டையடித்துக் கொண்டிருந்த சிலர் 'என்ன மடையர்கள் இவர்கள் கழுதையுடன் நடந்து செல்கின்றனர் யாராவது ஒருவர் அதில் ஏறிச் செல்லலாமே' என்றனர். இப்பேச்சு காதில் விழுந்ததும் கிழவர் தம் பேரனை கழுதை மேல் ஏற்றி பயணம் தொடர்ந்தார்.

இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும் தெரு குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்கள் 'அடியே காலம் ரொம்பக் கெட்டுப் போச்சுடி பார்த்தியா? சாகப் போற கிழவனை நடக்க விட்டு விட்டு திமிர் பிடித்த பையன் கழுதையில் போறான்' இப்பேச்சு காதில் விழுந்ததும் அதிர்ச்சியடைந்த பையன் கீழே இறங்கி தன் தாத்தாவை கழுதையில் ஏற்றி நடந்து வந்தான்.

இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும் தெரு ஓட்டல் பெஞ்சில் வம்பளந்துகொண்டிருந்த வாலிபர்கள் 'இந்தக் கிழவனுக்கு அறிவிருக்கா? பாவம் சின்னப் பையனையும் தன்னுடன் கழுதையில் ஒன்றாக ஏற்றிச் செல்லலாமே! என்றனர்.

உடனே கிழவனும் பையனை கழுதையில் தன்னுடன் ஏற்றிக்கொண்டான். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு சிறிய ஆற்றில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தில் 'தம்' அடித்துக்கொண்டிருந்த சிலர் 'இந்த வாயில்லாத ஜீவன் மீது இந்த மடையர்கள் ஏறிச் செல்கிறார்களே! கொஞ்ச தூரம் அந்தக் கழுதையை இவர்கள் தூக்கிச் சுமந்தால் என்ன? என கிசு கிசுத்தனர்

பாவம். அந்த அப்பாவிகள் இருவரும் இந்தப் பேச்சுக்கும் மதிப்பளித்து கழுதையை விட்டு இறங்கி தாங்கள் கழுதையை தூக்கிச் சுமக்க முயற்சிக்க கழுதை துடித்து காலால் உதைத்தது பிடி நழுவ கழுதை ஆற்றில் விழுந்து மூழ்கி இறந்தது. அப்பாவிகள் இருவரும் உதையும் பட்டு கழுதையையும் இழந்து சோர்ந்தனர்.

இந்த உலகத்தில் மிகவும் மலிவாகக் கிடைக்கும் சரக்கு அடுத்தவரின் உபதேசம் ஒன்றுதான். எவரது உபதேசத்தையும் கேள். அதை உன் பகுத்தறிவில் எடை போடு. உன் அறிவு சொல்லும் பாதையில் உன் லட்சியப் பயணத்தை தொடர்ந்து செல். எல்லோருடைய பேச்சையும் கேட்டுத்தான் நடக்க வேண்டுமானால் கழுதைக்கும் கிழவனுக்கும் ஏற்பட்ட கதிதான்.

— **காயல்**

காயல்பட்டணத்தின் அரபிக் கலாசாலைகள்

தொகுப்பு: M. A. முஹம்மது ஸாஜித் [B. Sc., (C.S.)]
மரைக்கார் பள்ளித்தெரு, காயல்பட்டணம்.

பெருமைக்குரிய காயல்பட்டணத்தில் குழந்தை பருவத்திலிருந்தே மார்க்க அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக மழலைச் செல்வங்களுக்கு தெருக்கள் தோறும் ஏராளமான அரபிப் பள்ளிகள் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகின்றன. மரப்பலகையில் 'மாலா' (Plaster of paris) என்ற பொருளை தண்ணீரில் தேய்த்து காய்ந்தபின் அடுப்புக்கரியும் மரப்பிசினும் கலந்த மையால், 'கலம்' என்ற மூங்கில் குச்சிகளால் இப்பலகையில் எழுதப்படும். அப்பலகையில் எழுதப்பட்டுள்ள குர்-ஆன் வசனங்களை பாடமாக ஒப்பித்தபின் இதே முறையில் அடுத்த வசனங்கள் எழுதப்படும். குழந்தைகளின் வயதிற்கேற்ற வகையில் மரப்பலகையின் அளவும் இருக்கும். ஆண்களும் பெண்களும் 'லெப்பை'களாக இருந்து இப்பள்ளிகளை இன்றும் நடத்தி வருகின்றனர்.

ஆண்கள் அரபிக் கல்லூரிகள்:

காயல்பட்டணம் அம்பல மரைக்கார் தெரு **'மஹ்ழரா'வில் மஹ்ழரத்துல் காதிரிய்யா** அரபிக் கல்லூரி உள்ளது. 7 ஆண்டு பாடத்திட்டம் இங்கு உள்ளது. இக்கல்லூரியில் பட்டம் பெறும் மௌலவிகளுக்கு **'மஹ்ழரி'** என்ற பட்டம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியின் முதல்வராக மௌலானா மௌலவி அல்ஹாஜ் **S. N. சாகிப்தம்பி ஆலிம் மஹ்ழரி** அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

ஜாவியா தெரு **'ஜாவியா' வில் ஜாவியதுல் ஃபாஸியதுஷ் ஷாதுலிய்யா** அரபிக்கல்லூரி உள்ளது இக்கல்லூரியில் தேர்ச்சிபெறும் மௌலவிகளுக்கு **'ஃபாஸி'** என்ற பட்டம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியின் முதல்வராக மௌலானா மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ் **S. M. ஐதுரூஸ் ஆலிம்** ஃபாஜில் பாகவி அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

ஸி-கஸ்டம்ஸ் ரோடு **'குருவித்துறை பள்ளியில் அல்மத்ரஸத்துத் துர்ரியத்துல் ஹாமிதிய்யா'** கடந்த ஆண்டு துவக்கப்பட்டுள்ளது. இந்த அரபிக் கல்லூரியின் முதல்வராக மௌலானா மௌலவி **S. T. அம்ஜத் அலி ஆலிம் மஹ்ழரி பாஜில் பைஜி** அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

பெண்கள் அரபிக் கல்லூரிகள் :

தீவுத்தெருவில் **''அரூஸுல் ஜன்னா''** மத்ரஸயே நிஸ்வான் உள்ளது. இதன் நிர்வாகியாக ஆலிஜனாப் அல்ஹாஜ் **T. ரஹ்மதுல்லாஹ்** அவர்கள் பணி செய்கிறார்கள்.

அப்பாபள்ளித் தெருவில் **'உம்முல் முஃமினீன் ஆயிஷா சித்தீக்கா'** பெண்கள் அரபிக் கல்லூரி உள்ளது. இதன் முதல்வராக மௌலானா மௌலவி அல்ஹாபிழ் **N. ஹாமித் பக்ரி ஆலிம் மன்பஈ** அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

சொளுக்கார் தெருவில் **'முஅஸ்கரூர் ரஹ்மான்'** மகளிர் மத்ரஸா உள்ளது. இதன் முதல்வராக மௌலானா மௌலவி **H. A அஹ்மது அப்துல் காதிர் ஆலிம்** மஹ்ழரி அவர்கள் பணியாற்றுகிறார்கள்

இவை தவிர, சதுக்கை தெருவில் அல்ஹாஜ் **M. S. M. பாஸுல் அஷ்ஹப்** அவர்களால் தங்கள் முன்னோர்கள் நிலத்தில் கட்டி மர்ஹூம் **அபூபக்கர் ஹஸரத் கிபுலா** அவர்கள் தலைமையில் ஆலிம் பெருமக்களை அழைத்து வக்ஃப் செய்யப்பட்ட **'ஹலீமா மஸ்ஜிதில்'** பெண்களுக்கான இஸ்லாமிய நல்லொழுக்க கல்வி போதிக்கப்படுகிறது. இதன் நிர்வாகியாக ஜனாபா அம்பலம் **A. K. N. செய்யது ஹலீமா** அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

குத்துக்கல் தெருவில் **யாக்கூத்துல் அர்ஷ்,** தைக்காத்தெருவில் **மத்ரஸயே நிஸ்வான்** ஆகியவற்றிலும் பெண்களுக்காக குர்ஆன், இஸ்லாமிய மார்க்க வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

திருக்குர்ஆனை மனனம் செய்யும் ஹிப்ழு மத்ரஸாக்கள்:

அரபிக்கல்லூரிகள் நடத்தப்படும் **மகழறாவிலும் ஜாவியாவிலும்** ஹிப்ழு பிரிவுகளும் நடத்தப்படுகின்றன.

முத்துவாப்பா தைக்காத் தெரு **மஜ்லிஸுல் புகாரிஷ் ஷரீப் ஸபையில் 'அல்மத்ரஸத்துல் ஹாமிதிய்யா'** ஹிப்ழு மத்ரஸா உள்ளது. இந்த மத்ரஸா மற்றும் ஹாமிதிய்யா மார்க்க கல்வி நிறுவனத்தின் முதல்வராக ஆலிஜனாப் **நஹ்வி I. L. நூருல் ஹக்** அவர்கள் பணியாற்றுகிறார்கள். மரைக்கார் பள்ளித்தெரு **மரைக்கார் பள்ளியில் 'அல்குல்லியத்துல் அரபிய்யா ரூஹுல் இஸ்லாம்'** ஹிப்ழு மத்ரஸா உள்ளது. இதன் முதல்வராக மௌலானா மௌலவி அல்ஹாபிழ் **N. ஹாமித் பக்ரி ஆலிம்** மன்பஈ அவர்கள் பணியாற்றுகிறார்கள். அலியார் தெருவில் **யாக்கூத்திய்யா** அரபிக்கல்லூரி உள்ளது. இதன் முதல்வராக மௌலானா மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ் **S. M. ஐதுரூஸ் ஆலிம்** ஃபாஜில் பாகவி அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

காயல்பட்டணத்தில் குர்ஆன் ஓதிக் கொடுக்கும் மத்ரஸாக்கள் ஏராளமாக உள்ளன. கோமான்தெரு மொட்டையார்பள்ளி, காட்டு தைக்காதெரு அரூஸிய்யாபள்ளி, மேலபள்ளி தெரு ஷெய்கு ஸலாஹுத்தீன் பள்ளி, குத்துக்கல் தெரு முஹ்யித்தீன் பள்ளி, மொகுதூம் தெரு மொகுதூம் பள்ளி, அப்பாபள்ளித் தெரு அப்பாபள்ளி, பரிமார் தெரு கடைப்பள்ளி, K. T. M. தெரு தாயும்பள்ளி மற்றும் பல பள்ளிகளில் குர்ஆன் மத்ரஸாக்கள் உள்ளன.

மாபெரும் கொடைவள்ளல் **லெப்பப்பா ஒலி** மகாமிலும், புதுப்பள்ளியில் **மழ்ஹருல் ஆபிதீன்** சன்மார்க்க சபையிலும், K. T. M. தெரு **இத்திஹாதுல் இஹ்வானில் முஸ்லிமீன்** (I. I. M) அரங்கத்திலும் குர்ஆன் மத்ரஸாக்களும் இஸ்லாமிய நல்லொழுக்க கல்வி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

காயலின் கலாச்சார சிறப்புக்கள்

ஹாஜி. L. S. இபுராகீம்
நிர்வாகி, எல்கே துவக்கப்பள்ளி
துணைசெயலாளர், காயல்பட்டணம் ஆறுமுகனேரி மேல் நிலைப்பள்ளி.

கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன போன்ற சொற்கள் இன்றைய உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஒலித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். கலா - என்பது அறிவு, ஆசாரம் என்பது ஒழுக்கம் - வழக்கம் - நன்நடத்தை, வழிபாடு, துப்புறவு - இவை யாவும் பண்டையோர் வாழ்வில் இருந்தன. பண்டையோர் வாழ்க்கையில் அன்பையும் உயர்பண்பையும் அழகுற உணர்த்தி, அகத்தையும், புறத்தையும் தூய்மை பெறச் செய்து, நலமுடன் வாழ வழிவகுத்திருக்கின்றனர்.

இறை உணர்வை நேர்மையுடன், வேற்றுமை களைந்து, எல்லோருடனும் அன்பும்,பரிவும் இரக்க சிந்தனையுடன் வாழவைத்தனர். திருமறையாம் திருகுர் ஆனை, மனனமிட்டு மகிழ்வுடன் ஓதும் உயர்வுள்ளவர்கள் அதிகம்இருக்கின்றனர். அரபுமொழியும், தமிழ்மொழியும் கற்றுணர்ந்து பணி செய்த பண்பாளர் பலர் உண்டு. மனித குல மேம்பாட்டிற்கு வித்திட்ட வித்தகர்கள். வெகுவாக இருக்கின்றனர். வரலாறு புகழ் காயல் பட்டினத்தின் கன்னித்தமிழ் சுவைமிக்கது. இஸ்லாம் எங்கள் வழி - இனிய தமிழ் எங்கள் மொழி என சிறப்பாகக் கூறுவர்.

'தமிழ் பிறந்த தென்பாண்டி தண்பொருனையோடு தமிழ் கூறும் அறம் வளர்த்துத் தகுதி பெறும் காயல்' 'அரிய தமிழ்ப் பேசும் சிறிய மக்கா காயல்' என்ற சிறப்பும் உண்டு.

''முத்து குளிப்பதொரு தென் கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டவர் வந்து
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து'

எனப் பாடலுண்டு. தமிழ் நாட்டினருடன் வாணிபம் செய்த வணிகர்களில் மிக முக்கியமானவர்கள் அரபு மக்கள் பொன்னும் மணியும் அகிலும், சந்தனமும் தென் கடல் முத்தும், கீழ்க்கடல் பவளமும், நீரில் வந்த நிமிர்பரிப்புரவியும் [கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட குதிரைகளும்] காலில் வந்த கருங்கறி மூட்டைகளும் [நிலவழியாக வந்த நல்ல மிளகு மூட்டைகளும்] அரபுக்களின் வியாபாரச் சரக்குகளாக இருந்தன.

அரபு மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் கீழ்த்திசைப் பகுதிகளுக்கும் ஓர் இணைப்பு பாலமாக விளங்கினர். அவர்களின் வர்த்தக நேர்மையும் - வாய்மையும் மக்களை பெரிதும் கவர்ந்தது. இஸ்லாமிய நெறிமுறைகளில் அவர்கள் வாழ்ந்து காட்டினர். தமிழக மன்னர்கள் இவர்களுக்கு நல்வரவு நல்கி, நிலமளித்து, நிலைத்து இருக்கச் செய்தனர். அரபு வழி வந்தவர்களே காயலின் வழித் தோன்றல்கள் என சரித்திரச் சான்று கூறுகிறது. காயல்பட்டணத்து மக்களின் கலாச்சாரம் - தமிழ் மொழி வழங்கும் நடைமுறைகள் சிறப்புக் குறியது. வீடுகளின் அமைப்பு - பெண்களுக்குள்ள பாதைகள் - பெண்கள் தொழுகைக்குத் தனியிடமான தைக்காக்கள், வீடுகளில் அவர்களுக்குள்ள முடுக்கு - ஓடைகள், இலை ஜன்னல்கள், பெண்கள் அன்றாடம் தேவைப்படும் பொருட்களை தெருப்பக்கம் வராமல் வாங்கும் வசதியுடன் அமைந்திருக்கும் தொண்டு வாசல்கள். ஓடை என்பது தண்ணீர் ஓடும் இடம் என்ற நினைப்பே வரும். ஆனால் காயலில் வீட்டிற்கு வீடு ஓடை உண்டு தண்ணீர் ஓடையல்ல. இவை மற்ற பகுதிகளில் அமையாத அமைப்புகளாகும்.


ஹாஜி L. S. இபுராகீம்
பேரூராட்சி மன்ற முன்னாள்
துணை தலைவர்
காயல்பட்டணம்.

இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவ மக்கள் ஐக்கியமாக உறவு முறைகள் கூறி உவப்புடன் வாழும் இடம் காயல்பட்டணம்.

இஸ்லாமிய தமிழ்ப் புலவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பறிய தொண்டுகளைச் செய்திருக்கின்றனர். அன்றாட நடைமுறைகளிலும், அழகு தமிழ்ச் சொற்கள், மிக இயல்பான முறையில் பேசப்படுகிறது. அடுப்பங்கரை [சமையல் அறை] அலவாக்கரை [அலைவாய்க்கரை] பெரு நாள் காலங்களில் முதுகிழவி-தன் பேரன், பூட்டன்மார்களை, அலவக்கரைக்கு அழைத்துப் போகச் சொல்வாள் [அலைவாய்க்கரை - கடற்கரை] அடுப்பங்கரையில் இருக்கிறேன், புளியாணம் காய்ச்சி முடித்ததும் சோறு உண்க வேணும்' - ' அந்த வளந்தை பைய எடுத்து வாடா' என்பாள் தாய். புளிஆணம் - ரசம், சோறு - சாதம், வளந்து - பாத்திரம், இன்று கல்யாண வீட்டில் களறிச் சோறு வைக்கிறார்கள் என்பர். களறி என்பது கூட்டமாகச் சேர்ந்து உண்பதற்கு வழங்கும் சொல். கல்யாண வீட்டில் சிறப்பாக வைக்கப்படும் சுவையான பொருள் ''போணவம்'' இது மிக நுட்பமாக தயாரிக்க வேண்டியவை. இது எல்லாருக்கும் தெரிந்த சமையல் கலையல்ல.

''போணவம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்று'' - என நம்மாழ்வார் பாடல் [திருவாய் மொழி] நூலில் காணப்படுகிறது.

'.பசியாறி விட்டு பள்ளிக்குப் போ'' என்று தாய் மகனுக்குச் சொல்வாள். பசியாறு என்பது காலையில் முற்பட்ட நேரத்தில் குறிக்கும் சொல். துடுக்குடன் ஓடி விளையாடும் பேரப்பிள்ளையைப் பார்த்து - பைய பைய போடா'' என்பாள் பாட்டி.

''பையவே சென்று பாண்டியற்காகவே'' என்று சம்பந்தர் பாடினார்.

''யான் நோக்கப் பசையினன்
பைய நகு'' என்று வள்ளுவர் பாடினார்.

சூரியன் பைய பைய - மெதுவாக நகுகிறான் - என்ற பொருள்.

காதில் அணியும் ஓர் அணிக்கு அலர்க் கொத்து என்று பெயர். அலர் என்ற சொல் மலரைக் குறிக்கும். மலர் போன்ற காதில் கொத்து கொத்தாக திகழும் அணிகலன் அலர்க் கொத்து என்றும் அலுக்கொத்து என்றும் மருவி வழங்குகிறார்கள்,

சுமங்கலி என்ற சொல் மற்ற ஊர்களில் வழங்கும். கணவன் மனைவியாக வாழும் சுமங்கலியை - வாழ்வாட்டி - சீமாட்டி என்பர். கணவனை இழந்த விதவைக்கு கைம்பெண்'' என்றே காயலில் வழங்கும் சொல்லாகும்.

பெண்கள் புளங்கும் வாசல் திட்டுவாசல். தட்டுவாசலா - திட்டு வாசலா ? திண்ணையுடன் அமைந்திருப்பது திட்டுவாசல்.

உறவினர்களை - அவர்கள் எங்கள் ''கிளைலோ ' என்பர்.
செல்வர்க்கழகு செழுங்களை தாங்குதல். இது அவ்வைப் பாட்டியின் பாடலில்.
வாசலில் நிற்கும் ஏழைக்கு, ஒரு ''சிறங்கரசி'' போடு என்பாள் வயதான கிழவி.
சிறங்கரிசி - கை நிறைந்த அளவு.

இப்படி தமிழ் மணம் கமழும் சொற்கள் தான் எத்தனை எத்தனையோ ! காயலின் சிறப்பே சிறப்பு !

உம்மா, "காக்காவை வாப்பா கூப்பிடுறாங்கோ"

— S. அல்லாபக்ஷ் M.A., —
(தென்னக ரயில்வே) விழுப்புரம். (தெ. ஆ. மாவட்டம்)

நண்பர் காயல்மகபூப் அவர்கள் திருமணத்திற்காக காயல்பட்டணத்திற்கு சென்ற போது சில நாட்கள் தங்கியிருந்து அந் நகரைப் பார்க்கவும் அங்குள்ள மக்களிடம் பழகவும் அருமையான வாய்ப்பு கிடைத்தது.

காயல்பட்டணத்தின் அமைப்பே ஒரு சிறப்பாக அமைந்துள்ளது. நேரான தெருக்கள் காற்றோட்டமுள்ள வசதியான இந் நகருக்கு அழகு சேர்க்கின்றன. பாதாள சாக்கடை திட்டமோ வாறுகால் வசதியோ இல்லாத இந் நகரில் எந்தத் தெருவிலும் சாக்கடை தேங்கி நிற்பதை காண முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் தனித் தனியே கழிவு தொட்டிகள்.

ஏழைகள் கூட நாகரீகமாக உடை அணிந்து இந் நகருக்கு பெருமை சேர்ப்பதில் காயல் நகர மக்களுக்கு நிகர் இல்லை.

காயல் வாசிகளின் பேச்சு மொழியே தனி அலாதியானது. அந்நகரை ஒட்டியும் அடுத்துள்ள ஊர்களிலும் இல்லாத பேச்சு வழக்கு இங்கு உள்ளது. உடன் பிறந்த அண்ணனையும், வயதுக்கு மூத்த ஆண்களையும் இங்கு 'காக்கா' என்றழைக்கின்றனர். அதே போல் அக்காளையும் வயதுக்கு மூத்த பெண்களையும் 'ராத்தா' என்றும் 'லாத்தா' என்றும் அழைக்கின்றனர். தாயாரை 'உம்மா' என்றும் தந்தையை 'வாப்பா' என்றும் அழைக்கின்றனர்.

வாப்பிச்சா (தந்தையை பெற்ற தாய்) உம்மம்மா (தாயை பெற்ற தாய்) சாச்சி (தாயின் தங்கை) சாச்சப்பா (தந்தையின் தம்பி) இது போன்ற சொற்கள் உறவு முறை சொல்லி அழைக்கும் வார்த்தைகள். இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையிலும் தஞ்சை மாவட்டம் அதிராம் பட்டணத்திலும் காயல்பட்டணத்து கலாச்சாரமும் உறவுப் பெயர்களும் வழக்கில் உள்ளன. காயல்வாசிகள் மார்க்கப் பிரச்சாரத்திற்கும் வர்த்தகத்திற்கும் வெளி இடங்களுக்கு செல்லும் போது இவைகளை பரிமாறி இருக்கலாம்.

காயல்பட்டணத்தில் பெரும்பாலும் திருமணங்கள் மாலை 6-30 முதல் 8-30 வரை இதற்கு இடைப்பட்ட நேரங்களிலேயே நடக்கின்றன. காலை 9 மணிக்குள்ளாகவும் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. திருமண நிகழ்ச்சிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியே நடக்கின்றன. இத் திருமணத்தையொட்டி அடுத்த நாள் — வசதி படைத்த இடங்களில் கூடுதல் நாட்கள் விருந்து வைக்கப்படுகிறது. தரையில் விரிக்கப்பட்டுள்ள ஓலைப்பாய்களில் அமர்ந்தே உணவு சாப்பிடுகின்றனர். வட்டமான செம்பு தட்டில் (இதை தாளம் என்கிறார்கள்) ஆண்கள் இருவராகவும் பெண்கள் மூவராகவும் சேர்ந்து சாப்பிடுகின்றனர். இத் தட்டில் சாதத்தில் இறைச்சி, ரசம், கத்திரிக்காய் பருப்பு ஆகியவை சிறிய மண் சட்டியில் தனித்தனியே வைக்கப்பட்டிருக்கும். குடிப்பதற்கு தண்ணீர் மண் பாத்திரத்தில்தான் வழங்கப்படுகிறது. சீமான்கள் வீட்டு நிகழ்ச்சிகளிலும் அப்படியே! இத்தகைய பழக்க வழக்கங்களை மற்ற இடங்களில் பார்ப்பது அரிது.

இந் நகரில் திருமணம், பெயர்சூட்டுவிழா, புதுமனை புகுவிழா, கத்னா (சுன்னத்) வைபவம், உட்பட எல்லா விசேடங்களுக்கும் அழைப்பிதழ் அடித்து உரியவர்கள் நேரில் அழைப்பதில்லை. அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நபர்களே வீடுவீடாக இதுபற்றி வாய்மொழியாக சொல்கிறார்கள்.

பொதுவாக உள்ளூருக்குள்ளேயே காயல் வாசிகள் திருமணம் செய்வதால் இந்நகரின் கலாச்சாரம் பேச்சுமொழி வெளி இடங்களில் பரவ வாய்ப்பில்லாமல் உள்ளது.□

இன்றைய கட்டாயம் !

மனிதன்
சமுதாயத்தில்
சங்கமமாகும் போது
நிமிர்ந்து நிற்கிறான்—
கடலில் எழும்
பேரலைகளைப் போல்!

ஃ மனித இனத்திற்கு
தொடர்ந்து
பணியாற்றுகிறவன்
வருங்காலத்தையும்
எதிரொலிக்கிறான்.

தன்னை
அடையாளம் காட்டும்
மனிதன்
மதிப்பு பெறுகிறான்!

தன்னை
அர்ப்பணம் செய்யும்
மனிதன்
மாட்சி பெறுகிறான்!

ஃ உள்ளங்களின்ஒற்றுமையால்
உருவாக்கப்படுவதே
சமுதாயம்!

ஃ அதன் சக்தி—
அளப்பரியது!

ஃ சமுதாய மணிமாலையில்
ஒளி வீசாதவன்
புழுதிக் காற்றுத்
தூசியாகி விடுகிறான்!

ஃ தனி மனித ரகசியம்
முக்கியமல்ல;
எதிர் காலம் பற்றிய
எண்ணக் கூட்டத்தில்
நாட்டம் வைப்பதே
இன்றைய கட்டாயம்!

கவிஞர்
அல்லாமா முஹம்மது இக்பால்

சுடர் வீசாத தீபங்கள் !...

கவிஞர் S.A. செய்னா

எங்கள்
முதிர் கன்னிகளின்
மூச்சுக் காற்றினை
மனித சமுதாயம்
உணரவேயில்லை!

தென்றலும் கூட
இந்த
தேன் சுனைகளை
தீண்டவேயில்லை!

மன்றல் காணாது
இந்த மலர்கள்
கன்றிப் போய்
கருகுகின்றன!...

பல வண்டுகள்
கொழித்த மலர்களையே
தேடுகின்றன!

வண்டல் காணாது
இந்த வயல்கள்
வாடுகின்றன!

சொந்தங்கட்கு
வந்தனம் செய்தும்
வாழ்வில்லை!
பந்தியில் எது அமருமோ
அது வேண்டுகின்றனர்'

நந்த வனங்கள்
நாறுகின்றன!
இந்த நல்ல சமுதாயம்
உணரவே யில்லை!

தழும்பாகிப் போகுமுன்
இந்த மலர்களின்
மனக் காயங்கட்கு
மருந்திட
இந்த மானமுள்ள சமுதாயம்
மறந்தே விட்டது!

சாகித்யம் வாராது
சங்கீத வீணைகள்
பொங்கி அழுகின்றன!
இந்த தன்மான சமுதாயம்
ஸ்வரங்களையே
மறந்து விட்டது!

சங்கீத ராகம் வாராது
இந்த உதடுகள்
ஊமையாகி விட்டது!

சொந்தங்கள் கூட
தூரமாகிப் போகின்றன!
அந்தி மாலையின் அழகு
மந்திகளுக்கு
புரியவா போகிறது?...

சாபங்கள்
சரித்திரமான துண்டு!
தீபங்கள்
தீப்பற்றி கிளர்ந்தால்!!
இந்த உறுதியான
சமுதாயக் கோட்டையும்
ஓர் நாள்
பற்றி எரியும்
எச்சரிக்கை!......

மனிதர்களா இவர்கள் ?

நாடு மொழி சாதி சமய வேறுபாடு
மனிதன் போடும் வேஷங்களின் மாறுபாடு!
வீடு வாசல் வழி எங்கும் பிரச்சனைகள்
நியாயம் சொன்னால் கிடைக்கிறது அர்ச்சனைகள்!

காசு பணம் செல்வாக்கு சிலர் கையில்
நீதி நியாயம் தர்மம் எல்லாம் அவர் பையில்
தூசு கூட மலையாகும் சிலர் பொய்யில்
அவரே சுருட்டுகிறார் உலகத்தை கற்பனையில்

தினம் தினமும் சொல்வார்கள் உபதேசம்
திருந்தாமல் நடிப்பார்கள் பகல் வேஷம்
மனம் இறங்கி காட்டவில்லை உண்மை பாசம்
மனிதர்களா இவர்கள்? இல்லை மோசம்!

—காயல்—

பண்பாடு காப்போம்!

— எஸ். ஏ. முகம்மது அலி, —
முன்னாள் தலைவர், தமிழ் பண்பாட்டுக் கழகம், ஹாங்காங்.

இன்றைய விஞ்ஞானம் நமக்கு மிக அரிய நல்ல பல கண்டு பிடிப்புகளைத் தந்து உதவிகளைச் செய்திருக்கின்றது.

தாஜ்மஹாலை நிர்மாணித்த சிற்பிகள் காலத்தில் நாம் பெற்றுள்ள நாகரீகம், இன்றைய நாகரீக வளர்ச்சியில் இல்லை. இல்லவே இல்லை என்று அடித்துப் பேசலாம். அன்றைய காலத்தில் வாழ்ந்த சாதாரண மனிதர்களிடம் காணப்பட்ட பண்பாடு இன்றைய மக்கள் யாரிடமாவது நாம் காண முடிகின்றதா? இல்லை இல்லவே இல்லை.

பணத்துக்கும் பண்பாட்டுக்கும் சொந்தமில்லை என்று முடிவு கட்டி விடலாம். அந்த நாளில் புனித மக்காவிற்கு போவது என்பதே பெரியதோர் விசயம். போய்த் திரும்புவது என்பது அதைவிட பெரிய அதிசயம். இன்று உலகத்தை ஒரு வார காலத்திற்குள் சுற்றி முடித்து விட்டுச் சுகமாக வீடு திரும்பும் வாய்ப்புகளும், வசதிகளும் நமக்கு கிடைத்திருக்கின்றன. பயண சுகங்களை வைத்துப் பண்பாடு நிரம்பியவர்கள் நாம் என்று தீர்மானித்துவிடக்கூடாது.

நம்முடைய முன்னோர்கள் நம்மை விட நாகரீகமாக வாழ்ந்தவர்கள். நம்மை விட பண்பாட்டில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்கள். நமக்கு நாகரீகத்தில் எத்தனை ஆசையும் பாசமும் இருக்கின்றனவோ இதைவிட பன்மடங்கு அவர்கட்கு பண்பாட்டில் கருத்தும், கவலையும் இருந்தன. பண்பாடு என்பது பரந்த வாழ்க்கையின் மையப் புள்ளி. அது வாழ்க்கையின் ஆதரிசமாயும், அடித்தளமாயும் இருந்தது. நம் முன்னோர்கள் போல் நாமும் பண்பாட்டில் மேம்பட வேண்டும்.

இலக்கியங்கள் பண்பாட்டை வலியுறுத்துவதற்காகவே எழுதப்பட்டன. இறை வாக்கியங்கள், மத போதனைகள், நல்ல நாவல்கள். சிறு கதைகள் இதற்காக எழுதப்பட்டு வருகின்றன.



எஸ். ஏ. முகம்மதுஅலி
காயல்பட்டணம்

பண்பாடு என்பது மனித சுபாவத்தை உரைக்கின்ற தங்கமான உரைகல். மனப்புழுதியை நிறுக்கின்ற பொன் தராசு பணத்தைக் கண்டும். பணம் தரும் சுகத்தைக் கண்டும், மயங்கி நிற்கின்ற உலகத்தில் நாம் வாழ்கின்றோம். பணம் வெளி வேஷத்திற்குப் பயன்படும் அரிதாரம். பண்பாடு உள் மனத்தின் வெளிப்பாடு. நபிநாயகத்தின் ஹதீதில் நம்முடைய வேதம் புதைந்துகிடப்பது போல், ஒவ்வொருவர் வாழ்க்கைப் போராட்டத்திலும் பண்பாடு புதை பொருளாக இருக்கும்.

ஆசைக்கும் அற்பத்துக்கும் அடிமை ஆகாமல், மோசத்துக்கும் மோகத்துக்கும் அடிமை ஆகாமல், போகத்துக்கும் போக்கிரித் தனத்துக்கும் அடிமை ஆகாமல், மனிதன் மிருகமாக மாறிவிடாமல் தடுப்பதுதான் பண்பாடு.

தன்னையும் தன் உள் மனத்தையும், பிறரையும் பிறரது வாழ்க்கையைல்ம் மேம்பாடு செய்யும் வண்ணம் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொள்வதே பண்பாடு. இந்த அர்த்தம் புரியாமல் பண்பாட்டுக்கு வினோதமான அர்த்தம், தவறான பொருள் தருகின்றவர்களைப் பார்க்கின்றோம். பண்பாடு என்றால் அது பெரிய பங்களாவிற்குள், நடனத்திற்குள், இசை அரங்கத்திற்குள், நாடகத்திற்குள் இருக்கின்ற பொருள், பணக்காரர்களிடம் காணக்கூடிய சரக்கு பதவிக் காரர்களுக்கே சொந்த உரிமை என்றெல்லாம் தப்புக் கணக்குப் போடுகின்றோம். மேலும் இது கிராமங்களில் கிடைக்காத பொருள் என்று முடிவு செய்கின்றோம். பெரிய நகரங்களில் மட்டுமே கிடைக்கும் சரக்கு என்று நம்புகிறோம். காரணம் என்ன? இங்கே நடக்கின்ற கலை நிகழ்ச்சிகள் எல்லாம் பண்பாட்டோடு இணைந்தது என்று தவறான பொருள்களில் தடுமாறுகின்றோம். பண்பாட்டிற்கும் நகர வாழ்க்கைக்கும் பெரும்பாலும் சம்பந்தம் கிடையாது. தன் பாட்டைப் பார்க்கும் கும்பல்கள் நிறைந்த இடமே நகரம். அங்கே ஏது பண்பாடு? பண்பாடு என்பது ஒரு தேசம் முழுமைக்கும் இருக்க வேண்டிய கூர்மையான கண்ணோட்டம். எங்கெல்லாம் முரன்பாடுகளின் முனைகள் மழுங்கி பண்பாட்டின் இதழ்கள் முகிழ்கின்றனவோ, அங்கேதான் பண்பாடு மூலிகையாக இருக்க முடியும். முழு நிலவாக ஒளிவிட முடியும்.

"நெஞ்சுப் பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்ற பாரதியாரின் வரிகள், தேசப் பற்றுக்காக எறியப்பட்ட வேல். இந்த வேலாயுதம் பண்பாட்டுக்கும் பயன்படும் சொல்லாயுதமாகும்.

பண்பாடு பலவீனம் அடைகின்ற காலத்தில் ஒற்றுமைக் குறைவுகள், பேதங்கள், விரோதங்கள், விஷக்கிருமிகள் போன்று பல்கிப் பெருகின்றன. தனித்துவம் என்னும் பெயரால் பல நேரங்கள் தலை விரித்தாடுகின்றன. பணம் உள்ள குடும்பத்தில் பிறந்த ஒருவருக்கு பணம் சொந்தமாகும். பண்புள்ள குடும்பத்தில் பிறந்த வாரிசுக்கு அந்த பண்பு பயன்படலாம். படாமலும் போகலாம். ஆனால் அந்தப் பண்பு அந்த குடும்பத்தைத் தாண்டி பல குடும்பங்களுக்கும் பல ஊருக்கும் பயன்படும். பண்பாடு என்பதை இனம் காட்டுவது கடினம். அது செய்கையிலும், உள் மனத்திலும், அந்தரங்கத்திலும், காணக் கிடைக்கின்ற பொருள்.

இளமையில் கல் என்பது கல்விக்குச் சொல்லப்பட்டதாக நினைக்க வேண்டாம். இது பண்புக்காகவும் சொல்லப்பட்ட பாடம்.

மனிதப் பிறவி கருக் கொள்ளும் முதல் உருவம் கண்ணின் கருமணி. இதனைச் சுற்றித்தான் ஏனைய உறுப்புக்கள் வளரத் தொடங்குகின்ற. பண்பாட்டைச் சுற்றிதான் ஏனைய உறுப்புகள் போன்ற கலைச் செல்வங்கள், விஞ்ஞான பெருமிதங்கள், மதக் கொள்கைகள், மாபெரும் சாதனைகள் வளர முடியும். எல்லாம் வளர்ந்தும் இனம் கெட்டுப் போனால் என்ன செய்வது?

நீரின் தன்மையும், நெருப்பின் வெப்பமும், பழத்தில் தீஞ்சுவையும், பாலில் வெண்ணையும் உறங்கிக் கிடப்பது போல் ஒவ்வொருவர் உள்ளத்திலும், பண்பாடு உறங்கி இருத்தல் வேண்டும், சிப்பியில் இருக்கும் முத்துக்கு எப்போது விழிக்க வேண்டும் என்று தெரியும், நீரிடை உறங்கும் மேதிக்கு (எருமை) எப்போது விழிக்க வேண்டும் என்று தெரியும்,

பண்பு இல்லாமல் மனிதர்கள் இருத்தல் கூடாது: ஒவ்வொருவர் மனதிலும் பண்பு உறங்க வேண்டும். மனம் இருப்பதால் மனிதன் என்றப் பெயரைப் பெற்றோம். பண்பு இருந்தால் மாமனிதன் என்ற பெயர் பெறுவோம், நாம் மனிதனாக நின்று, மாமனிதனாக உயர, நமக்குள் இருக்க வேண்டுவது பண்பு. நம்மை இனம் காட்டுவது பண்பு.

எனவே நல்ல பண்புகளை மக்களிடம் வளர்க்க, நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, பாடு படுவோம்.

காலம் மாறலாம்! பாதை மாறினால்...?

★ காயல் A. தர்வேஷ்முஹம்மது ★
பொறுப்பாசிரியர், "அல்ஹிதாயா" - மாதஇதழ் காயல்பட்டணம்.

மனித இனத்திற்கே நாகரீகத்தை எடுத்துக் காட்டிய நாம் இன்று நமது அன்றாட வாழ்க்கையில் மேல்நாட்டு அநாகரீகங்களை புகுத்த முயல்கிறோம்.

மேலை நாட்டிலே விபச்சாரம் ஒரு பொழுது போக்கு. ஒருவர் மனைவியுடன் மற்றொருவர் வாழ்க்கை நடத்துவது நாகரீகம். திருமணமின்றிக் குழந்தைகள் பெற்றெடுப்பது அவர்களுக்குள்ள பண்பாடு. ஆடையின்றி நிர்வாண கோலத்தில் அலைவது அவர்களது நாகரிகத்தின் உச்சவரம்பு. இத்தகைய பண்பாடு-பழக்கவழக்கமுள்ளவர்களை நாம் முன்மாதிரியாக வைத்து, அங்கு வாழும் பெண்ணினத்தை நமது பெண் சமுதாயத்திற்கு உதாரணமாகக் காட்டி - உடையிலே, உணவிலே அவர்கள் மாதிரி மாற்றம்கொள்ளுமாறு தூண்டிவிட்டு, அந்த ஏமாற்றத்தைக் கண்டு நாம் உற்சாகமும் கொள்ளவாரம்பித்தால் நமது பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்னுவது? நமது கலாச்சாரம், கட்டுப்பாடு என்னுவது?

பெண்கள் உடல் முழுக்க உடைகளால் மூடி மானத்துடன் வாழ்வதை அநாகரீகம் என்று கூறிடும் இவர்கள், மினி புடவை என்ற பெயரில் முழங்கால்வரை உயர்த்தி, உடல் தெரியும் அளவுக்கு இரவிக்கை அணியச்செய்து இதுதான் நாகரீகம் என்றல்லவா போதித்து வருகின்றனர்!

அன்று பிறந்த மேனியாய் காட்டில் திரிந்த ஆதிகால மனிதனை காட்டுமிராண்டி என்றோம். நாகரிகம் தெரியாதவன் என்று சரித்திரம் எள்ளி நகைத்தது அவனை.

இன்று நிர்வாண கோலத்தில், பட்டப் பகலில், பட்டணத்தில் ஓடுகிறவனை நாகரிகத்தின் உச்சியைத் தொட்டவர்கள் என்று புகழ் சூட்ட முயல்கின்றனர்.

ஆணும் பெண்ணும் பிறந்த மேனியாய், திறந்த வெளியில் நின்று சூரிய ஒளியில் குளிப்பது (SUN BATH) கனிந்த நாகரீகமாம்.

திருமணம் ஆன பெண் அவள் விரும்பும் எந்த ஆணுடனும் கூடிக்குலாவலாம். ஏன் என்று கேட்க கட்டிய கணவனுக்குப் உரிமை இல்லை. சட்டம் அவள் பக்கம். இது மேல்நாட்டு நாகரீகங்களில் ஒன்று.

இது மட்டுமல்ல. ஆடை அலங்காரங்களுக்குக் கூட அளவு முறை வகுத்திருக்கிறது இன்றைய நாகரீகம்.

மேற்கண்ட நாகரீகங்களை நம்மில் பரப்பி வருபவைகளில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்வது பத்திரிகைகள், சினிமா போன்றவையே!

ஒரு நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும் பத்திரிகைதான். அதே சமயம் வீழ்ச்சியடையச் செய்வதும் பத்திரிகைதான். ஆனால் நாகரீக காலம் என்று சொல்லக் கூடிய இக்காலத்தில் தரமான பத்திரிகைகளைவிட தரங்கெட்ட பத்திரிகைகளே ஏராளம் உலா வருகின்றன. அவற்றில் வெளியாகும் செய்திகள் மிகவும் கீழ்த்தரமானவையாக திகழ்கின்றன. அதாவது மக்கள் கெட்டு குட்டிச்சுவராகப் போனாலும் பரவாயில்லை. பத்திரிகை அதிகம் விற்பனையாகி பணம் குவிந்தால் போதும் என்ற ஆபாச நிலையே காணப்படுகின்றது. இத்தகைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் தனது முகப்புப் பக்கத்திலும், பிரதான பகுதிகளிலும் சினிமா நடிக நடிகைகளின் கவர்ச்சிப் படங்களைப் போட்டு விற்பனை செய்கின்றன.

மக்களை வழிகேட்டிலாக்கும் மற்றுமோர் சாதனம் கலை என்ற போர்வைக்குள் பவனி வந்து கொண்டிருக்கும் சினிமா. இதில் மனிதனை மிருகமாக்கக்கூடிய அனைத்துச் செயல்களும் காண்பிக்கப்படுகின்றது. இச்சினிமா மோகத்தில் மூழ்கிவிட்ட மக்கள் எது நல்லது, எது கெட்டது என்று பகுத்தறியக்கூட நேரமில்லாது பல பெரிய தவறுகள் செய்து வருகின்றனர். சினிமா கதையிலே ஆபாசம்-காட்சியிலே ஆபாசம்-பாட்டிலே ஆபாசம்-பேச்சிலே ஆபாசம்-உடையிலே ஆபாசம் - எல்லாம் ஆபாசமயம். எத்தகைய காட்சிகளை நமது உண்மையான வாழ்வில் பிறர் பார்க்க சகிக்கவில்லையோ, பிறரிடம் நாம் பார்க்கத் துணிவதில்லையோ அதே காட்சிகளைத்தான் குடும்பத்தோடு காண்கின்றனர். இதனைக்குழந்தைகளும் கண்டு பின்னர் தவறான செயல்களில் அவர்கள் ஈடுபடும் பொழுது பதை பதைக்கின்றனர். தேவையா இந்த சினிமா இதுவா நாகரீகம்?

உலகம் தெரிந்தவன், நல்ல அறிவுள்ளவன் படித்தவன் கூட பொழுது போக்குக்காக சினிமா பார்க்கிறேன் என்கின்றவன் அத்தோடு நிறுத்திக்கொள்வதில்லை. திரைப்பட நடிகர்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். ரசிகர் மன்றங்கள் அமைக்கிறான். அதிலேயே தன் வாழ்வையும் பொருளையும் வீணாக்குகிறான். புனிதம் கருதி சூட்டப்பட்ட தன் பெயரோடு நடிகர்களின் பெயர்களையும் இணைத்துக் கொள்கிறான். மார்க்க அறிவுள்ள மக்களிடம் கூட இந்த நிலை இருக்கிறது என்பது வேதனைக்குரியது.

இன்றைக்கு மனிதனாக வாழ்வதற்கு பணம் அவசியம் என்பதை உணருகின்ற மனிதன் அதை அடைவதற்கு குறுக்கு வழிகளில் முயல்கிறான். அன்றாடம் கூலி வேலை செய்து 10, 20 ரூபாய் சம்பாதிப்பவன் கூட விளம்பரத்தால் கவரப்பட்டு தனது கூலிப் பணம் முழுமைக்கும் லாட்டரிச் சீட்டு வாங்குகிறான். வாழ்நாள் முழுதும் சம்பாதித்தாலும் கோடி ரூபாய் கிடைக்காதே! ஆகவே ஆசையால் லாட்டரிச் சீட்டு. அவன் குடும்பம் பட்டினி கிடந்து நாளடைவில் நடுத்தெருவிற்கு வந்து விடுகிறது அவனது இந்த நிலமைக்கு அரசாங்கங்களும் காரணமாகின்ற அல்லவா?

முன்பு மக்களிடம் மதபக்தி, இறையச்சம் அதிகமிருந்து வந்தது. எனவே, எதைச் செய்ய முற்பட்டாலும் பாவம், புண்ணியம், நல்லது, கெட்டது என்று ஆராய்ந்து செய்து வந்தனர். ஆகையால் அவர்களது காரியங்களில் தவறுகள் இல்லாமலிருந்து வந்தன. தவறு ஏற்பட்டாலும் திருந்தி விடும் துடிப்பு அதிகமிருந்தது. இதன் காரணமாக அவர்களது கலாச்சாரம, பண்பாடு, பழக்க வழக்கங்கள், குண விசேஷங்களெல்லாம் சீரான அமைப்பில் உயர் மட்டத்தில் அமைந்திருந்தன. எனவே சமுதாயத்திலே தரமிழந்தவர்கள், பண்பிழந்தவர்கள், திருடர்கள், குடிகாரர்கள், கொலைஞர்கள், விபச்சாரகாரர்கள் குறைந்து காணப்பட்டனர்.

ஆனால் இன்று அந்நிலை தலைகீழாக மாறிவிட்டன. நல்லவர்கள் குறைந்து விட்டனர். கெட்டவர்கள் மிகைத்து விட்டனர். இதன் எதிரொலிதான் எங்கும் அமைதியின்மை, சுபிட்சமின்மை, சந்தோஷமின்மை ஆகியவை பெருகி மக்களை அலைக்கழித்துக்கொண்டிருக்கின்றது:

இதற்குரிய அடிப்படை காரணமென்ன? இதைத்தான் இன்று நாம் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். சற்று சிந்தித்துப் பாருங்கள்! **காலம் மாறலாம்.** அது இயற்கை ஆனால் **பாதை மாறினால்......?** எல்லாமே மாறிப்போகும். அது மட்டுமின்றி அதள பாதாளத்திலும் விழக் கூடும். ஆகையால், சிந்தித்துச் செயல்படுவோம்! சீரான வாழ்வைப் பெறுவோம்!

வாழ்வியல்

தான் மைனருக்கு கார்டியன் நியமித்து ஆகனும். நிற்க, ஒரு பிரித்து, தனித்து அனுபவிக்க கூடிய சொத்தை பிரிக்காத நிலையில். அதன் பகுதியை நன்கொடை கொடுக்க இயலாது. அதாவது ஒரு தோட்டமோ, நிலமோ பிரிவினை செய்யும் நிலையில் இருந்ததால், பிரித்தபின்தான், நன்கொடை செய்யலாம்.

ஜெனரல் பவர்:

மைனருக்காக எந்த அடிப்படையாலும், தாயார் பவர்ஏஜண்டை நியமிக்க இயலாது. துரதிருஷ்ட வசமாக, இந்தநிலை புரியாது, அல்லது புரிந்தும் பேனுதல் இல்லாது, தகப்பன் உயிரோடு இருக்கும் போது கூட தாயார் மைனர் குழந்தைக்காக கார்டியனாக பிரகடனம் செய்து, ஒரு ஏஜெண்டை நியமிக்கிறார்கள். இது சட்டப்படி தவறானதாகும்.

மைனர் சொத்து:

மைனர் சொத்தை தந்தை கூட நினைத்தபடி கிரயம் செய்ய இயலாது. மேற்படி சொத்தை விற்றால், அந்த கிரயத்தால், சொத்தின் மதிப்பை போல் இரண்டு மடங்கு அதிகமாய் கிடைக்கும் என்றாலோ அல்லது மைனரின் பராமரிப்புக்கு வேறு சொத்து இல்லை என்றாலோ, இறந்தவரின் கடனை அடைக்க வேறு வழியில்லை என்றாலோ, செலவு வருவாயைவிட அதிகம் என்றாலோ, சொத்து அழிந்து போய்விடும் என்றாலோ, தந்தை மைனர் சொத்தை கார்டியன் என்ற அதிகாரத்தில் கிரயம் செய்யலாம்.

மிக நுணுக்கமாக நோக்கினால், தந்தை என்ற உறவில் கோர்ட்டில் மைனர் சொத்தை விற்றிட, இஸ்லாமிய சட்டப்படி, அனுமதி பெறலாமா? என்பது கேள்விக் குறியே. ஆனால், கார்டியன் & வார்ட்ஸ் சட்டப்படி [பொது சட்டம்] தந்தை தன்னை கார்டியனாக நியமிக்க சொல்லி அதன்படி கோர்ட்டாரும், மேற்படி தந்தையை மேற்கண்ட சட்டத்தின்கீழ் [கார்டியன் அண்ட் வார்ட்ஸ் சட்டம்], கார்டியனாக முதலில் நியமித்து, மேற்படி சட்டத்தின் அடிப்படையிலேயே, மைனர் சொத்தை விற்றிட அனுமதி வழங்க வேண்டும். ★

இந்திய குற்றவியல்

சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதும் குற்றங்களை கண்டு பிடிப்பதும் அத்தகைய குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதும் காவல்துறையினரின் தலையாய கடமை.

ஒருவரைக் கைது செய்வதானால் அதற்குரிய கட்டளை (வாரண்ட்) பெற்றிருக்க வேண்டும். சில வகையான குற்றங்களில் வாரண்ட் இன்றியே கைது செய்யலாம். காரணமின்றி எவரையும் கைது செய்து காவலில் வைக்க கூடாது. சட்டப்படி யாரை எத்தகைய குற்றத்திற்காக கைது செய்தாலும் கைது செய்யப்பட்ட இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் அருகிலுள்ள குற்றவியல் நடுவரிடம் முன்னிலைப் படுத்த வேண்டும்.

ஏதேனும் ஒரு குற்றத்திற்காக காவல் துறையினர் தம்மை கைது செய்து காவலில் வைப்பார்கள் என்ற அச்சம் யாருக்காவது தோன்றினால் அவர் மாவட்ட நீதி மன்றத்தில், "போலீஸ் கைது செய்தால் உடனடியாக ஜாமினில் விடுதலை செய்ய வேண்டும். (ஆன்ட்டிஸி பேட்ரி பெயில்) என்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என கேட்டு எதிர் பார்ப்பு மனுவை தாக்கல் செய்து உத்தரவுபெறலாம். அத்தகைய உத்தரவு அமலில் இருக்கும் வரை போலீஸ் அவரை கைது செய்து காவலில் வைக்க இயலாது.

அரசாங்கமோ அல்லது தனி நபரோ - ஒருவரை காவலில் வைத்திருந்தால் அவரை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்வதற்காக ரிட் ஆப் ஹேபியஸ் கார்பஸ் தாக்கல் செய்யலாம்.

அரசியல் சாசன கோட்பாட்டின்படி எதற்காக கைது செய்யப் பட்டுள்ளார் என்ற காரணத்தை தெரிவிக்காமல் எவரையும் எந்தச் சட்டத்தின் படியும் கைது செய்து காவலில் வைக்க கூடாது. எந்த ஒரு நபரையும் ஒரே குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் தண்டிக்க முடியாது.

அரசியல் சாசனத்தின் 21 வது கோட்பாட்டின்படி எந்த ஒரு நபரின் உயிரும் சுதந்திரமும் சட்டப்படி விதிக்கப்பட்டுள்ள முறைப்படியல்லாது பறிக்கக் கூடாது —காயல்

தமிழக முஸ்லீம்களிடையே பொதுநல சேவை

சில சிந்தனைகள்

Alhaj - A. M. SHAMSUDEEN,
President,
UNITED ECONOMIC FORUM, MADRAS.

ஒரு இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்து முஸ்லீம்கள் அண்டை நாடுகளுக்குச்சென்று பொருளீட்டி வருவதிலே வல்லவர்களாக விளங்குகிறார்கள். பர்மா, மலேசியா, சிங்கை, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, ஹாங்காங், சிரிலங்கா, இப்போது மத்திய கிழக்கு நாடுகள் என்று எத்தனையோ நாடுகளுக்கு துணிச்சலுடனும் உற்றார் உறவினரைப் பிரிந்து சென்று பொருளீட்டி தாய்நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர்கள் அவர்கள். இதன் விளைவாகத் தாயகத்திலே பல வகையான சேவைகள், தொண்டுகள் வளரவும் அவர்கள் காரணமாக விளங்குகிறார்கள். அவர்கள் உதவியால் தமிழகத்தில் எத்தனையோ மதரஸாக்கள், பள்ளிகள், கல்லூரிகள், பத்திரிகைகள் தொண்டு நிறுவனங்கள் தழைத்தோங்கி வந்திருக்கின்றன என்றுல்மிகையில்லை.

ஆனால் இந்தப் பயன்களையெல்லாம் கணித்துப் பார்த்து, ஒழுங்கு படுத்துகின்ற காலம் தமிழக முஸ்லீம்களுக்கு வந்துவிட்டது. இனியும் புதிது புதிதாக மதரஸாக்களைத் தொடங்காமல் பள்ளிகளையும், கல்லூரிகளையும், நடத்த ஆசைப்படாமல், பத்திரிகைகளையும், சங்கங்களையும் முளைவிடச் செய்யாமல், நின்று நினைத்துப் பார்த்து நிறுத்துப் பார்த்து மதரஸாக்கள் நம்மிடையே எத்தனையிருக்கின்றன, இந்த எண்ணிக்கை போதுமானதா? எந்தப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன, எந்தப் பகுதியில் இல்லை என்பதையெல்லாம் எடை போட்டுப் பார்ப்பதல்லாமல், இருக்கும் மதரஸாக்களின் நிறைகுறைகள் என்ன, அவற்றை இக்காலத் தேவைகளுக்கேற்ப எப்படியெல்லாம் சீரிய முறையில் பயன்படுத்த முடியும் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மதரஸாக்களிலிருந்து வெளி வருபவர்கள் எந்த அளவிற்கு சமுதாயத்திற்கு ஆதாயமாக உள்ளார்கள் என்றெல்லாம் லாப நஷ்டக் கணக்குப் பார்க்க வேண்டிய காலம் வந்து விட்டது. இனியும் சமுதாயத்தின் செல்வம், சிறிதளவு கூட பாழாகாமல் தவறாகப் பயன்படுத்தப் பட்டு விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாமெல்லாம் குறியாக இருக்க வேண்டும்.

நம்மிடையே போதுமான எண்ணிக்கையில் கலைக் கல்லூரிகளிருக்கின்றன. ஆனால் போதுமான எண்ணிக்கையில் பள்ளிகள் இல்லை. குறிப்பாக பெண்கள் பள்ளிகள் இல்லவே இல்லை. இந்த துறையில் நம் எஞ்சிய செல்வமெல்லாம் செலவு செய்யப்பட வேண்டும் என்று சொன்னாலும் மிகையாகாது.

பத்திரிகைகள் மேலதிகமாகஇருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கையைக் குறைத்து தரத்தை உயர்ந்த அறிஞர்கள் கூடி ஆய்வு செய்ய வேண்டும். ஆசிரியர்கள் துணை நிற்க வேண்டும்.

அடுத்து தொண்டு நிறுவனங்கள், அதாவது சங்கங்கள், சமுதாய சேவை நிறுவனங்கள் ஒரே ஊரில், ஒரே முஹல்லாவில் ஏறக்குறைய ஒரே விதமான கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள் கொண்ட சபைகள் ஒன்றுக்கு மேல் இருக்கக் கூடாது என்று நமக்குள்ளேயே திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். அதோடு, தமிழகத்திலுள்ள எல்லா முஸ்லீம் சமுதாய சேவை நிறுவனங்களும் ஒரு கூட்டமைப்பின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும். பொருளாதார அடிப்படையில் ஐக்கியம் ஆவது சற்று எளிதானது. **ஐக்கிய பொருளாதாரப் பேரவை** அதற்கு இடமளிக்க வல்லது. இந்த அமைப்பின் கீழ் எல்லாரும் ஒன்று திரண்டு, ஒருங்கு கூடி நம் நாட்டிற்காக நம் வருங்கால சந்ததியினருக்காக நாம் செய்ய வேண்டிய கடமைகள்; ஆற்ற வேண்டிய பணிகள் பொறுப்புகள் இவை இவை என வகுத்துத் தொகுக்க வேண்டும். அதன் பிறகு நம் பொருள் எந்தத்துறையில், எந்தப் பகுதியில் மிகுதியாய் தேவைப்படுகிறதோ அந்தத் துறையில், அந்தப்பகுதியில் செலவிட வேண்டும். அதைப் பொறுத்துத்தான் நாம் கடமைகளை எந்தஅளவிற்குச்சரியாகநிறைவேற்றியுள்ளோம் என்பதை எதிர் காலத்தினர் உணர்வார்கள்.



ஹாஜி A M. சம்சுத்தீன்
அதிராம்பட்டினம்
தஞ்சை மாவட்டம்.

மனித இனத்திற்கு

பழைய தத்துவங்கள்தான்! புதிய சிந்தனை பிறக்காதா . . . ?

— அல்ஹாஜ் M. செய்யது அஹமது JP. —
(அகில இலங்கை சமாதான நீதிபதி, கொழும்பு, ஸ்ரீலங்கா)

படைப்பினங்களிலெல்லாம் மிகச் சிறந்த படைப்பாகிய மனிதன் இன்று மண்ணுலகத்தை மட்டுமல்ல விண்ணுலகத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றான். அவனது பகுத்தறிவு அரிய கண்டு பிடிப்புக்களையும் புதிய செய்திகளையும் அன்றாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அறிவோடு அறிவு போட்டி போடுகின்ற இந்த மனிதன் தனக்குள் எத்தனை விதமான பிளவுகளையும் பிரிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிருன்? மூன்ருவது உலக நாடுகளில் மட்டுமல்ல — எங்களை மிஞ்சுகின்ற நாகரீகத்தையும் அறிவையும், வேறு எவரும் பெற முடியாது என பறைசாற்றும் வல்லரசு நாடுகளிலும் இன்று நிறத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் மொழி சித்தாங்களின் அடிப்படையிலும் போராட்டங்களும் பிரச்சனைகளும் அதிகரித்து விட்டன.

மனிதர்களை நல்வழிப்படுத்த, மனித இதயங்களை ஒருமுகப்படுத்த மதங்களை தீர்க்க தரிசிகள் மகான்கள் போதித்தார்கள். எல்லா மதங்களுமே அகிம்ஸை, சகிப்புத்தன்மை, பரஸ்பர உதவி இவை போன்ற நல்ல கொள்கைகளை போதித்தன. ஆனால்இன்று மதத்தின் பெயரால் தீவிர வாதம் வளர்ந்து நிற்கிறது. ஆயுதங்களின் நிழலில் அகிம்ஸை சாகடிக்கப்பட்டு விட்டது.

' மனிதர்களே! உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்து அதன் துணையை அதனின்று உண்டாக்கி அவ்விருவர்களிலிருந்து எண்ணற்ற ஆடவரையும் பெண்டிரையம் படைத்த் இறைவனுக்கு நீங்கள் அஞ்சி நடப்பீர்களாக'' (அல்குர் ஆன் 4:1) என்று இறைவன் குறிப்பிடுகிறான். ஆனால் மனித சமுதாயத்தில் தாங்களனைவரும் சமம் ஒருதாய் மக்கள் என்ற உணர்வுகள் அற்றுப் போய்விட்டன. ஒரே ஊரில் வசிக்கின்ற ஒரே சமூக மக்களிடையே கூட குலத்தின் பெயராலும் குடும்பத்தின் பெயராலும் ஏற்றத் தாழ்வுகள் அலசி ஆராயப்படுகின்றன. இறை அச்சம் இன்று இல்லை.



M. செய்யது அஹமது JP.

உண்மையான மனிதாபிமானத்தை உணர்த்துவதற்காக, 'அடுத்த வீட்டுக்காரன் பசித்துக் கொண்டிருக்கும்போது வயிறு புடைக்க உண்பவன் என்னைச் சார்ந்தவன் அல்ல' என்று நபிகள் நாயகம் (ஸல்) குறிப்பிட்டார்கள்.

ஆனால் அடுத்த வீட்டார் இன்னும் பல நாள் பட்டினி கிடந்தால்தான் அவனது வீடு வாசலை நமக்கு விற்பான் என்ற உணர்வு தான் இன்று மக்களிடையே அதிகரித்துள்ளது.

ஒரு நூறு வீடுகளுக்குச் செல்லவேண்டிய குடி தண்ணீரைக்கூட ஒரே வோட்டாலில் உறுஞ்சுகின்ற அரக்கர்களிடம் இரக்கத்தையா எதிர்பார்க்க முடியும்?

சாக்கிய முனி என்று சிறப்பு பெற்ற கௌதமபுத்தர், எவ்வுயிர்க்கும் துன்பம் விளைவிக்கக் கூடாது என்றார். தீமை தீங்கு செய்பவரை முட்டாள் அதை நேனாக நினைக்கிறான் . தீமை தீங்கு விளைவிக்கும் போது அவன் துன்பத்தில் உழல்கிறான். 'ஆசை அற்ற மனம் உடையவனுக்கும் விழிப்புடன் இருப்பவனுக்கும் அச்சம் ஏற்படுவதில்லை.

புத்தரின் இந்த அருமையான தத்துவங்களை தூசுபடியாமல் செய்திருந்தால் இன்று ஏ கே 47 எதற்கு?

குழம்பிலே தோய்ந்துள்ள கரண்டிக்கு அக் குழம்பின் சுவை தெரியாது என புத்தரே இதற்கு விளக்கம் தருகிறார்.

சத்தியமும் தர்மமும் இன்று அழிக்கப்படுகின்றன. வலிமையுள்ளவன்தான் தினைத்ததை வெல்லவும் தகதித்துக் கொண்டிருக்கின்றான்.

'நாம் தர்மத்தைக் காத்தால் அதுவும் நம்மைக் காக்கிறது. நாம் தர்மத்தை அழிக்க முற்பட்டால் அது நம்மையே அழித்துவிடும்"

என்ற மகாபாரதத்தின் முடிவு மனித இதயங்களை தொடவில்லையா? எவரிடத்தில் வாய்மை தூய்மை தன்னலமின்மை என்னும் குணங்கள் இருக்கின்றனவோ அவனை அழிக்கும் சக்தி எங்கும் கிடையாது என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் இந்த குணங்கள் இல்லாத காரணத்தால் தான் உலகமே இன்று அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விதமான உணர்வு— ஒவ்வொரு வகையான ஆசை— எப்படிப்பட்ட தகுதியிருந்தாலும் கூட...

அட மனிதா! பிச்சையெடுத்து சாப்பிடுகிறாய் மரத்தடியில் வாசம் செய்கிறாய் ஆனாலும் உன் ஆசை போகவில்லையே, என ஆதிசங்கரர் கேட்டார்.

'உங்களிடையே சண்டைகளும் சச்சரவுகளும் எங்கிருந்து வருகின்றன? உங்கள் அவயங்களின் உள்ளே போராடுகிற ஆசைகளினால் அல்லவா!' என பைபிள் அடித்துச் சொல்கிறது.

இந்த அருமையான சிந்தனைகளை மனிதன் செவிமடுக்க மறந்து விட்டான் அவன் அவசரக்காரனாகவும் ஆத்திரக்காரனாகவும் இருக்கின்றான் அதனால் பொறுமையும் கருணையும் அவனிடத்தில் இல்லை.

'பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை-திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை ஆசையிலும் பெரிய தீமையில்லை கருணையிலும் பெரிய அறமில்லை'

— இந்த உண்மையை மீண்டும் மீண்டும் சொல்லிக்காட்ட மகான் குரு நானக்கும் இன்று உயிரோடு இல்லை.

உலகை அமைதிப்படுத்த சமுதாயத்தை நல்வழிப்படுத்த மனித இதயங்களை ஒன்றுபடுத்த ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே அரிய தத்துவங்கள்

மனித இனத்திற்கு புதிய சிந்தனையே பிறக்காதா?

With best compliments from:

Grams: Saudilungi Phone: 511917

AHAMED HASSAN & CO.,

Manufacturers and Dealers in: HANDLOOM LUNGIES

P. Box No. 8210 93, Angappa Naicken Street, MADRAS-600 001.

H. O:- No. 96 Rabindra Sarani, CALCUTTA-700 073

Grams: Chand Saudi Phone: 259775

Phone: 512706

K. S. M. BUKHARI & CO.

Mfrs. & Dealers in CHAND A Brand Lungies

89, Angappa Naick Street,
P. Box No. 1757
MADRAS-600 001.

H.O:-
98, Rabindra sarani,
CALCUTTA-73

RAZIK LEATHERS

Phone: 37875

3, Kattur Sadayappan Street,
PERIAMET, MADRAS-600 003

Prop. L. T. SHAIK

With the best compliments of:

KONA SHEIKNA LEBBAI

Arafath Leathers

Fac: 2, Thiruneermalai Road, (Sate Shop)
Nagalkeni, Chrompet, MADRAS-600 044



Off: 3, Peters Road, Chrompet, MADRAS-600 044

With best compliments from:

G. M. SHAIK

L. M. S. Gani Mohamed & Co.

Leather Manufacturers & Exporters
31, Kattur Sadaiyappan Street,
Periamet, Madras-3
Phone: 584298, 34298
Telex: 041 8095 CARL IN

Factory:
25, Sidco Industrial Estate
Ranipet-632 403
Phone: 84272
Fax: 91-044-458908

சகோதரத்துவம் வளர்ப்போம்

— அல்ஹாஜ் கலாமி S. O. அபுல்ஹசன் —
காயல்பட்டணம்.

மனிதர்கள் ஏன் பிரிந்து பிளவுண்டு கிடக்க வேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இருக்க முடியாது. மனிதர்கள் அனைவரும் அன்பு சகோதரத்துவம் இவற்றால் பிணைக்கப்பட்டு இவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சமுதாய அமைப்பில் சுமுகமாகவும் சுகமாகவும் வாழ்ந்திட வேண்டும் என்பதே இயற்கையின் நியதி. உண்மையும் உண்மையான அறிவும் இதையே அறிவுறுத்துகின்றன.

ஆனல் இன்றைய நம் சமுதாய அமைப்பின் நிலை என்ன? ஒரு மனிதன் அவன் பிறந்த நாட்டினால், பிரதேசத்தால், மாநிலத்தால், மொழியால் பேதம் கற்பிக்கப்படுகிறான். இனத்தால் நிறத்தால், ஜாதியால் வேறுபடுத்தி பிரிக்கப்படுகிறான்.

உலக மதங்கள் மனித இனத்தின் வேறுபாடுகளை கற்பிக்கின்றனவா? பிறப்பாலும் வாழுகின்ற நாட்டாலும் பேசுகின்ற மொழியாலும் ஜாதி, இனம், நிறம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு மனித இனத்தை ஒற்றுமைபடுத்துவதுதான் மதங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

மனிதர்களுக்கிடையில் நிலவும் உறவு முறைகள் அனைத்தையும் **ஆதம்** (அலை) **ஹவ்வா** (அலை) ஆகிய மூலவர்களுடனேயே தொடர்புடையதாக அறிவுறுத்துகிறது இஸ்லாம். காரணம் அப்போதுதான் மனிதர்கள் தங்கள் உறவு முறையின் அடிப்படையை உணர்வார்கள்.

''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண் (ஆதம்) ஒரு பெண் (ஹவ்வா)னிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆனால் உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை. எனினும்) உங்களில் எவர் மிகவும் பயபக்தி உடையவராக இருக்கின்றாரோ அவர்தான் இறைவனிடத்தில் நிச்சயமாக உயர்ந்தவர். அல்லாஹ் (உங்கள் செயல்பாடு யாவையும்) நன்கறிந்தோனும் நன்கு தெரிந்தோனுமாக இருக்கிறான்.'' **[அல்குர்ஆன் 49:13]**

மனிதர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து வாழ்ந்திடுவதே மனித உறவுகளின் அடிப்படையாக அமைந்திட வேண்டுமேயல்லாமல் வெறுப்பும், குரோதமும் மனித உறவுகளின் அடிப்படைகளாக அமைந்திடக் கூடாது. நன்மை தீமை எது என்பதை தீர்மானிக்கும் அளவுகோலில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும் மனிதர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஏற்றத் தாழ்வுகளும் மனித சமுதாயத்தை பல பகுதிகளாக பிரித்து சிதைத்துவிட்டன. இத்தனை இருந்தாலும் இறைவன் மனிதனைப் படைத்த அடிப்படை நோக்கத்தை மனிதன் மறந்திடலாகாது.

'' விசுவாசிகளே! எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம் அவர்கள் இவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம். எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்ணையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மேலான

வர்களாக இருக்கலாம் உங்களில் ஒருவர் மற்றவரை இழிவாகக் கூற வேண்டாம் உங்களில் ஒருவர் மற்றவருக்கு (தீய) பட்டப் பெயர் சூட்ட வேண்டாம். விசுவாசம் கொண்டதன் பின்னர் கெட்ட பெயர்சூட்டுவது மிகப்பெரும் பாவமாகும்-எவர்கள் இவற்றிலிருந்து விலகிக்கொள்ள வில்லையோ அவர்களே அக்கிரமக்காரர்களாவார்கள்'' **(குர் ஆன். 49: 11)**

என்று மனிதர்கள் பரஸ்பரம் எப்படி வாழ வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்தி காட்டுகிறது.

மொழியின் பெயரால் வேறுபாடு கற்பிப்பதையும் இஸ்லாம் வேரோடு சாய்க்கிறது. மொழி என்பது மனிதன் தனது கருத்துக்களை எடுத்துக் கூறக்கூடிய ஒரு சாதனமேயாகும். மொழிப் பற்று இருக்கலாம் ஆனால் அதுவே வெறியாக மாறக்கூடாது. **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியுமுன் கடைசியாக பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த தங்கள் தோழர்களிடையே இறுதிப் பேருரை நிகழ்த்தும்போது '' அரபியர்களுக்கு அரபியர் அல்லாதவர் மீது எவ்வித மேன்மையுமில்லை வெள்ளை நிறத்தையுடையவர்களுக்கு கறுப்பு நிறத்தையுடையவர்களைவிட எவ்வித சிறப்புமில்லை உங்களில் சிறந்தவர் இறையச்சம் உடையவரே '' என 1400 ஆண்டுகளுக்கு முன்பே சோஷலிசப் பிரகடனம் செய்தார்கள். மனித சமுதாயம் வரும் காலமெல்லாம் பிறப்பின் அடிப்படையில் குறுகிய நோக்கின் அடிப்படையில் பேதங்கள் கற்பிப்பதை முற்றிலுமாக தடை செய்தார்கள். மனிதர்களிடம் அன்பு செலுத்தாதவனுக்கு இறைவன் கருணை காட்ட மாட்டான் என குறிப்பிட்டார்கள்.

இறைவன் மனித இனத்தை படைத்த உண்மையை மனிதன் புரிந்து நடப்பானேயானால் பிளவுகள் இல்லை பிரச்சனைகள் இல்லை சண்டைகள் இல்லை உண்மையான சகோதரத்துவத்தின் அடிப்படையில் சமதர்மம் நிலவும் ஒருமைப்பாடு மலரும்.

★

வாழ்வியல்!

மனித நேயம் வேண்டும்!

—டாக்டர் K.V.S.H. ஹபீப் முஹம்மது M.B.,B.S., D.C.H—
சென்னை.

மனிதர்களை நாம் ஏன் நேசிக்க வேண்டும்? அவர்கள் மனிதர்கள் எனவே நாம் அவர்களை நேசிக்க வேண்டும். மனிதனை நேசிக்க இக்காரணம் ஒன்றே போதுமானது. மிருகங்களைக் கூட நேசிக்கும் மனிதன் மனிதர்களை நேசிக்க மறுக்கிறான் பல காரணங்களுக்காக

மனிதனை மனிதன் செல்வம் பதவி என்ற அளவுகோலை வைத்து அளக்கிறான். பணக்காரர்களையும் பதவியிலிருப்போரையும் பார்த்து கூழைக் கும்பிடு போடுகிறான். ஆனால் ஏழைகளும் கடை நிலை ஊழியர்களும் அன்புடன் அளிக்கும் வாழ்த்துக்களை அலட்சியத்துடன் பெற்றுக் கொள்கிறான் அவர்களைப் பார்த்து புன்னகை புரியவும் மறுக்கிறான். பணமும் பதவியும் இத்துணை வலுவானதா?

மனிதனை வெறுக்கும் விஷயத்தில் அவன் மிருகங்களை விட கீழானவனாக நடந்து கொள்கிறான். மிருகங்கள் தனது இனத்தைச் சேர்ந்த இன்னொரு மிருகத்தை கொல்வதில்லை. ஆனால் மனிதன் மனிதனையே சுரண்டுகிறான் கொலையும் செய்கிறான்.

ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு உயிரியல் பூங்காவில் ஒரு கூண்டிற்க்கு வெளியே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது, "இந்தக் கூண்டில் இருக்கும் மிருகமே உலகில் மிகவும் பயங்கரமானது." உள்ளே உற்றுப் பார்த்தால் வெறும் கண்ணாடி மட்டுமே உள்ளது. உற்றுப் பார்க்கும் மனிதனின் முகமே அதில் தெரிகிறது. உலகில் மிகவும் பயங்கரமானவன் மனிதனே என்பதனை எவ்வளவு நாசூக்காக தெரிவித்திருக்கிறார்கள்.

மனிதனை மனிதன் வெறுக்கும் நிலைமாறி மனித நேயம் தழைக்க வேண்டும்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக வேண்டும். இறைவன் ஒருவன் என்றால் அவன் படைத்த மனித இனமும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்?

"ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார்" **திருமூலர்** "மனிதர்கள் சீப்பின் பற்களைப் போல் சமமானவர்கள் என்றார் **நபிகள் நாயகம் (ஸல் அவர்கள்)** மனித நேய சமத்துவமே மனித நேயத்தின் முதல் அடிப்படையாகும்.

அடுத்து, உரிமைகளை வழங்கி வாழ வேண்டும். பிறரது உயிர், உடமை, கண்ணியம், நம்பிக்கை ஆகியவற்றை புனிதமானவையாகக் கருத வேண்டும். இவற்றைச் செய்வதில விருப்பு வெருப்பு கூடாது. அநீதி இழைப்போர் உரிமைகளைப் பரிப்போர் யாராவது இருப்பினும் அவர்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

"எனக்கு அநீதி அவமரியாதை செய்யப் படுவதை நான் விரும்ப மாட்டேன் எனவே நானும் பிறருக்கு அநீதி அவமரியாதை இழைக்க மாட்டேன்.

என்னிடம் பிறர் லஞ்சம் கேட்பதை வெறுக்கிறேன் எனவே நானும் லஞ்சம் கேட்க மாட்டேன்."

—இந்த அடிப்படையில் மனிதர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து செயல்பட ஆரம்பித்தால் மனித நேயத்தைப் பற்றி உபதேசம் செய்யவும் வேண்டுமோ?

வாழ்வியல்

ஒன்று படுவோம்! உயர்வு பெறுவோம்!!

— அல்ஹாஜ் A.K. **அப்துல்ஹலீம்** சென்னை. —


ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் சரித்திரப் புகழ்வாய்ந்த நமது காயல்பட்டணத்தில் பஞ்சாயத்து போர்டு தனது நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் இந்நேரத்தில் சில சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்ற பின்பு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் **கிராம ராஜ்யம்** மலர வேண்டுமென **மகாத்மா காந்தி** அவர்கள் பெரும்பாடு பட்டார். அவர் மறைந்துவிட்ட போதிலும் கூட கிராம ராஜ்யத்திற்காக மத்திய மாநில அரசுகளும் நம் தொண்டு நிறுவனங்களும் இன்று பல்வேறு இயக்கங்களை நடத்திக் கொண்டிருப்பதையும் அதற்காக கோடிக் கணக்கில் செலவழித்துக் கொண்டுருப்பதையும் காண்கிறோம்.

ஆனால் இஸ்லாம் வகுத்துள்ள கூட்டு வாழ்க்கை (**ஜமாஅத் அமைப்பு**) தான் கிராம ராஜ்யத்தின் மூலம் என்பதை நாம் உணர வேண்டும்.

சமாதானம் சகோதரத்துவம் ஒருமைப்பாடு ஆகியவை இந்த கூட்டு வாழ்க்கையின் அடிப்படையில் புத்துயிரூட்டப்படுகிறது.

நமதூர் கட்டுக் கோப்புடன் இருந்து வந்த முஸ்லிம்கள் நிறைந்த ஒரு கிராமம். போலீஸ் ஸ்டேஷனும் சினிமா கொட்டகையும் எங்களூரில் கிடையாது என்று நம்மவர்கள் இன்றைக்கும் பெருமையாக சொல்லிக் கொண்டிருக்கின்றனர். காவல் நிலையங்களில் இருக்கின்ற நல்ல அதிகாரிகளிடத்தில் புகார் சென்றால் 'உங்கள் ஜமாஅத்தில் இதனை பேசி திர்த்துக்கொள்ளுங்கள்' என்று இன்றைக்கும் சொல்லக் கூடிய காட்சியை காண்கிறோம். நீதி மன்றங்களில் ஜமாஅத் தீர்ப்புகளுக்கு தனி மரியாதை கிடைத்து வந்தது.



அல்ஹாஜ்
A. K. அப்துல்ஹலீம்

ஆனால் துரதிருஷ்ட வசமாக இன்று சமூக அமைப்புக்கள் பெரிதும் மாறி விட்டன.

கூட்டு வாழ்க்கை - ஜமாஅத் அமைப்புக்கள் என்பதை தொழுகையிலும் பள்ளிவாசல் நிர்வாகத்திலும் மட்டும் நிறுத்திக் கொள்கின்ற காட்சியைத்தான் காண முடிகிறது.

பள்ளிவாசலுக்கு வெளியில் சமூக வாழ்க்கையில் ஜமாஅத் அமைப்புக்கள் செயல்படாத காரணத்தால் போலீஸ் ஸ்டேஷனில் நம் சமூகத்தை அன்றாடம் காண முடிகிறது. நீதி மன்றங்களை நம்மவரின் வழக்குகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

நமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய விவகாரங்கள் வெளி உலகத்தில் வெளிச்சம் போடப்படுகின்றன. ஏன், கணவன் மனைவி இடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளும் தலாக் விவகாரங்களும் கூட ஜமாஅத் அமைப்புக்களை தாண்டியே இன்று முடிக்கப்படுகின்றன. உடன்பிறந்த

அண்ணன் தம்பி, அக்கா தங்கையாக இருந்தாலும் முடுக்குத் தகராறும் பொதுச் சுவர் பிரச்னையும் இன்றைக்கும் தீராத தலைவலியாகவே இருக்கிறது.

தேவையற்ற சர்ச்சைகளிலிருந்து சமுதாயத்தின் கவனம் இந்தப்பக்கம் திரும்ப வேண்டும்.

முறைப்படியான ஜமாஅத் அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த அமைப்புக்கள் ஷரீஅத் பஞ்சாயத்தாக செயல்பட வேண்டும். 'இந்த அமைப்புக்கள் இறைவனுக்குப் பயந்து நியாயத்தின்படி தீர்ப்பளிக்கும்' என்ற நம்பிக்கை ஜமாஅத்திலுள்ள ஏழை எளியவர் ஆதரவற்றவர்கள், ஓங்கிப் பேச முடியாதவர்கள், விபரம் தெரியாதவர்கள் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும். இதற்காக இறையச்சம், இஸ்லாமிய ஒழுக்கம், சுயநலமின்மை, பண ஆசை இல்லாமை நற்பெயர் கொண்ட மார்க்க சட்டங்கள் நன்கு தெரிந்த கண்ணியமானவர்கள் இந்த அமைப்புகளுக்கு தலைவர்களாகவும் நிர்வாகிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இந்த அமைப்புக்கள் குடும்ப விவகாரங்கள் சொத்து தகராறுகள் பற்றிய வழக்குகளை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்காமல் நலிவடைந்த மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்துதல், சமூகப் பெண்களுக்கு சிறு தொழில்களில் பயிற்சி அளித்தல் ஏழை மாணவர்களுக்கு உயர் கல்விக்கு வாய்ப்பளித்தல் ஏழைக்குமர்களுக்கு திருமண உதவி போன்ற பல்வேறு பணிகளை செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பொது வாழ்வுப் பணியில் தம்மால் முடிந்த ஏதாவது ஒரு வகையில் செயல்பட இந்த சமுதாயத்தவர்கள் முடிவெடுப்பார்களேயானால் நிச்சயமாக ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்படும்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்

S. L. வெங்கடாசலம் B.A.
(13வது வார்டு உறுப்பினர், தேர்வுநிலை பேரூராட்சி மன்றம், காயல்பட்டணம்)

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதைச் சார்ந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலக இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே''

இடம் இனம், மத, மொழி வேற்றுமை இருப்பினும் 'ஒற்றுமை' என்னும் உயிர் மூச்சினிலே வாழ்ந்து வந்து இப் பாரதம் என பகர்கின்றது இப்பாடல்.

புகழுக்குரியவள் நமதன்னை
பொலிவுக்குரியவள் தமிழன்னை
புகழ்பரப்பும் தமிழ் நில பரப்பினிலே
தென்கோடிமூலை - தென்றல் பாயும் சோலை.
நல்லோர்கள் வாழும் நானிலமாம்
எல்லோர்க்கும் வாழ்வு அளிக்கும் இன்ப பூமியாம்
அண்டினோர்க்கு அபயந்தரும் அமுத கரபியாம்
கண்கலங்கும் மாந்தர்க்கு கற்பக விருட்சகமாம்
கண் துடைத்து களிப்பூட்டும் காயல்மாநகர்

இந்த காயல்பதி பட்டினமாக இருந்து வாணிபத்தில் சிறந்து ஓங்கிய வரலாறு உண்டு. காயல் பதியின் கீழ்திசை காட்சிக்கு உரிய கடலின் மாட்சிமை உடையது


S.L. வெங்கடாசலம், B.A.,

முத்தெடுக்கும் நிலக்கடல்—ஓசை
முழங்கிவரும் அலைவரிசை
தத்தித் தவழ்ந்து விளையாடி - அலை
சிந்துராகம் தனைப்பாடி
முந்தி முந்தி ஒவ்வொன்றாய் - தரையை
முத்தமிட்டு செல்லுதம்மா
அழகு, கடல் மணல் பரப்பு - அதில்
அழகான வசந்த மண்டபமொன்றுண்டு
அழகு, கடல் மணல்பரப்பு - அதில்
ஆடி விளையாட தனி நினைப்பு
களைப்பு தீரக்குந்துஞ் சனக் கூட்டம் - மாலை
காற்று வாங்கி மீளும் பெருங்கூட்டம்!
இத்தகு இயற்கை எழிலுண்டு இங்கே!
இது போலிருப்பது வேறெங்கே?

இங்கு முப்பிரிவு இஸ்லாமிய, இந்து, கிறுத்துவர் ஆகிய மக்கள் ஒருவரையொருவர் நேசித்தே வருகின்றனர். வேறுபட்ட மதக்கொள்கைகள் - கலாச்சாரங்கள், வேற்றுமை அம்சங்களே. மாறுபட்ட பழக்க வழக்கங்கள், வணக்க வழிபாடுகள் வேற்றுமை கூர்களே. ஆனால் இங்கு வேற்றுமையை முன்னிட்டு மக்கள் பிரிவினை கொள்ளவில்லை. மதங்கள் வெவ்வாறானவை என்பது உண்மை. அவை மக்களை பிரித்து விரோதம் கொள்ள வைக்கவில்லை என்பதும் உண்மையே. பெரும்பான்மை சிறுபான்மை மீது ஆதிக்கம் செலுத்துதல் என்பது சகஜமான ஒன்று. இதற்கு மாறாக ஒருவர் மற்றொருவரை நன்கு மதித்தும் நெருங்கி பழகியும் வருகின்ற மனப் பக்குவத்தை இங்கு காணலாம்.

குறிப்பாக நாணயம், நம்பிக்கை, நேர்மை, சகிப்புத்தன்மை, பாகுபாடு இன்மை ஆகிய நற்குணங்களுக்கு மொத்த உருவமாக திகழும் நம் நகர் தந்தை ஹாஜி ஜனாப் V. M. S. லெப்பை அவர்கள் தலைமையில் இயங்கும் பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய சிறப்பு அம்ச குணங்களுக்கு சொந்தக்காரர்கள் என்றால் மிகையாகாது. இவர்களது நிர்வாகம் காயல் மாநகரத்தின் பொற்காலமாகும்.

இங்கு அதிகமாக வாழும் முஸ்லிம்களுக்கு உரிய பள்ளிகள் பல உண்டு. பாண்டியர்கள் காலத்திய கோவில்கள் அருள்மிகு கணபதிஸ்வரர் திருக்கோவில் மெய்கண்டேஷ்வரர், அழகிய மணவாளப்பெருமாள் ஆகிய ஆலயங்கள், ஐநூற்று நங்கையம்மன்கோவில், உக்கிரபாண்டிய மன்னர் காலத்தில் கட்டிட்ட வீரசடைச்சி அம்மாள் கோவில், தற்காலத்தில் லெட்சுமணப் பெருமாள் ஆச்சாரியால் உருவாக்கி பிரதிஷ்டை செய்யப்பட்ட அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம், கிருத்துவர்கள் வழிபடும் ஊரின் நுழைவு வாயில் அமையப்பெற்ற பேட்ரீச் சர்ச்; ரோமன் கத்தோலிக்கர்கள் வழிபடும் அந்தோணியார் சர்ச் ஆகியவைகள் இங்குள்ள மக்கள் அனைவரும் பாகுபாடின்றி ஒருவரை மதித்து வாழக் கூடியவர்கள் - மார்க்க வழிபாட்டில் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்றால் மிகையன்றோ.

சமரசம்:

வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
மாருதியில் நதித்திரள் போல் வலங்கிற்றம்மா''

மேல் சொல்லப்பட்ட சமரச கருத்துக்கள் நடைமுறையில் தாமாகவே நடைபெற்று வருகின்றன. இந்த பெருமைக்குரிய விஷயம் பெரும்பான்மை மக்களையே சாரும். பெரும்பான்மையினர் பச்சைக் கொடி உயர்த்துவது நின்று சிவப்புக்கொடி ஏந்தி நிற்பரேல் நிலைமை படுமோசமாகிவிடுமல்லவா.

இங்குள்ளவர்கள் பாப-புண்ணியங்களில் நம்பிக்கை மிக்கவர்கள்

தனம் படைத்தவன் ஊட்டிக்கு போகிறான்;
தப்பு செய்தவன் சிறைக்கு செல்கிறான்;
உதவி செய்தவன் சொர்க்கத்திற்கு போகிறான்;
ஒன்றும் செய்யாதவன் நரகத்திற்கு போகிறான்.

இவ்விதம் ஒரு கொள்கையுண்டு. இம் மாதிரியான நெறியக் கொள்கைகளில் ஆழ்ந்த பற்றுள்ளவர்கள் இஸ்லாமிய சான்றோர்கள். இங்குள்ள மக்கள் மென்மையானவர்கள், சாதி, சமய, மத கலவரம் போன்ற அநாகரிகமான செயல்களுக்கு இடமளிக்காது அமைதியாக திரைகடல் ஓடியும் திரவியம் தேடி புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தாமே வலிந்து சென்று வறியவர்களுக்கு உதவிடும் மென்மையான கருணை உள்ளம் இங்கு உண்டு. ஒதுக்கப்பட்டோருக்கும் துன்பம் நிறைந்தோருக்கும் உதவிடும் ''தெய்வசம்பத்து'' என்ற கொள்கை அடிப்படையில் ''சதக்கா'' ஜக்காத்து கொடுக்கும் ''கொடை திருப்பணி'' இங்கு உண்டு பாராட்டப்பட வேண்டியது. எனவே இங்கு தானமுண்டு, தர்மம் உண்டு, சன்மார்க்க நெறியுண்டு சான்றோர்களுமிக உண்டு. ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்ற உயரிய தத்துவம் இங்கு உண்டு. தேச தொண்டும் இங்கு மலர்ந்த வரலாறும் உண்டு, தேச பக்தி கொண்டு அதில் சேவை செய்வதுண்டு, நேசக்கரம் நீட்டி - இங்கு நின்ற நிறையபேர் உண்டு, தனப் படைத்தோர் பணமீன்றார் - சேவை மனம் படைத்தோர் துணை நின்றார். சினங்கொண்டு தேச விடுதலை போர் மூலம் களம் புகுந்த பேர் பலருண்டு. தேச பக்தியுண்டு அதை முன்னிட்டு மக்களிடம் நேசமுண்டு, பாசமுண்டு எனவே வேற்றுமையில் ஒற்றுமை காணுகிற காயல்மா நகரிலே உறவுண்டு, நல்ல உள்ளம் உண்டு, உதவியுமுண்டு, பொருள் வசதியுமுண்டு.

வேற்றுமையில் நின்றே, ஒற்றுமை கண்டு வெற்றிக்கனி தின்று, விரிந்த இதயம் கொண்டு வாழ்க காயல்பதி என்று வாழ்த்துவோம் இன்று.

வாழ்க ஒற்றுமை - வளர்க ஒருமைப்பாடு
வாழ்க! வாழ்கவே!! இவ்வையகம் வாழ்கவே.

உயர்ந்த உள்ளங்களுக்கு

உரத்த வேண்டுகோள் !

அல்ஹாஜ் M.K.M. முகைதீன் அப்துல் காதர்
மிய்யகான் பள்ளி, வல்லநாடு P.O.

வாழ்க்கை வாழ்வதற்கா? லட்சியத்திற்கா? லட்சியத்திற்காக வாழ்க்கை வாழ்ந்தே காட்ட வேண்டும். ஆனால் எப்படியும் வாழலாம் என்பது நம்மில் இல்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற வரையறை வகுக்கப்பட்டு சட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டு மனித இனத்திற்கு தரப்பட்டுள்ளன.

வாழ்வியலின் அருமையான தத்துவம் மக்கள் அனைவரும்சமம், மதத்தாலும், நாட்டாலும், மொழியாலும், வட்டாரத்தாலும் வித்தியாசப் படுத்தாமல் அனைவரும் சகோதரர்கள் என்கின்ற அறிய தத்துவம் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டால் எங்குமே பிரச்சணைகள் இல்லை

வளமானவன் வரியவனுக்கு உதவுவது, நலிந்தவனுக்கு தகுதி உள்ளவள் துணை செய்வது, அபலைகளுக்கு அருகதை உளளவன் ஆதரவு காட்டுவது என்ற நிலைமை ஏற்பட்டால் மனித இனம் படைக்கப்பட்டதன் முழு அர்த்தமும் விளங்கிவிடும்.

காயல் மாநகர் முஸ்லிம்கள் அதிகம் வாழும் சிறந்த நகர். வாரி வழங்கும் உள்ளங்கள், ஆன்மீகம் வளர்த்த வித்தகர்கள், தமிழுக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்தவர்கள் நிறைந்த இந்த செல்வ பூமியில். சம்பாதிப்பதை சேமித்து வாழாமல் சிறிய நிகழ்ச்சிகளைக் கூட சிறப்பானதாக்கி தாராளமாக செலவழித்து பழக்கப்பட்டவர்கள் இம்மக்கள். திருமணம் மற்றுமின்றி பெயர்சூட்டு. காதணி, புதுமனை, சடங்கு சுன்னத் போன்ற எந்த நிகழ்ச்சியும் பெரிய அளவில் நடத்தப்பட்டு பணம் தாராளமாக செலவழிக்கப்படுகிறது. ஆனாலும் இந்நகரில் பல நூற்றுக்கனக்கான ஏழை குமர்கள் திருமணம் செய்ய வழியின்றி தவிப்பது பேரதிர்ச்சிக்கும் பெரும் வேதனைக்கும் உரியது. காயல் மாதகரின் ஒவ்வொரு தெருவிலும் 35 ஏன் 40 வயது வரை கூட திருமணம் ஆகாமல் குமர்கள் வேதனையுடன் வாழ்ந்து வருவது இந்நகர மக்கள் அனைவரும் அறிந்த விஷயம் தானே,

ஒரு ஏழைப் பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்தால் வல்ல அல்லாஹ்வை வணங்க ஒரு பள்ளி வாயிலை கட்டிய நன்மையை விட பன்மடங்கு நன்மை கிடைக்கும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்கை நாம் மறந்து விட்டோம்? கரையேற வழியின்றி. கண்ணீர் சிந்தும் ஏழைக் குமர்களின் கண்ணீரை தேக்கினால் காயல் நகருக்கு தண்ணீர் பஞ்சமே இராது என்பது மிகைப்படுத்தப்பட்ட வார்த்தை அல்ல.

இறை கட்டளை அடிப்படையில் 40ல் 1பங்கு சரியாக கணக்கிட்டு ஜகாத் கொடுப்பதற்கு வசதியுள்ளவர்கள் முன்வந்தால் இந்நகரில் வரியவர்களே இருக்க மாட்டார்கள் இங்கு நடைபெறும் திருமணங்களில் ஏதாவதொரு ஆடம்பரச் செலவை குறைத்தால் அந்த மேடையிலேயே இரண்டு ஏழைக்குமர்களுக்கு திருமணம் செய்விக்க முடியும்.

லட்சக்கணக்கில் ஏறிவிட்ட கைக்கூலி, கிலோ கணக்கில் உயர்ந்துவிட்ட தங்க நகை. மனைவி பெயருக்கு வசதியான சொந்தவீடு, சீர் சீராட்டு சம்பிரதாயச் சடங்குகள் இவை

மட்டுமின்றி சம்மந்தங்கள் செய்வதற்கு ஓரே மத்ஹபு ஓரே சமுதாயம் ஓரே ஊர் என்றெல்லா சொல்லிக் கொண்டே குலம்' குடும்பம், தெரு முஹல்லா அந்தஸ்து என்ற படைப்பினத்திற்கும் இஸ்லாத்திற்கும் முற்றிலும் புறம்பான முசீபத்துகளை தகர்த்தெரிய சமுதாயம் குறிப்பாக இளைஞர்கள் முன் வரவேண்டும்.

வசதி படைத்தவர்கள் இந்நகரில் வாய்ப்புள்ள தொழில்களை துவங்கி வாழ வழியின்றி தவிப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்கலாம்.

இந்நகரில் சாதாரண மளிகை சாமான்கள் கூட வாங்குவதற்கு இந்நகர பெண்கள் வெளியூர் களுக்கு செல்கின்றார்களே இது நியாயம் தானா? வெளியூர்களில் கிடைக்கின்ற விலைகுறைந்த தரம் உயர்ந்த பொருட்களை இங்கே விற்பதற்கு சூப்பர் மார்க்கட் போன்ற பெரிய சிறிய அங் காடிகள் துவக்க வசதி உள்ளவர்கள் ஏன் முன் வரக்கூடாது?

உயர்கல்வி தொழிற் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு இந்நகரில் வாய்ப்புக்களே இல்லையா?

இங்கு வசதி படைத்தவர்களின் சிந்தனை மாறவேண்டும். வீணான விவாதங்களும் தேவை யற்ற சர்ச்சைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் இந்த நகர நலனில் அக்கறை கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒன்று பட்டு சிந்தித்தால் காயல்பட்டணம் சொர் க்க பூமியாக மாறும் இந்த உலகிற்கே வழிகாட்டியாக திகழும் இந்தக் சிந்தனையை எல்லாம் வல்ல இறைவன் நம் அனைவருக்கும் தந்தருள்வானாக. ஆமீன்!

கூட்டுறவே நாட்டுயர்வு.

அல்ஹாஜ் **M.S.M. பாரூக்.**

(துணை தலைவர், திருச்செந்தூர் கூட்டுறவு நிலவள வங்கி)

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு''
''ஒற்றுமையே உயர்வு தரும்''

அடிக்கடி நாம் புதுப்பிக்கின்ற சொற்றொடர்கள் இவைகள். தனிமனிதனால் சாதிக்க முடியாத அனைத்தையும் கூட்டு முயற்சியால் சாதிக்கலாம். மத்தியமாநிலஅரசுகளும் வங்கிகளும் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏராளமான கடன்வசதி மான்ய உதவிகளை மிகத் தாராளமாக செய்து வருகின்றன. கூட்டுறவு மூலம் தொடங்கப்பபட்ட ஆலைகளும் நிறுவனங்களும் மிகப் பெரும் லாபத்தில் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மனிதனுக்கு அன்றாடத் தேவைஉணவு. அதன் பின் வீடு. இவைகளுக்காக இன்று மனிதன் மிக அதிகம் முயற்ச்சிக்கின்றான். உணவுப் பொருட்களில் தட்டுப்பாடு விலைவாசியில் ஏற்றத் தாழ்வு இது நாட்டில் சகஜமாகிவிட்ட ஒன்று. மிகப்பெரும் மக்கள்தொகை கொண்ட நமது நாட்டில் மக்களில் எல்லாதரப்பினருக்கும் அரிசி கோதுமை போன்ற உணவுப் பொருட்கள்,சீனி மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடின்றி சீராக அதே நேரம் நியாய விலையில் கிடைக்க அரசு திட்டமிடுகிறது. இதற்காக எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகள், திறக்சப்பட்டு பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட கடைகள் கூட்டுறவு மூலம் நடத்தப்படுகின்ற ஸ்தாபனங்களுக்கே தரப்படுகின்றன.

முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய ஊராகிய கால்பட்டணத்தில் இத்தகைய நியாய விலைக்கடைகளை நடத்துகின்ற பொறுப்பு ஆறுமுகநேரியிலுள்ள **A. K. L.** கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ் (A.K.L.-ஆறுமுகநேரி, கந்தசாமிபுரம்,லட்சுமிமாநகரம்) என்ற கூட்டுறவு சங்கத்திற்கு தரப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கம் நமதூரில் செயல்பட்டால் இந்த நியாய விலைக்கடைகளை நாமே ஏற்று நடத்லாம். அதன் மூலம் மக்களின் தேவையறிந்து முறைகேடின்றி முறையாக பொருட்களை விநியோகிக்கலாம். அப்படிப்பட்ட விணியோகங்களை ஆங்காங்கே உள்ள ஜமாஅத்துக்கள் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு கண்காணிக்கலாம். நமதுசமூக அமைப்பிற்கு தகுந்தவாறு செயல்படலாம்.

கூட்டுறவு சங்கத்தின் மூலம் பால் உற்பத்தி செய்து தரமான பாலை மக்களுக்கு நேரடியாக விணியோகிக்கலாம். கூட்வுறவு அமைப்பின் மூலம் வீடு, நிலம், அடமானம் செய்தோ அல்லது ஜாமீன் அடிப்படையிலோ திருமணத்திற்கும், வீடுகள் கட்டுவதற்கும் நீண்டகால தவணைகளின் அடிப்படையில் நியாயமான தொகைகளை கடனாக வழங்கலாம். சிறு தொழிகள் தொடங்கவும் கடைகளில் வியாபாரத்தை விரிவு படுத்தவும் ரூபாய் நாற்பதாயிரம் வரை கடன் வழங்கலாம் தனி நபர்களிடம் கொடிய வட்டிக்கு நகைக்கடன் வாங்கி நகையையும் பணத்தையும் இழக்கும் இழி செயலை மாற்ற கூட்டுறவு வங்கியின் மூலம் தாராளமாக நகைக்கடன் வழங்கலாம்.

இவை அனைத்தையும் இந்நகரில் செய்யஅடிப்படையில் ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் உடனே துவக்கப்பட வேண்டும். **இதற்கான** பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இந்த கூட்டுறவு ஸ்தாபனத்தை அமைப்பதற்காக கடந்த 2—10—1989. திங்கள் மாலை 5மணிக்கு காயல்பட்டணம் நெய்னார்தெரு **மன்பவுல் பறகாத் சங்க** தோட்டத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. நகரின் அனைத்துப்பகுதிகள் அனைத்து ஜமாஅத், சமுதாய, சங்க பிரதிநிதிகள், சர்வகட்சிப்பிரமுகர்கள் 181 பேர் இக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஏற்கனவே சிறப்பாகச் செயல்பட்டு பின்னர் நிறுத்தப்பட்ட காயல்பட்டணம் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகியாக இருந்த அல்ஹாபிழ் **M.K. செய்யது அகமது** அவர்கள் தலைமையில் பேரூராட்சி தலைவர் ஹாஜி **V.M.S. லெப்பை** அவர்கள் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது கூட்டுறவு ஸ்தாபனத்தின் அவசியம் பற்றி இ யூ. முஸ்லிம் லீக் செயலாளர் ஜனாப் **காயல் மகபூப்**, அ.இ.அ.தி.மு.க. செயலாளர் ஜனாப் **காயல் மௌலானா**, தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ஜனாப் **S E. அமானுல்லாஹ்**. இந்திரா காங்கிரஸ் செயலாளர் திரு **P, அருணாசலம்** ஆகியோர் பேசினர் தி. மு. க. செயலாளர் ஜனாப் **M S,M. பாரூக்** நன்றி கூறினார்.

"காயல்பட்டணம் கூட்டுறவு பண்டக சாலை" என்ற பெயரில் இந்த கூட்டுறவு சங்கத்தை தொடங்க ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இதன் பிரதம அமைப்பாளராக காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சிமன்ற தலைவரும், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய துணை தலைவருமான ஹாஜி **V, M. S. லெப்பை** அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

காயல்பட்டணம் கூட்டுறவு பண்டக சாலையின் இடைக்கால நிர்வாகிகளாக

1. **ஜனாப் ஹாஜி. V. M. S. லெப்பை**
2. ,, **S. E. அபூபக்கர்**
3. ,, **T. A. S. அபூபக்கர் B. Com**
4. ,, **ஹாஜி S. M. சதக்க துல்லாஹ்**
5. ,, **காயல் மகபூப்**
6. **ஜனாப் M. A. செய்யது அப்துல் காதர் B.Sc.**
7. ,, **M. S. M. பாரூக்**
8. ,, **M. A. யாசீன்**
9. ,, **S. I, அப்துல் காதர்**

ஆகியோர் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஸ்தாபனத்திற்கு முறைப்படி உறுப்பினர் சேர்க்கும் பணியும் பங்குத் தொகை (சேர் வசூலிக்கும் பணியும் பாரபட்சமின்றி நடைபெற்று வருகிறது. நம்மவர்கள் இதில் காட்டுகின்ற வேகமான நம்பிக்கையான அக்கறையைப் பொறுத்தே இந்த பயனுள்ள நல்ல காரியம் துவங்க முடியும் என்பதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

காயல்பட்டணத்திற்கு ஒரு கூட்டுறவு வங்கி தேவை என்ற வேண்டுகோளை ஏற்று திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கி கிளையை காயல்பட்டணத்தில் துவக்க கடந்த ஆண்டு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அந்த வங்கி இங்கு மிக விரைவாக துவக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற கூட்டுறவு தேர்தல்களில் ஆறுமுகநேரி கூட்டுறவு விவசாய வங்கி இயக்குனர்களில் ஒருவராக நமதூர் மரைக்கார்பள்ளித் தெரு ஜனாப் **M. A. M. அப்துல் காதர்** B. Com அவர்களும் திருச்செந்தூர் கூட்டுறவு நிலவள வங்கி இயக்குனர்களில் ஒருவராக நானும் (**ஹாஜி** M, S. M **பாரூக்**) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம்,

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்ருண்டு நிறைவு மலருக்கு
சென்னை வாழ் காயல்பட்டணம் பழைய இரும்பு வியாபாரிகளின் வாழ்த்துக்கள்:

Phone : *511462*

KASIM TRADERS

OLD IRON & SCRAP MERCHANTS

3, Mannady Street, MADRAS-600 001.

Godown: 21, More St., Madras-600 001.

Prop: M. K. MD ISMAIL

Phone : 511057

HASSAN TRADERS

Iron & Scrap Merchants,

Dealers in: Old and New G.I., M.S. Pipes and Fittings Etc.,

59-E, Mannady Street, Madras - 600 001.

Prop : M. A. Kader

Phone: 514907

V. M. SHEIK ABDUL KHADER & SONS

Dealers in : Old Iron Scraps

250, LINGHI CHETTY STREET, MADRAS - 600 001.

Godown: 51, Old Slaughter House Road, Madras-13.

Phone: 513376

MOTHI STEELS

Iron & Steel Scrap Merchants

250, Linghi Chetty St., MADRAS-600 001.

V. M. S L E B B A Y

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்ருண்டு நிறைவு மலருக்கு
வாழ்த்தும் நெஞ்சங்கள்

கோழிக்கோடு வாழ் காயல்பட்டணம் டிராவலிங் வியாபாரிகள்

S. I. ஜலீல்
M.K.M. முஹம்மது சாமூனு லெப்பை (டக்காஸ்)
V. ஜாபர் (V.J)
T. S. M. மசூது
K. S. சாகுல்ஹமீது
K.S. இப்ருகீம்
K.M. முஹம்மது நூகு
S. E. மொகுதூம்
S. E. ஜாபர்
S. E. மஹ்மூது
M. D. நூர்முகம்மது
M. D. ஜாகிர்உசேன்
M. K. நெய்னுமுஹம்மது
A. S. M. அப்துல்காதர்
A. K. மூசா நெய்னு

M. A. K. ஐதுரூஸ்
M. A. K. உதுமான்
S. M. K. செய்யது இபுருஹீம்
M. K. S. செய்யது இப்ருஹீம்
V. M. K. சேகு அப்துல்காதர் (ஐஸே)
M. J. முஸ்தபா
M. M. N. மொகுதூம்
S. A. சுலைமான்
K. M. ஹாபில்ஹமீது
M. S. லாபிர்
L. முஹம்மது ஜமீல் ஹாஜி
N. S. ஜாபர்ஹாஜி
M. A. S. சலீம்
S. I. சேகு அப்துல்காதர் (தடியார்)
N. S. H. ரஹ்மதுல்லாஹ் (அதிரடி)

East Kottapparamba, G. H. Road,
CALICUT - 673 001. KERALA.

K A Y A L M A H A B O O B

சேமித்து வாழ்வோம்

— P. ராஜாராமன், M. A., F. I. I. I. —

உதவிக் கிளை மேளாளர், ஆயுள் காப்பீட்டுக் கழகம் - திருச்செந்தூர்

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை" —குறள் 478.

சேமிப்பு, சிக்கனம் இவற்றின் அவசியத்தை இதைவிடத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் வேறு எவரும் கூறியதில்லை. பொய்யாமொழிப் புலவருக்கு முன் நவீன பொருளாதார நிபுணர்களும் எம்மாத்திரம்!

ஆதிகாலந் தொட்டு இன்றளவும் வரை அத்தியாவசியத் தேவைகளாக இருப்பவை உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம். இவற்றை மனிதன் பெற அவனுக்கு இன்றியமையாதது "பொருள்". "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை!" என்பது ஆன்றோர் மொழி. இருள் நிறைந்த இவ்வுலகில் அருளின் துணைகொண்டு, மருளை நீக்கி நல்வழியில் பொருள் தேடுபவரே, அப்பொருளைத் தானும் அனுபவித்து, தனது சந்ததியினரும் அனுபவிக்கும் வண்ணம் விட்டுச்செல்வர்.

பொருளைச் சேர்ப்பதைவிட, அதைக் கையாள்வதில் மிகுந்த நிதானமும், சாமர்த்தியமும் தேவை.

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்".

ஏழேழு தலைமுறைக்குக் காணக்கூடிய பொருள்பெற்ற குடும்பங்களுங்கூட, உரிய நிர்வாகத் திறமையும் சேமிப்பும் இல்லாத காரணத்தால் ஏழ்மையின் பிடியில் சிக்கித்தவிக்கும் நிலைமையை நாம் அறிவோம். எனவே சேமிப்பின் அவசியம் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" தெளிவாகிறது. பண்டைக் காலத்திலுங்கூட ஒவ்வொருவரும் ஈட்டும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை சேமிப்பு செய்யும் கட்டாயம் இருந்து வந்துள்ளது.

மனிதனுடைய பிறப்பும், இறப்பும் அவன் கைகளில் இல்லை. 'நிகழ்காலம்' எனச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அது 'இறந்த காலமாக' மாறிவிடும் நிலையற்ற உலகில் நிலையானதென்பது 'மனிதநேயம்' மட்டுமே.

ஆக இந்த உலகில் மனிதன் எப்படிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் அடிப்படை தேவை பணம்.

அறிவையும் ஆற்றலையும் மூலதனமாக வைத்து பணம் சம்பாதிக்கின்ற மனிதன் காலமெல்லாம் சம்பாதித்துக் கொண்டே இருக்க முடியாது அரசுத் துறைகளிலோ மற்ற துறைகளிலோ வயது வரம்பின் அடிப்படையிலேயே வேலை. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கும் எல்லா காலமும் ஒன்றாக இருப்பதில்லை. இதற்கு இடையில் கூட தன்னால் தன் சுற்றத்தால் எத்தனையோ தேவைகள்.

இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மனிதனுக்கு தேவை சேமிப்பு. இந்த சேமிப்பு பல வழிகளில் இன்று மக்களால் கையாளப்படுகிறது. மத்திய மாநில அரசுகள் அறிவிக்கின்ற

பயனுள்ள சேமிப்பு திட்டங்கள், அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் வங்கிகள். ரிசர்வ் வங்கி 'உத்தரவாதம் பெற்ற பொருளாதார நிறுவனங்கள் இவற்றின் மூலமும் நாம் சேமிக்க முடியும்.

வருவாயைப் பெறுக்கும் உத்திகளில் பலர் தங்களது பணத்தை நிலம், தங்கம், கம்பெனிபங்குகள், வியாபாரம் போன்ற பல்வேறு துறைகளில் முதலீடு செய்து லாபம் ஈட்டுகின்றனர். ஆனால் இத்தகைய முதலீடுகளுக்கு ஆரம்பத்திலேயே பெருந்தொகை தேவைப்படுகிறது. பெருந் தொகையோடு ஆரம்பிக்கப்படும் இவ்விஷயங்களிலும் அநேக கஷ்டங்களும், எதிர்பாராத திருப்பங்களும், போட்டிகளும் ஏற்படும் வாய்ப்புகள் மிக அதிகம். அம்மாதிரிக் காலங்களில் நமது முதலீட்டுக்கு முழு உத்தரவாதம் என்பது எள்ளளவும் இல்லை. மேலும் பெருந் தொகை முடங்கும் இவ்விஷயங்களில் சிறிது சுணக்கம் ஏற்பட்டாலும் அதன் விளைவுகள் கலக்கமுள்ளதாக இருக்கும். இம்மாதிரி வியாபாரங்களில் ஈடுபட்டிருப்பவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாக இருக்குமே தவிர பணச்சேமிப்பு மிகக் குறைவாகவே இருக்கும். எனவே இத் துறைகளில் உள்ளவர்கள் இறக்க நேரிடின், அவர்களின் குடும்பத்தினருக்கு வாழ்க்கை வசதிகள் தொடர்ந்து இல்லாமற் போவதால் இவ்விழப்பு ஒரு பேரிடியாக இருக்கும். கணவன் இருக்கும் வரையில் கட்டிய மனைவி, தொட்டில் பிள்ளை, உற்றார் உறவினர்களைக் கண் கலங்காமற் காப்பது கணவனின் கடமை. அதில் நிறைய புருஷார்த்தமும் உள்ளது. சேமிப்பின் முக்கியநோக்கம், நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஒரு சிறந்த பொருளாதாரப் பாதுகாப்பை உருவாக்குவதேயாகும்.

இன்று உலகில் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் மனித உயிர் உடலுக்கு மட்டுமல்ல கால் நடைகள், விவசாயம், வீடு, பொருட்கள், வாகனங்கள் என அனைத்திற்குமே இன்சூரன்ஸ் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் மனிதர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் (லைப் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா) மற்றவைகளுக்கு ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனமும் இந்திய அரசாங்கத்தால் பொதுத்துறை நிறுவனங்களாக மிகப்பெரிய அளவில் நடத்தப்படுகின்றன.

காயல்பட்டணம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் போன்ற பல்வேறு குடிநீர் திட்டங்கள் மின்சாரம், சாலை வசதி போன்ற சமுதாய நலத் திட்டங்களுக்கு LIC 1989 மார்ச் 31 முடிய 18000 கோடிரூபாய் முதலீடு செய்துள்ளது. இந்தியாவின் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு 27000 கோடிரூபாய் வழங்க உறுதி கொடுத்துள்ளது. பொதுமக்கள் LIC மூலம் வீடு கட்டிக்கொள்ள 25 லட்சம் வீடுகளுக்கு 3000 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய திட்டங்களில் சேமிப்பது நமது சுய தேவைக்காக மட்டுமல்ல அந்தப் பணம் முழுக்க மக்கள் நலத்திட்டங்களுக்கே பயன்படுத்தப்படுகிறது.

''அண்டை வீட்டார் பசித்துக் கொண்டிருக்கும் போது நன்றாக புசிப்பவன் என்னைச் சார்ந்தவனல்ல'' என்று குறிப்பிட்டார் முஹம்மது நபி அவர்கள்.

எனவே எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க அரசு திட்டங்கள் செயலாக்கம் பெற மக்களின் சேமிப்பு தேவை.

எனவே இத்தகைய சமூகப்பணிகள் வளர சேமித்து வாழ்வோம் மற்றவர்களையும் வாழவைப்போம்.

QUOTABLE QUOTATIONS

THUS SPAKE - PROPHET MUHAMMED

BY W.Z.A. SHAHUL HAMEED,

I - B.E., BANGALORE INSTITUTE OF TECHNOLOGY, BANGALORE.

The Apostle was in the midst of a crowd of his companions, and a camel came and prostrated itself before him. They said, "O Apostle of God beasts and trees worship thee; then it is meet for us to worship thee; prophet Muhumed said worship God, and you may honour your brother, that is me.

God hath not Created any thing better than reason, or any thing more perfect, or more beautiful than reason; the benefits which God giveth are on its by it, and God's wrath is caused by it and by it are rewards and punishments.

WORDS TO REMEMBER

"The best of alms in that which the right hand giveth, and the left hand knowth not of".

"Riches are not from abundance of worldy goods, but from a contended mind".

O Lord; grant to me the love of thee; great that I love those that love Thee; grant that I may do the deeds than win, The love; make Thy love dearest to me them self, family or wealth.

THUS SPAKE - PROPHET MUHAMMED,

ANECDOTES

A Brahmin member of the Harijan sevak sangh, who was highly respected for his excellent services to the cause of Harijans, gave an account of all that they do for Harijans, and asked, "What more do you expect us to do to serve the cause of Harijans?.

Prompt came the counter - question, "are you married"? "Yes" said member.

Gandhiji's face brightened up. He declared, "Well then, you should get your son married to a Harijan girl. Do you now understand what more I expect you to do"?.

ANEDCOTES GANDHIJI.

EINSTEIN - ALBERT. 1879-1955

I NEVER THINK OF THE FUTURE. IT COMES SOON ENOUGH. INTERVIEW 1930.

Why does this magnificient applied science which saves work and makes life essier bring us so little happiness? The simple answer runs; Because we have not yet to make sensible use of it only a life lived for other is a life worthwhile.

Youth, 1932

If my theory of relativity is proven successful, Germany will claim me as German and France will declare that I am a citizen of the world. Should my theory prove untrue, France will say that I am a German and Germany will declare I am a jew.

IMAGINATION IS MORE IMPORTANT THAN KNOWLEDGE ON SCIENCE.

Before God we are all equally wise equally foolish.

An empty stomuch is not a good political adviser.

COSMIC RELIGION
EINSTEIN, ALBERT, 1879-1955

QUOTATIONS:

1. Stolen sweets are best [The rival fools].

GIBBER COLLEY 1671-1757

2. The welfare of the people is the ultimate Law.

CICERO MARCUS TULLIUS 106 - 43 B.C.

3. Democracy means government by the uneducated while aristocracy means government by the badly educated.

NEWYORK TIMES 1931.

4 That man is wisest, who like socrates, realises that his wisdom is worthless. Apologia of socrates.

PLATO, c - 429 - 347 B.C.

5. A thing of beauty is a joy for ever; loveliness; It will never pass into nothingness.

KEATS, JOHN - 1795 - 1821

6. Heaven cannot brook two suns, nor earth two Masters.

ALEXANDER THE GREAT. 356-323 B.C.

7. The roots of education are bitter, but the fruit is sweet.

DIOGENES LAERTIUS. 384-322 BC. ARISTATLE.

8. [of Medicine]. The Life so short, the art so long to learn, apportunity fleeting, experiences treacherous, judgement difficult. APHORISMS I.

HIPPOCRATES - C - 460 - 357 BC,

HUMORUR

"So, YOUR SON IS STILL GOING TO COLLEGE:-

a man remarked to another. "What is he going to be when he finally graduates?"

Replied the second : " Old ".

THE SIGN in the store Window read; NO HELP WANTED. As two men pessed by, On said to the other, "You should apply - You" be great".

HEADLINE of a Tribune article on the fruit industry's problems; " Apple growers may find themselves in a jam.

MECHANIC to customer : "I" m afraid you have more of a problem than I anticipated. Your battery needs a new car".

"Is Mrs. MINU at home?" asked the man, I'm so sorry to tell you that she is not here".

"Why are you so sorry?" "Because I don't like to tell lies."

News item in a magazine "The pope is Scheduled to beautify a Priest.

TEACHER : "What do we call a person Who goes on talking long after others have lost interest in what he says?".

"Teacher," said a student.

In The class test the students were asked to give one word for "Occuring the same time". "Twins," answered One Pupil.

On his opinion of heaven, Astronomy professors "After spending my life pondering the mysteries of existence and the universe, I hope heaven will be place where I can say, 'O kay, I group. What was the answer?



W.Z.A. SHAHUL HAMEED

TIMUR RUBY (SPINEL RUBY சிகப்பு கிரிஞ்சி)
KHIRAJ - I-ALAM (TRIBUTE OF THE WORLD)

இதுவும் ஒரு (Red Spinel) சிகப்பு கிரிஞ்சியே. 600 வருட கால சரித்திரத்தை உடையதாகும். இதே போன்று மூன்று சிறிய கிரிஞ்சி சிகப்புக்களும் சில முத்துக்கள்-பச்சைகளும் 1851-ம்வருடம் விக்டோரியா மகாராணிக்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் அன்பளிப்பாகஅளிக்கப்பட்டது. உலகில் இதுவே பெரிய எடை (352 காரட், 361 மெட்ரிக் காரட் கல்லாகும். மற்ற கற்கள் 94 (96) 72 (74) and 34 (35) காரட் உடையதாகும். பெரிய (சிகப்பு கிரிஞ்சி) Timur Ruby ல் பார்சியிலும், அரபியிலும் எழுதப்பட்டிருக்கிறது. அரசர்களுக்கெல்லாம் அரசர் சுல்தான்சாகிப் கிரான் அவர்களின் இருபத்தையாயிரம் ஜுவல்ஸ்களுக்கு மத்தியில் சிறந்த ஒன்றாயிருந்தது என்றும் ஹிஜ்ரி 1153 (AD 1740) ஆண்டுக்கு ; ஹிந்துஸ்தானிலிருந்து இஸ்பஹான் (ஈரானுக்கு) வந்தடைந்தது என்றும் எழுதப்பட்டிருக்கிறது,

மற்றும் பல மன்னர்களின் பெயர்களும் பார்ஸி (Prsian) லிபியிலும் எழுதப்பட்டிருந்தது. அக்பர்ஷா; ஜஹாங்கீர்ஷா 1021 (AD1612); சாகிப் கிரான் ஸானி 1038 (AD 1128); ஆலம் கீர்ஷா 1070 (AD 1659); பாதுஷா காஜி முகம்மது பாரூக் சியார் 1125 (AD 1713) அஹமது ஷா துர்-யி-தவுரானி 1168 (AD 1754), என்ற பெயர்கள் எழுதப்பட்டிருகின்றன. இந்த தைமூர்ரூபி (சிகப்பு கிரிஞ்சி) தைமூர் அரச பரம்பரை தகுதியிழந்தபின், ஷா அப்பாஸ் ஸபவி அரச பரம்பரைக்கு வந்து மொகலாய சக்கரவர்த்தி ஜஹாங்கீர் சக்கரவர்த்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டு மொகலாய பேரரசு பலஹீனமடைந்தபின் முகம்மது ஷாவிடமிருந்து நாதிர்ஷா விடம் ஈரான் சென்று நாதிர்ஷா அரச பரம்பரை பலஹீனமடைந்தபின் லாகூர் மன்னன் ராஜா ரஞ்சிங் கைக்கு வந்து கிடைத்தது. ராஜா ரஞ்சித்சிங்கிடமிருந்து வெள்ளை ஏகாதிபத்தியத் திற்குக் கிடைத்தது.

St. EDWARD'S SAPPHIRE நீலம்

பிரிட்டிஷ் அரசு சேமிப்பில் இந்த நீலம் மிகவும் பழைமையானது. இந்த நீலம் பதினேழாம் நூற்ருண்டில் ரோஸ்கட்டாக வெட்டப்பட்டு பட்டம் தீட்டப்பட்டது. இந்த நீலம் மோதிரத்தில் கட்டப்பட்டு Edward the confessor பட்டம் ஏறியது போது (கி.பி. 1042) அணிந்திருந்தார்.

STUART OR CHARLES II's SAPPHIRE நீலம்

$1\frac{1}{2} \times 1$இஞ்ச் (3·8 by 2·5cm) அளவுள்ள நல்ல நீலம் — சார்லஸ் 11 விற்குக்கிடைத்தும், ஜேம்ஸ் 11 பிரான்சிற்குப் போனபோது 1688ல் கொண்டு சென்ருர். அவர் மகன் ஜேம்ஸ் எட்வர்ட், அவர்மகன் ஹென்ரிபெனடிக் cardinod york அதன்பின் George 111க்கு மற்ற செல்வங்களுடன் இந்த நல்ல நீலமும் கொடுக்கப்பட்டது. விக்டோரியா மகா ராணியின் cornation போதும், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் cornation போதும் இந்த நீலம் முக்கியத்துவ மடைந்தது.

EDWARD'S RUBY சிகப்பு மாணிக்கம்

சுதந்திரப் புரட்சியின் சமயம் இந்தியாவில் ஆட்சியை நிலை நிறுத்தியது புத்திசாலித்தன மாகவும், ஆட்சித்திறமையுடனும், மக்களின் அன்பைப் பெற்றும் சினேகித்தன்மையால், ஆப்கானிஸ்தானிலும் - பஞ்சாபிலும் அமைதியை நிலை நிறுத்தியும் இந்து தீரத்தில் ஆட்சியை செய்த Major General Sir Herbert Benjamin Edwards K.C.B, C S.I. (1819-68) என்பவரின் ஞாபகார்த்தமாக 1887ல் John Ruskin என்னும் கனவானால் வாங்கப்பட்டும், இந்த அழகிய சிகப்பு கிரிஸ்டல்-The mineral Gallery of the British Musium (Natural History) ல் பார்வைக்கு வைக்கவும் கொடுக்கப்பட்டது. மிக நல்ல தெளிவான நல்ல சிகப்பாக இருந்த இதன் எடை 167 மெட்ரிக் காரட் (Nearly 1 oz)

DEVONSHIRE EMERALD மரகதப்பச்சை

Don Pedro பிரஜீலின் சக்கரவர்த்தி, தனது பதவி இளப்பிற்குப்பின் ஐரோப்பாவிற்கு வந்தபின் 1831ல் Sixth Duke of Devonshire க்கு ஒரு பெரும் இயற்கை கிரிஸ்டல் பச்சை (Emerald) கொடுத்தார். பிரசித்தி பெற்ற Muzo சுரங்கத்தில் (Colombia-South Amerlca) கிடைத்த இந்த மரகத-தளம் நிறைய பழுதுடையதாயிருந்தது. அதன் அளவு 2 இஞ்ச் (51mm) × 2 இஞ்ச் (51mm) ஆகவும், எடை 1383·95 மெட்ரிக்காரட் எடை (Nearly 10 oz) யுடையதாகவும், அதன் நிறம் நல்ல பச்சையாகவும், நல்ல ஜாதி பச்சையாகவுமிருந்தது.

HOPE CHRYSOBERYL பசுங்கிளை

சுத்தமான பஞ்சள் கலந்த பச்சை கலர் பசுங்கிளை 45 மெட்ரிக் காரட் உடையதாக-நல்ல பட்டம் தீட்டப்பட்டதாகவுமிருந்தது. இது அபூர்வகல்களிலொன்றாகும்.

ஜாதி (வில்ஜாதி) கல்களில் 3000 (மூவாயிர) ரக கற்களிருக்கின்றன. இவைகளில் 200 [இருநூறு] வகை-கல்களே பாவனைக்குரிய ரத்தினக்கற்கள் வகையில் வரும். இவைகளில் ஜாதி

காயல்பட்டணம் நாட்டாண்மை முஸ்லிம்
முத்துச் சாவடிகள்

★ அல்ஹாஜ் M. S. M முஹம்மது பாஸுல் அஷ்ஹப் ★
[தலைவர், நெல்லை சிதம்பரனார் மாவட்ட முஸ்லிம் சமுதாய நலச்சங்கம்]

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்ட வான்புகழ் பெருநகராம் காயல்பட்டணத்து மக்கள் வாணிபத்தில் சிறந்து விளங்குபவர்கள். இன்றைக்கு கடல்கடந்து பல நாடுகளிலும் பரவி தொழில் செய்யும் இம் மக்கள் தலைமுறை தலைமுறையாக ரத்தின வியாபாரிகளாக தொழில்செய்து வருபவர்கள். ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே அரபு உலகத்துடன் காயலுக்கிருந்த வாணிபத் தொடர்புகள் வரலாற்றுக் கலாச்சார பெருமை வாய்ந்த செய்திகளைச் சொல்லிக் காட்டுகின்றன.

நவரத்தினங்களாக சிறப்புபெற்ற வைரம், வைடூரியம், சிகப்பு, பச்சை, நீலம், புஷ்பராகம், கோமேதகம், முத்து, பவளம் இவற்றில் முத்தும் பவளமும் கடலிலிருந்தும் மற்றவை பூமியிலிருந்தும் எடுக்கப்படுகின்றன.

சிறந்த துறைமுகமாக பண்டைய காலத்தில் விளங்கிய காயலிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டமுத்துக்கள் சர்வதேசத்தில் எத்தனையோ அரியாசனங்களை அலங்கரித்துள்ளன.

'முத்துவாப்பா' என்ற பெயர் அதிகமக்களுக்கு சூட்டப்பட்டுள்ள ஊர் காயல்பட்டணமே ஆகும். இப்பெயரில் இருபெரும் மகான்கள் இந்நகரில் அடங்கப்பட்டுள்ளனர்.

இரத்தின வியாபாரிகளான காயல்பட்டண முஸ்லிம்கள் தங்கள் தொழில் நிமித்தம் பல்வேறு ஊர்களுக்கு செல்லும் போது அந்தந்த ஊர்களில் சில பல நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பலனாக பல்வேறு ஊர்களில் காயல்பட்டணம் நாட்டாண்மை முஸ்லிம் முத்துச் சாவடிகள்'' ஏற்படுத்தப்பட்டுள்ளன. காயல்பட்டணத்தை பூர்வீகமாகக் கொண்டு இங்கேயே பிறந்து வாழ்கிற காயல்பட்டணம் முஸ்லிம்கள் அனைவருக்கும் இந்த சாவடிகள் சொந்தம்.

நமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், தேவகோட்டை, பாளையங்கோட்டை உள்ளிட்ட 32 இடங்களில் இந்த முத்துச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை தனியார் ஆக்ரமிப்பில் போய்விட்டன. அப்படி ஆக்ரமிப்புகளுக்கு ஆளானவைகளை மீட்க வேண்டும், கைவசம் உள்ளவற்றை காப்பாற்றி பராமரித்து அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற பேரார்வம் ஏற்பட்ட காரணத்தால் அதற்கான முயற்சியில் ஈடுபட்டோம்.


ஹாஜி M.S.M.பாஸுல அஷ்ஹப்

எம்முயற்சி துவக்கப்பட்ட போது மதுரை முத்துச்சாவடி மட்டுமே நம் கைவசம் இருந்தது. மதுரை முத்துச்சாவடி பிரபலமானது. 1720-ம் ஆண்டிலேயே இந்த சாவடி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மதுரை 30, கீழ வெளி வீதியில் 40 X 40 அளவில் போக்குவரத்து வசதியான இடத்தில் இது அமைந்துள்ளது. சில லட்ச ரூபாய் பெறுமானமுள்ள இந்தசாவடியில் 3 கடைகளும், சமையல் வசதியுடன் உள்ளே தங்கும்விடுதியும் உள்ளது. இதைப் புதுப்பித்து கட்டினால் சிறப்பான வருவாய் கிடைக்கும்.

மதுரை முத்துச்சாவடியில் கடந்த 23—10—1983ல் கூட்டம் நடத்தி முத்துச்சாவடிகளை நிர்வகிக்கும்பொறுப்பை காயல்பட்டணம் முஸ்லிம்கள் என்னிடம் ஒப்படைத்தனர். அப்போதைய இருப்பு ரூபாய் 2015-71 ம் என்னிடம் தரப்பட்டது. அதன் பின்னர் மற்ற ஊர்களின் முத்துச் சாவடிகளை ஆக்ரமிப்பாளர்களிடமிருந்து மீட்க முயற்சி மேற்கொண்டேன்.

நாகர்கோவில் ஆசாத் ரோட்டிலுள்ள முத்துச்சாவடியை நமது ஊர் தீவுத்தெரு, ஜனாப் செய்யது அபுதாஹிர் அவர்கள் தாமாகவே முன்வந்து என்னிடம் ஒப்படைத்தார். அதில் கட்டிட வேலைகள் பார்த்து பராமரிக்கப்பட்டு வருகிறது. அச்சாவடியின் வெளியே இரண்டு பெட்டிக் கடைகள் உள்ளன. லட்சக்கணக்கான ரூபாய் பெருமதி இச்சாவடி பெறும்.

திருநெல்வேலி டவுனில் குற்றாலம் ரோட்டில் 1898 லேயே முத்துச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் இது அரபி முஹம்மது அப்துல் ரஹ்மான் என்பவரால் ஆக்ரமிப்பு செய்யப்பட்டிருந்தது தற்போது இதன் உள்வீட்டில் இவரது மகன் அகமது அரபி என்பவர் ஆக்ரமிப்பு செய்துள்ளார். இதை அவரிடமிருந்து மீட்பதற்கு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த உள்வீட்டைத்தவிர மற்ற பகுதிகள் வெளிப்புற கடைகளும் அதைச் சேர்ந்த நிலங்களும் மீட்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் மாதம் ரூபாய் 240 வாடகையாக கிடைக்கிறது. இந்த இடத்தின் தற்போதைய மதிப்பு ரூ 3 லட்சமாகும்.

பாளையங்கோட்டை பழைய லைன் பள்ளிவாசல் தெருவில் முத்துச்சாவடி அமைக்கப்பட்டு 1888 செப்டம்பர் 4-ம் தேதி பத்திரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தற்போது மாற்று சமூகத்தை சேர்ந்த தனிநபர் ஒருவரின் ஆக்ரமிப்பில் உள்ள இதனை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர சென்னையிலுள்ள முத்துச் சாவடியை மீட்பதற்கும் திருச்சி, தேவக்கோட்டை போன்ற இடங்களிலுள்ள முத்துச்சாவடியை மீட்பதற்கும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் மீட்கப்பட்டுள்ள முத்துச்சாவடிகளை பராமரிக்கவும் அது தொடர்பான வேலைகளை முறைப்படுத்தவும் வேண்டும். தனிநபரால் மட்டுமே இதை செயல்படுத்த வேண்டுமென்பது சாத்தியமற்றது. ஊர்நலனில் ஆர்வமுடைய அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு தருவது அவசியம். இதற்காக ஒரு சங்கம் அமைத்து செயல்படுவது சாலச்சிறந்தது என உணர்ந்து அச்சங்கம் அமைக்கப்பட்டது.

"காயல்பட்டணம் நாட்டாண்மை முஸ்லிம் முத்துச்சாவடி" என்ற பெயரில் காயல்பட்டணம் மெயின்ரோடு வாவு பில்டிங்கை அலுவலகமாகக் கொண்டு 1989 டிசம்பர் 19-ம் தேதி தூத்துக்குடி சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் 1975-ம் ஆண்டின் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டப்படி S. No. 71 of 1989 எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொழில் அபிவிருத்தி, தொழிற்சாலை அமைத்து திறமையுள்ள இளைஞர்களை ஊக்குவிப்பது, ரத்தினக்கற்களுக்கு பட்டை தீட்டுதல் மற்றும் அது தொடர்பான வேலைகள், தொழிற்கல்வி வளர்ச்சி போன்றவைகளை சங்கத்தின் நோக்கங்களாகக் கொண்டு முத்துச்சாவடிகளை பராமரிப்பது, அபிவிருத்தி செய்வதற்காக இச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கம் அமைக்கப்பட்டபின் முத்துச்சாவடிகளின் வருமானம் ரூபாய் முப்பதாயிரத்தை தாண்டியுள்ளது. இச்சங்கத்தின் பெயரில் காயல்பட்டணம் மதுரை வங்கியில் கணக்கு வைக்கப்பட்டு வரவு செலவுகள் கவனிக்கப்படுகின்றன. கடந்த 1—3—1990-ல் சங்கக் கூட்டம் நடைபெற்று இச்சங்கப்பணிகள் முழுவீச்சில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் பணி நிறைவாக வெற்றியடைய காயல்பட்டணம் நலனில் அக்கறையுடைய அனைவரின் ஒத்துழைப்பும் ஆலோசனையும் என்றும் வேண்டுகிறோம்.

"காயல்பட்டணம் நாட்டாண்மை முஸ்லிம் முத்துச்சாவடி" களை நிர்வகிக்க

ஜனாப் ஹாஜி **M. M. உவைஸ்** அவர்கள்
தலைவராகவும்

ஜனாப் ஹாஜி **L. K. ஷெய்கு முஹம்மது** அவர்கள்
ஜனாப் ஹாஜி **V. M. S. லெப்பை** அவர்கள்
ஜனாப் ஹாஜி **வாவு மொகுதூம் முஹம்மது** அவர்கள்
ஆகியோர் துணைத்தலைவர்களாகவும்

ஜனாப் ஹாஜி **L. S. இபுராகிம்** அவர்கள்
ஜனாப் ஹாஜி **S. T. வெள்ளைத்தம்பி** அவர்கள்
ஆகியோர் கூட்டுச் செயலாளர்களாகவும்

ஜனாப் ஹாஜி **M. S. M, பாஸுல் அஷ்ஹப்** அவர்கள்
பொருளாளராகவும்

ஜனாப் ஹாஜி **P. A. முஹ்யித்தீன்** அவாகள்
ஜனாப் ஹாஜி **அப்துல் ஜலீல்** அவர்கள்
ஜனாப் ஹாஜி **M. A. முகம்மது சுலைமான்** அவர்கள்
ஜனாப் ஹர்ஜி**S.N.சுல்தான்அபதுல்காதர்** அவர்கள்
ஜனாப் ஹாஜி **S M. பாஸி** அவர்கள்
ஜனாப் ஹாஜி **குளம் சாமு** அவர்கள்
ஜனாப் ஹாஜி **சி. லெ. ஷாகுல் ஹமீது** அவர்கள்
ஜனாப் ஹாஜி **S. A, முஹ்யத்தீன் தம்பி** அவர்கள்
ஜனாப் ஹாஜி **K. S. M. T. மரைக்காயர்** அவர்கள்
ஜனாப் ஹாஜி **கதீபு உமர் அப்துல் காதர்** அவர்கள்

ஆகியோர் நிர்வாகிகளாகவும் பொறுப்பேற்று உள்ளனர்.

பயனுள்ள இந்த மலரில் காயல்பட்டணத்தின் வரலாறு மட்டுமின்றி எல்லா செய்திகளும் இடம்பெற லேண்டுமென்பதில் குறியாக இருந்தேன்.

இன்றிருக்கும் பலருக்கும் தெரியாமல் இருக்கும் முத்துச்சாவடிகள் பற்றிய செய்திகள் வருங்கால தலைமுறையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அது இம்மலரில் இடம்பெற வேண்டுமென்ற நோக்கோடு கண்ணியமிக்க **ஹாஜி M. S. M. பாஸுல் அஷ்ஹப்** அவர்களிடம் விவரம் கேட்டேன். அவர்கள் தந்த தகவல்களை இக்கட்டுரையில் காண்கிறீர்கள்.

காயல்பட்டணம் முஸ்லிம்களுக்கான இந்த சொத்துக்களை காப்பாற்ற மேற்கொண்ட முயற்சிகளுக்காக அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் ஈடாகாது. இதற்காக அமைக்கப் படடுள்ள சங்கத்தின் பணிகளோடு நம்மையும் ஈடுபடுத்திக்கொள்வது நகர்நல விரும்பிகளின் கடமையாகும்.

காயல்வாசிகளுக்காக சென்னை, திருவனந்தபுரம், திருச்சி போன்ற ஊர்களில் இச்சாவடிகள் அமைப்பது மிகுந்த பலனைத்தரும். திருநெல்வேலி டவுனில் இருப்பதைவிட நெல்லை சந்திப்பில் இது அமைந்தால் நம்மவர்க்கு நன்மை அதிகம்.

இதிலிருந்து கிடைக்கும் வருமானம் எந்த காலத்திலும் தனிப்பட்ட எந்த அமைப்பிற்கும் சென்று விடாமல் ஊரின் அனைத்து முஸ்லிம்களின் பொது நன்மைக்கும் உதவக்கூடியதாக அமைய வேண்டும்.

படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கும் நமதூர் பிள்ளைகளின் வேலை வாய்ப்பிற்கு தொழிற்சாலை அமைப்பதையும், தொழிற்கல்வி பயில்வதற்கு கல்லூரி நமதூரில் அமைப்பதற்கும் இச்சங்கமும் இதன் நிதியும் பயன்பட வேண்டும்.

சங்கம் இப்போதுதானே துவக்கப்பட்டுள்ளது நிதி எங்கே இருக்கிறது என்ற கேள்வி எழலாம். ஆனால் ஆற்றல்மிக்க பெருமக்களல்லவா இச்சங்கத்தை நிர்வகிக்கின்றனர். அந்த கண்ணியமிக்கவர்களின் திறமை தகுதியின் மீது எனக்குள்ள நம்பிக்கையின் காரணமாக இதனை கேட்கிறேன்.

— **"காயல்"**
(மலர் ஆசிரியர்)

HISTORICAL STONES

இரத்தின கற்கள்—உலகப் பிரசித்தமான இரத்தினங்கள்

V. M. S. M. அமீன் B.Com.,

ஹாங்காங்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

> ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்
> மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்''
> ''முத்துத்தொழில் கச்சைத்தொழில்
> மற்றெல்லாம் பிச்சைத்தொழில்''

இரத்தின கற்களின் உபயோகம் மனிதனின் ஏற்றமான வாழ்வின் போது தான் தேவைப் படுகிறது. மனிதனுக்கு முதல் தேவை உணவு, உடை, உறைவிடம். அதன்பின் சிறப்பான, செழிப்பான உயர்வை அடைந்தவனே 'முத்து' 'ரத்தினம்' என்ற தேவையை முதலீட்டை, சேமிப்பை சிந்திக்கிறான். வாழ்க்கையின் உச்சகட்ட அந்தஸ்தையுடையவர்களே ரத்னகற்களை வைரத்தை மரகதத்தை மாணிக்கம், ஆகிய ரத்தினத்தை தன் அழகு பொருளாய், செல்வமாய் சேமிப்பாய் கருதுகிறுர்கள்.

உணவு உடை குடியிருக்க வீடு, இவைகளை அடைந்து உழைப்பால் உயர்ந்து செல்வத்தைப் பெற்றவர்கள், சொத்து சுதந்திரம் பெற்றவர்களாய் தனது செல்வச் சேமிப்பாய் இரத்தினக் கற்களை சேமிப்பவராகிறார்கள். தனது சேமிப்பை தங்கத்தாலான வெள்ளியிலானபொருளிலும், பெண்கள் அணிகலனாகவும் சேமிப்பாய் பெறுகிறுர்கள். முற்கால மன்னர்களும் நவரத் தினங்களிலும் உயர்ந்த மாணிக்கங்களிலும் சேமிப்பைச் செய்தார்கள்.

மேல் நாட்டவர்களில் மிகப்பெரிய தகுதியை அடைந்தவர்கள். மிக உயர்ந்த தனிக் கல்களாய் பெயர் பெற்ற வைரங்களை இரத்தின கற்களை சேமிப்பவர்களானார்கள். இரத் தினங்களில் ஜாதிக்கல்கள் - வில்ஜாதிகல்கள் (PRECIOUS-SEMIPRECIOUS) என்னும் ரகங்களும் நமது வீதிகளுக்குப் பயன்படுத்தும் (GRANITE) மற்றும் மென்மையான TALC - SOAP STONE போன்ற இனம் மற்றும் முத்து பவளம் அம்பர் போன்றவைகளும் (நூற்றுக்கணக்கான இன கற்கள்) இரத்தினகற்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அந்தந்த இனங்களின் கடினத் தன்மை HARDNESS (SPECIFIC GRAVITY, REFRACTIVE INDEX and CRYSTAL FORM) களினாலும் இனங்கள் பிரிக்கப்படுகின்றன.

1. DIAMOND : வைரம் .... கடினம் 10
2. CORUNDUM : சிகப்பு, நீலம், மஞ்சள், பச்சை, வெள்ளை (Ruby. Blue Sapphire, Yellow Sapphire, Green Sapphire, White Sapphire),, 9
3. CHRYSOBERYL : பசுங்களை Alexandrite etc ,, 8½
4. SPINEL கிரிஞ்சி TOPAS தோபாஸ் முதலியன ,, 8



V.M.S.M. அமீன் B. com ,
காயல்பட்டணம்.

5. BERYL, ZIRCON, ANDALUSITE, TOURMALINE GARNET, AQUAMARINE பச்சை, இரத்தின கோமேதகம் பச்சைப்படியம் முதலியன ,, 7½
6. QUARTZ, AMETHYST, CITRINE, HAWKS EYE, TIGER EYE, AVENTURINE PERIDOT, JADE, CHALCEDONY etc ,, 7
7. CHRYSOPRASE, HELIOTROP (Blood Stone) JASPER, AGATE, SPODUMEN, ZOISITE etc ,, 6½
8. OBSIDIAN (Volcaric glass), FELDSPAR ADULARIA (Moon Stone) SUN STONE HAEMATITE (Black Blood Stone) ORTHOCLASE etc ,, 6
9. OPAL, LAPIZ LAZULI, SPHENE etc , 5½
10. GLASS (Natural Glass) APATITE etc ,, 5

11. FLOURITE, RHODO-CHROSITE etc கடினம் 4½
12. MALACHITE, FLOURSPAR, PEARL (முத்து) etc ,, 4
13. JET, CORAL (பவளம்) etc ,, 3½
14. CHRYSOCOLA, CALCITE etc ,, 3
15. AMBER (FOSSILIZED RESIN), SERPENTINE, MEERCHAUM etc ,, 2½
16. GYPSUM ,, 2
17. TALC (SOAP STONE) ,, 1

நவரத்தினங்கள் (ஒன்பது ரத்தினங்கள்)

நமது நாட்டில் நவரத்தின மோதிரம் - பெண்டண்ட்யென அணிகிறார்கள். இந்த நவரத் தினங்களில் ஜாதி - வில்ஜாதி இனங்களுமுண்டு.

வைரம், சிகப்பு, பச்சை, நீலம், புஷ்பராகம் (வெள்ளை அல்லது மஞ்சள்), கோமேதகம் வைடூரியம், முத்து மற்றும் பவளம் என்பன நவரத்தினங்களாகும். இதில் பவளமும் - முத்தும் கடலிலிருந்தும், மற்ற ஏழு ரத்தினங்களும் பூமியிலிருந்தும் பெறப்படுபவையாகும்.

நல்ல பச்சை (மரைக்கார் பச்சையென்ற உயர்ந்த பச்சை) நல்ல சிகப்பு (மாணிக்கம்) அபூர்வமாகக் கிடைப்பவையாகும். வைரம் ஏராளமாய் கிடைத்த போதிலும், மேலே கண்ட பச்சை(மரகதம்)சிகப்பு ஆகியவற்றுடன் சேர்ந்து அடுத்துஉயர்மதிப்பு பெற்றதாக விருக்கின்றன.

வைரம் நீங்கலாக மற்ற எல்லா இனங்களிலும் ஒருநூலைக்கொண்ட(Catseye)வைடூரியமும் ஆறுநூற்களைக் கொண்ட Star Stone கிடைப்பதுண்டு. Chatoryont Effect - Chotoyancy-கல்லின் அடிப்பக்கம் நசனை ஏற்படுவதால் ஒரு நூல் ஏற்பட்டு வைடூரியமாகவும், Rutile - Asterisks effect Asterism நசனை கல்லின் அடிப்பக்கம் ஏற்படுவதினால் ஆறு நூல் கல்களும் கிடைக் கின்றன.

பொதுவாக Catseye- வைடூரியம் என்பது Touramaline வைடூரியமும் Chrysobryl பசுங்களை வைடூரியம் இனங்களே உயர்ந்த விலையை உடையதாகும். அதிலும் பசுங்கிளை வைடூரியம் மிகுந்த உயர்விலையை உடையதாகும். மற்றஇனங்களில் ஏற்படும் வைடூரியங்கள் மிகக் குறைந்த விலையுடையதாகும்.

ஆறு நூல்கல்களில் Corrundum இனத்தைச் சேர்ந்த சிகப்பு ஆறுநூல் நீல ஆறு நூல் கல்களே உயர்ந்த விலையுடையதாகவும், அதிலும் சிகப்பு ஆறு நூல் மிக விலையையுடையது மாகும். மற்ற இனங்களில் கிடைக்கும் ஆறு நூல் கல்கள் மிகவும் குறைந்த விலையையுடைய தாகும்.

நூல்கல்ளில் சிலகல்கள் பன்னிரண்டு நூலுடையதும் கிடைப்பதுண்டு.மிக அபூர்வமானதா கவே கிடைக்கும்.

உலகத்தில் மக்களால் உபயோகப்படுத்தப்படும் இரத்தின கற்களில் 95·/. வைரமாகும். மற்ற எல்லா ஜாதி - வில்ஜாதி (Precious - Semiprecious) கல்களுஞ் சேர்ந்து மக்களால் பாவிக் கப்படுவது. 5·/. தானாகும். Monetary Unit பணமதிப்பு விகிதத்தில் பார்த்தாலும் அந்தப்படியே ஏறக்குறைய 90·/.; 10·/. விகிதத்தில் தானாகும். உலக மக்களால் விரும்பி அதிகம் பாவிக்கப் படுவது வைரமே. இந்தியா மற்றும் ஆசிய நாடுகளில் வைர நகைகள் தங்கத்தால் செய்யப்பட்ட நகைகளும், மேலைய நாடுகளில், ஐரோப்பிய அமெரிக்கநாடுகளில் பெருப்பாலும் PLATINUM வெள்ளைத்தங்கத்தில் செய்யப்பட்ட வைர நகைகளும் பாவிக்கின்றனர். ஜாதி-வில்ஜாதி இனங் களும் மேலேகண்டபடியே தங்கம்-வெள்ளை தங்கத்தால் செய்யப்பட்டதாகவே பாவிக்கிறுர்கள்.

நமது தாய்திரு நாட்டில் எல்லா இனஇரத்தின கற்களும் (குறிப்பாக பெரும்பான்மையான இனஜாதி - வில்ஜாதி கற்கள்)' கிடைக்கின்றன. உலகப்பிரசித்தமான -சரித்திரத்தையுடைய-மிக உயர்ந்த அபூர்வ வைரங்கள் - ஐரோப்பிய நாடுகளில் தனி நபர்களின் சேமிப்பாய் சில அரசு சேமிப்புக்களிலும் 'பழமையான பொருளாய்' பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் வைரங்கள் இந்தியாவில் கிடைத்தவையே.

இந்தியாவின் வைரங்கள் :

KOHINOOR DIAMOND :

ஒளிமலை வைரம் - இந்தியாவின் கொல்கொண்டா (ஹைதராபாத் - தற்போதைய) ஆந்திர மாநிலத்திலுள்ள சுரங்கத்தில் எடுக்கப்பட்டது. அதன் ஆரம்ப எடை 800 காரட் ஆகும். மொகலாய மன்னர்களிடமிருந்தும் சாஜஹான் சக்கரவர்த்தியால் (1628 - 1659) தனது சிம்மாசனம்-மயில் ஆசனத்தில் பதிக்கப்பட்டது. 1739-ல் பெர்சியாவின் மன்னர் நாதிர்சாவால், டில்லி மன்னர் அஹமது சாவிடமிருந்து கவர்ந்து தனது தலைநகர் இஸ்பஹானுக்கு கொண்டு சென்றார். 1747-ல் நாதிர்சா கொல்லப்பட்டபின் ஆப்கானியமன்னர் அஹமது அப்தாலியிடம் போய்ச் சேர்ந்தது. அவர் மகன் தைமூர் (நொண்டி தைமூர்) தனது தலைநகரை காந்தஹாரிலிருந்து காபூலுக்கு மாற்றும் போது காபூலுக்கு எடுத்துச் சென்றார். தைமூரின் மக்களுள் பட்டம் ஏறி ஒன்றன்பின் ஒன்றாய் நீக்கப்பட்டும் - சுஜாவுல் முல்க் பதவி இழந்து நாடு கடந்து லாகூர் மன்னன் ராஜா ரஞ்சித் சிங்கிடம் அடைக்கலம் அடைந்தபின் கோஹினூர் வைரமும் ராஜா ரஞ்சித் சிங்கினுடைய தாயிற்று.

1849-ல் ஈஸ் இந்தியா கம்பெனி (வெள்ளை ஏகாதிபத்தியத்துடன்) இணைக்கப்பட்டபின் கோஹினூர் வைரம் லாகூர் (TOSHAKANA) பொக்கிசத்திலிருந்து ஏகாதிபத்தியத்திற்கு மாற்றப் பட்டது. 1850 ஜுன் 3-ம்தேதி Lord Dulhousie யால் விக்டோரியா மகாராணிக்கு அன்பளிப்பாய் கொடுக்கப்பட்டது. 1851-ம் வருடம் லண்டன் மாநகரில் நடந்த கண்காட்சியில் இந்த வைரம் காட்சிக்காக வைக்கப்பட்டது. 1852-ம் வருடம் இந்த வைரம் மீண்டும் நல்லபடி பட்டம் தீட்டப்பட்டு 191 காரட்டிலிருந்து 108.9 கியாரட் வைரமாக்கப்பட்டு ராணி விக்டோரியாவின் புரோச்சில் பொருத்தப்பட்டது. ராணியின் மரணத்திற்குப் பின் அந்த வைரம் பிரித்தானிய அரசு முடி (CROWN) அணியில் பதிக்கப்பட்டது.

PITT or REGENT வைரம்

இந்த வைரம் கொல்கொண்டா வைரச்சுரங்கத்திலிருந்து 240 கிலோ மீட்டர் தொலைவில் கிருஷ்ணா நதி தீரத்தில் பார்ஸியல் வைரச்சுரங்கத்தில் 1701-ம் வருடம் கிடைத்தது பார்ஸி வர்த்தகர் ஜாம்சந்திடமிருந்து சென்னை செயின்ட்ஜார்ஜ் கோட்டையின் கவர்னர் வில்லியம்பிட் (William Pitt) 20,400 பவுனுக்கு வாங்கினார், அவர் இங்கிலாந்து திரும்பியதும் 410 கியாரட்டிருந்ததை 140.5 கியாரட்டாக (Perfect Brilliant) வெட்டி பட்டம் தீட்டினார். 1717ல் பிரான்-ரிஜன்ட் (Regent)க்கு 3750000 பிராப்பிற்கு விற்றார். (பவுன்135,000). அந்த வைரம் கிரீடத்தில் பதிக்கப்பட்டு 1722ல் தனது பட்டம் கட்டியபோது அணிந்தார். 1792 ஆகஸ்ட் 17ந் தேதி களவாடப்பட்டு விற்க முடியாத நிலமையில் திரும்ப வந்தடைந்தது. அதன் அளவு 30mm × 29mm × 19mm ஆகும்.

ORLOV—வைரம்

கொல்லூர் - கொல்கொண்டா சுரங்கத்தில் 17ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிடைத்தது. எடை 300 கிராத். சாஜஹான் சக்கிரவர்த்தியால் அழகிய பூ பட்டம் தீட்டப்பட்டது. மிகச் சிறந்த ஒளிவீசுவதாகயிருப்பதும் இதுநாள்வரை அப்படியே எந்த மாறுதலுஞ் செய்யப்படா திருப்பதும் சரித்திர முக்கியத்துவமுடையதாகும். உயரம் 22 mm நீளம் 33 mm அகலம் 31 முதல் 32 mm, எடை 199.6 கியாரட். நீல நிற பச்சை சாடை ஒளி உடையது. 1773ல் இளவரசர் கிரகொரி ஒர்லோவ் (Orlov) ரஷிய சக்கிரவர்த்தினி காதரைன் IIக்கு அன்பளிப்பாய் கொடுத்த இந்த வைரம் இப்போது ரஷியாவின் வைரக் கருவூலத்திலிருந்து வருகிறது.

DARYA-I-NUR (ஒளிக்கடல்) வைரம்

இந்த வைரம் Kollur சுரங்கத்தில் கிடைத்து மொகலாய சக்கிரவர்த்தியிடமிருந்தது. நாதிர்ஷாவால் கவர்ந்து செல்லப்பட்டு ஈரானிய அரசு கிரீடத்தில் பதிக்கப்பட்டிருந்தது. 1642ல் உலகம் சுற்றிய ஜீன் பாப்டிஸ்ட் டவர்னியர் குறிப்பிட்ட வைரந்தான் என 1791ல் ஹார்போர்டு ஜோன்ஸ் நம்பினார். இதன் எடை $176\frac{1}{8}$ (Mangeline) மஞ்சாடி அல்லது 244·5/16 பிரஞ்ச் காரட் (One Mangeline equivalent $1\frac{3}{8}$ French Carat) இரண்டு வைரமாக வெட்டப்பட்டது. 176 கியாரட்டில் ஒன்றும் மற்றது 67 கியாரட்டாகவுமிருந்தது. இளஞ் சிகப்பு சாடை நல்ல பிரிலியாந்து பட்டம் தீட்டப்பட்ட ஒளியுடைய வைரமாக ஈரானிய அரசு மாணிக்கங்களுடனிந்து வருகிறது.

SANCY வைரம்

பாதங்கொட்டை அமைப்பில் இளம் வெட்டாக வெட்டப்பட்ட வைரம் 1570ல் நிக்கோலஸ் ஹர்லாய் சிய்க்னர் டி சான்ஸி உதுமானிய சாம்ராஜ்ஜிய தலைநகர் கான்ஸ்டாண்டி நோபிலில் (தற்போதைய Istanbul) பிரஞ்சு நாட்டு தூதுவராக இருந்தபோது வாங்கப்பட்டது. பல அரசு குடும்பங்களுக்குள் மாறி கடைசியாக Louis XIV க்கு James II வால் விற்கப்பட்டு பிரான்ஸ் அணியுடன் பதிக்கப்பட்டிருக்கிறது. அதன் பதிவில் $53\frac{3}{4}$ கியாரட் 55 மெட்ரிக் கியாரட் என்றும், மதிப்பீடு 1,000,000 பிராங் (பவுண் 40,000) பதியப்பட்டிருக்கிறது.

SHAH வைரம்

கோல்கொண்டா சுரங்கத்தில் கிடைத்த இந்த வைரம் இள மஞ்சள் நிறமுடையது. பதினாறாம் நூற்றாண்டின் கடைசியில் ஏறக்குறைய சுரங்கம் மூடுங்காலத்திம் கிடைத்ததாகும். 95 கியாரட் எடையுடையதை மறுபடியும் பட்டம் தீட்டியதில் 88.7 சியாரட்டாகவாகியது. ஒரு பட்டையில் ஜிஜாம்ஷா 1000 (AD 1591) அடுத்ததில் ஜஹான் ஷா 1051 (AD 1641) மற்றதில் பத்ஹ் அலி ஷா 1242 (AD 1826) என்றும் பார்ஸி மொழியில் ஹிஜ்ரா வருடம் எழுதப் பட்டிருந்தது. பெர்ஷிய மன்னர் வசமிருந்து 1829ல் ருஷ்ய தூதுவர் சொல்லப்பட்டதற்கு நஷ்ட ஈடாக ஷாவின் மகனால் ரஷ்யாவிற்கு அளிக்கப்பட்டு இப்போது அந்த வைரம் ரஷ்ய வைரக் கருவூலத்திலிருந்து வருகிறது

AKBAR SHAH வைரம்

இந்த வைரத்தின் பட்டைகளில் ஒன்றில் ஷா அக்பர் ஹிஜ்ரி 1028 (AD 1618), மற்றொன் றில் ஷாஜஹான் 1039 (AD 1629) யென அரபியில் எழுதப்பட்டிருந்தது. ஒரு நூற்றாண்டு காணாமல் போன வைரம் துருக்கியில் மாற்றுப்பெயர் ஆடுமேய்ச்சி இடையன் Shepherd Stone என்ற பேரால் காணப்பட்டது, 1866ல் Drop formல் தொங்கோட்ட அமைப்பில் வெட்டியத னால் இரு சக்கிரவர்த்திகளின் பெயரும் எழுதப்பட்டிருந்தது மறைந்தன. இந்த வைரம் இந்தியாவின் பரோடா மன்னர் (Gaekwar) கெயிக்வார் அவர்களால் மூன்றரை லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டது. ஆரம்பத்தில் 120 அரபி காரட் (119 மெட்ரிக் காரட்டாயிருந்ததை 1866ல் வெட்டியதில் 72 மெட்ரிக் கியாரட்டானது.

NASSAK வைரம்

பம்பாயிலிருந்து வடகிழக்காய் 150 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நாசிக் என்னும் நகரத்தின் பேரால் இந்த வைரம் அழைக்கப்படுகிறது. மகாராட்டிரர்கள் நாட்டின் வெற்றியாளராக ஆனபோது அடுத்துள்ள கோயிலிலிருந்து 1818ம் வருடம் தக்கானத்தில் கொள்ளைப் பொருளாகவிருந்தது. கிழக்கிந்தியா கம்பெனியாரிடமிருந்து பல கை மாறியும் கடைசியாக எமரல்ட் கட் ஆக வெட்டப்பட்டும் Mrs. W. B. Leeds of New York அவர்களின் சொந்தமானது. இதன் முதல் எடை $89\frac{1}{4}$ இங்கிலீஷ் காரட்டாயிருந்தது வெட்டப்பட்ட பின் $78\frac{1}{2}$ இங்கிலீஷ் காரட் 80.3 மெட்ரிக் காரட், மீண்டும் எமரல்ட் கட்டாக வெட்டியதில் 43.4 காரட்டாகவாகியிருக்கிறது.

TAJ-E-MAH வைரம்

சந்திரனின் கிரீடம் என்னும் இந்த வைரம் - GOLCUNDA MINEல் கிடைத்ததாகும். ரோஸ் கட்டாக இந்தியாவில் வெட்டப்பட்ட நல்ல பிரகாசமான வைரம். நாதர்சாவால் ஈரான் சென்ற வைரம் ஈரானிய சிறப்பு மிக்க வைரங்களில் மிக சிறப்பான வைரமாயிருந்து வருகிறது. இதன் எடை 115.6 மெட்ரிக் கியாரட்.

PIGOTT (or PIGOT) வைரம்

ராபர்ட் கிளைவ் மற்றும் வாரன் ஹேஸ்டிங்ஸ் இக்கட்டான நிர்வாக காலத்தில் இருமுறை சென்னையின் (Governor) ஆட்சியாளராக இருந்த காலத்தில் PIGOTல் இந்த வைரம் பெறப்பட்டதாகும். எகிப்தில் துருக்கியின் இராஜ பிரதிநிதியாகவிருந்த அலிபாசா அவர்களால் 1818ல் பவுண் 30,000க்கு வாங்கப்பட்டது. எடை 49 Carats.

EUGINIE வைரம்

ஓவல் வடிவிலுள்ள இந்த பிரிலியாந்த் ருஷ்ய அரசி காதரைனுக்கு சொந்தமான தாகும். சக்ரவர்த்தினி Eugineக்கு சீரிதனமாகக் கொடுக்கப்பட்டது. சக்கிரவர்த்தி நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் பரோடா மன்னர் கெய்க்வார் 11,000பவுனுக்கு வாங்கினார். கெயிக்வார் பதவி நீக்கப்பட்டபின் பம்பாய் வர்த்தகர் கைக்கு மாறியது எடை 51 carats.

HOPE வைரம்

மகாதேச சுற்றுப்பிரயாணி டவனிர் (Tavanier) 1642-ல் இந்திய வருகையின் போது கொல்லூர் - கொல்கொண்டாவில் கிடைத்தது. இந்த அபூர்வ நீலநிற வைரத்தை டவனியர் வாங்கிச் சென்ருர். வெட்டப்படாத நிலேயில் அதன் எடை $112\frac{1}{4}$ காரட்: 1668-ல் டவனியரால் Louis XVI க்கு விற்கப்பட்டு $67\frac{1}{8}$ கியாரட் வைரமாக வெட்டப்பட்டது. 1830-ல் லண்டன் மாநகர வர்த்தகர் (ELIASON) எலியாசன அவர்களால் பவுண் 68000க்கு Henry Philip Hope என்னும் சிறந்த கல் சேர்த்துவரும் வங்கியாளர் வாங்கிஞர். அந்த வைரத்தை பல துண்டுகளாக்கப்பட்டு வெட்டியதில் பெரியது $44\frac{1}{4}$, அடுத்தவை $13\frac{3}{4}$, $1\frac{1}{4}$ம் சேர்ந்து $59\frac{1}{4}$ம், மேலும் $7\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$,ம் ஆக இவைகள் ஒரிஜினல் $67\frac{1}{8}$ கியாரட் கல்லிலுள்ளவையானது. $44\frac{1}{4}$ கியாரட் வைரம் HABIB BEY 1908 ல் வாங்கி 1909ல் பாரிஸ் வர்த்தகர் ROSENANக்கு விற்ருர். 1911ல் Mr. EDWARD MACLEAN of Washington வாங்கிஞர், 1949ல் H. Winston, of New york வாங்கியும், 1958ல் Smithsonion Institution in Wnshingtonக்கு அன்பளிப்பளிக்கப்பட்டது.

AUSTRIAN YELLOW
TUSCANY OR FLORENTINE

டவர்னியரால் Duke of Tuscany யின் செல்வ சேமிப்பில் $139\frac{1}{2}$ Florentine Carats (134.27 மெட்ரிக்காரட்) மஞ்சள் ஆரஞ்ச் நிறமுள்ள வைரம் பார்த்தார். 9பட்டம் தீட்டிய பிரிலியாந்தாகவிருந்தது. இது ஆஸ்டிரியஅரச குடும்பத்தில் சேர்க்கப்பட்டு முடிகிரீடத்தின்கற்களுடன், Hafberg veinna ல் 1938-ம் வருடம் வரை இருந்தது. சுவிட்சர்லாந்து போய் பின் அமெரிக்கா சென்று100 கியாரட் கல்லாக வெட்டப்பட்டது.

STAR OF ESTE

சிறு எடை கல்லாக $25\frac{1}{2}$ காரட் உடையதாகவிருந்தது, Grand Duke Franz Ferdinand of Austria-Eest உடையதாகவிருந்தது, கடைசியாக சார்லஸ்சக்கரவர்த்தியிடமிருந்து 1922-ல் அவர் வெளிநாட்டில் இறந்தபின் அதன் சரித்திரமும் தெரியவில்லே.

POLOR STAR வைரம்

40 காரட் உயர்ந்த பிரிலியந்த் பட்டம் தீட்டப்பட்ட கல்லாகும். 1859-ல் பிரான்ஸின் அரச கற்குவியலிலிருந்து ருஷ்யாவிற்குச் சென்று Lady Delerdlng உடையதாயிற்று.

NIZAM வைரம்

கோல்கொண்டா பகுதியில் 1835-ம் வருடம் கண்டெடுக்கப்பட்டது, அது கன்னி வைரமாகயிருக்கும்போது 440 கியாரட், பட்டைதீட்டிய பின் 277 கியாரட் புராதனமான முறையில் வெட்டப்பட்டும் நிஜாம்பன்னரினுடையதாயிருந்தது 1857-ம் வருட புரட்சியின்போது இந்த வைரம் உடைவு பட்டது.

DRESDEN YELLOW வைரம்

டிரஸ்டன் பச்சை பொக்கிசப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த வைரங்களுள் நாலு அழகியபிரிலியாந்து பட்டம் வெட்டிய மஞ்சள் வைரங்கள் இருப்பதில் பெரிய வைரம் 38 மெட்ரிக் காரட் உடையதாயிருந்தது.

DRESDEN GREEN வைரம்

அகஸ்டஸ் தி ஸ்ட்ராங்க் கால்1743ல் 60,000Thalers (about Pound 9,000)க்குவாங்கப்பட்டு டிரஸ்டன் பச்சை பொக்கிசப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் வைரம் 41 மெட்ரிக் காரட். எடை உடையதாகும்.

DRESDEN WHITE வைரம்

49.71 கிராத் உடைய அழகிய வெள்ளே வைரம் சதுரவானது. அகஸ்டஸ் தி ஸ்ட்ராங் விஞல் 1,000,000 Thalers (about pound150,000க்கு) வாங்கப்பட்டது. டிரஸ்டன் பச்சைப் பொக்கிசப் பெட்டியில் இருப்பதாகும்.

PAUL I வைரம்

10 கியாரட் எடையையுடையதாகும். பவுல் I வைரம் முந்திய ருஷ்ய அரசு அணிகளில் உள்ளதாகும். சிகப்பு நிறக்கல்லாக காட்சியளிப்பதற்கு கல்லின் பின்பக்கம் நிறப்பூச்சுக் செய்திருப்பதேயாகும். அது பிங்கிஷ் லைட் நிற நீரோட்டமான வைரமாகும்.

CUMBERLAND வைரம்

லண்டன் பெருநகரத்தாரால் பவுண்10,000 க்கு வாங்கப்பட்டு டியூக் ஆப் கம்பர்லேண்ட் அவர்களுக்கு 1746ல் அவரின் கல்லோடன் வெற்றிக்காக அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்த 32 கியாரட் நல்ல வைரம் அவரின் சந்ததியினர் ஒருவர் ஹனோவரின் மன்னரான பின் சில கற்களுடன் இந்த வைரமும் ஹனேவரின் மன்னர் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டன.

பொதுவானது - பதிவு செய்யப்படாத வைரங்கள்

83.05 கியாரட் வைரம் பர்துவான் மகாராஜாவினுடையதாகவிருந்து. அந்தக்கல் கிருஸ்டிஸ் (Christies) லண்டன் ஸ்தாபனத்தில் 1954ல் பவுண் 13,000க்கு விற்கப்பட்டது. Shah வைரம் போன்று இருமருங்கிலும் இருமொகுல் சக்கரவர்த்திகளின் பெயர் எழுதப்பட்டிருந்தது. மறு விற்பனே (Sothebey's) சூத்பையால் - Mr. C. PATEL க்கு பவுண் 14,000க்கு விற்கப்ப்ட்டது.

டவனியர் பிரயாணத்தின்போது 1665, மொகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப் அவர்களின் இருப்பிலிருந்த ரோஸ்கட் வைரம் $319\frac{1}{2}$ ரதி (280 பிரெஞ்ச் காரட்) 900 ரதி ($787\frac{1}{2}$ பிரெஞ்ச் காரட்) உள்ள தளத்திலிருந்து வெட்டப்பட்டவை. கோஹினூர் வைரம், ஓர்லோவ் வைரம், மூன் ஆப் மௌண்டேய்ன் (193 காரட் வைரம் லண்டன் நகரில் Moon யென்ற பெயரில் 1942ல் விற்கப்பட்டது) மற்றும் ரஷ்ய சக்கரவர்த்தினி காதரைன் II அணியிலான 57 Carat (46 மெட்ரிக் காரட்) நீல நிறச்சாயல் உயர் ரோஸ்கட் செய்யப்பட்டது. 24 Carat தட்டை வைரம் (7. 5 ஸ்குயர் CMX 0.25 CM கணம்) மற்றும் தனிவைரம் 54.7 கேரட், எல்லாம், அந்த தளத்திலி ருந்துவந்தவையென கருதப்படுகிறது.

STAR OF SOUTH வைரம் (BRAZIL)

பிரேஜில் நாட்டில், மினா கிரேஸ், பகாஜெம் (Bagagem) சுரங்கத்தில் 1853 ஜூலை மாதத்தில் கண்டெடுக்கப்பட்ட 261.88 மெட்ரிக்காரட் வைரம் பவுண் 40,000 க்குவாங்கப்பட்டு இந்தியாவின் பரோடா சமஸ்தான் அரசரான கெயிக்வாரால் இந்த வைரத்தை ஆம்ஸ்டர்டாம் (ஹாலந்துல்) வெட்டப்பட்டு 128.8 கிராத் நல்ல பிரிலியந்தாக்கப்பட்டது,

ENGLISH DRESDEN வைரம்

ஸ்டார் ஆப் சௌத் கல்லுடன் கிடைக்கப்பட்டதாகும். கன்னிக்கல்லாக இருக்கும்போது (Rough) $119\frac{1}{2}$காரட்டாக இருத்தது. Mr. E. Dresden அவர்களால் நல்ல பிரிலியந்தாக வெட்டப்பட்டபின் $76\frac{1}{2}$காரட்டானது. பரோடாவின் கெயிக்வார் இந்த வைரத்தை வரங்கிக்கொண்டார்

STAR OF EGYPT வைரம்

எகிப்தின் கத்தீவு வாங்கியபோது ஓவல் சேப்பிலிருந்து 250 (old) Carat ஆக இருந்ததை 1880ம் வருடம் அவர் ஆதை விற்றபின் அதை எமரல்ட் கட்டாக வெட்டியபின் அது 106.75 காரட்ட்டானது. நல்ல உயிரோட்டமுள்ள நல்ல வைரமான இந்த வைரம் 1939ம் வருடம் லண்டன் மாநகர சந்தைக்கு வரும்வரை யாராலும் கேள்விப்படாத ஒன்ருகயிருந்தது.

STAR OF MINAS வைரம்

1911ம் வருடம் பகாஜெம் சுரங்கத்தில் கிடைத்தது வைரம், எஸ்டரில்லா டி மிஞஸ் (Star of Minas) என்ற பெயரிடப்பட்டது. இரு முக அமைப்பும் ரவுண்டாகவுமுள்ள இந்த வைரம் 179.3 மெட்ரிக்காரட் உடையதாகும்.

MINAS GRAIS வைரம்

172.5 மெட்ரிக்காரட் வைரம் அல்லுவியல் தேக்கத்தில், ரியோசாண்டோ அந்தோணியோ கொரமண்டல முனிஸிபாலிட்டி மினாஸ் கிராய்ஸ் -ல் கிடைத்தது மாநிலப் பெயர் மினாஸ் கிராய்ஸ் என்ற பெயரிடப்பட்டது.

PRESIDENT VARGAS வைரம்

13, ஆகஸ்ட் 1938ல் ரியோசாண்டோ அந்தோனியோ வில் கிடைத்தது. இந்த மாபெரும் வைரம் 726.6 மெட்ரிக் காரட் எடையுடையது. ஐக்கிய பிரஜிலியன் நாட்டின் ஜஞதிபதி Dr. Getulio Dornelles Vargas ன் பெயரிடப்பட்டது. அளவு 56.2 by 51.0 by 24.4 MM ($2\frac{1}{4}$ by 2by 1Inches) அல்ட்ராவயிலட்-நீல நிற ஒளி வைரம். பல கை மாறி கடைசியாக H.Winston வாங்கப்பட்டு 29 கல்களாக வெட்டப்பட்டும் 14 பெரிய கற்கள் எமரல்ட் கட்டாக பட்டம் தீட்டப்பட்டது,

பொதுவானது

SOUTHERN CROSS வைரம்

ரோஸ் கலர் வைரம் ·11·82கிராத் எடை உடையது. அபய்ட் நதிதீரத்தில் மினாஸ் கிராய்ஸ்ல் 1929ம் வருடம் கண்டெடுக்கப்பட்டது. 1934ம் வருடம் ஆறுவைங்கள் 140 கியாரட் முதல் 460கியாரட் வரையிலுமுள்ளதுகொர மண்டல டிஸ்டிரிக்ட்மினாஸ்கிராய்ஸில்கிடைத்தன.

BRAGANZA STONE

வைரம் அல்ல - TOPAS

1680 கியாரட் தளம் 1740ல்; 215 கியாரட்தளம் 1775லும் பிரேசிலில் கண்டெடுக்கப்பட்டது. இரண்டுமே TOPAS என்னும் மஞ்சள் பளுங்கியாகும் சிறிய கல்லுக்கு REGENT OF PORTUGAL யெனப் பெயரிடப்பட்ட து. பெரிய கல்லும் போர்ச்சுகல் அணியிலிருக்கின்றன.

SOUTH AFRICA வின் வைரங்கள் :

CULLINAN வைரம் :

டிரான்ஸ்வால் மாநிலத்தின் பெரடோரியா நகரின் பிரமியர் சுரங்கத்தில் 1905-ம் வருடம் ஜனவரி 25-ம் நாள் மிகப்பிரமாண்டமான வைரத்துண்டு (Rough) கிடைத்தது, எடை 3106 மெட்ரிக்காரட் (612·2 grams) சற்று கூடுதலாக $1\frac{3}{8}$ ராத்தல்

டிரான்ஸ் வால் வைரச்சுரங்கக் கம்பெனியின் சேர்மன் Mr. Thomas Cullinan பேரால் Cullinanஎன்ற பெயர் வைரத்திற்கு இடப்பட்டது.டிரான்ஸ்வால் அரசு பவுண் 150,000க்கு வாங்கி ஏழாவது எட்வர்ட் அரசரின் பிறந்ததின அன்பளிப்பாய் நவம்பர் மாதம் 9-ம் தேதி 1907-ம் வருடம் அளிக்கப்பட்டது. 10—2—1908-ல் இந்த வைரம் இரண்டு துண்டுகளாக துண்டிக்கப் பட்டது. 2029.94 and 1068.09 மெட்ரிக் காரட் கல்லாகவும். மேலும் சிறு சிறு துண்டு வைரங் களும் கிடைத்தன.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் அரசு மேற்பார்வையாளரின் பார்வையில் பெரியதுண்டு Pendeloque or Drop பிரிலியந்தாக 74 பட்டங்களாகவும் திட்டப்பட்டு 530.2 காரட் கல்லாக வெட்டப்பட்டு STAR OF ASIA யென்ற பெயரும் சூட்டப்பட்டது. இரண்டாவது துண்டு 317.4 மெட்ரிக் காரட்டாக 64 பட்டம் திட்டப்பட்டு சதுரக் கல்லாக வெட்டப்பட்டது. இது அரச கிரீடத்தில் வைக்கப்பட்டது.

மற்ற சிறு கல்கள் பெண்ட்லாக் பிரியந்தாக 94.45 காரட் கல்லாகவும் அடுத்தது ஸ்குயர் பிரிலியந்தாகவும் 63.65 காரட்டாகவும் வெட்டப்ராட்டு மேரி ராணியின் கிரீடத்தில் கட்டப்பட்டு 1911-ம் வருடம் (ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்ட மேற்பு விழா) அவரின் அரசு ஏற்பு விழாவில் அணியவும் செய்யப்பட்டது.

பெரிய 4 கல்லுக்கும் Star of Asia யென்ற பெயரும், பிறவெட்டப்பட்ட கல்லுக்கு Lesser Star of Asia யென்ற பெயரிடப்பபட்டது, இவைகளில் 11.51 and 8. 8, நீண்ட சதுர கல் 6. 8, பெண்ட்லாக் 4. 4: மற்றும் 96 சிறிய பிரியாந்துக்கள் 7. 55 மெட்ரிக் காரட் உள்ளது.

JUBILEE OR REITZ வைரம்

1895-ம் வருடக் கடைசியில் ஜாகர்ஸ் பொண்டெய்ன் (Jagers fontein) சுரங்கத்தில் கிடைத்த பெரிய வைரத்திற்கு Orange Free Stateன் பிரஸிடெண்டான FW. Reitz ன் பெயரிடப் பட்டது. 1897-ம் வருடம் விக்டோரியா மகாராணி பட்டமேறிய அறுபதாவது வருட Jubilee கொண்டாட்டத்தின் காரணமாக இந்த Reitz வைரத்திற்கு JUBILEE யென்ற பெயரிடப்பட்டது, 650.8 மெட்ரிக் காரட் வைரம் 245.35 மெட்ரிக் காரட் வைரம் பிரிலியாந்து வெட்டப்பட்டது. ஒரு சிறு கல் 13.34 மெட்ரிக் காரட்டிலும் வெட்டப்பட்டன. பாரிஸ்எக்ஸ்பிசனிலும் வாஷிங்டன் எக்ஸ்பிசனிலும் 1900 வருடம் ஜுப்ளி வைரம் 245.35 காட்டப்பட்டது.

DU TOIT வைரம்

கிம்பர்லியிலுள்ள DUTOITSPAN சுரங்கத்தில் கிடைத்த இரு கல்லுக்கும் டுடாய்ட் என்ற பெயரே வைக்கப்பட்டன. 1871ல் கிடைத்த கல்லின் எடை 127 மெட்ரிக் கியாரட் 1878-ல் கிடைத்த கல்250 மெட்ரிக் காரட் உடையதாகவும், மஞ்சள் நிறமுடையதாகவும் உள்ளதாகும்.

DUTOITSPAN வைரம்

1964-ல் கண்டெடுக்கப்பட்ட வைரம் 253. 7 காரட் அளவு $1\frac{1}{2} \times 1\frac{1}{4}$ இஞ்ச் இந்த கவர்ச்கி கரமான வைரக்கிரிஸ்டல் H.Winstonவாங்கி SirErnest Oppenheimer முந்நாள் Charman DeBebeers Consolidated Mines Ltd ஞாபகார்த்தமாக Smithsonion Institution Washington க்கு அன்பளிப் பாகக் கொடுர்தார். மற்றொரு கல் 167 மெட்ரிக்காரட் இரு வைரங்களும் மஞ்சள் நிறமுடைய தாகும்.

IMPERIAL, VICTORIA or GREAT WHITE வைரம்

இந்த மாதிரி மூன்று பெயர்கள் கொடுக்கப்பட்ட பெரிய வைரம் 1884ல் திடீர் தோற்ற மாய் லண்டன் சந்தைக்கு வந்தது, கேப் டவுனிலிருந்து கடத்தப்பட்டதாகக் கொள்ளும் இதன் குணபாவத்தை வைத்தும் ஜாகர் பென்டெய்ன்சுரங்கத்தில் கிடைத்தகல்லாகுமென்பதுகொள்ளப் பட்டது. 469 காரட் உடையதை இரண்டு கல்லாக ஆம்ஸ்டர்டாமில் வெட்டியதில் பெரிய கல் 185 மெட்ரிக் காரட் ஓவல் பிரிலியந்தாகவும் சிறியது 20 மெட்ரிக் காரட் வட்ட பிரிலியந்தாகவும் கிடைத்தன. பெரிய கல் ஹைதராபாத் நிஜாம் அவர்களுக்கு பவுண் 20,000 க்கு விற்கப்பட்டது.

PORTER RHODES வைரம்

12, பிப்ரவரி 1880ல் கிம்பர்லி சுரங்கத்தில் கிடைத்து Mr. Porter Rhodes க்கு உடையதாக இருந்தது. 153.5 மெட்ரிக்காரட் எடை அளவிற்காகவும் மல்லாது அதன் தரத்திற்காகவும் பெருமதிப்புப் பெற்றதானது. 1937ல் ஒரு இந்தியரால் வாங்கப்பட்டு எமரால்டு கட்டாக வெட்டப்பட்டு 56.6 Carat எடையாயிற்று.

STEWART வைரம்

1872-ம் வருடம் வால்நதி (Vaal River diggings) பள்ளத்தாக்கில் கிடைத்தது. மஞ்சள் நிறமுடையதாக இருந்தது 296 மெட்ரிக் காரட் தளம் 123 மெட்ரிக் காரட் பிரிலியாந்தாக பட்டம் தீட்டப்பட்டது.

DE BEER'S வைரம்

1888ம் வருடம் $428\frac{1}{2}$ காரட் (440 மெட்ரிக் காரட்) தளம் De Beer's சுரங்கத்தில் கிடைத் தமையால் De Beer's யென பெயரிடப்பட்டது. 234·5 மெட்ரிக்காரட் பிரிலியந்தாக வெட்டப் பட்டதை இந்திய இளவரசர் ஒருவர் வாங்கினார்.

STAR OF SOUTH AFRICA or DUDLEY வைரம்

கிராமத்தவர் ஒருவரால் வால்நதி பள்ளத்தாக்கில் பெறப்பட்ட பெரிய வைரம் 1869ல் Mr. S. Van Viekirk பெற்றும் அதை பவுண் 11,200க்கு விற்றூர். $83\frac{1}{2}$ காரட்டாக இருந்ததை பேரிக்காய் சேப்பில் பிரிலியந்தாக வெட்டியதில் 47·7 மெட்ரிக் காரட் இருந்தது. இதை கௌண்டஸ் டட்லி வாங்கியதால் அவர் பெயர் இடப்பட்டது.

TENANT வைரம்

லண்டன் ஜேம்ஸ் டெனாண்ட் அவர்களுக்குரியதாக விருந்து இந்த வைரத்திற்கு அவர் பெயர் வைக்கப்பட்டது. 112 carats ஆக விருந்து பட்டம் தீட்டியபின் சுத்தமான வைரமாக 68 காரட்டுடையதாயிற்று,

TIFFANY YELLEW வைரம்

நியூயார்க் டிப்பானி & கோவிற்கு சொந்தமான இந்த ஆரஞ்ச் மஞ்சள் வைரம் De Beers சுரங்கத்தில் கிடைத்தது. வைரக் கிரிஸ்டலின் எடை $287\frac{1}{2}$காரட்டாகவிருந்ததை ரெக்டாங்குலர் நீண்ட சதுரமாக ரவுண்ட் கார்னர்களுடன் நாற்பது பட்டங்கள் Crownலும், நாற்பத்திஎட்டு பட்டங்கள் பாவலியனிலும் ஒரு டேபிளுமாக நல்ல கவனத்தை ஈர்க்கும் கல்லாக 128·5 காரட் அமைந்தது. 1887 88ல் பெற்றதாகும்.

JAGERS FONTEIN or PAM வைரம்

எக்சல்சயர், ஜுப்ளி வைரங்களிருந்து ஜாக்கர்ஸ் பென்டெய்ன் சுரங்கத்தில் 1889ம் வருடம் JULIUS PAM கிடைத்தது. 248 கியாரட் தளத்தை வெட்டியதில் 123 மெட்ரிக் கிராட் கல்லாகத்தேறியது. மற்றொரு கல் 1881ல் கிடைத்தது 215 காரட் தளமாகவும், மற்றொருதளம் 1891ல் கிடைத்தது. PAM யெனப் பெயரிடப்பட்டது 115 காரட் தளத்திலும் வெட்டியபின் 56 5 மெட்ரிக் காரட்டாக தேறியது. 1952ம் வருடம் கண்டெடுக்கப்பட்ட தளம் 154·5 காரட்டும், பிரவேட் கலக்டர் H.Wenstonக்காகி-அவரால் வெட்டப்பட்டதில் 62·5 காரட்ஜெம் ஆகவும் 1967ல் புரவுன் ஸ்டோன் 249·9 காரட்ஸ், பெண்டேகுலர் சேப்பில் வெட்டியதில் 111·9 காரட் உடையது மக்கள் அறிந்த வரை பெரிய புரௌன் வைரம் இதுவே.

RED CROSS வைரம்

டயமண்ட் இன்டிகேட், லண்டன், 1918ல் செஞ்சிலுவை சுசைட்டி அன் ஆடர் ஆப் சென்ஜோன் ஆப் ஜெருசலம் நிதிக்காக ஆர்ட்சேல் ஸ்தாபனத்திற்கு அளித்தது. இந்த வைரம் டி பீர்ஸ் கம்பெனியின் Griqualand சுரங்கத்தில் கிடைத்தது. 370-380 க்குள் இருந்த இந்த வைரம் பட்டம் தீட்டப்பட்டபின் 205 மெட்ரிக்கியாரட்டானது.

வில்ஜாதியெனப்பிரிக்குமிடத்து வைரமும்-சிகப்பு, நீலம் மஞ்சள், நீலவெள்ளை இனமும் ஜாதி இனமாகவும், பசுங்கிளை [Alexandrite] பச்சை, பவளம், முத்து, டோபாஸ், அமதிஸ்ட், அக்மரின் போன்றவை அதன் கடினக்குறைவால் வில்ஜாதி இனத்தில் சேர்த்தாலும், ஜாதிக்கல் வர்த்தகர்கள், பாவிப்பாளர்கள், இந்த இருபிரிவிலுள்ள உயர்ந்த பிலை மதிப்புடைய கல் இனங்களை அதன் மதிப்பை வைத்தும், பச்சை, சிகப்பு, வைரம், பசுங்கிளை, நீலம், பற்பருகம் போன்றவைகளை ரத்தினகல்கள் [Gem Quality gems] யெனவும்—இதர குறைந்த விலை கல் இனங்களை [வில்ஜாதி] இளக்க ஜாதி கற்கள் எனவும் நடைமுறையில் கூறிக்கொள்வர். பொதுவாக எல்லா இனங்களிலும் மிகமிக இளக்க [Inferior quality] கற்களுமிருக்கின்றன. மிக மிக உயர்ந்த [Highly - Superior quality] கற்களுமிருக்கின்றன. ஆகவே எல்லா இனத்திலும் ஜாதி-வில்ஜாதி [Precious-Semi Precious] கற்களும் ஜாதி கற்கள் என்றும், எல்லா இனத்திலுமுள்ள உயர்ந்த விலை கற்கள் [Gem quality gems] இரத்தின கற்கள், மற்றவை இளக்க கற்கள் எனவும் பிரிப்பதுதான் சரியெனலாம். இக்கால நடைமுறையில் வர்த்தகர் மற்றும் பாவிப்பாளர்களில் இதே உணர்வே செயலில் இருக்கின்றன.

காயல்பட்டண வாசிகள் தாயகத்திலும் கடல் கடந்த நாடுகளிலும் பல தலைமுறையாக இரத்தின வியாபாரிகளாக தொழில் செய்து வருகின்றனர், இதே போல் பெருமளவில் தோல் தொழில், 'கச்சைத்தொழில்' என்ற துணிவியாபாரம், தானிய வியாபாரம் உள்ளிட்ட பல தொழில்களையும் செய்து வருகின்றனர். இந்த தொழில்களால் நம் தாய் நாடாகிய இந்தியாவிற்கு ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கிறது, சர்வதேச தொடர்பு இரத்தின வியாபாரத்தின் மூலம் கிடைப்பதால் பலநாட்டவர்களும் இந்தியர்களோடு பழகி இந்திய உணர்வுகளையும் நம் கலாச்சார பெருமைகளையும் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. இதனால் ஏராளமான வெளிநாட்டவர்கள் இந்தியா வருகின்றனர். இதிலும் அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்பது பெருமைப்படத் தக்கதாகும்.

TIGEREYE வைரம்

புலிக்கண்யென உரிமையாளரால் பெயரிடப்பட்ட வைரம் 1913ம் வருடம் அக்டோபர் மாதத்தில் Droogefeld, Vaal River சுரங்கத்தில் கிடைத்தது. 178½ காரட்டுடையது. நல்ல பிரிலியாந்தால் ஆம்ஸ்டாமில் வெட்டியபின் தேறிய எடை 61½ காரட்.

JONKER வைரம்

Pretoriaவை அடுத்த Elandsfontein அல்லுவியல் டிபாஸிட்டில் 1934ம் வருடம் பெரிய வைர தளங் கிடைத்தது. ஒரு கோழி முட்டையின் அளவிலிருந்தது 2½ × 1½ இஞ்ச் (63 by 38mm) அளவிலுள்ளது. பழுதற்ற நீல வெள்ளையாக 726 மெட்ரிக் கியாரட் (about 5 oz) எடையுள்ளது. டைமண்ட் கார்ப்பொரேசன் பவுண் 70,000க்கு வாங்கியது. பின்வாங்கிய அமெரிக்காவின் H. Wenston அதை 11 பிரிலியந்த்கட் வைரமாகவும், 1 மார்குயிஸ் கட் வைரமாகவும் வெட்டினார். பெரிய கல் 142·9 யை மீண்டும் ரி கட் பன்னியதில் 125 carats ஆனது. இந்தக் கல் முன்னான் எகிப்தின் மன்னர் பாரூக் வாங்கினார்.

COLONSO

Mineral Department of the British Musium (Natural History) at South Kensington டிபார்ட்மெண்டில் அழகிய மஞ்சள் நிற கிரிஸ்டல் காட்சிக்கு வைக்கப்பட்டது. ஜோன்ரஸ்கின் டிரஸ்டீகளுக்கு 1887ல் அன்பளிக்கப்பட்டு, அவரின் நண்பரான Natalன் முதல் பிஷப்பான John Williams colonso (1814-83) ன் பெயரால் அந்த வைரத்திற்கு பெயர் வைக்கப்பட்டது, வைர கிரிஸ்டல் 133·145 மெட்ரிக்கியாரட் (10 ozல்) இருந்தது, இந்த வைரம் 29, ஏப்ரல்1965ல் களவு போனபின் திரும்பி வரவில்லை.

CUBAN CAPITOL வைரம்

கூபாவின் நகர் ஹவானா நகரை கட்டிக்கொண்டிருந்த தொழிலாளிகள் நிதி திரட்டி பவுண் 8000 கொடுத்து வாங்கிய 23 கியாரட் வைரம் பாரிஸ் நகரில் வாங்கப்பட்டது. 1946 மார்ச் 25ந் தேதி களவு போய் திரும்பக் கிடைத்தது.

MINOR COUNTRIES (மற்ற நாடுகளின்) வைரங்கள்

1945ல் Sierra leone, woyie River படுகையில் 770 carats வைரம் கிடைத்தது, இந்த வைர தளத்தில் 32 வைரங்கள் வெட்டப்பட்டன. சிறிது காலத்தில் Lisotho (முந்திய Basutoland) மாநிலத்தில் கல்தோண்டுபவரின் மனைவி கண்டெடுத்த வைர தளம் 601'25கிராத் அதை பவுண் 126,000க்கு விற்ருர்கள். பல கை மாறி கடைசியாக H. Winston வாங்கினார்கள் 1972ல் ஒயீ நதிபடுகையில் 969 வைரம் கிடைத்தது. Borneo நாட்டில் பதினெட்டாம் நூற்ருண்டில், Landak சுரங்கத்தில் 1787-ம் வருடம் ஒரு வைர தளம் 367 கியாரட்டுள்ளது எடுக்கப்பட்டது. ஆனல் இக்கல் வைரமாக இல்லாது Quartz ஆகவிருந்தது. இக்கல்லுக்கு Mattan Stone என்று மாட்டான் ராஜாவின் பெயரிடப்பட்டது.

Venuzuela வில் 1942ல் ஒரு பெரிய வைரம் 155 காரட்டில் கிடைத்தது. அதற்கு Simon Bolivar ன் ஏபகார்த்தமாக Liberador- (Liberator-விடுதலை வீரர்) யென்ற பெயரிடப்பட்டது. நியூயார்க் நகரில் பலதுண்டுகளாக வெட்டப்பட்டதில் பெரிய கல் 40 காராட்டில் கிடைத்தது.

VILAK CATSEYE (ALEXANDRITE CATSEVE)

Chrysoberyl catseye சுத்தமான வட்டவடிவமான பொன் நிறத்துடன் பச்சை கலந்த நல்ல தேன்நிற வைடூரியம் இந்த பசுங்கிளை வைடூரியம் 54'5 carats ஹாங்காங்கிலுள்ள ஒரு ஜப்பானிய துடர்பு Fu Hong கம்பெனிக்கு ஹாங்காங் விளக் டிராடாஸ் கம்பெனியாரால் நாலு லட்சம் வெள்ளிக்கு 1972ம் வருடம் விற்கப்பட்டது. தனி ஒளியுடைய நூலுள்ள வைடூரியமாகும் அதன் தற்போகய மதிப்பு பல மில்லியன் டாலராகும்.

VILAK STAR-SAPPHIRE (நீல ஆறு நூல் கல்)

மிக நல்ல நீல நிற ஆறு நூல் ஒழுங்கான ஓவல் (Silver-Ray) ஆறு நூல்களும் சரியாகவுடையதாகும். எடை 28·5 மெட்ரிக் கியாரட்டாகும். ஜப்பானிய வியாபாரி மூலம் தனி நபர் சேமிப்பாளருக்கு இரண்டு லட்சம் ஹாங்காங் வெள்ளிக்கு 1975-ம் வருடம் விற்கப்பட்டது. இன்றய மதிப்பு ஒரு மில்லியன் டாலராகும்.

VILAK ALEXANDRITE (பசுங்கிளை கல்)

இந்த பசுங்கிளைக் கல் சுத்தமான எமரால்ட் பச்சையாகவும் செயற்கை லைட்டில் (Antificial Light) சுத்த ருபி சிகப்பாகவும் மாறும் - சுத்தமான பழுதில்லாத ரவுண்டட் சதுரமாகவும் உள்ள மிக உயர்வான மாணிக்கமாகும். இந்த உயர் பசுங்கிளை (Alexandriete] கல்லின் எடை 20·00 கியாரட் இரண்டு லட்சம் வெள்ளிக்கு விற்கப்பட்டது. இன்றைய மதிப்பு இரண்டு மில்லியன் டாலராகும்.

லுக்கு முதல் தேவை தாராளமான இடவசதி. அதில் பலதரப்பட்ட சிமிண்டால் கட்டப்பட்ட தொட்டிகள், வளமான தண்ணீர் வசதி. முதல் கட்டமாகத் தோலை பதனிடுவதற்குத் தேவையான சுண்ணும்பு. அதன் பிறகு ஏற்படும் வேலைகளுக்கு ஏற்ப பனைமரத்திளுல் செய்யப்பட்ட வளைவு மரங்கள், கத்திகள், பலதரப்பட்ட வகையில் கத்திகள், பிறகு சுண்ணும்பை நீக்கி சுத்தப்படுத்துவதற்குரிய மருந்து சாமான்கள், பிறகு மரப்பட்டை துகழ்களில் ஊற வைக்க வாட்டில் பட்டை, கொன்னம்பட்டை, வேலம்பட்டை என்ற சாமான்கள். அதில் கொஞ்சநாள் ஊறிய பின் அதை எடுத்து சுத்தம் செய்து கடுக்காய் ஊறலில் போட்டு அதிலும் கொஞ்சநாள் ஊறிய பின் புங்க எண்ணெய்யை பூசி நிழலில் காயப்போட்டு அதன் பிறகு நீண்ட பலகையில் ஒரு சில கை தகடுகளை வைத்து வளித்து சமப்படுத்தி ஒழுங்கு செய்வது பின்பு காய வைப்பது. பின்பு சுத்தம் செய்து "திரேஸ்" என்ற நிலையில் வெளிக் கொணர்ந்து, தரம் பிரித்து மார்க்கட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். அதன் பிறகு கலர், மற்றும் தேவைக்குரிய நிலையில் அதை மாற்றி அமைத்துக் கொள்வார்கள். இதை நிதானமாய் படித்து அறிவதற்கே பொறுமை தேவை. ஆக பொறுமையும், வேலையாட்களை வைத்து வேலை வாங்குவதற்குரிய மனித நேயங்களும், பொருளும், பல்வேறு உப சாமான்களும் இதளுல் ஏற்படும் வியாபார பரிவர்த்தனைகளும் பெரிதும் நிதானத்திற்குரியவை.

ஆகவேதான் சொல்கிறேன் தோல் பதனிடும் தொழிலில் நிதானமும், தாராள மனதுடன், கூடிய மனித நேயங்களுக்கு மட்டும்தான் உரியது. அவசர வியாபாரிகளுக்கோ லாபத்தையே குறிக்கோளாகக் கொண்ட நபர்களுக்கோ உரியது அல்ல. பரம்பரை வியாபாரிகளுக்குத்தான் அதிலுள்ள விபரங்கள் கஷ்டங்கள் பொறுமைகள் தெரிய வரும். இது ஒரு தியாக புத்தி நிறைந்த தொழில் என்று முன் சொன்னது இதற்குத்தான்.

அறுவறுப்பும், நாற்றமும் நிறைந்த தொழில் என்று சிலர் வெறுக்கலாம். பொருள் அதிகம் தேவைப்படும் விஷயம் என்று சிலர் விரும்பாமல் இருக்கலாம். தொழிலாளர்கள் பிரச்சனை தொல்லைதரும் என்று தட்டிக் கழிக்கலாம், இத்தனை இருந்தும் ஒரு சிலர் இத் தொழிலைத் தொடர்ந்து நம் நாட்டிற்கும் அந்நிய செலவாணியை ஈட்டித் தந்து நம்மவர்களுக்கும் வேலை தரக் கூடியதாய் தொடர்கிறுர்கள்.

அன்னவர்களைப் புகழ்வோம். பெரியோர்களால் தோற்றுவிக்கப்பட்ட தோல் தொழிலில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும் பொறுமையுடனும், துணிவுடனும் இந்த தொழிலை நடத்தி வரும் இளைய சமூகத்தினரையும் வாழ்த்துவோம்; பாராட்டுவோம்.

சின்னஞ்சிறு இடத்தில் சிறிய பலகையில் ஒரு காலை ஊன்றியபடியே உட்கார்ந்து கை வேலை பார்ப்பவர்களை கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் நிறைய இடங்களில் பார்க்கலாம், இவர்கள் காயல் வாசிகளாகவே இருப்பர். வெள்ளி, செம்பு நகைகளுக்கு தங்க முலாம்(கவரிங்) திறமையாகப் பூசுவது இவர்களின் கை தோந்த கலை. கில்ட் ஒர்க்ஸ், பிளேட்டிங் ஒர்க்ஸ் என பெயர் சூட்டப்பட்ட இச்சிறு தொழில் மூலம் பல நூறு குடும்பங்கள் வாழ்கின்றன.

பழைய இரும்பு சாமான்களை சேகரித்து அதை விற்பனை செய்யும் தொழிலை முதன் முதலாகச் செய்தவர்கள் காயல்பட்டண வாசிகள் தான். ஏனவே தான் இக்கடைகள் 'காயலான் கடை' என அழைக்கப்படுகின்றன. காயல் வாசிகள் பெருமளவில் இன்றும் இத் தொழிலை நடத்தி வருகின்றனர்.

உணவுக்கும் தொழிலுக்கும்

மீன்...

— R. M. N. சேக்னா - சென்னை —

மீன் ஒரு மகத்தான சத்துள்ள உணவாகும். அதன் புரதச்சத்தினாலும் சுவையினாலும் மீன் உணவுக்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட மீன்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி உள்ளது. கடல்பொருள் ஏற்றுமதி மூலம் இந்தியாவுக்கு ஆண்டுக்கு 635 கோடி வரை அந்நியச் செலாவணி கிடைத்துவருகிறது. இந்தியாவில் ஆண்டுக்கு 30 லட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இங்கு மீன் பதப்படுத்துதல் மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பில் ஏற்றுமதி தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்கிறது. கீழ்க்கண்ட வகையில் மீன்கள் ஏற்றுமதிச் சந்தையில் முக்கியம் வாய்ந்தவைகளாக திகழ்கின்றன.

பனி உறைய வைத்த மீன்கள், இறால்கள், கணவா மீன்கள், உப்பிட்டு உலர வைத்த மீன்கள், ஆகியவற்றுக்கு வெளிநாட்டுச் சந்தையில் அதிக வரவேற்பு உள்ளன. இவை பெரும்பாலும் அதிக முதலீட்டில் இயங்கும் தொழிலாகும்.

மீனில் இருந்து தாயரிக்கப்படும் கீழ்க்கண்ட மீன் உற்பத்திப் பொருள்களும், ஏற்றுமதியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

மீன் எண்ணை ஐசிங்கிளாஸ் எனப்படும் மீன் காற்றுப்பைத் துண்டுகள், சுறாமீன் தூவி நரம்புகள், மீன் பாசியில் இருந்து தயாரிக்கப்படும் அகார் உலர்த்தப்பட்ட ஜெல்லிமீன், பீச்டீமர் என்ற பதப்படுத்தப்பட்ட கடல்அட்டை ஆகியவை கிழக்குஆசிய நாடுகளில் மிகுந்தகிராக்கி உடையவையாக இருக்கிறது.

இக்கடல் பொருட்கள் தயாரிப்பிற்கு அதிக முதலீடுகளோ அல்லது அதிக நுட்பங்களோ இயந்திரங்களோ தேவையில்லாத நிலையில் இத் தயாரிப்பு தொழில்கள் கடலோர கிராமங்களிலும் அதிக முதலீடின்றி செயல்பட வாய்ப்புகளும், அதனால் தனிப்பட்டோர் வருமானம் பெருக்குவதற்கு வழிவகைகளும் உள்ளன. இவற்றுடன் மீனின் புரதச்சத்து, கொழுப்புச்சத்தின் முக்கியத்துவ அடிப்படையில் உள்நாட்டுத் தேவைக்கான மீன் உணவுப் பொருட்களுக்கும், அதிக வரவேற்பு உள்ளன. மாசிமீன், மீன்ஊறுகாய், மீன்வடகம் தயாரிப்பு, கால்நடை மற்றும் கோழித் தீவனங்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கவல்ல மீன்தூள் தயாரித்தல் மற்றும் மீன் வளர்ப்புக்கான மீன் தயாரித்தல் ஆகியவைக்கான தொழில்கள் வளர்ச்சியடைய அதிகமான வாய்ப்புகள் இருக்கிறது.

மாவட்ட தொழில் வளம் பெருகவும், கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கும் கீழ்க்கண்ட மீன் உற்ப்பத்தி பொருட்கள் தயாரிப்பு தொழில்கள் உள்ளன.

மீன்தூள் தயாரித்தல், மீன் உணவு தயாரித்தல், மீன் எண்ணை தயாரித்தல், மீன் ஊறுகாய், மீன் வடகம் தயாரித்தல், அகார் தயாரித்தல், மாசி மீன், ஐசிங் கிளாஸ் பீச் டீமர், ஆகியவை தயாரித்தல் மிக முக்கியமான தொழில்களாகும். இவை சிறு தொழில்களாகவும் குடிசைத் தொழில்களாகவும் மேற்கொள்ளலாம். இத் தொழில்களை பெண்கள் மேற்கொள்ளலாம்

With the best compliments from:

HILAL PEN PALACE

MANORAMA JUNCTION

KOTTAYAM. Prop. S. I. Md Ansari

Vajith Plating Works

Market Road, KOTTAYAM.

M. A. S. Mohaideen

KOTTAYAM.

RUBY PLATING CENTRE

Sellers of all Types of Goldsmith's tools & Specialist of Colouring Gold Ornaments

215-G, Marattukalam New Building

KAVALA, CHANGANACHERRY-686 101. KERALA.

SUNBEAM TOOLS

Market Road,

CHANGANACHERRY - 686 101.

Ameer Plating Works

Palace Road,

CHANGANACHERRY - 686 101. Prop : H. M. Sathak

Rainbow Plating Works

G. H. Road, CHANGANACHERRY-686 101.

With best compliments from:

Phone: 24083
Resi: 24569

Janata Diamonds

Exports & Imports

Dealers in: Synthetic Precious & Semi Precious Stones

85-C, Jaffersha Street, TIRUCHY-620 008.

With the best complimenis of:

Phone: 31031, 31668, 563981

Thahir Jewellers

Manufactures & Dealers in: Gold Jewels, Diamonds & Silverwares

144, N.S.C. Bose Road, MADRAS-600 079.

With best compliments from:

P. O. Box 478 Phone: 27788

M. Mahammed Ali & M. Amanath Ali

Gems Appraisers & Consultants

No. 50 Sunnambukara Street

Tiruchirapalli-8. Pin. 620 008

Phone: Shop 26516, Resi: 24251

Nagoor Noor Diamonds

Prop Haji A.R.Abid Hussain

416, Big Bazaar Street, **Tiruchirapalli-620 008** Tamilnadu.

Res. Phone: 24251 Off. Phone: 26516

Tiruchirapalli Noor Diamonds & Co.

399, Big Bazaar, TIRUCHIRAPALLI-620 008.

எங்களிடம் எல்லா வகையான இயற்கை வைரங்கள் எல்லா கலர்களிலும் மொத்த மாகவும் சில்லரையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

உப்பு உற்பத்தியும், உப்புத் தொழிலும்

S. அன்வர் - ஹாங்காங்.

உப்பு உற்பத்தி வளத்திலிருந்த தொழில் - வெள்ளையர்களின் ஆதிபத்திய காலத்தில் வெளிநாட்டின் தேவையையும் உருவாய்க் கொண்டு உப்பு உற்பத்திப் பெருக்கம் ஆரம்பமாயிற்று. உப்பளங்கள் உதயமாயின. உப்பு உற்பத்தி பெருக்கயடைந்தன. இந்தியாவில் தமிழ் மாநிலத்திலும், குஜராத் மாநிலத்திலும் இதர மாநிலங்களிலும் உப்பு உற்பத்தியானது. அரசு கட்டுப்பாட்டிற்குள்ளதாய் இந்த மாநிலங்களில் (குஜராத்திலும்—தமிழ் நாட்டிலும்) அரசு சால்ட் பேக்டரியாய் அரசு கலால் இலாகா கண்காப்பில் - அரசு அதிகாரிகளின் பார்வையில் - இந்த உப்பு அளங்கள் [SALT FACTORY] நடந்தன. தண்ணீர் பாய்ச்சுவது-உப்பு விளைந்த பின் அளங்களிலிருந்து ஒதுக்கி எடுப்பது போன்றவைக்கு - தொழிலாளர்கள் தேவை. அரசு கண்காணிப்பிலுள்ள பேக்டரி ஆனாலும் - அளங்கள் அத்தனையும் பொதுமக்களுடையதாகவேயிருந்தன. அளம் போடுவதற்கு (உப்பு உற்பத்தி செய்வதற்கு) அவசியம் (லைசென்ஸ்) அனுமதி ஒவ்வொரு வருடமும் பெற்றும் (புதுப்பிக்கவும்) செய்ய வேண்டும். இந்த உற்பத்தியில் தொழிலாளிகளின் உழைப்பு கடினமானாலும் — அவசியமானதுமாகும். 1930ம் வருடம் காந்திஜியின் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம், காந்திஜியால் துவக்கப்பட்டு [குஜராத் மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும், கேரள மாநிலத்தில் (வைக்கம் என்ற ஊரில்) பெரியார் அவர்களும் நாடு தழுவிய (உப்பு) சத்தியாக்கிரகத்தின் பின் - வைஸ்ராகவிருந்த இர்வின் பிரபுவிற்கும் காந்திஜிக்கும் ஒப்பந்தமானது. அதன் தனிப்பட்ட நபர்களும் பேக்டரிக்கு வெளியே எவ்வித கட்டுப்பாடுமின்றி - உப்பு-உற்பத்தி பண்ணலாமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சுதந்திரத்திற்கு பின் - பெருமளவில் பேக்டரிக்கு வெளியே - பொதுமக்களால் - தனி நபர்களால் - அளங்கள் போடப்பட்டு உப்பு உற்பத்தி பல மடங்கு பெருகலாயிற்று.

உப்புவில் முக்கிய சத்துக்களிருப்பதுடன் இரும்புச் சத்தும் சிறிதளவு இருப்பது அவசியம். அரசு பேக்டரியில் உப்பு நீரையும் - உற்பத்தி உப்புவையும் 'டிகிரி' அளவு கோல் வைத்தும் பரிசோதித்து உரிய சத்து-குறிப்பாக இரும்புச் சத்தும் சனிசமான அளவில் இருக்கிறதா என்பதை பார்த்துத்தான் உப்பு உற்பத்தி செய்யவும், உற்பத்தியான உப்பை பேக்டரியை விட்டு வெளியே கொண்டு வரவும் மக்களின் உபயோகத்திற்கு விற்கவும் அனுமதிப்பார்கள்.


S. அன்வர்

-காந்திஜீ-இர்வின்பிரபு ஒப்பந்தத்திற்குப்பின் தன்-பாட்டு உப்பென தனி நபர்களால் அளம் போடப்பட்டு உற்பத்தியான உப்பில் இந்த மாதிரி பாய்ச்சப்படும் உப்பு நீர் (நிலத்தடி கடல் நீர்) டிக்ரி'க்கு சரியாக இருக்கிறதா, உற்பத்தியான உப்பு சரியாகவும், சரியான அளவில் சத்தமைப்புக்களிருக்கிறதா? குறிப்பாக முக்கியமாக இருக்க வேண்டிய (IODIDE) தாதுச் சத்து இருப்பதில்லை. இதனால் இந்த உப்பை உபயோகிப்பதால்-குறிப்பாக கண் பார்வையில் குறைபாடு ஏற்படுகிறது என்றும் ஆகவே கட்டாயம் IODINE சத்துசேர்க்கப்படவேண்டுமெனவும், அரசு முடிவின் பேரில் - இப்போது அதற்கெனவே SALT IODISATION PLANT தோற்றுவிக்கப்

பட்டும் - அதன் மூலம் உப்புவில் IODIDE சத்து சேர்ப்பிக்கப்பட்டே - மக்களின் உபயோ திற்கு விற்கப் படுகின்றன.

-வெள்ளை ஏகாதிபத்திய காலத்தில் பிரிட்டிஷ் அரச குடும்ப உபயோகத்திற்கும் இத பிரபுக்களின் உபயோகத்திற்கும்—காயல்பட்டணம் உப்பளத்திலும் - அதைச் சேர்ந்த கீரனூ உப்பளத்திலும் - தூத்துக்குடி உப்பளத்திலும் உற்பத்தியான உப்புக்களே அனுப்பப்பட்டு வ தன. இந்த அளங்களில் உற்பத்தியாகும் உப்பு தூய வெண்மையானதாக சரியான அளவு தாதுப் பொருட்களுடையதாகமிருந்ததே உப்பு அரச குடும்ப உபயோகத்தி அனுப்பப்பட்டு வந்தனவென்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது காயல்பட்டணத்தைச் சார்ந்த கீரனூர் அளங்களும் அதைச் சுற்றியுள்ள நி பரப்பு பகுதியும் (DCW) தரங்கதரா கெமிக்கல் ஓர்க் ஸ்தாபனத்தால் (மிகக் குறைந்த - விலையில்) வாங்கப்பட்டும் (சுருங்கச் சொன்னால் அரசு அனுமதி உதவியுடன் கவரப் பட்டும்) தன் சொந்த உற்பத்தியைப் உப்பை உற்பத்தி செய்தும், அதிலிருந்து (உப்பை மூலப் பொருளாகக்கொண்டும்) சோடா ஆஷ், குளோரைன் போன்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. வட நாட்டில் ராஜஸ்தான் (ராஜபுதனம்) மாநிலத்திலிருந்து இங்கு வந்து சிரீ (ஸ்ரீ) சாகு ஜெய்ன் அவர்களும் அவரது மக்களும் பெரும்பகுதி பங்கையும், பொது மக்களில் ஒரு சிலர், ஒரு சில- சிறு அளவு பங்கு தாரர்களாகச் சேர்ந்து இந்த DCW ஸ்தாபனம் இயங்கி வருகின்றது. மேலும் சாகுபுரத்தில் PRC யென்ற தனிப்பிரிவும் பிளாஸ்டிக் மூலப் பொருள் தயாரிக்கும் பகுதியும் துவங்கப்பட்டு இயங்குகின்றன. இந்த DCW. ஸ்தாபனம் காயல் பட்டனம் பஞ்சாயத்து எல்லைக்குள் பட்டது. அதன் Revenue வீட்டுவரி தொழில்வரி யெல்லாம் காயல்பட்டண தேர்வு நிலை பேரூராட்சியே பெறுகின்றன.



தென்கிழக்காசியாவின் மிகப்பெரும் இரசாயன தொழிற்சா DCW Ltd., தொழிலாளர் விழாவில் முதுநிலை துணை தலைவ திரு இராமசாமி ஏரல் S P. முத்து அவர்களுக்கு பரிசளிக்கிறார் அருகில் ஹாஜி V. M. S. லெப்பை DCW சடகோபன் ஆகியோர்

காயல்பட்டணம் வடக்கு பகுதியான கொட்டமடை காடுயென்ற காட்டுப் பகுதி (தற்போது ஆப்ரஹாம்நகர்யென பெயரிடப்பட்டு] ஏறக்குறைய 160 ஹெக்டர் நிலப்பரப்பில் பெரும் பகுதியில் திரு M.D. ஆப்ரஹாம் அவர்களால் உப்பு உற்பத்தி செய்தும் (TABLE SALT) பவுடர் பண்ணப்பட்டு பாக்கட்டுகளில் அடைத்து மக்களின் உபயோகத்திற்கு விற்பனை யாகின்றது.

இந்த உற்பத்தித்தொழிலில் காயல்பட்டணம் சால்ட் கம்பெனி யென விளக்கு குடும்பத் தவர்களும், இதர பெயராலும், இதரர்களும், உற்பத்தி உப்பை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணியை (வர்த்தகத்தை) தூத்தக்குடியில் வைத்து செய்துவருகிறார்கள்.

ஆறுமுகநேரி உப்புத் தொழில் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிமிடெட். 0.1291, யென்ற பெயரால் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம், தியாகி. M. S. செல்வராஜன் Ex. MLA அவர்களை தலைவராகவும், பிரதம அமைப்பாளராகவும் கொண்டு 500 தொழிலாளர்களுடன் 12.1.49ல் பதிவு செய்யப்பட்டு 12.2·49ல் ரூ 5000/- மூலதனத்துடன் ஆரம்பிக்கப் பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

இந்த சங்கத்திற்கு சொந்தமான உப்பளம் 15 52 ஹெக்டரிலும் மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ள குத்தகைநிலம் 54.86 ஹெக்டரிலும் ஆக மொத்தம் சங்கப் பொறுப்பில் உப்பளம் 70. 38 ஹெக்டரில் (175.25 ஏக்கர்) நிலத்தில் உற்பத்தியாகின்றன. ஆண்டிற்க்கு 1¼ லட்சம் குவிண்டல் உப்பும் (ரூ 18½ லட்ச ரூபாய்க்குரியதும்) தயாராகின்றன. இந்த உற்பத்தியில் ஈடுபடும் (கூட்டுறவு) தொழிலாளிகள் ஆண்கள் (12+2) 14·/ ம், பெண்கள் (8·50+1=) 9.50ம் தினக்கூலியாகப் பெறுகிறார்கள். மேலும் தொழிலாளர்களின் நலனை மனதில் கொண்டும் ஊக்கத் தொகையும்-மழைக்காலங்களில் வேலையில்லாத போதும் வழங்கப்படுவதும்- இதனால் உற்பத்தியில் தொழிலாளிகளின் ஊக்கமும் உற்பத்திப் பெருக்கமும் அதிகரிக்க வகை செய்யப்படுகிறது. இது நமது நாட்டில் உப்புத் தொழில் வரலாற்றில் எங்கும் காணமுடியாத ஒரு புதிய முயற்சியாகும். இந்த சங்கத்தில் உற்பத்தியாகும் - தரமான "லேபர் சால்ட்" முத்திரை உப்பு இந்தியாவின் பல பாகத்திலும் குறிப்பாக, கர்நாடகம், ஆந்திரா, ஒரிசா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களுக்கும் ரயில், வாகனங்கள்மூலம் அனுப்பப்படுகிறது. குறிப்பாக நமது நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கும் - சலுகைவிலையில் உப்பு வழங்கப் பட்டது ஒரு சாதனையாகும். கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும், லேபர்சால்ட் முத்திரையுடனும் விற்பனைகள் பெருமளவில் செய்யப்படுகின்றன - மேலும் லேபர்சால்ட் முத்திரையுடன் பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்பட்ட (டேபிள்சால்ட்) பவுடர் உப்புக்களும் விற்பனை யாகின்றன.

தொழிலாளர் நலனுக்காக- கமலாநேரு காலனி என்றபெயரில் 30 வீடுகள் 1.8.79 ல் கட்டப்பட்டு அப்போதைய ஆளுனர் மேதகு ஸ்ரீ (திரு) பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் 10 வீடுகளும் கட்டப்பட்டுவருகின்றன. ஒவ்வொருவருடமும் தொழிலாளிகளுக்கு தீபாவளி பரிசாக லட்ச ரூபாய்க்கு மேல் கதராடைகள் வாங்கியளிக்கப் படுகின்றன. மேலும் பொங்கல் திருநாளில் ஒய்வூதியம் - விடுப்பூதியம் முதலியன வழங்கப் படுகின்றன.



M.S. செல்வராஜன் Ex. MLA.

உப்புத் துறையினரிடமிருந்து (CESS நிதியிலிருந்து) உதவிகள்பெற்றும்- பள்ளிக்கூடங்கள், இதர பொது ஜன தேவை வழிகளுக்கும் தொழிலாளர்கள் தேவைக்கும் பலன் பெறச் செய்யப்பட்டன. தொழிலாளர்கள் நிதியிலிருந்து நம் நாட்டின் பாதுகாப்பு நிதி, வெள்ளநிதி போன்றவையும் வழங்கப்பட்டன. இச்சங்கத்தை - சுவிடன், ஆப்பிரிக்காவைச் சார்ந்த தான்ஸானியா முதலிய அயல் நாட்டவர்கள் பலர் பார்வையிட்டு பணிகளை சிறப்பாக பாராட்டியுள்ளார்கள். உப்புத் தொழில் சம்மந்தமாக பல இராஜ்ஜியங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இச்சங்கம்- ஒரு படிப்புக்களமாகவும் செயல்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சிறந்த கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்தாபனத்தின் தலைவர் M.S. செல்வராஜன், அதன் தொழிலாளர் நிர்வாகிகள் ஆகியவர்களுக்கு இந்தப் பெருமைச் சாரும். பலமுறை M. L. A. வாக இருந்தும், நாட்டிற்கும்' நகருக்கும் சேவை செய்தும், K. A. H. S. SCHOOL போன்ற கல்வி நிலயங்களுச்கும். தேவைப்பட்டோர், பாட்டாளிகள் நலனுக்குப் பாடுபட்டுவரும் முதியவர் M. S. செல்வராஜன் அவர்கள் இந்த உப்புத் தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு தலைமைவகித்து நடத்துவது — அதன் தொழிலாளர்களின் பாக்கியமாகும்,

★

With the best compliments of :

Phone : 512

VILAKKU TRADERS

Main Road,
Kayalpatnam.

Dealers in :

PLYWOOD, LAMINATES.
I. C. I. PAINTS, AND ALL OTHER QUALITY BUILDING CONSTRUCTION MATERIALS.

With b3st pliments from :

Phone : 23245



LION
S. SULTAN JAMALUDEEN
District President. LIONS CLUB

TIP-TOP PANDIAN PALACE
262, **W. G. C. Road,**
TUTICCRIN - 628 002.

TIP - TOP PANDIYAN PALACE

a Dependable Biand for Quality Travel Goods

Such As:

Suit cases, brief cases, air bags, ladies hand bags. Vanity cases, wallet folders. School bags, files and letter Pad covers etc. etc..

★ NEW YEAR DIARIES ★

& Complimentary Articles our Specialit

With best compliments from:

NAZIM BROTHERS

Supplier of a wide Range of Gemstones

Hongkong-Bangkok-Singapore Kwalalumpur-Madras.

4, Ahsley Road,
KOWLOON, HONGKONG.

Tel : 3-683813, 3-684804.
Cable: MAHAJEED, HA NGKONG.
FAX. 3-3112625

Mail Address : TSIM SHA TSUI
TST-Box No. 95144
HONGKONG.

With the best compliments of:

GUARDIAN AGENCIES & Co.,

Dealers in: Gems, Jewelleries,
Orgaine & Aromatic Chemical

Suite 4, 11/F, STAR MANSION
3-5, MINDON ROW.
KOWLOON, HONGKONG.

TST BOX. 95352
Cable : RAJAYOGAM
Telex : 52150. GANY. HX.

"தென்னை" உயர் விளைச்சலுக்கு சில விவரங்கள்

— K. சுப்பிரமணிய யாதவ் —

தலைவர், குலசேகரன்பட்டினம் ஊராட்சி

துணைத் தலைவர், உடன்குடி ஊராட்சி ஒன்றியம்

விவசாய வளர்ச்சிக்காகவும், விவசாயத்தின் மூலம் தனிநபர் வருமானத்தை பெருக்கவும் மத்திய மாநில அரசுகள் எவ்வளவோ திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றன. வேளாண்மை பல்கலைக்கழகங்கள் தங்களின் இடைவிடா ஆராய்ச்சிகளின் பலனாக நவீன கண்டுபிடிப்புகளையும் அறிவியல் முன்னேற்றங்களையும் அறிவிக்கின்றன. இந்திய பிரச்சார சாதனங்கள் மூலம் பல்வேறு வழிகளில் அறிவிப்புகள் செய்தாலும் அவை இன்றும் கிராம அளவில் முழுமையாக விவசாயிகளை சென்றடைய வில்லை என்பதோடு நன்றாக விவரம் தெரிந்தவர்களும் இதில் அக்கறை காட்டவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

ஏராளமான நிலமும் நல்ல பொருளாதார வசதி உடையவர்களும் தங்களது நிலங்களை தரிசாக போட்டுள்ளனர். அலங்கார வீடுகள் கட்டுபவர்கள் வீட்டுக்கு பின்புறமும் முன்புறமும் இடங்களை காலியாக விட்டுள்ளனர். இத்தகைய இடங்களில் தென்னை பயிரிட்டால் வீட்டுத் தேவைகளுக்கு பயன்படுவதோடு நல்ல வருமானத்திற்கும் வழி ஏற்படும். பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதன் மூலம் நாம் மக்களுக்கும் தேசத்திற்கும் உழைக்கிறோம்.

தென்னை தமிழகத்தில் பயிரிடப்படும் ஒரு முக்கியமான எண்ணை வித்துப் பயிர். சமீப காலங்களில் தென்னை பயிரிடப்படும் பரப்பளவு வெகுவாக கூடிக் கொண்டே வருகின்றது. தென்னையில் சராசரியாக ஒரு மரத்திற்கு ஒரு ஆண்டில் 100 காய்கள் காய்த்தால் சிறந்த மகசூலாக கருதலாம். ஆனால் எல்லா விவசாயிகளும் இந்த மகசூலை அடைவதில்லை. தென்னை விளைச்சலை அதிகரிக்க திருந்திய சாகுபடி முறைகளான, சிறந்த ரகத் தேர்வு, உரிய நடவு முறை, தகுந்த நீர்ப்பாசனம் உரிய உரநிர்வாகம், ஊடுபயிர் சாகுபடி மற்றும் பயிர் பாதுகாப்பு மிகவும் அவசியமான நடைமுறைகளாகும்.

குட்டை ரகம்: இதன் தேங்காய்கள் பச்சை, ஆரஞ்சு, மஞ்சள் நிறமாக இருப்பதால் இவைகளை அழகுக்காகவும், இளநீருக்காகவும் பயிரிடலாம். சுமார் 8 மீட்டர் உயரம் வளரக் கூடியது. 3 முதல் 3.5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 40 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

நெட்டை ரகம்: இதன் தேங்காய்கள் பச்சையாகவும். மஞ்சள் கலந்த பசுமை நிறமாகவும் இருக்கும், வியாபாரத்திற்காக பயிரிடவும், எண்ணை மற்றும் நார் எடுக்கவும் சிறந்தது. சுமார் 15 முதல் 20 மீட்டர் வரை வளரக் கூடியது. நட்ட 5 முதல் 6 ஆண்டுகளில் பலனுக்கு வந்து 90 ஆண்டுகள்வரை பலனளிக்கக் கூடியது.

ஒட்டு ரகம்: இதன் தேங்காய்கள் பச்சையாகவும், மஞ்சள் கலந்த பசுமை நிறமாகவும் இருக்கும். வியாபாரத்திற்கும், சமையலுக்கும், எண்ணை மற்றும் நார் எடுக்கவும் உகந்தது. சுமார் 9 முதல் 16 மீட்டர் உயரம் வளரக் கூடியது. அதிக உரச் சத்துக்களையும், நீர்ப்பாசன வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடியது. நட்ட 4 முதல் 5 ஆண்டுகளில் பலனுக்கு வந்து 40 முதல் 50 ஆண்டுகள் வரை பலனளிக்கக் கூடியது. ஒட்டு ரகங்கள் வறட்சியைத் தாங்கி வளர்வதில்லை. எனவே போதுமான நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் மட்டுமே ஒட்டு ரகங்கள் பயிரிட வேண்டும்.

தென்னை மரம், களிமண், தொடர்ந்து தண்ணீர் தேங்கும் இடங்கள், தரைமட்டத்திற்கு அருகில் பாறை உள்ள இடங்கள் தவிர மற்ற எல்லா மண் வகைகளிலும் நன்கு வளரும். வடிகால் வசதியுள்ள இரு மண்பாங்குள்ள மண்வகை மற்றும் மணற்பாங்கான மண்வகை உகந்தது. தென்னை வளர்வதற்கு 3 அடி ஆழத்திற்கு சத்துள்ள மண் தேவை. சுமார் 90 சதம் வேர்கள் நாலரை அடிக்குள் இருக்கும். 6 அடி ஆழம் வரை கடினமான களிமண் தட்டு அல்லது பாறை இல்லாமல் இருந்தால் மரங்கள் நன்றாக வளரும்.

பருவமழை தொடங்குவதற்கு முன் கன்றுகளை நடவேண்டும். தண்ணீர் வசதி உள்ளவர்கள் பருவ மழைக்கு சில மாதங்கள் முன்பே நடலாம். பள்ளத்தாக்கான பகுதிகளிலும், தண்ணீர் தேங்கக் கூடிய இடங்களிலும் பருவமழை முடிந்த பிறகுதான் நடவேண்டும். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் ஜூன் - ஜூலை தகுந்த மாதங்களாகும்.

நிலத்தை நன்கு உழுது சமப்படுத்தி மூன்று அடி நீளம் மூன்று அடி அகலம் மற்றும் மூன்று அடி ஆழம் உடைய குழிகள் வெட்ட வேண்டும்: குழிக்குக் குழி இடைவெளி, நெட்டை மற்றும் ஓட்டு வகைகளுக்கு 25 அடி. குட்டை ரகத்திற்கு 18 அடி., வரப்புகளில் வரிசையாக நடுவதற்கு 22 அடி இருக்க வேண்டும். கன்றுகள் நடுவதற்கு 2 முதல் மூன்று மாதங்களுககு முன்பே குழிகளை வெட்டி ஆறப் போட வேண்டும். வெட்டிய மண்ணை குழிகளைச் சுற்றி வரப்பாக அமைக்க வேண்டும். குப்பைகளையும் காய்ந்த சருகுகளையும் குழிகளில் போட்டு எரிக்க வேண்டும். இதனால் பூச்சி, பூசனங்கள் தொந்தரவு குறையும். குழிகளின் அடியில் இரண்டு அடுக்கு உரி மட்டைகளை மட்டைகளின் குழிந்த பாகம் மேல் நோக்கி இருக்குமாறு அடுக்க வேண்டும். பின்னர் குழிகளில் 2 கிலோ மக்கிய தொழு உரத்துடன் மேல் மண்ணை சம அளவில் கலந்து இட வேண்டும். குழியில் 2 அடி ஆழத்தில் வேர்களை நீக்கிய தென்னங்கன்றை நட வேண்டும். மண்ணை நன்கு காலால் மிதித்து கன்றின் தேங்காய் பாகம் முழுவதும் மூடிஇருக்குமாறு நட்டு பனைஓலை அல்லது தென்னங்கீற்றுகளைக் கொண்டு நிழல் தருவது அவசியம். கன்றுகள் பலத்த காற்றினால் பாதிக்காமல் இருக்க இரண்டு குச்சிகளை நட்டு கன்றுகளை நன்கு கட்ட வேண்டும்.

நல்ல தரமான தென்னங்கன்றுகளை தேர்வு செய்து நட வேண்டும். 9 முதல் 12 மாத வயதுடைய நன்றுகள் நடுவதற்கு சிறந்தது. பருமனுள்ள கழுத்துப் பாகம் நட்ட 3 மாதம் முதம் 5 மாதங்களுக்குள் முளைத்த கன்றுகள் 6 முதல் 8 இலைகள் நன்றாக விரிந்து, பச்சையாக இருத்தல், கன்றில் விரைவில் ஓலை பிரித்து இருத்தல், அதிக வேர்கள் உள்ள கன்றுகள் இதுமாதிரி தேர்வு செய்த கன்றுகள் அநேக ஆண்டுகள் நல்லவிலைக் கொடுக்கும்.

கன்றுகளை நட்டியதிலிருந்து ஒரு ஆண்டுவரை ஒருநாள் விட்டு ஒருநாளும் மூன்று ஆண்டுகள் வரை வாரம் இரு முறையிலும் காய்ப்புக்கு வரும்வரை வாரம் ஒருமுறையும் அதன் பின் பத்து நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். மழைக்காலங்களில் இது தேவையில்லை. ஆனால் கோடையில் கட்டாயமாக நீர்ப்பாய்ச்ச வேண்டும். கோடைக் காலங்களில் கிணற்று நீரை நம்பியிருக்கும் தென்னந் தோப்புகளில் நிலத்தடி நீர் பற்றாக்குறைவினால் தென்னந் தோப்புகள் வாடுவதை காண்கிறோம். இக்குறையை போக்க சொட்டு நீர்ப் பாசனம் அமைத்து தென்னைக்கு வேண்டிய நீர் அதன் வேருக்கு கொடுப்பதன் மூலம் இருக்கின்ற நீரை முழுமையாக பயன்படுத்தி பயன் பெறலாம்.

மூன்று வயதிற்கு குறைவான நாற்றுகளுக்கு அதன் குழிகளிலேயே உரத்தைப் போட்டு விடலாம்.அதற்கு மேலான வயது மரங்களுக்கு அடி மரத்திலிருந்து நான்கு அல்லது ஐந்து அடி தள்ளி ஒரு அடி ஆழத்திற்கு வட்டமாக குழி வெட்டி உரத்தை அதில் இட்டு மூட வேண்டும். உரங்களை இரு சம பாகங்களாகப் பிரித்து ஜூலை, ஆகஸ்ட்டு மாதத்தில் முதல் பகுதியாகவும் இட வேண்டும்,

தென்னையில் ஆறடி வட்டப் பாத்தியில் பசுந்தாள் பயிரான சனப்பு, கொழிஞ்சி, காராமணி, டெஸ்மோடியம், கலப்ப கோனியம் இவற்றில் ஏதாவது ஒன்று பயிர் செய்து பூக்கும் தருணத்தில் வெட்டி மண்ணுடன் கலப்பதால் மண்ணின் தழைச்சத்து பூர்த்தி செய்வதோடு அங்ககப் பொருட்கள் கிடைப்பதால் காய்ப்புத் திறன் கூடுகிறது.

மண்ணில் துத்தநாகச் சத்து பற்றாக் குறையாக இருந்தால் மற்ற உரங்களுடன் 200 கிராம் துத்தநாக சல்பேட் போடவேண்டும். தொடர்ச்சியாக ஐந்து ஆண்டு துத்தநாக சல்பேட்டை இட்டு வந்தால் காய்ப்புத் திறன் அதிகரிக்கும், மேலும் நிலத்தில் நுண்ணூட்டச் சத்து பற்றாக் குறைவினால் குரும்பை உதிர்தல், நல்லிக்காய்கள் ஆகிய குறைகள் இருந்தால் தென்னைக்கான நுண்ணூட்டக் கலவையை ஆண்டிற்கு மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ அளவை இடவும்

பருவமழை ஆரம்பிக்கும் போதும் முடியும் போதும் இரண்டு முறை ஆழ உழவு செய்ய வேண்டும். தென்னை நட்ட முதல் ஐந்து ஆண்டுகளில் வாழை, மஞ்சள், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, காய்கறிகள், பருத்தி பயிறு வகைகள், கேழ்வரகு, சோளம், கம்பு முதலியவற்றை பயிரிடலாம். 20முதல் 25ஆண்டுகள் நன்கு வளர்ந்த தென்னைந் தோப்புகளில் தீவன புல். வகைகளை பயிரிடலாம் ஊடுபயிர் செய்யும், போது ஊடுபயிருக்கு தேவையான உரம் மற்றும் நீர் நீர்வாகம் மிகவும் அவசியம் ஊடு பயிருக்குத் தேவையான உரம் மற்றும் நீர்த் தேவையை பூர்த்தி செய்யாவிட்டால் தென்னையில் மகசூல் வெகுவாக பாதிக்கப்படும்,

பூவிலிருந்து தேங்காய் முற்ற ஒரு ஆண்டு ஆகிறது. ஆகவே நல்ல கொப்பரைக் காய்கள் கிடைக்கவும், தரம் உள்ள எண்ணைக்கான காய்கள் கிடைக்கவும் பன்னிரண்டு மாதமான காய்களை அறுவடை செய்ய வேண்டும். நாறு எடுக்க காய்களை பதினோரு மாதங்களில் பறிக்கலாம். மழைக்காலங்களில் 45 நாட்கள் இடைவெளியிலும், கோடைக்காலங்களில் 50 நாட்கள் முதல் 60 நாட்கள் இடைவெளியிலும் அறுவடை செய்ய வேண்டும்.

முடிவாக பொறுக்கி எடுக்கப்பட்ட தரமான கன்றுகளை நட்டு கன்று நட்ட முதல் ஆண்டு முதல் சிபாரிசு செய்யப்படும் உரம் மற்றும் நீர் நீர்வாகம் கோடையில் நீர் நீர்வாகம் உரி மட்டைகளை புதைத்து கோடையில் ஏற்படும் வறட்சியை சமாளித்தல் நுண்ணூட்டச் சத்து கலவை இடுதல் பசுந்தாள் உரப்ப பயிர்களை பயிரிட்டு அதன் மூலம் மண்ணில் தழைச்சத்து அதிகரித்தல் போன்ற உழவியல் முறைகளை கையாள்வதன் மூலம் தென்னந் தோப்புகளில் மகசூல் அதிகரிக்கும்.

வீடும் வீட்டு அலங்காரமும்

L. K. S. செய்யது அஹமது

விஞ்ஞானத்தோடு விளையாடும் நாகரீக வாதியாக இருந்தாலும் - நாகரீகம் என்றால் என்ன வென்றே தெரியாத ஆதி வாசிகளாக இருந்தாலும் சரி மனிதனுக்கு இன்றி அமையா தேவை, உணவு உடை உறைவிடம்.

காடுகளில் உயிர் வாழ்ந்த ஆதிவாசிகளும் காட்டிலுள்ள பயிர்களையும் பழங்களையும் தின்று இலைகளையும் தழைகளையும் கொண்டு மானத்தை மறைத்த போதும் குகைகளிலும் மரங்களிலும் வீடமைத்து வாழ்ந்தான்.

இன்று நாகரீகம் விஞ்ஞானத்தின் வியக்கத்தக்க முன்னேற்றம் இவற்றின் விளைவாக பூமிக்கடியிலும் வானத்திலும் கிரகங்களிலும் வாழத் தலைப்பட்டு விட்டான். பனி, கடல், பூகம்பம் போன்ற இயற்கை அழிவுகளை தாங்கும் வகையில் இன்று மனிதனின் உறைவிடங்கள் அமைக்கப்படுகின்றன.

மிகப் பெரும் அளவில் மக்கள் தொகை பெருக்கமும் பொருளாதாரம் மற்றும் இடவசதி இன்மையும் இந்தியாவில் வீட்டுப் பிரச்சனைக்கு முக்கியக் காரணங்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தியாவில் பல நகரங்களில் பல்வேறு இனத்தவரிடையே கூட்டுக் குடும்பங்களாக வாழுகின்ற வழக்கம் இருந்தாலும் பெரிய கிராமமான காயல்பட்டணத்தில் ஒரு பெண்ணுக்கு ஒரு வீடு என்ற வழக்கம் நூற்றாண்டுகளாக நடைமுறையில் உள்ளது. பெரிய நகரங்களில் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய அடுக்கு மாடிகளைக் கட்டி அதில் ஒவ்வொரு தனித்தனி பகுதிகளை விலைக்கு வாங்கி அதில் வாழ்கின்றனர். ஆனால் காயல்பட்டணத்தில் மாடிவீடாக இருந்தாலும் தனி ஒரு வீடு ஒரு பெண்ணுக்கு என்கின்ற வழக்கம் தான் உள்ளது.



L.K.S. செய்யது அஹமது

1100 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டிருந்தாலும் ஒரு சிறப்பான நகர அமைப்பை காயல்பட்டணம் பெற்றிருப்பது சிறப்பிற்குறியதாகும்.

விசாலமான தெருக்களையும் ஒவ்வொரு வீட்டிற்க்கும் அடுத்தடுத்த பாதையும் இரு தெருக்களை பிரிக்கும் பொது பாதைகள் இருந்தும் இல்லங்களை பெரிதாக்கும் பலரது உள்ளங்கள் குறுகியதால் சாலைகளும் பாதைகளும் இன்று ஆக்கிரமிப்பிற்கு ஆளாகின்றன. இது வருந்தத் தக்க விஷயமாகும்.

நமக்காக வசதியான வீட்டை அமைக்கும்போது நாம் சுற்றுப் புறத்தை கவனிக்க மறந்து விடுகிறோம். வீட்டின் நான்கு புறத்திலும் நல்ல இடவசதி இருந்தால் தூய்மையான காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கும். இது மனித சுகாதரத்திற்கு மிக அவசியம் சாலைகளில் ஆக்கிரமிப்புக்கள் ஏற்படுத்தாமலிருந்தால் விபத்துக்கள் தவிர்க்கப்படும் என்பதை உணர வேண்டும். அடுத்து, தேவைக்கு ஏற்றவாறு திட்டமிட்டே வீடுகட்ட வேண்டும். சிறுகக்கட்டி பெருக வாழ் என்ற அடிப்படையில் குறைந்த பட்ஜெட்டில் நிறைந்த வசதிகளோடு வீடுகளை அமைக்கலாம். காயல்பட்டணத்தை பொறுத்த வரையில் நல்ல கழிவறை வசதிகள் எல்லா வீடுகளிலும் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும் அதே போல் ஊதி ஊதி விறகு எரித்த காலம் போய் இன்று சமையல் வாயு அடுப்புகளே பயன் படுத்தப்படுகின்றன.

வீடு கட்டி வாழ்வதில் வீட்டிற்குள் அலங்காரம் செய்வதும் இன்று அத்தியாவசியமாகி விட்டது. வரவேற்பு அறைகளில் வனப்புமிக்க சோபாக்கள் அதன் நடுவே வண்ண வண்ண டீப்பாய்கள், படுக்கை அறையில் பளபளக்கும் மைக்கா கட்டில்கள், இதயத்தைஈர்க்கும் இதமான பஞ்சு ஃபோம் மெத்தைகள், பசுமை எழிலுக்கு புதுமை ஊட்டும் டிரஸிங் டேபிள்கள், சமையல் சுவையறிய டைனிங் டேபிள்கள், உடமைகளை பாதுகாக்க உறுதியான ஸ்டீல் பீரோக்கள் இது போன்ற பர்னிச்சர்கள் நம் வாழ்க்கைக்கும் துணைநிற்கும் சாதனங்களாக அமைந்து விட்டன.

இத்தகைய அலங்காரப் பொருட்களை வாங்கும்போது நாம் கவனத்துடன் வாங்க வேண்டும். விலைமலிவு என்ற பெயரால் தரம் குறைந்த பொருட்களும் ஒரு பங்கு பணத்திற்கு மூன்று மடங்கு பொருள் என்ற போர்வையில் மோசடிகளும் நடமாடும் காலம் இது.

எனவே உழைத்து சம்பாதித்த பணத்தை கொண்டு வீடுகட்டும் போதும் அதை அலங்கரிக்கும் போதும் நம்பிக்கையானவர்கள், தரமுள்ள பொருட்களை சிறப்பாக தயாரிப்பவர்கள் தொழில் அனுபவம் உள்ளவர்கள் என்ற அடிப்படையில் தேர்வு செய்தால் உங்கள் பணத்திற்கு பாதுகாப்பு உங்கள் எண்ணத்திற்கு ஏற்ற வகையில் அவை சிறப்பாக அமையும்.

★

உடல் நலம்

விளையாட்டும் வாழ்வின் வனப்பும்

கே. எம். இஸ்மத், B.Sc.

துணைத் தலைவர், சிதம்பரனார் மாவட்ட கால்பந்து & பூப்பந்துக் கழகம்]

[செயலாளர், ஐக்கிய விளையாட்டுச் சங்கம்

அறிமுகம் :-

நிறைந்த வாழ்க்கைக்குச் சிறந்த உடல்நலம் அடிப்படை. "சுவரிருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்", அது போல பழுதற்ற உடலிருந்தால்தான் முழுமை பெற்ற வாழ்வு அமையும். குறைவற்ற உடல்நலம் தருவது இனிய விளையாட்டுக்களே. நோய் நீக்க நல்ல உடல் சுகத்தை தருவதில் மருந்துகளும் விளையாட்டுகளைப் போல் செயலாற்றுகின்றன. நோய் வந்த பின்பே மருந்துகள் குணப்படுத்துகின்றன. நோய் வராமலேயே தடுக்கும் அரணாக விளையாட்டுக்கள் விளங்குகின்றன. கசப்பு மருந்துகளை சிரமத்துடன் உட்கொண்டு நலம் பெறுகின்றனர். ஆனால் விளையாட்டுக்களை மகிழ்ச்சியுடன் ஆடி உள்ளத்திலும், உடலிலும் எழுச்சி பெறுகின்றனர்.

விளையாட்டின் சிறப்பியல்பு:

விளையாட்டு மனிதனின் உலகியல் வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை இரண்டையும் செம்மைப் படுத்துகிறது.

'' உடல் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்'' — என்றக்

கவிமணியின் கூற்று உடல்நலத்தைக் பேணுவதன் மூலமே உலகில் வாழ்க்கையைச் சிறப்பாக அனுபவிக்க முடியும் எனப் பறைசாற்றுகிறது.

'' உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ''

எனச் சத்தான உடம்புக்குமுத்தான விளக்கம் தருகிறார் **திருமந்திரம்** பாடியத் தமிழ்ச் சித்தர் **திருமூலர்.**



K. M. இஸ்மத் B. Sc.
முன்னாள் பேரூராட்சி
மன்ற தலைவர்

ஆன்மீக வாழ்க்கை :-

உலகியல் வாழ்க்கைக்கு மட்டும் பயன்பட்டால்கூட நாம் விளையாட்டைச் சிறப்பாகச் சொல்லிவிட முடியாது. இம்மை மறுமை என எந்நிலையிலும் நிலைத்திருப்பதாகச் சொல்லக்கூடிய ஆன்மீக வாழ்க்கைக்கும் விளையாட்டு துணை புரிகிறது.

'' உளம் வலுப் பெறவே
உடல் வலுப் பெறுக'' என்கிறார் - **விவேகானந்தர்.**

''Sound body leads to a sound mind'' என்பது ஆங்கிலப் பொன்மொழி. உள்ளம் களிக்க உடல்வளம் செழிக்க வேண்டும். உடல் வளம் கொழிக்க விளையாட்டும், உடற் பயிற்சியும் தேவையானவை. எனவேதான் பைந்தமிழ்ச் சாரதியாம் **பாரதி**

'' காலை எழுந்தவுடன் படிப்பு - பின்புக்
கனிவு கொடுக்கும் நல்லப் பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளுப் பாப்பா ''

எனக் கல்விக்கும், விளையாட்டுக்கும் சமஅளவில் சிறப்பிடம் அளித்து காலம்காலமாக மாலையில்விளையாடுவதை வழக்கப்படுத்திக் கொள்ள அறிவுறுத்துகிறார்.

சங்கத் தமிழர் வாழ்வில் விளையாட்டு:-

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்கத்தமிழர் வாழ்வில் அக வாழ்க்கை, புற வாழ்க்கை என இரு நிலைகளில் புறவாழ்க்கையே பெருமையாகப் பேசப்படுகிறது. புற வாழ்க்கை வீரவாழ்வாக வீர விளையாட்டுகளையே தன்னகத்தே கொண்டுள்ளது. ஆடவர்கள் மற்போர், விற்போர், வாள்வீச்சு, சிலம்பாட்டம், புலிவேட்டை, காளை அடக்குதல் முதலிய விளையாட்டுக்களை விரும்பி ஆடினர். மகளிரும் தங்களின் மெல்லிய இயல்புக்கேற்ப ஊசல், கழங்காடல், நீந்துதல், வட்டாடல் போன்ற விளையாட்டுகளைப் பின் பற்றினர்.

இஸ்லாத்தில் இயற்கை உடற்பயிற்சி:-

ஐங்காலத் தொழுகையின் மூலமும், நோன்பு பிடித்தல் மூலமும், மிகச் சிறந்த உடற் பயிற்சியை இஸ்லாம் மறைமுகமாகத் தருகிறது. வைகறைத் தொழுகையான **ஸுப்ஹு**, பகல் தொழுகையான **ளுஹ்ரு** பிற்பகல் தொழுகையான **அஸ்ர்** மாலைத் தொழுகையான **மஃரிபு**, இரவுத் தொழுகையான **இஷா** ஆகியன மனம் ஒரு நிலைப் படவும், உடலுறுப்புகள் அனைத்தும் பயிற்சி பெறவும் வாய்ப்பளிக்கின்றன. **நிலை, ருகூவு, இஃதிதால், ஸுஜூது, இடையிருப்பு பின் ஸுஜூது. அத்தஹிய்யாத்து** ஆகியத்தொழுகை முறைகளில் **சுஜூது** என்ற நிலையில் முழங்காலிட்ட மர்ந்து, முதுகுத் தண்டு வளைய நெற்றிப் பொட்டு தரையில் படும்படி தொழும் போது மூட்டு, கணுக்கால், விரல்கள், முதுகெலும்பு ஆகியன பயிற்சிப் பெறுவதோடு குருதி ஓட்டம் மூளைக்கு வந்து செல்வதால் அறிவு வளர்ச்சியும் ஏற்படுகிறது.

வகை வகையான வண்ண விளையாட்டுக்கள்:-

தனி விளையாட்டுக்கள், குழு விளையாட்டுக்கள், தட,கள விளையாட்டுக்கள் என விளையாட்டுகளின் வகைகள் பல. உலகின் முதன்மை விளையாட்டுகளாக கால்பந்து, கைபந்து, பூப்பந்து, கூடைப்பந்து, மென்பந்து, வளைபந்து, வளை கோல்பந்து, கிரிக்கெட், டென்னிஸ் ஆகியன விளங்குகின்றன.

கால்பந்து (FOOT BALL):-

பாமரர்களும் விரும்பிச் சுவைக்கும் இவ் விளையாட்டு எந்த நாட்டைச் சார்ந்தது என்ற உறுதியானத் தகவல் இல்லை. கால்பந்தாட்டம் பற்றித் தெரியாத மன்னர் ஒருவர் கால் பந்தாட்டப் போட்டிக்குத் தலைமை ஏற்றுப் பரிசு வழங்கும்போது

'' ஒரு பந்துக்காகவா 22 பேர் இப்படி அடிதடி சண்டையிட்டனர்! என் நாட்டில் பந்துக்கு பஞ்சமா !! ... கூடாது. உடனடியாக ஆளுக்கொரு பந்து வழங்க ஆணையிடுகிறேன்''

எனக் கூறியதாக ஒரு நகைச்சுவைக் கதை நம் நாட்டில் சொல்வதுண்டு. *1863*ல் இங்கிலாந்திலும், **1904**ல் பாரிஸிலும் கால்பந்தாட்டாக் கழகங்கள் தொடங்கப்பட்டன. *1900*ல் ஒலிம்பிக்கில் கால்பந்தாட்டம் சேர்க்கப்பட்டது. *1937*ல் இந்தியக் கால்பந்துக் கழகம் தொடங்கப்பட்டு மாநிலங்கள், மாவட்டங்கள் தோறும் உள்ளக் கால்பந்துக் கழகங்களைச் சிறப்பாகச் செயல் படுத்துகிறது.

கைப்பந்து (VOLLEY BALL):-

அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த **வில்லியம் ஜீமார்கன்** *1895*ல் கைப்பந்து விளையாட்டைக் கண்டு பிடித்தார். முதலில் மின்டன் எனப்பட்ட இவ் விளையாட்டில் 7 அடி உயர வலை கட்டி, மட்டையால் நூலபந்தைத் தட்டி விளையாடினர். வலையின் இருபுறமும் பந்தைக் கையால் உந்தித் தள்ளும் முறையைப் புகுத்தியவர் **டாக்டர் ஏ. டி. ஹால்ஸ்டெட்** ஆவார். *1947*ல் சர்வதேச கைப்பந்துக் கழகம் பாரிஸில் அமைக்கப்பட்டது. *1964*ல் ஒலிம்பிக் போட்டிகளில் கைப்பந்து சேர்க்கப்பட்டது. இந்திய வாலிபால் சங்கம் *1952*ல் தொடங்கப்பட்டது. மாநில மாவட்ட வாரியாக கைப்பந்தாட்டக் கழகங்கள் அமைக்கப்பட்டு இந்திய வாலிபால் சங்கத்துடன் இணைக்கப்பட்டது.

பூப்பந்து (BALL BADMINTON):-

முதலில் தென்னிந்தியாவில் சிறப்படைந்திருந்த இவ்விளையாட்டு நாளடைவில் இந்தியா முழுவதும் பரவி புகழ்பெற்றது.

கூடைப்பந்து (BASKET BALL):-

அமெரிக்காவைச் சார்ந்த **ஜேம்ஸ் ஏ. நைஸ்மித்** என்ற உடற்கல்வி இயக்குநரால் அறிமுகம் செய்யப்பட்ட இவ் விளையாட்டை ஒய்.எம்.சி.ஏ. நிறுவனங்கள் வெளிநாடுகளில் பரப்பின. 1936ல் ஒலிம்பிக்கில் இடம் பெற்றது. 1950ல் தொடங்கப்பட்ட இந்தியக் கூடைப்பந்து கழகம் மாநிலங்கள், மாவட்டங்கள் தோறும் கூடைப்பந்து கழகங்களை அமைத்து சிறப்பாகச் செயல் படுத்தி வருகிறது.

மென்பந்து (SOFT BALL):-

சிகாகோ 'பிராகட் படகுக் கழகம்' 1887ல் நடத்திய விழாவில் ஒருவர் குத்துச் சண்டைக் கையுறையைக் கழற்றி கூட்டத்திற்குள் வீச, மற்றொருவர் அங்கே கிடந்த துடைப்பக் கட்டையால் கையுறையை வீசியவரிடமே தட்டிவிட இதைக் கண்ட **ஜார்ஜ் டபிள்யூ ஹான்ஹாக்** என்பவர் மென்பந்து விளையாட்டை உருவாக்கினார்.

வளைபந்து (TENNI KOIT) :-

டென்னிஸ் (Tennis) கோயட்ஸ் (**Quoits**) என்ற இரு விளையாட்டுகளின் இணைப்பே வளை பந்தாட்டம். அணிக்கு ஒருவரோ இருவரோ ஆடலாம்.

வளை கோல்பந்து (HOCKEY) :-

தரையில் ஆடுவது, பனிப்பரப்பில் ஆடுவது என ஹாக்கி விளையாட்டு இரு வகைப்படும். 1900ல் ஒலிம்பிக் போட்டிகளில் ஹாக்கியும் இடம் பெற்றது. இந்தியாவில் ஆங்கிலேயரால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்விளையாட்டில் 1960ம் ஆண்டு வரை 40 ஆண்டுகள் இந்தியா வெற்றிக் கொடி நாட்டி வந்தது. இந்தியாவின் 'பத்மபூஷன்' விருது பெற்ற **மேஜர் தயான் சந்த்** என்பவர் 'ஹாக்கி மந்திரவாதி' என உலக மக்களால் பாராட்டப்பட்டார். 1949ல் அகில இந்திய ஹாக்கி சம்மேளனம் தோன்றியது. இந்திய, பாகிஸ்தான் பிரிவினையால் ஹாக்கி பெரிதும் பாதிக்கப்பட்டு இந்தியா பின் தங்கியது.

கிரிக்கெட்:-

12ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய இவ் விளையாட்டிற்கு முதலில் 18ஆம் நூற்றுண்டில் 'ஹாம்பிஸ்டன் கிரிக்கெட் கிளப்' தொடங்கப்பட்டது. 1787ல் லண்டனில் 'மெர்ல் போர்ன் கிரிக்கெட் கிளப்'பும், 1909ல் 'இம்பீரியல் கிரிக்கெட் கிளப்'பும் தொடங்கப்பட்டன. காமன்வெல்த் நாடுகள் அனைத்தும் உறுப்பினராக உள்ள 'இம்பீரியல் கிரிக்கெட் கிளப்'பின் அனுமதியோடுதான் கிரிக்கெட் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்ய முடியும். ஆங்கிலேயரின் தொடர்பால் 1792ல் கல்கத்தாவில் முதலாவது கிரிக்கெட் கிளப் இந்தியாவில் உருவானது. இங்கிலாந்திற்கு வெளியே தோன்றிய முதல் கிரிக்கெட் கிளப் இதுவே தான். 1926ல் தொடங்கப்பட்ட இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் கழகம்தான் வெளிநாடுகளில் ஆடப்படும் டெஸ்ட் பந்தயங்களைத் தீர்மானிக்கிறது. முதலாவது இந்தியக் கிரிக்கெட்குழு 1932ல் இங்கிலாந்திற்கு விளையாடச் சென்றது. புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்களான ரஞ்சித்சிங், துலிப்சிங் ஆகியோர் பெயர்களில் ரஞ்சித் கோப்பை, துலிப் கோப்பை நிறுவப்பட்டு 1934 முதல் போட்டிகள் நடத்தப் படுகின்றன.

கபாடி:-

''உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு'' என முழங்கிய தமிழர் தந்தை **சி.பா.ஆதித்தனாரின்** முயற்சியால் திருச்செந்தூர் வட்டார அளவில் இருந்த சடுகுடு என்ற கபாடி விளையாட்டு இன்று உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள்:-

கிரீஸ் நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் கி.மு. 776ல் விளையாட்டுப் போட்டிகள் முதலில் தொடங்கப்பட்டன. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட போட்டிகளில் தொடக்கத்தில் ஓட்டப் போட்டிகளும், பின்னர் ரதப் போட்டி, குதிரையோட்டம், குத்துச்சண்டை, மல்யுத்தம், போன்றவையும் இணைக்கப்பட்டன. கி.பி. 394 முதல் பண நெருக்கடியாலும், அரசியல் காரணமாகவும் ஒலிம்பிக் போட்டிகள் நிறுத்தப்பட்டன.

''ஒலிம்பிக்கின் தந்தை'' எனப் புகழப்படும் பிரான்சு நாட்டின் **பாரன் பியரிடி கூபர்டின் பிரபு**வின் முயற்சியால் சுமார் 500 ஆண்டுகள் நின்று போன ஒலிம்பிக் மீண்டும் தொடங்கப் பட்டது. **கிரீஸ்** நாட்டின் தலைநகரான '' அறிவொளி பரப்பும் அணையா விளக்கு''எனப்படும் **ஏதேன்ஸ்** நகரத்தில் 1896ல் நடந்த தற்கால ஒலிம்பிக்கின் முதல் போட்டியில் ஒன்பது நாடுகளிலிருந்து ஐம்பது ஆண்கள் மட்டுமே பங்கேற்றனர். 1900ஆம் ஆண்டு முதல்தான் ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

மேற் குறிப்பிட்ட விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டும் நல்ல விளையாட்டு வீரர்களை உருவாக்கிடவும் நம் காயல்மாநகரில் ஆண்டுதோறும் அகில இந்திய, மாநில, மாவட்டங்கள் அளவில் கால்பந்து, மின்ஒளி கைப்பந்து, கிரிக்கெட், 35 கி.மீ. சைக்கிள் ஓட்டப் போட்டி முதலியவைகளை **ஐக்கிய விளையாட்டுச் சங்கம்** சிறப்புடன் நடத்தி இந்தியா முழுவதும் பாராட்டு தலை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டால் விளையும் நன்மை:-

இளமை, அழகு, உடல் உரம் ஆகியவற்றை உண்டாக்குவதோடு உள்ள உறுதியையும் விளையாட்டுக்கள் வழங்குகினறன. குறிப்பிட்ட விதிமுறைக்குட்பட்டுப் போட்டிகள் நடைபெறுவதால் காலந் தவறாமை, கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றவற்றை இயல்பாகவே விளையாட்டு வீரர்கள் பெறுகின்றனர். ஆண்கள், பெண்கள், பெரியவர், சிறியவர், இளைஞர், குழந்தைகள் என பல்வேறு தரப்பினருக்கும் வெவ்வேறான விளையாட்டுப் போட்டிகள் இருப்பதால் உடல், உள்ளம் இரண்டிற்குமே சிறந்தப் பயிற்சியாக அமைந்து ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதற்கேற்ப உடல், உள்ள நோய்கள் தவிர்க்கப்படுகின்றன. குழு விளையாட்டுக்கள் ஒற்றுமை உணர்வையும், சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவத்தையும் வளர்க்கின்றன. விளையாட்டு வீரர்கள், மாவட்ட, மாநில, நாட்டு, உலக அளவில் போட்டிகளில் ஆடச் சென்ற வாய்ப்பினைப் பெறுவதால் கலாச்சார, பண்பாட்டு தொடர்பும், நாடுகளிடையே நட்புறவும் ஏற்பட்டு உலகில் அமைதி நிலவி சமாதான சகவாழ்விற்கு வழி செய்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்த இந்த நாட்களில் பட்டப் படிப்புடன் பல்கலைக் கழக அளவில் விளையாடும் திறன் கொண்டோரை வங்கி, இரயில்வே போன்றப் பல்வேறு துறைகளிலிருந்தும் வேலை வாய்ப்புகள் தானாகவே தேடி வருகின்றன. உலக அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு நாட்டைச் சார்ந்தவர் முதலிடம் பெற்று வெற்றி மேடைக்குச் செல்லும்போது அவரது நாட்டின் நாட்டுப்பண் இசைக்கப் படுகிறது. இதிலிருந்து விளையாட்டு தனி நபருக்கு மட்டுமின்றி நாட்டுக்கே உலக அரங்கில் உன்னதமான இடத்தைப் பெற்றுத் தருகிறது என்பதை பெருமையுடன் அறியலாம்.

நிறைவுரை:-

ஏட்டுக் கல்வி, பெற்றோர் ஆசிரியரின் அறிவுரைகள் போன்றவையே திருத்த முடியாத குழந்தைகளின் உள்ளங்களையும் விளையாட்டுகள் பக்குவப்படுத்தி செம்மையாக்குகின்றன. கூடிவாழும் தன்மையை விளையாட்டுக்களின் மூலமே குழந்தைப் பருவம் முதல் அனைவரும் பெறுகின்றனர்.

'' ஓடி விளையாடு பாப்பா -- நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா -- ஒரு
குழந்தையை வையாதே பாப்பா''

என்ற பாரதியாரின் பொன்மொழிக்கேற்ப அனைவரும் கூடி விளையாடுவோம்! வளப்பான வாழ்வை நாடிப் பெறுவோம்!

குழந்தைநலம் - தாய்மார்களின் பெரும் பங்கு

டாக்டர் **M. A. முகம்மது தம்பி** M.D.D.C.H., A.B.F.A.A.P
பேராசிரியர், குழந்தைகள் பிரிவு, மருத்துவக்கல்லூரி, திருநெல்வேலி.

நல்ல ஆரோக்கியமான குழந்தைகளே ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். பெரியவர்களைக் கூட குழந்தை உள்ளம், குழந்தை மனம் என்று பாராட்டுகின்றோம். ஒரு நாடு சுபிட்சமாக இருக்கின்றதா என்றறிய அதன் தொழில் வளம், மக்கள் தொகை, மக்களின் மாத வருமானம் என்று கணக்கெடுப்பதை விட குழந்தைகள் மரண விகிதம் எவ்வளவு என்பது ஒன்றை வைத்துக் கொண்டே சொல்லி விடலாம். குழந்தைகள் மரணவிகிதம் என்பது ஆயிரம் பிறந்த குழந்தைகள் ஒரு வருட முடிவில் எத்தனை உயிரோடு இருக்கின்றது என்பது தான். சுமார் 25 வருடங்களுக்கு முன்னால் குழந்தைகள் மரண விகிதம் 200-க்கு மேலாக இருந்தது. தற்போது நமது இந்திய நாட்டிற்கு 100ஆக குறைக்கப்பட்டு இருக்கின்றது. தமிழ்நாட்டில் 68-ம் அண்டைய மாநிலமான கேரளாவில் 35மாக இருந்து வருகின்றது. இதற்கு காரணம் கர்ப்பவதிகளின் உடல் நலத்தில் கவனம், குழந்தை பெறுவதில் ஏற்பட்ட முன்னேற்றம், குழந்தைகளுக்கு வரும் தடுப்பு வியாதிகளிலிருந்து காத்தல், உணவு வகைகளில் அதிக கவனம் செலுத்தி போஷாக்கான உணவு கிடைத்தமை, விபத்துக்களிலிருந்து கணிசமான அளவு பாதுகாத்தல், பிள்ளை பெறுதல் சிசு பாதுகாத்தல் போன்றவற்றில் மருத்துவப் பாதுகாப்பு போன்றவை பெருமளவு உதவியிருக்கின்றது. கட்டுப்பாடான குடும்பமும் பெரிதளவு உதவியிருக்கின்றது.

நமது ஊரிலேயே சுமார் 25 வருடங்களுக்கு முன் டிஃப்திரியா, வெல்வாத ஜன்னி. அம்மை, குத்திருமல், இளம்பிள்ளைவாதம் போன்ற வியாதிகள் அதிகமான அளவு இருந்தது. காயல் பட்டினத்துத் தாய்மார்களின் முழு ஒத்துழைப்புடன் இங்குள்ள மருத்துவர்களின் ஓயாத உழைப்பினாலும் இன்றுஅவைகள் இருக்குமிடம் தெரியாமல் இருக்கின்றது. நெல்லை சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களை எடுத்துக் கொண்டாலும் முழுமையாக தடுப்பு மருந்துகள் போடப்படுகின்ற ஒருஊர் இருக்கிறதென்றால் அது நிச்சயமாக காயல்பட்டணமாகத் தான் இருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மருத்துவர்களே இல்லாதிருந்த ஒருகாலத்தில் காயல் மக்கள் பல ஊர்களுக்கும் சென்று சங்கடத்துடன் வைத்தியம் பார்த்து வந்தார்கள். ஆனால் இன்றோ இம்மண்ணின் மைந்தர்களே பொது மருத்துவம், சிறப்பு மருத்துவம், ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று மக்களுக்கு சேவை செய்து வருவதை கண்கூடாக காண்கின்றோம் உணவு பற்றாக்குறையினால் ஏற்படும் சபலை நோயை தற்போது மருந்துக்கும் கூட காண்பது அரிது. நம் மக்கள் உணவு வகைகளில் குறிப்பாக குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு கொடுப்பதில் கைதேர்ந்து இருக்கிறார்கள் என்பதே தெரிகின்றது. நமதூர் மக்களைப் பற்றி இவ்வூர் மருத்துவர் என்ற முறையிலும், மருத்துவக் கல்லூரி குழந்தைகள் பிரிவு பேராசிரியர் என்ற முறையிலும் நான் பெருமைப்படுகின்றேன். பல மைல்கள் படிப்பிற்காக சென்ற காலமும் உண்டு. ஆனால் இன்றோ நமது ஊரிலேயே நல்ல சிறந்த பள்ளிக்கூடங்கள், ஆங்கிலம் அரபியுடன் தாய் மொழியான தமிழும் கற்க வசதி மிக்க பள்ளிக்கூடங்கள் பல இருக்கின்றன. அதற்காக பாடுபட்ட பல பெரியார்களையும் நான் இந்த நல்ல நேரத்தில் நினைத்துநன்றி பாராட்டுகிறேன். நமதூரில் ஆடவர்கள் தொழில் காரணமாக பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் இருக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் குழந்தை வளர்ப்பு முழுதும் தாய்மார்களின் கண்காணிப்பிலேயே இருந்து வருகின்றது. இக்குழந்தை நல்ல



Dr. Mohamed Thamby
Kayalpatnam.

ஆரோக்கியமாகவும், நோய் நொடியின்றியும் இருப்பதற்கு முக்கிய காரணமான நமதூர் தாய்மார்களை நினைத்து மகிழ்வடைகிறேன். எனினும், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு சில அறிவுரைகள் கூற கடமைப்பட்டுள்ளேன்.

சாதாரண காய்ச்சலுக்கும் பல மருத்துவர்களிடம் பலவிதமான மருந்துகளை ஒரு சில நாளிலேயே கொடுத்து சீக்கிரம் குணமாக வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் பொருள் விரயம் செய்வதை ஓரளவு தடுக்கலாம். Health Conscious என்பது அவசியம் தான். ஆனால் அதுவே அதிக அளவு இருப்பதால் குழந்தையும் பாதிக்கப்படுகின்றது. பணமும் விரயம் ஆகின்றது. கொஞ்சம் பொறுமையும், மருத்துவர்கள் இடத்தில் நம்பிக்கையும் இருந்தால் இவைகளை ஓரளவு தடுக்கலாம்.

குழந்தைகளுக்கு உடல் வியாதி மட்டுமல்லாமல் மன வியாதியும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனையும் தடுக்க வேண்டும். ஆங்கில மொழியில் தான் படிக்க வைக்க வேண்டும் என்ற ஒரு தீராத ஆசை தாய்மார்களுக்கு இருக்கும் போது அதற்கு அவன் தகுதியானவன் தானா என்பதை எண்ணிப்பார்க்க மறந்து விடுகின்றோம். பள்ளிக்கூடம் விட்டு வந்த பிறகு தாய்மார்கள் தங்களுடைய படிப்பு குறைவினால் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக பாடம் புகட்ட வழியில்லாத ஒரு சூழ்நிலை. காலையில் விழித்தவுடன் அரபி படிக்க வேண்டும். பின்பு பள்ளிக்கூடம் மாலையில் பள்ளி, இரவுகளில் டியூசன் இப்படி காலைமுதல் இரவுவரை தொடர்ந்து Pressure அழுத்தத்திலேயே இருக்கின்றான். பெற்றோர்களில் எதிர்பார்ப்பிற்கும் பிள்ளைகளின் திறமைக்கும் பெரும் போராட்டமே ஏற்பட்டு இதுவேஅவனது மனோ வியாதிக்கு காரணமாக அமைந்து விடுகின்றது. இந்த தொடர்ச்சியான Pressure களை குறைத்து அவனாகவே கற்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்து மாலை வேளையில் நல்ல ஆரோக்கியமான விளையாட்டு விளையாட அனுமதித்தால் இந்த பிரச்சனை தீரும்.

தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதே கடமையாக கருத வேண்டும். பிள்ளை பிறக்கப்போகும் போது அதற்குண்டான அணியாடை முதலிய சாமான்கள் வைக்கும் பெட்டியில் பால் புட்டி பால் பவுடர் தயாராக்குகிறார்கள் என்பதை நாம் கண் கூடாக காண்கின்றோம். தன்பிள்ளைக்கு தன்னால் பால்கொடுக்க முடியும் என்ற உணர்வு குழந்தை உண்டாகி இருக்கும் போது ஏற்படுமானால் ஒவ்வொரு குழந்தையும் தாய்ப்பால் அருந்தி வயிற்றுப்போக்கு முதலிய நோய்களிலிருந்து விடுபட்டு திடமான ஆரோக்கியமான குழந்தையாக வரும் என்பதில் சந்தேகமில்லை. தாய்மார்கள் இவ்விஷயத்தில் முழுக்கவனம் செலுத்தினால் நான் மேலும் பெருமைப்படுவேன்.

அறியாமையால் ஏற்படும் அவதிகள்

டாக்டர் **M. S. அஷ்ரப்,** M. D., F. I. C. A.

உடல் நலிந்த பெண்களையும் தேகம் மெலிந்து காணப்படும் குழந்தைகளையும் அடிக்கடி மருத்துவ மனைகளில் காணுவது இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.


இதற்கான காரணங்களைக் கண்டறிவது கஷ்டமானதாகப்படவில்லை. பல மருத்துவ மனைகளிலும் மருத்துவ நிறுவனங்களிலும் தொடர்ந்து பணியாற்றி வரும் என்னைப் போன்ற டாக்டருக்கு, அதற்குரிய காரணங்கள் திரும்பத் திரும்ப தெரியக் கூடியவையாகவே இருக்கின்றன. அநேக குடும்பங்களில் உள்ள இந்தப் பிரச்சனைகளுக்கு உரிய அடிப்படையான காரணங்களாக இருப்பவை அறியாமையும், பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தொடர்பான செயல்பாடு இன்மையும் என்பதேயாகும்.

துரதிருஷ்டவசமாக, இன்றைக்குக் கூட பல குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்குப் படிப்பு என்பது தேவையற்றதும் முக்கியமற்றதும் என்றே கருதப்படுகிறது. அதன் விளைவைத்தான் இப்பொழுது நமது சமுதாயத்தில் சந்திக்க வேண்டியிருக்கிறது.

பெண்களுக்கு கல்வியறிவைக் கொடுப்பதன் மூலமே பெண்களில் வருங்கால நல வாழ்வுக்கும் சமுதாயத்தின் வாழ்வுக்கும் அடிப்படையானதொரு காரியத்தைச் செய்கிறோம் என்றும் நாம் உணர வேண்டிய கட்டாயம் பிறந்து விட்டது.

போஸ்டர்கள் ஒட்டுவதாலும் பிரசுரங்கள் வெளியிடுவதாலும் குடும்ப நலத்தைப் பேணி விட முடியுமா? அவற்றைப் படித்து உணர்ந்து அதன்படி நடப்பதற்குரிய அறிவு ஞானத்தைப் பெண்களுக்குத் தராமல் வெறும் விளம்பரங்களால் என்ன உடல்நலத்தைப் பேணச் செய்ய முடியும்?

வீட்டு நலன் என்பதைப் பேணுபவர் மனைவியாகவோ, தாயாகவோ இருக்கிறார். உணவைச் சமைப்பவளும் அவளே; குழந்தைகளுடன் உடனிருந்து உறவாடிக் கொண்டிருப்பவளும் அவள்தான். அன்றாடத் தேவைகளை அறிந்துணர்ந்து அமைத்துக் கொடுப்பவளும் அவளாகவே இருக்கிறாள். குழந்தையின் ஒவ்வொரு அங்க அசைவையும் கூர்ந்து அறிந்து கொண்டிருப்பவளும் அவளே. அக்குழந்தையிடம் குறைபாடு தெரியும்போது, அதன் உடல் நலம் பாதிக்கப்படும் போது, அதனை உன்னிப்பாகக் கவனித்து உடன் அதற்கு பரிகாரம் தேட வேண்டியவளாக குடும்பத் தலைவியே இருக்கிறாள்.


டாக்டர் M. S. அஷ்ரப் M.D.,
திருச்சி-620 018

குடும்பப் பெண் கல்வி அறிவு பெற்றிருப்பாளானால், அல்லது உடல் நலம் பற்றிய சரியான விவரங்களைத் தெரிந்திருப்பாளானால், தான் செய்யும் கடமைகளைச் சிறப்பான விதத்தில் செய்ய முடியும்.

உடல்நலன் பேணுவது பற்றிய அடிப்படையான விவரங்கள் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்; உணவுப் பொருட்களையும் தண்ணீரையும் கொசு மற்றும் மாசுபடுத்தும் வகையருக்களில் இருந்து பாதுக்காக்கவும், குறிப்பாக குழந்தைகளுக்குத் தடுப்பு சக்தி உண்டாக்கும் முறைகளையும் அவள் அறிந்து இருப்பது அவசியமாகும். இந்த ஆதாரமான விவரங்களைக் கூட தெரிய முடியாத வகையில் நான்கு சுவர்களுக்குள் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதால் அறியாமையும், உடல் பற்றிய உதாசீனமும்தான் மிச்சமாகிறது.

பெற்றோர்க்குரிய கடமையைச் செய்யாத காரணத்தால், போலியோ [முடக்குவாத நோய்] போன்ற பயங்கரமான வியாதியால் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. காலரா, மலேரியா, வயிற்றுக்கடுப்பு, டைபாய்டு போன்ற வியாதிகளுக்குத் தடுப்பு மருந்துகள் இருக்கின்றன; இந்த வியாதிகளைக் குணப்படுத்துவது சுலபமானதே; இருப்பினும், அந்தத் தடுப்பு முறைகளை பெற்றோர் அறியாத காரணத்தினால் மருத்துவ மனைக்கு அலையும் நிலை ஏற்படுகிறது. இதுவும் மிகுந்த வருத்தத்திற்கு உரியதாகவே இருக்கிறது.

சம்பிரதாயம் என்ற போர்வைக்குள் நமது பெண்களை வைத்துப் பார்க்க நினைக்கும் நமக்கு, அறியாமைச் சக்தியில் நாம் அமிழ்ந்து போய்விடக்கூடாது, என இஸ்லாம் கூறும் எச்சரிக்கை மறந்துவிடுகிறது.

ஒவ்வொருவரும் சுத்தமும் நலமும் உடையவராக இருப்பதுடன், நமது சுற்றுப் புறச் சூழல்களையும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும், என்று பெருமானார் முகம்மது நபி அவர்கள் போதித்துள்ளதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. உடல் சுத்தத்துடன் உள்ளச் சுத்தத்தையும் வலியுறுத்தும் இஸ்லாம், கட்டுப்பாட்டின் மகத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இவற்றையெல்லாம் பெறுவதற்காகவே கல்வியை நமது மார்க்கம் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறது. கல்விப் புதையலைப் பெண்களிடத்தில் இருந்து ஒளித்து வைப்பதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது.

ஏழ்மையும், வறுமையும் பல வியாதிகளுக்குக் காரணமாகிறது என்று கூறுவோர் உண்டு. ஓரளவு உண்மைதான். ஆனால் வறுமையினாலும் கல்வி கற்றவராக உள்ளவர்களிடத்தில் அந்த வியாதிகள் பரவ நியாயமில்லை. அறியாமையுடன் கூடிய வறுமையில்தான் நோய்கள் பிறப்பெடுக்கின்றன என்றால் அது மிகையான கூற்று ஆகாது. ''ஹார்ட் அட்டாக்'' எனனும் நெஞ்சுவலி வியாதி யாருக்கும் வரலாம்.

அறியாமையின் காரணமாக நெஞ்சுவலியை, வாய்வு கோளாறு என்று மிதமாய் இருந்து வருகின்றனர். கடுமையான வயிற்றுக்கடுப்பு நோயை அஜீரனக் கோளாறு என்று கூறி சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள். ஆஸ்துமா நோயின் அறிகுறியை இறுமல் என்று எண்ணிக்கொள்கிறார்கள். ''டிபி'', குஷ்டநோய் போன்றவற்றைக் குணப்படுத்த முடியாத நோய்கள் என தப்பான எண்ணத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். இத்தகைய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோர், அவர்களின் குடும்பங்களில் காணப்படும் அல்லது காட்டப்படும் உதாசினத்தால் உடல்வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வியாதிகளுக்கு எல்லாம் மருந்துண்டு; அவற்றை நன்றாக குணப்படுத்தலாம்; வியாதி வருவது 'சாபக்கேடு' அல்ல -என்பன போன்ற பல விசயங்களை ஒவ்வொரு குடும்பத்திலும் எட்டச் செய்தாக வேண்டும்.

போலியோ தடுப்பு, டெடனஸ் தடுப்பு போன்றவை தெரியாத காரணத்தினால் ஊனமுற்றோர் உயிரையும் விடுவோரும் பலர் இருக்கின்றனர்.

கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் உடல் நலத்தைப் பேணும் முறையை அறியாத காரணத்தினால் பல குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே இறந்து விடுகின்றன. பல பிறந்தவுடன் இறந்து விடுகின்றன. பல குழந்தைகளுக்கு தாய்வழியாகப் பல நோய்களும் தொற்றிக்கொள்கின்றன.

தங்களின் உடல்நலம் பேணத் தெரியாத தாய்மார்களால் வளர்க்கப்படும் குழந்தைகள் நலமுடன் இருப்பார்களா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன்னதாக உடம்பைக் கவனிக்கவும், மருத்துவரிடம் சென்று ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

சத்துள்ள ஆகாரம் பற்றிய ஞானத்தையும் கொடுத்தாக வேண்டும். போதிய போசாக்குள்ள உணவு இல்லாமல் இருப்பது ஒருவித குறைபாடு; தினமும் பிரியாணியும் குர்மாவும் சாப்பிட்டுக் கொண்டு உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டிருப்பது இன்னொரு குறை.

இல்லாதவர்களானாலும் நிரம்பவும் உள்ளவர்களானாலும் இஸ்லாம் காட்டிய முறையில் உணவு பழக்கங்களை மேற்கொள்வார்களானால் அவர்களுக்கு எவ்வகையிலும் உடல் நலம் கெடாது, என்ற ஞானத்தையும் ஒவ்வொரு குடும்பத்திலும் பரப்புவது கட்டாயமாகிறது.

ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் அனுசரிக்க வேண்டிய முறைகளை இங்கே தருகிறேன்.

1. உடல்நலம் பற்றி தனக்கும் தனது குழந்தைக்கும் ஆலோசனை பெற வேண்டும்.

2. இரத்தம், சிறுநீர், மலம், ஆகியவை அவ்வப்போது சோதித்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. மூச்சுத் திணறல் போன்றவை ஏற்படுவதை தடுப்பதற்கு நெஞ்சு சம்பந்தமான ஈ.சி.ஜி., எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து கொள்ள வேண்டும்.

4. நாற்பது வயதைக் கடந்துள்ள பெண்கள், பிரசவ மருத்துவர்களிடம் மார்பு மற்றும் உறுப்புகளை சோதித்துப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும் .

5, கேன்ஸர், குஸ்டம், டிபி போன்ற வியாதிகளின் அறிகுறிகளைத் தெரிவதற்கு ஆலோசனைபெற்றுக்கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் இத்தகைய உடல்நலன் பேணும் முறைக்கு உடலாலும், கல்வியாலும் பொருளாலும் வசதியுடையவர்கள் முன்வந்து ஊக்கமளிக்க வேண்டும்.

நமது சமுதாயப் பெண்களுக்கு அதிகமதிகமான கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டுள்ள கூடுகளில் இருந்து அறிவு வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும். உடல்நலம் பேணுவது ஒவ்வொரு பெண்ணுக்கும் உள்ள கட்டாயக் கடமை என்பது உணர்த்தப்படுதல் வேண்டும்.

ஆண்கள் இந்த சேவைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு முன் வரவேண்டும். பெண்களுக்கு உடல்நலம் பற்றிய ஞானத்தை ஊட்டும் வகையில் கருத்து விளக்கக் கூட்டம், சினிமா, வீடியோ போன்றவற்றைப் பயன்படுத்த முன்வருதல் அவசியமாகும்.

டாக்டர்களும் போதனையாளர்களும் இந்த சமுதாயக் கடமையைச் செய்வதற்கு சேவையாளர்களாக ஆக்கப்படுதல் வேண்டும்.

பெண்ணினத்தை மிகவும் உயர்வாக மதித்துப் போற்றினார்கள் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அதன் வழியில், பெண் சமுதாயத்தின் நலத்திற்கும் அவர்களின் மேம்பாட்டுக்கும் பாடுபடுவது நமது கடமையாகக் கொள்ள வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மக்களின் மனநிலை -- ஒரு மதிப்பீடு

டாக்டர் M. S. L. **மஹ்பூபு சுபுஹானி** M. D.
மருத்துவ போதகர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிகிட்சைக்காக என்னிடம் வரும் காயல் நகர மக்களை மற்ற ஊர் மக்களுடன் ஒப்பிடும் பொழுது நம் ஊர் மக்கள் உடல் நலத்தின் மீது அதிக அக்கரை காட்டுகிறார்கள். இது பாராட்டக் கூடிய ஒன்று. குறிப்பாக குழந்தைகள் நலம் மீது மிக அதிக அளவு அக்கரை எடுத்துக் கொள்கிறார்கள். என்றாலும் அளவுக்கு அதிகமான முறையில் வியாதியின் மீதான பயத்தினால் சில காரியங்களைச் செய்யும் பொழுது அது பாதகமாக முடிந்து விடுகிறது. உதாரணமாக புளு ஜுரம் (முறைக்காய்ச்சல்) என்று ஒன்று உள்ளது. இது வந்தால் அதிக அளவு காய்ச்சலும், உடம்பு வலியும் ஏற்படும். இது வைரஸ் என்ற ஒரு வகை கிருமியினால் ஏற்படுவது. இது குறிப்பிட்ட கால அளவிற்கு பிறகு 4லிருந்து 7 நாட்களுக்குள் சரியாகி விடும். இதனை குறிப்பிடும் பொழுது மருத்துவத்தில் வைத்தியம் பண்ணினால் ஒரு வாரத்திற்குள் சரியாகிவிடும், வைத்தியம் பண்ணாவிட்டால் 7 நாட்களுக்குள் சரியாகி விடும் என்று சொல்லுவார்கள். அதன் பொருள் என்னவென்றால் அதிக அளவு மாத்திரைகள் கொடுத்து வைத்தியம் பண்ண வேண்டியது இல்லை என்பது.

இந்த புளு ஜுரம் நம் குழந்தைகளில் ஒன்றுக்கு வந்துவிட்டால், முதல்நாள் நம் ஊரில் உள்ள ஒரு டாக்டரிடம் காட்டுவார்கள். அன்றும் சரியாகாது. அதற்கடுத்த நாள் திருச்செந்தூரில் உள்ள வேறு ஒரு டாக்டரிடம் காட்டுவார்கள். அன்றும் ஜுரம் சரியாகாது. அடுத்தநாள் திருநெல்வேலிக்குச் சென்று அங்கு ஒரு குழந்தை டாக்டரிடம் காட்டுவார்கள். அதற்குள் 3, 4 நாட்கள் ஆகிவிடும். ஜுரமும் சரியாகி விடும். என்றாலும் ஜுரம் திரும்பி வருகிறதா என்று அறிய அங்கு 2 நாட்களுக்கு தங்கி, எல்லாவித உணவும் கொடுத்து, குளிக்க வைத்து ஜுரம் திரும்ப வருகிறதா என்று பார்த்து ஒரு திருப்தி ஏற்பட்ட பிறகு ஊர் வருவார்கள். ஆக ஒரு புளு ஜுரத்திற்கு இத்தனை டாக்டர்கள். எவ்வளவு பணம் செலவு? ரூ. 800லிருந்து ரூ. 1000 தொட்டுவிடும். பணம் போனால் போகட்டும், எவ்வளவு சிரமம். ஒவ்வொரு டாக்டரும் அவர்களிடம் செல்லும் பொழுது, ஒவ்வொரு விதமான மருந்துகள் எழுதுவார்கள். ஒரு டாக்டர் இன்னொருவர் எழுதிய அதே மருந்தையோ அல்லது ஒன்றும் வேண்டாம் வெறும் ஜுரத்திற்கு உள்ள மருந்து கொடுங்கள் என்று சொன்னாலோ, அவர் மீது உங்களுக்கு நல்ல அபிப்பிராயம் வருவது இல்லை. ஆக 7 அல்லது 8 நாட்களுக்குள் குழந்தைக்கு 2, 3 வகையான மருந்துகள் கொடுக்கப்படுகிறது. இது குழந்தை நலனுக்கு உகந்தது அல்ல. இதை எல்லாம் சிந்தித்து பார்த்து ஒரு குறிப்பிட்ட காலம் வரை பொறுத்திருந்து டாக்டரிடம் வியாதியின் தன்மையை கேட்டறிந்து வைத்தியம் பண்ண வேண்டும். நீங்களாகவே எந்த முடிவுக்கும் வரக்கூடாது.



Dr. மஹ்பூபுசுபுஹானி MD.
காயல்பட்டணம்,

மற்றொரு விஷயம், என்னிடம் வரும் நோயாளிகளில் 50 சதவீதத்திற்கு மேலானவர்கள் வரும்பொழுதே எனக்கு நரம்புத் தளர்ச்சி உள்ளது என்று அந்த டாக்டர் சொன்னார் என்று சொல்லுகிறார்கள். இந்த நரம்புத் தளர்ச்சி என்றால் என்ன? பொதுவாக அவர்களிடத்தில் மனச் சோர்வு (DEPRESSION) என்ற வியாதி காணப்படுகிறது. இந்த மனச் சோர்வு 2 வகைபட்டது. ஒன்று ஏதாவது ஒரு காரணத்தினால் அதாவது வீட்டில் யாரும் முக்கியமான நபர் இறந்து விட்டாலோ அல்லது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டாலோ வருவது. இதற்கு காரணத்துடன் வரும் மனச் சோர்வு (REACTIVE DEPRESSION) என்பார்கள். மற்றொன்று காரணமே இல்லாமல் வருவது. அதாவது ENDOGENOUS DEPRESSION என்று சொல்வார்கள். இந்த வகையான மனச் சோர்வு அதிகமாக நம் மக்களிடத்தில் காணப்படுகிறது. இந்த மனச் சோர்வு பரம்பரை வழியாக வரக்கூடியது. இதை தடுக்க என்ன செய்வது? முடிந்த வரையில் இரத்த உறவுக்குள் கல்யாண சம்பந்தம் பண்ணாமல் இருப்பது. முடிந்த அளவுக்கு நம் வீட்டில் உள்ள பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது. அதிக அளவு வீட்டு வேலைகளை நாமாக செய்து நம்மையே நாம் சுறுசுறுப்பாக்கிக் கொள்வது. இங்கு வீட்டிற்கு 2 வேலையாட்கள். இவற்றை எல்லாம் சிறிது சிறிதாக நாம் மாற்றி அமைக்க வேண்டும்.

மூன்றாவதாக ஒன்று, இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி சம்பந்தப்பட்டது. இவைகள் எல்லாம் வேண்டாத சொத்து. இவற்றை யாருக்கும் விற்க முடியாது. நாம் தான் அதை முறைப்படி அனுபவித்துக் கொள்ள வேண்டும். இதனை குணப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தத்தான் முடியும். இவைகள் வந்து விட்டால் ஆயுள் உள்ள வரை வைத்தியம் பண்ணித் தான் ஆக வேண்டும். என்ன எனக்கு வயது 40தான் ஆகிறது. இன்னம் எத்தனை வருடங்களுக்கு மாத்திரை போட முடியும்? என்று மாத்திரை போடுவதை இரத்தக் கொதிப்பு சரி நிலைக்கு வந்ததும் விட்டுவிடுகிறார்கள். அதன் பிறகு ஏதாவது தொந்தரவு வரும்பொழுது திரும்ப டாக்டரிடம் செல்கிறார்கள். இரு ஒரு தவறான முறை. இரத்தக் கொதிப்புக்கு வைத்தியமே பண்ணாமல் இருப்பதை விட, விட்டு விட்டு வைத்தியம் பண்ணுவது மிகவும் மோசமான செயலாகும். உதாரணமாக நாம் டெலிவிஷனில் STABELIZER (மின் சீராக்கி) வைத்திருக்கிறோம். எதற்கு? டெலிவிஷனுக்குள் செல்லும் கரண்ட்டின் அளவு சமநிலையாக, ஒரே அளவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். கரண்ட் கூடி, குறைந்து மாறி மாறிப் போனால் டெலிவிஷன் பெட்டி பழுதாகி விடும். அதே போலத்தான் இரத்தக் கொதிப்பும் கூடி, குறைந்து மாறி மாறி இருந்தால் நம் உடலில உள்ள முக்கியமான உறுப்புக்கள், இருதயம், மூளை, கண், சிறுநீரகங்களில் பாதிப்பு ஏற்படலாம்.

எனவே உங்கள் உடல் நலத்தை பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுங்கள். அதே சமயம் முறையான வைத்தியம் செய்யுங்கள். உங்களுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர் மீது நம்பிக்கை வையுங்கள் இதுதான் இன்றைய காயல்வாசிகளுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்.

சுற்றுப்புற சூழலும் சுகாதாரமும்

டாக்டர் **அ. லியாக்கத் அலி** M.B.,B.S.,
(தமிழ்நாடு அரசு சுகாதார அலுவலர்)

"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்ற வள்ளுவனின் வாக்குப்படி நோய் வருமுன் காப்பதே சிறப்பாகும். மனிதன் நோயற்ற, நீண்ட ஆரோக்கியமாக வாழ்வு பெற அவனுக்கு சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர், கலப்படம் இல்லாத சத்துணவு தேவை, அசுத்தமான காற்றாலும், அசுத்தமான தண்ணீராலும், கலப்படமுள்ள சத்துக் குறைவான உணவினாலும் தேவையில்லாமல் அளவுக்கு அதிகமான ஒலி, ஒளி வெப்பம், நுன்கதிர், மற்றும் ஈ, கொசுக்களாலும், சுத்தமின்மையின் காரணங்களாலும் மற்றும் சுகாதாரத்தை இழந்து நோயினால் அவதியுறுகிறான்.

மனிதன் உயிர்வாழ அவன் சுவாசிக்கின்ற பிராணவாயு இயற்கை காற்றில் உள்ளது. ஆனால் இன்றைய இயந்திர உலகத்தில் இயற்கை காற்று தூசி, புகை, நச்சுப்புகை, இரசாயன வாயுவு, நுன்கிருமிகள், தொற்று தோய் கிருமிகள் மற்றும் துர் நாற்ற வாயுக்களால் அசுத்தம் அடைகிறது. காற்றோட்டம் இல்லாத இடத்தில் வசிக்கும் மனிதர்களுக்கு மூச்சுத் திணறல், கொட்டாவி, களைப்பு, வியர்வை, சிடுசிடுப்பு வெப்ப உணர்வு, திறமைக் குறைவு, பசியின்மை, தூக்கமின்மை, தலைவலி, கண் எரிச்சல், மயக்க உணர்வு போன்ற அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. அசுத்தமான காற்றை மனிதன் சுவாசிப்பதால் அவனுக்கு தொண்டை அடைப்பான் கக்குவான் இருமல், காசநோய், ஆஸ்துமா, நிமோனியயா, செரிப்ரோ ஸ்பைனல் மெனிஞ் சைட்டீஸ், தட்டம்மை, சின்னம்மை மற்றும் நுரையீரல் புற்று போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந்த அசுத்த காற்றால் ஏற்படும் நோய்களை தவிர்க்க நாம் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் வசிக்க வேண்டும். இயற்கையாகவே நல்ல காற்றோட்டம் அசுத்த காற்றை அப்புறப் படுத்துகிறது. வீடு கட்டும் போது வீட்டினுள் இயற்கை காற்றோட்டம் ஏற்படுத்த பெரிய ஜன்னல்களை நேருக்கு நேர் அமைக்க வேண்டும். லிட்டில் மின் விசிறிகள், காற்றை வெளியேற்றும் எக்ஸ்ஸாட் மின் விசிறிகள் பொறுத்த வேண்டும். சூரிய ஒளி வீட்டினுள் வரும்படி கட்டிடங்கள் அமைய வேண்டும். சூரிய ஒளி காற்றிலுள்ள நோய்க் கிருமிகளை அழிக்கின்றது. மரம், செடி, கொடி தாவரங்கள் நமக்கு பிராண வாயுவை தருகின்றன. எனவே மரங்களை வெட்டக் கூடாது. வீட்டைச் சுற்றி தாவரங்களை வளர்க்க வேண்டும். வீடுகள் மற்றும் கடைகளில் விறகு மற்றும் அண்டித்தோடு, ரப்பர் டயர் போன்றவற்றை எரிப்பதை விட்டு சிலிண்டர் கேஸ் உபயோகிக்க வேண்டும். இல்லையெனில் வீடு மற்றும் கடைகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் அசுத்தமான புகைகளை நவீன சாதனங்கள் மூலம் வடிகட்டி, நீண்ட உயரமான புகை போக்கின் மூலம் வெளியேற்ற வேண்டும். மோட்டார் கார்கள் மற்றும் வாகனங்களுலிருந்து வெளிவரும் புகையையும் நவீன சாதனங்கள் மூலம் வடிகட்டி வெளியிட வேண்டும். பீடி, சிகரெட். புகை பிடிப்பதை தவிர்க்க வேண்டும். தொத்து நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் அல்லது மருத்துவ மனையில் தனியிடத்தில் ஒய்வு



டாக்டர் அ. லியாக்கத் அலி
காயல்பட்டணம்.

எடுக்க வேண்டும். தும்மும் போதும், இருமும் போதும், நாம் நமது கைக்குட்டையால் மூடிக் கொள்ள வேண்டும். இயற்கை மழை காற்றை சுத்தப்படுத்துகிறது.

காற்றுக்கு அடுத்தபடியாக, நமக்கு மிக்த் தேவையானது தண்ணீராகும். நாம் அசுத்தமான தண்ணீரை ஆற்றிலிருந்தும், குளம், குப்பை, ஏரிகளிலிருந்தும் எடுத்து பருகும் போது, நமக்கு வயிற்றுப்போக்கு, காலரா, டைபாய்டு, மஞ்சள் காமாலை, அமீபிக் சீதபேதி, குடல் அழூர்ஜி, இளம்பிள்ளை வாதம், குடல் புழு, கிருமிகள் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந் நோய்கள் ஏற்படாமல் தடுக்க நாம் சுத்தமான வடிகட்டப்பட்ட, குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட நீரை கொதிக்க வைத்து பருக வேண்டும். குடிநீருக்கு ஆழ்குழாய் கிணற்றுத் தண்ணீரையே பயன் படுத்த வேண்டும். வீடுகளிலும், கடைகளிலும், தொழிற்சாலைகளிலுமிருந்து வெளி வரும் கழிவு நீர், மலஜலம், நச்சு நீர், இரசாயன நீர், தொற்றுக்கிருமிகள் உள்ள சாக்கடை நீர் ஆற்றோடும், குளம் குட்டை ஏரியோடும் கலப்பதை தடுக்க வேண்டும். இக்கழிவு நீரை வடிகட்டி சுத்தப் படுத்தி வடிகால் மூலம் வெளியேற்ற வேண்டும். ஆற்றில், குளத்தில் ஆடு, மாடு மிருகங்களையும், அழுக்கு துணிகளையும், கழுவுவதை தவிர்க்க வேண்டும். ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது அந்த நீரை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். சுகாதார முறைப்படி தண்ணீரை பருக வேண்டும்.

காற்று, தண்ணீர் இவற்றிற்கு அடுத்தபடியாக நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு கலப்படமில்லாத சத்துணவு தேவை. பாலில் தண்ணீரை கலப்பதால் பாலில் உள்ள கொழுப்பு, புரோட்டீன் தன்மைகள் குறைந்து குழந்தைகள் வளர்ச்சி குன்றிப் போவதோடு மாலைக்கண் நோய் அவர்களுக்கு ஏற்படுகிறது. பருப்பில் கேசரிதால் என்ற பொருளை கலந்து விற்பதால் அப்பருப்பை உண்பவர்களுக்கு பக்கவாதநோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு கலப்படம் செய்பவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் பொதுமக்கள் கலப்படமில்லாத சத்துணவாக உட்கொள்ள வேண்டும். குழந்தைகள் வளரும் பருவத்தில் பால், இறச்சி, மீன், மற்றும் பச்சை காய்கறிகள், கீரைகள் தானிய வகைகள், பழங்கள் கொடுக்க வேண்டும். புரோட்டீன் அதிகமுள்ள உணவுகளை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். அடிக்கடி குழந்தைகளுக்கு மருந்துமாத்திரை,டானிக்கொடுப்பதை தவிர்க்கவேண்டும். 40வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களின் உணவில், கொழுப்பு, சர்க்கரை, உரப்பு, புளிப்பு, உப்பு போன்றவற்றை குறைத்துக் கொள்ள வேண்டும். உடம்பு பெருத்துவிடாமல் குறைத்து உண்ண வேண்டும். இதனால் இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகாமல் தடுத்தும், சர்க்கரை, மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு, குடல் புண், போன்ற நோய்கள் வராமல் தடுக்கலாம். புகை பிடிப்பதையும் மது அருந்துவதையும் காபி, டீ பருகுவதையும் தவிர்க்க வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

நமது அன்றாட வாழ்வில் ஒளி, ஒளி, வெப்பம், நுண்கதிர் இவை அளவுக்கு அதிகமாக ஏற்படுவதால் நாம் பல இன்னல்களுக்கு ஆளாகிறோம். வாகனங்கள், புகை வண்டிகள், வான ஊர்தி, தொழிற்சாலை, இயந்திரங்கள், சங்கொலி, ஒலிபெருக்கி ஆகியவற்றிலிருந்து வரும் சப்தம் தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாக ஒலி எழுப்புவதால் அவற்றை தாங்கும் சக்தி நமக்கு குறைந்து விடுவதால், நிரந்தர செவிட்டுத் தன்மை, நரம்புத் தளர்ச்சி, மயக்க உணர்வு, வாந்தி உணர்வு. தூக்கமின்மை, வியர்வை, திறமைக் குறைவு, இரத்த அழுத்தம், போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. வாகனங்களிலும், தொழிற்சாலைகளிலும் நவீன இயந்திர அமைப்புகள் பொருத்தி ஒலியை வடிகட்டி குறைத்து வெளியிட வேண்டும். வீடுகளில் ரேடியோ மற்றும் தெருக்களில் ஒலிபெருக்கியை மிகக் குறைந்த ஒலி வரும்படி செய்ய வேண்டும். ஒலி அதிகமுள்ள இடத்தில் வாழ்பவர்கள் தங்கள் காதுகளில் காதடைப்பான் பொருத்திக் கொள்ள வேண்டும். இதே போல் அதிக வெப்பம், ஒளி மனிதனை தாக்கும் போது அவனுக்கு வியர்வை, தலைவலி, கண் எரிச்சல், மயக்க உணர்வு, காய்ச்சல், இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. வெப்பம் அதிகமுள்ள தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் தங்கள் தலையிலும், முகத்திலும், உடலிலும், உஷ்ணம் தாக்காத கவச உடை அணிய வேண்டும். சூரிய ஒளியில் செல்பவர்கள்

வெள்ளைத் துணி குடை பிடித்து செல்ல வேண்டும். வெள்ளை பருத்தி ஆடைகளை இருக்கமில்லாமல் அணிய வேண்டும். கண்களுக்கு கறுப்பு கண் குளிர் கண்ணாடி அணிய வேண்டும். திரைப்படம் டி.வி. மற்றும் அதிக ஒளி உள்ளவற்றை பார்ப்பதை தவிர்க்க வேண்டும். அல்லது அவற்றிலிருந்து தேவையான அளவு தூரத்தில் இருந்து பார்க்க வேண்டும். சிறுவர்கள் அதிக அல்லது குறைந்த ஒளியில் புத்தகங்கள் படிப்பதை தவிர்த்து 40 வார்ட்ஸ் மின் ஒளியில் படிக்க வேண்டும். ஓடும் வண்டிகளில் படிப்பதும், படுத்துக்கொண்டு படிப்பதையும் தவிர்க்க வேண்டும். கண் நோய் வராமல் தடுக்க நம்மை நாம் பாதுகாக்க வேண்டும். எக்ஸ்ரே எடுக்க பயன்படும் ரேடியோ ஆக்ட்டிங் நுண் கதிர்களால் புற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே தேவையில்லாமல் எக்ஸ்ரே கதிர்களை நாம் பயன்படுத்தக்கூடாது.

இன்றைய உலகில் ஈ, மற்றும் கொசுக்களால் பலவித தொல்லைகளுக்கு நாம் ஆளாகிறோம். இவைகள்தாம் அதிக நோய்களை பரப்புகின்றன. இவற்றை மனிதனின் எதிரியாகவே கருதுகிறோம். ஈயினால் காலரா, டைபாய்டு, மஞ்சள் காமாலை ஆமீபிக் சீதபேதி மற்றும் பல நோய்கள் உண்டாகின்றன. ஈ தொல்லையை போக்க கண்ட, கண்ட இடங்களிலும் மலம் ஜலம் கழிக்காமல் நவீன முறையில் செப்டிக்டாங் கழிவறை கட்டி அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். உணவுப் பண்டங்களை ஈ மொய்க்காதவாறு மூடி பாதுகாத்து வைக்க வேண்டும். காய்கறிகளை நன்றாக கழுவிய பின்னரே உபயோகிக்க வேண்டும். குப்பை, கூளங்களை, வீட்டினுள்ளோ அல்லது வீட்டிற்கு வெளியேவோ குவித்து வைக்கக் கூடாது. அவைகளை உடனுக்குடன் அப்புறப் படுத்தி குப்பை உரத்தொட்டி அல்லது மரக் கிடங்குகளுக்கு அனுப்பி விட வேண்டும். அல்லது அவற்றை எரித்து விட வேண்டும். பேகான்பைட் மற்றும் கிருபிநாசினி, பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பு மூலம், ஈத் தொல்லையை ஒழிக்கலாம். இதே போல் கொசுக்களால் மூளைக்காய்ச்சல், மலேரியா, பைலேரியா யானைக்கால் வியாதி, கருப்பு காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல், டிங்கி காய்ச்சல், மற்றும் பலவித வியாதிகள் பரப்பப்படுகின்றன. இவற்றை தவிர்க்க கொசுக்களை ஒழிக்க வேண்டும், எந்த இடத்திலும் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் அல்லது அதன் மீது மண்ணெண்ணெய் குரூடு ஆயில், அல்லது பேடெக்ஸ் தெளிக்க வேண்டும். வீடுகளில் கண்ட, கண்ட இடங்களில் தேவையில்லாமல் பொருட்கள் குவிந்து கிடப்பதை தவிர்க்க வேண்டும். பி.ஹெச்.சி - தெளிப்பான் வீட்டில் அடிக்க வேண்டும். அல்லது டி.டி.டி. பைரித்தரான், மாலத்தியான் தெளித்து கொசுக்களை ஒழிக்க வேண்டும். வயல் வெளிகளில் பூச்சிக் கொல்லிகள் தெளித்து வயல் வெளிகளில் உள்ள கொசுக்களை ஒழிக்கலாம். வீடு மற்றும் கட்டிடங்களுக்குள் கொசு வராமல் தடுக்க ஜன்னல்கள் மற்றும் செப்டிக்டாங் காற்றுக் குழாய்களுக்கு ஒரு அங்குலத்தில் நூறு துளைகள் உள்ள சன்னமான கம்பி வலைகள் பொறுத்தவேண்டும். தூங்கும் போது கொசுவலை கட்டிக் கொள்ள வேண்டும். மற்றும் மின் விசிறிகள், கொசுவர்த்திகள் மூலம் கொசுத் தொல்லையை குறைக்கலாம்.

மனிதன் சந்தோசமாக, ஆரோக்கியமாக நலமுடன் வாழ நாமும் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். வீட்டையும், தெருவையும், ஊரையும், சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுகாதார முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு பேரூராட்சி மற்றும் அரசு சுகாதார துறைக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

சிரிப்பு :

டாக்டர் : நான் கொடுத்த மரண சான்றிதழில் ஒரு மாறுதல் செய்ய வேண்டும்.

போலீஸ் அதிகாரி : முடியாது, ஒருமுறை கொடுத்ததை மாற்றுவது சட்ட விரோதம்.

டாக்டர் : சார் இது முக்கியமான திருத்தம். மரணத்திற்கு காரணம் என்ற கேள்விக்கெதிரே மறதியாக என் பெயரை எழுதி விட்டேன்.


உழைப்பிற்கு வெற்றி! ஒற்றுமைக்குப் பரிசு!!

காயல்பட்டணம் மருத்துவ அறக்கட்டளை மருத்துவமனை

T. A. S. முஹம்மது அபூபக்கர், B. Com., C. A. I. I. B.

பல நூற்றாண்டுகளாகக் காயல்பட்டணம் இஸ்லாமிய நெறியைப் பேணி இஸ்லாமியக் கலாச்சாரத்தை உலகெங்கும் பரப்பும் கேந்திரமாக இருந்து கொண்டிருக்கிறது. இங்கு தொன்று தொட்டு இறை நேசச் செல்வர்கள். ஆலீம்கள், ஹாபிழ்கள் மற்றும் நல்லடியார்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதுபோன்று பெண்களும் மார்க்க நெறி முறைகளைப் பின் பற்றி ஒழுக்கத்துடனும் இறை பக்தியுடனும் திருமறையும் நபி மொழியும் சொல்வதற்கேற்ப நடப்பதுடன் மற்றப் பெண்களுக்கு முன்னோடியாக மார்க்கக் கல்வியிலும் உலகக் கல்வி யிலும் சிறந்து விளங்குகிறார்கள். இங்கு காலம் காலமாக ''இல்லை'' என்பார்க்கு ''இல்லை'' என்று கூறாமல் வாரி வாரி வழங்கும் வள்ளல்களும், தேன் மதுரத் தமிழில் கவிபாடும் பாவலர்களும் நாவலர்களும் வாழ்ந்து வருகிறார்கள். வியாபாரம் செய்து பொருளீட்டும் வாணிபர்களுக்குப் பஞ்சமில்லை. இந்நகரையும் இங்கு நவீன வசதிகளுடன் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி யாவருக்கும், குறிப்பாக வாழ்க்கைத் தரத்தில் அடிமட்டத்தில் இருக்கும் பெண்களுக்கும் உதவ வேண்டும் என்ற ஒரே நோக்குடன் கட்டி திறக்கப்பட்டுள்ள மருத்துவ மனையையும் கண்டு வருவோம்.

இதோ பழம் பெருமையும் புதுமையின் மெருகும் சேர்ந்த புகழ் பெற்ற பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டணமாம் காயல்பட்டணத்தின் எழில்மிகு கடற்கரை. இங்கு தான் பல நூற்றாண்டுகளாக, அரேபியர்களும், யவனர்களும், ரோமானியர்களும் பாரசீகர்களும் தங்கள் வாணிபத்திற்காக கூட்டம் கூட்டமாக வந்து குழுமினார்கள். இதை நாம் சொல்ல வில்லை. இப்னு பதூதாவும் மார்க்கோ போலோவும், ஏன் நமது பாரதத்தின் முதல் பிரதமர் பண்டித ஜவர்கர்லால் நேருவும் தங்களின் நூல்களில் விரிவாகக் கூறியுள்ளார்கள்.



காயல்பட்டணம் காயிதேமில்லத் நகரில் ஒரு கோடி ரூபாய் செலவில் எழில்மிக்க தோற்றத்தோடு கம்பீரமாக உருவாக்கப்பட்டுள்ள K. M. T. மருத்துவமனை

இத்துறை முகப் பட்டினத்திலிருந்து தான் முத்தையும், அகிலையும் சந்தனத்தையும், இன்ன பிற வாசனைத் திரவியங்களையும் ஏற்றிக் கொண்டு பன்னாட்டுத் துறை முகங்களுக்கும் பவனி வந்தன பாய் மரக் கப்பல்கள் இது மட்டுமா இந்நகர்ச் சிறப்பு. மார்க்க மேதைகளையும் அறிஞர்களையும் கவிஞர்களையும் இறை நேசச் செலவர்களையும், தட்டாமல் வாரி வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களையும் ஈன்றெடுத்ததோடல்லாமல் அவர்களின் ஞானமும், வள்ளல் தன்மையும், கவிப்புலமையும், மார்க்க நெறி பேணும் வாழ்க்கையும் மற்றவர்கட்கும் பயன்பட வேண்டும் என்ற உயர் எண்ணத்தால் அவர்களைப் பற்பல ஊர்கட்கும் அனுப்பி வைத்த பெருமையுடைய மண்ணல்லவா இது

இதோ இமமண தநதபுகழ் மிக்கோர் சிலர். ஓர் தடடிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிக்கும் காலத்திலும் யார் தட்டிலும் தட்டு வராமலே ஈந்தவள்ளல் சீதக்காதி பெருமகனார், இறவாப் புகழ் பெற்ற திருப்புகழ் தந்த காசிம் புலவர் அப்பா, மார்க்க மேதையும், மார்க்க விற்பன்னருமான சரகுப்புலி சதககத்துல்லா அப்பா, மாமேதை மாப்பிள்ளை லெப்பை ஆலிம், இறைநேசச் செல்வரும் கொடை வள்ளலுமான லெப்பை அப்பா, இவர்களை எல்லாம் ஈன் றெடுத்தஇந்நகர் தொன்மைமிக்க நன்னகர் அன்றோ!

கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும் மினாராக்கள், அவைகளிலிருந்து வல்லோனைத் தொழ அழைக்கும் பாங்கின் இனிய நாதங்கள், நீண்ட நெடிய நேரான வீதிகள், அவைகளுக்குக் குறுக்கே பெண்கட்கெனத் தனியான பாதைகள் இவைகளெல்லாம் இஸ்லாமியக் கலாச்சாரமும் பண்பாடும் இப்புவியில் ஓங்கி வளர்ந்திருப்பதை பறைசாற்றுவதோடு மூதாட்டிகள் பேசும் இனிய தூய தமிழும் இவ்வூர் மக்களின் தமிழ்ப் புலமையும், இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி என்பதனையும் சொல்லாமற் சொல்லுகின்றன அல்லவோ! நாகரிக உலகில் மனிதர்கட்க்கு அவசியமான அத்தனையும் நிறைந்த நவீன நகரமாகவும் விளங்குகிறது இவ்வூர்.

இதோ தொலை பேசி மையம், தபால் நிலையம், விளையாட்டு அரங்குகள் கல்வி நிலையங்கள், நீண்ட நேரான வீதிகளில் அழகிய இல்லங்கள், அவைகளிலே அழகு தரும் மலர்ச் செடிகள், நவீன அங்காடிகள், எல்லா வற்றிற்கும் மேலாக நமது சென்ற தலை முறையினரின் முயற்சிகளால் நமக்கு அருட் கொடையாக வழங்கப்பட்ட குடிநீர் வழங்கும் தொட்டிகள். இவைகள் மட்டுமா? கட்டடக் கலைக்கே சிகரமாக விளங்கும் தென்னகத்து தாஜ்மகால் என்றழைக்கப்படும் ''மஹழரா'', நூற்றாண்டைத் தாண்டிய ''ஜாவியா'', எழில் நிறைந்த தைக்கா சாகிபு அப்பா தைக்கா, புகழ் மிக்க ''புஹாரி ஷரிபு'' மஜ்லீஸ் இன்னும் பற்பல.

— K. M. T. நிர்வாகிகள் —



ஹாஜி வாவு S. மொகுதூம் முஹம்மது
-தலைவர்-



ஹாஜி M.K.K.T. முஹம்மது ஹஸன்
-துணை தலைவர்-



ஹாஜி L.K.S. அக்பர்ஷா B.A.,
-துணை தலைவர்-

இவைகளெல்லாமிருந்தும் இந்நகருக்குப் பெரிய குறை ஒன்றுண்டு என்பதனை மறுக்க முடியாது. அது தான் நவீன வசதிகளுடன் கூடிய நல்லதொரு மருத்துவ மனை இல்லாமை. இப்பெருங்குறை பல ஆண்டுகளாகப் பலராலும் பேசப்பட்டும் நீக்கப்படாமலே இருந்து வந்தது. ஆனால் அந்தக் குறைநீக்க மருத்துவ மனை கட்டும் திட்டம், சிலரின் அயராத முயற்சியாலும், பலரின் தொய்வில்லா ஒத்துழைப்பாலும் பொருளுதவியாலும் இறையருளால் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

இதன் ஆரம்ப வரலாற்றை இங்கு சிறிது பார்ப்போம். *1983-ஆம் ஆண்டில் ஒருநாள்*-திட்டவட்டமாகச் சொன்னால் ''புகாரி ஷரிபு'' வின் நிறைவு நாள் ஜனாப். S. D, புஹாரி ஹாஜியார் அவர்களும் ஜனாப் T. A. S. முகம்மது அபூபக்கர் (கட்டுரை ஆசிரியர்) அவர்களும் கடற்கரை செல்கிறார்கள். அங்கு வெளியூர் ஆண்களும் பெண்களும் வான்மேகம் எனத் திரண்டிருக்கிறார்கள். இந்தக் காட்சியைக் கண்டதும், நமதூர்ப் பெண்கள் திரளாக மருத்துவத்திற்கு பேரூந்துகளில் மிகச் சிரமப்பட்டுச் செல்லும் காட்சி அவர்கள் கண்முன் தெரிகிறது, குறிப்பாக ஏழை எளிய மக்கள் படும் தொல்லைகளும், மருத்துவம் செய்ய ஏழ்மையின் காரணமாகக் கடன்படுவதையும் நினைத்து இதற்கெல்லாம் காரணம், இங்கு நல்லதொரு மருத்துவமனை இல்லையே என்று உணருகிறார்கள், அத்தோடு நிற்காமல் மருத்துவமனை ஒன்று நமதூருக்கு மிகஅவசியம். அதனை ஏன் ஊர் மக்களின் ஒன்று பட்ட முயற்சியால் உருவாக்கக் கூடாதென்று, சிந்தித்துச் செயல்பட உடனே விரைகிறார்கள் ஜாவியாவை நோக்கி

அங்கு தான் இம்மாபெரும் திட்டத்தின் கருவுக்கு உரு கொடுக்கப்படுகிறது. S. M. சதக்கத்துல்லாஹ் (ஹாஜி) M. S. M. இபுராகிம் ஹாஜி முதலியவர்களோடு கூடி ஆய்ந்து நமதூர் முக்கிய பிரமுகர்கட்கெல்லாம் தெரிவிக்கப்படுகின்றது. பல கருத்துப் பரிமாறலுக்குப் பிறகு ''காயல்பட்டணம் மருத்துவ அறக்கட்டளை'' என்ற பெயரில் ஓர் அறக்கட்டளையை அமைப்பது எனறும் அதன் மூலம் மருத்துவமனை துவக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஆரப்பத்திலிருந்து துணையாகப் பல பிரமுகர்களும் இருந்தார்கள். அவர்களில் ஜனாப்கள்: L. K. சேகு முஹம்மது ஹாஜி, அல்ஹாஜ் அல்ஹாபிஸ் மி. அபுல்ஹஸன் ஆலிம் (கலீபத்துஷ் ஷாதுலி), வாவு மகுதூம் முஹம்மது ஹாஜி V. M. S. லெப்பை ஹாஜி S. M. மிஸ்கின் சாகிபு(பாஸி ஹாஜி), M.M, உவைஸ் ஹாஜி, வாவு செய்யது அப்துர் ரஹ்மான் ஹாஜி, S.M. முஹம்மது அப்துல்காதர் ஹாஜி. S. அக்பர் ஷா, A. R. இக்பால், P.A. சேகு

— K. M. T. நிர்வாகிகள் —


ஜனாப் T. A. S. முஹம்மது
அபூபக்கர்B.Com.,C.A.I.I.B.
-செயலாளர்-


ஹாஜி M,M. உவைஸ்
-துணைச் செயலாளர்-


ஹாஜி S.M.M. சதக்கதுல்லாஹ்
(ஹாஜி)
-துணைச் செயலாளர்-

ஹாஜி. L. S. இபுருகிம் ஹாஜி, M. S. சேகு சம்சுதீன் ஹாஜி, ஹாஜி A. K. சேகு (இன்ஜினியர்) டாக்டர் இஸ்மாயில், குளம் சாமு ஹாஜி, டாக்டர் முஹம்மது தம்பி, கத்தீப் ஸலீம் ஹாஜி, M.K.K.T. ஹஸன் ஹாஜி, P. S. M. புஹாரி (ஆடிட்டர்), M.M. நாகு ஹாஜி, N.K.M. இபுருகீம் ஹாஜி, டாக்டர் S. L. முகம்மது லெப்பை, வாவு M.M. சம்சுதீன் ஹாஜி, ஹாஜி K M. முத்துவாப்பா, M.A. செய்யிது, T.A S. உவைஸ் M.C., M A. அஜீஸ் (AG) முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்

இத்திட்டத்திற்காக உள்ளூர் மககளும் வெளியூர் வாசிகளும் வெளி நாடுகளில் வாழும் நமதூர் மக்களும் அள்ளி அள்ளித் தங்களின் தகுதிக் கேற்பப் பொருளுதவி செய்திருக்கிறார்கள், இத்திட்டத்தில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்று இதனை உருவாக்கியவர்கள் மனதில் கொண்டிருந்தார்கள். அதிலும் குறிப்பாகப் பெண்களின் ஈடுபாடும், அவர்களின் நல்லாதரவும் அவசியம் தேவை என்பதனையும் மனதில் கொண்டிருந்தார்கள். அதற்கான முக்கிய காரணம் இந்த மருத்துவ மனை அமைப்பதே பெண்களுக்காகத்தான். அவர்களின் சிரமத்தையும், செலவையும் குறைப்பதோடு பிரயாணங்களால் ஏற்படும் அசௌகரியங்களை நீக்கவும். அவசரமாகவும், தீவிரமாகவும், செய்யக்கூடிய சிகிச்சைகளைத் தாமதமில்லாமல் நமதூரிலே செய்யக்கூடியதாகவும், இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். வசதி மிகுந்தோர் இலட்சமாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் தருகிறார்கள். அது போன்று வசதி குறைந்தோறும் மற்றும் பெண்களும் பங்கு கொள்ளவேண்டும் என்பதற்காக வீடுதோறும் மாதம் 10/- ரூபாய் என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தி அதனை மாதந்தோறும் வீடு தேடிச் சென்று பெற்றுவர சகோதரி ஒருவரையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

பலரது முயற்சியாலும் உருவான, மருத்துவமனையை நாம் இப்போது கண்டு மகிழ்வோம். காயல்பட்டணம் மெடிக்கல் டிரஸ்ட் மருத்துவ மனையின் பிரதான வாயிலை நாம் காண்கின்றோம். அதில் இலச்சினை (EMBLEM) அழகாக வரையப்பட்டுள்ளது. எவ்வளவுதான் திறமை மிக்க மருத்துவர்கள் இருந்த போதிலும் ''இறைவன்தான்'' சுகம் தருபவன். என்பதைக் குறிப்பிடும் வகையில் இலச்சினையில் **''அல்லாஹு ஹுவஷ்ஷாபி''** என்ற இறைவசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

இலச்சினையை உற்று நோக்குங்கள். செம்பிறையைக் காணுகிறீர்கள். பொதுவாக மருத்துவ மனையைக் குறிப்பதற்கு (Red Cross) செஞ்சிலுவையையும், செம்பிறையையும் (Red Crescent) அடையாளமாகக் கொள்கிறார்கள். இங்கும் மருத்துவசேவையின் சின்னமாக செம்பிறை காட்சி தருகிறது. அடுத்து இருப்பது திறந்த புத்தகம் (திருக் குர்ஆன்) இது சிறந்த அறிவையும் பரந்த ஞானத்தையும் ஒளிவு மறைவற்ற சிறந்த நிர்வாகத்தையும் குறிக்கும். அடுத்துக் காண்பது ''ஸ்டெதஸ் கோப்'' அது இங்கு சிறந்த மருத்துவ வசதிகளை மேற் கொண்டு, நோய்களை ஆராய்ந்து தக்கவாறு பிணி தீர்க்கப்படும் என்பதனைப் பறை சாற்றுகிறது,

அருகில் நீங்கள் காண்பது சிப்பிக்குள் நன்முத்து. இது நமதூரில் முத்துவியாபாரம் செழித்திருந்தது என்பதனையும், நம்மூர் மக்கள் கடல் கடந்து வாணிபம் செய்யும் வணிகர்கள் என்பதனையும், நமதூர் முத்துக் குளித்தலுக்குப் பெயர் போன தூத்துக்குடியைச் சார்ந்த துறைமுகப் பட்டினம் என்பதனையும் குறிப்பதோடு சிப்பிக்குள் விலை மதிப்பு மிக்க முத்து எப்படிப் பாதுகாப்பாக இருக்கிறதோ அது போன்று இங்கு வரும் நோயாளிகளும் இறையருளால் நன்முறையில் மருத்துவம் செய்யப்பட்டு மிகப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதனையும் குறிக்கிறது. அத்துடன் இவைகளை எல்லாம் அணைத்திருக்கும் ஆலிவ் கிளை (ஜெய்தூன் மரககிளை) சாந்தியையும், சமாதானத்தையும் குறிப்பால் உணர்த்துகிறது.

நோயினைக் குணப்படுத்த மருத்துவம் மட்டும் போதாது நோயாளிகளின் மனநிலைஅமைதி யுடனும் நம்பிக்கையுடனும் இருப்பது முக்கியம், இதற்குச் சுற்றுப்புற சூழ்நிலைகள் மிகத் தூய்மையாகவும் மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்க வேண்டும், தாங்கள் மருத்துவ மனையில் இருக்கின்றோம் என்ற எண்ணத்தை விட ஓர் ஆரோக்கியம் தரும் விடுதியில், மனதிற்கு உகந்த மரம், செடி, மலர்கள் நல்ல காற்றோட்டம் நிறைந்த சூழலில் இருக்கின்றோம் என்ற எண்ணம், நோயாளிகள் விரைவில் குணம் அடைய உதவுகிறது என்று மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் உறுதியுடன் கூறுகிறார்கள். அதைக் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்டதுதான் இந்த மருத்துவமனை. இதோ உங்களை எல்லாம் மகிழ்விக்கும் பூங்கா, பச்சைபசேல் என்று கம்பளம்விரித்தாற்போன்ற புல்வெளியும் மலர்ச் செடிகளும் குரோட்டன்ஸும் சவுக்குக் கன்றுகளும், வேம்பு மற்றும் தென்னை மரங்களும் உங்கள் மனதைக் கொள்ளை கொள்ளும். நோயாளிகளின் மனதிற்குச் சாந்தியையும், மகிழ்ச்சியையும் தருவதோடு நோயினைக் குணமாக்கும் அருமருந்தாகவும் இருக்கிறது. இவ்வழகிய பூங்காவைத் தாண்டிச் சென்று மருந்துவ மனைக் கட்டடத்திற்கு வருவோம்.

இதோ கம்பீரத்துடன் அழகிய பொலிவான தோற்றத்துடன் இலச்சினையைத் தாங்கி நிற்கும் கட்டடம் தான் புற நோயாளிகள் பகுதி. கட்டடத்தின் வலப்பக்கத்தில் வரவேற்பறையும், பெண்களும் ஆண்களும் இருக்க தனித்தனி அறைகளும், மருத்துவர்கள் நோயாளிகளைப் பரிசோதித்து மருத்துவம் செய்யும் பகுதிகளும் உள்ளன. இடப்புறத்திலோ நிர்வாக அலுவலகமும் சிறந்த நவீன எக்ஸ்ரே கருவி மையமும் மருந்தகமும் மருத்துவ ஆய்வகமும் இருக்கின்றன.

புற நோயாளிப் பகுதிக்குப் பின்னால் எழிலுடன் காட்சி அளிப்பது மிக முக்கிய பகுதியாகிய அறுவை சிகிச்சை நிலையம். இதனுள் மிக நவீன உயிர்காக்கும் கருவிகளும் மற்றும் சிறந்த அறுவை சிகிச்சைக்கான உபகரணங்களும் இருக்கின்றன, இப்பகுதி பள பளக்கும் அழகிய பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு காண்போரைப் பரவசப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது, இதற்கு அடுத்து இருப்பது தீவிர சிகிச்சைப் பிரிவு. இங்கு உயிருக்குப் போராடி வரும் நோயாளிகளுக்கு அவசரமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சற்று முன்னேறிச் செல்லும்போது கண்ணாடிகளால் மூடப்பட்டுள்ளதாய்க் காட்சிதரும் அறைதான் பிரசவ அறை. இதற்கு எதிரிலே அமையப் பெற்றுள்ள அறைகள் பிரசவ அறைக்கு வருவதற்கு முன் பெண்கள் தங்கியிருக்கும் அறைகள் ஆகும். அதைக் கடந்து சென்றபின் நம் கண்ணில்படும் அகன்ற பகுதிதான் குழந்தைகட்குச் சிகிச்சை அளிக்கும் பகுதியாகும். சற்று

—: K. M. T. நிர்வாகிகள் :—



ஹாஜி L. K. செய்கு முஹம்மது
பொருளாளர்



ஹாஜி வாவு செய்யது
அப்துர் ரஹ்மான்
துணைப் பொருளாளர்

முன்னேறினால் தெரிவது பொது வார்டு. நான்கு படுக்கை வசதிகளைக் கொண்ட இரண்டு அறைகள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. வசதி குறைந்த நிலையில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் தங்கும் படுக்கை வசதிகள் கொண்ட அறை முற்றிலும் சுகாதாரமான இயற்கைக் காற்றைப் பெறும் வகையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு அறையும் தனித் தனிக் கழிப்பிட வசதிகளைக் கொண்டுள்ளது. நோயாளிகட்கு மிகச் சிறந்த முறையில் சிகிச்சையளிக்க பொது வார்டுகளுக்கு அருகிலேயே தாதியர் (NURSE) இருப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எப்பக்கம் பார்த்தாலும் எழில்மிகு மின் விளக்குகளும், கண்ணைக் கவரும் மொசைக் தரைகளும் ஏறிச் செல்ல வசதியாய் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுக்களும், காண்பவர் மனதைக் கனிவிக்கும் சுவர் வண்ணங்களும் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன.

படிக்கட்டிலேறி முதல் மாடிக்கு வரும்போது சீரான முறையில், அழகாக வடிவமைக்கப்பட்ட தனித்தனி வார்டுகளைக் காணமுடிகிறது. எல்லா அறைகளும் தாராளமான இடவசதி பெற்றிருப்பதோடு, தனித்தனி பால்கனி (BALCONY)யையும் குளியலறைகளையும் பெற்றிருக்கின்றன.

இவ்வழகிய மருத்துவமனை கட்டிடம் இவ்வளவு சிறப்பாக அமைவதற்கு காரணமாக இருந்தவர்கள் கட்டடக் கலை வல்லுநர் ஜனாப். **ஸுஜப்** அவர்களும், மருத்துவ உயர் அதிகாரியாக (D.M.S.) இருந்த டாக்டர் செல்வி A. B. **மரைக்கார்** அவர்களும் ஆவார்கள்.

எல்லா வசதிகளுடனும் அமைந்த இம் மருத்துவமனை, ஜாதி, மத பேதமற்று, எல்லா மக்களுக்கும் குறிப்பாக ஏழை, எளிய, பெண்கள் குழந்தைகளுக்குத் தன்னலமற்ற சேவை செய்யும் என்பது திண்ணம். காயல்பட்டணம் மட்டுமின்றி இதைச் சுற்றியுள்ள அத்தனை ஊர் மக்களுக்கும் இம் மருத்துவ மனை சேவை செய்யக் காத்திருக்கிறது.

மேலும் இலாப அடிப்படையில் அல்லாது, சேவை நோக்கையே தலையாய நோக்காகக் கொண்டு, இம் மருத்துவ மனையின் பணி அமையும் என்பது நிச்சயம். இங்கு திறமையான மருத்துவர்களைக் கொண்டு, குறைந்தசெலவில் மருத்துவ சிகிச்சை அளிக்க உறுதி பூண்டுள்ளார்கள். மருத்துவமனை சீராகவும், சிறப்பாகவும் அமைய உறுதுணையாய் இருந்தவர் பலர். ஆலோசனைகள் நல்கிய காயல்பட்டின ஊர் பிரமுகர்கள் ஏராளம்! ஏராளம்! கட்டடப் பணி தாமதமின்றி நடந்தேற, கைககள் சிவக்குமாறு, தங்களாலியன்ற பொருள்உதவி செய்தோர் எண்ணிறந்தோர் அனைத்துப் பெருமக்கட்கும் காயல்பட்டண மக்களும், மருத்துவ அறக்கட்டளையும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளார்கள்.



காயல்பட்டத்தின் முதலாவ
மருத்துவ பட்டதாரி மறை
Dr. K. M. செய்யதுமுகம்மது
M.B.B.S., D.O.

''நாம் முயற்சி செய்கிறோம்.

குணம் அளிப்பவன் அல்லாஹ்வே!

காயல் மாநகரின் ஒற்றுமையின் சின்னமாகவும் உழைப்பிற்கு பரிசாகவும் கம்பீரமாக காட்சி தரும் KMT மருத்துவமனை உருவாக உறுதுணை நின்ற அனைவரும் நம் நன்றிக்குரியவர்கள், இம் மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் பாடுபட வேண்டியது நமது கடமை. எல்லாவற்றிற்கும் மேலாக மருத்துவ தேவைகளுக்கு இம் மருத்துவ மனையே சிறந்தது என்ற மனப்பான்மையை நமதூர் பெண்களிடம் வளர்க்க வேண்டியது நம் எல்லாருடைய கடமை.

நம் முயற்சிகளுக்கு இறைவன் நிறைவான வெற்றியை தருவானாக.

K. M. T. மருத்துவமனை சில செய்திகள்:

காயல்பட்டணம் மருத்துவ அறக்கட்டளை (Kayalpatnam Medical Trust) என்ற பெயரில் சட்டப்பூர்வமாக 12 ஆரம்ப கர்த்தாக்களான (SETILORS)

1.	ஹாஜி L.K. செய்கு முஹம்மது	2.	ஹாஜி வாவு S. மொகுதூம் முகம்மது
3.	,, M. M. உவைஸ்	4.	,, V. M. S. லெப்பை
5.	,, P.A. செய்கு	6.	,, M. S. முஹம்மது இபுராகீம்
7.	T.A.S. முகம்மது அபூபக்கர்	8.	,, S. D. செய்யதுமுகம்மது புகாரி
9.	,, S. M. M. சதக்கதுல்லாஹ்	10.	,, S. அக்பர்ஷா
11.	,, L. S. இபுராகீம்	12.	,, வாவு S. அப்துல்கப்பார்

ஆகியோரைக் கொண்டு 21—10—1984ல் பதிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி-திருச்செந்தூர் நெடுஞ்சாலையை ஒட்டி **காயல்பட்டணம் காயிதேமில்லத்** நகரில் **9 ஏக்கர்** 63 செண்ட் நிலம் வாங்கி K.M.T. பெயரில் 31—10—84ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

26—8—85 புனித **அரபா** தினத்தன்று காலை 11 மணிக்கு இந்த இடத்தில் K. M. T. மருத்துவ மனைக்கு, நகரப் பிரமுகர்களான ஜனாப்கள் அல்ஹாஜ் L. K. **செய்குமுஹம்மது** அல்ஹாஜ் **வாவு S மொகுதூம் முகம்மது** இருவரும் அடிக்கல் நாட்டினார்கள்.

4—3—90 ஞாயிறு காலை 11 மணிக்கு சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு **M. கனகசபாபதி, I A.S.** அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **கே. பி. கந்தசாமி** M.A., அவர்கள் இம் மருத்துவ மனையை திறந்து வைத்தார்.

இந்தியப் பிரதமராக திரு **ராஜிவ்காந்தி** அவர்கள் இருந்தபோது 4-10-88ல் இம் மருத்துவ மனைக்கு வருகை தந்து மருத்துவர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தமிழக தலைவரும் K. M. T. அட்வைசர் உறுப்பினருமான சிராஜுல்மில்லத் **A.K.A. அப்துஸ்ஸமது சாகிப், M.A.,M.P.** அவர்கள் 28—5—90 அன்று K. M. T. சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்று இம் மருத்துவ மனையை சுற்றிப் பார்த்தார்.

இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு **அனுரா பண்டாரநாயகா** இலங்கை **Dr.** சம்சுத்தீன் ஃபாஸி பவுண்டேஷன் பொதுச் செயலாளர் கலீபத்துல் குலபா **சாகுல்ஹமீதுபஹ்ஜி லாபிர் A. காசிம்,**

ஐக்கிய பொருளாதார பேரவை, சீதக்காதி அறக்கட்டளை நிறுவனரான அல்ஹாஜ் **B. S. A. ரஹ்மான்,**

தமிழக பேரூராட்சிகள் இயக்குனர் **சி. பு. பெருமாள்** தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை இயக்குனர் டாக்டர் **முத்துக்குமாரசாமி,** சிதம்பரனார் மாவட்டத்தின் முதலாவது ஆட்சித்தலைவர் திரு. **ஆறுமுகம் IAS,** திருச்சி மக்கள் நல்வாழ்வு கழக தலைவர் ஜனாப் **S.A,G. ராபி** உள்ளிட்ட **பல்வேறு பிரமுகர்கள்,** உயர் அதிகாரிகள் இம்மருத்துவமனைக்கு நேரில் வந்து பார்வையிட்டு பல **ஆலோசனைகளும்** வழங்கியுள்ளனர்.

4-3-90ல் திறக்கப்பட்ட இம்மருத்துவமனையில் மறுநாள் (5ம் தேதி) காயல்பட்டணம் மொகுதூம் தெரு **முகம்மதுஅலி** - M. **பரிதாபானு** தம்பதியருக்கு ஆண் குழந்தை பிறந்தது.

K.M.T.யில் முதலாவதாக பிறந்த இக்குழந்தைக்கு சிதம்பரனார் மாவட்ட அ.இ.அ.தி.மு.க. துணைச் செயலாளரும் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினருமான திரு S.R. **சுப்பிரமணிய ஆதித்தன்** அவர்கள் ஒரு பவுன் தங்கம் பரிசாக வழங்கினார்.

இரண்டாவதாகப் பிறந்த குழந்தைக்கு சிதம்பரனார் மாவட்ட தி.மு.க. செயலாளரும் தூத்துக்குடி நகர்மன்ற தலைவருமான திரு **N. பெரியசாமி, M.L.A** அவர்கள் ஒரு பவுன் தங்கமும், 19வதாக பிறந்த குழந்தைக்கு தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **கே. பி. கந்தசாமி M.A.,** அவர்கள் ஒரு பவுன் தங்கமும் பரிசாக வழங்கினார்கள்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள்

தலைமையில் செயல்படும்

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி

நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலருக்கு

எங்கள் வாழ்த்துக்கள்

★ Dr. முஹம்மது இத்ரிஸ், M.B.B.S.,
★ M. H. S. A. கபீர்
★ A. R. தாஹா
★ S. A. மீராதம்பி
★ M. N. சேக்முஹம்மது
★ A. R. ரிபாய் சுல்தான் B Sc., D.I.A.
★ S. M. B. செய்யது உமர் (புஹாரி)
★ R. M. S. சாகுல் ஹமீது
★ M. N. சதக்கதுல்லாஹ்
★ S. M. B மூஸா நெய்னா
★ T. M. S. சிராஜுத்தீன்

தமாம், கோபர், துக்பா
சவூதி வாழ் காயல் வாசிகள்

காயல்பட்டணம் பேரூராட்சியின் முதலாவது மக்கள் தலைவர்

திருமிகு S. பொன்னையா நாடார் அவர்கள்

S. A. **இராமச்சந்திர டோகோ, ஆறுமுகநேரி.**

இந்தியத் திருநாடு ஆங்கிலேயே ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் சென்னைப் பட்டண ஆளுனரின் உத்திரவின்படி 27-1-1886ல் மாநிலத்தின் பல கிராமங்களில் கிராம பஞ்சாயத்து மன்றங்கள் அமைக்கப்பட்டன. அது அமைக்கப்பட்ட காலம் முதல் 1895 முடிய இந்த கிராம ஆட்சியின் தலைவராக காயல்பட்டணம் ஸீ-கஸ்டம்ஸ் (Salt) சூப்ரெண்டெண்ட் ஆக இருந்தவர்களே பணி செய்தனர்.

பொது மக்களில் இருந்து தகுதியுள்ள ஒருவரை தலைவராக நியமிக்க வேண்டும் என்ற மக்கள் சட்டத்தின் அன்றைய ஆங்கிலேய கலெக்டரால் திரு **S. பொன்னையா நாடார்** அவர்கள் காயல்பட்டணம் ஊராட்சியின் முதலாவது மக்கள் தலைவராக 26-1-1896ல் நியமிக்கப்பட்டு 1914 முடிய பத்தொன்பது ஆண்டு காலம் மிகச் சிறப்பாக பணியாற்றினார்.

பாண்டிய மன்னர் காலங்களில் இருந்தே சரித்திர முக்கியவத்துவம் வாய்ந்த காயல்பட்டணத்தின் பெயர் ஆங்கில கலைக்களஞ்சியத்தில் விடுபட்டிருந்ததால், லண்டனில் உள்ள ENCYCLOPAEDIA, BRITANICA வெளியீட்டாளர்களிடம் காயல்பட்டணத்தின் தகுதிகளை எழுதி உலக முக்கியத்துவம் பொருந்திய நகரங்களில் காயல்பட்டணமும் ஒன்று என்ற விபரத்தை கலைக்களஞ்சியத்தில் வெளிவரச் செய்தார்.

மணியாச்சி ரயில் நிலையத்திலிருந்து திருநெல்வேலி வரை அமைக்கப்பட்ட ரயில் பாதையை திறந்து வைக்க இங்கிலாந்து விக்டோரியா மகாராணியின் பட்டத்து இளவரசர் எட்வர்ட் வந்தபோது இளவரசரிடம் பேட்டி காண ஐதராபாத், மைசூர், திருவதாங்கூர், கொச்சி சிற்றரசர்களும், தனியார்களில் நமது ஊராட்சித் தலைவர் திரு **S. பொன்னையாநாடார்** அவர்கள் மட்டும் ஆகிய ஐவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஆங்கிலேயே அதிகாரிகள் திரு S. பொன்னையா நாடார் அவர்களுக்கு அளித்து வந்த மரியாதை இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது.



திரு S. பொன்னையா நாடார்
தோற்றம்: 28-4-1861
மறைவு: 8-4-1940

காயல்பட்டணம் எல்லைக்குள் அரசு அனுமதியுடன் முதலாவது உப்பளம் துவங்கப்பட்டதும் அதன் உரிமையாளர்கள் ஒன்றுகூடி காயல்பட்டணம் உப்பு வர்த்தக சங்கம் (Kayalpatnam Salt Trading Co., Ltd) என்ற பெயரால் 1884ல் கம்பெனி சட்டப்படி பதிவு செய்து அதன் தலைவராக திரு S. பொன்னையா நாடார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குடிநீர்; அன்றைய காலத்தில் காயல்பட்டணம் மக்கள் குடிநீர் தேவைக்காக கஷ்டப்பட்டார்கள். பெருமாள் கோவிலுக்கு

தெற்கிலும் பிரதான ரோட்டிற்கு வடக்கிலுமாக அமைந்த குடிநீர் ஊற்றுக்களில் மக்கள் நீர் எடுத்தனர். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவை உப்புத் தண்ணீராக மாறியது. இதனால் நன்னீர் ஊற்றுக்களை நம்பி கிணறு வெட்டினால் அது உப்பாக மாறியது. நாளடைவில் பேயன்விளைக்கு தெற்கிலுள்ள கிணற்றில் மட்டும்தான் நல்ல தண்ணீர் கிடைத்தது. இதனால் திரு பொன்னையா நாடார் அவர்கள் தாம் உறுப்பினர் பதவி வகித்த தாலுகா போர்டு, ஜில்லா போர்டு ஆகியவை மூலமாக காயல்பட்டணம் குடிநீர் கஷ்டத்தை போக்க ஒரு நிலையான திட்டம் அமைத்துக் கொடுக்க சென்னை மாநில அரசை தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

போக்குவரத்து வசதி - பைபாஸ் ரோடு :

சேர்மன் பொன்னையா நாடார் ஏற்கனவே காயல்பட்டணம் உப்பு வர்த்தக கம்பெனியின் தலைவராக இருந்ததால் கல்கத்தாவை தலைமை காரியாலயமாக கொண்டு செயல்பட்ட உப்பு இலாகாவின் கமிஷனர்கள் அதிகாரிகள் மிகுந்த மரியாதையும் மதிப்பும் கொடுத்து வந்தனர். உப்பு வர்த்தகத் துறையின் வளர்ச்சியை உத்தேசித்து காயல்பட்டணத்தின் மூன்று உப்பளங்களிலிருந்து கிடைக்கும் உப்பை வண்டிகள் மூலமாக மனற்பாங்கான காயல்பட்டணம் துறைமுகம் வரை எளிதாகக் கொண்டு செல்ல ஒரு கப்பி ரோட்டை அமைக்கச் செய்து போக்குவரத்தை ஏற்படுத்தித் தந்தார், அதுவே தற்காலத்தில் **பைபாஸ் ரோடு** (Bypass Road) என அழைக்கப்படுகிறது. காயல்பட்டணத்திலிருந்து ஆறுமுகனேரிக்கு நேரடியான பாதை ஏற்பட்ட பின் உப்பு இலாகா இந்த ரோட்டை பராமரிப்பு செய்யவில்லை. பிற்காலத்தில் தமிழக நெடுஞ்சாலை துறை இந்த சாலையை தன் பொறுப்பில் எடுத்து பராமரிப்புச் செய்கிறது.

1896ல் தூத்துக்குடி தாலுகா போர்டிலும் உறுப்பினராக நியமனம் பெற்ற திரு S.P அவர்கள் நெல்லை திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் நல்லூரிலிருந்து ஆறுமுகனேரி வழியாக காயல்பட்டணம் கடற்கரை வரை ஒரு கிளை ரோடு அமைக்கச் செய்தார். இது தவிர உப்பளங்களிலிருந்து வடக்காக ஆத்தூர் வரை தாலுகா போர்டு மூலமாக சாலை அமைத்துத் தந்தார். சென்னை மாநில அரசின் தனி மானியம் பெற்று பல சாலைகளை அமைக்க உதவினார்.

சென்னை மாகாண அரசின் தனி மானியம் பெற்று காயல்பட்டணம் நகருக்குள் குறுக்கும் நெடுக்குமாக பல சாலைகளை அமைத்துத் தந்தார்.

சாலைகளின் இருபுறமும் நிழல்தரும் மரங்களை நடுவதும் அவைகளை பராமரிப்பதும் தரும காரியங்களில் ஒன்றுகவே S.P அவர்கள் கருதி மரம் வளர்க்கும் செயலை மிகவும் ஊக்குவித்தார்.



S.A. இராமச்சந்திர டோகோ
ஆறுமுகனேரி.

தெரு விளக்குகள்:

காயல்பட்டணம் யூனியன் காயல்பட்டணம் தென்பாகம் கிராமம், காயல்பட்டணம் வடபாகம் என்ற இரண்டு பெரிய கிராமங்களை கொண்டதாக அமைக்கப் பெற்றிருந்தது. உப்பளத்துடன் அமைக்கப்பட்டிருந்த கலால் மற்றும் சுங்க அதிகாரிகளும் ஏராளமான சிப்பந்திகளும் கஜானாவுடன் கூடிய ஒரு உப்பு இலாக்கா காரியாலயமும் கொண்டிருந்தது. அத்தகைய அதிகாரிகள் குடியிருக்கும் பகுதிகளுக்கெல்லாம் விரிவான விளக்குகள் போடப்பட்டிருந்ததுடன் காயல்பட்டணம் முழுமைக்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

தெரு விளக்கென்பது சுமார் 7½ அடி உயரமுள்ள கல் தூண்களின் மேல் நான்கு புறமும் கண்ணாடி பொருத்திய மழை மற்றும் காற்றினால் அணையாதவாறு அந்த விளக்குகளின்

மேல்பாகம் இரும்புத் தகட்டினால் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கண்ணாடிக் கூண்டிற்குள் கண்ணாடி சிமினி பொருத்திய மண்ணெண்ணெயினால் எரியும் விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு சந்திரன் பிரகாசிக்காத இருட்டு காலங்களை அனுசரித்து நேரத்தை கணக்கிட்டு லைட்டர்களிடம் மண்ணெண்ணெய் அளந்து வழங்கப்படும்.

லைட்டர்கள் என்னும் விளக்கு பொருத்துபவர்கள் தினசரி காலையில் ஒவ்வொரு விளக்கையும் சுத்தம் செய்து எண்ணெய் விடுவார்கள். இரவில் கையில் சிறு ஏணி மற்றும் கைலாத்தருடன் ஒவ்வொரு விளக்கையும் பொருத்துவார்கள். விளக்குகள் குறித்த நேரத்தில் எரியாமல் போனால் அதற்கு லைட்டர்களே பொறுப்பு. இவர்களை கண்காணிப்பதற்கு ஒவ்வொரு தெருவிலும் ஒன்றிரண்டு பெரிய மனிதர்களும் இருப்பார்கள். அவர்களிடம் லைட்டர்கள் கையெழுத்து வாங்கி ஆபீஸில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கும் மேல் திடீர் திடீரென சேர்மன் S. P. அவர்கள் இரவு நேரங்களில் குதிரை மீதேறி தெருக்களில் சுற்றி வருவார்.

சுகாதாரம் :

சேர்மன் S. P. அவர்கள் பதவியேற்ற காலங்களில் காயல்பட்டணத்தில் காலரா, அம்மை, மலேரியா மற்றும் கலாசா என்ற காய்ச்சல் கட்டி ஆகிய தொற்று நோய்களினால் நூற்றுக்கணக்கான மக்கள் ஆண்டு தோறும் மரணமடைந்து வந்தனர். இந்த தொற்று நோய் பரவாமல் தடுக்க சேர்மன் மிகத் தீவிர முயற்சி மேற்கொண்டார். தவிர தாலுகா போர்டு, ஜில்லா போர்டு மூலம் காயல்பட்டணத்தில் ஆஸ்பத்திரி திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு 1911ம் ஆண்டு டாக்டர் மனுவேல் தலைமையில் ஒரு டிஸ்பென்சரி திறக்கப்பட்டது.

தனியொரு ஆடவரை டாக்டராகக் கொண்ட அந்த டிஸ்பென்சரியின் சேவை தேவைக்கு தக்கவாறு அமையவில்லை. குறிப்பாக கோஷா பெண்களுக்கு ஒரு பெண் டாக்டர் தேவை என்ற நிலையை ஜில்லா போர்டுக்கும் மாநில அரசுக்கும் பல முறை எடுத்துச் சொல்லி வந்தார்.

அந்தக் காலத்தில் காய்ச்சல் கட்டி எனும் வயிற்றுக் கட்டி உண்டாகும் நிலைமைக்கு காரணம் தெரியாத புதிராக இருந்தது. இதனால் பலர் பாதிக்கப்பட்டனர். இதற்காக S. P. அவர்கள் சென்னை வைத்திய அதிகாரியிடம் வலியுறுத்தியதன் விளைவாக இரண்டு நிபுணர்கள் காயல்பட்டணத்தில் முகாமிட்டு இதற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு அந்நோய் இந்நகரில் முற்றாக ஒழிக்கப்பட்டது.

வீடு புள்ளி மாற்றம் :

காயல்பட்டணத்தில் அனேகமாக எல்லா வீடுகளும் பெண்கள் பெயரிலேயே இருக்கும். அத்தோடு இந்நகரில் திருமணமாகும் பெண்களுக்கு வீடு கொடுக்கும் வழக்கம் உள்ளது. அதன்படி தாய்வீடு மகளுக்கு பெயர் மாற்றி கொடுக்கப்படும். இதற்கு புள்ளி மாற்றம் எனப் பெயர். இதற்கு ரிஜிஸ்டர் ஆபீஸில் பத்திரம் எதுவும் பதிவு செய்வதில்லை. ஒரு வீட்டின் உரிமையாளர் இறந்து விட்டால் இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டு கற்றறிந்த ஆலிம் பெருமக்களிடம் மார்க்க தீர்ப்பு பெற்று முஸ்லிம் வாரிசு சட்டப்படி இந்த புள்ளி மாற்றம் செய்வதை சேர்மன் S. P. கவனமாக கையாண்டார். இந்த விஷயங்களில் பணக்காரர் ஏழை என்ற வித்தியாசம் பாராமல் சிபாரிசுகளை சற்றும் பொருட்படுத்தாமல் இறைவனுக்கு பயந்து நீதி வழங்கினார். அவரது தீர்ப்பை எதிர்த்து ஒருசிலர் நீதி மன்றங்களுக்கு சென்றாலும் கோர்ட் சேர்மனின் முடிவையே ஏற்று தீர்ப்பளித்துள்ளது.

திருநெல்வேலி - திருச்செந்தூர் சுதேசி ரயில் பாதை :

லோகல் போர்டுகள் மூலம் மக்கள் சுயாட்சி ஆட்சி சேவைத் துறையில் சேர்மன் S. P. அவர்கள் செய்த மகத்தான சாதனை நெல்லை ஜில்லா போர்டு மூலம் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் வரை அமைக்கப்பெற்ற மக்கள் ரயில் பாதையாகும். இருப்புப் பாதை அமைக்கும் பணி ஆங்கிலேயருக்கு மட்டும் வழங்கப்படுவதை விடுத்து அதனை ஜில்லா போர்டு ஏன் ஏற்று நடத்தக் கூடாது என்ற வாதத்தை ஜில்லா போர்டிலும் மாநில அரசின் கவனத்திலும் திரு. S. P. வைத்தார். 1900ம் வருடம் ராஜபிரதிநிதி கர்சன் பிரபு நெல்லைக்கு விஜயம் செய்த போது S. P. அவர்களுக்கு பேட்டியளிக்க அனுமதிக்கப்பட்டது. மக்கள் கொடுக்கும் நிலத் தீர்வையில் 1 ரூபாய்க்கு 3 பைசா வீதம் (¼ அணா) ரயில்வே செஸ் வரி விதிக்கவும் அந்த வரிப்பணம் மூலம் நெல்லையிலிருந்து காயல்பட்டணம் வழியாக திருச்செந்தூர் வரை ஒரு இருப்புப் பாதை அமைக்கவும் அனுமதி கோரினார். ஆனால் இதற்கு ஜில்லா போர்டு சட்டத்தில் உரிமை இல்லை என்றும் பார்லிமெண்டுக்கு மட்டுமே இந்த உரிமை உண்டு என்றும் கர்சன் பிரபு கூறினார். ஆனால் S. P. அவர்கள் விடாமல் இந்த பிரச்சனையை பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றுதர வேண்டினார். பிரிட்டிஷ் பார்லிமெண்டும் S. P. அவர்களைப் பாராட்டி அதற்கு ஒப்புதல் கொடுத்தது.

இதன்படி 1902ல் இருப்புப் பாதைக்கான சர்வே ஆரம்பிக்கப்பட்டது. ஆறுமுகனேரியிலிருந்து மேல் கிழக்காகச் சென்று காயல்பட்டணம் சிவன் கோவிலுக்கு மேல் புறம் வரை வந்து திருச்செந்தூர் செல்வதாக இந்த சர்வேயில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் எதிர்பாராதவிதமாககாயல்பட்டணம் முஸ்லிம் பெரியவர்கள் ஒன்றுகூடி தங்கள் ஊருக்கு அருகில் இருப்பு பாதை வருவதை தீவிரமாக எதிர்த்ததன் விளைவாக தற்போதுள்ள அமைப்புப்படி இந்த இருப்புபாதை மாற்றி அமைக்கப்பட்டு 23-2-1923ல் போக்கு வரத்திற்கு திறந்து விடப்பட்டது. ஆனால் திறப்பு விழா சமயத்தில் காயல்பட்டணம் பொது மக்கள் தங்கள் பெரியோர்களின் தவறுக்காக மனம் நொந்தார்கள். ஊருக்குள் ரயில்வே ஸ்டேஷன் அமையாமல் சிரமப்படுவதால் காயல் வாசிகள் இன்றும் வேதனைப்படுகின்றனர்.

கல்வி வளர்ச்சி :

18-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை காயல்பட்டணம் முஸ்லீம்கள் தமிழ் இலக்கியத்திலும், அரபு இலக்கியத்திலும் உன்னத நிலைமை பெற்று விளங்கினார்கள். ஆனால் பிற்காலத்தில் முஸ்லீம் மக்களிடையே பெரும் மாறுதல் ஏற்பட்டது. முஸ்லீம் சிறுவர் சிறுமியர் பள்ளிவாசலுக்குச் சென்று ஆலிம் சாக்களிடம் அரபு எழுத்துக்களைப் பயின்று அரபு மொழியில் ஓதுவதோடு அவர்களுடைய படிப்பு போதுமென நிறுத்தப்பட்டது. சிறுமியிருக்கு 7 or 8 வயது வரையிலும், சிறுவர்களுக்கு சுமார் 10 வயது வரையிலும் அரபு போதிக்கப்பட்டது. இதனால் அவர்களுக்கு தமிழ்கல்வி சிறிது மில்லாமல் தமிழ் வார்த்தைகளை அரபு எழுத்துக்களினால் எழுதத் தலைப்பட்டனர். நாளாவட்டத்தில் இலங்கை, சிங்கப்பூர், பினாங்கு, மலேயா போன்ற கடல் கடந்த இடங்களில் வாழும் தமது கணவர் மற்றும் உற்றார் உறவினருக்கு பெண்கள் தமிழை அரபு எழுத்துக்களில் எழுதி கடிதப் போக்குவரத்துகூட செய்யும் நிலைமை ஏற்பட்டது. அதே போல் தூர இடத்து ஆண்களும் காயல்பட்டணத்தில் உள்ள சொந்தப் பெண்களுக்கு அரபு எழுத்துக்களால் தமிழில் கடிதம் எழுதுவது சர்வ சாதாரண நிலைமைக்கு வந்துவிட்டது. காயல்பட்டணத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பதற்கு ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை. இதனைக் கண்டு மனம் வருந்திய S. P. காயல்பட்டணத்தில் தமிழும் சிறிது ஆங்கிலமும் கற்கக் கூடிய ஒரு பள்ளிக்கூடமாவது அமைக்க எவ்வளவோ முயன்றும் முடியாததாயிற்று. காயல்பட்டணம் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட பல முஸ்லிம் பெரியவர்களுடன் முயற்சி செய்தும், தூத்துக்குடி தாலுகா போர்டு மூலமும், காயல்பட்டணத்தில் ஓர் ஆரம்ப பள்ளி தொடங்க ஏற்பாடு செய்தார்.

இந்த நல்ல நேரத்தில் அவரது சேவையை நன்றியுடன் நினைவு கூர்வோம்.

காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி மன்ற தலைவர்

நெஞ்சில் நிறைந்த

"விளக்கு மாமா" ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள்

S. T. முஸ்தபா கமால்

(7வது வார்டு உறுப்பினர், தேர்வுநிலை பேரூராட்சி மன்றம், காயல்பட்டணம்)

மனிதர்களை எனது பிரதிநிதிகளாகவே இந்த உலகத்தில் படைத்தேன் என **இறைவன்** அருள்மறை **குர்ஆனில்** கூறுகிறான்.

சர்வ அதிகாரம் ஆட்சி அகிலம் அனைத்திற்கும் உரிமையாளன் இறைவனே ! அவனது பிரதிநிதிகள் நாம் என்ற அரிய தத்துவத்தை சிந்தனை செய்தால் இந்த உலகத்தில் குறுகிய காலம் வாழும் நாம் ஊழியம் செய்வதற்கே பிறந்துள்ளோம் என்ற உண்மை வெளிப்படும்.

மனித சமுதாயத்திற்கு ஊழியம் செய்வதின் மூலம் தனது உண்மையான பிரதிநிதி என்ற அந்தஸ்தை இறைவனிடத்தில் பெற முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

பொது வாழ்க்கையும் சமூக நலமும் அரசியலோடு கலந்தவையே. ஆனால் இன்று அரசியல் சாக்கடை என விமர்சிக்கப்படுகிறது.

ஆட்சி அதிகாரமும் அரசியல் தலைமையும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அண்ணல் **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் இலக்கணம் வடித்துத்தந்துள்ளார்கள்.

ஹஸரத் உமரே பாரூக் அவர்களின் ஆட்சியை பின்பற்றி என் தேசத்தில் ஆட்சி அமைய வேண்டும் என தேசப்பிதா **மகாத்மா காந்தி** அடிகள் ஆசைப்பட்டார். அந்த அடிப்படையில் ஆட்சியும் அரசியலும் சாக்கடை அல்ல. உண்மையானவர்களுக்கு சேவை செய்ய கிடைத்த வாய்ப்பே !

கிராமமாக இருக்கட்டும் அல்லது தேசமாக இருக்கட்டும் தனி மனிதன் என்ற ரீதியில் சாதிக்க முடியாததை தலைவர் என்ற அந்தஸ்தில் சாதித்து விடலாம்.



"விளக்கு மாமா"
ஹாஜி V. M. S. லெப்பை

பெருந்தலைவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை பாடத்தில் படித்தே பழக்கப்பட்ட நமக்கு ஒரு கிராமத்தின் தலைவரின் ஆட்சி அதிகாரம் வாழ்க்கை முறைகளை அருகிலிருந்து பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்த போது அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது தவறில்லை.

முப்பதாயிரம் மக்கள் தொகையும் 12.5 சதுர மைல் சுற்றளவும், மதம், பொருளாதாரம், தொழில், வாழ்க்கைமுறை இவைகளில் பலதரப்பட்ட மக்கள் வாழுகின்ற **காயல்பட்டணத்தின்** இன்றைய பேரூராட்சி மன்றத் தலைவர் **'விளக்கு மாமா'** என எல்லோராலும் அன்புடன் நேசிக்கப்படும் **ஹாஜி V. M. S. லெப்பை** அவர்களோடு நெருக்கமாக இருக்கக்கூடிய வாய்ப்பு பலருக்கு இருந்திருக்கலாம். இன்றைய பேரூராட்சி

மன்ற உறுப்பினர்களும், பணியாளர்களும் அத்தகைய நெருக்கமுள்ளவர்களே! துணைத் தலைவர் **M. N. சொளுக்கு அப்துல் காதர்,** நிர்வாக அதிகாரி **அ. மு. செய்யது முகம்மது** உறுப்பினர்களான **காயல் மகபூப்,** நானும் இந்த நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டவர்கள். அதிலும் குறிப்பாக தம்பி **காயல் மகபூப்** அவர்களும் **நானும்** இந்த நான்காண்டு காலத்தில் மிக அதிக நாட்கள் தலைவர் அவர்களுடன் ஒன்றாக இருக்கக் கூடிய அரிய வாய்ப்பை பெற்றிருந்ததால் நிறைய விஷயங்களை அறிய முடிந்தது.

இன்று பல மணி நேரங்கள் உண்ணாவிரதமிருந்து உயிர் நீப்பதும் சில நிமிடங்களில் தன் தேகத்தையே எரித்துச் சாம்பலாக்குவதும் மிகப்பெரும் தியாகமாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

இந்திய விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த **மௌலானா முகம்மதலி ஜவஹர்** அவர்கள், " ஒரு கொள்கைக்காக உயிரை விடுவது தியாகமல்ல. அதற்காக வாழ்வதுதான் சிரமமானது " என்றார்.

உண்மைதான் ! ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக வாழ்ந்து காட்டுவதுதான் லட்சியம்.

ஒரு நல்ல தலைவர் உருவாக வேண்டுமானால், அவர் சிறந்த லட்சியவாதியாக இருக்க வேண்டும்.

நலல தலைமைக்கு இலக்கணம் காட்டுகின்ற போது **அல்லாமா இக்பால்** சொன்னார், "நேர்மை, நீதி, அஞ்சாமை ஆகிய பாடங்களை படி. உலகத்தை வழிநடத்தும் தலைமை உனக்கே கிடைக்கும்".

இந்தியக் குடியரசுத் தலைவராக இருக்கும் **மேதகு R. வெங்கட்ராமன்** அவர்கள், "அடிபணியத் தெரிந்தால்தான் ஆணையிட முடியும், தொண்டு செய்ய முடிந்தால்தான் தலைவனாக முடியும்" எனக் குறிப்பிட்டார்,

மேற்கண்ட பொன் மொழிகளுக்கு இலக்கணமாக வாழ்பவர் எங்களன்பு தலைவர் **" விளக்கு மாமா "**

63 வயதிற்குப் பிறகு காயல்பட்டணம் பேரூராட்சி மன்ற தலைவர் பதவி விளக்கு மாமாவை தேடி வந்தது.

கட்சிகள், சமூக அமைப்புகள், ஜாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒட்டுமொத்தமான ஆதரவோடு மக்களின் பிரதிநிதியாக தேர்தலில் நிறுத்தப்பட்டார்கள். மாமாவிற்கு **விளக்கு** சின்னமே தரப்பட்டது. 26 - 2 - 1986ல் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று பொது மக்களின் ஆரவார வரவேற்புக்கிடையே 3 - 3 - 1986ல் பேரூராட்சி தலைவராக பதவி ஏற்றார். பதவி ஏற்பு விழா பேரூராட்சி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. உற்சாகப் பெருக்கோடு ஊரே திரண்டு வந்தது.

"பொதுமக்கள் வாழ்த்துக்களின் பலத்தினாலேயே ஆட்சி நிலைத்து நிற்கும். ஆட்சியாளர்கள் மக்களின் ஊழியர்களாகவே இருக்க வேண்டும்" என்றார் **மகாத்மா காந்தி.**

அவரது கூற்றுக்கு முற்றிலும் பொருத்தமானவர்தான் **விளக்கு மாமா**. தனி மனிதனுக்கு ஆசா பாசங்கள் இருக்கலாம். அதற்காக அவன் வகிக்கின்ற பதவியை பயன்படுத்தக்கூடாது என்பதை லட்சியமாகக் கொண்டவர் **V. M. S. லெப்பை ஹாஜியார்.**

வசதி படைத்தவர்களுக்குத்தான் வாழ்க்கையின் தேவைகள் என்றில்லை வறியவர்களுக்கே எல்லா தேவைகளும் ஏற்படுகின்றன.



S. T. முஸ்தபா கமால்

இரவு பகல் இருபத்திநான்கு மணி நேரமும் எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற உணர்ச்சியில் செயல்படுபவர்.

வறியவன், நோயாளி, வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்கள், குடும்பங்களில் பிரச்சனைக்கு ஆளானவர் தங்கள் தங்கள் தேவைகளுக்காக தலைவரை சந்திக்க வருவர். வருகின்ற எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் பரிவு பாசம் சேவை செய்பவர்.

பெரியவர்களுக்கு மட்டும் தான் என்றில்லை. சின்னப்பிள்ளைகள் வந்தால்கூட சேவை செய்து கொடுக்கும் மனப்பக்குவத்தை இந்த மனிதரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார பலமும் குலப்பெருமையும்தான் வாழ்வியலின் அந்தஸ்துக்கள் என வரைமுறை அமைத்துக்கொண்ட இந்தக் காலத்தில், அந்தப் போலி அந்தஸ்தில் தன்னைச் சுற்றி வேலி அமைத்துக்கொள்ளாத மகத்தான தலைவர் V. M. S. **லெப்பை ஹாஜியார்.**

திறமைக்கும் சேவைக்கும் மதிப்பளிக்கத் தெரிந்தவர். அத்தகையவர்களை அருகில் வைப்பதில் ஆசை கொள்பவர். அதன் விளைவுதான் உண்மையின் வெளிப்பாடுகள் இன்று வெளிச்சத்திற்கு வருகின்றன.

தலைவரைப்பற்றித் தெரியாதவர்கள் அவர் பயங்கர கோபக்காரர் ஆத்திரப்படுபவர் எனச் சொல்வதுண்டு. தலைவரைப்பற்றி தெரிந்தவர்கள் அவர் ரெம்ப ரெம்ப நல்லவர் அதனால் பொது வாழ்க்கைக்கு பொருத்தமில்லை எனக் கூறுவதுண்டு.

சிங்கங்களின் கூட்டத்திற்கு மானின் தலைமை சிறப்பன்று. மான்களின் கூட்டத்திற்கு சிங்கத்தின் தலைமை இருப்பதுதான் பொருத்தம். தனக்கு எது நேர்மை என்று தெரிகிறதோ அதை எந்த இடத்திலும் எவர் முன்னிலையிலும் பகிரங்கமாக எடுத்துச் சொல்ல தயங்காதவர். தவறுகளை கண்டித்துணர்த்த துணிந்தவர். ஆசை உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர். எவரையும் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் அணுவளவு கூட இல்லாதவர். எல்லாவற்றிற்கும் மேலாக மிகச் சிறந்த ஒழுக்கத்துக்குச் சொந்தக்காரர்.

இன்று தமிழகத்தில் அமைந்துள்ள பேரூராட்சி மன்றங்களில் காயல்பட்டணத்திற்கு தனியிடம் உண்டு.

எந்தப் பிரச்சனையானாலும் இந்த மன்றத்தில் கலந்துரையாடல் செய்யப்பட்டே முடிவெடுக்கப்படுகிறது. தலைமையின் சர்வாதிகாரம் இல்லை. உறுப்பினர்களிடையே சார்பு உணர்வுகள் இருந்தாலும் எத்தகைய வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டாலும் கோப தாபங்களோ ஆத்திர உணர்ச்சிகளோ அருவெறுப்பான செயல்களோ இல்லை. வெளிநடப்பும், பெஞ்சுடைப்பும், கல் வீச்சு அடிதடி சண்டையும் இல்லாமல் ஆக்க பூர்வமான செயலும் அறிவுப்பூர்வமான வாதமும்தான் மன்றக் கூட்டங்களில் நடைபெறும். இதற்குக் காரணம் சிறப்பான தலைமை. அந்தத் தலைமையின் பொருத்தமான அணுகுமுறை. விருப்பு வெறுப்புமில்லாமல் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் தனக்கு சரி என்று படுவதை எதிர்ப்புகளுக்கும் எதிர் விளைவுகளுக்கும் அஞ்சாமல் துணிந்து செய்பவர் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத லட்சியத் தலைவர்களுக்கு இவர் ஒரு உதாரணம்.

எந்தப் பிரச்சனைகள் மற்றும் ஊர் நலப் பணிகள் தொடர்பாகவும் அதிகாரிகளைச் சந்திப்பதற்கோ அல்லது தேவைகளுக்கோ எவ்வளவு தூரம் வெளியூர்களுக்கு பயணம் செய்தாலும் யாரையும் எதிர் பாராமல் தனது சொந்தப் பணத்தை செலவழிப்பவர். தனது சொந்தக் காரிலேயே செல்பவர். நாங்களிறிந்த வரையில் இன்று சட்டப்படியான பிரயாணப்படி வாங்காத ஒரே தலைவர் **ஹாஜி V. M. S. லெப்பை** அவர்களாகத்தான் இருக்கும்.

கர்வம், மோசடி, சூது, நயவஞ்சகம், ராஜதந்திரம் என்ற பெயரால் நரித்தனம் இந்த வார்த்தைகளைக் கூட அறித்திராத அற்புத மனிதர் - அதுவும் இந்த நூற்றாண்டில்.

எவரிடத்திலும் பகை என்பது இவரிடத்தில் இல்லை. குழந்தை உள்ளத்திற்குச் சொந்தக்காரர். சாதாரணமானவர்களையும் சாமானியர்களையும் தானே தேடிச் செல்பவர்.

தலைவரின் விருந்தோம்பும் பண்பைப்பற்றி தனி ஒரு கட்டுரையே எழுதலாம். நேரம் கடந்து வந்தாலும் கூட அது எத்தனை பேராக இருந்தாலும் அட்சய பாத்திரம் போல் சுவையான உணவு வழங்க தயங்காதவர். மற்றவர்கள் சாப்பிட்ட பாத்திரங்களைக் கூட தானே சுத்தம் செய்து வைப்பதில் சுகம் காண்பவர்.

நல்ல செயல்களுக்கு ஆதரவு கரம் நீட்டுபவர். சமாதானத்திற்கும் சக வாழ்க்கைக்கும் ஓயாது உழைப்பவர். இவரது சேவையின் சிந்தனையில் சாதி சமய வேற்றுமைகள் வட்டார பாசங்கள் குறுக்கிட்டதில்லை. தனது பொருளாதார தகுதிக்கும் மீறி வாரி வழங்கும் வள்ளல்.

இந்த அற்புதமான தலைவர் **ஹாஜி V. M. S.லெப்பை** அவர்களுடன் நகரப் பிரச்சனைகள் பலவற்றிற்காக பல்வேறு துறைகளின் அதிகாரிகளைச் சென்று சந்திக்கின்ற வாய்ப்பை பெற்றிருக்கிறோம். அலுவலகத்தின் சாதாரண சிப்பந்தி முதல் தலைமையிடத்தின் IAS, IPS அதிகாரிகள் வரை தலைவர் விளக்கு மாமா மீது வைத்திருக்கும் பாசமும் மரியாதையும் அளவிடமுடியாது. இது எல்லாம் வல்ல இறைவனால் நம் தலைவருக்கு தரப்பட்டுள்ள அருட்கொடை.

நாங்கள் பேரூராட்சி மன்றத்தில் பொறுப்பேற்பதற்கு முன் முடியாது என மறுக்கப்பட்டிருந்த காரியங்கள் எல்லாம் தலைவரின் முயற்ச்சியின் காரணமாக அதிகாரிகளாலேயே முடித்துத் தரப்பட்டிருக்கின்றன.

கி. பி. 2016 வரை இன்னொரு நீர்த்தேக்கம் இந்நகருக்கு தேவையில்லை என்ற அதிகாரிகள் எடுத்திருந்த முடிவு முறியடிக்கப்பட்டு எட்டு லட்ச ரூபாய் மான்ய உதவியோடு நான்காவது மேல் நிலை நீர்த்தேக்கம் இன்று கம்பீரமாக காட்சி தருகிறது. 3-3-86ல் பதவி ஏற்ற தலைவர் 7ம் தேதி தொடங்கிய முதல் பணியே இதுதான்.

சில குறிப்பிட்ட உயர் அதிகாரிகளை சந்திப்பதைக் கூட தவிர்த்துக் கொள்ளுங்கள் என சொல்லப்பட்டதையும் மீறி நேரம் தவறிய நேரத்தில் அத்தகைய அதிகாரிகளை தலைவர் அவர்கள் சந்தித்த போது காரியங்களை நிறைவேற்றித் தந்ததோடல்லாமல் கார் வரை வந்து வழி அனுப்பி வைத்த காட்சியை கண்டு மெய்சிலிர்த்தோம்.

மிக மிக முக்கிய புள்ளிகளின் அழைப்புக்களைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருந்த தமிழக ஆளுனரின் அன்றைய ஆலோசகர் **டாக்டர் பத்மனாபன்** IAS. அவர்களை இந்நகருக்கு அழைத்து வந்து முப்பெரும் விழா எடுத்து அதிகாரிகளால் மறுக்கப்பட்டிருந்த **பேருந்து நிலையத்**திற்கு அனுமதியும் ரூபாய் 15 லட்ச நிதி உதவியும் விழா மேடையிலேயே பெற்றுத் தந்த பெருமை பாராட்டத்தக்கதல்லவா ?

சட்டப்படி இது முடியாது என்று மறுக்கப்பட்ட புள்ளிமனு மாற்றம் போன்ற விஷயங்களில் உண்மை நிலவரம் அறிந்து உடனுக்குடன் முடிவெடுத்ததன் விளைவாக இன்று எத்தனையோ குடும்பங்களில் நிம்மதி.

ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தில் காயல்பட்டணத்திற்கு ஒதுக்கப்படும் லட்சக்கணக்கான ரூபாய்களும், காயல்பட்டணத்தை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் வாழும் முஸ்லிம் அல்லாத சகோதரர்களின் நலனுக்காக பணிகள் நிறைவேற்றப்பட்டு செலவழிக்கப்படுகின்றன.

இன்னும் இது போன்ற எத்தனையோ பணிகள் விளம்பரத்தின் வெளிச்சத்திற்கு வராமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு சிறப்பான தலைமை நமக்கு கிடைத்ததற்காக நாம் நெஞ்சை நிமிர்த்தி பெருமைப்படலாம். இந்தத் தலைவருடன் உடனிருந்து விசுவாசமாக உழைப்பது நமக்கு கிடைத்த பாக்கியம் என்றே சொல்லலாம்.

67 வயதான நிலையிலும் 27 வயதுக்குரிய இளைஞனின் சுறுசுறுப்பும் மகத்தான மன வலிமையும் உள்ள தலைவர் ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள் இறை நேசச் செல்வர்களின் பாரம்பரிய பெருமைக்குரிய வாரிசு குடும்பத்தில் **விளக்கு முஹம்மது சுலைமான் லெப்பை - சாளை ஹஸன் அகம்மது உம்மா** என்ற பெற்றோர்க்கு நான்காவது பிள்ளையாக 3-12-1923ல் பிறந்தார்கள்.



காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றத் தலைவராக 3-3-86ல் பொறுப்பேற்றதும் கோப்பில் கையெழுத்திடுகிறார்.

தலைவரின் முழுப் பெயர் **விளக்கு முஹம்மது சேக்னா லெப்பை.** காயல் பட்டணம் காஹிரா ஸ்கூலில் 5வது வகுப்பு வரை படித்தார். தமது 15ம் வயதில் (1938) திருச்சி L. K. S.ல் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார். தலைவர்களுடன் உடன்பிறந்தவர் 6. இதில் இருவர் பெண்கள். இதில் இருவர் சிறு குழந்தையாய் இருக்கும் போதும் மற்றவர்கள் வாலிப வயதிலும் இறந்து விட்டார்கள்.

தலைவரின் தாயார் 1938ல் காலமாகி விட்டதால் தலைவரின் தந்தை **ஆமினா உம்மாவை** மறுமணம் செய்தார்கள். இவர்களுக்கு முதல் குழந்தை இறந்து பிறந்தது. பின் 1952ல் இன்னொரு ஆண் குழந்தை பிறந்தது. அதுவே தற்போது தலைவருக்கு உறுதுணையாக மருமக்களுடன் ஹாங்காங்கில் தொழில் செய்யும் V.M.S.M. **அமீன்** B.Com., ஆகும்.

1947 ஆகஸ்ட் 29ல் **ஹாஜியா வாவு அஹமது கதீஜா உம்மாவை** திருமணம் முடித்தார்கள் இவர்களுக்கு 7 பெண்கள்.

1947 முதல் 54 வரை ராஜஸ்தான் ஜெய்பூரில் அலுவலகம் அமைத்து தொழில் செய்த முதலாவது காயல்வாசி இவர்தான்.

1940லேயே இலங்கை சென்ற V.M.S. **ஹாஜி** அவர்கள் 1970 வரை இலங்கையுடன் வியாபார தொடர்பு வைத்திருந்தார். 1950ல் சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளுக்கு தொழில் செய்யும் நோக்கோடு சென்றார். காயல்பட்டணத்திலிருந்து முதன் முதலாக ஹாங்காங் சென்று நூற்றுக்கும் மேற்பட்ட கம்பெனிகள் அமைக்கப்படுவதற்கும் காயல் வாசிகள் தொழில் செய்வதற்கும் காரணம் ஹாஜி V. M. S. **லெப்கை** அவர்களே! 1959ல் ஹாங்காங்கில் காஹிரா டிரேடர்ஸ் என்றும் அதன்பின் விளக்கு டிரேடர்ஸ் என்ற பெயரிலும் கம்பெனிகள் துவங்கினார்.

ஐரோப்பாவில் 15 நாடுகளிலும், ஜப்பான், சைனா, சவூதி, குவைத், மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் உலகின் பல்வேறு நாடுகளிலும் சுற்றி வந்துள்ள விளக்கு மாமா அவர்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம், சைனிஸ், மலாய் போன்ற பல மொழிகள் சரளமாகப் பேசத் தெரிந்தவர்.

ஒன்றுபட்ட உணர்வுடன் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஊரில் முடிவு செய்யப்பட்ட போது அனைத்து ஜமாஅத்தின் ஏகோபித்த ஆதரவோடு பேரூராட்சி தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் ஹாஜி V. M. S. **லெப்பை** அவர்கள். ஜமாஅத் இந்த முடிவை எடுத்திருந்தபோதிலும் அரசியல் கட்சி சார்பில் வேட்பாளர்கள் இருவர் போட்டியிட்டதால் தேர்தல் நடைபெற்றது. எதிர்த்த வேட்பாளர்கள் ஜாமீன் இழந்தனர். மிகப் பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் விளக்கு மாமா வெற்றி பெற்று காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி மன்ற தலைவராக 3-3-81ல் பொறுப்பேற்றார்.

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய துணை தலைவராக விளக்கு மாமா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என அனைவரும் விரும்பினர். அதிலும் எதிர்பாராதவிதமாக போட்டி ஏற்பட்டது, ஆனால் கிட்டத்தட்ட எல்லா ஓட்டுக்களையும் தலைவரே பெற்று மகத்தான வெற்றி பெற்றார்.

மேற்கண்ட பதவிகளில் கட்சி சார்பற்ற முறையில் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், ஹாஜி V. M. S, **லெப்பை** அவர்கள் பழுத்த காங்கிரஸ் வாதி. 12 வயதிலேயே கதர் உடுக்க ஆரம்பித்தார். மிகச் சிறிய வயதிலேயே காங்கிரஸில் இணைந்தார். முன்னாள் பிரதமர்களான **திருமதி இந்திரா காந்தி, திரு. ராஜீவ் காந்தி,** இந்திய குடியரசுத் தலைவர் **மேதகு R. வெங்கட்ராமன்** போன்ற பெருந் தலைவர்களுடன் நேரடி தொடர்பு வைத்திருந்தவர். இன்றும் காயல்பட்டணம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவராக உள்ள விளக்கு மாமா, அன்றைய நெல்லை மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை கமிட்டி தலைவராகவும் பணியாற்றினார்.

புனித இஸ்லாத்தில் மார்க்க பற்று மிகுந்த மாமா அவர்கள் ஹாஜி அப்பா தைக்கா பள்ளியிலும், காட்டு மொகுதூம் பள்ளியிலும் தலைவராக பொறுப்பு வகிக்கின்றார்கள்.

எல்லோருக்கும் உதவும் மனப்பான்மையை இயற்கையாக பெற்ற இவர்கள் ஓட்டப்பிராத்தில் உருவாக்கப்பட்டுள்ள அல் மூஃமின் உமறுப்புலவர் சிறுவர் இல்லத்தின் தலைவராக பணி செய்கிறார். ஐக்கிய பொருளாதார பேரவையின் உறுப்பினராகவும் உள்ளார்.

காயல்பட்டணம் மருத்துவ அறக்கட்டளை ஸ்தாபக அமைப்பாளர்களில் ஒருவரான மாமா அவர்கள் அதன் நிர்வாகக் குழுவிலும், நாசரேத் புனித லூக்ஸ் மருத்துவ மனையின் ஆட்சிக் குழுவிலும் உறுப்பினராக இருந்து சேவை புரிகிறார்.

கல்விப் பணி செய்வதை கடமையாகக் கருதும் விளக்கு மாமா அவர்கள் ஆறுமுகனேரி பேயன்விளையிலுள்ள காயல்பட்டணம் ஆறுமுகனேரி மேல்நிலைப் பள்ளிக்கும், அதன் கல்விச் சங்கத்திற்கும் தலைவராக இருந்து பணி செய்கிறார்கள். இவர்களும் இவர்களது தந்தையும் தலைவரின் குடும்பத்ினரும் தான் இப்பள்ளிக்கு 8 ஏக்கர் நிலத்தை நன்கொடையாகத் தந்தனர்,

காயல்பட்டணம் எல் கே மேல்நிலைப்பள்ளியின் துணைத் தலைவராகவும், முகிய்யத்தீன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் நிர்வாகக் குழுவிலும், பாளையங்கோட்டை சதக்கதுல்லா அப்பா கல்லூரி பொதுக் குழுவிலும் உறுப்பினராக இன்று பணி செய்யும் தலைவர் அவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு அமைப்புகளிலும் பல பொறுப்புகளை வகித்து பணி செய்திருக்கிறார்கள்.

அரிமா சங்கப் போன்ற சர்வதேச புகழ்மிக்க இயக்கங்களில் பணி செய்த விளக்கு மாமா அவர்கள், லண்டன் சவுத்தால் அரிமா சங்க துவக்க விழாவில் பெண் மேயர், துணை மேயருடன் பங்கேற்று உரையாற்றியவர். தான் தொழில் செய்யும் நாடுகளிலும் சேவை செய்யும் எண்ணமுடையவர். ஹாங்காங தமிழ் பண்பாட்டுக் கழகத்தில் ஆயுட்கால உறுப்பினராக உள்ள தலைவர் இரு வருடங்கள் தொடர்ந்து தலைவராக இருந்துள்ளார்கள்.



ஹாங்காங் தமிழ்ச்சங்க தலைவராக ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள் இருந்தபோது எடுத்த படம்

புகழுக்குரியவன் வல்ல இறைவன் ஒருவன்தான். சேவைகளை அங்கீகரிப்பவனும் அதற்காக நற்கூலி கொடுப்பவனும் அவனே.

நீங்கள் இறைவனுக்கு வழிப்பட்டு நடந்து கொள்ளுங்கள் (அவ்வாறே அவன்) தூதருக்கும், உங்களுக்கு தலைவர்களாக இருப்பவர்களுக்கும் வழிபட்டு நடந்து கொள்ளுங்கள்.

— திருக் குர்ஆன் (4:59)

A PARAMOUNT PRESIDENT
Haji. V. M. S. LEBBAY

—G. GANESAN, M.A., M.Ed.,
Asst. Headmaster, K. A. Hr. Sec. School, Arumuganeri.

"They alone live who live for others;
The rest are more dead than alive."
-Swami Vivekananda

A descendant of the 'Vilakku':

Haji. Vilakku Mohamed Shaikna Lebbay, popularly known as 'Vilakku Uncle' is a descendant of the renowned Vilakku' family in Kayalpatnam. He is a unique personality who has stolen the hearts of the young and the old, the rich and the poor. His life is a wonderful book to those who are in the services of the public today. He has been maintaining a sacred style of life which is to be emulated by all who claim leadership in any walk of life.

A paramount president:

Kayalpatnam, a historically ancient port town which has withstood the vicissitudes of time is proud enough to have a greatman at the helm of its administration today. The Kayalpatnam Town Panchayat which has entered the centenary has achieved a lot within a short span of three years at the presidentship of our agile 'Vilakku Uncle', Haji. V.M S. Lebbay. His acumen in the administration of a township has never failed thanks to his vast experience in many foreign countries It has been a stupendous matter to experts in township, when our president Haji. V. M. S. Lebbay comes out with an apt solution for the crises that confront the panchayat administration.

As a sincere follower of Gandhiji, he wields the weapon of truth in all his endeavours. He never compromises truth for narrow affinity. Though his straightforwardness has incurred the displeasure of the people who wish to attain things by foul means, it has been applauded and appreciated by lovers of truth.

The secret of his success lies in his efficacy of getting the team of his staff well united and as a result, their zest to serve him whole-heartedly is really exhilarating. Actually, they are the flesh and blood for his style of fair functioning the panchayat administration.

Haji. V.M.S. Lebbay has striven hard and achieved the goal of keeping the town neat and tidy. It is with his leadership that this town is turned into a broad daylight even at night. All the dilapidated roads have been properly set right and one wonders whether our present president has a 'magical lamp' at his disposal. The drinking water problem which is a threatening one throughout the country has been eased of in our town with his relentless efforts The sanction of a fourth water tank with a subsidy of Rs. 8 lakhs and a bus stand with an aid of Rs. 15 lakhs are the awards for his tireless work. These herculean tasks, no doubt, are records in the annals of Kayalpatnam Panchayat. so, it is highly fitting that this Selection Grade Town Panchayat is celebrating its centenary when our dedicated leader is at the saddle of its administration.

An ebullient educationist:

Haji. V.M.S. Lebbay's contribution to education and educational pursuit is a never ending endeavour. According to him, education is the only key that unravels the mystery of human sufferings on earth. So, he is always ready to help for educational pursuits day and night.

Though he has a very little formal education, he has learnt a lot by experience. His business enterprises in Singapore and Hong Kong and his visits to Japan, China, Saudi, Kwait and about 15 European countries have given him an enriched practical knowledge. His craze for learning turned him into a voracious reader and ultimately the reading habit made him a versatile genius.

In the post independent period, when people were torn apart by narrow religious and communal fanaticism, lovers of peace and communal harmony at Kayalpatnam and Arumuganeri wished to have an educational institution to maintain a rapport between Kayalpatnam and Arumuganeri and unity among the Muslim, Hindu and Christian Communities. When Peyanvilai, a mid-point between Kayalpatnam and Arumuganeri was deemed to be a suitable site for a high school, Haji. V.M.S. Lebbay and members of his 'Vilakku' family didn't hesitate to donate a vast area of 8 acres for this genuine cause. Appreciating his philanthropic fervour, the Kayalpatnam-Arumuganeri Kalvi Sangam unanimously requested our donor to be the president of the school as well as the Kalvi Sangam. The plea was accepted and now under his stewardship, the school has added many feathers to the cap of its excellence. He remembers with gratitude the co-operation being rendered by Mr. A. Somasundaram, the Secretary and Shri. K. T. Rajan, the Treasurer of the school in this endeavour.



Plaque unveiled by Haji. L.K. Sheik Mohamed (Kayal Gandhi) in memory of Late. V. M. S. Mohamed Abubacker at V. M. S. Mohamed Abubacker Hall in K.A. Hr. Sec. School. He is one of the donors of the School premises Mr. G. Ganesan, the author of this article stands next to Kayal Gandhi.

Haji. V.M.S. Lebbay is not for power or position, but they come to him voluntarily. Again actuated by the wishes of well-intentional companions, he is also keeping a few other positions-Vice-president at Elkay Higher Secondary School, Kayalpatnam, Executive Member at Muhyiddeen Matriculation Higher Secondary School, Kayalpatnam, Member of the General Body at Sathakkathulla Appa College Palayamkottai, Founder Member and Executive Member at Kayalpatnam Medical Trust Hospital, Member of the Governing Board at St. Luke's Hospital, Nazareth etc. His love and affection towards the student community and high regards for the teaching community have created a sense of fatherly affection towards him.



Late V.M.S.M. Abubacker

A paragon of political virtues:

Though Haji. V.M.S. Lebbay is impartial in his attitude, he is not without affinity to a particular political party-the Congress [I]. As a veteran freedom fighter, he had close contacts with Mahatma Gandhi, Mohamed Ali Jinnah, Maulana Abul Kalam Azad, Jawaharlal Nehru, Rajendra Prasad, Kamaraj, Indira Gandhi and a host of other national leaders. Accepting the leadership of Gandhiji and plunging himself into the Struggle for India's Freedom at a young age of 12, he has participated in many of the Movements launched by the Indian National Congress.

His patriotic fervour was such that he was much pained at India's partition. After obtaining freedom, he used to encourage our leaders in all their efforts in the interest of our country. He is in receipt of many letters written to him by our national leaders on matters of great importance in the past as well as at present. These letters vividly testify how our Hajiar's views are considered with due regards by them.

Mr. Lebbay is still in close contacts with Mr. R. Venkatraman, the President of our country, Mr. Rajiv Gandhi, the former Prime Minister, Mr. Karunanidhi, the Chief Minister of Tamilnad. Now, his affinity to the oppsition Congress (I) in no way deters him from contributing something concrete to the unity, integrity, and betterment of the country. It is this nobility that prompted the Kayalpatnam public to declare him the Common Candidate in the presidential election to the Kayalpatnam Town Panchayat irrespective of caste, community, and politics. In the same spirit, he was elected the Vice-Chairman of Tiruchendur Panchayat Union by all political parties without animosity. Now, people who have pledged their affinity to various political parties throng his office everyday and look forward to him inorder to get their sufferings alleviated. Is this not a rare personality that we once witnessed in Mahatmaji?

A true child of Islam:

Haji. V.M.S. Lebbay is no doubt a true child of Islam. He is very pious and never neglects to perform the religious rites in time. Still, he is so pure at heart that he doesn't make any discrimination among people in the name of religion. In fact, Hindus and Christians move very affectionately and obtain the maximum favour from him.

Some of the religious fanatics used to criticize him for his alacrity in helping people belon to other communities. But, their castigation fails to hamper his commiseration for them since h turns a deaf ear to such criticism. His religious tolerance is such that he deems it a privilege i associating himself with functions held in the families of his Hindu and Christian brethren.

A benevolent philanthropist:

'Vilakku Uncle' finds pleasure in helping the poor, educational institutions and publi organisations. Though he is not a multi-millionaire, he is very liberal in financial assistance. Man a girl in penury has got married thanks to his benevolence.

Again, Mr. Lebbay persuades with his relatives and companions to get themselves involve in philanthropic activities. He never likes people who go back on their promises. So, whateve be the assistance promised, it should be carried out without delay, according to him. He is o the opinion that false hope and procrastination are worse than homicide.

At the behest of Haji. B.S. Abdul Rahman Sahib, founder member of United Economi Forum and Seethakathi Trust, Madras, our 'Vilakku' uncle accepted the presidentship at Almumi Omer Pulavar Childrens' Home, an orphanage founded with the support of other like-minde philanthropists at Ottapidaram, a backward area His avidity to enlighten the deserted childre impels him to plan for a school and measures are afoot in this matter. His prime concerm for better future for the youth command great respect among them. So, it is no wonder, many youth who are well placed thanks to his liberal assistance treat him as their god-father.

A beloved businessman:

Haji. V. M. S. Lebbay, firstly embarked his business career in Sri Lanka by 1940. The he returned to North India and had a flourishing business as a result of his fair dealings. He als had his business transactions in the eastern countries-Singapore and Hong Kong. He did no wish to dominate the business world himself. Many of his friends and relatives looked forwar to him as their mentor and as many as 150 of them have been introduced in business in foreig countries as a result of the indomitable will of our 'Vilakku Uncle'. At present, Mr. Lebba maintains Hong Kong as his business headquarter. He has won the hearts of the Tamils as wel as the native public there due to his honest and sincere dealings. He was elected Presiden of the Tamil Cultural Association in Hong Kong for two years consecutively. At present, Mr. Mohamed Ali, one of his sons-in-law is taking active participation in the Tamil Cultural Association. Our 'Vilakku' uncle's active involvement in public life has forced him to get himsel relieved of business activities and concentrate his attention in public welfare.

During his business transactions in foreign countries, it would be a misunderstanding to think that he was free from public life. • Actually, he maintained a cordial relationship with the Indian Embassies there and did all that he could for the betterment of the Indians. He leaves his soul and mind here in India whenever he goes to foreign countries on business. He was always in close contacts with our Indian leaders through letters. Most of his letter correspondences with the national leaders were made only when he was in the alien lands.

Mr. Lebbay became a cynosure to the Indians in the alien countries because he did not fall prey to the surreptitious dealings in making money. His impeccable transaction was certainly an eclat and it served as an impetus to the novice in that field. The foreign public who were carried away by his fair and just means treated him as their beloved brother.

A true Gandhian:

Haji. V M.S. Lebbay is certainly an ardent follower of Mahatma Gandhiji. He can not brook the sufferings of the poor. He strives hard to mitigate the hardships of the downtrodden. At the same time, he will not tolerate anything wrong going on in his vicinity. He will oppose them tooth and nail but he is not vindictive in his approach. One can not coerce him to do a particular thing but he will succumb to love and affection only. He has the fortitude of mind to face any situation and he will not go helter-skelter in the event of crisis.

'Vilakku' uncle is known for austerity and he does most of the works himself. One can see him filing the papers, mending the torn out things, arranging the hall, washing the room etc. He is a loving and affectionate host and his hospitality exhibits his assiduity in entertaining the guests. Those who come to him for assistance were also treated as guests and this magnonimity is highly commendable. It will not be an exagger ation to say that even his attendants are treated politely and duly taken care of. It is hard to believe that we have such an altruistic leader among us.

To be very frank - I have heard of Gandhiji but see him in Haji. V.M.S. Lebbay. He is a 'beacon light' to the distressed, a 'lode star' to the down trodden, a 'light house' to the suppressed and a 'Vilakku' to his followers. I wish him every success in all his endeavours. May God bless him with a long and healthy life on the auspicious occasion of the centenary celebrations of Kayalpatnam Selection Grade Town panchayat.

' He deserves paradise who makes
his Companions laugh''

- Holy Quron.



Haji. V.M.S. Lebbay in the Company of Dr. Venkata Subramanlam, Director of School Education and Shri. K. T. Kosalram M. P. in "Kalvi Thanthai Janab L. K. Lebbay Thamby Hajiar Arangam" on the occasion of 'laying the foundation stone' for K.T. Kosalram Sceince Laboratory.

LOVING HEARTS - ROUND THE WORLD



Commissioner for India at Hongkong: year 1963



Commissioner for India at Hongkong : year 1978
Commissioner, Yonus Bhai and Lebbay.



Janab. Kaja Muhiydeen Sahib, Professor. Ismail Sahib
Retired Principal (Then Vice Principal) of
Jamal Mohamed College, Tiruchirapalli; and Others.



At Kobe on 15 05 1960, STANDINGG Miss ......;
Mr. V.M.S. LEBBAY; Master Nilam; Mrs. Alaudeen;
Baby. Haleema and Miss.......




RATMALANA AIRPORT (COLOMBO) 18th Oct. 1959):
Farewell to Mr. V.M.S. LEBBAY. his trip to Hongkong-Japan
[via] Burma, Singapore, Thailand cf Hongkong.



Commissioner for India at Hongkong: year 1976
V.M.S. Lebbay, Adam and Commissioner A. Madhavan.




Wedding ceremony of Ismail Mah Foster
S/o. Yahyamah Mah at Hongkong on C6.12.1959.



Messrs. Yahya Mah, Yu; Shaik, Ave. Hameed,
and Rajiur Rahman and other People from Kilakarai,
Kayalpatnam and Tanjore District.






Party given by Indian Muslim Jamaat at Holiday Inn Hotel, Hongkong, in honour of the Chief Justice of Hongkong, Burunei, Sir Denys Roberts (Year 1972).




Madam. Kimenu Wada; Miss. Mitchiko Wada; Mr. V.M.S. Lebbay; Miss. Sakuko Murai; Mrs. Reikowada and Mr. Yashiowada.




Messrs. Kano and Yasikatsu Wada Party, Osaka 1962.




M/s. MATAKI FAMILY With LEBBAY,
SEYED MOOSA and
IWASAKI at MOKAGUWA (Japan) 1960



1960 at HONGKONG
First Row: Mr. M.S. Chen Mr. Sahib.
Mr. of Kelly & Co. H.K.
Back Row : Mr. V.M.S LEBBAY ABDUL GAFOOR
Mr. A. S. M. SULAIMAN






Reception Given to Alhaj Abdul Samad, M.A., MP. at Hongkong On 1975



Hon'ble Speaker Assembly Tamil Nadu Legislative with Mr. LEBBAY, S ANWAR, M.N. UVAIS Moulavi Sahib and S.A.M. Ali




1950 At SINGAPORE
L to R Standing S.M. MUBARAK, S.M. IBRAHIM [Nagaptnam Manjakollai] and M. IDRIS MARICAN of Karaikal
Siting : V.M.S. LEBBAY, A. ALIM KHAN of Jaipur.



FELICITATION: Felicitation by All Indian Banks to Han'ble Finance Minister of India. At Kongkong Hilton Hotel, Hongkong On 21st April, 1975. Janab M A. Guddoos, Janab. A G. Mahmood (Both Kilakarai), Janab. V. M. S. Lebbay and Union Finance Minister Shri. C. Subramaniam



BRINTHAVANAM (Mysore) On 28—9—1969
Rt. to Lt. M.Y.M. Musthafa (Basha Bhai of Tiruchi) OMER, LEBBAY Master Amanath ali (S/o. Basha Bhai) V.M.S.M. Ameen B.Com., and V.M.S. MAHMOOD.




Mr. A.S.M. Noohu, Mr. Anthony Muthu
Mr. V.M.S. Lebbay, Mr. Thangadurai
(Ist Head Master of K.A. Higher Sec. School), and Anvar Batcha.




Haji NONBU BAWA
of Big St., Kayalpatnam.






Business People in BURMA with V.M.S. LEBBAY on 25-10-1959




TIRUCHI FUNCTION :
Presidential Speach by V. M. S. LEBBAY
Mr. Ismail, Principal, Jamal Mohamed College
and
" Muthamil Kavalar "
Thiru
K. A. P. VISVANATHAN



ED. Group Photo: (At Hongkong 1971)
SITTING - LEFT TO RIGHT: Abdul Sukur; V. M. S. Lebbay K.A. Cassim; Abdul Kareem; Shahabdeen
STANDING: RIGHT TO LEFT. Karaikal Maraikar; S.O Sulaiman; Shamusuddeen; P A Sadak; H M Buhary; S. O Buhari (Thiruvarur) Abdul Jabbar.



Mr. Abdul Samad M.P.; with Kayalpatnam and Kilakarai & Tanjore District People. 1975.



Osaka, Christian centre, 17.05.1960



Hongkong Tamil Cultural Association General Body Meeting, 1975-76.

காயல்பட்டணத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம்

அல்ஹாஜ் B. மஹ்மூது

1939 - 45 இரண்டாவது உலக மகா யுத்த காலம். காயல்பட்டணத்தில் கிணறுகள் முழுமையும் உப்பு நீர், குடி தண்ணீருக்காக பெருந் தவிப்பு. ஊரின் தென்கோடி மேல் கோடியிலிருந்து மரப் பீப்பாய்கள் பொருத்திய மாட்டு வண்டிகளில் குடி தண்ணீர் கொண்டு வரப்பட்டது. மண்ணெண்ணெய் டின் ஒன்றுக்கு ஒரு அணு முதல் இரண்டணு வரை விற்கப்பட்ட காலம். வாடிக்கை வண்டிக்காரர் ஒரு தினம் வரத்தவறினால், குடிக்க தண்ணீர் தேடி பாத்திரங்களை கையிலேந்தி மக்கள் அலைந்த காட்சி பார்க்க பரிதாபமாக இருந்தது. விலை கொடுத்து வாங்க முடியாத ஏழைகள் பாவம் மண் குடங்களைத் தாங்கி, கடலோரம் சிறு சிறு ஊற்றுகள் தோண்டி நீர் எடுத்து தாகம் தணித்தனர். காலை தோண்டிய ஊற்றுகளில் மாலை நீர் கயித்து விடும். வரிசையாக புது ஊற்றுகள் தோண்டிக் கொண்டே நெடுந்தூரம் சென்று விடுவர். மீண்டும் துவங்கிய திசை நோக்கித் தோண்டுவர். இந்நிலை நெடுங் காலம் நீடித்திருந்தது. நிவாரணமும் வேண்டியிருந்தது.

இக்கட்டத்தில், இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு அன்றைய ஊர் நிலைகளை ஓரளவு சொல்லிக் காண்பிப்பது அவசியம் எனக் கருதுகிறேன். 1930 முதல் 1940 வரை நாம் மக்களிடையே புத்துயிரும், புத்துணர்ச்சியும் ஏற்பட்டு பற்பல துறைகளில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. பஞ்சாயத்து மூலமும் தாலுகா ஜில்லா போர்டுகள் மூலமும் அரசினர் அளித்த உதவிகளை நமது கிராமமும் பெற்று முன்னேற முயற்சிகள் எடுக்கப்பட்டன, சமுதாயப் பெரியவர்களின் முயற்சியால் ஊருக்கு கல்வி, மருத்துவம், ரோடுகள் மற்றும் பல சவுகரியங்கள் ஏற்பட்டன. அவற்றுள் தனியார் நிலங்கள் சிலவற்றை விட்டுக் கொடுத்து அமைக்கப்பட்ட திருச்செந்தூர் ரோடு குறிப்பிடத்தக்கது மக்களிடையே விழிப்பும் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்பட்டது. ஆனால் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது நமது சக்திக்கு புறம்பாக அரசு உதவியை எதிர்நோக்கி இருந்தது.



ஹாஜி B. மஹ்மூது
முன்னாள் ஐக்கிய முன்னேற்ற சங்க செயலாளர்

1937-ம் வருடம் அகில இந்திய காங்கிரஸ், முதன் முறையாக தேர்தலில் போட்டியிட்டு சட்டசபைகளை கைப்பற்றி பதவி ஏற்ற காலம். காங்கிரஸ் மந்திரி சபையில் சுகாதார மந்திரியான கனம் **யாகூப் ஹஸன் ஸேட்** அவர்களை 5-4-1938ல் நமதூர் அரசு மருத்துவ மனை திறப்பு விழாவுக்காக அழைத்து வந்து குடிநீரில் நம்மின் பரிதாப நிலையை உணர்த்த அவர்களுக்கு உப்பு நீர் குடிப்பாட்டியும், கடற்கரை ஊற்றுகளை பார்க்கச் செய்தும். நூற்றுக்கும் மேற்பட்ட பீப்பாய் தண்ணீர் வண்டிகளை வரிசையாக அடுக்கிக் காட்டியும் நிவாரணம் கோரப்பட்டது. நமது கஷ்டத்தை உணர்ந்த மந்திரி அவர்கள் நமது தனி கிராம அடிப்படையில்லாமல், பக்கத்து கிராமங்களைச் சேர்த்து 11 கிராம அடிப்படையில் ரூபாய் 6½ லட்சத்தில் ஓர் குடி தண்ணீர் திட்டம் தயாரித்தார்கள்.

இது அமல் செய்யப்படுவதற்கு முன்னரே, அரசியல் 93-வது சட்டப்படி கவர்னர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டதை ஆட்சேபித்து காங்கிரஸ் மந்திரி சபை விலகியது. மேலும் 1939-ல் இரண்டாவது உலக மகா யுத்தம் மூண்டது. இதன் காரணமாக சமாதானப் பணிகள் பின் தள்ளப்பட்டு யுத்த தயாரிப்பு முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டதால் நமது குடி தண்ணீர் திட்டம் கைவிடப்பட்டது.


1945-ம் வருடம், நமதூருக்கு ஒரு பொன்னுன காலம். மகா யுத்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. மீண்டும் பொது நலப் பணிகள் துவக்கப்பட வேணுமென்ற ஆர்வம் துடி துடித்தது. 27-2-1945ல் கவுதியா மைதானத்தில் கனம் **ஹாஜி L. K. லெப்பைத் தம்பி** அவர்கள் நமதூருக்கு அதிக அத்தியாவசியமான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொண்டு வருவதை இலட்சியமாகக் கொண்டு தலைமைப் பதவி ஏற்பதாகக் கூறி மக்கள் ஒத்துழைப்பை நாடினுர்கள். கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அதன் உச்சகட்டமாக அக்கூட்டத்திலேயே குடி தண்ணீர் திட்டத்துக்காக ஒரு தனி நபரால் ரூபாய் ஐந்து ஆயிரம் வாக்களிக்கப்பட்டது இது மக்களிடையே பெரியதோர் உற்சாகத்தை தூண்டிவிட்டது. அடுத்த நாளே தலைவரும் செயலரும் செயல்பட துவங்கினர். ஸம்மர் ஹவுஸில் சில தினங்கள் கூடி ஆலோசித்தனர். யுத்த கால விலைவாசி ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு நமதூருக்கு மட்டும் 11 கிராம ரூபாய் 6¼ லட்ச திட்டத்தை இலக்காக வைத்து வேலை செய்வதென முடிவு செய்யப்பட்டது. இதற்கு பலமான ஆதரவு காணப்பட்டதால் இத்திட்டத்தை சாதிப்பதற்கென்றே தனி நிறுவனம் ஒன்று அமைக்க முடிவு செய்தது.

இம்முடிவை செயல்படுத்த தெருவாரியாக சுமார் 200 பிரமுகர்களை அழைத்து அ.க. முகம்மது அப்துல் காதிர் அவர்கள் இல்லத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அவர்களை பொதுக்குழுவாகக் கொண்டு 23 நபர்கள் கொண்ட ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டது. நிர்வாகிகள வருமாறு. **தலைவர்: கனம் அ, க. முகம்மது அப்துல் காதிர் அவர்கள், நான்கு உபதலைவர்கள்: கனம் குளம் ஜெய்னுலாப்தீன் ஹாஜி அவர்கள், கனம் சி.மு.க, நூ. செய்கு முகம்மது அவர்கள், கனம் மு. கி. சாகுல் ஹமீது** (படவாணம்) **அவர்கள், கனம் P. S. அப்துல் காதிர் அவர்கள், பொதுக் காரியதரிசி : கனம் L. K. லெப்பை தம்பி அவர்கள், நான்கு கூட்டு காரியதரிசிகள்: கனம் S.O. ஹபீபு அவர்கள், கனம் P. M. K. செய்யிது முகம்மது அவர்கள், கனம் M. K. செய்யிது அகமது அவர்கள், கனம் B. மஹ்மூது அவர்கள்** இப்புதிய நிறுவனத்துக்கு **ஐக்கிய முன்னேற்ற சங்கம்** (Union and Progress Society) என்ற **கனம் P. M. K. செய்யிது முகம்மது** அவர்கள் தெரிவு செய்த பெயர் அங்கீகரிக்கப்பட்டது. Society Act படி ரெஜிஸ்டர் செய்ய நோக்கங்கள், சட்ட திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. இம்முடிவுகளை 22-3-1945ல் நமதூரில் இப்பொழுது ஐக்கிய விளையாட்டு சங்கம் இருக்கும் இடத்திலிருந்து பக்கீர் குளத்து மணல் மேட்டில் கனம் **A. K. S. அகமது முகிய்யத்தின் அவர்கள்** தலைமையில் கூடிய பொதுமக்கள் கூட்டம் அங்கீகாரம் செய்தது. 12-12-1945ல் **கொடிமர சிறுநயினுர் பள்ளி** காம்பவுண்டில் தலைவர் கனம் அ. க. மு. அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்குழு கூட்டத்தில் 23 நபர் கொண்ட செயற்குழு 64 நபர்கள் கொண்டதாக விரிவு படுத்தப்பட்டது. இச்சங்கத்தை பதிவு செய்யும் பொறுப்பு எனக்கு தரப்பட்டது. அதன்படி திருநெல்வேலி ரெஜிஸ்டர் ஆபீஸின் Society Actபடி 1860ம் வருட சங்கத்திய 21வது சட்டப்படி 23-3-1945ல் கனம் **M. K. M. சம்சுத்தீன்** அவர்கள் தலைமையில் பொது மக்களைக் கூட்டி அறிவிப்பு செய்யப்பட்டது. இத் தண்ணீர் திட்டம் பூர்த்தி அடைந்து மேலும் வளர்ந்து வருவதைக் காண நான் பெருமிதம் கொள்கிறேன்.



நமதூரின் நல்ல பணிகளுக்கு அள்ளித்தந்த வள்ளல் மறைந்த அ.க. முகம்மது அப்துல் காதிர் அவர்கள்

அடுத்து, எந்த சங்கமானுலும் செயல்பட நிதி தேவை என்பது தெளிவு. நம்மூர் மக்களில் பெரும்பாலானேர் அது சமயம் இலங்கையில் வளமான வியாபாரம் செய்து வந்ததால் முதன் முதல் இலங்கை சென்று நிதி திரட்ட ஒரு தூதுக்குழு அமைக்கப்பட்டது. கனம் மு. கி. சாகுல் ஹமீது அவர்கள் (படவரணம்) தலைமையில் கனம் L. K. அவர்கள், கனம் M. T. S. முகம்மது தம்பி அவர்கள், கனம் B. மஹ்மூது அவர்கள் ஆகியவர்களடங்கிய தூதுக்குழு 26-5-45-ல் கொழும்பை அடைந்தது. ஐ. மு. சங்க தலைவர் கனம் அ. க. மு. அவர்களும் இதில் இடம் பெற்றனர், 29-5-45 இரவு கொழும்பு மாநகரில் வாழ்ந்த நமதூர் மக்களைக் கூட்டி குடி தண்ணீர் திட்ட கோரிக்கையை முன் வைத்ததும் மக்கள் ஆர்வம் கரைபுரண்டோடியதைக் கண்டோம். யுத்த கால பணவீக்கம் மக்களிடையே தாராளத்தை உண்டுபண்ணியிருந்தது. தூதுக் குழுவை தகுந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வரவேற்று அள்ளி அள்ளி நிதிதந்தார்கள். சமையல், சிப்பந்தி வேலை செய்தவர்கள் கூட ஒருமாத சம்பளத்தைத் தரத் தயங்கவில்லை. எப்படியாவது குடி தண்ணீர் கொண்டுவந்து விட வேணுமென்ற ஆர்வம் மக்களிடையே பொங்கி வழிந்ததைக் கண்டோம். அதன் உச்சக் கட்ட மாக அந்த கூட்டத்தில் தலைவர் கனம் அ. க. மு. ரூ. 51000/- (ஐம்பத்தொரு ஆயிரம்) நிதி எழுதியது இத்திட்டத்தின் வெற்றிக்கு உறுதியளிப்பதாக அமைந்தது. நமதூர் சரித்திரத்தில் தனி நபர் ஒருவர் இவ்வளவு பெருந் தொகை எழுதியது இதுவே முதலாவது என்ற புகழுக்கு ஆளாயினர். இலங்கையில் நம் மக்கள் வாழும் எல்லா பகுதிகளுக்கும் சென்று நிறைய நிதியையும் அளவில்லா ஆசியையும் பெற்று கிட்டதட்ட இரு மாதங்கள் இரவு பகலாக உழைத்து தாயகம் திரும்பினேம். தூதுக்குழுவினருக்கு சிரமங்கள் இல்லாமல் இல்லை. ஊர் மக்கள் நலம் நாடி அவற்றை புன்முறுவலுடன் ஏற்ருர்கள்.



குடிநீர் திட்டத்தை நமதூரில் துவக்கிவைத்த சென்னை மாநில முதல் அமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்

இலங்கை தூதுக்குழு தாயகம் திரும்பியதும் இந்தியத் தூதுக்குழு ஒன்று 27—7—45ல் **பெரிய சதுக்கையில்** கனம் விளக்கு முகிய்யத்தீன் தம்பி ஹாஜி அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் அமைக்கப்பட்டது. கனம் மு. க. செ. முகம்மது லெப்பை ஹாஜி (கான் சாகிபு) அவர்கள் தலைமையில் கனம் L. K. அவர்கள், கனம் குளம் ஜெய்னுலாப்தீன் ஹாஜி அவர்கள், கனம் சி. ம. கு. நூ. சேகுமுகம்மது அவர்கள், கனம் S.O. ஹபீபு அவர்கள், கனம் S.A. ஹபீபு அவர்கள் ஆகியவர்கள் அடங்கிய தூதுக்குழு 21-8-45ல் சென்னை நகரை அடைந்தது. சென்னை சேர்ந்ததும் கனம் விளக்கு முகம்மது முகிய்யத்தீன் ஹாஜி அவர்கள் தலைமையில் நமதூர் மக்களைக் கூட்டி நிதி எழுத வேண்டினுர்கள். மக்கள் உற்சாகத்துடன் தாராளமாக நிதி எழுதினுர்கள். பிறகு எல்லூர் ராஜமகேந்திரம், துனி, பர்ஹம்பூர், கட்டக், கல்கத்தா வரை சென்று மக்களிடம் பெரும் நிதியும் நிறைந்த ஆசியும் பெற்று 8-10-45ல் சென்னை திரும்பியது. அது சமயம் தோல் வியாபாரம் உயர்ந்த நிலையில் இல்லாதிருந்தும் தூதுக்குழுவை தக்க முயையில் உபசரித்து தாராளமாக நிதி எழுதியது பாராட்டத்தக்கது. ஊர் வந்தமிம் சங்க நிதி பணத்தை பாதுகாப்பாக வங்கிகளில் போட்டு தக்க பாதுகாப்பு விதிகள் இயற்றப்பட்டன.

இச் சங்கத்துக்கு கல்வி, மருத்துவம், பாதாள சாக்கடை போன்ற மேலும் பல நோக்கங்கள் இருந்தன. முதலில் அரசாங்கத்தை அணுகி குடி தண்ணீர் திட்டத்தை ஏற்குமாறு முயற்சிக்க முடிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி பிரபல வழக்கறிஞரும், வாக்கு சாதுரியம் உள்ளவரும், கலெக்டர் இதர அதிகாரிகளிடம் செல்வாக்கு பெற்றவரும், ஜில்லா போர்டில் நமது பிரதிநிதியாக இருந்து நெல்லை ஜில்லா முஸ்லிம்களுக்கு சிறப்பாக நமதூருக்கு எண்ணற்ற பல சேவைகள் செய்தவரும்: நமது பொது வாழ்வில் நமது ஆலோசகராக இருந்தருமான கனம் **A. K. பிஜிலி சாகிபு** M. A. L. L. B. (Alighar) அவர்கள் மூலம் மாநில அரசை அணுகி நம் தண்ணீர் திட்டத்தை அரசு ஏற்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் அன்னுர் மூலம் முயற்சிகள் துவங்கின.

சென்னை ரெவினியு போர்டில் (Revenue Board) இருந்த நெல்லை கலெக்டராக பணி புரிந்த பல ஆங்கிலேய அதிகாரிகளிடம் தனக்கிருந்த செல்வாக்கால் இந்த குடி நீர் திட்டத்தை கிராம குடி நீர் திட்டத்தில் (Rural Water Scheme) சேர்த்து மீண்டும் 11 கிராம திட்டமாக உருவாக்கித் தந்த பெருமை கனம் பிஜிலி சாகிபு அவர்களையே சாரும். நமது மக்கள் அவர்களின் சேவைகளுக்காக அன்னாருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். 20-4-46ல் கனம் பிஜிலி சாகிபு அவர்களுடன் தலைவரும் செயலரும் கலெக்டரை சந்தித்து நமது தண்ணீர் கஷ்டத்தை எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திக்கும் வகைக்கு ஓரிரு லட்சம் தருவதாக வாக்களிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிஜிலி சாகிபுடன் சென்னையில் முயற்சிக்கப்பட்டது, அது அன்னிய அட்லைசரி ஆட்சி காலம். 10, 15 நாட்கள் தங்கி சுகாதார இலாகா ஸெக்ரடரி, சானிடரி இஞ்சினியர், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் முதலியவர்களைப் பேட்டி கண்டு அவர்கள் மூலம் பல தகவல்கள் சேகரிக்கப் பட்டன. அதன் விளைவாக 6-5.46ல் ஐ. மு. சங்க பண்டிலிருந்து ரூபாய் 3000/- (மூவாயிரம்) கட்டி குடி தண்ணீர் பரிசீலனை வேலையைத் துவக்கும்படி அரசுக்கு மனுச்செய்யப்பட்டது.


மீண்டும் காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்றது. சுகாதார மந்திரி திருமதி **ருக்மணி லட்சுமி பதி** அம்மையாரையும் ஸ்தல ஸ்தாபன மந்திரி பாளையங்கோட்டை பிரபல வழக்கறிஞர் **டேனியல் தாமஸ்** (பிஜிலி சாகிபின் ஆப்த நண்பர்) அவர்களையும் 14-6-46ல் நமது நகருக்கு அழைத்து வந்து **புகாரி ஷரீபு** கட்டிடத்தில் ஆண்களையும் பெண்களையும் கூட்டி குடி நீர் கஷ்டத்தை நிவர்த்திக்க கோரப்பட்டது. மந்திரிகள் இருவரும் ஆவன செய்வதாக வாக்குறுதி செய்தனர். உடனே நம் நகர் குடி நீர் திட்ட ஆரம்ப பரிசீலனை செய்ய அரசு சானிட்டரி டிபார்ட்மன்டுக்கு ஆணையிட்டது.

சென்னை பிரதான பொறியாளர் (Chief Engineer) உள்பட பல அதிகாரிகள் 10-4-46 முதல் நமதூருக்கு வரத் துவங்கினர். முதன் முதல் வந்தவர் ஸூப்ரவைஸர் திரு. M. R. **நாராயணசாமி ஐயர்** அவர்கள். பின்னர் அஸிஸ்டண்ட் எஞ்சினியராக உயர்ந்து நமது தண்ணீர் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பும் தந்தவர். அவரை இங்கு போற்றுதிருக்க முடியாது. பூர்வாங்க ஆய்வுக்கான கருவிகள் அதுசமயம் நாகப்பட்டணத்தில் கிடந்தன. ரயில்வே வேலை நிறுத்தத்தால் வருவதில் தாமதம். இவை12-10-46ல் கிடைக்கச்செய்த தில் அதிகாரிகளுக்கு பரம திருப்தி. நமதூர் தெருக்களை ஸர்வே பண்ணும் வேலை துவங்கிவிட்டது. தட்டில்லா குடிநீர் சுரக்கும் மையம் (Supply Base) கண்டு பிடிக்க ஆய்வு செய்யப்பட்டது. பக்கத்து கிராம அம்மன்புரம் சுனை ஊற்றை காட்டியதில் பாதிநாள் தேவைக்கு உறிஞ்சவும் காணாது என்றார்கள். பிறகு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் ஆத்தூரிலிருந்து கேம்பலாபாத் வரை போரிங் அடித்துப் பார்த்ததில் ஆற்றுக்கடியில் களி மண்ணும் உப்பு நீரும் காணப்பட்ட தால் அன்று அடைந்த கவலைக்கு அளவில்லை. ஆழ்வார்திருநகர் ஆற்றுப் படுகையில் எடுத்த தண்ணீர்தான் குடிப்பதற்கு தகுதியுள்ளது என கிண்டி பரிசோதனை கூடத்தில் தேர்வு செய்யப் பட்டது. இவ்வளவு தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர ஆகும் அதிக செலவால் அதுவும் கைவிடப்பட்டது. இந்த நிலை உருவானதும் இத் திட்டம் தோல்வி கண்டுவிடுமோ என்ற பீதியும் வருத்தமும் ஏற்பட்டது. நம் தேவை, அதை அடைவதில் நாம் காட்டும் ஆர்வத் தால் ஈர்க்கப்பட்ட அதிகாரிகள் மேலும் வாய்ப்புகளைத் துருவி ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஆத்தூர் குளத்துக்கு வரும் கால்வாயை ஆராய்ந்தனர். இக் கால்வாயிலிருந்து தண்ணீரை உறிஞ்சி பம்பு (Pump) பண்ணும் வாய்ப்பு இருந்தும், கோடை காலத்தில் இரண்டு மாதங்கள் கால்வாய்க்கு தண்ணீர் விடாதிருப்பது ஓர் தடையாக இருந்தது என்றாலும் வேறு வழியின்றி கோடை தண்ணீர் தேவைக்கு ஒரு வழி காணப்பட்டது. ஆற்றுக்கும் கால்வாய்க்கும் இடையில் கோடை கால நீர் சேமிப்புகுளம் தோண்டும் யோசனை அங்கீகரிக்கப்பட்டது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. 950 அடி நீளம் 700 அடி அகலம் 10 அடி ஆழம் அளவுள்ள குளம். இம் முறை இந்தியாவிலேயே முதன் முறையாக செய்யப்பட்டது. ஆத்தூர் ஹெட் ஒர்க்ஸ், கோடைநீர் சேமிப்புகுளம் இவற்றிற்கான நிலத்தைப் பெறுவதில் விவசாயிகளின் முட்டுக் கட்டையை அரசு வெற்றிகரமாக சமாளித்தது.

இத் திட்டம் நம்மின் உழைப்பால் உருவானது என்பதற்கு 'காயல்பட்டணம் கூட்டு குடிநீர் திட்டம்' என்ற பெயரில் இயங்குவதே சான்றாகும்.

கனவு நனவாயிற்று. ஆத்தூரிலும் மற்றய ஊர்களிலும் தண்ணீர் வேலைகள் நடப்பதை மக்கள் கண்ணால் கண்டனர். சம்பந்தபட்ட் ஊர்களில் மேல்நிலைத் தேக்க தொட்டிகள் கட்ட இடங்கள் தேடப்பட்டன. நம்மூரில் கனம் I. L. S. ஆப்தீன் ஹாஜி அவர்களின் தாயார் அவர்கள் 1-35 ஏக்கர் நிலமும், கனம் புளியங்கொட்டை செய்யிது முகம்மது அவர்கள் 1-44 ஏக்கர் நிலமும் ஆக 2-79 ஏக்கர் கொண்ட பரப்பை தண்ணீர் திட்டத்திற்கு மனமுவந்தளித்து அழியாப்புகழை தேடிக்கொண்டனர்.

2-10-49ல் சுகாதார மந்திரி கனம் T. S. S. **ராஜன்** அவர்கள் அடிக்கல் நாட்டினார். நிதி மந்திரி கனம் **கோபால்** ரெட்டி, கனம் K. T. **கோசல்ராம்** M. L. A. உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டவர். அன்றைக்கே 37½ லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றிதரவுள்ளது என சுகாதார தலைமை பொறியாளர் கனம் S.**ராஜகோபாலன்** ரேடியோவில் உரைநிகழ்த்தினார்.


நமதூர் குடிநீர் திட்டத்திற்கு பெரும் உதவிபுரிந்த மறைந்த தியாகி K.T. கோசல்ராம் M.P.

அடிக்கல் நாட்டு விழாவிற்குப்பின் வெகு வேகமாக திட்டம் நிறைவேறிக்கொண்டிருந்தது. ஆத்தூரில் ஹெட் ஒர்க்ஸ், கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கங்கள், தெருக்களில் பைப்புகள் பதிப்பவை போன்ற அனைத்து பணிகளும் முடிவடைந்த பின் 5-7-1955ல் சென்னை மாநில முதல் அமைச்சர் பெருந்தலைவர் **காமராசர்** அவர்கள் குடிதண்ணீர் வினியோகத்தை துவக்கி வைத்தார்கள்.

காயல்பட்டணம் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து கிடைக்கும் தண்ணீர் நம்மூர் தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதால் நம்மூருக்காக மட்டும் தனி திட்டம் அமைக்கப்பட வேண்டு மென்பதற்காக 1970ல் காயல்பட்டணம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் தனிதிட்டம் உருவாககப்பட்டது. இதற்காக தமிழக அரசிடம் ரூ.7,54,000ம், ஆயுள் காப்பீட்டுக்கழகத்திடம் (L I C of India) ரூ. 16,46,000ம் கடன் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அன்றைய **திராவிட முன்னேற்றக்கழக அரசு** ஒப்புதல் தந்தது.

கூட்டு குடிநீர் திட்டத்திற்காக 3 லட்சம் லிட்டர் கொள்ளளவில் மேல்நிலை நீர்த்தேக்கமும் அபிவிருத்தி திட்டத்திற்காக 4 லட்சம்லிட்டர் கொள்ளவில் மேல்நிலை நீர்த்தேக்கமும் இருந்தும் நம்மூர் தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதற்காக மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. K. T. **கோசல்ராம்** M. P. அவர்களது பெரு முயற்சியில் மூன்றாவது மேல்நிலை நீர்தேக்க தொட்டி 1981ல் மத்திய அரசின் தன்னிறைவு திட்டத்தில் மான்யமாக கட்டித்தரப்பட்டது. அதற்குபின் 1988ல் மத்திய அரசின் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ஆளுநரின் ஆலோசகர் **டாக்டர் பத்மனாபன்** I.A.S. அவர்களால் நமதூருக்கு மான்யமாக ரூ. 8 லட்சத்தில் நான்காவது மேல் நிலை நீர்தேக்க தொட்டி கட்டித்தரப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட குடிநீரை அனுபவித்து வரும் இன்று, அதை கொண்டுவர அரும்பாடுபட்ட தலைவர்களை நன்றி உணர்வோடு நினைத்துப் பார்ப்போம். நமதூரின் நல்ல பணிகள் நிறை வேற ஒன்றுபட்டு உழைப்போம்.



கிராம வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவோம்

மகாத்மா காந்தி கனவை நனவாக்குவோம் !

- P. அருணாசலம் -

(காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி 1வது வார்டு ஆதி திராவிட உறுப்பினர்)

இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சுயாட்சி அமைப்புகளான ஊராட்சி அமைப்புகளில் மக்களாட்சி சுதந்திரமே அடிப்படையாக அமைய வேண்டும் என்றார் **மகாத்மா காந்தி.**

ஒரு ச்ராசரி மனிதனின் நலனுக்கு மத்திய மாநில அரசுகள் எந்தளவுக்கு முக்கியமானதோ, குறைந்தபட்ச அளவுக்கேனும் உள்ளூர் மக்களிடம் நேரடி தொடர்புள்ள நகர பஞ்சாயத்து அமைப்பு மிக முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனின் அன்றாட அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் தங்கள் நகர பகுதிகளில் பொழுது விடிந்ததும் சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் வழங்குவது முதற்கொண்டு, பொழுது அடைந்ததும் நகரத்தில் அனைத்து பகுதிக்கும் தெரு விளக்குகள் கிடைக்கச் செய்வதும் சுகாதாரத்தை கண்காணிப்புடன் செய்து தரவேண்டியதும் நகர பஞ்சாயத்தின் முக்கிய பணிகளாகும்.

நகர பஞ்சாயத்து அதன் எல்லைக்குள் சுற்றியுள்ள சிற்றூர்களிலும், இருக்கக்கூடிய சாலைகள் அமைத்தலும் பராமரித்தலும் பாடசாலை, சந்தை கழிப்பிட பகுதிகளை சுத்தமாக இருக்குமாறு செய்தல், கட்டிடங்கள் ஒழுங்கு முறைக்குள் உட்பட்டவைகளாக இருக்குமாறு கண்காணித்தல்; சிற்றுண்டிகளிலும் உணவு விடுதிகளிலும் வழங்கப்படும் உணவுப்பண்டங்கள் தேவையான தரத்துடன் தூய்மையானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுதல், மக்களின் தேவையை முன்னிட்டு மனமகிழ்ச்சிக்காரியங்களையும் படிப்பகங்களையும் பொழுது போக்கு இடங்களையும் பேணிகாத்தல் அவற்றின் பணிகளாகும்.

தொழில் வளர்ச்சியாலும், வேலை வாய்ப்பாலும் நகர பஞ்சாயத்து பகுதிகள் அதிகமாக பெருகி நகர பஞ்சாயத்து மயமாகும் செயல் ஓங்கி வளர்வதாலும், இதனால் மக்கள் பெருக்கம் அதிகரித்து வருவதாலும், குடிநீர், தெரு விளக்கு, சுகாதார பராமரிப்பு பணியும் அதிகரிக்கிறது.

குடிநீர் மற்றும் துப்பரவுப்பணிகள் அனைத்து வசதிகளும் இக்கால மருத்துவ வசதிகளுக்கும். காலத்திற்கும், ஏற்றவைகளாகவும், சிறப்பாகவும், திறமையாகவும், முழுமையாகவும் அமையச் செய்து தருவதுதான் அவற்றின் பிரதிநிதிக் குழுவின் மற்றும் செயல் அலுவலர்களின் சிறந்த மக்கள் பணிகளாகும். நகர பஞ்சாயத்து அமைப்பு செய்து தரவேண்டிய மிக அவசியமான இந்த பணிகள் மோசமானதாகவும், முறையற்றதாகவும் குறைபாடுள்ளதாகவும் அமைந்து விடுமானால் இத்தகைய சூழ்நிலையில் மக்களின் வாழ்க்கை மிக சங்கடமானதாகிவிடும்.

இது போன்ற அடிப்படை பணிகளை ஸ்தலப்பகுதி மக்கள் தேவைகளை கண்டறிந்து செய்வதற்கு நிதிநிலை நெருக்கடி ஆண்டு தோறும் மோசமடைந்து வலுவற்ற நிலை காணப்படுகின்றன. நகர பஞ்சாயத்து அமைப்புகளுக்கு வீட்டு வரி மற்றும் குடிநீர் கட்டண வருவாயை பெரிதும் நம்பித்தான் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தும் நிலையிலுள்ளது.


நாட்டின் உண்மையான ஜனநாயகம் நிலவ வேண்டு மானல் கிராம, நகர பொதுஜனங்களோடு முழுமையான தொடர்புள்ள பஞ்சாயத்து அமைப்புகளுக்கு நிதி மற்றும் அதி காரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அவற்றிற்கு எல்லா விசயங்களிலும் நெறிப்படுத்தவும், முன் முயற்ச்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் சுயேச்சையுடனும் இயங்குவதற்கு அனுமதிக்க வழி காட்டப்பட வேண்டும்.



P. அருணாசலம்

கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டை தாலுகாவிலும் பஞ்சாயத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனை வருக்கும் அரசு நேரடியாக சம்பளம் வழங்குவது போல், இப்போது நகராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் அரசு சம்பளம் கொடுக்க உத்தரவு இட்டிருப்பது போல், நகர பஞ்சாயத்தில் பணி புரியும் அலுவலர், ஊழியர்கள் அனைவருக்கும் அரசு நேரடியாக சம்பளம் கொடுக்க முன்வர வேண்டும். அல்லது மானியம் கொடுக்கப்பட வேண்டும். ஒரே மாநிலத்தில் பஞ்சாயத்து அமைப்புகளில் இருவிதமான வழிமுறைகளை ஏற்படுத்தியிருப்பதை ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும். தமிழக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நகர பஞ்சாயத்து பகுதிகளில் வசிப்பதால், வளர்ச்சி பணிகள் அவற்றிற்கு அதிகரிப்பதால் மக்கள் தொகை அடிப்படையில் மானியம் வழங்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு சாலை பராமரிப்புப் செலவு தொகை முழுவதும் வழங்குவது போன்று பேரூராட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் நகர பஞ்சாயத்து பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தருவதற்கு அனுமதிக்கப் படாமல் இருப்பதை மாற்றி அமைத்து, நகர பஞ்சாயத்து பகுதிக்கும் அடிப்படை பணிகள் செய்து தருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். கிராம பஞ்சாயத்துகளுக்கு வீட்டு வரி மான்யம் வழங்கப்படுவது போல் நகர பஞ்சாயத்து அமைப்புகளுக்கு வீட்டு வரி மானியம் வழங்க மாநில அரசு முன்வர வேண்டும்.

" கிராமங்கள் தான் இந்தியாவின் உயிர்நாடி. கிராமம் அழிந்தால் இந்தியா அழியும்" என்றார் **மகாத்மா காந்தி** எனவே கிராம வளர்ச்சியில் அரசும் மக்களும் ஆர்வம் காட்ட வேண்டும்.



'கடவுள் ஒருவனே என்று நான் நம்புகிறேன் அதனால் மனித சமுதாயம் முழுவதும் ஒன்று தான் என்று நான் நம்புகிறேன்'

'தாய்நாடு நமது உயிர் - தாய்நாடு வாழ்ந்தால் தான் நீங்களும் வாழ்ந்தவர்களாவீர்கள்'

'சத்தியத்தின் வழியில் தைரியமுள்ளவர்கள் செல்ல முடியும். கோழைகள் செல்ல முடியாது'

'துவேஷம் ஒழித்தவனுக்கு ஆயுதமே தேவையில்லை'

'அதிகமாய் துன்பம் அனுபவிக்கக் கூடியவனே அதிகமாய் சேவை செய்ய முடியும்'

'ஒரு தலை சார்புடையவனும் கோபம் உள்ளவனும் உண்மையை ஒரு நாளும் அறிய முடியாது'

காயல்பட்டணத்தில் கம்பீரமாக காட்சி தரும் "மகாத்மா காந்தி ஞாபக" வளைவில் செதுக்கப் பட்டுள்ள பொன் மொழிகளில்சில.

நகர் வளம் காண்போம்

அதற்கு நாளும் உழைப்போம்!

- அல்ஹாஜ் A. K. **ஷெய்கு** B. E., -

இந்திய நாடு விடுதலையடைந்த பின், கிராமிய சூழ்நிலையிலே ஒரு புதிய மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன என்றால் மிகையாகாது. இந்திய அரசு விடுத்த பல திட்டங்களின் காரணமாக கிராமங்கள் புதிய பொலிவும் அழகும் பெற்றன. நாட்டுப்புற மக்களிடையே உற்சாகமும் உந்துதலும் ஏற்பட்டது. தூங்கிக்கிடந்த கிராமங்கள் எல்லாம் துயிலெழுந்தன. குறிப்பாகக் கல்வி பெருமளவில் வளர்ச்சியடைந்திருப்பதை கண்கூடாகப்பார்க்கலாம். கல்வியைத் தேடிச் செல்லும் வசதி நிறைந்தவர்களுக்கு மட்டுமே வாய்ப்பாக இருந்தது அன்றைய சூழ்நிலை. ஆனல் இன்றோ கல்வி கிராம மக்களை தேடி வருகின்றது என்று சொல்ல வேண்டும். எங்கெங்குநோக்கிலும் கல்வி கூடங்கள். சிற்றூர்களில் கூட மேல்நிலை பள்ளிகள், பேரூர்களில் கல்லூரிகள், மாநகரங்களில் பல்கலை கழகங்கள் என கல்வி வாய்ப்புகள் பல்கி பெருகியுள்ளன. நெடுந்தூரம் பயணம் செய்து பெரும் பணம் செலவிட்டு கல்வி வாய்ப்பை பெறமுடியாத சாதாரண மக்களும் கல்வி பெறும் வழி புது யுகத்திலே பிறந்து விட்டது.

இந்த அடிப்படையில் நமதூரும் கல்வியில் ஓரளவு வளர்ச்சியடைந்தாலும், பெண்கள் உயர் நிலை கல்வி பற்றாக்குறைவாக இருக்கின்றது. இன்னும் நமதூர் இளைய சமுதாயத்தினர் நவநாகரீக உலகின் சிற்பிகளாய்த் திகழ வேண்டும் எனில் அவர்கள் தொழில் நுணுக்கம் பெற்றவர்களாய் திகழ வேண்டும் என்ற கருத்தோடு ஆங்காங்கே பொறியியற் கல்லூரிகள், மருத்துவ கல்லூரிகளுள் நுழைய முற்பட வேண்டும்.

ஒரு இளைஞர் படித்துப் பட்டம் பெற்றுத் தொழில் செய்வதற்கோ, பணிகளில் அமர்வதற்கோ, அவர் நல்ல துடிப்பு உடையவராக இருந்தால், 40ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. இந்த வசதிகளையெல்லாம் நம்இளைஞர்கள் சரியான முறையில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளும் வகையில் பெரியவர்கள், பெற்றோர்கள் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும். இதில்நம் பெண்களின் அக்கரை அதிகமாக தேவை படுகின்றது.



ஹாஜி A. K. ஷெய்கு B. E.,
காயல்பட்டணத்தின் முதலாவது பொறியியல் பட்டதாரி

அடுத்ததாக பெரிய வளர்ச்சி கண்டது போக்கு வரத்து வசதிகள் ஆகும். நகரங்களுக்கு மட்டுமே ஒரு காலத்தில் சாலை வசதிகள் இருந்த நிலையில், இரயிலும், பஸ்ஸும் பார்ப்பதற்கே அரும்பொருள்களாக இருந்தன. நம் நாடு விடுதலையடைந்த பிறகு திட்டமிட்ட வளர்ச்சியின்

காரணமாக நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போக்குவரத்து வசதி பெருகிவிட்டது என்பது வெளிப்படை. இதன் விளைவாகவும் கல்வியும், பொருளாதாரமும் வளர்ச்சியுற்றன. தொடர்புகள் எளிதாயின. காஷ்மீரம், கன்னியாகுமரி எல்லைகள் ஒன்றை ஒன்று தொட்டு குலவி கொண்டன. புண்ணியத் தலங்களையும், வரலாற்று பிரசித்து பெற்ற இடங்களையும் காண மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு எளிதாகப் புறப்பட்டனர். வணிகம் வளர்ந்தது. உலக நாடுகளிடையே இந்திய நாட்டின் மதிப்பு வளர்ந்தது.

இந்த வளர்ச்சிகளுக்கிடையே போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தது சகோதர சேவை. மருத்துவ மனைகளை நாம் தேடி அலைந்த காலம் போய், நமதூரிலேயே மருத்துவ மனை சிறப்பாக அமைந்துள்ளது. அரசுக்கு இணையாக தனிப்பட்டவர்களும் அறக்கட்டளைகளும் சேவை நிறுவனங்களும் மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய முந்திக்கொண்டு வந்து மருத்துவ மனைகளை அமைக்க மக்கள் நல்வாழ்வு தொடர்ந்து உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. இதன் விளைவாக இந்த மருத்துவமனையினை நம் மக் மக்கள் குறிப்பாக பெண்கள் நன்கு பயன்படுத்த வேண்டும்.

ஆகவே இந்த வளர்ச்சிகள், அதாவது கல்வி, போக்குவரத்து, சுகாதார வளர்ச்சியின் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. பின்னிப்பிணைந்தவை ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றின் வளர்ச்சியைத் தூண்டும். ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றையும் சேர்த்து கீழே தள்ளும்.

நமதூரை பொறுத்தவரை இந்த குறிய காலத்தில் இந்த வளர்ச்சிகளை, கூர்ந்து நோக்கினல் சமுதாயம் பயன்பெற்றுள்ளது. நாம் வளர்ச்சியின் பங்கெடுக்க முடியாமல், முன்னேற்றம் காண முடியாமல் பின்தங்கி போய்விட்டால் பல நன்மைகள் கிட்டாமல் போகும். சமுதாயப் பெரியார்கள் இதனை இளைஞர்களுக்கு எடுத்து சொல்லி ஆயத்தம் செய்ய வேண்டியது அவர்கள் கடமை. நாடு மேலும் சீர் பெற வேண்டுமாயின், சிறப்பு பெற வேண்டுமாயின் இந்தக் கடமையை நாம் கூட்டாக ஒற்றுமையாக செவ்வனே செய்வோமாக.

காயல், உலகெங்கனும் அடியெடுத்து வைத்திருக்கும் பெருமக்களை கொண்ட பெரும் புகழூர். இந்நகர் மேலும் புகழோங்கி வளர்ந்து நூறு நூற்றாண்டுகள் இந்நகரை மெச்ச செயல் பட வேண்டும். இதுவே இந்த மண்ணில் பிறந்த நம் எல்லோரின் அளவிலா ஆசை.

யார் குருடர்?

அப்பேரூராட்சி சாலையின் ஒரு புறத்தில் வீடு இடிந்த கற்கல் சரியாக அப்புறப்படுத்தப்படாமல் இருந்தது. அதில் ஒரு பெரிய கல் ரோட்டின் நடுவில் கிடந்தது. சாலையைக் கடந்து சென்ற ஒரு வாலிபர் அக்கல்லில் தடுக்கி கீழே விழுந்து காயமுற்று, 'என்னடா பேரூராட்சிக்கு இந்தக் கல்லைகூட அப்புறப்படுத்த யோக்யதை இல்லை' என திட்டியபடியே எழுந்து சென்று விட்டான்.

சைக்கிளில் வேகமாக வந்த இன்னொருவனும் அக்கல்லில் மோதி கீழே சரிந்தான். ''பஞ்சாயத்து ரோட்டைக்கூட ஒழுங்காக வைக்கவில்லை'' என ஏசி விட்டு அவனும் சென்றுவிட்டான்.

கம்பு ஊன்றி தள்ளாடியபடியே பிச்சை எடுத்து வந்த குருடன் அச்சாலையில் வரும் போது அவனது காலிலும் அக்கல் பட்டது. உடனே கண் தெரியாத அவன் தனது கம்பின் உதவியால் கல்லை அறிந்து அடுத்தவர்களை கூப்பிட்டு அதை அப்புறப்படுத்தச்செய்து உரக்கச்சொன்னான், ''லட்ச ரூபாய் செலவழித்து வீட்டை கட்டுகிறீர்கள் சில நூறு ரூபாய் செலவழித்து இடிந்த கற்களை அப்புறப்படுத்தாமல் பஞ்சாயத்தை குறை சொல்கிறீர்கள் இது தான் தர்மமா?'' இப்பேச்சைக் கேட்டதும் முதலில் தடுக்கி விழுந்தவன் தன் காயத்தைப் பார்த்தவாறே விருட்டென்று வீட்டிற்கு உள்ளே சென்று மறைந்து கொண்டான்.

எங்களின் பணி என்றும் தொடரும்

— M. N. சொளுக்கு அப்துல் காதர் —

துணைத் தலைவர், தேர்வு நிலை பேரூராட்சி மன்றம், காயல்பட்டணம்.




''சாதி பேதங்களை சாடுங்கள். ஏனென்றால் அவை ஜனநாயக மரபுகளுக்கு சற்றும் பொருத்தமில்லாதவை. மூட நம்பிக்கையை மண் மூடி போகச் செய்யுங்கள். ஏனென்றால் அவை விஞ்ஞான யுகத்திற்கு பொருந்தி வராதவை. ஆணவம் அதிகாரச் செல்வாக்கு செல்வச் செருக்கு ஆகியவை எந்த உருவில் ஆதிக்கம் செலுத்த தலை தூக்கினாலும் அவற்றை முறியடித்துவிட முனையுங்கள். ஏனென்றால் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய சமரச கருத்துக்களுக்கு அவை எதிரானவை''.

''சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்பாருடைய நன்மையும் அவர்களது மகிழ்ச்சியுமே எங்கள் குறிக்கோள். இப்படி ஒவ்வொரு பகுதியினரும் மகிழ்ச்சியுடன் இருக்க வழிகோல வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். இந்த குறிக்கோளை நோக்கிப் பணியாற்றுவதில் இதுவரை நாங்கள் வெற்றி கண்டுள்ளோம். இனியும் வெற்றி காண்போம்.''

—பேரறிஞர் அண்ணா.

வளர்ந்து வரும் இன்றைய விஞ்ஞான உலகில் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டுமென்கின்ற ஆசை ஏற்படுவது இயல்பே! தொழில் வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் சர்வதேசங்களுடன் தொடர்புவைத்திருக்கும் வாய்ப்பு காயல் நகர மக்களுக்கு உண்டு. உலகின் பல்வேறு பகுதிகளை பார்க்கின்ற இந்நகர் மக்கள் அதற்கு ஈடாக இந் நகரமும் வளர வேண்டுமென ஆசைப்படுகின்றனர்.



M.N. சொளுக்குஅப்துல்காதர்

ஏழைகள் நடுத்தரவாதிகளை அதிகம் கொண்ட காயல்பட்டணத்தில் மக்களின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணவும் அவர்களுக்கு சேவையாற்றவும் உள்ளாட்சி மன்றங்களுக்கு உண்மையான ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற உணர்வு அனைத்து தரப்பாரிடமுமே இருந்தது. பேரூராட்சியில் இடம்பெற்று மக்கள் எதிர்பார்க்கின்ற பணியை செய்கின்ற அருமையான வாய்ப்பு எங்களிடம் தரப்பட்டது.

6 ஆண்டு காலம் தனி அதிகாரியின் ஆட்சியும் அதற்கு முன் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய மன்றமும் பேரூராட்சியில் இடம் பெற்றிருந்தன. ஆனால் பகிரங்கமான ஒரு உண்மை என்னவெனில் பொருளாதார பலமற்ற சாதாரணமானவர்கள், அரசியல் இயக்கங்களில் ஈடுபாடு கொண்ட ஊழியர்கள் இம் முறை பேரூராட்சியில் இடம் பெற்றனர்.

இதனால் ஒரு சாதாரண ஏழையும் எந்த நேரத்திலும் எங்களை அணுகி காரியங்கள் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பேரூராட்சி மன்ற கூட்டங்கள் முறையாக நடந்தன. எவரது இருப்பிடத்தையும் தேடி மினிட் மற்றும் ஆஜர் புத்தகங்கள் சென்றதில்லை. கோரம் இல்லாமல் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதில்லை. கூட்டங்களுக்கு என்றில்லாமல் அன்றாடம் பேரூராட்சி அலுவலகம் செல்கின்ற பணியை நாங்கள் கடமையாகக் கொண்டிருந்தோம்.

அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை நேரடியான தொடர்பு எங்களுக்கிருக்கின்ற காரணத்தால் எங்களின் பணிகளை விரைவு படுத்த முடிந்தது.

பேரூராட்சி மன்றத்திற்கு சம்பந்தமே இல்லாத துறைகளின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பணி செய்வதையும் கடமையாகக் கொண்டோம். இவைகளுக்காக பல முறை சென்னை சென்றோம்.

வெளி நாடுகளுடன் நேரடி தொலை தொடர்பு சேவை (STD) காயல்பட்டணத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக பெரு முயற்சி மேற்கொண்டதன் பயனாக இன்று அச்சேவை நம் நகரில் செயல்படுகிறது.

இது போன்றே ரயில்வே நிலையத்தில் செய்யப்பட வேண்டிய வசதிகளுக்காக சம்பந்பட்ட அதிகாரிகளுடன் முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

வளர்ந்து வரும் நமது நகரின் தேவைகளுக்கேற்ப மின்சார வசதிகள் செய்து கொடுக்க மின்வாரிய அதிகாரிகளை நாங்கள் பலமுறை நேரடியாக தொடர்பு கொண்டோம் அதன் பலனாக புதிதாக டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்றும் மக்கள்நெருக்கம் அதிகமுள்ள மத்திய பகுதியில் மின் வினியோகம் சீராக இல்லாததால் அந்த இடங்களிலும் டிரான்ஸ்பார்மர்கள் அமைக்க முயற்சி மேற்க்கொண்டுள்ளோம். காயல்பட்டணத்தில் வசதியான சொந்தக் கட்டிடத்தில் மின்வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக பேரூராட்சிக்குச் சொந்தமான பாலலர் பூங்காவில் இலவசமாக இடம் ஒதுக்கிக்கொடுத்துள்ளோம். விரைவில் அதன் கட்டுமானப் பணிகளைத் துவக்கவும் முயற்ச்சி மேற்கொண்டுள்ளோம்.

நமது நகரில் சார் பதிவாளர் அலுவலகம் வசதிமிக்க சொந்தக் கட்டிடத்தில் அமைக்கப்படவேண்டும் என்பதற்காக இதற்காகவும் பேரூராட்சிக்கு சொந்தமான இடத்நில் நிலம் ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளோம் இதன் கட்டுமான பணிகளும் மிகவிரைவாக நடைபெற இடையறாது முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் சொந்தக் கட்டிடத்தில் பொதுநூலகம் அமைப்பதற்காக பேரூராட்சியில் இருந்து இடம் ஒதுக்கிக்கொடுத்துள்ளோம்.

அரசினர் பொது மருத்துவ மனையில் கட்டிமுடிக்கப்பட்டு செயல்படாமல் இருந்த புதிய வார்டுகள், இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே அறுவைசிகிட்சை பிரிவுகளை செயல்பட வைப்பதற்காகவும் பெண் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் நியமிக்கப் படுலதற்காகவும் சென்னையில் பெருமுயற்சி மேற்கொண்டதன் பயனாக இன்று அவைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன.

ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கூடங்கள் அனைத்தும் பழுது பார்க்கப்பட வேண்டும் அவைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்பதற்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக இன்று அலியார்தெரு பள்ளியிலும் மற்றுமுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் பணிகள் செய்யப்பட்டும் செய்யப்படவும் உள்ளன.

இவைகளும் இவை போன்ற இன்னும் பலபணிகளும் பேரூராட்சி நிர்வாகத்திற்கு சம்பந்தமில்லாதவை ஆனாலும் அத்தகைய பணிகளுக்காக நாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் மிக அதிகம்.

நாங்கள் பேரூராட்சியில் பொறுப்புக்களை ஏற்றதும் எங்களுக்குச் சவாலாக அமைந்தது குடிநீர் பிரச்சனை இந்நகரில் குடிநீர் பிரச்சணையை நிரந்தரமாக தீர்க்க பல்வேறு வழிகளில் திட்டமிட்டு எங்கள் பணிகளை அமைத்தோம்.

காயல்பட்டணத்தில் நான்காவது மேல்நிலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தால் நிராகரிக்கப்பட்டு 2016 வரை இன்னொரு நீர்தேக்கத்தொட்டி இந் நகருக்கு தேவையில்லை என TWAD பொறியாளர்கள் முடிவு அறிவித்திருந்தனர்.

3.3 86ல் நாங்கள் பதவி ஏற்றதும் முதல் வேலையாக 7.3.86ல் முடியாது என முடிவெடுக்கப்பட்டிருந்த நான்காவது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கோப்பை தூசு தட்டி துடைத்தெடுத்து அதற்கு நாங்கள் மேற்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக இன்று அப்பாபள்ளி மைதானத்தில் எட்டு லட்ச ரூபாய் அரசு மான்ய உதவியுடன் நான்காவது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கம்பீரமாக காட்சி தருகிறது.

அம்பல மரைக்கார் தெரு சதுக்கைதெரு தென்பகுதி ஜாவியாதெரு பகுதிகள் நீண்டகால குடிநீர் பற்றாக்குறையால் பெரிதும் பாதித்திருந்தன. தீவுத் தெருவில் மூன்றாவது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிருந்தும் அங்கும் தண்ணீர் தட்டுப்பாடு பெரிதும் பாதித்திருந்தது. இவைகளுக்காக தனித்தனி திட்டங்கள் தீட்டப்பட்டு இன்று அந்தப் பகுதிகளில் தண்ணீர் நன்றாக கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்தோம்.

பல்வேறு தெருக்களில் தண்ணீர் பிரச்சணைகளை நிரந்தரமாக தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் இணைப்புக்களில் சட்ட விரோதமாக மோட்டர் வைத்து உறிஞ்சுபவர்கள், குடிநீரை தேவையற்ற முறையில் வீண்விரயம் செய்பவர்கள் மீது இன்று கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இணைப்புக்களை துண்டிக்கவும் உத்தரவிடப்பட்டு அந்தப்பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

குடிநீர் தேவைகளைச் சமாளிக்க ஒரு பவர்டில்லர் அரசு மான்யத்துடன் வாங்கப்பட்டுள்ளது. ஏழை மக்கள் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில் பொது குடிநீர் குழாய்கள் திறந்து கொடுக்கப்பட்டுள்ளன. இது தவிர மூன்று இடங்களில் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

பொது சுகாதாரம் இந்நகரில் மிகச் சிறப்பாக பேணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் பெரிதும் ஆக்கரை காட்டி வருகிறோம், உரிய இடங்களில் புதிய குப்பைத் தொட்டிகள் உடனுக்குடன் வைக்கப்படுகின்றன. நகரின் இரண்டு இடங்களில் நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஏழை மக்களும் நவீன கழிப்பிட வசதி பெற வேண்டும் என்பதற்காக அரசின் உதவியோடு குறைந்த செலவில் நவீன கழிப்பிடங்கள் 200 வீடுகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வி பயிலும் மாணவர்களுக்கு பெரும் பிரச்சணையாக இருந்த ஆடு மாடு அறுப்பு தொட்டி (ஸ்லாட்டர் ஹவுஸ்) அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு நகரின் ஒதுக்குப்புறத்தில் நவீன வசதிகளுடன் தனித்தனியே புதிய டெப்போ கட்டப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நகருக்கு பேருந்து நிலையம் அமைப்பது சிறப்பானது என்பற்காக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மிக அண்மையில் அமைக்கப்பட உள்ளது.

இந்நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துவிட்ட காரணத்தால் ஒருவழிப்பாதையை அமுல்படுத்த அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது, மாற்று பாதையான பெரியநெசவுத்

தெரு, ஹாஜி LK லெப்பைத்தம்பி சாலை ஆகியவை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

காயல்பட்டணத்தில் உள்ள நெடுஞ்சாலை அகலப்படுத்தும் பணி துவக்கப்பட உள்ளது.

இந்நகரிலுள்ள பல்வேறு தெருக்களில் குவிந்துகிடந்த மணல் அப்புறப்படுத்தப்பட்டும் மேலும் மணல் தார் ரோட்டிற்கு வராமலிருப்பதற்காகவும் சாலையின் இருபுற மணல் அப் புறப்படுத்தப்பட்டு சரள்விரிக்கப்பட்டு வருகிறது. சதுக்கைதெரு, குத்துக்கல்தெரு. பரிமார் தெரு உள்ளிட்ட பல தெருக்கள் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலுப் பல தெருக்க ளுக்கு தார் சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் இந்நகருக்கு வழங்கப்பட்ட பல லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகள் அனைத்தும் புறநகர் பகுதிகளிலேயே செய்யப் பட்டுள்ளன. மேலும் செய்யப்பட உள்ளன.

டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் தமிழக முதல்வராக பொறுப்பேற்று 11.9.89 அன்று காயல்பட்டணம் வந்தபோது அவருக்கு மிகச்சிறப்பான வரவேற்பளித்து பல்வேறு திட்டங்களை நிறை வேற்றித்தருப்படி பேரூராட்சி மன்றத்தின் சார்பில் கோரிக்கை வைத் தோம். அவைகளில் ஒன்று கடற்கரை வழியிலான திருச்செந்தூர் தூத்துக்குடி குறுக்கு வழிச் சாலை. இந்தச் சாலை அமைக்கப்பட்டால் நமதூரிலிருந்து தூத்துக்குடிக்கு தூரம் குறைவ தோடு போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டு மிக விரைவாகவும் மிகக் குறுகிய காலத்தில் பயண நேரம் அமையும். எனவே இந்தச் சாலை அமைக்கும் பணி உடனடியாக துவக்கப்பட பெரு முயற்சி மேற்கொண்டுள்ளோம். நமதூர் வருகை தந்த **டாக்டர் கலைஞர்** அவர்களும் இந்தச் சாலை கண்டிப்பாக அமைத்து தரப்படும் என மேடையிலேயே அறிவிப்புச் செய்தார் கள்.

தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் மூலம் காயல்பட்டணம் எழில்மிக்க கடற்கரையை அழகு படுத்தவும் பல்வேறு ஆக்கப் பணிகள் நிறைவேற்றவும் மாண்புமிகு அமைச்சர் **கே. பி. கந்தசாமி** அவர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளோம்.


இன்னும் இது போன்ற எண்ணற்ற பணிகள் நாங்கள் செய்துள்ளோம். செய்து கொண்டிருக்கிறோம். இப் பேரூராட்சி மன்றத்தின் தலைவர் ஹாஜி V M. S. **லெப்பை** அவர்களும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களும் எந்த அரசியல் இயக்கங்களைச் சார்ந்த வர்களாக இருந்தாலும், எந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்த உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு இந்நகரின் ஒட்டு மொத்த நன்மைக்காக திட்டமிட்டு பணிசெய்கின்றோம். எங்களுக்குள் கலந்து ஆலோசித்து நாங்கள் ஒன்றுபட்டு செய்யும் பணி களால்தான் இவ்வளவும் சாதிக்க முடிந்தது.

சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்பாருடைய மகிழ்ச்சியையும் ஒவ்வொரு பகுதியுடைய நன்மையையும் குறிக்கோளாகக் கொண்டு பணி செய்கிறோம். இந்தக் குறிக்கோளை நோக்கி பணியாற்றுவதில் இது வரை நாங்கள் வெற்றி கண்டுள்ளோம். இனியும் வெற்றி காண்போம்.


பேரூராட்சிகள் இயக்குனர் திரு சி.பு. பெருமாள் அவர்களின் காயல்பட்டணம் வருகை: 22-6-88



பேரூராட்சியின் ஆக்கப் பணிகளை பார்வையிடுகிறார்.



காயல்பட்டணம் பேருந்து நிலைய இடத்தையும் வரை படத்தையும் பார்வையிடுகிறார்.



அப்பா பள்ளி மைதானத்தில் நான்காவது மேல்நிலை நீர்த்தேக்க கட்டுமானப் பணிகளை துவக்கி வைக்கிறார்.



பேரூராட்சிகள் இயக்குனர் அவர்களுக்கு ரெட் ஸ்டார் சங்கத்தில் உற்சாக வரவேற்பு.



சென்னை பேரூராட்சிகள் இயக்குனர் திரு. சி.பு. பெருமாள்அவர்கள் நவீன கழிப்பிட கட்டுமானப் பணிகளை பார்வையிடுகிறார். உடன்: தலைவர் ஹாஜி V.M.S. லெப்பை மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள். 23—1—88



KMT மருத்துவமனை கட்டுமானப் பணிகளை திரு சி.பு. பெருமாள் அவர்கள் பார்வையிடுகிறார். உடன் சர்வகட்சி பிரமுகர்கள். 23—1—88




சிறுசேமிப்பு மற்றும் குடும்பநல திட்டத்தில் காயல்பட்டணம் பேரூராட்சி முதலிடம் பெற்றதற்காக சிதம்பரனார் மாவட்டத்தின் முதலாவது ஆட்சித் தலைவர் திரு. ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் நிர்வாக அதிகாரி திரு. அ.மு. செய்யதுமுகம்மது அவர்களுக்கு பரி[illegible] வழங்குகிறார்.



காயல்பட்டணத்தில் அஞ்சல் நிலைய சேமிப்புக் கணக்கு தொடக்க விழாவில் கலெக்டர் R. ஆறுமுகம் I.A.S. உடனிருப்பவர்கள்; தலைவர் ஹாஜி V.M.S. லெப்பை, துணைத் தலைவர் M. N. சொளுக்கு, காயல் மகபூப்



காயல்பட்டணம் தென் பாக கிராம நிர்வாக அலுவலகத்தை மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு A. S. பாண்டியன் அவர்கள் முன்னிலையில் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு R. ஆறுமுகம் I. A. S. அவர்கள் திறந்து வைக்கிறார்.
நாள்: 11—11—87



K. M. T. மருத்துவமனை வரவேற்பு விழாவில் கீழக்கரை வள்ளல் ஹாஜி B. S. அப்துல் ரஹ்மான் அவர்கள் பேசுகிறார் மேடையில் காயல்பட்டணம் பேரூராட்சி தலைவர் ஹாஜி V M S. லெப்பை, கீழக்கரை பேரூராட்சி தலைவர் ஹாஜி சாகுல் ஹமீது ஆலிம்.



காயல்பட்டணம் அரசு மருத்துவமனையில் புதிய வார்டுகள், எக்ஸ்ரே, லேப் ஆகிய பகுதிகளை திறந்து வைத்துவிட்டு K. M. T. மருத்துவமனையை பார்வையிடுகிறார். மருத்துவதுறை இயக்குனர் டாக்டர் முத்துக்குமாரசாமி.

★ காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு விழா !

★★ நான்காவது மேல்நிலை நீர்த்தேக்கம் மற்றும் ஆக்சப்பணிகள் திறப்பு விழா!!

★★★ காயல்பட்டணம் பேருந்து நிலைய அடிக்கல்நாட்டுவிழா !!!

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

முப்பெரும் விழா

நாள் : 23—11—1988 புதன்கிழமை காலை 11-00 மணி

இடம் : ரெட் ஸ்டார் சங்க மைதானம், அப்பா பள்ளித் தெரு, காயல்பட்டணம்.

மறுபக்க படங்கள் :

மேலே : மேதகு தமிழக ஆளுனரின் ஆலோசகர்
மாண்புமிகு டாக்டர் A.பத்மநாபன், I.A.S. அவர்கள் பேசுகிறார்.
மேடையில் பேரூராட்சிகள் இயக்குனர் திரு. சி.பு. பெருமாள்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய தலைமைப் பொறியாளர்
திரு I. G. டேனியல் உள்ளிட்ட பெருமக்கள்

மத்தி : அலங்காரப்பந்தல் நிரம்பி வழிந்த பொதுமக்கள் மற்றும் பிரமுகர்கள்

கீழே : விழா மேடையில் தமிழக பள்ளிக் கல்வி இயக்குனர் திரு கி. கோபாலன்,
தலைவர் ஹாஜி V.M.S. லெப்பை, திருச்செந்தூர் நாடாளுமன்ற
உறுப்பினர் திரு R. தனுஷ்கோடி ஆதித்தன்,
சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு R. ஆறுமுகம், I.A.S.
மற்றும் அதிகாரிகள்.







காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

முப்பெரும் விழா

— முகம்மதுதம்பி (M. T S.) சென்னை. —

★ காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு விழா!

★★ நான்காவது மேல்நிலை நீர்த் தேக்கம் மற்றும் ஆக்கப் பணிகள் திறப்புவிழா !

★★★ காயல்பட்டணம் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழா !



மாண்புமிகு டாக்டர் A. பத்மனாபன் I.A S. அவர்கள் காயல்பட்டணம் நான்காவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி மற்றும் ஆக்கப் பணிகள், நூற்றாண்டு நினைவுச் சின்னம் இவற்றை திறந்து வைத்து பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

23 - 11 - 1988 புதன்கிழமை !

கலை நகர் காயல் விழாக் கோலம் கண்டது.

பன்னிரண்டு நூற்றாண்டு வரலாற்றுப் பெருமைக்குரிய காயல் பட்டணத்தில் *27 - 01 - 1886*ல் ஊராட்சி அமைக்கப்பட்டு, அது பேரூராட்சி, தேர்வுநிலை பேரூராட்சியாக உயர்ந்து நூற்றாண்டு நிறைவை எட்டியதற்காக விழா எடுக்க முடிவு செய்து அந்த விழாவே 'காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி 'முப்பெருப்விழா'வாக நடத்தப்பட்டது.

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு விழா, நான்காவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி மற்றும் ஆக்கப்பணிகள் திறப்பு விழா, காயல் பட்டணம் பேருந்து நிலைய அடிக் கல் நாட்டு விழா ஆகிய மூன்றும் இணைந்த முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்காக,

காயல்பட்டணம் அப்பா பள்ளி தெரு, ரெட் ஸ்டார் சங்கம் தன்னே அலங்காரம் செய்திருந்தது. தேசிய உணர்வும், மார்க்கப் பற்றும்


மனிதாபிமான சேவையும் நிரம்பப் பெற்ற **ரெட் ஸ்டார் சங்கம்** தனது பொன்விழா (50வது) ஆண்டில் இந்த முப்பெரும் விழாவை நடத்திடும் வாய்ப்பு பெற்றது.

இதற்கு காரணமும் உண்டு. காயல்பட்டணத்தில் குடிநீர் பற்றாக் குறையை தீர்க்க நான்காவது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க கண்ணியமிக்க ஹாஜி **வி.எம்.எஸ். லெப்பை** அவர்கள் தலைமையிலான பேரூராட்சி மன்றம் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தது. அன்றைய தலைமைச் செயலாளராக இருந்த டாக்டர் **A. பத்மநாபன் I. A S.** அவர்கள் காயல்மாநகருக்கு எந்தப் பணிகளையும் செய்து தருவதற்கு தயாராக இருந்தார்.

இந்த அருமையான வாய்ப்பை பயன்படுத்தி ரூபாய் எட்டு லட்சம் மதிப்பீட்டில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் நான்காவது மேல்நிலை நீர்த் தேக்கம் கட்ட பணி முடுக்கிவிடப் பட்டது. இதற்கான அனுமதி மட்டுமின்றி எட்டு லட்ச ரூபாய் முழு செலவையும் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் மான்யமாக தந்ததற்காக டாக்டர் பத்மனாபன் அவர்களை எத்தனை முறை பாராட்டினாலும் தகும்.

இந்த நீர்த் தேக்கம் அமைக்க ரெட்ஸ்டார் சங்கத்திற்கு தென்புறம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தோடு ஒட்டிய பரந்த இடம் அப்பாபள்ளிக்கு பாத்தியப்பட்டது. அதில் கட்டிடங்களும் இருந்தன. அந்த இடத்தை **அப்பாபள்ளி, மரைக்கார்பள்ளி ஜமாஅத்தார்** இப் பேரூராட்சிக்கு நன்கொடையாக அளித்தனர்.

இந்த இடத்தில் நான்காவது மேல்நிலை நீர்த் தேக்கம் அமைந்ததால் முப்பெரும் விழா ரெட்ஸ்டார் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.



காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி முப்பெரும் விழாவையொட்டி தினத்தந்தி, தினமலர் மணிச்சுடர் நாளிதழ்கள் சிறப்பு மலர்கள் வெளியிட்டிருந்தன.



சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் நல்ல கவிஞருமான டாக்டர் A. பத்மனாபன் I. A. S. அவர்கள் *14 . 12 . 1928*ல் பிறந்தார் சென்னை பல்கலை கழகத்தில் முதுகலை பொருளாதாரம், பொது நிதி, அரசியல், வரலாறு பட்டம் பெற்று *1951*ல் அரசுப் பணியில் சேர்ந்தார். வணிக வரித்துறை கமிஷனர், சப்கலெக்டர், கலெக்டர், மீனவள இயக்குனர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு திட்ட ஆலோசனை குழு தலைவர், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர், பொதுப்பணித் துறை செயலாளர், சுகாதார குடும்ப கட்டுப்பாட்டுத் துறை போன்ற பல்வேறு துறைகளை திறம்பட நிர்வகித்து நற்பெயர் ஈட்டியுள்ளார்.

பின்னி லிமிடெட் தலைவராக இருந்து மூடப்பட்டுக் கிடந்த மில்லை திறக்கச் செய்தார்.

இந்திய அரசின் கடல்வழி போக்குவரத்துத் துறையில் பணியாற்றி ரஷ்யா, பிரிட்டன், அல்ஜீரியா போன்ற பல வெளிநாடுகளுகுச் சென்று கப்பல் துறை கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார்.

உலக வங்கி நிபுணர் குழுவில் இடம் பெற்று மாசு கட்டுப்பாடு திட்டத்தை வகுத்தார்.

தமிழ் நாடு அரசு தலைமைச் செயலாளராக சிறப்பாக பணியாற்றி பல முறை பதவி நீடிப்பு பெற்றவர்.

தமிழகத்தில் ஆளுனர் அட்சி அமல்படுத்தப்பட்டு டாக்டர் P.C. அலெக்ஸாண்டர் அவர்களின் ஆலோசகராக பணியாற்றினார்.

நாற்பது வருட காலம் அரசுப்பணியில் இருக்கும் டாக்டர். பத்மனாபன I.A.S. அவர்கள் தற்போது யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் உறுப்பினராக உள்ளார்.

தமிழகத்தில் டாக்டர் **எம்.ஜி.ஆர்.** அவர்கள் மறைவைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலையில் ஆளுநரின் ஆட்சி அமல்படுத்தப்பட்ட போது தமிழக ஆளுநரின் ஆலோசகராக டாக்டர் **A. பத்மனாபன் I.A.S.** அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவரை காயலுக்கு அழைத்து வந்து காரியங்கள் பல நிறைவேற்ற வேண்டும் என்கின்ற ஆர்வம் எழுந்தது. அவர்களும் ஏராளமான பணிகளுக்கு மத்தியிலும் காயல் பட்டணம் வருவதை பெருமையாக கருதினார்கள்.


மக்கள் மத்தியில் மிகப் பெரும் செல்வாக்கு பெற்ற அரசியல் தலைவர்களுக்கெல்லாம் அளிக்கப்பட்ட அனைத்து வரவேற்புகளையும் மிஞ்சும் வகையில் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தின் விடிவெள்ளியான டாக்டர் A. பத்மனாபன் I.A.S. அவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. நகரெங்கும் தோரணங்கள் அலங்கார வளைவுகள், வாழ்த்துப் பதாகைகள் நகர எல்லையிலிருந்து ரெட்ஸ்டார் சங்கம் வரை சீருடை அணிந்த அனைத்துப் பள்ளி மாணவர்களின் கண்கவரும் அலங்கார அணிவகுப்பு, ஆயுத போலீஸ் படையின் வாத்திய இசை, வாண வேடிக்கைகளுடன் இந்த வரவேற்பு அளிக்கப் பட்டது.

மகாத்மா காந்தி நினைவு வளைவு அருகில் அளிக்கப் பட்ட வரவேற்பை பெற்றுக் கொண்டு அருகில் உள்ள புகழ்மிக்க **ஐக்கிய விளையாட்டுச் சங்கத்தை** பார்வையிட்டு

அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். பின்னர் கண்ணியத்திற்குரிய **காயிதே மில்லத்** அவர்கள் பெயரால் அமைந்த சாலையை திறந்து வைத்தார்.

ரெட் ஸ்டார் சங்கத்தில் அமைக்கப்பட்ட அலங்கார பத்தலில் சிதம்பரனார் மாவட்டத்தின் முதலாவது ஆட்சித் தலைவர் திரு **ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.** அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. ஆரம்பமாக **திருக்குர்ஆனி**லிருந்து மொழி பெயர்ப்புடன் வசனங்கள் ஓதப்பட்டன. அதனைத் தொடர்ந்து **தமிழ்த்தாய் வாழ்த்து** பாடப்பட்டது. பின்னர் பேரூராட்சி தலைவர் ஹாஜி **V.M.S. லெப்பை** அவர்கள் இந்நகருக்கு தேவையான கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி வரவேற்புறை வழங்கினார்.

திருச்செந்தூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு **R, தனுஸ்கோடி ஆதித்தன்** M.A.,B.L., சென்னை பேரூராட்சிகள் இயக்குனர் திரு **சி. பு. பெருமாள்,** தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குனர் திரு **கி. கோபாலன்,** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் திரு **I.G. டேனியல்,** சிதம்பரனார் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர் திரு **பி. ஜி. ஜி. பிச்சை,** மாவட்ட பேரூராட்சி அதிகாரி திரு. **A. இராமசாமி, M. A.,** திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு **A. S. பாண்டியன்,** காயல் பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி துணைத் தலைவர் ஜனாப் **M. N. சொளுக்கு அப்துல்காதர் Dr. M.S. மஹ்பூபு சுபுஹானி M. D.** ஆகியோர் விழாவில் பேசினர்.



நான்காவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியின் மும்முரமான பணிகள்

பின்னர் மாண்புமிகு **Dr A. பத்மனாபன் IAS.** அவர்கள் நான்காவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியை திறந்து வைத்தார். இதன் 'கல்' நான்காவது நீர்த் தேக்க நுழைவாயிலில் பதிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு மற்றும் ஆக்கப்பணிகள் திறப்புவிழா கல் பேருந்து நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம், குடிநீர், சாலை, மற்றும் ஆக்கப் பணிகள் பற்றிய விபரம் அக்கல்லில் குறிப்பிடப்பட்டுள்ளது. காயல் பட்டணத்தில் ஊராட்சி அமைக்கப்பட்டதிலிருந்து இன்றைய நாள் வரை பொறுப்புக்களிலிருந்த தலைவர்கள் பெயர் பதவி காலம் பொறித்த நூற்றாண்டு நிறைவு நினைவுச் சின்னம் பேரூராட்சி அலுவலகத்தில் பதிக்கப்பட்டுள்ளது. காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு நினைவு அரங்கம் கட்டப்பட்டதும் அந்த நினைவுக்கல் அதில் பதிக்கப்படும்.


இவைகளை ஒரே நேரத்தில் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு டாக்டர் **A.பத்மனாபன்** I.A S. அவர்கள், காயல்பட்டணம் பேருந்து நிலையத்திற்கு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு அறிவித்தார், வாறுகால் வசதிக்கு ரூ. 1 இலட்சமும் சாலைகள் அபிவிருத்திக்காக ரூ. 75 ஆயிரமும் குறைந்த செலவில் நவீன கழிப்பிடங்கள் 200ம், மான்ய உதவியுடன் டிரெய்லர் டேங்கருடன் பவர் டில்லர் ஒன்றும் அறிவித்தார். பள்ளிகளுக்கு அங்கீகாரமும் சென்டரும் வழங்கினார், இது தவிர இதற்கான வளர்ச்சிப் பணிகளுக்கு அனைத்தும் செய்வதாக உறுதி அளித்தார்.

இறுதியில் விழா நடந்த வார்டின் பேரூராட்சி உறுப்பினர் ஜனாப் **காயல் மகபூப்** நன்றி கூறினார்.

இந்த விழாவை முன்னிட்டு நாளிதழ்கள் சிறப்பு மலர்கள் வெளியிட்டிருந்தன. விழா பற்றிய செய்திகளையும் சிறப்பாக பிரசுரித்திருந்தன.

இந்தச் சிறப்பான முப்பெரும் விழாவை ரெட் ஸ்டார் சங்கத்தில் நடத்திய பேரூராட்சி மன்றத்தார் பாராட்டுக்குரியவர்கள். அதே போல் எந்தச் செலவினங்களையும் எதிர்பாராமல் மிகச் சிறப்பாக விழா ஏற்பாடு செய்த ரெட்ஸ்டார் சங்கத்தினரும் நன்றிக்குரியவர்கள்.

நான்காவது மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி வழங்கிய மாண்புமிகு டாக்டர் A. பத்மனாபன் I.A.S. அவர்களையும், அதற்கு உறுதுணையாகவும் ஒத்துழைப்பாகவும் இருந்த அன்றைய பேரூராட்சிகள் இயக்குனர் திரு. சி. பு. பெருமாள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு R. ஆறுமுகம் I. A. S. மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயலாளர் திரு V. நெய்னார் பாண்டியன், தலைமைப் பொறியாளர் திரு I. G. டேனியல் B,E. M.Sc., (Eng.), கண்காணிப்பு பொறியாளர்கள் திருவாளர்கள் S. K. S. அப்துல்ஹமீது, B. E., M.Sc. [Eng.] Late A. கிருஷ்ணன் B. Sc. B.E.



பண்டித ஜவஹர்லால் நேரு, ரெட்ஸ்டார் சங்கத்திற்கு 1936ல் எழுதிய கடிதம்

S. A. M. முகைதீன் B. E., M. S. [USA] நிர்வாகப் பொறியாளர்கள் திருவாளர்கள் M. நாச்சியப்பன், B.E. M.Sc. [Eng.] V. வீரைய்யா B. E., உதவி நிர்வாகப் பொறியாளர்கள் திருவாளர்கள் K. S. பழனிச்சாமி B. E., A. அமானுல்லாஹ் B.E. உதவிப் பொறியாளர்கள் திருவாளர்கள் L. ராதா கிருஷ்ணன் B. E. J, பாலாஜி B.E. J. பாலாஜி B.E., மாவட்ட பேரூராட்சி அதிகாரி, திரு A.இராமசாமி M. A., பேரூராட்சி மன்றத்தின் பெருமைக்குரிய தலைவர் ஹாஜி V.M.S. லெப்பை, துணைத் தலைவர் ஜனாப் M.N. சொளுக்குஅப்துல்காதர் உறுப்பினர் ஜனாப் காயல் மகபூப் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி நிர்வாக அதிகாரி, திரு. அ. மு. செய்யது மூகம்மது மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து நாங்கள் வெளியிட்ட செய்தி முற்றிலும் பொருத்தமானதே!



Dr, பத்மநாபன் உள்ளிட்ட பெருமக்களை ரெட்ஸ்டார் சங்கத்திற்குள் வரவேற்று அழைத்துச் செல்கின்றனர் அதன் நிர்வாகிகள்.



முகம்மதுதம்பி (M.T.S.)
(கட்டுரை ஆசிரியர்)



தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குனர் திரு. கோபாலன் அவர்களுடன் ஹாஜி. V.M.S. லெப்பை உரையாடுகிறார்

சிதம்பரனார் மாவட்டம்
காயல் பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி
நூற்றாண்டு நிறைவு விழா நினைவுச்சின்னம்

23-11-1988 புதன் காலை 11 மணிக்கு அப்பா பள்ளித்தெரு ரெட்ஸ்டார் சங்க வளாகத்தில் நடைபெற்ற பேரூராட்சி முப்பெரும் விழாவில்
மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில்
சென்னை பேரூராட்சிகள் இயக்குனர் உயர்திரு சி.பு. பெருமாள் அவர்கள் முன்னிலையில்
மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர்
மாண்புமிகு டாக்டர் சி. பத்மனாபன் இ.ஆ.ப. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது

காயல் பட்டணம் நகர் தோற்றம் கி.பி. 1842
பஞ்சாயத்து துவக்கம் 27-1-1886 GO MS NO 122 LF

பேரூராட்சியில் தலைவர்களாகப் பணியாற்றிய பெருமக்கள்

எண்	பெயர்		பதவியிலிருந்த வருடம்
1.	கடல்சுங்க உப்பு இலாகா கண்காணிப்பாளர்		27-1-1886 - 1894
2.	திரு. S. பொன்னையா நாடார்	அவர்கள்	1895 - 1914
3.	ஜனாப் மு.க.அ.பு. முஹம்மது தம்பி	”	1914 - 1918
4.	” குளம் ச.த. முஹம்மது சேக்னா லெப்பை	”	1918 - 1924
5.	” தோல்சாப்பு மீ.நா. முஹம்மது உசைன்னா லெப்பை	”	1925 - 1929
6	” ஹாஜி மு.க. முஹம்மது ஹஸன் மரைக்கார்	”	1930 - 1934
7	” மு.க.அ.பு. செய்யது முஹம்மது புகாரி	”	1934 - 1936
8	” தோல் சாப்பு முஹம்மது இபுராஹீம் சாகிப் லெப்பை	”	1936 - 1947
9	” ஹாஜி தத்திபு செ.யி. செய்யது இபுராஹீம் சாகிப்	”	1947 - 1953
10	” ஹாஜி MKT. முஹம்மது அபூபக்கர்	”	1953 - 1965
11	” பாவலர் S.S. அப்துல் காதர் ஹாஜியார்	”	1965 - 1970
12	” ஹாஜி L.K. லெப்பை தம்பி	”	1970 - 1973
13	” V.M.S. அனசுத்தீன்	”	1973 - 1979
14	” K.M. இஸ்ஹாக் B.Sc.	”	1979 - 1979
15	தனி அதிகாரிகள் (B.D.O)		31-10-79 - 2-3-86
16	ஜனாப் ஹாஜி V.M.S. லெப்பை அவர்கள்	”	3-3-86 முதல்

காயல் பட்டணம் பேரூராட்சிக்கு நிலம் நன்கொடையளித்தவர்கள்

முதலாவது மேல்நிலை நீர்த்தேக்க வளாகம்
ஜனாப் ம.நா. செய்யது இபுராஹீம் சாகிப் அவர்கள் வகையறா 1951
” புளியங் கொட்டை செய்யது முஹம்மது ”
பேரூராட்சி அலுவலகம் மற்றும் 2வது நீர்த்தேக்க விளாகம்
ஜனாப் தோல்சாப்பு T.M.E. அஹ்மது முகய்யத்தீன் அவர்கள் வகையறா 1967
ஹாஜி சி.ம.கு. முகம்மது நாகு
மூன்றாவது நீர்த்தேக்க விளாகம்
ஜனாப் விளக்கு மு.க.அ.லி. முகம்மது சேக்னா லெப்பை அவர்கள் 1958
நான்காவது நீர்த்தேக்க விளாகம்
அப்பா பள்ளி ஜமா அத் 1988

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றம்
பேருந்து நிலைய அடிக்கல் நாட்டுவிழா.
நூற்றாண்டு நிறைவுவிழா - நான்காவது மேல்நிலை நீர்த்தேக்கம் மற்றும் ஆக்கப்பணிகள் திறப்பு விழா
23-11-1988 புதன்காலை 11 மணிக்கு அப்பாபள்ளித்தெரு ரெட்ஸ்டார் சங்க வளாகத்தில்
சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர்
உயர்திரு R. ஆறுமுகம் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில்
உயர்திரு R. தனுஷ்கோடி ஆதித்தன் M.A.B.L. M.P. அவர்கள்
சென்னை பேரூராட்சிகள் இயக்குனர்
உயர்திரு சி.பு. பெருமாள் அவர்கள் ஆகியோர் முன்னிலையில்
உயர்திரு தமிழக ஆளுனர் அவர்களின் ஆலோசகர்
மாண்புமிகு டாக்டர் கவிஞர் A. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்களால் நிறைவு விழா
மற்றும் திறப்பு விழாக்கள் நடத்தப்பட்டன.

பணிகள் விபரம்

நான்காவது மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி தொகை			ரூ. 8 லட்சம்
சாலை, குடி நீர், மின் விளக்கு வசதிகள்		”	ரூ. 6 ”
திறந்த வெளி கிணறுகள்	3	”	ரூ. 60,000
நவீன கழிப்பறைகள்	2	”	ரூ. 60,000
ஸ்லாட்டர் ஹவுஸ்	2	”	ரூ. 60,000
குளியல் அறை	1	”	ரூ. 35,000
ஆலய நகர் அபிவிருத்தி திட்டம்		”	ரூ. 75,000
பேருந்து நிலையம்		மதிப்பீடு	ரூ. 15 லட்சம்

ஹாஜி V.M.S. லெப்பை தலைவர்

M.N சொளுக்கு அப்துல் காதர் உப தலைவர்
அ.மு. செய்யது முகம்மது நிர்வாக அதிகாரி

உறுப்பினர்கள்


P அருணாசலம்	S.S.E. சுல்தான்	காயல் மகபூப்
S. காசிராஜன்	ஹாஜி P.S.N.S. அப்துல்லா சாகிப்	முகம்மது நானா லெப்பை
S.A. அலி அக்பர்	S.T. முஸ்தபா கமால்	S.L. வெங்கடாசலம்
S.T. முகம்மது அலி	M.A. சித்தி பாத்திமா	S.A. கோட்டைமுத்து
	A.K. செய்னா முகம்மது	

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி
முப்பெரும் விழாவில்
மாண்புமிகு டாக்டர் A. பத்மனாபன் I.A.S. அவர்களால்
திறந்து வைக்கப்பட்ட கல்வெட்டுக்கள்

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி முப்பெரும் விழாபற்றி நாழிதழ்கள் வெளியிட்ட செய்திகள்:




காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலருக்கு
—: வாழ்த்துக்கள் :—




காயல் நகர மக்களின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்ற Dr. பத்மநாபன் அவர்களுக்கு தலைவர் V.M.S. லெப்பை ஹாஜியார் நினைவு பரிசளிக்கிறார்.



காயல்மா நகருக்கு செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றி விழா மேடையில் உரையாடுகிறார்கள்.



காயிதே மில்லத் சாலையை Dr. பத்மனாபன் I.A.S. திறந்து வைக்கிறார். அருகில் R. தனுஷ்கோடி ஆதித்தன் M.A.B.L. MP. கலெக்டர் திரு R. ஆறுமுகம் I.A.S. ஹாஜி V.M.S. லெப்பை.



ஐக்கிய விளையாட்டுச் சங்கத்தை பார்வையிடுகிறார்கள்.

நூற்றாண்டு நிறைவிற்குப் பின்

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி

-பார்வை -சேவை -தேவை

காயல் மகபூப்



உலகில் உள்ள நாடுகளில் அமைவிடச் சிறப்பிலும் வரலாறு, கலாச்சாரப் பெருமையிலும் சிறப்பிடத்தை வகிப்பது நம் தாயகமாம் இந்தியா!

இந்த பெருமைக்குரிய இந்திய வரலாற்றை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இடங்களில் பன்னிரண்டு நூற்றாண்டு வரலாற்றுப்பெருமை வாய்ந்த காயல்பட்டணம் குறிப்பிடத்தக்கதாகும்.


தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் ஒன்றாகிய சிதம்பரனார் மாவட்டத்தில், தூத்துக்குடி - திருச்செந்தூர் வழியாக இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் முக்கியமான நெடுஞ்சாலை வழித்தடத்தில் இந்த புகழ்மிக்க காயல்பட்டணம் அமைந்துள்ளது.


தூத்துக்குடியிலிருந்து 33 கி மீ. தெற்கிலும் திருச்செந்தூரிலிருந்து 8 கி. மீ வடக்கிலும் அமைந்துள்ள இந்த வரலாற்றுப் பெருநகரின் கிழக்கே மன்னார் வளைகுடாவும், மேற்கே ஆறுமுகநேரி, வீரபாண்டியன்பட்டணம் ரூரல் தெற்கே வீரபாண்டியன்பட்டணம் (திருச்செந்தூர்) வடக்கே ஆத்தூர், புன்னக்காயல் மற்றும் தாமிரபரணி ஆறு ஆகியவை எல்லைகளாக அமைந்துள்ளன.



காயல் மகபூப்

அரபுத்தமிழ் கலாச்சாரத்தின் இணைப்புப் பாலமாகவும், இந்திய ஒருமைப்பாட்டின் சின்னமாகவும் திகழும் காயல்மாநகர் சர்வதேசங்களோடு தொடர்புடைய பெருநகர். தமிழ்மொழி கொஞ்சி விளையாடும் கலைநகர் காயலின் பெருமையை வர்ணிக்க வார்த்தைகளில்லை.


காயல்பட்டணம்
தேர்வு நிலை பேரூராட்சி-மாதிரிவரைபடம்
DCW
இரசாயனத்
தொழிற்சாலை
செல்வ அரசி
கெமிகல்
பைபாஸ் சாலை
KMT



காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மாதிரி வரைபட விளக்கம்:

1 தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம் & நூற்றாண்டு நிறைவு அரங்கம்
2 தொலைபேசி அஞ்சலகம்
3 தபால்தந்தி அலுவலகம்
4 மின்சார வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகம்
5 சார்பதிவாளர் அலுவலகம்
6 அரசு பொது மருத்துவமனை
7 K M T மருத்துவமனை
8 கால்நடை மருத்துவமனை
9 முதலாவது மேல்நிலை நீரத்தேக்கம்
10 இரண்டாவது மேல்நிலை நீர்த்தேக்கம்
11 மூன்றாவது மேல்நிலை நீர்த்தேக்கம்
12 நான்காவது மேல்நிலை நீர்த்தேக்கம்
13 மகாத்மாகாந்தி நினைவு வளைவு
14 ஐக்கிய விளையாட்டு சங்கம் (U.S.C.)
15 காயல் ஸ்போர்ட்டிங் கிளப் (K.S.C.)
★ ரெட்ஸ்டார் சங்கம்
[பேரூராட்சி நூற்றாண்டுவிழா நடந்தஇடம்]
16 சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா
17 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
18 மதுரை வங்கி
19 எல்கே மேல்நிலைப்பள்ளி
20 சென்ட்ரல் மேல்நிலைப் பள்ளி
21 முஹ்யித்தீன் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி
22 அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
23 எல்கே துவக்கப்பள்ளி
24 சுபைதா பெண்கள் உயர்நிலைப்பள்ளி
25 பேரூராட்சி சந்தை
26 ஆடு அறுப்பு & மாடுஅறுப்பு தொட்டிகள்
27 அல்ஜாமிவுல் கபீர் (குத்பா பெரியபள்ளி)
28 அல்ஜாமிவுஸ் ஸகீர் (குத்பா சிறுபள்ளி)
29 அல்ஜாமிவுல் அஸ்ஹர் ஜும்ஆ பள்ளி
30 கடைப்பள்ளி
31 குருவித்துறை பள்ளி
32 மரைக்கார் பள்ளி
33 அப்பா பள்ளி
34 தாயிம் பள்ளி
35 குட்டியப்பா பள்ளி
36 ஹாபிழ் அமீர் அப்பா பள்ளி
37 ஹாஜி அப்பா தைக்கா பள்ளி
38 புதுப்பள்ளி
39 ஷெய்கு ஹுசைன் பள்ளி
40 ஷெய்கு ஸலாஹுத்தீன் பள்ளி
41 அரூஸிய்யா பள்ளி
42 முஹியித்தீன் பள்ளி
43 கோமான்தெரு மொட்டையார் பள்ளி
44 இரட்டைக்குளம் பள்ளி
45 அகமது நயினார் பள்ளி
46 காதிரிய்யாகொடிமரசிறுநெய்னார்பள்ளி
47 ஆறாம் பள்ளி
48 மொகுதூம் பள்ளி
49 கற்புடையார் பள்ளி
50 மகழரா
51 ஜாவியா
52 ஸாஹிப் அப்பா தைக்கா
53 மஜ்லிஸுல் புகாரிஷ் ஷரீப்
54 சிவக்கொழுந்தீஸ்வரர் கோவில்
55 அழகிய மணவாளப் பெருமாள்கோவில்
56 ஸ்ரீதேவிஜநாற்றுநங்கைஅம்மன்கோவில்
57 மெய்கண்டீஸ்வரர் கோயில்
58 சந்த எஸ்தேவு ஆலயம்
59 பரி. மிகாவேலின் ஆலயம்
60 புனித ஆண்ட்ரூஸ் ஆலயம்

இது காயலின் கலைக் களஞ்சியம்

வரலாற்றுப் பெருமை:

இந்தியத் திருநாட்டின் சிந்து சமவெளி நாகரீகமும் அரபு நாடான எகிப்தின் நைல் நதி நாகரீகமும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மனித இனத்தின் மிகச்சிறப்பான வாழ்க்கை முறைகளை சொல்லிக் காட்டுகின்றன.

அரபுலகத்துடன் இந்திய துணைக்கண்டத்திற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே இந்தியாவுடன் சிறந்த வர்த்தக தொடர்புகளை அரபுகள் ஏற்படுத்தியிருந்தனர்.

மிஸ்ர் தேசமென்று அழைக்கப்பட்ட எகிப்தின் அப்பாஸியக்கலீபா அல்வாதிக்கின் கொடுங்கோண்மை ஆட்சியை தொடர்ந்து மார்க்கப்பற்று நிறைந்த இஸ்லாமியர்கள் சிலர் அந்நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள்.

கி. பி. 875-ம் ஆண்டு, எகிப்திய தலைநகர் கெய்ரோவையொட்டி முகத்தம் மலையடிவாரத்தில் 'கிராபதுல் குப்ரா' என்ற ஊரிலிருந்து, இஸ்லாத்தின் முதலாவது 'கலீபா' ஹஸரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களது 'பக்ரீ' வம்சத்திலிருந்து 'முஹம்மது கல்ஜி' என்ற இஸ்லாமிய அறிஞர் தலைமையில் ஆண், பெண், குழந்தைகளுமாக 224 பேர் வெளியாகி கடல் வழியாக மரக்கலத்தில் காயல் வந்திறங்கினர். மரக்கலத்தில் வந்திறங்கியதால் அவர்கள் மரக்கலராயர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதுவே பின்னர் மரைக்காயர் ஆயிற்று.

அச்சமயம் பாண்டியநாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த 'ஜெய வீர ராஜுலுகாரு' என்னும் மன்னர் இந்த அரபியர்களுக்கு ஆதரவளித்து பரந்த நிலப்பரப்பை பட்டயமாகக் கொடுத்து பல பொறுப்புகளையும் கொடுத்தார்.

பொதுவாக நதிகள் கடலோடு சேருமிடம் அல்லது கடல் உள்புகுந்த இடங்களை 'காயல்' என்று சொல்வது வழக்கம். தாமிரபரணி ஆறு கடலோடு சங்கமமாகின்ற 'காயல்' என்று அழைக்கப்பட்ட இந்த பரந்த பகுதியைத்தான் பாண்டிய மன்னர் பட்டயமாகக் கொடுத்தார்.

நாளடைவில் ஊர் மற்றும் ஆட்சி, நிர்வாக அமைப்பு முறைகள், சாதி சமய அடிப்படையில் மக்களின் கூட்டு வாழ்க்கை நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக இந்த பரந்த இடம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு காயல்பட்டணம், புன்னக்காயல், பழையகாயல் மஞ்சள்நீர் காயல் என்றெல்லாம் தனித்தனி பெயர்களால் இன்று அழைக்கப்படுகின்றன. ஏன்? காயல்பட்டணத்தோடு இணைந்திருந்த பெரும்பகுதிகள்கூட 2—11—1929 ல் தான்பிரிக்கப்பட்டு ஆறுமுகநேரி பேரூராட்சியே அமைக்கப்பட்டது என்பது சமீபத்திய வரலாறுதானே!

மொத்தத்தில் கி. பி. 875-ல் தமிழகத்தில் அரபிகள் வந்திறங்கிய இடம் இந்த காயல் என்பதும், அவர்கள் முதன் முதலாவதாக குடியிருந்த இடம் இன்றைய காயல்பட்டணத்தின் கோமான் தெருவிலிருந்து நெய்னார் தெரு,

காயல்பட்டணத்தின் வரலாற்றைத் தொடங்கிவைத்து அலங்கரிக்கும் முஹம்மது கல்ஜி, சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் போன்ற பெருமேதைகளுக்கு இந் நகரில் நினைவுச் சின்னங்கள் இல்லை.

உருவாக்கப்படும் புதியநகர்கள் கட்டிடங்கள், தெருக்கள், வளாகங்களுக்கு காயல்பட்டணம் வரலாற்றோடு தொடர்புடைய மேதைகள், இறைநேசச் செல்வர்கள், வள்ளல்கள்,புகழ்க்காவியம் படைத்தபுலவர் பெருமக்களின் பெயர்கள் சூட்டப்படுவது இந்த மகத்தானவர்களின் மாபெரிய சேவைக்கு நமது சிறிய நன்றிக்காணிக்கையாக இருக்கும்.

எங்களின் சிந்தனைக்கு எல்லை இல்லை
எங்களின் சேவைகளுக்கு முடிவோ இல்லை. இல்லை...

சித்தர் தெரு, பரிமார் தெரு, காட்டுத்தெரு வரை அமைக்கப்பட்ட ஒரே தெருதான்என்பதும் அதில் இறைவனைத் தொழ கி.பி. 875 லேயே சில பள்ளி வாயில்கள் அமைக்கப் பட்டன என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

பவுத்திர மாணிக்கப்பட்டணம், செம்பி நாடு, தென் காயல், சோனகர்பட்டணம், கோனாடு கொண்டான் பட்டணம், உதய மார்த்தாண்ட பெருநகர் என்றெல்லாம் பல பெயர்களால் காயல்பட்டணத்தின் பல பகுதிகள் பலகாலங்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளதை இந்நகரின் பல இடங்களிலுள்ள பண்டைய கல்வெட்டுகளிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

காயல்பட்டணத்தின் புகழ்பாடிய தமிழ்ப்புலவர்களும் காயல்பட்டணத்தை பல சிறப்புப் பெயர்களால் அழைத்துள்ளனர். காஹிர் ஃபத்தன், வகுதை என்றெல்லாம் இந்நகரை புலவர்கள் வர்ணித்துள்ளனர்.

எகிப்திய தலைநகர் கெய்ரோ அரபி மொழியில் 'காஹிரா' என்றழைக்கப்படுகிறது. எனவே எகிப்திய அரபிகள் முதலில் வந்திறங்கிய இந்நகரை அப்பெயராலேயே அழைத்திருக்கலாம். 'நூறுநாமா' ஆசிரியர் அகமது மரைக்காயர் தமது நூலில் காஹிர் நாட்டு வளம் என்ற பகுதியையே சேர்த்துள்ளார்.

இன்றைய காயல்வாசிகளில் சிலர் தங்கள் பெயருக்குப் பின்னால் 'காஹிரி' என்றும், பெயருக்கு முன்னால் 'காயல்' என்றும் ஊரின் பாசத்தோடு அடைமொழி சேர்த்துள்ளனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வம்சா வழியைச் சேர்ந்த மிகச்சிறந்த ராஜதந்திரியும் பெரும் வணிகருமான செய்யது ஜமாலுத்தீன் என்ற அறிஞர் தலைமையில் கி.பி. 1284-ல் எகிப்திலிருந்து அரபிகள் காயல்பட்டணம் வந்திறங்கி இங்கேயே குடியேறினர். அச்சமயம் பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தர பாண்டிய தேவர், அவர்களை அன்போடு உபசரித்து ஆதரித்தார்.

ஆரம்பத்தில் குதிரை வணிகராக இருந்து அரபுநாடுகளிலிருந்து பாண்டிய நாட்டுக்கு குதிரைகள் வரவழைத்த செய்யது ஜமாலுத்தீன் சீனாவில் பாண்டிய நாட்டின் தூதராகவும் பின்னர் பாண்டிய நாட்டின் தலைமைத் தளதிபயாகவும் பதவிவகித்தார் தான் தலைமையேற்று யுத்தத்தில் வென்று இலங்கையில் மீன் கொடி ஏற்றினார். சுந்தரபாண்டியன் இறந்தபின் மக்கள் விருப்பப்படி பாண்டிய நாட்டின் மன்னராகவும் ஆனார். கி.பி. 1303-ல் பாரசீக நாட்டில் இருந்த உலக பாதுகாப்பு மாமன்றத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

சுல்தான் ஜமாலுத்தீன் அவர்களே காயல்பட்டணத்தை சிறப்பாக வடிவமைத்து, சுற்றுப் பகுதிகளில் சிதறிக்கிடந்த முஸ்லிம்களை ஒரே இடத்தில் குடி அயர்த்தினார்.

இலக்கியச் சேவை:

ஆன்மீகக் களஞ்சியமான இக் காயல்பட்டணம் தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ளதை பாராட்டுவது எளிதன்று. இஸ்லாம் எங்கள்வழி! இன்பத்தமிழ் எங்கள் மொழி! என்ற உணர்ச்சி முழக்கம் இந்நகரின் தென்றலில் என்றும் நிறைந்துள்ளது

ஷெய்குஅப்துல்காதிர் நயினார் லெப்பை என்ற புலவர் நாயகம் நான்கு காப்பியங்களை இயற்றி புதிய வரலாறு படைத்துள்ளார். திருப்புகழ்பாடி தன் திறமையை வெளிப்படுத்தினார் வரகவி காசிம் புலவர். உபதேசங்களை பாமாலைகளாகவும் தரமுடியும் என்பதை பல்லாயிரம் பாக்கள் மூலம் நிரூபித்துள்ளார் கவிஞர் ஷாமு ஷிஹாபுத்தீன் ஒலி. பல வருடங்கள் கேட்பாரற்றுக் கிடந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருவூலங்களை சேகரித்துப் புதுப்பித்து மகத்தான சேவை புரிந்துள்ளார் கண்ணகமது மகுதூம் முஹம்மது புலவர்.

தனக்கு வரும் புகழை குறைவாகப் பெற்றுக் கொள்பவனும், தன்மீது சுமத்தப்படும் பழியை அதிகமாகத் தாங்கிக் கொள்பவனும் தான் உண்மையான ஊழியன்.

இன்னும் நூற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் தமிழுக்கு அற்புத சேவை புரிந்ததற்காக இந்நகரை 'கலைநகர்' என்றே அழைக்கலாம்.

உமறுப்புலவர் சீறாப் புராணம் இயற்ற காயல்வாசிகளே காரணம். உமறுப் புலவரை இம் முயற்சியில் ஈடுபடுத்திய வள்ளல் சீதக்காதி, உரை வழங்கிய மகான் சதக்கத்துல்லாஹ் அப்பா (ரலி), மகான் மஹ்மூது தீபி [ரலி] உமறுப்புலவர் பாடாது விட்ட பகுதிகளை பாடிமுடித்த பனீ அஹமது மரைக்காயர் அத்தனைபேருமே காயல்பட்டண வாசிகள்தான்.

தமிழை அரபு லிபியில் எழுதும் அரபுத்தமிழை உருவாக்கியவர்களும், திருக்குர்ஆனுக்கு முதன் முதலில் அரபுத் தமிழில் விரிவுரை எழுதியவர்களும் காயல் வாசிகளே!

மார்க்க பக்தி:

எங்கு நோக்கினும் இறையில்லங்களாகத் திகழும் காயல்பட்டணம் ஒரு ஆன்மீகச் சுரங்கம். வரைபட விளக்கத்தில் காட்டப்பட்டுள்ள 24 பள்ளிகள், பெண்கள் மட்டுமே தொழுகை நடத்துவதற்கென்றே தெருக்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள 24 தைக்காக்கள், இறை நேசச் செல்வர்களின் எண்ணற்ற அடக்கத் தலங்கள். இந்நகரின் மண்ணும் மார்க்க மனம் கமழ்வதற்கு இன்னும் காரணம் வேண்டுமோ? இம்மனம் காயல் நகருக்கு மட்டும்தானா?

சரகுப்புலி சதக்கத்துல்லாஹ் அப்பா, மாப்பிள்ளை லெப்பை ஆலிம், தைக்கா ஷெய்கு முஹம்மது சாலிஹ் வலி, கீழக் கரையிலும்- மஹ்மூது தீபி வலி பாங்கிப் பேட்டையிலும், நூஹ் வலி பூவாரிலும், அஹ்மது வலி மஞ்சக்கொல்லையிலும், ஷெய்கு ஸலாஹுத்தீன் வலி நெல்லை ஏர்வாடியிலும் இன்னும் காயல்பட்டணத்திலிருந்து உதித்த இறைநேசச் செல்வர்கள் தமிழகம் முழுக்க இஸ்லாமிய சேவைபுரிந்துள்ளனர். இங்கு இஸ்லாத்திற்காக இன்னுயிர் நீத்த ஷுஹதாக்கள் எண்ணிலடங்காதவர்கள்.

> வரலாற்றுச் சிறப்புமிக்க காயல்பட்டணத்தை தொல்பொருள் இலாகா ஆராய்ச்சி செய்து பண்டைய ஆவணங்கள் கல்வெட்டுக்களை பதிவு செய்து வெளியிடவேண்டும்.
>
> அரபு- தமிழ் உறவு பற்றிய முழு ஆராய்ச்சி நூல் வெளியிடவும், தமிழ் இலக்கியத்திற்கு காயல்பட்டணம் புலவர்கள் ஆற்றிய தொண்டுபற்றிய விரிவான நூல் வெளியிடவும், அந்த இலக்கிய கருவூலங்கள் பாடப்புத்தகங்களில் இடம் பெறச் செய்யவும் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் தனித்துறை ஏற்படுத்தி பணி செய்ய வேண்டும். இதற்கு அரசு உறுதுணை புரியவேண்டும்.

கலாச்சார பாரம்பரியம்:

காயல்பட்டணத்தில் அரபுகளின் குடியேற்றத்தால் கலாச்சார மாற்றம் நிகழ்ந்தது. இவர்களின் வாழ்க்கை முறைகளால் கவரப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் இணைந்தனர். இதனால் அரபுதமிழ் இணைந்த கலாச்சாரம் உருவானது.

தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மற்றும் முற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தில் இணைந்து இங்கு வந்து குடியேறிய அரேபிய மக்களோடு திருமணம் செய்து பல்கிப் பெருகியுள்ளனர்.

இஸ்லாத்தின் முதலாம் கலீபா ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் வம்சா வழியில் 410 ஆண்டுகளுக்கு முன் பிறந்து மரைக்கார் பள்ளியில் அடக்கமாகியுள்ள ஹஸரத்சுலைமான் வலி (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வட இந்திய பிராமணப் பெண்ணையே திருமணம் செய்து கொண்டதும், அவர்களிலிருந்தே ஐந்து ரத்தினங்களான இறைநேசச் செல்வர்கள் தோன்றினார்கள் என்பதும், இவர்களின் வழித் தோன்றல்கள் தமிழகத்தின் பல இடங்களில்பெருகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இருட்டை குறை சொல்லிக் கொண்டிருக்காதீர்
வெளிச்சத்திற்கு நீங்களும் முயற்சியுங்கள்

வள்ளல் தன்மை:

செத்தும் கொடைகொடுத்த வள்ளல் சீதக்காதி வறியவர்களுக்கு வாரிக்கொடுத்து பசிப்பிணி அகற்றிய வள்ளல் மட்டுமல்ல! புலவர்களை ஆதரித்து தமிழ்இலக்கிய உலகிற்கு பெரும் தொண்டாற்றியவர்.

"வள்ளல்கள் லெப்பப்பா" என்ற பெரும் புகழுக்குரிய ஒலிகளான பெரிய லெப்பை அப்பா (ரலி), சின்ன லெப்பை அப்பா (ரலி), சகோதரர்கள் ஏராளமான நிலங்களை எல்லா சமூக மக்களுக்கும் தானமாக வழங்கிய மேதைகள்.

கருத்தம்பி மரைக்கார் என்ற பெரும் வள்ளல் அள்ளி அள்ளி கொடுத்த காரணத்தால் புகழ் அவரைத் தேடி வந்தது

அமைப்பின் சிறப்பு: வருவாய் கிராமம்:

காயல்பட்டணம் பேரூராட்சியின் பரப்பளவு 12.5 சதுரமைல்களாகும்.

காயல்பட்டணம் பேரூராட்சியில் காயல்பட்டணம் தென்பாகம் கிராமம், காயல்பட்டணம் வடபாகம் கிராமம் என்ற இரு வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளன.

காயல்பட்டணம் வடபாகம் கிராமம் முழுவதும் காயல்பட்டணம் பேரூராட்சியில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நஞ்சை 226 ஏக்கர் 52 சென்ட், புஞ்சை 2, 316 ஏக்கர் 19 சென்ட் புறம்போக்கு 1611 ஏக்கர் 49 சென்ட், குத்தகை நிலம் 28. ஏக்கர் 15 சென்ட் மொத்தம் 4182 ஏக்கர் நிலமும், காயல்பட்டணம் தென்பாகம் கிராமத்தில் புல எண் 5-12, 22, 27, 33-40, 134-139, 167-265 மற்றும் 568-584 நீங்கலாக மற்றவை காயல்பட்டணம் பேரூராட்சியில் அமைந்துள்ளன. தென்பாகம் கிராமத்தில் புஞ்சை 2644 ஏக்கர் 54 செண்டும், புறம்போக்கு 522 ஏக்கர் 30 செண்டும் மொத்தம் 3166 ஏக்கர் 84 சென்ட் நிலம் உள்ளது, ஆக காயல்பட்டணம் பேரூராட்சியிலுள்ள நிலம் மொத்தம் 7349 ஏக்கர் 19 சென்ட் ஆகும்.

காயல்பட்டணம் வடபாகம் கிராமம் உப்பளங்கள் மற்றும் காட்டுப்பகுதிகளாகும். தென்பாகம் கிராமம் பெரும்பாலும் குடியிருப்பு பகுதிகளாகும். இப்பேரூராட்சி குடியிருப்பு பகுதிகளில் பெரும்பாலானவை சர்வே நம்பர் 468 | 1A எண்ணில் உள்ளன.

1913ல் இந்த இரு கிராமங்களும் சர்வே செம்யப்பட்டன. 1989-90ம் வருடம் நடைபெற்ற சர்வேயின்படி காயல்பட்டணம் தென்பாகம் கிராமத்தில் குடியிருப்பு நத்தம் மட்டும் 13500 சர்வேக்களாகப் பிரிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட உள்ளன.

காயல்பட்டணம் வடபாகம் கிராமத்தில் ஒரு கிராம நிர்வாக அலுவலரும் 2 தலையாரிகளும் பணி செய்கின்றனர். தென்பாகம் கிராமத்தில் ஒரு கிராம நிர்வாக அலுவலரும் 3 தலையாரிகளும் உள்ளனர்.

வடபாகம் கிராமத்தில் 8364 ரூபாய் 8 பைசாவும், தென்பாகம் கிராமத்தில் 32134 ரூபாய் 51 பைசாவும் நிலவரியாக வருகிறது. காயல்பட்டணம் தென்பாகம் கிராமத்திற்கு புதிய சொந்த கட்டிடமாக கிராமச்சாவடி கட்டப்பட்டு 12-11-1987ல் திறக்கப்பட்டுள்ளது-

காயல்பட்டணம் வருவாய் கிராமங்கள் ஆத்தூர் பிர்காவிலும் திருச்செந்தூர் தாலுகவிலும் தூத்துக்குடி கோட்டத்திலும் சிதம்பயனார் மாவட்டத்திலும் அமைந்துள்ளன.

பேரூராட்சி அமைப்பு:

அரசு ஆணை எண் 122 L.F.நிதி 27-1-1886ன் படி காயல்பட்டணம் ஊராட்சியாக அமைக்கப்பட்டது. பின்சென்னை ஸ்தல ஸ்தாபன ஆய்வக நடவடிக்கை ஆர். டி. எஸ். எண் 48841/51

அழகிய ரோஜாவை அடைய ஆசைப்படுகிறாய்
பின் எதற்கு முட்களைப் பற்றி கவலைப்படுகிறாய்?

நாள் 24-4-1952ன்படி பேரூராட்சியாகவும், சென்னை பேரூராட்சிகள் இயக்குனர் அவர்களின் நடவடிக்கை ந.க. 6434/82 ஜே2 நாள் 15-10-1982ன் படி தேர்வுநிலை பேரூராட்சியாகவும் (Selection Grade Town Panchayat) உயர்த்தப்பட்டது.

காயல்பட்டணம் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இங்கு இரு ஊர் நல அலுவலர்கள் பணி செய்கின்றனர்.

காயல்பட்டணம் பேரூராட்சியில் நிர்வாக அதிகாரி தலைமையில் நிர்வாகம், குடிநீர், பொது சுகாதாரப் பணியாளர்கள் மொத்தம் 45 பேர் பணி செய்கின்றனர்.

நேராக அமைக்கப்பட்ட தெருக்கள், வரிசையாக கட்டப்பட்ட வீடுகள், பெண்கள் நடமாட தனிப்பாதைகள் இப்படிப்பட்ட சிறப்பைக்கொண்ட காயல்பட்டணத்தில் 70 தெருக்களும், 6122 வீடுகளும் உள்ளன. கதவிலக்கம் பெறாத ஆக்கிரமிப்பு குடிசைகள் 378 உள்ளன. ஆக மொத்தம் 6500 வீடுகள்.

திருச்செந்தூர் வட்ட ஆட்சியர் அவர்களின் 3-3-87ம் தேதிய இ. 1853/87 எண் கடிதப்படி காயல் பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி சிறப்புக் கூட்டத்தில் நாள் 30—12—1987 தீர்மானம் எண் 92 ன் படிபல தெருக்களின் பெயர்களும் முறைப்படி மாற்றப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காயல்பட்டணத்திலுள்ள வார்டுகளின் தெருக்களும் அதிலுள்ள வீடுகள் எண்ணிக்கையும் விபரம் வருமாறு:

(அடைப்பிற்குள் உள்ளவை தெருக்களின் பழைய பெயர்களாகும்)

எண்	வார்டு	தெரு	வீடுகள்
1	1	எக்ஸ்டன்ஸன் அளம்	15
2		புனித அந்தோணியார் சாலை (குருசடி)	146
3		ST ஜோலியார் மாதா கோவில்தெரு (கடயக்குடி)	18
4		அருணாசலபுரம்	96
5		கோமான்புதூர்	60
6		சேதுராஜா தெரு	36
7		முத்தாரம்மன் கோவில்தெரு	125
8		மங்கள விநாயகர்கோவில் தெரு	11
9		உச்சிமாகாளி அம்மன் கோவில் தெரு	40
10		சிவன்கோவில் தெரு	90
11		M. D. ஆப்ரகாம் நகர் (கொட்டமடக்கி ஓடை)	45
12		வள்ளல் சீதக்காதி நகர்	48
13		கலைஞர் கருணாநிதி சாலை (பைபாஸ் ரோடு)	16
		1 வது வார்டு மொத்த வீடுகள்	746
14	2	கோமான் மேலத்தெரு	40
15		கோமான் நடுத்தெரு	83
16		கோமான் கீழத்தெரு	16
17		கலீபா அப்பாதெரு (கீழநெய்னார் தெரு, புங்காரத் தெரு)	45
18		முத்துவாப்பா தைக்கா தெரு	20
19		தீவுத்தெரு (பண்டகசாலை காரணார் தெரு	180
		மொத்தம்	384

தாழ்வு மனப்பான்மையை தகர்த்தெறி
உன்னால் முடியாதது எதுவுமில்லை.

எண்	வார்டு	தெரு	வீடுகள்
20	3	நெய்னார் தெரு	240
21		சின்ன குத்பா பள்ளிதெரு (சித்தன் தெரு)	112
22		அபுல் கலாம் ஆசாத் தெரு (துஸ்ட ராயர் தெரு)	60
		மொத்தம்	412
23	4	காயிதே மில்லத் சாலை (குறுக்குத்தெரு)	128
24		ஜாவியா தெரு (கி. மு, கச்சேரித் தெரு)	102
25		ஆராம்பள்ளி தெரு	173
26		முஹ்யித்தீன் தெரு (முகமதியர் நாவிதக்குடி தெரு)	49
		மொத்தம்	452
27	5	வள்ளல்கள் லெப்பப்பா தெரு (சதுக்கைத் தெரு) 191 to 291	118
28		அம்பல மரைக்கார் தெரு	127
		மொத்தம்	245
29	6	வள்ளல்கள் லெப்பப்பா தெரு (சதுக்கைத் தெரு) 1 to 190	310
		மொத்தம்	310
30	7	அருஸிய்யா பள்ளித் தெரு (காட்டுத் தைக்காதெரு)	149
31		ஹாஜி M. K. T. முகம்மது அபூபக்கர் தெரு [குத்துக்கல்தெரு]	335
		மொத்தம்	484
32	8	புதுப்பள்ளித் தெரு (மருத்துவர் தெரு)	99
33		தைக்காதெரு	265
34		புதுக்கடைத் தெரு	128
		மொத்தம்	492
35	9	மொகுதூம் தெரு	189
36		ஹாஜி அப்பா தைக்கா தெரு	220
37		ஹாஜி L. K. லெப்பை தம்பி தெரு [வண்ணாகுடி கடைத்தெரு]	119
		மொத்தம்	528
38	10	ஹாபிழ் அமீர் பள்ளி தெரு (பெரிய நெசவு தெரு)	157
39		கருத்தம்பி மரைக்கார் தெரு	197
40		ஹாபிழ் அமீர் பள்ளி சின்ன தெரு	51
		மொத்தம்	405
41	11	அலியார் தெரு	178
42		பரிமார் தெரு	88
43		அப்பாபள்ளி தெரு	175
		மொத்தம்	441
44	12	மரைக்கார் பள்ளி தெரு [கடற்கரை தெரு]	236
45		சொளுக்கார் தெரு	192

ஆசை அதிகமதிகம் இருக்கிறது
அலாவுதீனின் அற்புத விளக்கு மட்டும் கிடைக்க வில்லையே

எண்	வார்டு	தெரு	வீடுகள்
46		கொச்சியார் தெரு	56
47		ஸி- கஸ்டம்ஸ் சாலை [பண்டகசாலைத் தெரு]	23
48		தேங்காய் பண்டகசாலை தெரு	23
		மொத்தம்	515
49	13	திருவள்ளுவர் தெரு [குளம் சாகிபு தம்பி தோட்டம்]	9
50		காமராசர் சாலை (L. F. ரோடு) I	4
51		காமராசர் சாலை(L. F. ரோடு) II	21
52		கீழலட்சுமி புரம்	49
53		அழகாபுரி	33
54		லட்சுமிபுரம்	69
55		மொகுதூம் அலாவுதீன் தோட்டம்	12
56		சந்தனமாரியம்மன் கோவில் தெரு (வண்ணாகுடி தெரு)	54
57		விசாலாட்சி அம்மன்கோவில் தெரு	126
58		வீரசடைச்சி அம்மன் கோவில் தெரு	59
		மொத்தம்	436
59	14	ஹாபிழ் அமீர் பள்ளி மேலத்தெரு	34
60		மங்களவாடி	29
61		டாக்டர். அம்பேத்கார் நகர் (மொட்டையன் தோட்டம்)	3
62		ஓடக்கரை	14
63		வண்டிமலைச்சி அம்மன் கோவில் தெரு	20
64		பாலசந்திர வினாயகர் கோவில் தெரு (வாணியக்குடி தெரு)	33
65		மன்னராஜா தெரு [கண்டிப்பிச்சை தோட்டம்]	14
66		பூந்தோட்டம்	35
67		தைக்காபுரம்	14
68		ஓடக்கரை வடக்குத்தெரு	65
69		திருச்செந்தூர் ரோடு	5
70		காயிதே மில்லத் நகர்	6
		மொத்தம்	272

இப்பேரூராட்சியில் 14 வார்டுகள் பிரிக்கப்பட்டு 15 உறுப்பினர்கள் பேரூராட்சியில் இடம் பெறுகின்றனர் முதலாவது வார்டு இரட்டை உறுப்பினர் வார்டு. இதில் ஒன்று ஆதி திராவிட சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது

காயல்பட்டணத்தில் 8 வது வார்டு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் நிறைந்த இந்த வார்டில் உள்ளூர் பெண்கள் யாரும் உறுப்பினராகவோ போட்டியிடவோ முன் வரவில்லை.

தமிழக அரசின் 1990ம் வருட உத்திரவின்படி மேலும் மூன்று வார்டுகளை பெண்களுக்காக ஒதுக்கியுள்ளது. காயல்பட்டணத்திலுள்ள முஸ்லிம் பெண்களனைவரும் 'கோஷா' முறையை அனுசரிப்பதால் உறுப்பினர் உள்ளிட்ட பொது பொறுப்புக்களை ஏற்க முன்வருவதில்லை. 1991ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின் வார்டுகளை முறைப்படி மாற்றி அமைத்து 20 ஆக உயர்த்தி அதன் பின் பெண்கள் வார்டுகளை ஒதுக்குவது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். அதுவரை உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யாமல் அரசு விசேட விதிவிலக்கு அளிக்க வேண்டியது அவசியமாகும்.

தண்ணீரில் முதலை நீந்திக் கொண்டிருந்தாலும்
அதன் எண்ணமெல்லாம் தரையில் அதன் முட்டை மீது தான்.

1990ம் வருடத்தில் காயல்பட்டணத்தில் மொத்த வாக்காளர் 22875 இதில் ஆண்கள் 11405 பெண்கள் 11470 வார்டு வாரியாக விபரம் வருமாறு.

வார்டு	ஆண்	பெண்	மொத்த வாக்காளர்
1	1779	1484	3263
2	901	959	1860
3	987	929	1916
4	702	643	1345
5	481	494	975
6	544	645	1189
7	963	962	1925
8	716	856	1572
9	449	509	958
10	1350	1259	2609
11	755	772	1527
12	847	970	1817
13	362	390	752
14	569	598	1167
மொத்தம்	11405	11470	22875

மக்கள் தொகை:

1911ல் ஆங்கிலேயர்கள் முதன் முதலாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினர். ஆனால் அதற்கு முன்பே 1871ல் காயல்பட்டணத்தில் 18560 பேர் இருந்ததாக Pears (Shilling) Cyclopaedia என்ற கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காயல்பட்டணத்திலிருந்து பல பகுதிகள் பிரிந்து தனித்தனி ஊர்களாக அமைக்கப்பட்டு இறுதியில் 1929ல் ஆறுமுகநேரி, கந்தசாமிபுரம் லட்சுமிமாநகர் பிரிக்கப்பட்டு ஆறுமுகனேரி பேரூராட்சி அமைக்கப்பட்டபின் 1951ல் காயல்பட்டணத்தின் மக்கள் தொகை 8125 ஆகவும், 1961ல் 13.423 ஆகவும் 1971ல் 18449 ஆகவும் 1981ல் 23544 ஆகவும் இருந்துள்ளது.

1990ல் மக்கள் தொகை 30500 இதில் பெண்கள் 15293 ஆண்கள் 15207
மக்களில் 77.35 சதவீதம் பேர் முஸ்லிம்கள். இவர்களனைவரும் நகருக்குள்ளேயே வாழ்கின்றனர். அரசாங்கம் பிரித்துள்ள ''அகராதியின்'' படி தமிழ் பேசும் இந்த லெப்பை முஸ்லிம்கள் அனைவரும் பிற்பட்ட வகுப்பினர்.

முஸ்லிம்களையடுத்து புற நகர்ப் பகுதிகளில் ஆதிதிராவிட சமுதாயத்தினர் அதிகம் வாழ்கின்றனர். அடுத்து நாடார் சமுதாயத்தினரும் விஸ்வகர்மா (ஆசாரி) சமுதாயமும் வாழ்கின்றனர். தேவர், செட்டியார், பரவர் என பல்வேறு சமுதாயப் பெருமக்களும் வாழ்கின்றனர் இவர்களனைவருக்கும் வழிபாட்டுத் தலங்கள் உண்டு.

காக்கா, அண்ணாச்சி, அப்பு. மாமா, சாச்சா என ஒவ்வொரு சமுதாயத்தையும் உறவு சொல்லி அழைக்கும் சகோதர பாசம் வேறு எங்கும் பார்க்க முடியாத ஒன்று.

பேரூராட்சி வருமனம்:

	1985—86	1989—90
வீட்டுவரி	ரூ. 212160	ரூ. 6,05,000
தொழில்வரி	ரூ. 94956	ரூ. 2,86,000
குடிநீர் கட்டணம்	ரூ. 184728	ரூ. 4.20,000
மற்றவகை உட்பட மொத்த வரவு	ரூ. 971515	ரூ. 18,73,300
மொத்தச் செலவினங்கள்	ரூ. 991564	ரூ. 1940409
இதில் பேரூராட்சி பணியாளர்கள் சம்பளம் மட்டும்	ரூ. 434699	ரூ. 707500

இது ஒரு தோராயமான கணக்குத்தான்,

மான்களின் கூட்டத்திற்கு சிங்கத்தின் தலைமையிருந்தால் மான்களுக்கு வலிமை பிறக்கும். சிங்கங்களின் கூட்டத்திற்கு மான் தலைமை ஏற்றால் சிங்கங்கள் வலிமை இழக்கும்.

நிர்வாகச் செலவினங்கள் உயர்ந்து கொண்டிருக்கின்றன அரசுகளும் ஊதிய உயர்வு அளித்துக் கொண்டிருக்கின்றன. போனஸ் மற்றும் கடன் திட்டங்களை அறிவிக்கின்றன. ஆனால் மக்களின் வரிப்பணம் தான் இவைகளுக்கு செலவிடப்படுகின்றன, எனவே பற்றாக்குறை பட்ஜெட்டின் காரணமாக மக்களின் நலப்பணிகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே உள்ளாட்சித்துறை பணியாளர்களை அரசு ஊழியர்களாக்கி அரசே ஊதியம் வழங்கினால் பேரூராட்சியில் நிறைவான பணிகளை செய்ய முடியும்.

திரையரங்கு போன்ற கேளிக்கை வரிகளோ வணிக வளாகம் போன்ற வருவாய்களோ இல்லாத காயல்பட்டணத்திற்கு அரசு தாராளமாக மான்ய உதவி செய்ய வேண்டும்.

தொழில் வளர்ச்சி :

காயல்பட்டணத்திலுள்ள ஆண்கள் பெரும்பாலும் வெளிநாடுகள் மற்றும் வெளியிடங்களில் தொழில் செய்கின்றனர் அல்லது தொழிலாளிகளாகப் பணி புரிகின்றனர். இன்று பெரும்பாலானவர்கள் அரபு நாடுகளில் வேலை பார்க்கின்றனர், பலர் இரத்தின வியாபாரிகளாக உள்ளனர் பாரம்பரியமாக தோல் வணிகத்தில் பலர் ஈடுபட்டுள்ளனர், பழைய இரும்பு வியாபாரம், ஆபரணங்களுக்கு தங்க மூலாம் பூசுதல் போன்ற சிறு தொழில்களை ஏராளமான இந்நகர் வாசிகள் வெளியூர்களில் நடத்துகின்றனர்.

273 (தையல், லாண்டரி, சலூன் நீங்கலாக) கடைகள் உள்ள காயல்பட்டணத்தில் உள்ளூர் வாசிகள் தொழில் செய்வது மிகச்சிலரே!

தொப்பி பின்னுதல். ஹல்வா தயாரித்தல். ஊறுகாய் தயாரித்தல் என பெண்கள் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில் மிகப்பெரும்பாலானவர்கள் இந்த சிறிய வருமானத்தைக் கொண்டே வாழ்கின்றனர். பத்தி தயாரித்தல், அப்பளம், வடம் போன்ற உணவு பொருட்களை தயாரிக்கவும் இங்குள்ள பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு மூலப்பொருட்கள் கொடுக்கவும், தயாரிப்புக்களை வாங்கவும் கூட்டுறவு அங்காடி திறக்க அரசு முன் வர வேண்டும்.

கெமிக்கல்ஸ் மற்றும் கேஸ் தயாரித்தல் இன்டஸ்டிரியல் தொழில் இவைகளை வெளியிடங்களில் காயல் வாசிகள் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக, இந்தியாவிலேயே முதல் முறையாக பாஸ் மைக்ரோ ஃப்ளோட் என்ற கருவியை காயல் வாசிகள் உருவாக்கியுள்ளனர். இக்கருவியை மரைக்கார் இன்டஸ்ட்ரீஸின் துணை நிறுவனமான இண்டஸ்ட்ரியல் ஃபீடர்ஸ் இன் கார்ப்பரேஷன் உருவாக்கியுள்ளது, 1990 நவம்பர் 27ல் கீழக்கரையில் நடைபெற உள்ள தொழில் வளர்ச்சி மாநாட்டில் மாநில முஸ்லிம் லீக் தலைவர் அல்ஹாஜ் A.K.A. அப்துல்சமது M.A.M.P அவர்கள் தலைமையில் முஸ்லிம்லீக் பெருந்தலைவர் இபுராகீம் சுலைமான் சேட் M. P. அவர்கள் இதன் முதல் விற்பனையை தொடங்கி வைக்கவும், டாக்டர் அல்ஹாஜ் S. M. ஹமீது அப்துல் காதர் அவர்கள் முதல் விற்பனையை பெற்றுக் கொள்ளவுமிருப்பதாக இந்நிறுவனங்களின் ஸ்தாபகர் அல்ஹாஜ் M. S. M. பாஸுல் அஷ்ஹப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

காயல்பட்டண வாசிகளின் தோற்றத்தை வைத்தே சீமான்கள் என முடிவு செய்து விடுகின்றனர். இது மிகத்தவறான கணிப்பு. என்ன செய்வது? புசிப்பதற்கு ஒன்றும் இல்லாதவனும் புன்னகை பூக்கிறான். கஞ்சியில் விழுந்த ஈயை எடுப்பதற்கு மதியில்லா

இந்த அழகிய பூந்தோட்டத்தை ரசிக்கின்றீர்களே
அந்த உருவாக்கியவனை நினைப்பதுண்டா?

தவனும் மடிப்பு கலையாத ஆடை அணிகிறான். இதனால் இங்கே தாண்டவமாடும் வறுமை வெளி உலகுக்குத் தெரிவதில்லை. இந்நகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே செல்வந்தவர்கள். ஓரளவு நடுத்தர வர்க்கத்தினர் பெரும்பாலானவர்கள் ஏழைகளே! இந்த உண்மையே அடுத்தவர்களிடம் சொன்னால் சிரிக்கிறார்கள். அணிகின்ற சட்டையையும் அதில் சொருகியிருக்கும் பேனாவையும் பார்த்து பொருளாதாரத்தை எடை போட்டால் நலிவடைந்த பிரிவிற்கான திட்டங்கள் நம்மை வந்து சேரவா செய்யும்?

இங்குள்ள மக்களின் பெரும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட DCW Limited என்ற தென் கிழக்காசியாவின் மிகப்பெரிய இரசாயன தொழிற்சாலை, 1959ல் ஆரம்பிக்கப்பட்டு 2000 பேர் வேலை பார்த்தும் அதுஅமைந்துள்ள காயல்பட்டணம் பேரூராட்சியிலுள்ள அல்லது நிலம் வழங்கிய முஸ்லிம்களில் ஒருவருக்கூட வேலை வாய்பு தரப்படவில்லை என்பதும், இந்நகரைச் சேர்ந்த மற்ற சமுதாயங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரைத் தவிர மற்றவர்க்கு வேலை வாய்ப்பு தரப்படவில்லை என்பதும்கசப்பான உண்மை. ஆனாலும் இந்த மாபெரும் தொழிற்சாலை அமைந்திருப்பது இந்நகருக்கு பெருமை தரத்தக்கது என மகிழ்கிறோம்.

இங்கு செல்வ அரசி கார்பைடு பேக்டரியும் துவக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உதவியோடு கூட்டுத் தொழில் முயற்சியில் தொழிற்சாலை துவக்கப்பட்டால் வேலையில்லாமல் தவிக்கும் இந்நகர வாசிகளில் பெரும் பாலானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதற்கு பெரும் மனம் படைத்த செல்வந்தர்களும் திறமை சாலிகளும் முன் வர வேண்டும்.

வங்கிகள் :

1968ல் செண்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, *1975ல்* இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் என்ற அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், *1975ல்* பேங்க் ஆப் மதுரை லிட் என்ற தனியார் வங்கியும் இங்கு துவக்கப்பட்டு மிகச் சிறப்பாக பணி புரிவது பாராட்டிற்குரியது.

சுய தொழில் புரியும் உள்ளூர் மக்களுக்கு அதிகப்பட்ச கடன் வழங்கினால் இந்நகரைப் பொறுத்த வரையில் மிகுந்த பயனை விளைவிக்கும். மணமகளுக்கு கட்டாயம் வீடு கொடுக்கப்படும், வழக்கமுடைய இந்நகரில் நீண்டகால கடன் தவணைகளில் வீடுகட்ட கடன் உதவி வழங்கும் திட்டத்தையும், நம்பிக்கையான ஜாமீன் அடிப்படையில் திருமண கால கடன் உதவியையும் செயல் படுத்துவது இங்கு அவசியமானதாகும்,

கூட்டுறவு வங்கி கிளை இந்நகரில் துவக்க அரசு அனுமதி வழங்கியும் அது உறங்கிக் கிடக்கிறது. அதன் கிளை இங்கு துவக்கப்பட்டு உறுப்பினர்கள் சேர்க்கப் பட வேண்டும்.

பொது சுகாதாரம் மருத்தவ சேவை:

சாக்கடை திட்டங்களோ வாறுகால் வசதிகளோ இல்லாத காயல்பட்டணத்தை மற்ற நகரங்களுடன் ஒப்பிடுகையில் பொது சுகாதாரம் ஓரளவு நன்றாகவே உள்ளது. கிட்டத்தட்ட இங்குள்ள எல்லா வீடுகளிலும் நவீன கழிப்பறை [Floushout Latrine] வசதி உண்டு, ஆறு குளங்கள் பாசனக் கிணறுகள் இல்லாத இங்கு வீடுகளில் குளிக்கும் அல்லது பயன்படுத்தும் தண்ணீர் சாலைகளில் தேங்காமல் சொந்த நடைபாதைகளில் தொட்டிகள் அமைத்து தேக்கப்படுகின்றன. மான்யம் மற்றும் கடன் உதவி மூலம் இந்நகரில் 200 வீடுகளுக்கு நவீன கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளர், இரு சுகாதார மேற் பார்வையாளர்கள், 27 சுகாதார சிப்பந்திகளும் பணி செய்கின்றனர். டாங்கர்

அறிவு ஆற்றல் திறமை தியாகம் இவற்றிற்கு வேலையில்லை.
குலப் பெருமையும், சூழ்ச்சியும் இவைகளை எளிதில் வென்று விடுகின்றன.

டிரைய்லருடன் பவர் டில்லர் ஒன்றும் மாட்டு வண்டிகள் 5ம் பேரூராட்சியில் சுகாதாரப் பணிக்கு உள்ளன. இப்பரந்த நகருக்கு சுகாதார பணி செய்ய இவை போதுமானதாக இல்லை. டிரைய்லருடன் டிராக்டர்கள் வாங்கி இப்பணிக்கு பயன் படுத்த வேண்டும்.

இரு நவீன பொது கழிப்பிடங்கள் இந்நகரில் பேரூராட்சியால் கட்டப்பட்டுள்ளன.

மருத்துவமனை :

1911ம் ஆண்டு காயல்பட்டணத்தில் மருந்தகம் திறக்கப்பட்டது. தற்போது அது *49* படுக்கைகளுடன் அறுவை சிகிச்சை, எக்ஸ்ரே. ஆய்வுக்கூட வசதிகளுடன் இயங்குகிறது. இங்கு ஒரு பெண் மருத்துவரும் இரு ஆண் மருத்துவர்களும் *6* நர்ஸுகளும் *4* பார்மஸிஸ்ட்களும் உட்பட *39* பேர் பணி செய்கின்றனர். இந்த வருடம் மட்டும் *62* பெரிய அறுவை சிகிச்சைகளும் 274 சிறிய அறுவை சிகிச்சைகளும், *299* குழந்தை பிறப்புக்களும் இங்கு நடந்துள்ளன, *98157* பேர் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர். சராசரியாக *41* பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெறுகின்றனர்

இம்மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கு பழுது பார்க்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும், நவீன வசதிகளுடன் மகப்பேறு வார்டு கட்டப்பட வேண்டும்.

இந்நகரில் பிணபரிசோதனை அறை வெகு தூரத்தில் பாழடைந்த நிலையில் உள்ளது. பிணம் வைப்பதற்கு தனி அறையும் இங்கு இல்லாததால் பொது வார்டின் அறையில் வைக்கப் படுகின்றன. மதிப்பிற்குரிய மனிதன் இறந்த பின்பு சீரழியும் இந்த அவல நிலை நீக்க இம்மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் பிண பரிசோதனை அறை உடனடியாக அரசு கட்டித்தர வேண்டும்.

காயல்பட்டணம் முஸ்லீம்களின் ஒன்று பட்ட முயற்சிக்கு கிடைத்த பரிசாக ஒரு கோடி ரூபாய் செலவில் காயிதே மில்லத் நகரில் 4-3-90 ஞாயிறு காலையில் மாண்புமிகு அமைச்சர் **கே. பி. கந்தசாமி** அவர்களால் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ தேவைகளுக்கு உள்ளூர் மருத்துவமனைகளே போதும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது நமது பிரதான பணியாகும்.

கால்நடை மருத்துவமனை :

1-11-1976ல் காயல்பட்டணத்தில் தொடங்கப்பட்ட கால்நடை மருத்துவமனை *1-6-83* முதல் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இந்நகரில் *1859* வெள்ளாடுகளும் *698* செம்மறி ஆடுகளும் *1050* மாடுகளும் வளர்க்கப்படுகின்றன, கோழிப்பண்ணைகளும் உள்ளன.வருடத்திற்கு *6000* ஆடுகளும் *4000* மாடுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன, சராசரியாக *500* ஆடுகளுக்கும் *190* மாடுகளுக்கும் ஆண்மை நீக்கம் செய்யப்படுகிறது. 500 பசுக்களுக்கு செயற்கை கருவூட்டல் நடைபெறுகிறது,

கால்நடை மருத்துவர் தலைமையில் கால்நடை ஆய்வாளர், இரு உதவியாளர்கள் உள்ளிட்ட 6 பேர் இங்கு பணி செய்கின்றனர்,

காயல்பட்டணம், ஆறுமுகநேரி, மூலக்கரை, வீரமாணிக்கம், அம்மன்புரம், மேலப்புதுக்குடி உள்ளிட்ட பல கிராமங்கள் இம்மருத்துவமனையால் பயனடைகின்றன. இங்கு தண்ணீர் வசதி ஆபரேஷன் செட் கழிவறை வசதிகள் உடனடியாக செய்யப்பட வேண்டியது அவசியமாகும்,

உனது கடமையை செய் பிரதி பலன் எதிர்பாராதே
நேர்மையை குறிக்கோளாகவை விமர்சனங்களைக்கண்டு பயப்படாதே!

மின்சார வசதி:

காயல்பட்டணம் பேரூராட்சி பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரிய உதவிக் கோட்ட பொறியாளர் அலுவலகம்; உதவிப் பொறியாளர் அலுவலகம் 110/11 K. V. உபமின் நிலையம் ஆகியவை அமைந்துள்ளன.

உதவிக் கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் ஐந்து இளநிலை பொறியாளர் உட்பட 10 பேர் பணி செய்கின்றனர். இங்குள்ள உபமின் நிலையத்திற்கு தூத்துக்குடி கயத்தாரிலிருந்து மின்சாரம் வருகிறது. இங்கிருந்து சாத்தான்குளம் வழியாக நாகர்கோவில் வரை மின்சாரம் செல்கிறது.

காயல்பட்டணத்தில் 4955 மின் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வருடத்திற்கு ரூ. 2022636/- வருமானம் கிடைக்கிறது. இந்நகரில் 1763 கே.வி. ஏ. திறன் கொண்ட 9 மின் மாற்றிகள் உள்ளன. இப்பேரூராட்சி மன்றம் 1988ல் மேற்கண்ட பெரு முயற்சியின் காரணமாக 3 மின் மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட்டு 1350 கே. வி. ஏ. திறன் 1763 ஆக உயர்த்தப்பட்டது. பெரிய பள்ளி பகுதியில் ஒன்றும், மத்திய காயலில் இன்னொன்றுமாக இரு 250 கே. வி. ஏ. மின்மாற்றிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

காயல்பட்டணம் உதவிப் பொறியாளர் அலுயலகத்தில் A. E., இரு போர்மேன்கள், லைன்மன்-5, ஹெல்பர் 1 கணக்கீட்டாளர் 3 கணக்கீட்டாய்வாளர் 2 வணிக உதவியாளர் 1 ஆக 18 பேர் பணி செய்கின்றனர். இங்கு 6 ஹெல்பர்களாவது பணியில் இருக்க வேண்டும். A. E. அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட காயல்பட்டணம் பேரூராட்சி 27-10-86 லேயே முதலாவது நீர்த்தேக்க வளாகத்தில் இடம் நன்கொடையாக அளித்துள்ளது. இதனை காலதாமதமின்றி கட்டி முடிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காயல்பட்டணம் பேரூராட்சிப் பகுதியில் 4 அடி குழல் விளக்குகள் 548ம் பாதரச ஆவி விளக்குகள் 31 ஆக் 579 விளக்குகள் உள்ளன. பைபாஸ் சாலை கடற்கரை பகுதி உள்ள நகரில் பல இடங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட விளக்குகள் அமைக்கப்பட்டு உள்ளன.

தபால்தந்தி தொலைபேசி தொடர்புகள்:

காயல்பட்டணத்தின் பிரதான வீதியில் மறைந்த வள்ளல் பெருந்தகை **அ. க முகம்மது அப்துல் காதர்** அவர்களின் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இங்கு போஸ்ட்மாஸ்டர் தலைமையில் 7 கிளார்க், 6 போஸ்ட் மேன்உட்பட 20 பேர் பணியாற்றுகின்றனர். இரு கிளை போஸ்ட் ஆபீஸ்களும் உள்ளன.

தேர்வுநிலை தகுதியிலுள்ள இந்த தபால் அலுவலகம் அருகிலுள்ள தலைமை தபால் நிலையத்தை விட அதிகவேலைத்திறன் கொண்டது. இங்கு சேவிங்ஸ் பேங் மிகச் சிறப்பாக பொதுமக்களால் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ஸ்பீடு போஸ்ட் கொண்டு வருவது அவசியம்.

இங்குள்ள தந்தி பிரிவில் வருடத்திற்கு சராசரியாக 21.250 தந்திகள் கையாளப்படுகின்றன:

தொலைபேசி:

காயல்பட்டணம் தொலைபேசி அஞ்சல் நிலையம் மறைத்த பெரியார் **S. O.ஹபீப்ஹாஜியார்** அவர்கள் வழங்கிய இடத்தில் சொந்த கட்டிடத்தில் செயல்படுகிறது. இந்த எக்சேஞ்ச் 500 இணைப்புகள் கொண்டது. இதன் மூலம் ஆண்டிற்கு எண்பது லட்ச ரூபாய் வருவாய் கிடைக்கிறது. இன்னும் 220 பேர் புதிய இணைப்பு கேட்டுள்ளனர்.

சராசரியாக காயல்பட்டணத்தில் 10 வீடுகளில் ஒன்றில் தொலைபேசி உள்ளது. இந்த சாதனை படைத்த கிராமம் இந்தியாவிலேயே காயல்பட்டணம்தான் என்று துணிந்து கூறலாம்.

தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும் அவைகளை விரைவில் திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றி பெறுவதற்கான வழிகள். —லெனின்

இந்த எக்சேஞ்ச் முழுக்க முழுக்க எலக்ட்ரானிக் மயமாக்கப்பட விரைவான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம்தான் தாமதித்துள்ளவர்களுக்கு புதிய இணைப்பு கிடைக்கும்.

காயல்பட்டணத்தில் நேரடி தொலை தொடர்பு (S. T. D.) கொண்டு வர 1987 முதல் இப்பேரூராட்சி மன்றம்பெருமுயற்சி மேற்கொண்டது. தலைவர் - ஹாஜி V.M.S. லெப்பை அவர்களும் நாங்களும் சென்னை உள்ளிட்ட பல இடங்களில் பல நாட்கள் அலைந்தோம். இன்று S. T. D வசதி இந் நகருக்கு கிடைத்துள்ளது. இதற்கு 60 சென்ட் நிலம் நன்கொடையாக வழங்கிய **கதீப் ஸலீம் ஹாஜியார்** நம் நன்றிக்குரியவர்கள்

காயல்பட்டணம்
S. T. D. கோடு எண்: 04643

S. T. D. பப்ளிக் பூத்

'மாஸ்டர்'	மெயின் ரோடு	471
'மெட்ரோ'	பெரிய தெரு	508
'அல்-அமான்'	முஹ்யித்தீன் தெரு	510
'அல்பத்தாஹ்'	ஸி-கஸ்டம்ஸ் ரோடு	521
'ஹேப்பி ஐஸ்'	மெயின் ரோடு	571

போஸ்ட் ஆபீஸ் P. C. O. 215

இதற்கும் S. T. D. இணைப்பு கொடுப்பது அவசியம்.

போக்குவரத்து:

சென்னை உட்பட காயல்பட்டணத்திலிருந்து முக்கிய இடங்கள் அனைத்திற்கும் பேருந்து வசதி உண்டு.

காயல்பட்டணத்திலிருந்து திருவனந்தபுரம் உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு நேரிடையாக பேருந்து விடப்பட வேண்டும்.

காயல்பட்டணம் ஆறுமுகநேரி வழியே திருநெல்வேலிக்கு பேருந்துகள் குறைவு என்றகுறைபாட்டை சம்பந்தப்பட்டவர்கள் நிவர்த்தி செய்து தரவேண்டும்.

ரயில்வே:

காயல்பட்டணம் ரயில்வே ஸடேசன் 'சி' தகுதியில் உள்ளது. ஆண்டுக்கு டிக்கட் வருமானம் மட்டும் 7. 50 லட்சமாகும். சுமார் 20000 பயணிகள் வெளியிடங்களுக்கும், சுமார் 15000 பேர் இங்கும் வந்து செல்கின்றனர். ஆண்டுக்கு 240 டன் சரக்குகள் கையாளப்படுகின்றன. திருநெல்வேலி திருச்செந்தூர் மார்க்கத்திலேயே அதிக வருமானமுள்ள ஸ்டேசன் காயல்பட்டணம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு சிறப்பிருந்தும் இந்த ரயில்வே ஸ்டேசனில் பிளேட்பாரம் உயர்த்தி கூரை அமைக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

சென்னை செல்லும் ரயிலில் காயல்பட்டணம் கோட்டா 17 ஐ 30 ஆகவும் இருக்கை 10 ஐ 15 ஆகவும்உயர்த்தி தர கேட்டு 1988 லிருந்து நாங்கள் முயற்சி மேற்கொண்டோம். தற்போது படுக்கை 28 ஆக உயர்த்தப்பட்டுளளது. ஆனால் இருக்கை கோட்டா நீககப்பட்டுள்ளது. ஆனால் இதனை நீட்டிக்க வேண்டும்.

சர்வதேச தொடர்புடைய காயல்பட்டணத்தில் சென்னை - பம்பாய் சென்னை ஹவ்ரா ரயில்களில் தலா 4 படுக்கை கோட்டாக்களை ஒதுக்க ரயில்வே நிர்வாகத்தை தொடர்ந்து கேட்கிறோம்.

நாம் அடிமையாகப் பிறந்துவிட்டடோம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டு விட்டால் எந்த உரிமையையும் உங்களால்அடையமுடியாமல் போய்விடும். - டாக்டர் அம்பேத்கார்

சாலைவசதி:

இராமேஸ்வரத்திலிருந்து தூத்துக்குடி திருச்செந்தூர் வழியே கன்னியாகுமரி செல்லும் முக்கியமான நெடுஞ்சாலை வழித்தடத்தில் காயல்பட்டணம் அமைந்துள்ளது.

இந்நகரில் தார்சாலை 4.80 கி.மீ. கல் சாலை 10.80 கிமீ,சரள் சாலை 0. 50 கி மீ மண்சாலை 15.50 ஆக மொத்தம் 31. 60 கி மீ சாலை உள்ளது.

இங்குள்ள நெடுஞ்சாலை மோசமான நிலையிலுள்ளதால் அதை உயர்த்தி அகலப்படுத்த பெருமுயற்சி மேற்கொண்டதன் பயனாக அப்பணி அதிவிரைவில் நடைபெற உள்ளது.

போக்குவரத்து நெருக்கடி தீர ஒரு வழிபாதை திட்டத்தை இப்பேரூராட்சி அமல்படுத்த முடிவு செய்து மாற்றுப்பாதை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதி உதவியில் கிழக்கு கடற்கரைச் சாலை சீரமைக்கப்பட உள்ளது. காயல் பட்டணம் கடற்கரை, புன்னக்காயல் வழியிலான தூத்துக்குடி - திருச்செந்தூர் பைபாஸ்சாலை நீண்டகாலமாக கிடப்பில் உள்ளதால் அது துரிதமாக நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும்.

குடிநீர்:

காயல்பட்டணம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் என்ற சொந்த திட்டத்தின் கீழ் இந்நகருக்கு குடிநீர் வருகிறது. தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு ஆத்தூரில் கோடை கால நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்பட்டு அங்குள்ள வடிகட்டும் படுக்கையில் சுத்தப்படுத்தப்பட்டு பம்ப் செய்யப்படுகிறது.

காயல்பட்டணத்தில் 11 லட்சம் லிட்டர் கொள்ளளவில் நான்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளன. 3700 வீட்டு குடிநீர் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 114 பொது நல்லிகளும் 23 கிணறுகள் 24 அடி பம்புகளும் உள்ளன.

காயல்பட்டணம் கூட்டு குடிநீர் திட்டம், மற்றும் அபிவிருத்தி திட்டங்களிலுள்ள வடிகட்டும் படுக்கைகள் சரியாக செயல்படவில்லை. இதனை சீரமைத்து நவீனப்படுத்தி தருவது அவசர அவசியமாகும்.

6-10-1971ல் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்ட காயல்பட்டணம் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்குதமிழக அரசுரூ 7,54,000-மும், ஆயுள்காப்பீட்டுக் கழகம் ரூ. 16,46,000மும் கடன் வழங்கியுள்ளன. தற்போது அசலும் வட்டியும் 45 லட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. தவிர 15 லட்ச ரூபாய் பராமரிப்பு கட்டணம் பாக்கியுள்ளது. இத்தொகை முழுவதையும் தமிழக அரசே ஏற்று வஜா (Write off) செய்ய வேண்டும்.

சார்பதிவாளர் அலுவலகம்:

1970ல்இந்நகரில் துவக்கப்பட்ட சார்-பதிவாளர் அலுவலகம் காயல்பட்டணம் வட தென் பாக கிராமங்கள் கந்தசாமிபுரம் ஆறுமுகநேரி, ஆத்தூர், சேர்ந்தமங்கலம், புன்னக்காயல் நத்தகுளம், மேலாத்தூர் ஆகிய கிராமங்களை எல்லைகளாகக் கொண்டது.

இங்கு சராசரியாக வருடத்திற்கு 1600 பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

'மகழரா' கட்டிடத்தில் இயங்கும் இதற்கு சொந்த கட்டிடம் கட்ட இப்பேரூராட்சி மன்றம் நிலம் நன்கொடையாக வழங்கியுள்ளது. புதிய கட்டிட பணிகளை அரசு துரிதமாக நிறைவேற்றித் தர வேண்டும்,

---

ஒரு மனிதன் தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறானோ அதன்படியே மற்றவர்களிடமும் அவன் நடந்துகொள்ள வேண்டும். — பெரியார் ஈ.வெ.ரா.

கல்வி வளர்ச்சி

கல்வியில் பேரார்வமுடைய இந்நகரில் மாநில பாடத்திட்டத்தின் கீழ் **எல்கே மேல்நிலைப் பள்ளி, சென்ட்ரல் மேல்நிலைப்ப்ள்ளி, அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி** ஆகியவையும், மத்திய பாடத்திட்டத்தின் கீழ் **கமலாவதி மேல்நிலைப்பள்ளியும்,** மெட்ரிகுலேஷன் பாடத்திட்டத்தில் **முஹ்யித்தீன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியும்,** பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பளளிகள் நான்கு உட்பட 9 தொடக்கப்பள்ளிகளும் உள்ளன.

இந்நகரில் தொழில் நுட்பக் கல்லூரியோ கலைக் கல்லூரியோ இல்லை என்ற மிகப் பெரும் குறை தீர்க்கப்பட வேண்டாமா?

இஸ்லாமிய மணம் கமழும் இந்நந் நகரில் **மகழரத்துல் காதிரிய்யா, ஜாவியதுல் ஃபாஸியதுஷ் ஷாதுலிய்யா. அல்மத்ரஸத்துத் துர்ரியத்துல் ஹாமிதிய்யா,** என்ற ஆண்களுக்கான அரபிக் கல்லூரிகளும், **அரூஸுல் ஜன்னா, உம்முல் முஃமினீன் ஆயிஷா சித்தீக்கா, முஅஸ்கருர் ரஹ்மான்** என்ற பெண்களுக்கான அரபிக் கல்லூரிகளும், **அல்மத்ரஸத்துல் ஹாமிதிய்யா, அல்குல்லியத்துல் அரபிய்யா ரூஹுல் இஸ்லாம், யாக்கூத்திய்யா, மழ்ஹருல் ஆபிதீன்** ஹிப்ழு மத்ரஸாக்களும் உள்ளன.

நூலகங்கள் மற்றும் சமுதாய அமைப்புகள்:

இங்கு பொது நூலகம் சிறப்பாக இயங்கிவருகிறது. காயல்பட்டணம் பேரூராட்சி வீட்டு வரியில் 5சதவீதம் நூலக வரியாக வசூலித்துக் கொடுக்கப்படுகிறது. பொது நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட 5சென்ட் நிலத்தை இப்பேரூராட்சி மன்றம் தற்போது நன் கொடையாகக் கொடுத்துள்ளது. அதன் கட்டுமானப் பணி விரைவில் நடைபெற உள்ளது.

இந்நகரிலுள்ள கல்வி நிலையங்களும் அரபிக்கலாசாலைகளும் சிறப்பான நூலகங்களை கொண்டுள்ளன.

இந்நகரில் கிட்டத்தட்ட அனைத்து ஜமாஅத்திலும் சங்கங்கள் உள்ளன. இவைகள் நகருக்காக பல நல்ல பணிகளை செய்து வருகின்றன. இவற்றில் பெரும் பாலான சங்கங்களில் வாசக சாலைகள், நூலகங்களை முறையோடு நடத்தி வருகின்றன அவற்றில் சில :

இளைஞர் ஐக்கிய முன்னனி Y. U. F	—	ஸி கஸ்டம்ஸ் சாலை
முஹம்மதிய்யா இளைஞர் பேரவை M. Y. O.	—	தீவுத்தெரு
ரெட்ஸ்டார் சங்கம்	—	அப்பா பள்ளித்தெரு
ஷெய்கு நூர்தீன் (ஒலி) இளைஞர் சங்கம்	—	பரிமார்தெரு
மஜ்லிஸுல் கௌது சங்கம்	—	கருத்தம்பி மரைக்கார்தெரு
இத்திஹாதுல் இஹ்வானில் முஸ்லிமீன் (I. I. M.)	—	,,
அமீர் சங்கம்	--	ஹாபிழ் அமீர்பள்ளிதெரு
ரிஸ்வான் சங்கம்	—	தைக்காதெரு
கௌதியா சங்கம்	—	,,
மஹ்பூபு சுபுஹானி சங்கம்	—	ஆராம்பள்ளிதெரு
குத்பிய்யா மன்ஸில்	—	புதுக்கடை தெரு
பாயிஸீன் சங்கம்	—	மொகுதூம் தெரு
மஜ்லிஸுல் கரம் சங்கம்	—	ஹாஜி M.K.T. முகம்மது அபூபக்கர் தெரு
சூஃபி மன்ஸில்	—	,,
ஜலாலியா சங்கம்	—	வள்ளல் லெப்பப்பா தெரு
காழி அலாவுதீன் அப்பா தைக்கா	—	,,
அல்-அமீன் இளைஞர் நற்பணி மன்றம்	—	,,
மன்பவுல் பறகாத் சங்கம்	—	நெய்னார் தெரு
காயிதேமில்லத் இளைஞர் சமூக அமைப்பு	—	,,
மழ்ஹருல் ஆபிதீன் சன்மார்க்க சபை MARO	—	புதுப்பள்ளி தெரு
ஹாமிதிய்யா பைத்ஸபா சன்மார்க்க கல்விநிறுவனம்	—	முத்துவாப்பா தைக்கா தெரு

விளையாட்டும் பொழுது போக்கும் :

ரெட் ஸ்டார் சங்கம் பூப்பந்தாட்டப் போட்டிகளையும், **ஐக்கிய விளையாட்டுச் சங்கம்** அகில இந்திய கால் பந்தாட்டப் போட்டிகளையும், மாநில அளவில் கைப் பந்து போட்டிகளையும் **காயல்ஸ்போர்ட்டிங் கிளப்** பிரதானமாக கிரிக்கட் போட்டி களையும் நடத்துகின்றன.

வெளியிடங்களில் பணிபுரியும் பெரும் பாலான இந்நகர் வாசிகள் விடுமுறையை கழிக்க இந்நகருக்குவருகின்றனர். திரையரங் குகளோ கேளிக்கை விடுதிகளோ இலலாத இந்நகரில் இயற்கையின் பரிசாக கிடைத்த ஒன்று அழகான கடற்கரை மட்டுமே!

சென்னை மெரினாவிற்கு அடுத்த சிறப் பான கடற்கரைஎன்று முதறிஞர் இராஜாஜி அவர்களால் பாராட்டபட்ட இக்கடற்கரை இன்று ஆக்கிப்மிப்புக்களாலும் மீன் கழிவு கள் போன்ற அசுத்தங்களாலும் நாசமாக் கப்பட்டு வருகிறது. இந்த ஆக்கிரமிப்புக்கள் உரிய இடங்களுக்கு மாற்றப்பட்டு பொது மக்கள் பொழுதுபோக்கும் இக் கடற்கரை அழகு படுத்தி தரப்பட வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க காயல்பட் டத்தை சுற்றுலா தலமாகஅறிவித்துஅரசு பணிக்ள் செய்துதர வேண்டும். அழகான இக் கடற்கரையிலும் பொழுது போக்கு அம்சங்களுடன் தமிழக சுற்றுலா துறை பூங்கா அமைத்துத் தரவேண்டும்.

பிறப்பு - இறப்பு.

பிறப்பு இறப்புக்களை உடனடியாக பதிவு செய்துவிடுங்கள், பாஸ்போர்ட் &விசா எடுக்க, பள்ளியில் சேர, வேலை வாய்ப்புபெற, பிறப்புச்சான்றிதழ் தேவை. வாரிசு சான்றிதழ், இன்சூரன் பாலிஸி, சொத்து பாகப்பிரிவினைகளுக்கு இறப் புச் சான்றிதழ் அவசியம்.

பிறப்பு, இறப்புகளை அந்தந்த ஊரி லேயே பதிவு செய்து சான்றிதழ் வாங்கி பத்திரப் படுத்தி வையுங்கள்.

பிறப்பை 14 நாட்களுக்குள்ளும் இறப்பை 7 நாட்களுக்குள்ளும் பதிவு செய்யவேண்டும். அல்லது இந்த நாட் களையும் சேர்த்து 30 நாட்களுக்குள் அபராதம் ஒரு ரூபாயுடன் பதியலாம. அதன்பின் ஓராண்டிற்கு தாலுகா அலு வலகத்திலும், அது கடந்தால் முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் மூலம்தான் பதிய முடியும்,

பெயரில் என்ன இருக்கிறது என சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். உங்களின் அழகான பெயரை கொச்சை யாக உச்சரிக்க அனுமதிக்காதீர்கள். பிரசவத்திற்கு அனுமதிக்கும் போதும், பள்ளிகளில் சேர்க்கும்போதும் நீங்கள் அழைப்பது போன்றே கொச்சையாக எழுதி விட்டால் சட்டப்படியாக பதிவு களில் நிலைத்துவிடும். பள்ளி, மருத்துவ மனை மட்டுமின்றி, வாக்காளர், உணவு வினியோக அட்டை, மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் உங்கள் உச்சரிப்பை நீங்களே எழுதிக்கொடுங்கள்

உண்மை நிலைக்கட்டும்
சிந்தனை மலரட்டும்



ஒற்றுமை சிறக்கட்டும்
சிறப்பு பெருகட்டும்!

கடைசிப் பக்கம் :

வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்!

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர் உங்கள் உள்ளத்தில் இடம் பிடித்திருக்கும் என நிச்சயமாக நம்புகிறேன் நன்றி கூறுகிறேன்.

இம்மலருக்கான முழுப்பெருமையும் அன்புத்தலைவர் ஹாஜி V.M.S. லெப்பை அவர்களையே சாரும். எடுத்த பணியை முடித்தே தீர வேண்டும் என்ற மன வலிமை படைத்த அந்த மகத்தானவரோடு ஒன்றாக இருக்கும் காலத்தை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

என்திறமை நேர்மையின் மீது நம்பிக்கை வைத்து இம்மாபெரும் பணியை என் னிடம் ஒப்புவித்ததற்காக அவர்களுக்கு நன்றிகூற வார்த்தைகளைத் தேடுகிறேன் அந்த நம்பிக்கையை முழு அளவில் காப்பாற்றியுள்ளேன் என்றே கருதுகிறேன்.

என்பணியில் எவ்வித தலையீடும் செய்யாமல் மனப்பூர்வமாக ஒத்துழைத்த இப்பேரூராட்சி துணை தலைவர் ஜனாப் M. N. சொளுக்கு அவர்களுக்கும், பேரூராட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்

நிர்வாக அதிகாரி ஜனாப் அ. மு. செய்யது முகம்மது அவர்களுக்கும் அனைத்து பணியாளர்களுக்கும், என் நிழல் போல் உடனிருக்கும் சகோதரர் S. T. முஸ்தபா கமால் அவர்களுக்கும், என்னோடு முழுமையாக ஒத்துழைத்த ஜெம் பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றி உரித்தாக்குகிறேன்.

சாதாரண மலராக நூறு பக்கத்திற்கு திட்டமிடப்பட்ட இம்மலர் இன்று காயலின் கலைக்களஞ்சியமாக 414 பக்கங்களில் உருவாகியுள்ளது.

பெருமைமிக்க இந்நகரின் 1100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றிலிருந்து 1990 முடிய உள்ள எல்லா விஷயங்களையும் என்னால் முடிந்தவரை தொகுத்து தந்துள்ளேன்.

காயல்பட்டணத்தை பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள இம்மலர் ஓரளவு துணை செய்யும் என எதிர்பார்க்கிறேன்.

சாதி, சமய, பகுதி, அரசியல், கொள்கை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற் பட்டு நடுநிலையோடு இம்மலர் தயாரித்துள்ளேன்.

இம்மலரின் எந்த ஒரு பக்கத்தையும் பாராவையும் ஏன் வார்த்தையையும் குறுகிய உணர்வுகளுக்கு இரையாக்கி விடாதீர் என அன்போடு வேண்டுகிறேன்.

இம்மலரின் அமைப்பு, இடம்பெற்ற செய்திகளில் ஏதாவது தவறு இருந்தால் அதற்கு நான் மட்டுமே பொறுப்பு. அவற்றை சுட்டிக்காட்டினால் எமது அடுத்த முயற் சிகளுக்கு துணையாக இருக்கும்.

என் பணியில் மனநிறைவடைகிறேன். இம்மலரைப் பற்றி மனம் நிறைந்த மதிப்பீட்டை ம்ட்டுமே உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

நன்றியுடன்,

31-10-1990

(காயல் மஹ்பூப்)

PCHANDRABABU

கரயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலரை
அச்சிட்டதில் பெருமைப்படுகிறோம்.

AREXPRAYEN

உங்கள் எண்ணங்களை
எழுத்துக்களால் அலங்கரிப்பவர்கள்.

ஜெம் பிரிண்டர்ஸ்

காயல்பட்டணம் - 628 204

மணவிழா மற்றும் விருந்தழைப்பு கார்டுகள், புத்தக
அச்சு மற்றும் பைண்டிங்வேலைகளுக்கு
இம்மாவட்டத்தின் மெச்சத்தகுந்த அச்சுக்கூடம்

SARUMUGAM

அனைத்து வகையரன
கார்டுகள், கவர்கள், பேப்பர்கள், அட்டைகள் கிடைக்கும்.

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி
நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர் 1990
வெளியீட்டு விழா

11—12—1990 செவ்வாய் இரவு 9 மணிக்கு
காயல்பட்டணம் முதலாவது நீர்த்தேக்க வளாகம் அருகில்
ஹாஜி. L. K. லெப்பைத்தம்பி சாலையில்
திறந்தவெளி மாநாடாக நடைபெற்ற பிரம்மாண்டமான ஐம்பரும் விழாவில்
இச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது



காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலரை சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு S. அன்சர்அலி IAS அவர்கள் தலைமையில், தமிழக இந்து அற நிலைய மற்றும் சுற்றுலாதுறைஅமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமிM.A. அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை தமிழக கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை அமைச்சர் மாண்புமிகு S. தங்கவேலு B.Sc., அவர்கள் பெற்றுக் கொண்ட போது எடுத்த படம்.

தமிழகஅரசு கொறடா மாண்புமிகு கா. மு. கதிரவன், பேரூராட்சி தலைவர் ஹாஜி V.M.S லெப்பை, துணைத் தலைவர் M. N. சொளுக்கு, நிர்வாக அதிகாரி அ. மு. செய்யது முஹம்மது, சிறப்பு மலர் ஆசிரியர் காயல் மகபூப் ஆகியோர் அருகில் உள்ளனர்.

—13-12-90 ல் ''தினகரன்'' நாளிதழில் வெளிவந்த படம்

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி ஐம்பெரும் விழா

★ "காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர் 1990" வெளியீட்டு விழா!

★ காயல்பட்டணம் பேருந்து நிலைய பணி துவக்கவிழா!

★ காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு அரங்கம் அடிக்கல் நாட்டு விழா!

★ காயல்பட்டணம் ஒரு வழிப்பாதை துவக்க விழா!

★ நலிந்தோர் நலத் திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கும் விழா!

ஆகிய ஐம்பெரும் விழாக்கள் 11-12-1990 செவ்வாய் இரவு 9 மணிக்கு காயல்பட்டணத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆரம்பமாக திருக்குர்ஆன் வசனங்களை தமிழ் மொழி பெயர்ப்புடன் ஹாஜி L.S. இபுராகீம் அவர்கள் ஓதினார். அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது.

காயல்பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற தலைவரும் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவருமான ஹாஜி V. M. S. லெப்பை அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு S. அன்சர் அலி IAS அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்றார்.

தமிழ்நாடு இந்து அறநிலையம் மற்றும் சுற்றுலா துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி M. A. அவர்கள், காயல்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலரை வெளியிட்டு அடிக்கல் நாட்டுதல் மற்றும் துவக்க விழாக்களை நடத்தி வைத்தார்.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் நகர்வளர்ச்சி துறை அமைச்சர் மாண்புமிகு S. தங்கவேலு B.Sc., (Agri) அவர்கள் சிறப்பு மலரின் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசு கொறடா மாண்புமிகு கா. மு. கதிரவன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு வை. கோபால்சாமி M.A B.L. தூத்துக்குடி நகர்மன்றத் தலைவர் திருமிகு N. பெரியசாமி M.L.A. பாளையங்கோட்டை நகர் மன்ற தலைவர் திருமிகு சுப. சீதாராமன், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவல் குழு தலைவர் திருமிகு ஆச்சியூர் மணி M.L.A. திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திருமிகு A.S. பாண்டியன், காயல்பட்டணம் பேரூராட்சி உபதலைவர் ஜனாப் M. N. சொளுக்கு, பேரூராட்சி நூற்றாண்டு சிறப்பு மலர் ஆசிரியர் ஜனாப் காயல் மகபூப், பொதுப்பணி துறை நிர்வாகப் பொறியாளர் திருமிகு N. மாணிக்க வாசகம் B. E. ஆகியோர் விழாவில் பேசினர்.

சிதம்பரனார் மாவட்ட பேரூராட்சி அதிகாரி திருமிகு க. முத்துசுவாமி B. A. [Hons] அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

உள்ளாட்சிகளின் தலைவர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்தனர்.

வருவாய் துறை, காவல்துறை, கோட்ட வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சி துறைகள், செய்தி மக்கள் தொடர்பு துறை, பொதுப்பணி துறை, நெடுஞ்சாலை மற்றும் கிராம பணி துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள், வானொலி மற்றும் பத்திரிக்கை நிருபர்கள், பிரமுகர்கள், அனைத்து சமய பெருமக்கள், நகரப் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் இவ்விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

இறுதியில் காயல்பட்டணம் பேரூராட்சி நிர்வாக அதிகாரி திருமிகு அ. மு. செய்யது முகம்மது அவர்கள் நன்றி கூற, தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

415, 416 ஆகிய இந்த இருபக்கங்கள் மட்டும் 14-12-90 ல் இம்மலரில் இணைக்கப்பட்டுள்ளன.

KAYALPATNAM SELECTION GRADE TOWN PANCHAYAT CENTENARY SOUVENIR

